வேறு—இது அபரஞானமான சிவாகமப்பொருளைத் தமிழ்ப்படுத்திய முறைமையும் பெயரும் வகையுந் தொகையும் யாப்பு முணர்த்திற்று.

தெரிதகுருமுதல்வர் - இந்தசம்பிரதாய வுண்மையை முன்னம்விளக்கிய முதலாசிரியரான மெய்கண்டதேவநாயனார்,—தயர்சிவஞானபோதஞ் செப்பினர் - மேலான சிவஞானபோதமென்னும் ஸ்ரீமந்திரகேசுர வாக்கியத்தைத் தமிழாக வருளிச்செய்தார்,—பின்பவர் புதல்வர் சிவஞானசித்தியாரித்தனர் - பின்பவருடைய சிஷ்யரான வருணந்திதேவநாயனாரந்நூற்பொருளைவிரித்துச் சிவஞானசித்தியாராக வருளிச்செய்தார்,— மற்றவர்கள் திருவடிகள்போற்றி - அவ்விரண்டுநூலுஞ் சுருங்கியும் விரிந்தும் மிருக்கின்றமையினவ்விரண்டு நாயன்மாருடைய ஸ்ரீபாதங்களைவணங்கி,—விளம்பியநூலைவை யிரண்டும் விரும்பிநோக்கி - அவர்களருளிச்செய்த வந்நூலிரண்டையும் விரும்பி யாராய்ந்தபார்த்து,—கருத்திலுறை திருவருளு மிறைவநூலுங் கலந்து - என்னுடையகருத்திற்பதிந்த வவர்களுடைய திருவருளையுஞ் சிவாகமங்களையுங்கூட்டி,—ஆசில்சிவப்பிரகாச மாருமென்று - குற்றமில்லாத சிவப்பிரகாசமென்று பெயரிட்டு,— வளர்விருத்தநூறும் - வளர்கின்ற விருத்தச்செய்யுணூற்றையும்,—பொதுவுண்மை யெனக்கருதி - பொதுவென்று முண்மையென்று மிரண்டாகவிசாரித்து,—யாணும் - ஒருபொருளல்லாதயாணும்,—அருத்திமிகவுரைப்பன் - புல்லறிவாளை மிகுதலாலே சொல்வேன். எ - று.

யாணுமென்ற உம்மை இறிபு. ஆசின்மை சிவத்தின்மேற்று. இந்நூலுணர்ந்தார்க்குச் சிவம்பிரகாசமாதலி னுன்மேலேற்றித் தற்புகழ்தலாம். அந்நூலிரண்டையுஞ் சிவாகமங்களையு மாராய்ந்தென்பார் கருத்திலுறை திருவருளு மிறைவனூலுங் கலந்தென்றுபசரித்தார். அந்நூலின்கருத்து லுறையருளு மென்பாருமுளர்.

அப்படியே யிங்ஙனம் பழையதாகவருகிறநூலும் மிப் பொழுது செய்யப்பட்ட புதுநூலுந் தன்னிலொக்குமோவெ ன்று வினவ அம்முரண்டு மொருவகையத்தமாறற் கொள்ள ப்படுமென்று முறைமையு மிந்நூல்கொள்ளும் படிதியுடைய வர்கள் முறைமையு மவையடக்கமு மெலருளிச்செய்வானெடு த்துக்கொண்டருளியது.

தொன்மையவா மெறுமெனவையு நன்றுகாவிற் றீதாம்றிய றூ லெறுமெனவையுந் தீதாகாதுணிந்த, நன்மையினர் நலங்கொண்மணி பொதியுமதன்களங்க ணைபோகா வெனவுண்ணம நயந்திவாய்கிவாங், க ன்மையினர் பழுமையழ காராய்ந்துகளிப்பர் தவறு நலம் பொருளிங்கட் சாய்வாராய்ந்தறித, லின்மையி னர் பலர்புகழி லெத்துவரேதிலெறுற் றிகழ்ந்தவரே விகழ்ந்திவர் தமக்கெனவென்றிலரே. (கஉ)

சான்றோர்செய்தியுஞ் சான்பிலார்தன்மையுந் தோன்றுமாறு சொல்லவையடக்கம்.

(இ-ள்.) தொன்மையவா மெறுமெனவையுநன்றுகா நூல்கள் பழையதேயாயினும் பதி பசு பாசத்திறுன்மையைத் தெரியச்சொல்லா தபோது எவராலே சொல்லப்பட்டதாயி னு நன்மையுண்டாகாது.

இன்றுதோன்றியநூலெறுமெனவையுந்தீதாகா தணிந்தநன் இப்பொழுது புதிதாகச் சொல்லப்பட் ட நூலாயினும் பதி பசு பாசங்களைத் தெரியச்சொல்லுமாயின் அந்நூலுக்குக் குற் றமுண்டாகாது. அதையா வினையிரண்டி னும் புதுநூல்கொள்ளுமிடத்து

மையினர் — நல்லோர்கள் நூலின் புதுமைகொள்ளோர்கள். அதென்போலவென்னில்

நலங்கொண்ட மணிபொதியும தன் களங்கநீவயாவா வெனவுண்மை நயந்திடுவர் — நல்லவித்தமானது பொல்லாததொன்றிலே பொதிந்திருந்தாலு மிரத்தமறிந்தவர்கள் பொதிந்ததின் குற்றம்பாராமவிரத்தத்தினையே கொண்டாற்போலப் பொருளினுண்மையைக் கைக்கொள்வார்கள். அன்றியும்,

நடுவாந்தன்மையினர் — மத்திமராயுள்ளவர்களுத்தமனைபோலநூலைக்கண்ட மாத்திரத்திலே பொருளைக் கொள்ளமாட்டார்கள். ஆதலாலே

பழமைமையுழ காராய்ந்து தரிப்பர் — பழையதாயுள்ள வாகமங்களினைத்தையு மிப்பொழுதுண்டான நூலினைத்தையு மாராய்ந்து பார்த்துக்கொள்ளும் பகுதியினற் கொள்ளுவார்கள். இவையிரண்டுபகுதியுமன்றி

தவறுநலம் பொருளினைக்ட் சார்வாராய்ந்த நிதவின்மையினர் — நூலுக்குண்டாகிய குற்றமிது குணமிதுவென்று பொருளினிடத்திலே பொருந்தினமுறைமையையாராய்ந்துபார்த்தறியமாட்டாதவறிவினராயுள்ளவர்கள்

பலர்புகழிலைத்துவர் — நூலின்பயனறிந்த உத்தமர்கொண்டாடுதற் கூடியிருந்துகொண்டாடுவார்கள்

ஏதிலருற்றிகழ்ந்தனரேவிகழ்ந்திடுவர் — இந்நூற்செய்ததற்குப் பொருமையாகஅந்நியரிகழ்ந்துரைக்குமிடத்து அதற்குங்கூடியிகழ்ந்துரையாநிற்பர்கள். அவர்களாரோவென்னில்

தமக்கென நன்றுதீதென்றறியாத் தனக்கெனவோ வொன்றிலரே. ரறிவில்லாதவர்கள். எ-று.

று - ம். எவையு நன்றுகா வென்றதுகொண்டே பழையநூல்களிற் குற்றங்குறையு மெனக்கொள்க.

ஏவையுந்தீதாகா வென்றதுகொண்டே புதியநூல்களில் நன்மைகுறையு மெனக்கொள்க.

களங்கனியை யென்றிருவரைக் குற்றமாகச் சொன்னதே தென்னில் இரத்நத்தைப் பொதியப்பட்டதை குற்றமுடையதாலது மிரத்நத்தைக் குற்றமாகக் கொள்ளார்களென்றதனவறிக.

உண்மை நயந்திடுவரென்றதை நூலின் புதுமைவிசாரியாமற் பொருட்கொள்ளுவார்களென்றதா லுத்தநூல்மாத்திரம் கண்டுகொள்வார்களென்றதனைக்கொள்க.

தமக்கென வொன்றிலரே என்றதை தமக்கென வோரறிவில்லாதவர்களென்றதேதென்னில் முன்னூல்நூற்றமக்கென்ன ஒருதவமில்லாதவர்களென்றதன்னவு மாமெனக்கொள்க.

இதனாற் சொல்லியது இந்நூற்கொள்ளுமிடத்தா லறிவாலுயர்ந்தபெரியோர்கள் கொள்ளுமுறைமையு மத்திமராயுள்ளவர்கள் கொள்ளுமுறைமையு மறிவினராயுள்ளவர்கள் கொள்ளுமுறைமையுஞ் சொல்லி அவையடக்கமு மறிவித்தது. (கூ)

வேறு—இம்மூவகையடக்கமுமுணர்த்திற்று.

தொன்மையெவையுமென்று மெவையுநன்றா-பழையன வாகுமென்று சொல்லப்படு மெத்துணைச்சிறப்புடைய நூல்களும் பதி பசு பாசங்களை விளக்கச்சொல்லாவாயினவ்வளவா

கா,—இன்றுதான்றிய நூலெனு மெவையுந் தீதாகா - இப் பொழுதண்டான நூலென்று சொல்லப்படு மெத்தனை சொல்லிழி புடைத்தாயினு மவைகளை விளங்கச்சொல்லுமா யிற் றீமையாகா,—துணிந்த கன்மையிருர்-தெளிந்த உத்தமரானவர்கள்,—கலங்கொண்மனி பொதியு மதனைகளங்கம்-கல்லருணத்தைக் கொண்டுருக்கின்ற மணியைப் பொதியுங் குற்றம்,—கவையாகா தெனவுண்மை கடந்திடுவர்-பொதிய ப்படுமணியின குற்றமாகாதென்று கருதியப்பொருளி னுண்மைத்தன்மையை விரும்புவர்கள். அதுபோல், இன்னூலுங் திரிபதார்த்தத்தைச் சொல்லுகையாதலிற் சொற்குற்றமும் புதமையுங்கொள்ளாது பொருணண்மையே கொள்வர்,—கதிவாந்தன்மையிருர் பழமையழ காராய்ந்துதரிப்பர் - இனி மத்திமமான முறைமையையுடையவர்க ளுத்தமரைப்போல ப் பொருளின்மை தீமை கேட்டமாத்திரத்தி லறுதியிடமாட் டாராகையாலே பண்டுள்ள நூல்களி னழகைப்பார்த்தவை யிரண்டு மொப்பிற்கொள்வர்,—தவறுநலம் பொருளின்கட் சார்வு - உத்தமரைப்போலக் குணமுங் குற்றமும் பொருளி னிடத்துசசார்தலி,—ஆராய்ந்தறித லின்மையிருர்-ஆராய்ந் தறிதலு மத்திமரைப்போல வொப்புமைநோக்கி யறிதலு மில்லாத வதன்மர்கள்,—பலர் புகழினைத்துவர்-இந்நூலி யறிவுடையோர் பலருமிருந்து கொண்டாடிற் கூடியிருந்து கொண்டாடுவர்,—ஏதிலரூற் றிகழ்ந்தனரோ விகழ்ந்திடுவர்-இதனைப்பரசமயிக ளிகழ்ந்துரைக்கிற் கூடியிருந் திகழ்ந்து ரைப்பர்கள்,—தமக்கெனவொன்றிலர் - கமக்கெனவோரறி வில்லாதராகையாலே.

கன்றுதிதென்னு மொருமைமகள் பண்பின்மேனின்றன. இனி யெலையுகன்முகா வெலையுந்தீதாகா - கல்லதிதுகன்

எஅ சிவப்பிரகாச சவ்வியாக்யானம்.

ருந்தியதே தினாமெனக் குறிப்பாலுரைப்பினுமாம். உற்று-
கூடி. உற்றேறத்துவர் உற்றிகழ்ந்திடுவரென்க. பொதியுங்கள
ங்கமத னைவையாகாவென வன்வயமாக்குக. சார்வறிந லா
ராய்ந் தறிதலென வறிதலி யிரண்டுடத்து மேற்றுக. மேற்
பதி பசுபாசந்தெரித்தலென வதிகாரப்பட்டு வருதலானு மு
வமையானும் பதிபசு பாசங்களைச் சொல்லாதாயினென வு
ரைத்தாம்.

———o———

இவைபன்னிரண்டும் பாயிரம்.

நூல்.

பொது.

இங்ஙனம் பாயிர மருளிச்செய்து மேல் முதற்சூத்திர மாகிய பதியிலக்கண மருளிசசெய்வா னெடுத்துக்கொண்ட ருளியது.

இந்தப்பதியிலக்கணத்தில் முதற்சூத்திர நின்றமுறை மை யெங்ஙனமெனின் பதியிலக்கணமாக வருத்த "பல கலை" என்ற விருத்தந்தொடங்கி "ஏற்றவிளை" என்னும் வி ருத்தமுடிவாகிய செய்யுளாறும் சிவஞானபோதத்திலுஞ் சி வஞானசித்தியிலும் முதற்சூத்திரத்தில் வருங்கருத்தாகை யா லப்படிச் சொன்னதனைவறிக. அப்படி யந்தநூல்களிற் முதற்சூத்திரத்தி லுண்டானகருத்து இந்தவிருத்தமாறிலு நின்றதற்கு வழியேதென்னில்? சிவஞானபோததத்தில் முதற் சூத்திரமாகிய:—"அவனவள தெனுமலை மூவினமையிற், சேர்ந்திய திதியெயொடுங்கு மலத்துளதா, மந்தமாதியென் மலர் புலவர்" என்னுஞ் சூத்திரத்துக்குக் கருத்து சங்கார காரணனே முதலாகவுடைத்தில்லகமென்பதனால் சிவனெ கத்தாவென்னுங் கருவைப்பற்றி இந்நூலினுமிச்செய்யுட்க ளாறினுள்ளும் "பிடுபெறநிறுவியவை யொடுக்குமெனி" என்-ம். "அவையெங்கடவுடானே யந்தமுறவழுத்திடுவன்." என்-ம். ஏற்றவிளை யானருளின் றிருவிளையாட்டாக வியம்புவர்க ள்." என்-ம் சிவனே கத்தாவென்று வருகையாலும். சித்தியா ரில் முதற்சூத்திரத்தின் விருத்தங்களில் "சிவனரு வுருவு மல்லன்" என்னும் விருத்தத்திற் கருவைப்பற்றி இந்நூலினு ம் "பலகலை" என்றவிருத்தத்தில் "பதிபாசமே யதுதானிலவு

மருவுருவின்றி" என்று வருகையாலும் "பொன்மை நீவாதி வன்னம்" என்னும் விருத்தத்திற் கருவைப்பற்றி இந்நூலினும் "நிபோசதந்தி" என்னும் விருத்தம் வருகையாலும் "குரி த்தனான் முகமாட்டா நுறைவிலரு தலாணும்" என்னும் விருத்தத்தின் கருவைப்பற்றி இந்நூலினும் "இங்ஙந்தவென்றா கடந்தவியல்பிரணும்" என்னும் விருத்தம்வருகையாலும் "ஒருவேரடொருத்தி" என்னும் விருத்தத்தின் கருவைப்பற்றி இந்நூலினும் "உலகமெலா மொருவேரடொருத்தி" என்னும் விருத்தம்வருகையாலும் "தோற்றுவித்தளித்துப் பின்னுந் துடைத்தரு டொழில்கள்மூன்றும் போற்றவேயுடைய னீசன்" எ-ம். "உரைத்தவித் தொழில்கள்மூன்றும் மூவருக்குமாக மொதவரைத்தொரு வனுக்கேயாக்கி வைத்தநிங்கென்னை" எ-ம் வரும் விருத்தங்களின் கருவைப்பற்றி இந்நூலினும் "கந்தமலரயன்படைக்கும்" என்னும் விருத்தம் வருகையாலும் "சொன்னவித் தொழில்களென்ன காரணந்தோற்ற வென்னின் முன்னவன் விளையாட்டென்று மொழிதலுமாம்" எ-ம். "அழிப்பிலிப்பாற்றல்" எ-ம். வரும் விருத்தங்களின் கருவைப்பற்றி இந்நூலினும் "ஏற்றவினைவ யரனருளின் றிரு விளையாட்டாக வியம்புவர்கள்" என்னும் விருத்தம்வருகையாலும் இந்தப்பதி யிலக்கணமாக வருளிச்செய்த விருத்தமாறு மந்நூல்களிற்கறுத்து ஒன்றவருகையால் மூதற்கூத்திரமாக நின்றதெனவறிக. இவ்வனம் சித்தியாரில் முதற்கூத்திரத்திற் விருத்தங்களா யெதுகாட்டினை செய்யுட்களின் விருத்தங்கடொறு முடியவெவாட்டிக் கண்டுகொள்க.

மேல் முதற்கூத்திரமாக வருத்த பதியிலக்கணமாகிய செய்யுளாறினுள்ளும் முற்கூறிய பசுகலேயென்ற விருத்தத்துக்குத் தொந்தனே வருமாறு.—முன்னை பாயிரத்திற்கூறிய

தெரித்தகுரு மூதல்வ ருயர் சிவஞானபோதஞ் செப்பினர் பி
ன்பவர்புதல்வர் சிவஞானசித்தி விரித்தனர் என்றும் இறைய
னூலுங்கலந்து என்றும் வரப்பட்ட முன்னூல் வழிநூல்களி
னு மிப்பொழுது கூறப்பட்ட இந்தச்சார்புநூலானு மருளிச்
செய்கிற வத்தமேதென்றுவினவ மேலருளிச்செய்வா னெடு
த்துக்கொண்டருளியது.

பலகலே யாகமவேதம் யாவையினுங்கருத்துப் ப
திபசுபா சந்தெரித்தல் பதிபரமேயதுதா, னிலவுமரு
வுருவின்றிக் குணங்குறிகளின்றி நின்மலமா யேகமா
ய் நித்தமாகி, யலகிலுயிர்க் குணர்வாகி யசலமாகி ய
கண்டிதமா யாநந்த வுருவாயன்றிச், செலவரிதாய்ச்
செல்கதியாய்ச் சிறிதாகிப்பெரிதாய்த் திகழ்வதுதற்
சிவமென்பர் தெளிந்துளோரே. (க)

விதிப்படிமூதனூல் விளம்புமும்பொருளின்
பதித்திரந்தெரிந்து பாரித்துரைத்தது.

(இ - ள்.) பல கலே யாகமவேதம் யாவையினுங்கருத்து பதிபசுபாசந் தெரித்தல் பதிபரமே அதுதான்

பலகலேஞானங்களாகச் சொல்லப்பட்ட ஆகமங்களுக்கும் வேதங்களுக்கும் இவையிற்றின்விரிந்த நூல்களுக்கும் தெளிவாவது

பதியையும் பசுவையும் பாசத்தையுங் கூறுசெய்தல். இவையிற்றின் முதற்கூறப்பட்ட பதியின்றன்மை யெங்ஙனே யென்னில்

அந்தப்பதியாவது எல்லாவற்றிற்கு மேலாயிருப்பதென்று

அந்தப் பரமேயென்று சொல்லப்பட்ட பதியானது வியல்பு யெங்ஙனேயெனின்

நிலவுமரு வுருவின்றி — விளங்கக் காணப்படுவதுங் காணப்படாததுமல்லவாய். நிலவுமென்றது பொருந்தவெனவுமா மெனவுறிக.

குணங்குறிகளின்றி — ஒருகுணங்களு மொருடையாளங்களுமில்லையாய்

நின்மலமாய் — மலரகிதமாய்

ஏகமாய் — ஒன்றுயிருப்பதாய்

நித்தமாகி — அழியாததாய்

அலகிலுயிர்க் குணர்வாகி — எண்ணிறந்த யான்மாக்களுக்கு மறிவாய்

அசலமாகி — சலிப்பற்றதாய்

அகண்டிதமாய் — கண்டிக்கப்படாததாய்

ஆநந்த வுருவாய — இன்ப சொரூபமாய்

அன்றிச் செலவரிதாய் — மாறுபட்டவர்களுக்குச் சென்று கூடுதற்கரிதாய்

செல்கதியாய் — வழிபட்டவர்களுக்குச் சென்று பொருந்துதைக் கிடமாகிய முத்திநெறியாய்

சிரிதாகிப்பெரிதாய் — அணுவுக்கணுவாய் மறைத்துக்கு மறைத்தாய்

நிகழ்வது தற்சிவமென்பர் — இப்படி விளங்காநின்றது உண்மையான சிவமென்று சொல்லுவார்கள்

தெளிந்தோரே. — சித்தாந்தத் தெளிவுவந்த பெரியோர்கள். எ - று.

று-ம். பலகலை. எ-று. வேதாகமங்களைச் சொல்லாமலணவயிற்றைநத்தவிர வேறே சில நூல்களென்று சொல்லுவதாரு மூளர். அப்படியாயினு மிந்தச்செய்யுளில் பலகலையை மு

ர்தக்கூறி யாகமமும் வேதமும் பிற்படக் கூறுகையாலெ யது பொருளல்ல வெனவறிக. அல்லது பின்னே யெங்ஙனே யென்னில் வேதாகமங்களு மவையயிற்றினின்றும் விரியப்பட் டநூல்களு மென்பதொழுங்து வேறுகச்சொல்லவொண்ணு தெனவறிக. அதற்கு வழியேதென்னில் கலைஞானமென்பது சர்வநூலுக்கும் பொதுப்பெயராகையா லப்படிச் சொன்ன தெனவறிக அதற்கு. பி-ம். சித்தியாரில். "வேதசாத்திரமிரு தி புராணகலைஞானம்" எ-ம். சங்கற்ப நிராகரணத்தில். "பெருங்கடலுதவுங் கருங்கடுவாங்கிக் - கந்தரத்தமைத்த வந்தமில்கடவுள் - பாலரையுணர்த்து மெலவர்போலக்-கெட்டபொருளைவக் கோட்படுபொருளா-லருளியகலைக ளெலகில வதரும்" எ-ம் திருவருட்பயனில். "நற்குஞ்சரக்கன்று நண்ணின்றகலைஞானங் கற்குஞ்சரக்கன்றுகாண். எ-ம். இந்நூலினும் அருங்கலைகள் முதிர்ந்துளாரே" எ-ம் வருமெதுக்களைக் கண்டுகொள்க.

யாவையினும். எ-கு. வேதத்தினு மாகமத்தினும் விரியப்பட்டது மற்றுள்ள நூல்களெல்லாமென்று பொருட்படுத்தினத்துக்கு. பி-ம். சித்தியாரில் "வேதநூல்சைவநூ லென்றிரண்டே நூல்கள் வேறுவைக்கு நூலிவற்றின் விரிந்த நூல்கள்" எ - து. கண்டுகொள்க.

பதிபரமே. எ-கு. எல்லாவற்றிற்கு மேற்பட்ட பொருளென்றதேதென்னில் அண்டாண்ட பகிரண்டங்களுக்கு மப்பாற்பட்ட பொருளென்றதெனவறிக. இதற்கு. பி-ம். திருப்பல்லாண்டில். "அண்டங்கடந்த பொருளாளவில்லதோராகத்த வெள்ளப்பொருள்" எ-து கண்டுகொள்க.

நிலவு மருவுருவின்றி. எ-கு காணப்பட்ட பொருளுமல்ல காணப்படாத பொருளுமல்லவென்றதேதென்னில் காணப்படும் பொருளென்றுல் தோன்றிநின்றழியப்படும் பொரு

ளாம். காணப்படாத பொருளென்றல் முயற்கோடுபோலவு மாகாயப் பூப்போலவு மில்லாத தொருபொருளாமென்ற தனவறிக. இவை யிரண்டுக்கும் பி-ம். சித்தியாரில். "அறி தரும் பொருளோவீச னறிவுறுதவமே ருவென்னி, லறிபொ ருள் சித்தசத்தா மறியாததின்று மெங்குஞ், சிறிசிவமிரண்டு மின்றிச் சித்தொடு சத்தாய் நிற்கும்." எ - து. கண்டுகொள்க. இதி லாகாயப் பூப்போலக் காணுதபொருளாம். எ-கு பி-ம். சித்தியாரில். "வானத்தினாரார் பூந்தொடையு மாமை க்கெழு மயிர்கயிறும் போலும்." எ-து. கண்டுகொள்க.

அன்றிச் செலவரிதாய்ச் செல்கதியாய். எ-கு. வந்திட வாதவர்கள் சென்று கூடுதற்கரிதாயென்றும் வந்திபட்டவர் கள் சென்று கூடுதற்கெளிதாயென்றும் பொருட்படுத்தினக் தாக்கு வழியெதன்னில் சிவாகமஞ்சொன்ன வொழுங்கிலே நின்று அநுட்டியாதவர்களுக்குக் கூடலரிதென்று மநுட்டி த்தவர்களுக்குக் கூடலெளிதென்றுஞ் சொன்னதுணர்கவறிக. இவை யிரண்டுக்கும். பி - ம். சித்தியாரில் "இறைவனுவான்" என்றசெய்யுளில். "மறையாகமங்களிரு லறிவெல்லாந்தோ ற்றும் வரைவின்வழி வருமேவார்க்கும் வாராதோர்க்கு, மு றைமையிரு லின்பதுன்பங் கொடுத்தலால்." எ-து. கண்டு கொள்க.

சிறிதாகிப பெரிதாய். எ-கு. அணுவுக்கணுவாய் மகத் தாக்கு மகத்தாயென்ற தெதென்னில் சர்வான்மாக்களுக்கு மெடுக்கப்பட்ட அச்சுக்களுக்கெல்லா மதற்கதற்குத் தக்க தாகக் கூடநின்று சேட்டிப்பிக்கையா லப்படிச்சொன்ன தெனவறிக. இதற்கு. பி ம். இருபாவிருபஃதில். "யாவரியா வையு மியாங்கணுற்றென்று-புக்குழிப்புக்கு." எ-து. கண்டு கொள்க.

தற்சிவம். எ-று. உண்மையான சிவமென்ற தெதென்னில் ஒரு விகற்பங்களுமின்றித் தற்சுபாவமாய் நின்ற சொரூபத்தைச் சொன்னதெனவறிக. இதற்கு. பி-ம். சித்தியாரில்: "நிறுத்துவதோர்குணமில்லான் றன்னையொருவர்க்கு நிகர்ப்பரியாரென்றுமிலான்" எ-து. கண்டுகொள்க.

இதனுட்சொல்லியது பலகலாஞானமாகச் சொல்லப்பட்ட வேதாகமபுராண சாத்திரங்களெல்லாம் பதிபசுபாசத்திலுண்மையைச் சொல்லுமென்று மிதிற்பதியான தும் நிஷ்களசோரூபியாய் நிற்குமென்னுமுறைமையு மறிவித்தது.(க)

வேறு— இதுமுதல் எற்றவிவை என்னுஞ். செய்யுளீறாகிய வாறுதிருவிருத்தங்களாலு மூதஞலாகிய சிவஞானபோதத்தின் மூதற்சூத்திர முணர்த்துவா னெடுத்துக்கொண்டார். அவற்றுளிது பதி பசு பாசமென்னு மூப்பொருளில் வைத்துப் பதியிலக்கண முணர்த்திற்று.

பலகலை யாகமசைதம் யாவையினுங்கருத்துப் பதி பசு பாசந்தெரித்தல்-ஆகமவேதங்கண் மற்றைப் பலநூல்களெல்லாவற்றினுந் தாற்பரியமாவது பதிமுதலிய பதார்த்தங்களைப் பகுத்துக்கூறுதல்,—பதிபரமே - அவற்றுட்பதியாவது ஏனையிறண்டற்கு மெலா யிருப்பதொன்றே.—அதுதான்-அந்தப்பதிதான்,—நிலவுமரு வுருவன்றி -விளங்கப்பட்ட நிட்களமுஞ் சகளமுமல்லதாய்,—குணங்குறிகளின்றி - தத்துவாதீத மாகையாலே முக்குணங்களு மோரடையாளமு மில்லதாய்,—நின்மலமாய்- அநாதியிலே படிகம்போல வழுக்கில்லதாய்,—ஏகமாய் - ஒருமுதலாய்,—நித்தமாகி- தோற்றமின்றி யிருப்பதாய்,—அகண்டிதமாய் - ஞானசொரூபமாகையாலே யொன்றினலே கண்டுக்கப்படாததாய்,—ஆனந்தவு

ருவா யன்றிச் செலவரிதாய்-அறிவுருவாரு லன்றிக் கிட்டுத
ற்கரியபொருளாய்,— செல்கதியாய்-அறிவுருவாரு ற்சென்ற
டையப்படும்பேரூய்,—சிறிதாகி-அணுவுக்கணுவாய்,— பெரி
தாய்-மகத்துக்கு மகத்தாய்,—திகழ்வது-விளங்குவதாயிரு
க்கும்,—தத்-அந்தப்பொருளை,—தெளிந்துளோர் சிவமென்
பர்-அறிவாற் றெளிந்தோர் சிவமென்று சொல்வர். எ-று. ஏ

தற்சிவமென்பது வடசொல்லா யெழுவாய்க்கு மிரண்
டாவதற்கும் பொதுவாய்நிற்கும். தேர் முதலானவை யொரு
வனென் முடியாமையிற் பிரபஞ்சமு மீசுகங் கருத்தாக்க
ளா லுண்டாகவேண்டுமென்னு மீசுகசுரவாதி மதமும் ஓ
ராத்மா மூத்தலு லவனிடத்திலே கருத்தா தன்னதிகா
த்தை வைத்துத் தான்பரமற்றிருப்பன்; அவனு மப்படி யொ
ருவனிடத்திலே வைத்துப் பரமற்றிருப்பனென்னும் பிரவா
கசுரவாதிமதமும் ஏகமாயென்றதனென் மறுக்கப்பட்டன.
என்னை? தேர்முதலானவை யநேகர் கூடியு மோர்கருத்தா
வினைவலான் முடியுமாதலின் முன்னேயோன்மதமும் ஈசுர
ன் சத்திக்கொருகாலமுங் குறைவில்லை யாதலானும் ஒருகா
லத்தி லநேகங் முதற்றாலல் ஒருவனிடத்திலே வைத்தல் கூ
டாதாதலானும் மற்றையவன்மதமு மறுக்கப்படுமெனக்கொ
ள்க. நித்தமாயென்றதனாற் கருத்தா கூடினிகனெனும் பௌ
த்தன் முதலியோர்மதம் மறுக்கப்பட்டன. என்னை? கூடி
னிகமா யிருப்பதொன்றுக்குப் பிரபஞ்சகிருத்திய நடத்தல்
கூடாமையின். அலகிலுயிர்க்குணர்வாகி யென்றதனால் மாயா
வாதி சியாத்வைதி மதங்களு மறுக்கப்பட்டன. என்னை? ஆ
த்மாக்களநாதியே பாசபந்தமாதலின். இனி ஆனந்தவுருவா
யென்பதற்குச் சுகசொரூபமாயென்றும் அன்றிச் செலவரிதா
யெனப் பிரித்து மாறுபட்ட சமயிகள் செல்லுதற்கு வழியா
யென்று மூறைப்பாருமூளர். ஆனந்தவுருவாயன்றிச் செலவ

சிதா யென்றதனுற்றூனே ஆனந்தவுருவாலுற் செல்லப்படு மென நிருக்கச் செல்கதியாயென்றல் புனருத்தியென்று வலியுறுத்தற்பொருட்டு. மலத்தினீங்குதலேயநிவுரு. ஆனந்தக் கதியென்ன வறிவழிகை வீடென்னை யூனம் என்றிதற்குமுன் னுவினுங் கூறினமையாலுணர்த மீண்டறிவென்றெகாள்க.

இங்ஙன நிஷ்களசுபாவமா யிருக்கப்பட்ட சிவன் பிரபஞ்சநிருவத்தியை நடத்துமுறைமை யெங்ஙனையென்று வினவத் தனது சத்திகளிடமாகத் திருமேனிகொண்டு நடத்துவனென்னு முறைமையை மேலருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

நீடுபராசத்திநிக ழிச்சானுான நிறைகிரியைதரவ
தனிமலம்மேவி, நாடரியகருணைதிரு வுருவமாகி ந
விம்றுபலகலைநாத விந்துவாதி, கூடுமொளிவளர்குடி
லைமாயைமேவிக் கொடுவினைகொ டனுகரணபுவ
போகம், பீடுபெறநிறுவி யவையொடுக்குமேனி பிற
ங்கியநிட்கள சகளப்பெற்றியாமே. (உ)

மூன்னருட்சத்தி மூவிதமான
தன்மையினிட்கள சகளமுரைத்தது.

(இ-ள்.) நீடுப ராசத்தி நிக ழிச்சா னுான நிறைகிரியை தர வதனிமலம்மேவி, நாடரிய கருணைதிரு வுருவமாகி நவிம்றுபலகலைநாத விந்துவாதி, கூடுமொளிவளர்குடி லைமாயைமேவிக் கொடுவினைகொ டனுகரணபுவ போகம், பீடுபெறநிறுவி யவையொடுக்குமேனி பிறங்கியநிட்கள சகளப்பெற்றியாமே.

அந்நிஷ்கள சுபாவமாயுள்ள சிவதத்துவனே நிலைபெற்றுள்ள மேலானசத்தியானது அந்தச்சிவணுக்குத் திருமேனியாக விரிந்து தோன்றப்பட்ட விச்சாசத்தியென்றும் ஞானசத்தியென்றும் நிறைக்கிரியாசத்தியென்றும் ஒன்றிலே யொன்று கவுண்டாக்க

அந்தச்சத்திகளோ நிமலமாகிய சிவத்தோடொருங்கி

நாடரிய கரு ருறித்தற்கரிய காருண்ணியத்திரு லே
ணை திருவுருவ யப்படி யிச்சாருரானக்கிரியா சொரூபனு
மாகி மாய்

நவின்று பல பிரகாசம் வளராநிற்கிற குடிலையாகியசு-
த்தமாயையைப்பொருந்தி நாதவிந்துரூ தீ
லான தத்துவங்களையுந் தொற்றுவித்துப்
பலகலையாகிய வேதாகமங்களையு மருளிச்
செய்து

மாயை மேவி அசுத்தமாயாகாரணத்தையும் பொருந்
திக் கொடுவினை திருக்கிற சகலராயுள்ள வான்மாக்களுக்
குத் தணுகரண புவனபோகங்களையும் பெ
ருமைபெறநிறுத்தி
அவை யெய்து இங்ஙனஞ் சொல்லப்பட்டவற்றை யெ
க்கும் ல்லாந் தொற்றினமுறைமையிலே யொடுக்
குவிக்கும்

மேனி திருமேனியானது

பிறங்கிய நிட் விளங்கப்பட்ட நிஷ்களமென்றுஞ் ச க
களப்பெ ளமென்றுஞ் சொல்லுமுறைமையினை யு
ற்றியாமே. டைத்து. எ - று.

நு - ம். நிருபராசத்தி. எ - கு. அந்தச்சிவத்தடனை
நிலைபெற்றுள்ள சத்தியென்று பொருட்படுத்தினதற்கு வே
றிடபதென்னில் அந்தப்பராசத்தியானது அந்தப்பரமசிவனை
ப்போலே தனக்கொருபோக்குவரவின்றியே யெப்பொழு

மொருதன்மையாய் நிற்கையாலே யப்படிச் சொன்னதென வறிக. இதற்கு. பி - ம். சித்தியாரில். "எத்திறநின்றுனீ சனத் திறமவருநிற்பள்." எ-து. கண்டுகொள்க.

ஒளிவளர்குடிலை என்றதைப் பிரகாசத்தினையுடைய மாயையென்ற தேதென்னில் சிவன்கொள்ளப்பட்ட திருமேனியெல்லா மதனிடமாகக் கொள்ளுகையா லெனவறிக.

நிட்கள சகளப் பெற்றியாமே என்றதை இங்ஙனஞ் சொல்லப்பட்ட திருமேனி நிஷ்களமுமாஞ் சகளமுமாமென்றதேதென்னில் தோற்றுகிற திருமேனி சகளமாமென்று மொடுக்குகிறதிருமேனி நிஷ்களமாமென்றுஞ்சொன்னதென வறிக.

இதனுற்சொல்லியது சிவன் பிரபஞ்சநிருஷ்டியாகச் சகளீகரிக்குமிடத்துத் தனது சத்தியெவடிவாகத் திருமேனிகொண்டு சுத்தமாயையைப்பொருந்தி யதிலுண்டான ராகதிவித்துமுதலான தத்துவங்களையுந் தோற்றுவித்துப் பல கலை ஞானமாகிய வேதாகமங்களையு மருளிசெய்து அசுத்தமாயையி லுண்டான தனுகரண புவனபோகங்களையு நடத்தி மீளவுமொடுக்குவனென்று மிங்ஙன நடத்துகிறதிருமேனி சகளமென்று மொடுக்குகிறதிருமேனி நிஷ்களமென்றும் யுருமுறைமையை யறிவித்தது. (உ)

வேறு—இஃ தந்தப் பரமசிவன் பிரபஞ்சத்தை நடத்துமுறைமை யுணர்த்திற்று.

நீடுபராசத்தி நிகழிச்சாஞான நிறைகிரியைதர வதனினிமலன்மேவி-நிலைபெற்ற மேலானசிவசத்தி தன்னிடத்துண்டான விச்சாசத்தியையுஞானன்சத்தியையு நிறைந்திருக்கின்றகிரியாசத்தியையுமுண்டாக்க வந்தச்சத்தியை நின்மலனென சிவன்பொருந்தி,—

நாடரியகருணை திருவுருவமாகி-குறித்தற்கரிய கருணையே திருமே னியாகக்கொண்டு,--வளர்குடிலை மேவி-பெரிய குடிலையைப்பொ ருந்தி,--நாதவிந்துவாதி-நாதவிந்துமுதலிய தத்துவங்களையும்,- ஒளிகூடுந் தனுகரணபுவனபோகம் - விஞ்ஞானகலர்க் கொளி பொருந்திய தனுகரண புவனபோகங்களையும்,—பீடுபெற நிறு வி - பெறுமைபெறப் படைத்துநிறுத்தி,—நவின்று பலகலை - விந்துவிலேநின்றுஞ் சூக்குமமுதலிய நாலுவாக்குக்களையு மை ம்பத்தோ ரக்கரங்களையும் படைத்து அகூரங்களைமாறி மாறிப் புணர்த்துப் பதங்களையாக்கி யவற்றை மாறிமாறிப்புணர்த்துவா க்கியங்களையாக்கி யவற்றை மாறிமாறிப்புணர்த்துச் சந்தோபே தங்க ளாக்கி யவற்றுல் வேதாகமாதிகளை யங்ஙன மருளிச்செய் து,—மாயைமேவி - அந்தா மாயையைப் பொருந்தி,—கொடுவி னைகொ டனுகரணபுவனபோகம் பீடுபெறநிறுவி - பிரளயாகலர் க்குஞ் சகலர்க்குங் கொடியவினைகளைப் பொருந்தி யிருக்கின்ற தனுவாதிகளைப் பெருமைபெறப் படைத்து நிறுத்தி,—அவை யொடுக்கும் - அவற்றை மீண்டு மவ்வெல்லைகளிலே யொடுக்குவ ன்,—மேனி - அவற்றை யொடுக்குவிக்குந் திருமேனியுந் தோற் றுவிக்குந் திருமேனியும்,—பிறங்கிய நிட்கள சகளப்பெற்றியாம்- நிரனிரையாக வுயர்ந்த நிட்களமுஞ் சகளமுமான மூன்மை யாம். எ - று.

நிட்களசகளமெனப் பின்வருதலினவற்றிற்கேற்ப்பப் பொ துவாய்நின்றமேனி யொடுக்குவிக்குமேனி தோற்றுவிக்குமேனி யெனப் பகுக்கப்பட்டது. இனி நிறுவியொடுக்குதற் கேதுவான மேனி யென வெச்சமாக்கி யெதிர் நிரனிரையாக வுரைப்பினுமா ம். நிறுவியெனவே படைட்புமடங்கற்று. பரமசிவனுக்கிந்த மே னி யிரண்டு முபசாரமே.

அப்படி- யும்முடையசிவன் சகளீகரிக்குமிடத் தவஜனப்பி

மா நிருஷ்டிக்கிறதொழியத் தானே சகளீகரிப்பானென்னலா மோவென்ற பாஞ்சராத்திரியைநோக்கி யருளிச்செய்வா னெடுத் துக்கொண்டருளியது.

ஈங்கிதுவெல் றதுகடந்த வியல்பிறை மீறுமூத லுவெனறு மிலைமையா னு, மேங்கிவளர் ஞானமய னுதலா னு முண்மைபிறர்க் கறிவரிய வொருமையா னுங் தாங்கரிய வெறுப்பிறை விருப்புமெல்லாஞ் சார்வரிய தனிமுதல்வ னுதலா னு, நீங்கலரு மூயிர்க் குயிராய் நிற்றலா னு நிறுத்திவ னினைந்தவுரு நிமல வ்ருமே. (க)

தடைப்பவணருவாய்த் தோன்றுவதன்றிப்
படைக்கவரிதாம் பரிசினையுரைத்தது.

(இ - ள்.) ஈங்கு இதுவென்றது கடந்த வியல்பிறை னும்

இவ்விடத்து இது வென்று ஆன்மபோதத் தாற் குறிக்கப்பட்டதற் கப்பாற்பட்டிருக்கி ற முன்றமையினையுடையவ ரைகையா லும்

ஈறுமூத னெறு வொன்று மிலாமையா னும். அருவயம். மூதனெடு வீ ரெருன்றுமிலாமையா னும்

தோன்றிநின் றழியப்பட்ட முதலுநடுவுமு டிவு மில்லாதவ ரைகையா லும்

ஓங்கிவளர் ஞானமய னுதலா னும

மிக்குவளராநின்ற அறிவுவடிவாக வுண்ட யவ ரைகையா லும்

உண்மை பிறர்க்கறிவரிய வொருமையா னும்

தன்னுண்மையைப் பிறரால்நிகழ்க்கரிய நிலை மையினையுடையவ ரைகையா லும்

தாங்கரிய வெ ஆன்மாக்களைப்போலப் பொறுத்தற்கரிய
றுப்பிலைடுவிரு. பிரியாப்பிரியங்களெல்லாம் பொருந்துதற்கரி
ப்புமெல்லாஞ்சா ய வொப்பில்லாத முதலியாதலானும்
ர்வரிபதனிமுதல்
வுதலானும்

நீங்கலரு மூயி தன்னைவிட்டுப் பிரிந்து தனித்தொருமுத
ர்க்குபிராய் நிற்ற லாய்நில்லாத சர்வான்மாக்களுக்கும் பிராண
லாலும் ணாய் நிற்கையாலும்

நிறுத்திடுவ னினைந்தவுரு நிமல இங்ஙனஞ்சொல்லிவந்த முறைமைகளை யு
ன்றுளே. ணையவரு தலாலே யவனுக்கொருவ ரொருவ
ழிவு கொடுக்கவேண்டுவதில்லை தனக்குத்தா
னே பொருந்தினவழியை யெடுத்துக்கொள்
ளுவன். எ - று.

நு - ம். இந்தச்செய்யுளுக்கிட்ட தொந்தனையிலே சிவனையும் பிரமா சிருஷ்டிப்பானென்று பாஞ்சராத்திரிசொன்ன னென்ப தற்கு பி-ம். சித்தியாரில். "உந்தியிலயனையீன்றங் கவனைக்கொ ண்டுலகுண்டாக்கி, யந்தமில்லுலகழிக்க வரனையுமாக்குவித்தும், தந்திடுஞ்சகத்தினுக்குத் திதிகத்தாதானையாகி, வந்துடுந்தோற் றமீறு நிலைமையும் பண்ணுமாயன." எ - து. கண்டுகொள்க.

அவனப்படிச் சொன்னதனை மறுத்ததற்கு. பி-ம். சித்தியா ரில். "அயன்ரனைப் பயந்தானென்று மரியயன் சிரஞ்சேதிப்பப், பயந்திடான்றலைமாலுறும் படைத்திடான் சிரத்தைக்கிள்ளுந், சயந்தருமரனைத்தந்தா னையனென்னை தப்பேயன்றே, நியங்கி டாதனராயெல்லாஞ் சிவன்செய லென்றுதேர்ந்தே." எ - து. கண்டுகொள்க.

இனி ஈங்கிதுவென்றது கடந்தவியல்பினை. எ-கு. ஆன்ம போதத்தாற்சுட்டி யறிதற்கரியவனென்று பொருட்கூறியதற்கு:

பி-ம். சித்தியாரில். "குறித்ததொன் ருகமாட்டாக் குறைவிலனு கலாறும்." எ-ம். "தன்னறி வதவுற்காணுந் தகைமையனல்ம னீசன்". எ-ம். கண்டுகொள்க.

ஈறுமுதனடுவொன்று மிலாமையான். எ-கு. தோன்றிநின் நூழுதல்லாதவனென்ற தேதென்னில் ஆன்மாக்களைப் போல் யோனி சம்மந்தமுள்ளவ னல்லவென்ற தெனவறிக.

ஓங்கிவளர்ஞானமயன். எ-கு. மிக்குவளராநின்ற வறிவென் ற தேதென்னில் அண்டாண்ட பகிரண்டங்களுக் கெல்லா மப் பாலுமிப்பாலு முண்டாகிய வியல்புகளையெல்லா மறியப்பட்ட பேரறிவுரூகையா லெனவறிக.

உண்மைபிறர்க்கறிவரிய வொருருமையான். எ-கு. தன்னுண் மை பிறருக்கறிய வரியவனென்ற தேதென்னில் பிரமவிஷ்ணுக் கள் முதலாயுள்ளவர் களுக்குந் தன்னையறிதற்கரியவ னென்றதெ னவறிக. இதற்கு. பி-ம். கோவைத் திருவாசகத்தில். "நடலும் வணங்குந் தோல்லோனெல்லை நான்முகன்மாலறியாக், கடலமு ருவத்தான்." எ-து. கண்டுகொள்க.

நிறுத்திடுவனினைந்தவுரு நிமலன்ருனே. எ-கு. தனக்குப் பொருந்தினவடிவு தானே யெடுத்துக்கொள்ளுவனென்ற தேதென் னில் பத்தியிலில் வழிபடுவோர்க்கு அதற்கதற்குத்தக்க திரு மேனிகொண்டு நிரகுகிக்கையாலெனவறிக. இதற்கு. பி-ம். பூசாக ரணத்தில். "எவ்வுலகத்துமூர்த்தி யெதுகொண்டவனியெங்கு, மவ்வுலகத்துமேனி யதுகொண்டுங் கமருமீசன்." எ-து. கண்டு கொள்க. அதுவன்றியு மந்திரங்களிரத்தமாகவும் பதங்கள் தா யுரம்பு மாகவும் வன்னங்கள் தசுக்காகவும் புவனங்களு ரோமமாகவும் தத்துவங்க ளத்திமச்சைசுக்கிலமுதலான தாது க்களாகவும் கலைகளைந்தாகிய சாந்தியாதிதகலமுதல் திருமுடி யாகவுந் திருமேனியாகக்கொண்ட அத்துவாமூர்த்தி யென்னவு

மாமெனவுரிக. இதற்கு. பி-ம். சித்தியாரில், "அத்துவாமூர்த்தி டாக வுறைகுவ தென்னையென்னி னித்தலுய்ப் நிறைந்தவற்றி னீங் கிடா நிலைமையாலுந் சித்துட னசித்துக்கெல்லாஞ் சேட்டித லு தலாலும், வைத்ததா மத்துவாவும் வடிவென மறைகளெல்லா ம்" என-து. கண்டுகொள்க.

இதலுற்சொல்லியது நின்மலசொரூபலுகிய சிவன் வாக்கு மனுதீத னுகையாலுங் தொன்றிநின் றறிபாதவனுகையாலும் ஞானசொரூப னுகையாலுங் தனக்குப்பொருந்தின திருமேனி தானேயெடுத்துக் கொள்ளுவனென்னு மூனைமையை யறிவித் தது.

(கூ)

வேறு—இதுவுமதனி னொருவகையா லுணர்த்திற்று.

ஈங்கிதுவென்றது கடந்த வியல்பிலுலும் - வாட்சிமுதலிய வளைவைக் கடந்தவனுதலி னிவ்விடத் திதுவென்று சுட்டிக்கா ட்டுமதனைக் கடந்தவியல்பாலும்,—ஈறுமுதனடுவென்று மிலா மையாலும் - சர்வவியாபகனுகையா லவனுக்கு முதனடுவிறுதிக ளொன்றுமில்லாத தன்மையாலும்,—ஓங்கிவளர் ஞானமய னுத லாலும் - சடமானபிரபஞ்சந் சேதனனையன்றி நடவாணையிற் கன்மகாலேசர வாதிகளைப்போலவு மன்றி யுயிந்தவ சரீரங் கொள்வனென்னி னுண்மாக்களி லொருவனுதலி னிதுவுமன்றி யவன் மிகுத்துவளர்கின்ற ஞானசொரூப னுகையாலும்,—உண் மைபிறர்க் கறிவரிய வொருணமையாலும் - தானிரண்டறக்கலந் நிற்கையாலுந் தன்னுண்மையைத் தானே யூர்த்தீகரித் தெழுந்த ருளிவந்து பரஞானத்தா லறிவிக்கப்படி மவர்க்கன்றி மற்றைய வர்க் கறியவொண்ணுத வொப்பற்ற தன்மையுடைய னுதலாலு ம்,—தாங்கரிய வெறுப்பிலுது விருப்புமெல்லாஞ் சார்வரிய தி னிழுதல்வ னுதலாலும் - நின்மலனுகையாலே பொறுத்தற்கரிய வெறுப்பும் விருப்புமாகிய வெல்லாம் பொருந்துதற்கரிய வொப்

பில்லாத தலைவனுகையாலும்,—நீங்கலரு முயிர்க்குயிராய் நிற்ற லாலும் - விட்டு நீங்குதற்கரிய வாத்மாக்களுக் கெல்லாம் பிரா ணனுய் நிற்கையாலும்,—நிமலனினைந்த வுருத்தானே நிறுத்திடு வன் - நின்மலனன பரமசிவன் றன்னுடைய திருவுள்ளத்துக் குப் பொருந்தினதொரு திருமேனியைத் தானேதனதாகநிறுத்து வன். எ - று.

மேனி தனக்கெனக்கொண்டு தானேயென்பர். ஒருமை மு றைமை யென்பாருமுளர்.

இங்ஙனங்கூறிவந்த செய்யுட்களில் பலகலையென்ற விருத் தமுதலாகிய செய்யுள்மூன்றினுள்ளு மொருகத்தாதவை யுண்டெ ன்று நாட்டி அவலிஷ்களை சொருபியா யிருப்பனென்று மவன் பிரபஞ்சத்தை நடத்துவது பொருட்டாகத் தனது சத்தியிடமா கச் சகளீகரித்து நடத்துவனென்று மப்படியவன் சகளீகரிக்குமி டத்துத் தனக்குப் பொருந்தின திருமேனிதானு யெடுத்துக்கொ ள்ளுவனென்னுஞ் சொல்லுகிறதென்ன? அப்படி யொருகத்தாவி ல்லை யென்று மிந்தப் பிரபஞ்சமு மொருகாலத்தினு மழியாமலி த்தமா யிருக்குமென்னுஞ் சொல்லுகிற வுலோகாயதனை நோக்கி யிந்தப்பிரபஞ்ச மந்தியமென்று மிந்தப்பிரபஞ்சத்தைத் தோ ற்றுவித்து நடத்தி யொடுக்குகைக் கொருகத்தாவுண்டென்று மேல் மறுத்தருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

உலகமெலா மொருவனே டொருத்தியொன் றென்றுளதாகி நின்றளவி லொடுக்கும்பின்னு, மலமு தனுலுளதாகு முருவமாறி வருவதுபோவது செல்வ தாதலாலு, மலவிலசே தனமாயை யாதலாலு மனு க்களருருவடையுமறி விலாமையாலு, நிலவுதொழின் மருவியுருநிற்றலாலு நின்றொறவையு மளித்திடுவ னிம லன்றுனை.

ஒருவனெருத்தி யொன்றென்றுணர்வரு
முருவமவனல் வந்தினென்றது.

(இ - ள்.) உல
கமெலாமொருவ
னே டொருத்தி
யொன்றென் று
ளதாகிநின்றளவி
லொடுங்கும்

கீர்த்தியமென்ற பிரபஞ்சமனைத்து மவ
னென்று மவளென்று மதுவென்றுந் தோன்
றினின்றெல்லையிலையதிபாதிற்கும். ஆகையாலே
இந்தப்பிரபஞ்சத்தைச் சிருஷ்டிக்கவுந் திதி
க்கவுஞ் சங்காரிக்கவுமொரு கத்தாவேண்டுமெ
ன்றறிவாயாக. அப்படி யும்முடைய கத்தா
வாலே சங்காரப்பட் டொடுங்கின பிரபஞ்ச
மீளவுந் தோன்றுவா னேனென்னில்

பின்னுமலமத
னு லளதாகும்

ஆன்மாக்களுக்கு ஆணவமலபாகம் வரு
கைப்பொருட்டாக மீளவுந் தோன்றுகிற்கும்.
அஃதாவது இந்தப் பிரபஞ்சமென்றது ஆன்
மாக்களும் பாசங்களுங் கூடியே பிரபஞ்ச
மாகையா லவையிற்று ளான்மாக்க ளாதி
யே மலசகசராகையாலே யந்த மலபாகம்வந்தே முத்தியைப்
பெறவேண்டுகையா லந்தமலபாகம் வருமி—த்து மாயாசரீரங்க
ளை டெடுத்துக் கன்மங்களைப் புசித்தே மலபாகம் வரவேண்டு
கையா லந்தமுத்தியைப் பெறுமளவுஞ் சங்காரகாலம் மாயாகா
ரணத்திலே யொடுங்கியுஞ் சிருஷ்டிகால மந்தக்காரணமாயையி
லின்றுந் தோன்றப்பட்ட காரியமாயையாகிய கலையாதி தத்துவ
ங்களோடு மொக்கத்தோன்றி ஜீவித்து வருகையாலே யப்படிச்
சொன்னெனவறிக. அப்படி யான்மாவென்பது மொன்றுண்
டா யதனை மறைக்கப்பட்ட ஆணவமலமென்பது மொன்றுண்
டா யந்த மலபாகம் வருகைப் பொருட்டாக வொடுங்கின பிர
பஞ்ச மீளவுந் தோன்றுமேயாகி லதுதானே யொடுங்கியுந் தோ
ன்றியும் வாராதோ அதற்குக் கத்தாவென்றொருவன் வேண்டு
மென்ற தெனென்னில்

உருவமாறி வ ருவதற போவதற் கும் ணும்

ஆன்மாக்கள் கன்மத்துக்கீடாக வச்சுமா றித் தேகத்தை வந்தெடுத்தும் பிராரத்தச் செல்வ தாதலா தொலைந்தவாறே யந்தத்தேகத்தை விட்டுப் போயும் புண்ணியபாவங்களுக்கீடாகச்சுவர்க்க நரகங்களின்மே லே சென்றநுபவிக்கையி லும். அன்றியும்

அகிலவி லேசத னமரணையா தலா ணும்

இந்தமாயாரூபங்கள் ஜடமானபடியாலே யிவையிற்றுக் கியக்கமுமறிவு மில்லாதபடியா லும். அன்றியும்

அணுக்களுருவ லையுமறிவிலா ணையா ணும்

ஆன்மாக்கள் கன்மத்துக்கீடாக வொவ் வொரு சரீரங்களை யெடுக்குமிடத்து அந்தச் சரீரங்களிலே சென்று பொருந்தாதற்குத் தங்களுக்கென்ன வோரறிவில்லாத படியா லும். அன்றியும்

நிலவுதொடுன் மருவி யுருநிற்ற லாணும்

ஆன்மாக்கள் கன்மத்துக்கீடாக வப்படி யெடுக்கப்பட்ட சரீரங்களோடுங் கூடிநின்று பொருந்தப்பட்ட தொழில்களிலே யாதா மொரு தொழில்களாச்செய்து நிற்கையா லும் இவையெல்லாந் தாமாகக் காரியப்படமாட் டாதது கொண்டே

தின் றணைமயு ளித்திவை மிம லன்றுசே னை.

தனக்கொருபோக்குவர வின்றியே நின்றெ ல்லாவற்றையுந் செய்வித் திரகஸ்கித்தருளுவ தின்மலரூபமே யென்றுசே னை. எ – று.

று – ம். இத்தச்செய்யுளதாவது தெளிந்தவினையிலே உலகாய தன் கந்தாவில்லையென்றுசொல்லுமி திக்தப்பிரபஞ்ச மொருகால மித்தியாமென்றுஞ் சொல்லுமி மையென்றுசொல்லுமிவ் விரண்டுமேலொருக்கி யொன்றை

ன்றுளதாகி நின்றளவிலொடுங்கும். எ - கு. பொருட்கூறியவிட
த்து இந்தப்பிரஞ்ச மவனவளதுவாய் நின்று காரியப்படுமிடத்து
த் தோன்றினின் றழிகையாலே இவையிற்றைக காரியப்படுத்திச்
சிருஷ்டித்தும் திதித்தருஞ் சங்காரித்தும்வருகைக் கொருகத்தா
வேணுமென் றவனை மறுத்ததற்கு. பி-ம். சித்தியாரில் உலகாயத
ன் மறுப்பாக்ய செய்யுளில். "பூதமானவைவந்தமென்று புகன்
றதென்னையுருக்களா, யாதலோடழிவாகுமாதலி னுக்குமேலார் வ
ாவேண்டிடுங், காதலோடு கடாதிமண்கொ டியற்றுமேவாருளர் க
ண்டனஞ், சிதநிலைழுந்தகொப்பு னிகழ்ந்த மாருதச்செய்கை
யே." எ - ம். "பூதமானவைகாரியங்கள் பொலிந்தமன்னியழித்
திடு, மாதலாலொரு நாதனிங்குள னென்றறிந்தகொ ளோயனே,
பேதமான கடாதிமண்ணினில் வந்தவாறு பிரித்திடிற், கோது
லாத குலாலனல்வரு செய்கையென்று குறிப்பமே." எ-ம். வரு
மதுகண்டுகொள்க.

அன்றியுஞ் சுபகுநத்திலும் உலகாயதன்கருத்தை மறுத்தவி
ருத்தத்தில். "ஒருவனே டொருத்தியொன்றென் றுரைத்திடு மு
லகமெல்லாம், வருமுறைறவந்துநின்று போவதுமாதலாலே, தரும
வலெருவன்வேண்டுந் தான்முத லிறுமாகி, மருவினமாநாதிமூ
தச் சித்தருமன்னினின்றே." எ-து. சுத்தாபிரஞ்சத்தை நடத்து
வனென்பதற்குக் கண்டுகொள்க.

இனிப் பிரபஞ்சந் தோன்றியுமழிந்தும் வருமென் றவனைமறு
த்ததற்கு. பி-ம். சித்தியாரில். "உறிப்பதுமீறுமென்டென் றுரை
ப்பதிங் கென்னைமுன்னோர், பதித்துலகநாதியாக மன்னியதென்
பரென்னி, லிதற்கியானதுமாறுதி யெடேனிப் பூதாதியெல்லாம்,
விதிப்படிதோன்றிமாயக் காலலான்மேதினிக்கே." எ-து. கண்
டுகொள்க.

இனியிந்தப்பிரபஞ்சமாவது ஆன்மாக்களுஞ் பாசங்களுஞ்

கூடியே பிரபஞ்சமென்று பேர்பெற்று நின்றதென்று விதப்பாகப் பொருட்கூறியதற்கு. பி-ம். தத்துவவிளக்கத்தில். "கருமவியாச மதேசதனங்கட்டுண்பர் சேதனரென், நிருமையில்லைவய மடங்குமென்றெண்ணுக." எ-து, கண்டுகொள்க.

இனி யப்படி யொடுங்கின பிரபஞ்ச மீளத்தோன்றுவாசனை னென்று உலகாயிதன் விரும்புதற் குத்தாமாகப் பின்னு மலமத ரூலுளதாகும். எ-கு. ஆன்மாக்களாதியே மலசகசராணையாலே யந்தமலபாகம் வருகைப்பொருட்டாகப் பிரபஞ்ச மீளவுந்தோ ன்றுமென்று விதப்பாகப்பொருட்கூறியதற்கு. பி-ம். சிவஞான போதத்தில். "அவனவளதுவெறுமவை மூவினைமையிற், றோற்றியதிதியையொடுங்கி மலத்துளதாம்." எ-ம். "இலயித்ததன்னி லிலயித்ததாமலத்தால்." எ-ம். வருமதுகண்டுகொள்க.

அன்றியு மாணவமலபாகம் வாராத ஆன்மாக்கள் மாயாரூப ங்க ளொடுங்குங்காலங் காரணமாயையிலே யொக்கவொடுங்கி யும் தோன்றுங்கால மந்தமலபாகம் வருகைப்பொருட்டாக மீள வுமந்தக் காரணமாயையினின்றுங் காரியமாயையோடே யொக்க த்தோன்றுவார்க ளென்றும் விதப்பாகப் பொருட்படுத்தினத்து க்கு. பி-ம். சித்தியாரில். "உயிரனை யொடுங்கிப்பின்னு மூதிப்ப தெ னரன்பாலென்னிற், செயிருறுமலத்தினுகுஞ் சிதைந்ததே தென்னிற் சித்தத், தயர்வொழிகாரியங்க ளழியுங் காரணங்கிடக் கும், பயிருருகாரியம்பின் பண்டுபோற் பண்ணுமீசன்" எ - து கண்டுகொள்க.

இங்ஙனும். "மற்றுத் தோற்றமலபாகம்வர" என்பதுமி ப்பொருட்பற்றி யெனவறிக. இங்ஙனமான்மாவுக்குத் தோற்றஞ் சொல்லலே யுடம்போடுங்கூடித் தோன்றுகையால் பிரபஞ்சத் தோற்றஞ் சொல்லுகை கருத்தெனவறிக.

இனி யந்த ஆணவமலபாகம் வருமிடத்து மாயாரூபங்களை

யெடுத்தே மலபாகம் வரவேணுமென்பதற்கு. பி - ம். சித்தியா ரில். "எழுமுடல் காணமாநி யிவைமல மலமலத்தாற், கழுவுவ னென்றுசொன்ன காரண மென்னையென்னிற், செழுநவைவிடரு மைகாணி யுவர்செறிவுத்தழுக்கை, மூழுவதுங் கழிப்பன்மாயை கொடுமல மொழிப்பன் முன்மேலன்." எ-து. கண்டுகொள்க.

இனி டப்படிப் பிரபஞ்சந் தோன்றுமிடத்துத் தானேதோன் றுதோ கத்தாவும் வேணுமோவென லுலகாயதன் விரும்பத்தற் குத்தரமாக வுருவமாறி யென்ற படித்தொடங்கி மற்றுள்ள படி ங்களுக்கெல்லாம் பொருட்கூறுமிடத்து மாயாகன்மங்கள் தூட மானபடியாலு மானமாக்கள் தங்களுக்கென்ன வேறுறுவில்லா தபடியாலு மனைமயிற்றைக் கூட்டிக் காரியப்படுத்தவந் சிவனென்றும், நின்றொளையு மளித்திடுவ னிமலன்றானே. எ - று. சர் வமுஞ் சிவனே செய்வித் திரங்கித்தருளுவ னென்றும் பொருட் கூறியதற்கு. பி-ம். சித்தியாரில், "உலகுடல்கரணங்களா லுறுப வரிடைசெய்து, பலவினை கொண்டுகன்மம் பண்ணுறு வதன்படதா ரா, னிலவிடா வினைதான்சென்று நீங்கினாற் முயிர் நிறுத்திக்கொள் ளா, வலகிலாவறிவ ரானபயனத்திடு மருளிரு வேலே." எ-து. கண் டுகொள்க.

ஆக விங்ஙனங்கூறிவந்த படிகளி லுருவமாறி வருவது போவது செல்வது, எ - று. பொருட்கூறுமிடத்து வருவது சிரு ஷ்டியென்றும் போவது சங்காரமென்றுஞ் செல்வது திதியென் றும் பொருளுரைப்பாருமுளர், அது பொருளல்ல வெனமறுக்க. அதுவேவெனின் இச்செய்யுளின் முற்படத்தில் உளதாயினா ளெனவினைமுற்றாகுங்கும். எ - று. தோன்றினின் றழிவுமென்று சிருஷ்டி யுந் திதியுந் சங்காரமுமாகப் பொருட்கூறியிதற்குமேற்படிப் பொருளுரைக்கில் ஒருசெய்யுளிலே யிரட்டித்த பொருள்கூறலைக ழுக்கல்லாதபடியா லப்படிச் சொன்னதென வறிக. ஆகையால்

செல்வதென்றது ஆன்மாக்கள் கன்மத்துக்கிடாகச் சுவர்க்கநர
கங்களிலே செல்வார்க ளென்பதே பொருளெனவறிக.

அன்றியும், அணுக்களுருவுடையு மறிவிலாமையாலும். எ-கு.
தூதவணுக்கள்நாலு மான்மவணுவொன்றும் ஆகவைத்தணுவுந் த
ம்மிற்கூடி யுருப்படுமென்று பொருளுரைப்பாருமுளர். அப்படி-
யாலும் அணுக்க ளுருவுடைய மென்றசொல்லுக்கு அந்த அணு
க்களென்றது வேறே யோருடம்பிலே சென்று பொருந்துமெ
ன்று பொருளாமொழிய வணைவதம்மிற்கூடி-யுடம்பாமென்று பொ
ருளாகாதபடி-யால் ஆன்மாக்களாகிய வணுக்கள் வேறே யோரு
டம்பிலே சென்று பொருந்துமென்பதொழிய ஆன்மவணுவும் தூ
தவணுநாலுந் தம்மிற்பொருந்திக் காரியப்படுமென்பது இந்தப்ப
தத்துக் காகாதென்றறிக. அணுக்களென்பது ஆன்மா
க்களென்பதே யிந்தப் பதத்துக்குச் சொல்லப்படுமென்பதற்கு
இக்நூலிற் பின்சென்ற நூலாகிய திருநெறிவிளக்கத்திலும் இந்த
விருத்தத்துக் கெதிரடை விருத்தமாகிய "வையமெலா மாசில்
பெணையி யென்னத்தோன்றி வல்வினையா லுழன்றுருங்கி மலத்
தாற் பின்னு, மெய்ப்படினையும் வெகுவித ருபங்கள்மாறி விடுவது
டற்ப்பவதாகி விரிதலாலும், பொய்ப்படினையமாலை சடமாதலாலும்
போனமுருவறிந்து பொருந்தாமையாலுந், செய்வினைசெய்து யி
ருருவினிற்றாவாலுஞ் சகமுழுது நின்றுசிவன் செய்வன்காணே"
என்னுமிதில் போதமுருவறிந்து பொருந்தாமையாலும் என்றப
தத்தை யணுக்களுருவுடையு மறிவிலாமையாலு மென்றபதத்து
க்குக் கண்டுகொள்க. இந்தத் திருநெறிவிளக்கம் பின்னுலாயிரு
க்க விதனை யேதுகாட்டியவே தெதென்னில் இந்தச் சிவப்பிரகாச
த்துக்குப் பின்சென்ற நூலாகையால் சுத்தம் வேறுபட்டும் அத்
தமொன்றுபடடும் வருகையாலே யதுகாட்டவேண்டிய தெனல
றிக. இந்தநூலி லில்லையந்த விடமெல்லா மிதுவேகருத்தென்

பதி கண்டுகொள்க. அன்றியும் அணுக்களென்பதை ஆன்மாக்க ளென்று தனித்துஞ் சொல்லப்படு மென்பதற்கு. பி-ம். தத்துவ விளக்கத்தில் "அமையாநிலைமை யணுக்களோர்மூன்று வகைய வைதாங் கமையாநிறைந்த விஞ்ஞானகலர் பிரளயாகலர் சக லர்." எ - ம். "மூவகைக்டணுக்களுக்கு மூறைமையால் விந்து ஞா னமேவின" என்று சித்தியாரினுங் கண்டுகொள்க. ஆகையா லீங் தப்பதத்துக் கணுக்க ளருவடையுமென்றது ஆன்மாக்களென் பதே துணிவெனவறிக.

அன்றியும் நிலவுதொழின் மருவியுருநிற்றலாணும். எ-கு. அறு வகைத் தொழிலிலே பொருந்தப்பட்ட தொருதொழிலிச்செய்து நிற்றலாணு மென்று பொருளுரைப்பாருமுளர். அப்படி யறுவ கைத்தொழில் மாணுடர்க்கொழிப மற்றுள்ள வான்மாக்களுக்குப் படாதாகையா லிவ்விடத்துச் சர்வான்மாக்களையு நோக்கிப் பொ துப்படக் கூறுகையாலே நிலவுதொழிலென்பது பொருந்தப்ப ட்ட தொழிலென்று பொருட்படுத்துகையே வழக்கெனவறிக. அ றுவகைத் தொழிலென்றுல் மாணுடர்க்கென்ற தேதென்னில் அறு வகையாவது உழவுதொழில் வரைவு வாணிபம் வித்தை சிற்பம் ஆகையா லப்படிச்சொன்ன தெனவறிக.

என்றிங்ஙனங் கூறப்பட்ட செய்யுளில் உலகமெலா மொரு வடிவு டொருத்தி டொன்றென் றுளதாகின்றளவி லொடுவது மென்ற பதமொன்றையும் உலகாயதனை மறுத்ததாக்கி மற்றப்ப தமைந்தும் மற்றுள்ள புறச்சமயிகளை மறுத்ததாகப் பொருளு ரைப்பாருமுளர்; அதுபொருளல்ல வெனவறிக. அதுவேனென் னில் இச்செய்யுள் பதந்தோறு மொருவன் கருத்தைப்பற்றித் தொடர்ந்து சொல்லுகையாலும் இச்செய்யுளுக்குக் கருத்தாகச் சேர்த்த குறட்பாவும் உலகாயத னொருத்தன் கருத்தைப்பற்றி நி ற்கையாலு மப்படிச் சொன்னதெனவறிக. அப்படி மற்றுள்ள

சமயிகளை மறுத்துக் கூறப்படாதாரை லுலகாயதரெனுவனையு நோக்கிச் சிவனையும் ஆன்மாவையும் ஆணவமலத்தையுங் கன்மமலத்தையுங் கூறவேண்டுங் காரணமெதென்னில் அவையிற்றை யவனில்லையென்று சொல்லுகையாலப்படிச்சொன்னதெனவறிக. அவையிற்றை யவனில்லையென்று சொன்னதற்கு. பி-ம். சித்தியாரில். "இப்படியென்றிக்கன்ம முயிரிறைவேறுண்டென்று, செப்பி டுபிவர்க்குமண்மேறார் செய்திடுங் குற்றமென்னை, வொப்பிலா மலமிபெற்ற மகளுரு முயற்கொம்பேறி, தப்பிலாகாயப்பூ வைப் பறித்தமைசாற்றினதோ" என்று. அவன்மதத்திலே கண்டுகொள்க.

இனியவையெல்லா முண்டென்றுகாட்டி யவனைமறுத்துக் கூறினதற்கு. பி-ம். சித்தியாரில். "அநாதியே லைமவின்றெனி ன்மல மாயைகன்ம மறுச்சிவ, னநாதிகன்மமணுக்கள்செய்ய வறி ந்துகன்மமுடற்செயா, வநாதிகாரியமாமுட்க ளசேதனம் மண்ணி யாவறிந், தநாதியாதியடைக்கவேண்டி மைமைப்பிசேறி மநாதி யே." என்று அவன் மறுப்பிலே கண்டுகொள்க.

ஆகையாலிச்செய்யு ளிங்ஙனங் கூறிவந்த வுபமானங்களி னலும் பிரமாணங்களினலு முலகாயதனை நோக்கி மறுத்தென் பதை யாறுபவத்தாற் கண்டுகொள்க.

இதனாற்சொல்லியது இதற்கு முன்னார்ச்செய்யுட்களிலே யுண்டென்றுகாட்டப்பட்ட கத்தானவ யில்லையென்று மிந்தப்பிர பஞ்சநித்தியமென்றுங் கூறிய வுலகாயதனை நோக்கி மறுத்து இ ந்தப்பிரபஞ்ச மவனவளதுவாகத் தோன்றிநின்றதினைகையாலே யி வையிற்றைக் காரியப்படுத்துகைக் கொருகத்தாவுண்டென்னு மு றைமுறையையறிவித்தது. (சு)

வேறு—இது உலகாயதன் மூதலிமீயோரை மறுத்துப் பதியு
ண்மை யுணர்த்திற்று

உலகமெலா மொருவனேடொருத்தி யொன்றென்றுளதா
கி நின்றளவிலொடுங்கும்- உலகாயதன் பிரபஞ்சந்தானே யிபல்
பாகியுண்டாங்கத்தா வெண்ணையெனில் இயல்பொருபடித்தா யிரு
த்தல்வேண்டும் அப்படி-யன்றிப் பிரபஞ்சமெல்லா மவனவளது
வெனக் கன்மத்துக்கிடாகத்தோன்றி நிலைபெற்று மீளத்தோன்
றின வெல்லோகளிலே யொடுங்கும். ஆதலி னொடுங்கின பிரபஞ்ச
மின்று முண்டாவதென்னெனெனில்,—பின்று மலமதமுளதா
கும்-பின்பு மலமோசமுவாக வொடுங்கின வெல்லோகளிலே நின்று மு
ண்டாகாநிற்கும். இனிப் பட்டாசாரிய னச்சுமாரு தென்பன் அப்
படியன்றிப் புழுவேட்டுவாளர்பாணற் போலவு மயிற்குட்டி-வண்
டாரற்போலவும்,—உருவமாறிவருவது செல்வது போவதாது
லாணும் - ஆத்மதேகங்கள் கன்மத்துக்கிடாக மாறி மாறித்தா
ன்றுவது நிற்பது மறிவதுமாகைபாலும். இனி நிரீச்சரசாங்கியன்
புருடன் சந்நிதியிலே மாயைதானே தனுவாதிகளாய்த்தோன்று
மென்பன். அப்படியன்றி,—அலிவின்மாயை யசேதனமாதலா னு
ம்-சலனமில்லாதமாயை சடமாதலாற் ருசேனவழி-யாக மாட்டா
மையாலும்,—அனுக்களுருவுடையு மறிவிலாமையாலும்-அந்த அ
த்மாக்களும் மலசத்தராகையா லொருட்டினை யெடுத்துத் தறி
ன்மையாலும். இனி யந்தப்பட்டாசாரியன் விதனதானே சரீரத்
தைக் கொடுக்குமென்பன். அப்படியன்றி,—நிலவுதாழின் மரு
வியுருநிற்றலாணும் - மாயையிடமாக வினைங்காநின்ற கன்மமான
தொருடம்பிலே பொருந்தி யிடமாய் நிலைபெறுகையாலும்,—
நிமலன்ருனே நின்றுணையுமளித்திடுவன்-நின்மலனென நிலன்று
னை விகாரமதாகின்று எல்லாவற்றையு முண்டாக்குவன். எ-து
வளவு எல்லை நிலவுதாழின் மருவியுருநிற்றலாலுமென்ப

தற்கு ஆத்மாக்கள் பொருந்தின தொருதாழ்ச்செய்து ஒரு டம்பிதீல நிற்கையுண்டாகையாலு மென்பாருமுளர். செல்வது-நி கழ்வது, இவ்வாசிரியர்தாமே செல்காலத் தற்பங்கொடுதிக்குமி றையென்றார் பிறிதிலும்.

அப்படியிங்ஙனக்கூறப்பட்ட முன்னர்ச்செய்யுள் மூடிவி லே நின்றனையுமளித்திடுவ னிமலன்றானே என்றதற்கு சாவ முந் சிவனேசெய்விப்பனென்று நீர் சிவனேருவன்மேலையும் வைத்துச்சொல்லுகிறதென்ன, இந்தப்பிரபஞ்சத்தைப் பிரமா சிருவக்டிப்பனென்றும் விஷ்ணு விரக்ஷிப்பனென்று முருத்திரன் சங்காரிப்பனென்று மூன்றுதாழிலுக்கு மூவரையுமென்றல்லோ சொல்லுவது என்கிற பாஞ்சராத்திரியைநோக்கி மூன்றுதாழி லுக்குஞ் சிவனேகத்தாவென்று முறைமையை மேலருளிச்செய் வா னெடுத்துக்கொண்டருளியது.

கந்தமலை ரயன்பனைடக்கு மூலகமெல்லாங் கன்ன னைவளித் திடுமனையெங் கடவுடானே, யந்தமூற வழித் திவை ரூலாலே யபனாயிடு மவனே துய ரந்திகாரத்து, வந்தமூலமு தன்னெழிலே மன்னுவிப்பனெல்லாம் வ ருவிப்பன் விகாரங்கண் மருவாவன்வானின், மூந்திரவி யெதிர்மூனி யாலுவறுமென்றல்லோ மூலகயா மென்னெழுதாருமுறையிலுமே. (நு)

பனைடப்புநிலையன் பனைடப்பாதலிலுற்
றனைடப்பவன் முதலெனத் தொன்றவுரைத்தது.

(இ-ள்) கந்தமலை ரயன்பனைடக்கு மூலகமெல்லாங் கன்னை வளித்திடுமனை யெங் கடவுடானே, யந்தமூற வழித்திவை ரூலாலே யபனாயிடு மவனே துய ரந்திகாரத்து, வந்தமூலமு தன்னெழிலே மன்னுவிப்பனெல்லாம் வருவிப்பன், மனம்பொருந்தின தாமரைமலரிலே யிருக்கப்பட்ட பிரமாவுலகங்களனைத்தையும் சிருவக்டிப்பன், அந்தவுலகங்களை விஷ்ணுவியாபகியாகிநிற்பன்,

அவை யெங் கடவுடானே யந்தமுறவழுத்தி நிவன்

அவர்களாற் படைத்தளிக்கப்பட்ட வுலகங்களைச் சேர வெம்மூடைய கத்தாவாகிய வுருத்திரன் மூடிந்துபோம்படி சங்கரிப்பன்.

ஆதலாலே அடனியுமவனதுயரதிகாரத்துவந்தமுறை

அந்தத்தொழில்களைச் சிவனப்படிச்சங்கரிக்கையாலே அந்தப் பிரமவிஷ்ணுக்களுமந்தச்சிவனுடையமிக்கவாக்கினவழியிலே வருகிறமுறைமையினையுடைய வதிகார கர்த்தாக்களாயிருக்கும். அப்படியாயுலந்தத்தொழில்களும் பிரமவிஷ்ணுக்களும் அதிதேயுடையதோ வம்மூடைய கத்தாவாகிய சிவன்கொடுத்தோ வென்னில்?

தன்மெய்மேல் மன்னுவிப்பன்

எம்மூடைய சிவன்றனக்குள்ளானதொழில்களிலே யந்தப் பிரமவிஷ்ணுக்களையு நிறுத்துவன். அவையப்படியுமடைய சுவறுடைய தொழிலேயாயும் அவையிற்றை யவனழிப்பானேனென்னில்?

எல்லாம்வருவிப்பன்

அப்படியவனழித்தாலுந் தன்னுடைய கிருத்தியங்களை நடத்தவேண்டுமென்காலத்தக் கெல்லாவற்றையுமீளவுமுண்டாக்கியுங்கொள்ளுவன். அப்படியாயுலகருத்தரெயருதாழில் செய்யமாட்டுகிறுலில்லை. பலதொழிலுமொருவன் செய்வதாயிலம்முடைய சிவன் விகாரப்படாதிருவனென்னில்?

விகாரங்கண் மருவான்

அப்படி யெம்மூடைய சிவன் பலதொ நிலு நடத்தி லலு மவனுக்கு விகாரங்களு ண்டாகாது. அதுவென்போலவென்னில்?

வானின் மூங் திரமி யெதிர்மு ளரி யலர் வுறு மொன் றலர்வா ன் மு னை கயா மொன்றென்று லரு மூ னை றயி ருமே.

ஆகாசத்திலே தோன்றிச் செல்லு மாதி த்தன்சந்நிதியிற் மூமனையானது மூதிர்ச் சிக்குறை யொப்புக்கிடாகக் காரியப்படு மிடத் தொனறயராகின்றது ஒன்றலருகை க்குப் பக்குவமாகாகின்றது ஒன்றுலராகி ன்றது இப்படித்தாமரை மூன்று தொடுத்ப் பட்டு நிற்கச்செய்தே யாதித்தனுக்கு விகா ரமில்லாதாற்போல. எ - று.

று-ம். இந்தச் செய்யுளுக்கிட்ட தொந்தனையிலே சிரு வந்துக்குந் திதிக்குஞ் சங்காரத்துக்கும் பிரமா விஷ்ணு வுரு த்திராணயுஞ் சொல்லியிருக்க வும்மூடைய சிவமூருவனை யுங் கத்தாவென்பானேனென்று பாஞ்சராத்திரி விரோவிரு னென்பதற்கு. பி-ம். சித்தியாரிஸ். "உரைத்தவித் தொடுஸ் கன்மூன்று மூவருக்குலகமாத, வரைத்தொருவனுக்கேயா க்கி னைவத்தநிங்கென்னை யென்னிஸ், விரைக்கமலத்தோன் மாலு டீமவஸான் மெவிரெர்கள், புரைத்ததிகாரசத்தி புன் னெரியாகன்னை னையாலே" என்று அவன விரெயுதற் குத்தரமாகக் கூறியதுங் கண்டுகொள்க.

இனி கந்தமலரயன். எ-ரு. பூவுக்குப் பெயர்கூறுமஸ் மலரென்று பொதுவாகச்சொல்லியிருக்கத் தாமரைமலரென் றும் பொருட்கூறியதேதென்னில் பிரமாவுக்கிருப்பிடந் தா மரைமலரென்று நூல்களிற் சொல்லிவருகையாலே ஆசாரணை பற்றி யனைத்துப் பொருட்கூறியதெனவறிக. அப்படிவருமை தற்கு. பி-ம். "அலரோனெடுமா லமரர்கோன்." எ-ம். "பூ

வார்திசைமுகன்." எ-ம். முளரியன். எ-ம். தாமரையோன். எ-ம். வருமேதகக்களைக் கண்டுகொள்க.

இனி யவையெங்கடவுடானே யக்தமூறவழுத்திடுவன். எ-ரு. அவையென்ற சுட்டுகொண்டே அந்தத் தொழில்களுக்குக் கத்தாவாயுள்ள பிரம விஷ்ணுக்களையு மழிப்பனைவ்வனவு மாமெனவறிக. இதற்கு. பி-ம். சித்தியாரில். "இறுதியாங்காலந்தன்னி லொருவனே யிருவர்தாமு, மூறுதியாய்நின்மூரென்னி லிறுதிதானுண்டாகாதா, மறுதியிலரனெலையல்லா மழித்தலாலவரழலின்றும், பெறுதலாமாக்கோகக்கம்போ தினாணைத்தாலே." எ-ம். "அழிப்பாரியேலவரென்றுயிர்தனை யழிக்குமன்றாங், கழிப்பது தவிர்க்கமாட்டா ரவர்களுமழித்தெதுண்டா, னழிப்பாரியேலவரென்றாங் கனாந்தது மழிந்தவின்றே, வழித்திடரனெயாக்க நோக்கமு மாக்குவானே." எ-ம். வருமேதகக்களைக் கண்டுகொள்க.

இனி அயனாரியுமவனதுய ரதிகாரத்தை வந்தமுறை. எ-ம் எல்லாம் வருவிப்பன். எ-ம். வருகையாலே யந்தக்கத்தொழில்களினையன்றியே யந்தக்கத்தொழில்களுக்குக்கத்தாவாயுள்ள பிரமவிஷ்ணுக்களையுந் தெய்வனையுண்டாக்குவனெனவனவு மாமெனவறிக. இதற்கு. பி-ம். சித்தியாரில். "சிவன்கள் சுகசம்போலச் சிவர்வயிற்றுதித்தமாலுந், தெவ்வன்றனையங்சாக்கச் சுவேச்சையாற் சிந்தானனன்பீர், தூவன்பின் படைக்கமாட்டா தரனடி போற்றியதுக், கோவந்த மூகத்திற் றோன்றிச் சிருட்டியைக் கொடுத்தம்கூறும்." எ-து. கண்டுகொள்க.

இனி யெங்கடவுடா னென்றதுகொண்டே சிவனெனக்கத்காவென்றனனவுறிக. இதற்கு. பி-ம். சித்தியாரில். "காரணனாயினயின்றுமயாதுகாரணனாயின்றும், காரணமெடாருவருருத்

க்கங் கொருவர்தா மிருவருக்கும், வாரணமுரித்தவள்ளம் காரணமெனலுமன்ற, வாரண மூரைக்கும்பக்கத் தவர்களு மறைந்தாரன்றே.” எ-து. கண்டுகொள்க.

இதனாற்சொல்லியது பிரமம விஷ்ணுக்களுடைபசிருஷ்டியுந் திதியையுஞ் சிவனெயடித்துப்போடுவனென்றும் மீளவுமுண்டாமிடத்துச் சிவனெயுண்டாக்குவனென்றும்வருமுறைமையையறிவித்தது. (ரு)

வேறு—இது பாஞ்சராத்திரியை மறுத்துச் சங்காரகர்த்தாவே படைப்புமுதலியவற்றிற்குங் கர்த்தாவென்பது உமாவினருகிகாரியாய் நின்றே செய்வனென்பது முணர்த்திற்று.

உலகமெல்லாங் கந்தமல ரயன்படைக்கும் - பிரபஞ்சமெல்லாம் பிரமரித்துவன் படைப்பன்,—கண்ணனளித்திடும்-அவனாற் படைக்கப்பட்ட பிரபஞ்சத்தைப் புருஷோத்தமனரட்சிப்பன்,—அனலெங்கடவுடானெயந்தமுறவழித்திடுவன் - அனலிற்றோன்றியெம்முடைய சுவாமி தானெதன்னெயொழியமற்றெல்லா மறுதிபொருந்தும்படியழிப்பன்,—ஆதலாலேயபனரியுமவனதுய ரதிகாரத்தை-அவையாதேலபிரமவிஷ்ணுக்களுமவனுடைய மேலானவதிகாரதிதேலபொருந்துவார்கள்,—வந்தமுறை தன்னெழுதிதேலமனவுவிப்பன்-இப்படியந்தமுறைமைகளெல்லாந் தன்னுடைய தொழிலாகவே நிலைபொருந்துவன்,—எல்லாம் வருவிப்பன் - மீண்டுமொடுங்கின முறைமையிலே சருவமுமுண்டாக்கா நிற்பன்,-விகாரங்கள் மருவானன-இப்படிச்செயகையிலுந் தானெருவிகாரங்கள்பொருந்தான,—எந்தப்படியெனின் ? வானினமுந்திரவியதிற்றோனியலர்வுறுமென்று - வானினிடத்தியங்குமாதித்தன் சுங்கிரியதிலே மேற்பட்ட தாமரையொனலரானிற்கு

ம்,—அலர்வானமுகையாமொன்று-அலர்தற்குப் பக்குவமாக முகுளிதமாகா நிற்குமொன்று,—ஒன்றுலருமம்-ஒன்றுலராநிற்கும்,—முறையிரும்-இப்படியினை யாதித்தலற் காரியப்படுவருகையிலு மாதித்தன் கருத்தி லினையில்லாததுபோலப் பிரபஞ்சஞ் சிவனுற்காரியப்பட்டு வருகையிலுஞ் சிவன்கருத்தில் விகாரமில்லாமை யிந்தமுறைமைபோலவாம். எ-று.

இன் உவமையுருபு. பொருந்துவரென்னுந்தொழிலாகவெனவும் வருவிக்க. முந்து சந்நிதி. வானிடத்தென்னாக்கிரகங்களினு முந்திரவியென்றுமாம்.

அப்படியிந்தத்தொழில்களையும்முடையகத்தாவென்னபயனைக் கருதிச்செய்கின்றனென்ற புத்தனைநோக்கிமேலருளிச்செய்வானெடுத்துக்கொண்டருளியது.

ஏற்றவினையாரனருளின்நிருவிளையாட்டாகவியம்புவர்கள் ளனுக்களிடர்க் கடனின்றுமெதித்தே, யூற்றமிக வருள்புரிகலேதுவாக வுரைசெய்வெனாதிக்கமிளப் பெழுத்தன்மற்றைத், தோற்றமில பாகம்வைக்காதல்பேராகந் துப்பித்த நிதானாகாயி நிறுத்தலாகும், பேற்றலருமருளருளையன்றிமற்றுப்புகன்மு வையுமருளெழியப்புகலொணாதே.

மன்னுயிர்க்கிரங்கி வகுத்தவைந்தொழிலு
மன்னவனருளினு மூறைமைமாறிற்றது.

இ-ள். ஏற்ற வினையாரனருளின் நிருவிளையாட்டாக வியம்புவர்கள் இங்ஙனம் பொருந்தப்பட்டதொழிற்கள் தம்பிரானது ருறுக்கிரகத்தாலே செய்யுந் திருவிளையாட்டென்று பெரியோர்கள் சொல்லுவார்கள். அப்படியானது மும்முடையகத்தாவானவன் பாலனைப்போலப்

பயனற்றகாரியஞ் செய்வாரிலரென்னில்? அப்படியல்ல. எம்முடைய கத்தாவானவன் அந்தத்தொழில்களைப் பாராமலெளிதாகச்செய்கையிலேவிளையாட்டென்றதாம். அவனைவயிற்றை யேதுகாரியமாகச் செய்கிறானென்னில்

அனுக்களிடர்க் கடனின்று மெடுத்தேது பூற்றமிகவருள்புரிகலேதுவாகவுரைசெய்வர்

ஆன்மாக்களைத் தக்கசாகரமாகியஜாகக் கடலிலேநின்றுங் கரையேற்றித் தனதுநிலைபேறுயுள்ள திருவடியிலே கூட்டிக்கொள்ளுதைகாரணமாகவென்று சொல்லுவார்களறிவாலுயர்ந்த பெரியோர்கள். அப்படியுயர்முடையகத்தாவறுக்கிரகஞ்செய்கிறவனேயாலும் சங்காரிப்பானென்பானேனென்னில்

ஏதிக்கமிலைப்பொழித்தல்

அப்படிச் சங்காரிக்கிறது தன்மத்திலைலைப்புண்ணுமான்மாக்களையிலைப்பாற்றுகை. அப்படியிலைப்பாறிக்கிடவாமல் மீளவுந் தோற்றுவிப்பானேனென்னில்

மற்றைறத்தோற்றமில பாகம்வர

மீளவுஞ் சிருஷ்டிக்கிறது மலநீங்காதபடியாலே அந்த மலநீங்குகைப்பொருட்டாகத் தனுகரண புவனபோகங்களோடுகூட்டுகிறதாயிருக்கும். அப்படிசிருஷ்டித்தபோதே யந்தமலத்தைப் பாகம்வருத்தித் தன்னிடத்திலே கூட்டிக்கொள்ளாமல் நெடுங்காலந் திதியெனகிறதொழிலிலே நிறுத்துவானேனென்னில்

•

காத்தல் போல் துய்ப்பித்தல்

அப்படி நெடுங்காலந் திதியெனுஞ் சிறந்தொழினிலை நிறுத்தினது ஆணமாக்களுக்குக் கன்மங்கள் மிகுதியாயிருக்கையிலே யந்தக்கன்மங்களைப் புசிப்பித்தியல்பிலே மலபாகம்வருத்துகிறதாயிருக்கும். அப்படிச் செய்கிற கத்தா மறைப்பானென்னில்

திரோதாயி நிறுத்தலாகும்

திரோதமாகிய மறைப்பாவது அந்தப் போகங்களைப் புசிப்பித்துக் கன்மங்களைத் தொலைவிக்கத்தக்கதாக அளவுகளிலே நிறுத்தினதாயிருக்கும். அப்படியாலே லாக்கிரகமென்னில்

போற்றலருளருளை

சொல்லுதற்கரிய லாக்கிரகமாவது ஆன்மாக்களைத் தன்னதென்னுந் திருவடியிலே கூடக்கொள்ளுவதுதானாலாக்கிரகமாயிருக்கும். இதுவெவ்விதங்களும் முன்சொல்லப்பட்டகாலுங்காரியமென்னில்

அன்றி மற்றுப்புகன்றலையு மருளொழியப்புகலொணாதே.

இவ்வாக்கிரகமன்றி முன்சொல்லப்பட்ட சிருஷ்டிதிதிசங்காரந் திரோபாவமென்னப்பட்ட காலுந் தன்னதிருவடியிலே கூட்டிக்கொள்ளுதலை நிமித்தமாக மலபாகம்வருத்துகிற லாக்கிரகமொழியமற்றெல்லாம் முன்சொல்லுவதன்றே.

எ - று.

ரு - ம். அநாதிருளின் நிருவிளையாட்டு என்றதை உம்மூடையகத்தா பாலனைப்போலப் பயனற்ற காரியஞ்செய்வாரில்லையென்று புத்தன்சொன்ன வென்றதற்று. பி-ம். சித்

திப்பாரில். "பெறுவதிங் கென்படைத்துப் பெற்றது விசோயா ட்டென்னிற், சிறுமழவிறையதாகுஞ் செய்திடுங் கன்மத்தென் னி, ணுறுபெறுங்ஙனமஞ் செய்வோர் முனபுளராவருண்மை, பெறிவுறின் ஞாலமெல்லா மகாதியென் றறிந்திடாயே" எ-து. அவன் மதத்திலே கண்டுகொள்க.

இனி யிந்தத் தொடரிற்களைப் பாராமற்செய்தது கொண்டே யவனுக்கு இது விளையாட்டாமென் றுத்தரமாகக் கூறினத்துக்கு பி-ம். திருவாசகத்தில் "ஆர்த்தபிறவித் துயர்கெட நாமார்த்தாடுந், தீர்த்தனற்றிலைச் சிற்றம்பலதனை தியோடுங், கூத்தனிவ்வானுங் குவலையமுமெல்லாமுந், காத்தும்படைத்துங் கரந்தும்விளையாடி, வார்த்தையும்பெரி" எ-ம். "ஐயா நியாட்கொண்டருளும் விளையாட்டில்". எ-ம், வருமெதுக்களைக் கண்டுகொள்க.

அன்றியும் சிவனே பஞ்சகிருத்தியஞ் செய்வனென்பதற்கு. பி-ம். திருவாசகத்தில். "போற்றி யெல்லாவுயிர்குந் தோற்றமாம் பொற்பாதம்-போற்றி யெல்லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்-போற்றியெல்லாவுயிர்க்கு மீருமிணையடிகள் -போற்றிமாலுன்முகனுங் காணாதபுண்டரிகம்-போற்றியாமுய்யவாட் கொண்டருளும் பொன்மலர்கள்" எ-து. கண்டுகொள்க. இதனுள்தோற்றமாம் பொற்பாதம். எ-து. சிருஷ்டியெனவறிக. போகமாம் பூங்கழல்கள். எ-து. திதியெனவறிக. ஈருமிணையடிகள். எ-து. சங்காரமெனவறிக. மாலுநான்முகனுங்காணாத புண்டரிகம். எ-து. திரோபாவமெனவறிக யாமுய்ய வாட்கொண்டருளும் பொன்மலர்கள். எ-து. அநுக்கிரகமெனவறிக. ஆக ஐந்துகிருத்தியத்துக்கும் பிங்ஙனங் கண்டுகொள்க.

அன்றியுங் கத்தாவிந்தத்தொடரிலியான்மாக்களைக்கூட்டிப் பஞ்சகிருத்தியப் படுத்தமிடத்துப் பாராம

அ

லெளிதாக விளையாட்டாகச் செய்வனென்று மப்படிச்செ
ய்யவே ஆன்மாக்களுக்குண்டான மலபாகமும் வந்து திரு
வடிக்கு முரித்தாவார்க ளென்பதற்கு. பி - ம். சித்தியாரில்.
"சொன்னவித் தொழில்களென்ன காரணந் தோற்றுவென்
னின், முன்னவன் விளையாட்டென்று மொழிதலு மாமுயிர்க்
கு, மன்னியபுத்தி முத்தி வழங்கவு மருளான்முன்னே, தன்
னியமலங்களெல்லாந் துடைப்பதற்கு சொல்லலாமே" எ-று.
கண்டுகொள்க.

"அணுக்களிடர்க் கடனின்று மெடுத்தே யூற்றமிக வரு
ள்புரிதலேதுவாக வுரைசெய்யர்." எ - று. ஆன்மாக்களை
ஜாகக்கடலிலே நின்றுங் கரையேற்றித் தனது திருவடியி
லே கூட்டிக்கொள்ளுகை நிமித்தமாகக் கத்தாவிந்தத்தொ
ழில்களைச் செய்வனென்று புத்தனே நோக்கிச் சொன்னதற்
கு. பி-ம். சித்தியாரில். "அநாதிமுத்த ரெய்ப்பசு யசுத்த
யெல்லாவறிவுதொழிலணுக்கிரக மூடையவரன்கன்ம, நி
கமற்றுத்தவிடத்தே சத்திநிபாத நுழைவித்த மலங்க
ளெலாநுங்கநோக்கி, மறுதிகர வைங்கலெலாமடக்கித்த
ன்னை வழிபடுதல் லறிவருளி மாக்கருணைத் தையா, லிரு
பிறப் பினின்று மெடுத்தமாரு வின்பமுத்திக் கணைப்ப
னெங்கண்முத்தி யிதுவே" எ - று. அவன்மறுட்டியிலே கண்டு
கொள்க.

இதனைச்சொல்லியது உம்மூடையகத்தாவிந்தத்தொழி
ல்க ளென்னபயனைக் கருதிச்செய்கிருனென்ற புத்தனேநோ
க்கியானன்மாக்களை மலபாகம்வருந்தித் தனதுதிருவடியிலே
கூட்டிக்கொள்ளுகைப் பொருட்டாக வென்றும் அப்படிச்
செய்யுமிடத்துப் பாரமார்த்தமெளிதாக விளையாட்டாகச் செய்
வனென்றும் வருளூலுரைமையை யறிவித்தது. (சு)

வேறு—இது தம்மிறைவ னைந்தப்பயன் குறித்துச் செய்கின்ருனென்னும் புத்தனைக்குறித்துக் கிரீடபிரமவாதி மாயாவாதிகள் கருத்தையு மெடுத்துக்காட்டி யுத்தர முரைத்திற்று.

அரனருளி னேற்றவினை-பரமேசுரன் காருண்யத்தி னுலே மேற்கொண்ட விவற்றை,—திருவிளையாட்டாக வியம்புவர்கள்-கிரீடப்பிரமவாதி மாயாவாதி முதலான சித்தாந்திகள் பிரமத்தின் விளையாட்டென்று சொல்லுவார்கள்,—அதைக் களிடர்க் கடலினின்று மெடுத்தே - சைவசிந்தாந்திகள் துன்மார்க்களைத் துன்பத்திற் கேதுவான பிறவிக்கடலினின்று மெடுத்து,—ஊற்றமிக வருள்புரிதலேதுவாக வுரைசெய்வர்-நிலைபெற மிகவுண்டாம்படி யருளைக்கொடுக்கையே காரணமாகச் சொல்லாநிற்பர்கள். அஃதெப்படியென்னில்,—ஏதுக்கமினைப் பொருந்தல்-சங்கார மாத்மார்க்களையினைப்பாற்றலினிக்கையா யிருக்கும்,—மற்றைத் தோற்றமில பாகம்வர-பின்படைத்தல் அவ்வாத்மார்க்களைப்பற்றிய மலத்துக்குப் பக்குவமுண்டாக வேண்டியாயிருக்கும்,—காத்தல் போகந்துய்ப்பித்தல்-இரட்சிக்கிறது கன்மந்திதாலுத்தல் காரணமாகப் போகத்தை யிழுமற்குறையாமற் புசிப்பிக்கையாயிருக்கும்,-திரோதாயி நிறுத்தலாகும்-மறைப்பை யுண்டாக்குதல் புசிக்குமளவு மவ்விடயங்களிலே சுவைவடிறக்கும்படி நிறுத்தலையாயிருக்கும்,—போற்றலருமருளருளை-புகழ்தற்கரிய வருட்சத்தி மறைக்கிரகமே,—அன்றிமற்றுப் புகன்றனையு மருளொழியப் புகலொணுதே - இதுவன்றி மூன்சொல்லப்பட்டகான்கு மறைக்கிரகமென்று சொல்வதன்றி விளையாட்டென்று சொல்லவொண்ணுது. எ - று.

அணுக்களென விரண்டாமுருபுவிரிக்க. எழுத்தேதெயென்னு மேகாரம் அருள்புரிதனமே லேற்றப்பட்டு பிரிநிலையாய்நின்றது. அருளை ஏகாரத்தேற்றம். மற்று வினைமாற்று.

☞ முதற்சூத்திரமாகிய பதிபிலக்கணை மூற்றும்.

இங்ஙன முதற்சூத்திரமாகிய பதிபிலக்கண மருளிச்செய்து மேலிரண்டாஞ் சூத்திரமாகிய பசுவிலக்கணமும் பாசவிலக்கணமு மருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளினது.

இதற்கு வழியேதென்னில் முதற்சூத்திரமாகிய பதிபிலக்கணத்திற் முதலிருத்தமாகிய "பலகலி" என்றசெய்யுளில் "பசுபாசந் தெரித்தல்" என்றபதத்துக்குப் பொருள் பதியையும் பசுவையும் பாசத்தையும் பிரித்துச்சொல்லியறிகிறதே பயனென்றமையால் பதிபிலக்கணமாகிய "ஏற்றவிலை" என்றசெய்யுள் மூடிவாகிய விருத்தமாறுக்கு மேலாகப் பசுவிலக்கணமும் பாசவிலக்கணமுங் கூறுமேது வழியாகையால் சிவன் ஆன்மாக்களை மாயாகன்மங்களோடிங் கூட்டிக்காரியப்படுத்தி மலபாகம்வருத்தி முத்திக் கேதுவாக்குவ தென்னப்பட்ட பசுவிலக்கணமும் பாசவிலக்கணமுமாகிய "எண்ணரிதாய்" என்ற விருத்தந்தொடங்கி "அரிவையபரின் புறமுத்தி" என்னும் விருத்தமுடிவாகிய செய்யுள் மூப்பத்திரண்டு மிரண்டாஞ்சூத்திரமாக வருத்தனவறிக.

இந்தச் செய்யுட்கள் முப்பத்திரண்டு மிரண்டாஞ்சூத்திரமாக நின்றதற்கு வழியேதென்னில் சிவஞானபோதத்திலுஞ் சிவஞானசித்தியாரிலும் இரண்டாஞ் சூத்திரத்துக்குண்டான கருத்து இந்தச்செய்யுட்களிலும் வருகையாலினையிற்றையும் இரண்டாஞ் சூத்திரமாக வருத்தனவறிக. அ.

தாவெங்ஙனெனென்னில் சிவஞானபோதத்தி லிரண்டாஞ்சூத்திரமாகிய "அனைவரையதானே யாயிருவினையிற், போக்குவரவு புரியவாணையி, னீக்கமின்றி நிற்குமனைறே." எ-ம். சிவஞானசித்தியாரி லிரண்டாஞ் சூத்திரமாகிய உலகெலாமாதி வேறு யுடனுமா யொளியாயோங்கி, யலகிலா வுயிர்கள்கண்மத் தானையி னமர்ந்தூசெல்லத், தலைவ ரூயிவற்றின் றன்மை தனைச்செய்து வின்றித்தானே, நிலவுசீரமலரு கின் றனவீங் காதெங்கும்." எ-ம். இரண்டு செய்யுட்களினும் வருங்கருத்து இந்நூலினும் "என்னைனரிதாய்" என்னும் விருத்தம் வருகையாலும் சித்தியாரில் இரண்டாஞ் சூத்திரத்தில் மலமாயை கன்மங்களின் காரணகாரியத்துக்கு வரும் விருத்தங்களில். "ஒன்றதா யதேகசத்தி யுடையதாய்." எ-ம். ஆணவமலத்திற்குச் சொல்லும் விருத்தத்தின் கருவைப்பற்றி இந்நூலினும் "ஏகமாய்த்தங்கால வெல்லைகளின் மீரு யென்னரிய சத்தியுதாய்." எ-ம். இந்த ஆணவமலத்தைத திரோதாயி பாகம் வருத்துகைக்கு. "ஏயுமும் மலங்கடத்தக் தொழிலினை யிற்றீவதுக், தாயவன் றனதுசார்சத்தி திரோதான கரியதென்றும்." வரும் விருத்தத்திற் கருவைப்பற்றி இந்நூலினும் "பாகமாம்வகைதின்று திரோதானசத்தி பண்ணுதலான் மலமெனவும்பகர்வர்." எ-ம். வருகையாலும், இனியசுத்தமாயா காரணத்துக்குச் சொல்லப்பட்ட "நித்தமாயருவாய்" என்னும் விருத்தத்தின் கருவைப்பற்றி இந்நூலினும் "உருவாதி சதுவிதமாய்" என்னும் விருத்தம் வருகையாலும் இங்ஙனஞ் சொல்லப்பட்ட மாயையென்பது சுத்தவித்தையென்றுஞ் சிவன்செய்கின்றவித்தில்லை கன்மங்களானியானுமாக்கஞ் காரியப்படுத்துமென்றுஞ் சொல்லுகிற சமயிகளின் மற்றுத்த மாயையுண்டென்றும் மிக்கமாயையுங் கன்மமும் ஜடமா

கையாற் முனை காரியப்படமாட்டாது இவையிற்றைக் கூட்டிக் காரியப்படுத்துகைக் கொருகத்தா வுண்டென்றும் வருங்கருத்தாகிய "உலகுடல் கரணங்கால மூறுபலநியதிசெய்தி, பலவினை வென்றுகன்மம் பண்ணுவ தன்பதாலு, னியவிடா தினைதாஞ்சென்று நிஷ்ணந் துயிர் நிறுத்திக்கொள்ளா, தலகிலாவறிவுஷ்ணை யனைத்திடு மருளிலுலே." என்னும் விருத்தத்தின் கருவைப்பற்றி இந்நூலினும் "எனையிதுவெனில்". எ-ம். "படைத்தலதாருபடி". எ-ம். "அல்லன்மிக வுயிர்க்கினைவதான்." எ - ம். வருமிருத்தங்கள் மூன்றும் வருகையாலும், அன்றியும் ஆன்மாக்களுக்கு மூன்றுமலமுமாகாதியென்பதற்குச் சிவஞானபோதத்தி லிரண்டாஞ் சூத்திரத்து வெண்பாவில் "நெல்லிற்குமியு நிகழ்செம்பி னிற்களிம்புஞ், சொல்லிற்புதிதன்று தொனைமையே." எ-ம். சுத்தியாகினும். "மும்மலநெல்லினுக்கு மூவினையொடு தவிடுமிப்போன், மம்மர்செய் தனுவினுண்மை வடிவினை மறைத்தன்று" எனனும் இவ்விரண்டினுள்ளு மூன்ற கருவைப்பற்றி இந்நூலின் முற்கூறிய "அல்லனமிக" என்னுஞ் செய்யுன் மூடியில் நெல்லின் மூவின தவிடுமிப்போலகாதியாக" எ - ம். வருகையாலும், முற்கூறிய அசுத்தமாயையின் காரியமாயுள்ள கலாதிதத்துவங்களின் மிருற்றங்களையுங் காரியப்படுகையுஞ் சொல்லப்பட்ட "மாயையிற் காலமோடு" என்னும் விருத்தந் தொடங்கி "குறிகொள்வச் சிதத்திரோதம்" என்னும் விருத்த மூடவாகிய செய்யுள் பதினைந்தினு மூன்றாகிய தோற்றத்தி ன கருவைப்பற்றி இந்நூலினும் "அருத்திமிகுங்கலை காலம்" "மன்னிய கன்மேந்திரியம்" என்னும் விருத்தமிரண்டும் வருகையாலும் கன்மத்தின் காரணைகாரியத்துக்கு "நன்மைமாடதன்மமாகி." எ-ம். "இருவினையாகாதி." எ-ர். "உடற்செயல்கன்மம்."; எ-ம். "மெலக்குவித்துமாகி." எ-ம். "மூற்செய

ல்லிதியை." எ-ம். வரும்விருத்தங்களின் கருவைப்பற்றி இந்நூலினும் "கண்ணியிடும்." எ-ம். "கன்மமேநறி." எ-ம். "மெலக்குவருவினை." எ-ம். "உற்றதாழில்." எ-ம். வரும்விருத்த நாலும் வருகையாலும் இங்ஙனஞ் சொல்லப்பட்ட மலங்களின் முறையாகிய "மலமாயைகன்ம மாயேயந் திரோதாயி மன்னிச் சலமாரும் பிறப்பிறப்பிற்றங்கி" என்னும் விருத்தத்தின் கருவைப்பற்றி இந்நூலினும் "மோகமிகவுயிர்க டொறு மூடலெய்நிற்கும்" என்னும் விருத்தம் வருகையாலும் இங்ஙனஞ் சொல்லப்பட்ட மலமைந்தினுள்ளும் ஆணவமலம் ஆன்மபோதத்தை மறைக்குமென்றும் அப்படி டாணவமலமென்ப தொன்றில்லை மாயாசரீரங்களே யான்மபோதத்தை மறைக்குமென்றும் மாயாகாரியமான கலையாதி தத்துவங்களிலுலே சிவன் ஆணவமலத்தைப் பாகமாக்குவனென்றும் வருங்கருத்தாகிய "போதகாரியமறைத்து நின்றது புகல்மலங்கான்." எ-ம் "மலமெனவே லொன்றில்லை மாயாகாரியமதென்னில்." எ-ம் "மாயையேயான்மஞானக் கிரியையை மறைத்துநிற்கும்." எ-ம் "பருதியை மூகின்மறைப்பப் பாயொளி பதுங்கிலுற்பால்." எ-ம். "எல்லாமாய்த் தத்துவங்களிசைந்தெனலுலுக்கு." எ-ம். "எழுமுடல் காரணமாதி" என்னும் விருத்தத்தில் "மாயைகொடு மலமொழிப்பன் முனேனென்." எ-ம். வரும் விருத்தங்களின் கருவைப்பற்றி இந்நூலினும் "ஓங்கிவரும் பலவுயிர்கள்" எனனும் விருத்தந்தொடங்கி "புகலு மலமொழிதற்குக் காதி முதன்மாயை பொருந்தியிடமானருளால்." என்னும் விருத்த முடிவாகிய் செய்யுளைந்தும் வருகையாலும் அந்தக்கலையாதி தத்துவங்களொடு மான்மாக்கள் கூடிப் பிரபஞ்சகாரியப்படுகைக்கு முற்கூறிய "மாயையிற் காலதிமாடு" என்னும் விருத்தந்தொடங்கி "இரத்தரமாகி வான்முன்" என்னும் விருத்தமுடிவா

கிய செய்யுள் பதின்மூன்றினுட்டத்துவங்கள் காரியப்பதிங் கருத்தைப்பற்றி இந்நூலினும் "இத்தகைமை யிறையருளா ல்" என்னும் விருத்தத்தில் "சுத்தமாயை வைத்தகலுதான் மூலமலஞ் சிறிதே நீக்கி" என்னும் பதந்தொடங்கி "மூந்திய வைம் பூதங்கள் வாகுதியாக" என்னும் விருத்தமுடிவாகிய செய்யுளைழும் வருகையாலும் அன்றியும் தத்துவ முப்பத் தாறின் பிருகைக்கு மூவகைத் தத்துவங்களுரைக்கும் ஆன்மாக் கள் யோனிவிட்டு யோனிபற்றி ஜாகமாரணப்படுகிறதற்கும் நால்வகைத் தோற்றத்துக்கு மென்பத்துநான்கு நூறாயிர யோனிபேதத் தொகைக்கும் சித்தியாரில் வரும் விருத்தங்க ளாகிய 'சுத்ததத்துவங்க ளென்று முன்னமே மிசான்ன வைந்து, மித்தகைமையி னியம்பு மிவை முப்பத்தொன்று மாகத் தத்துவமுப்பதாரும்." எ - ம். 'ஐந்து சுத்தத்தினெ ழு மசுத்தா சுத்தமசுத்தந், தந்திடும்புமான்கி ழெண்மூன் ரூயதத்துவஞ் சிவர்க்கும்" எ - ம். சிவஞானபோதத்தி னிர ண்டாஞ்சூத்திரத்து வெண்பாவில் 'அரவுதன்பிரு லுரிவு மக் கனவும்வேறு, பரகாயம்போய்வரு மப்பணபும்." எ-ம். சித் தியாரில். 'பன்னக மண்டசங்கள் பரகாயந் தன்னிற்பாய் வோர், துன்னுதோல் மூட்டையாக்கை தூறந்துசெல் வது வேபோல." எ-ம். "அண்டசஞ் சுவேதசங்க ளுற்பிசஞ்சரா யுசத்தோ, டெண்டருகா லெண்பத்து நான்கு நூறாயிரத்தா, லுண்டபெம்யோனி". எ-ம். வரும் விருத்தங்களின் கருவைப் பற்றி இந்நூலினும் "இந்நிலையிலைந்து சுத்தம்" எ-ம். "தோற் றியிடமண்டசங்கள்." எ - ம். விருத்தமிரண்டும் வருகையா லும் அன்றியும் இன்னன மான்மாக்கள் பிரபஞ்சகாரியப்பட்டு மலபாகம்வந்து முத்திக்கேதுவாவார்க ளென்பதற்கு சித்தி யாரில். 'அரன்விதி யருளதென்றே யறைந்தன மதுவுமுன் னே, தரைநரகந்தறக்கந் தனுகரணாதியெல்லாம், வருவது தஞ்

செய்தநாதி மலங்களிம் மருந்தாற்றீர்த்தப், பாகதி யதுவுந்து பாதபங்கயமுஞ் சூட்டும்.' எ - ம். வருமிருத்தத் தின் கருவைப் பற்றி இந்நூலிலும் 'இனையபலபிறவிகளின்.' எ-ம். 'நாடியசத்திநிபாதம்.' எ - ம். 'அரிவையரின்புறுமுத் தி.' எ - ம். விருத்தமூன்றும் வருகையாலும் 'எண்ணரிதாய்' என்ற விருத்தந்தொடங்கி 'அரிவையரினபுறுமுத்தி' என்னும் விருத்தமுடிவாகிய செய்யுட்களித்தனைக்கு முன்னுள்ள நூல்களி லிரண்டாஞ் சூத்திரத்திற் செய்யுட்கண்ணுக்காட்டி வருகையால் இவையுமிரண்டாஞ் சூத்திரமாக நின்றனவறிக. அப்படியாலு லிந்நூலில் இரண்டாஞ் சூத்திரமாக வருத்தசெய்யுள் மூப்பத்திரண்டினுள்ளுஞ் சுத்தமாயா காரண காரியத்துக்கு வருத்த 'உன்னலரும் பரசிவன்றனருளா லெனாத முதிக்குமிகுங் குடிலைதனிம்.' எ-ம். வாக்குகணலுக்கும். 'வந்தடைந்து பின்னமாய்' எ - ம். வருமிருத்தங்களிரண்டுக்கும் எதுக்காட்டாததேதுனின்றி லந்தச் சுத்தமாயையின் பிரசங்கஞ் சித்தியாரில் முதற்சூத்திரத்திலே வருகையாலே யதற்கு யெதுக்காட்டுனதில்லை யெனவறிக. அப்படிச் சுத்தமாயையைச் சித்தியாரில் முதற் சூத்திரத்திலே சொல்லியிருக்க இந்நூலிரண்டாஞ் சூத்திரத்திலே கூட்டுகைக்கு வழுவியதென்னி லந்தச் சுத்தமாயையானது சிவன் கொள்ளப்பட்ட திருமேனிக் குடம்பாய்நிற்கையாலு மலங்களொடுங்கூடி வருகையாலும் சித்தியார் செய்தருளினவர் அந்நூலின் முதற்சூத்திரம் பதியிலக்கண மாகையா லந்தப்பதியாகிய சிவனுக்குச் சுத்தமாயை திருமேனியென்னுங் கருத்தைப்பற்றி 'வித்தைதியாடுசர்சாதாக் கியஞ்சுத்தி சிவங்களோந்தஞ், சுத்ததத்துவஞ்சிவன்றன் சுதந்தரவடிவமாகும்.' எ-ம். சுத்தமாயையை முதற் சூத்திரத்திலே கூட்டியருளிச் செய்தாரெனவறிக. இந்தச் சுவட்பிரகாசஞ் செய்தருளின

வர் சுத்துமாயையை மலமாயை கன்மங்களை வருத்தருளிச் செய்து சொல்லுகிற வொழுங்கிலே கூட்டி யருளிச்செய்கை யிலும் அன்றியு மலத்தொகைக் கருளிச்செய்த விருத்தி மாகிய 'மோகமிக வுயிர்கடொறும்' என்னும் விருத்தத்தின் முடிவிலே 'தெகமுறு கரணமொடு புவனபோகச் செயலரூ ருமாமாயைத் திரட்சியொன்றென், ருகமல மைந்தென்பர்'. எ-ம். வருணகையாலும் இரண்டாஞ் சூத்திரத்தின் கருவைப் பற்றிச் சிவஞானமாக்களை மாயாகன்மங்களொடுங் கூட்டிக் காரியப்படுத்தி மலபாகம் வருத்து முறைமையைச் சொல்லுகையாலு மிந்தச் சுத்தமாயை மலத்தோடுங் கூடிவருகையாலிதனை யிரண்டாஞ் சூத்திரத்திலே கூட்டப்பட்டதெனவறிக. அப்படிச் சுத்தமாயையை மலத்தோடுங் கூட்டுகைக்கு அநுபோகமெதென்னில் முத்தியைப்பெறு மான்மாக்களுக் குத் தத்துவ மூப்பத்தாறு நீங்கியே முத்தியென்னும் விதியைப்பற்றித் தத்துவ மூப்பத்தாறினுள் சுத்த தத்துவங்களும் கூடிவருகையாலவையு நீங்கியே முத்தியைப் பெறவேண்டுமென்பதைப்பற்றி யப்படி வைக்கப்பட்டதெனவறிக. அப்படியாதலால் இந்நூல் சித்தியாரைப் பின்சென்ற நூலாயிருக்கச் சுத்தமாயையைச் சிவனுக்குத் திருமேனியென்று அந்நூல் முதற் சூத்திரத்திலே சொல்லியிருக்க அதனை யிந்நூலின் மலத்தோடுங் கூட்டி வேற்றுமைகூறுதற்கு விதியேதென்னில் சித்தியார் வழி நூலாகையாலு மிந்நூல் சார்புநூலாகையாலும் "இருவர்நூற்கு மொருசிறைதொடங்கித் திரிபுவேறுடையது புடைநூலாகும்" என்பதைப்பற்றி யப்படி வேற்றுமை கூறினதெனவறிக. ஆகவிங் ஙனங் கூறிவந்தவகைகளால் "என்னைநீதாய்" என்னும் விருத்தத்தொடங்கி "அரிவையரின்புறுமுத்தி" என்னும் விருத்தமுடிவாகிய செய்யுள் மூப்பத்திரண்டு மிரண்டாஞ்சூத்திரமாக நிற்குமென்பதை யநுபவத்தாற்கண்டுகொள்க.

இங்ஙன மிரண்டாஞ் சூத்திராகாக வகுத்த செய்யுள் மூப்பத்திரண்டினுள்ளு மூதல் விருத்தமாகிய "எண்ணரிதாய் நித்தமாய்" எனனும் விருத்தஞ் சிவஞானபோதத்தி லிரண்டாஞ் சூத்திரமாகிய "அவைதேதானே" என்றமுதற்செய்யுளின் கருத்தைப்பற்றி நிற்குமேயாலுல் அந்நூலில் இந்தச்சூத்திரத்தில் வருஞ்செய்யுட்களின் கருத்து அந்தச் சூத்திரத்துக்கு அதிகாரமாகிய முதற்செய்யுளிலே நின்முற்போல் இந்நூலினு மிங்ஙன மிரண்டாஞ் சூத்திரமாக வகுத்த செய்யுட்களில்வருங்கருத்து "எண்ணரிதாய்" என்னும் விருத்தமாகிய முதற்செய்யுளிலே வருமுறைமையெங்ஙனேயென்னில் அஃதாவது "எண்ணரிதாய் நித்தமாய்" என்றதற்குமேலாக "இருண்மலத்துளழுந்தி" என்றது ஆன்மாக்களுக்கு ஆணவமல மறைப்புக்குச் சொன்ன "ஏகமாய்" என்னும் விருத்தம் வகுத்தசெய்யுள் மூப்பத்திரண்டினுள்ளு மூதல்விருத்தமாகிய "எண்ணரிதாய் நித்தமாய்"; என்னும் விருத்தம் சிவஞானபோதத்தி லிரண்டாஞ் சூத்திரமாகிபதின் கருவைப்பற்றி நிற்கையாலும் "இருவினையின் றன்மைகளுக் கேடானவாக்கை யண்ணலருளானன்னல்" எ-து. சிவனருளாலே யான்மாக்கள் மாயாகன்மங்களோடுங் கூடுவார்க ளென்பதற்குச்சொன்ன "உன்னலரும் பரசிவன்றனருளாலே" என்னும் விருத்தந்தொடங்கி "மோகமிக" என்னும் விருத்தமுடிவாகிய செய்யுட்களின் கருவைப்பற்றிநிற்கையாலும் "அவையவராயதறு லெனினிகழ்போகங்களருந்துமாற்றுற் புன்னெறியபாவம் புரிந்து போக்குவரவுடைத்தாய்." எ-து. ஆன்மாக்கள் கேவலசகலப்பட்டும் யோனிவிட்டியோனிபற்றி நாநமரணப்பட்டும் வருவார்க ளென்பதற்குச் சொன்ன "ஓங்கிவரும்பலவுயிர்கள்" என்னும் விருத்தந்தொடங்கி "இவையபலபிறவிகள்" என்னும் விருத்தமுடிவாகிய செய்யுட்களின் கருவைப்பற்றி நிற்கையாலும் "புனருமிருண்மலபாகம் பொருந்தியக்காலருளா, லுண்ணிலவு மொளியதறு லிருளகற்றிப்பா

மூற்றிரு கற்பசுவர்க்கம்." எ-து. ஆன்மாக்கள் மலபாகம் வந்து திருவருளுண்டாய்ப் முத்திக்கேதுவாவார்க ளென்பதற்குச் சொன்ன "காடியசத்திநிபாதம்" "அரிவையரின்புறமுத்தி" என்னும் விருத்தங்களின் கருவைப்பற்றி நிற்கையாலும் "எண்ணரிதாய்" என்னும் விருத்தம் இங்ஙன மிரண்டாஞ் சூத்திரமாக வருத்த செய்யுட்களுக்கு அதிகாரமாக நின்றதெனவறிக.

இவ்வனங் கூறப்பட்ட எண்ணரிதாயென்ற செய்யுள் முதற் சூத்திரமாகிய பதியிலக்கணத்துக்கு மேலாகப் பசுவிலக்கணமா கநிற்கையாலந்தப்பசுவினிலக்கண மேலருள்செய்வா னெடுத் துக்கொண்டருளியது.

எண்ணரிதாய் நித்தமா யிருண்மலத்தி னெழுந்தி யிருவினையின்ற ன்மைகளுக் கிடனாயக்கை, யென்னா ருளாணண்ணி யவையவரா யதனு லகினிகழ் போக ங்க ளருந்துமாற்றுற், புண்ணிய பாவம்புரிந்து போ க்குவர வுடைத்தாய்ப் புணருமிருண் மலபாகம் பெ ருந்தியக்காலருளா, லுண்ணிலவு மெளிய துனு விருள கற்றிப்பா தமுற்றிநற் பசுவர்க்க மெனவுரைப்ப ரு ணர்ந்தே. (எ)

எண்ணிலாவுயிர்க ளிறந்துபிறந்தெழுகா
ணண்ணனிடமரணமி யருளாலென்றது.

(இ-ள்) எண் ணரிதாய் நித்தமாய் இருண் மலத் தினெழுந்தி ஆன்மாக்க ளிலக்கத்திலு ளடங்காத் நிகரிதாய் ஒருகாலத்தினு மழியாததாய் அஞ்ஞானமாகிய ஆணவமலத்திலே ம றைப்புண்டிடந்து

இருவினையின் ஸன்னமசருக் கிடானையா க்கையு ன்னை யெருளான வன்னனி

அவரவர்களுக்குண்டான புண்ணியபாவங் களுக்கிடானதோ ருடல்களைத் தம்பிரானுண் காருண்ணியத்தினாலேயிடாருந்தி

ஆனையவராய் அதனு லலகி னிகழ்போகங்க ளருந்தமாற்றுற் புண்ணியபாவம் புரிந்து

அவனவளதுவாகிய வந்தவுடம்பென்னத் தானென்னத் தோன்றுமற் பிறிவற்றுநின்று அந்த வுடம்புகளோடுங் கூடினையாலே யெ ன்னையிறந்தபோகங்களைப் புசித்து அந்தப் புசி ப்பாலுண்டாகிய ஹிதாஹிதங்களினாலே மீள வும் புண்ணிய பாவங்களை யார்ஜித்துக்கொ ண்டு அதனாலே

போக்குவரவு டைத்தாய் புனருரும்

இறந்து பிறந்துவருவதாய் இங்ஙனம் பொருந்திவராநிற்கும். இப்படி வரச்செய்தே

இருண்மலபா கம் பொருந்தியி க்கா லெருளாலு ன்னைவிலவு மொ னி

அநாதியே யான்மாவை மறைக்கப்பட்ட ஆணவமலமானது கூடியம்வந்த வவசரத்தச். சிவனுடையவருளாலேயந்தவான்மாவினிடத். திலே ஞானம்பிரகாசியா நிற்கும். அன்றியும், புனருமிருண்மலபாகமென்று பதங்கூட்டி யான்மாக்களோடுங்கூடி நிற்கிற வாணவமல மென்று பொருளுரைப்பினுமாம்

அதனு லிருள கற்றிப் பாதமுற் றிடு நற்பசுவர்க் கம்

அங்ஙனம் பிரகாசிக்கப்பட்ட ஞானத்தி னாலே யந்தவாணவமல மறைப்பைநீங்கிச் சி வனுடைய திருவடியிலே பொருந்திடும் பக்கு வப்பட்ட சுத்தானமாக்கள்

என வுரைப்ப என் றிங்ஙனஞ்சொல்லுவார்க ளறிவாலு ருணர்ந்தே. யர்ந்தபெரியோர்கள். எ-று.

நு-ம். எண்ணரிதாம். எ-து. ஆன்மாக்களை யிலக்கத்தி லளவுபடுத்துதற்கரிதென்ற தேதென்னில் ஒவ்வொரு யோனிவர் க்கங்கடோறுமுண்டான வான்மாக்களை யளவுபடுத்தப்படாதது கொண்டே என்பதுநான்கு நூறுயிர யோனிபேதத்திலுண்டா னை வான்மாக்களையு மளவுபடுத்தப் படாதபடியாலும்; அன்றியு மவதரந்தோறுக் திருவடியிலே கூடினவான்மாக்கள் மீளவும் ஜ கநங்களில் வாராதிருக்கவும் பிரபஞ்சகாரியப்பட்டு வருகிற வா ன்மவர்க்கந் தொலையாததுகொண்டு மப்படிச் சொன்னதெனவ றிக. இதற்கு. பி - ம். கோயிற்புராணத்தில். "எத்தகையபோக ங்க ளெவற்றினுக்குங் காரணமாய், வைத்தபடி யிடம்போதாவ கைநெருங்கு டன்னுயிர்கள்." எ-ம். "கற்பங்கடோறு நஞ்சை யுண்கழலணைந்தார் கணிப்பில்லார்." எ-ம். வருமதுகண்டுகொ ள்க.

இனி நித்தமாய். எ-து. ஒருகாலத்தினு மழியாததென்றதே தென்னில் பதிபசுபாச மென்னப்பட்ட மூதல்மூன்று நித்தியமெ ன்று நூல்கள்சொல்லுகையாலு முத்தியிலு மான்மாக்களுக் கழி வில்லாதபடியாலு மப்படிச்சொன்னதெனவறிக. இங்ஙனம் பதி பசுபாச மூன்று மநாதியென்பதற்கு, பி-ம். திருமந்திரத்தில் "ப திபசுபாச மெனப்பகர் மூன்றும், பதியினைப்போற் பசுபாசமநா தி" எ-து. கண்டுகொள்க. அன்றியும் முத்தியிலுமான்மாக்க ளழியாதென்றதற்கு. பி-ம். உண்மைவிளக்கத்தில். "மூத்திதனின் மூன்று மூதலுமொழியக்கேள், சுத்தவனுபோகத்தைத் துய்த்த லனு-மெத்தனவே, யின்பங்கொடுத்தலிறை யித்தைவிலாவித்த ன்மல, மன்புடனே கண்டுகொளப்பா." எ-து. கண்டுகொள்க. அன்றியும் சித்தியாரினும் "கருட்பைத்தேனைப்பாலைக் கனிடமு

ணதக் கண்டைக்கட்டியை யொத்திருப்பனந்த முத்தியினிற்கலந் தே" என்றமையால் ஆன்மாவில்லாதபொழுது அநுபவிப்பானில்லாதாகையா லநுபவமுண்டான துகொண்டே யான்மாவுமுண்டென்பதை யநுபவத்தாற் கண்டுகொள்க.

• இனி யிருண்மலத்திலழுந்தி. எ-கு. ஆன்மா வாணவமலத்தான் மறைப்புண்டுகிடக்குமென்ற தேதென்னில் கேவலப்பட்டு மாயைதாரகமாக வொடுங்கிக் கிடக்குமவதரத்து கலையாதித்தத்துவங்களாயுள்ள காரியமாயையுநீங்கி யாணவமலமறைப்பாகக் கிடக்கையாலே யப்படிச்சொன்ன தெனவறிக. இதற்கு. பி-ம். சித்தியாரில் "அறிவிலன் மூர்த்தனித்த னராகாதிகுணங்களோடுந், தெறிவிலன்கலாதியோடுஞ் சேர்விலன் செயல்களில்லான், குறியிலன்சுத்தாவல்லன் போகத்துக் கொள்கையில்லான், பிறிவிலன் மலந்தீரும் வியாபிகேவலத்திலான்மா." எ-ம். 'மும்மலத்தில்லுக்கு மூலையொடுதவிடுவிப்போன், மும்மலத்தன்மை வடிவினைமறைத்துநின்று.' எ-ம். கண்டுகொள்க.

இனி யணவயவராய். எ-கு. அவனவளதுவாயென்ற தேதென்னில் உயர்திணை யஃறிணையாகிய யோனிபேதங்களினுள் அவனென்றது ஆண்பாலெனவறிக அவளென்றது பெண்பாலெனவறிக அதுவென்றது ஆணுமன்பெண்ணுமல்லாத அலியெனவறிக. உயர்திணை யஃறிணை யென்றதேதென்னில் உயர்திணையாவது தெய்வயோனி மானுடயோனியெனவறிக. அஃறிணையென்றது மற்றுள்ள யோனிகளெனவறிக.

இனி யிருண்மலபாகம் பொருந்தியக்கா லருளாலுண்ணிலவுமொளி. எ-கு. மலபாகம்வந்த ஆன்மாக்களிடத்திலே சிவனருளாகிய ஞானம் பிரகாசிக்குமென்ற தேதென்னில் பக்குவப்பட்ட சுத்தான்மாக்களுக் கிருளாகிய வஞ்ஞானநீங்கி யொளியாகிய ஞானம்பிரகாசிக்கையாலே யப்படிச் சொனனதெனவறிக. இதற்கு

பி-ம். கோவைத்திருவாசகத்தில். "உருகுதலுச்சென்ற வுள்ளத் தமம்பலத்தும் மொளியே, பெருகுதலுச்சென்று நின்றேறுன்." எ-து. கண்டுகொள்க.

இனி யதனுலிருளகற்றிப் பாதமுற்றிநற்பசுவர்க்கம் எ-கு. அந்தஞானத்திலுலே சிவனுடைய ஸ்ரீபாதத்தையடையும் பக்குவப்பட்ட சுத்தான்மவர்க்கமென்ற தேதென்னில் அங்ஙனம் பக்குவப்பட்ட ஆன்மாக்களிடத்தில் பிரகாசிக்கப்பட்ட சிவனருளாகிய ஞானமேபற்றுக அந்தச்சிவத்தோடுங் கூடுகையாலப்படிச் சொன்னதெனவறிக. இதற்கு. பி-ம். தத்துவவிளக்கத்தில். "பவமேவியநெறி பந்திக்குமீசன் பசுக்கட்டமையவமேவியநெறிப் போகங்களால்முற்ற வந்திலேடை, தவமேவியநெறி சத்திகண்ணுற்சென்று சார்ந்துபின்னைச், சிவமேயுவ ரென்றுகாண்கொச்சைக்காவலன் சித்திரிப்பே." எ-து. கண்டுகொள்க.

இதனுற்சொல்லியது ஆன்மவர்க்க மெண்ணிறந்திருக்குமென்றும் நித்தமாயிருக்குமென்றும் ஆணவமலத்தான் மறைப்புண்டு கேவலப்பட்டுக் கிடக்குமென்றும் புண்ணியபாவங்களுக்கீடான சரீரங்களையெடுத்து மலபாகம்வந்தவாறே சிவனருளாகிய ஞானத்திலுலே சிவனைப்பெறுமென்றும் வருமுறைமையையறிவித்தது. (எ)

வேறு—இதுமுதலிரண்டையும் பிரகிய செய்யுண்முப்பத்திரண்டினுலும் மிரண்டாஞ் சூத்திரமாகிய பசுபாசங்களின் லக்கணமுணர்த்துவான் றொடங்கிஞர். அவற்றுளிது பசுவிலக்கண முணர்த்திற்று.

நற்பசுவர்க்கம்-நன்முன வாத்மவர்க்கமானது,—எண்ணரிதாய்-எண்ணவரியதாய்,— நித்தமாய்-அநிபாததாய்,— இருண்மலத்திலழுந்தி-ஆணவமலத்தாலே மறைப்புண்டு,—இருவினையின்

றன்மைகளுக் கிடானபாக்கை-அந்தமல பக்குவமாவதற்குப் பு
ண்ணியபாவங்களுக் கிடானவுடம்பை,— அண்ணலருளானண்
ணி-கந்தாவின் காருண்ணியத்திலேலே பொருந்தி,—அவையவ
ராய்-அம்மூன்றினை யுடர்த்தினைகளாய்ப்,—அதனல்-அவ்வுடம்பிலேலே,-
அலகினிகழ் போகங்க ளருந்தமாற்றூற் புண்ணியபாவம் புரிந்து-
எண்ணிறந்த போகங்களைப் புசிக்கின்ற வழிபாலே மீண்டும் பு
ண்ணிய பாவங்களை யார்ஜித்து,—போக்குவரவுடைத்தாய் புண
ருமிருண் மலபாகம் பொருந்திபக்கால்-அநாதியிலே தாம்பிர கா
ளிதம்போலப் பொருந்திய மலத்துக்குப் பாகம்வந்தவிடத்து,—
அருளாலுண்ணிலவு பொலியுதலு விருளகற்றி - தீட்சையிலேலே
தனக்குள்ளே விளங்குகின்ற சிவஞானத்தாலே யந்தமலத்தைப்
போக்கி,—பாதமூற்றிடம் - அவ்வண்ணநிருவழி-னபட்பொருந்து
ம்,—எனவுணர்ந் துரைப்பர் - என் றறிந்து சொல்லுவர் பெரி
யோர். எ - று.

அவையாய்ப் அவராய்னவினையிரண்டு மீண்டுத் தினமாத்
திரம் விளக்கிநின்றனை. வர்க்கம்-சாதியொருமை. பெரியோரென்
பதுவாய்நிலையான்வந்தது. எண்ணனைக் கடைகுறைந்து நின்ற
து. எண்ணலரிதாமெனினுமாம். எண்ணரிதா யென்றதனுன் மா
யாவாதி சிவாத்துவிதி யொன்றென்னுமதமும் நித்தமாயென்ற
தனுலே சுகுணரிகமென்னும் புந்தர்மதமும் இருண்மலத்தி லழுக்
தியென்றதனுலே லாத்மாச் சுத்தனென்னுமைக்யவாதிமதமும் மறுக்
கப்பட்டன.

பசுவிலக்கண முற்றிற்று.

இங்ஙனம் பசுவிலக்கண மருளிச்செய்து பதிபசுபாசந் தெ
ரித்தலென்னும் விதியைப்பற்றி மேற் பாசவிலக்கணங்கூறுமதே
முறைமையாகலான் முற்கூறிய வான்மாக்களோடு மநாதியே கூ
டியிருக்கப்பட்ட மலமாயாகன்மங்களி னியல்பைக்கூறுமிடத்து

ஆணவ மாயை காமியமென்னு மொழுங்கைப்பற்றி முந்த வான் மாக்கஞ மறைக்கப்பட்ட ஆணவமலத்தினியல்பும் அந்தமலத்தின் மறைப்பைநீக்குகிற திரோதாயியினியல்பு மருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

ஏகமாய்த் தங்காலெ வெல்லைகளின்மீரு மெண்ணரிய சத்தியதாயிருளொளிரவிருண்ட, மோகமாய்ச் செம்பினுறு களிம்பேய்ந்துநித்த மூலமலமாயறிவு மூடுதினையுமறைக்கும், பாகமாம் வகைதின்மாறு திரோதான சத்தி பண்ணுதலான் மலமெனவும் பகர்வரதுபரிந்து, நாகமா நதிமதியம் பொதிசடையானடிகணணுகும்வகை கருணைமிக நயக்குந்தானே. (அ)

மோகமாமூல மலத்தின்மூறைமையும்
பாகமாந்திரோதப் பகுதியும்டாகர்ந்தது.

(இ - ள்) ஏகமாய் — ஆணவமலமானது எண்ணிறந்த வான்மாக்களோடுங் கூடிநின்று மறைத்துந் தானெனன்முயிருப்பதாய்

தங்காலெ வெல்லைகளின் மீரு மெண்ணரிய சத்தியதாய் — ஆன்மாக்களுடைய பக்குவா பக்குவங்களுக்குத் தக்கதாக அவரவரிடங்களிலே மறைத்துநின்று அந்தந்த ஆன்மபோதங்களின் மீட்சியிலே நீங்குவதாயிருக்கிற தன்கார்யமான வெண்ணிறந்த சத்திகளையுடையதாய்

இருளொளிரவிருண்ட மோகமாய் — சென்றதவிருளும் வெளியென்னும்படி நின்று ஆன்மாக்களுக்கு மிக்கமறைப்புகள் செய்யுமதாய்

செம்பினுறு களிம்பேய்ந்துநித்தமூலமலமாய் — செம்பினுடன்கூடியிருக்கப்பட்ட காளிகமானது அந்தச் செம்புள்ளவன்மேற யதனைமறைத் துள்ளும்புறம்புங்கலந்து வெட்டுவாய்

தோறு நின்றுற்போல வான்மபோதத்தோடு
ங் கலந்து மறைந்துநிற்கிற அழியாதவராதிம
லமாய்

அறிவு முழு தி னையு மறைக்கும்

இங்ஙனமான்மாவி னிச்சாஞானக் கினைபை கள் சற்றும் ஜீவியாதபடி மறைத்துநிற்கும். இங்ஙன மானவமலத்தி னிடல்லை யருளிச் செய் திந்தமலத்தைப் பாகம்வருத்துகிற தி தோதாயி சத்தியினியல்பு மேலருளிச்செய்கி ன்றது

பாகமாம்வ கை

அந்த ஆணவமலமானது கூடியமாம்படி

நின் று திரோ தானசத்தி பண் ணுதலான்

சிவனுடைய வருட்சத்தியானது அந்த வா ணவமலத்தோடுங் கூடித் திரோபவித்து நின் று காரியப்படுத்துகையால்

மல மெனவும் பகர்வர்

இந்தத் திரோதாயி சத்தியை யந்த மலத் தோடுங் கூட்டி மலமென்றும் பெரியோர்கள் சொல்லுவார்கள். இங்ஙன மலமெனவுமென் ஈ வும்மைகொண்டே டுத்தத் திரோதாயிசத் தியே யருளென்பது தணிவு. இங்ஙனந் தி ரோதமாய்நின்று காரியப்படுத்தி மலபாகம் வருத்தின வருளானது இங்ஙனம் மலபாகம் வந்த ஆன்மாக்களுக் குண்டாக்கும் படிதீ தன்னில்

அதுபரிந்து

அந்தவரு ளவர்களிடத்திலே கிருபைஜநித் தநின்று

காகமா கதிம தியம் பொதி சு

பாம்பினையு மறுத்தாயிருக்கிற கங்கா பர மேஸ்வரியையுஞ் சந்திரனையுஞ் சூழ்ந்திருக்கப்

டைபானடிக ண பட்ட திருச் சடாபாரத்தையுடைய தம்பிரா
ணுகும்வகை கரு ளர் திருவடி களிலே பொருந்து மூறைமை
ணை மிக நடக்குந் தை யுண்டாக்குந் தனது காருண்ணியத்தி னை
தானே. லை. எ - று.

நு - ம். ஏகமாய். எ-கு. ஆணவமல மொன்றுயிருக்கவு மெ
ண்ணிறந்த வான்மாக்களையுங் கூடிநின்று மறைக்கு மென்றதற்கு
வழியேதென்னில் இருளானது தானொன்றுயிருந்தும் பலகண்க
ளையு மறைத்தாற்போல வெனவறிக. அப்படி மலமொன்றுயிருந்
தும் பலவான்மாக்களையு மறைக்குமென்பதற்கு. பி-ம். திருவரு
ட்பயனில் "பலரைப்புணர்ந்து மிருட்பாவைக் குண்டென்றுங்-
கணவர்க்குந் தோன்றுதகற்பு" எ - ம். இந்நூலினும். "மோகமிக
வுயிர்க்கடொறு மூடலுய்ந்திற்கு மூலவாணவமொன்று". எ-ம். வரு
மேதுக்களைக் கண்டுகொள்க.

இனி தங்காலவெல்லைகளின் மீளும். எ-கு. ஆன்மபோதங்
களின் மீட்சியிலே நீங்குகிற சத்திகளென்றதெனின்னில் போத
த்தின் மீட்சியாவது பிரபஞ்சத்தைப் பொய்யென்று கண்டு நீங்
குகை யெனவறிக. இதற்கு. பி - ம். சித்தியாரில் "ஆசைதரு மூல
கமெலா மலகைத்தேராமெனை றறிந்தகல வந்திலேடையாகும்".
எ-று. கண்டுகொள்க.

அப்படி மலமொன்றுயிருக்கவு மந்தமலத்தின்சத்திக ளெ
ண்ணிறந் திருக்குமென்ற தெனின்னில் அந்த மலத்தோடுங்கூடி-
யிருக்கப்பட்ட வான்மாக்க ளெண்ணிறந் திருக்கையாலு மந்த
வான்மாக்கடோறும் வெகுவிதமான சத்திகள்பதிந்து நிற்கையா
லு மப்படிச் சொன்னதெனவறிக. அப்படி யான்மாக்கடோறு
மந்தமலத்தின் சத்தி வெகுவிதமாகப் பதிந்து நிற்குமென்றதை
த்கு. பி-ம். தத்துவவிளக்கத்தில். " கதிதருங்காமிமன் கட்டிம
ப்பாசங்கள் மூன்றவைதான், பொதிதருமானவம் போகருஞ்செ

யிகன்மமு மாயையுமா, முதியதுதானென்று மூன்பினிலாதது சேதனன்கண், ணதிகமறைப்பன வாயிரகோடி- விருத்திகளே- னது. கண்டுகொள்க.

இனி இருளொளிர விருண்டமோகமாய். எ - கு. செறிந்த வீருளும் வெளியென்னும்படி யிருளாயிருக்கு மந்த மலமென்று தேதென்னில் இருளானது பண்டபதார்த்தங்களை மறைத்துந் தான்தோன்றி நிற்கையாலும் இந்த மலமானது தன்னையுங் காட்டாமல் பொருளையுங் காட்டாமல் நிற்கையாலு மப்படிச் சொல்லப்பட்ட தெனவறிக. இதற்கு. பி-ம். திருவருட்பயனில். "ஒரு பொருளுங்காட்டா திருளுருவங்காட்டு- மிருபொருளுங்காட்டாதிது". எ-து. கண்டுகொள்க.

இனி செம்பினுறுகளிம்பேய்ந்து நித்தமூலமலமாம். எ - கு. செம்பிற் காளிதம்போல வொருகாலத்தினு மழிடாத வநாதிமல மென்றதேதென்னில் செம்பென்கிற பொருளுள்ளளவுங் காளிதநின்றூற்போல ஆன்மபோதமுள்ளமட்டு மந்தமலத்தின் மறைப்புப்போகாதென்ற தெனவறிக. இதற்கு. பி - ம். தத்துவவிளக்கத்தில். "விருத்திகளான் மறைக்கின்றவவ்வாணவம் வெங்குருமன், கருத்தியநூன்மூறை தேரிற்கலந்துட லுயிரனுவை, யருத்தியநஞ்சென்ன மோகஞ்செப்தாணை யநுபவத்திற், பெருத்திடச் செம்பினிற் காளிதம்போலப் பிணைந்துளதே." எ - து. கண்டுகொள்க.

நித்தமூலமலமென்றது மூத்தியினு மலமழியாதென்ற தெனவறிக. இதற்கு. பி - ம். உண்மைவிளக்கத்தில். "மூத்திதனின் மூன்று முதலும்." என்றசெய்யுளின் முடிவிலே "இத்தைவிசுவித்தன் மலம்." எ-து. கண்டுகொள்க.

இனி அறிவு முழுதினையுமறைக்கும். எ - கு. ஆன்மாவினிச் சாதாரணக்கிரியைகளைச் சூழ்ந்தும் ஜீவிக்க வொட்டாதபடி மலம

றைக்குமென்று பொருட்படுத்தினத்தி:கு. பி - ம். சித்தியாரில். ‘‘சீவனுபிச்சாஞானக் கிரியையாற்சிவனெயொப்ப, ரவனென் றீ ழிலநாதி மலமிவற்றினெமறைக்கும்.’’ எ-து. கண்டுகொள்க.

இனி பாகமாம்வகைகின்று திரோதானசத்தி பண்ணுதலா ல். எ-கு. சிவனுடைய வருட்சத்தியானது திரோதாயியாய் நின்று மலங்களைக் காரியப்படுத்துமென்று பொருட்படுத்தினத்துக்கு. பி-ம். சித்தியாரில். ‘‘ஏயுமும்மலங்கடத்தந் தொழில்னெ யியற்ற வேவுந், தூயவன்றனதோர்சத்தி திரோதான காரியதென்றும்.’’ எ-து. வருமது கண்டுகொள்க.

இனி அதுபரிந்து நாகமாந்திமதியம் பொதிசடைப்பா னெழிக ணணுகும்வகை கருணைமிக நடக்குந்தானே. எ - கு. அந்தவருளா னது திரோதமாய்நின்று ஆன்மாக்களுக்கு மலபாகம் வருத்தி மீ ளவும் பழையவருளாய்க் கிருபைசுரிக்குமென்ற தெங்ஙனெயெ ன்னில் மாதாவானவள் பிள்ளைகளிடத்திற் குற்றங்கண்டு கோபி த்து மீளவுங்குணங்கண்டவாறே பிரியப்பட்டாற்போல வெனவ றிக. இதற்கு. பி-ம். திருவாசகத்தில். ‘‘பேதித்தநம்மை வளர்த் தெடுத்த பெய்வளைதன்-பாதத்திறம்பாடி யாடேலொ.’’ எ - ம். இந்நூலினும். ‘‘மூற்சினபருவுதிரோதாயி கருணையாகி’’. எ - ம். வருமேதுக்களைக் கண்டுகொள்க.

இதனுற்சொல்லியது ஆணவமலமான தான்மாவை மறைக் குமுறைமையு மந்தமலத்தை யருட்சத்தியான து திரோதாயியாய் நின்று பாகம்வருத்தி மீளவும் பழையவருளாய்க் கிருபைசுரித்து அப்படி மலபாகம்வந்த வான்மாக்களைச் சிவனுடைய திருவடியி லே கூட்டுவிக்குமுறைமையு மறிவித்தது. (அ)

—o—

வேறு—இதுமுறையே யுணர்த்துவா னின்ற வைவகைப்பா சங்களு ளாத்மாக்களை யருகிலே கூடிநின்று ஞானமலனங்களை

விளக்கின்ற மூலமலத்தின் றன்மையினையு மதனைப் பாகம்வருத் தாகையா னுபசரித்துப் பாசமென்னப்பட்டத் திரோதானசத்தி யின் றன்மையினையு மூணர்த்திற்று.

ஏகமாய்-சடமுமா யநேகமாலுற் கடாதிகளைப்போல வன் சீதமாதலாற் பலவன்றி யொன்றுயிருப்பதாய்,—தங்கால வெல் லைகளின்மீறு மெண்ணரிய சத்தியதாய்-ஒன்றே சர்வாத்மாக்களை யு மறைக்கி லொருவனுக்குப் பாசமோசனமுண்டாக வெல்லார்க் கும் மோசமுண்டாதல்வேண்டும் அது கூடாதாதலிற் றத்தம் பரிபாகமான காலவறையறைகளிலே திரும்பத்தக்க வளவிறந்த சத்திகளையுடையதாய்,— இருளாளிரவிருண்ட போகமாய்-இரு ளெல்லாப்பொருளையு மறைக்கையிலுந் தன்னைக் காட்டிநிற்கும் இது சர்வாத்மாக்களை மறைத்து அவர்களையுந் தன்னையுங்காட்டா தாகையா லிருளும் வெளியென்னும்படிக் கிடாக விருண்ட மயக் கத்தையுடையதாய்,—செம்பிலுறு களிம்பேபந்து-செம்பிற்பொ ருந்திய களிம்புபோன்று,—நித்தமூலமலமா யறிவுமுழுதினையு ம றைக்கும்-அழிபாத பிரதானமலமா யாத்மாக்களுரை—ய விச்சா ஞானக்கிரியைக ளடங்கலையுமறையாநிற்கும்,—திரோதாயிசத்தி- த்திரோதானசத்தி யானது,—நின்று-ஆத்மாக்களோடு நின்று,— பாகமாம்வகை பண்ணுதலால்-அந்தவாணவமலம் பக்குவமாகும் படி யது மறைத்தற் கணுகூலஞ்செய்தலால்,—மலமெனவும் பக ர்வர்-அந்தச் சத்தியை மலமென் றுபசரித்துச்சொல்லுவர்கள்,— அதுதானே-அங்ஙன மறைத்தற்கணுகூலமான சத்திதானே,—ந கமா நதிமதியும் பொதிசடை—யா னஞகணணுகும்வகை - பாம்பு முதலிய வற்றைப் பொதிந்த சடையினையுடைய சிவனுடையதிரு வடிகளை யவ்வாத்மாக்கள் சேரும்படி பக்குவம் வந்தடுப்:ண் ணி,—மிகப்பரிந்து கருணைசெய்யும்-பெருகவும்பரிந திரக்கமாய் மகிழும். எ - று .

தானேயென்றதை யசைநிலையாக்கவும். பரிந்து பொதிசடை யென் றியைப்பினுமாம். காளிதஞ்செம்பினுடன் சகசமாயிருந் தமிரதக்குளிகையடாற் றீரும்துபோல மூலமலமும் மாத்மாக்களு டன் சகசமாயிருந்தஞ் சிவசத்தியாற் போக்கப்படுமாதலி னதற் கும் துவமையாயிற்று. இந்தமல மாத்மாவினுடைய ஞானசத்தி யை மறைத்தலாற் சகசமே, ஆகந்துகமலமன்று. சகசமாவது கூ டவுதித்தது. ஆகந்துகம் வந்துகூடியது. சகசமெனினக்கினிக்கு வெம்மையும் புனலுக்குத் தண்மையும்போலும் குணமாதலிற் குணமழியிற் குணியுமழியுமன்றெயெனின் அற்றன்று. செம்பிற்கு க்களிம்பும் அரிசிக்குத் தவிடும்போலுங் குற்றமே, அவற்றின்குண மன்று. களிம்புந்தவிடும்போகச் செம்பிற்கும் அரிசிக்குங்கேடில் லை. அதுபோலச் சகசமலமான வாணவமலத்தை நீக்கக் கேடின் றே. ஆதலாற் சகச மிருவிதமெனக்கொள்க. இந்த வாணவமலம் மாயாகாரியமெனின் மாயாகாரிய மாகந்துகமாதலி னுகாது. மா யையெனின்மாயை தன்காரியத்திலேல மலத்தைநீக்கி மாத்மாவி னுடைய ஞானத்தைவிளக்குதலி னதுவுமன்று. மாயை தன்காரி யத்தால் விளக்கிலுலுங் காரணரூபத்தான் மறைப்போதாவெனின் ன் காரியத்திலில்லாது காரணத்திலுளதில்லை; அக்கினி காரியமான தீபத்தாலும்விளக்கிக் காரணமான தன்லுலும் விளக்குதலின். ஆயின் மாயை காரணரூபத்தால் விளக்குமேமாவெனின் அப்படி விளக்காது. ஆத்மாக்களை விஷயங்களிலே மோகிப்பிக்கும் ஆ ணவமலம்போல முழுதும்மறையாது. ஆதலான் ஆணவமிருளு மாயை விளக்கும்போலு மெனக்கொள்க. ஆயினிதனை மலமென் பதென்னையெனின் அதற்குப்பரிகார மேலே மோகமிகவென்று ஞ் செய்யுளிற்காட்டுதும். இனி ஞானபாவமெனின் பாவமொரு திரவியமல்லாதபடியாலே மறைக்குந் தொழிலுஞ் செய்படமாட் டாது. கடத்தினுடையபாவஞ் ஜலகுடகணம் பண்ணமாட்டா

மைபோல். ஆதலான் ஞானபாவமுமன்று. ஞானத்திலுடைய பி
ருகபாவமெனிற் பிருகபாவ மறுதியான ஞானத்தான்முடிவு. ஆ
தலான் முடிவுள்ளதற்குத் தோற்றமுண்டு. உண்டாகவேதான்
றி யழியு மாதலா னதுவுமன்று. அன்னியதா ஞானமெனின் ஒன்
றாயொன்றாகக் கருதுதலேயன்னியதா ஞானமாதலி னம்மாற்
டமோ ரதுவின்றிவாராது. சுத்தி வெள்ளியாகத் தோன்றும்
போது கண்ணின் குற்றத்தாலன்றித் தோன்றுதவாறுபோல
வாதலி னிதுவுமன்று. இனி ஆத்மாவின் குணமெனிற் சித்தா
னவாத்மாவின்குண ஞானமன்றிச் சடமாயிராது, தியின்குண
ம் வெம்மையன்றிச் சீதமாகாவாறுபோல. ஆதலா லதுவுமன்று.
இந்த வாணவமலத்திற்குப் பரியாயநாமங்கள் பசுத்துவம் பசு
நீகாரம் மிருத்தியு மூர்ச்சை மலம் அஞ்ஞான ம் அவித்தை
ஆவிருதிருக்கு கிலணிபாவம் மூலம் கூடியம் பாசம் அசுத்தி
பந்தனம் விடாகாதம் களங்கம் மோகம் கேவலம் ஆவர
ணம் தமசு சடம் படலம் நீரோதம் ஆச்சாதனம் இவை
மூதற் பிறவுமுள. இந்த மூலமலஞ் சகலரெனப்பட்ட வாத்
மாக்களுக்குக் கருவிகூடிய சகலாவத்தையிலே யாகமுத
லிய கருவிகளிலே யாவேசித்து மோகம் மதம் ஆகம்
விஷாதம் சோஷம் வைசித்தியும் அரிஷம் என்று மெ
ழுவிதங்களாயுஞ் செய்விக்கும். இவற்றுண் மோகமாவது
அதிபாதகமுதலிய பஞ்சபாதகங்களா யாசரியரு லுணர்ந்
திருப்பினு மவ்வுணர்ச்சிகள் சிறிதும் விளங்காதபடி யிழப்பி
த் தவற்றை நன்றென்று செய்விப்பது. மதமாவது தான்டோ
கித்துப் புணர்ந்த வரைவின்மகளினை யருவராமற் போர்த்தி
வவடுவத்திரீயென்று மிவளினாரியபே றெமத்தில்லையென்று
மதிப்பிப்பது. விஷாதமாவது ஒருவன்வாஞ்சித்துப் புணர்
ந்த மகளினைப் பிரிந்தபோது மிகவும் வருந்தியழுது மே

தக்கஞ் செய்விப்பது. அநாகமாவது ஆசிரியரூலே தருமதூல்களைக் கேளாதா ரொருவனுக்குச் சிவத் திரவியமுதலியவற்றை வவ்வுதற்கு வாஞ்சையைச் செய்விப்பது. சோஷமாவது அந்த மலைதுக்கத்தாலே யுடம்புலரும்படி யாகாரத்திலே கருத்தின்றிச் செய்விப்பது. வை சித்திரியமாவது சமக்குப் பரமசிவ ரூபவிதமான விரூபினைப்பயனையுங் தெய்வீக முதலிய மூவகையாலே தருவனென்று மூணர்வை யிழப்பித்து இவனென்னைத் தாழ்வித்தான் வாழ்வித்தான் யாவனைத் தாழ்வித்தென் வாழ்வித்தே னென்பிப்பது. அரிஷமாவது மனைமுதலிய வபாங்களைக் கண்டுகளித் தெமக்கினியென்ன குறை யென்பிக்கை. அரதியிலே யணுக்களைப் பொருந்திநிற்கையா லாணவமெனப் பெயராயிற்று.

இவ்வனஞ் சொல்லப்பட்ட வருளாகிய திரோதாயிசத்தி யந்த வாணவமலத்தைப் பாகம்வருத்து முறைமை யெங்ஙனையென்று வினவ அந்தத் திரோதாயி சத்தியானது இச்சாஞானக் கிரியாசத்திகளைத் தோற்றுவித்து அவையிற்றைத் தொண்டே சுத்தமாயையிலு மசுத்தமாயையிலு முண்டான தனுகரண புவனபோகங்களைத் தோற்றுவிக்குமிடத்து அவையிற்றோறு மான்மாக்களைக் கூட்டிக் கன்மத்தைப் புசிப்பித்து மலபாகம் வருத்தி வண்டுகையா லதில் சுத்தமாயையினேற்ற மூந்தவருளிசசெய்வா னெனித்துக்கொண்டருளியது.

உள்ளவருஞ் பரசிவன்ற னருளாலேயாக முதிக்குமிருங் குடிலைதனில் விந்துவருநாதந், தன்னிலதி னெளிவளருஞ் சதாசிவராமவ்விற் றயங்கவரு மீசர்வித்தை தனையளிப்பரதனஞ், மன்னுவவிவ் வகையவ்வாய்மையினஞ்மூன்னே வந்திடுமென் றுரைசெய்த

விந்துவழாவகையே, முன்னுதவு சூக்குமாதி பொருளன்குமென்று மொழிந்திவரருங்கலகண் முதிர்ந்துளோயே. (கூ)

வைத்தமாமாயையின் வாக்குகான்குஞ்
சுத்ததத்துவமைந்தும் தோன்றுமென்றது.

மனத்தினை னினைத்தற்கரிய பரமசிவனுடைய பராசத்தியாலே சூடிலடாகிய மாமாயையிலே ஈாதத்துவந்தோன்றும்

(இ-ள்.) உன்னலரும் பரசிவன்ற னருளாலே ஈாத முதிக்குமிகுங் சூடிலதனில். அநுவயம். உன்னலரும் பரசிவன்ற னருளாலே மிகுங் சூடிலதனி லுதமுதிக்கும்

மூற்கூறிய ஈாதத்திலே விந்துதத்துவந் தோன்றும்

விந்துவருகா தந்தன்னில். அநுவயம். ஈாதந்தன்னில் விந்துவருகும்

அந்த விந்துவிலே பிரகாசமிக்க சாதாக்கியதத்துவந் தோன்றும்

அதிலொளிவளருஞ் சதாசிவநாம்

அந்தச் சாதாக்கியத்திலே விளக்கமாகவுரு மீசுரதத்துவந் தோன்றும்

அவரிற்றயங் கவருமீசர்

வித்தை தனை யளிப்பர்

அத்தி சுரருஞ் சுத்தவித்தையைத் தோற்றுவிப்பர்

அதனன்மன் னுவரிவ்வகை யையவர். அநுவயம். அதனு லிவ்வகையையவர் மன்னுவர்

மூற்கூறிய வகைகளாற் சூடலையுபாதனமாக விந்தத்தத்துவங்க ளொன்றினை யொழுங்கிலே தத்துவகத்தாக்கு ளவருந்தான்றி யிந்தத்தத்துவங்களு மொருந்திநிற்பர்கள்

வாய்மையி னன்முனே வந்திடுமென்று ரை செய்தவிந்

உண்மையாக முன்பெ நாதத்திசை தோன்றுமென்று சொல்லப்பட்ட விந்துவிசை

துவழா வகை யேமுன்னுதவு குக்குமாதி யொருநான்கும் அநுவயம். வழாவகையே குக்குமாதி யொருநான்கும்முன் னுதவும்

தப்பாத முறைமையினலே சூக்குமைமுதலாக்கிய வாக்குகளுமேலை யுமூற்கூறிய சிவசத்திதடோற்றுவிக்கும்

என்றுமொழிந்திடுவரருங்க லோகன் முதிர்ந்

என்றிங்ஙனஞ் சொல்லுவர்க ளரியநூல்களினையுணர்ந்தபெரியோர்கள். எ-று.

துளோரே.

நு - ம். உன்னலருமபாசிவன். எ-கு. மனத்தி னுளினை த்தற்கரிய பரமசிவனென்று பொருட்கூறிய தேதென்னில் அ

க்த நிஷ்களசொருபியாயிருக்கின்ற பரமசிவனை ஆன்மபோ
தத்தாற் சூட்டியறிய வொண்ணுதபடியாலே யப்படிச்சொ
ன்னதெனவறிக. இதற்கு. பி-ம். சுத்தியாரில். "தன்னறிவ
தறற்காணுந் தகைமையதல்லனீசன்." எ-ம். கோயிற்புராண
த்தில். "காரணங்கற்பனை கடந்தகருணை" எ-ம். இங்ஙனு
ணும். "நாடரியகருணை." எ-ம். வருமதுக்களைக் கண்டு
கொள்க.

பரசிவன்றனருளாலே. எ-கு பரமசிவனுடைய பராச
த்தியாலே குடிலையிலே நாதந்தோன்றுமென்று பராசத்தியி
ன்மெய்வைத்துப் பொருட்படுத்தினத்துக்கு வழியேதென்னி
ல் அந்தப் பாமசிவமானது பிரபஞ்சத்தைக் காரியப்படுத்து
மிடத்துத் தனதுசத்தியைவிரித்து அதுவேயுடம்பாகநின்று
காரியப்படுத்துகையா லப்படிச்சொன்னதெனவறிக. இதற்
கு. பி-ம். சுத்தியாரில். "மூனனருட்சத்திதன்பான் முகிட்
சூந்தான்முளையானன்ற" எ-ம். இந்நூலினும். "நீடபராச
த்தி நிகழிச்சாருனான நிறைகிரியைதரவதனை நிமலனமேவி,
நாடரிய கருணைதிரு வுருவமாகி" எ - ம். ஞானபூசைசத்தி
ருவிருத்தத்தில். "இன்புருவச் சிவன்படைத்தற் கிச்சைகா
லத் திசைவழிவித்தியாதெதி யாகியெழிற்கிரியை, முன்பெரு
க் குடிலையினையடைந்தநாத மூந்துவிந்தக் காமனுன்
மொழிமுறைமேயவளுந்தித், தன்பொருவில் மந்திரத்தாற் ச
தாசிவாதியுதவி." எ-ம். வருமது கண்டுகொள்க.

இங்ஙனஞ் சொல்லப்பட்ட சிவசத்திகளாலே குடிலையி
லே தோன்றுமென்ற நாதவிந்து மூதலாகிய தத்துவங்களுக்
கு வகுப்பெதென்னில் நாதமென்றது சர்வான்மாக்களுக்கு
மறிவை யெழுப்புவித்துநிற்கிற ஞானமெனவறிக. விந்துவெ
ன்றது சர்வாணமாக்களுக்கு முண்டாகிய தொழிலை யெழுப்

புவித்தாநிற்கிற கிரியையெனவறிக. சாதாச்கியமென்றது அங்
தஞானமூங் கிரியையுமாகிய காதவிக்துக்களிரண்டுங்கூடினை
வவதாரமெனவறிக. ஈசுரமென்றது கிரியையேயறி ஞானவ்கு
றைந்துநின்ற வவதாரமெனவறிக. சுத்தவித்தை யென்றது
ஞானமேறிக் கிரியைகுறைந்துநின்ற வவதாரமெனவறிக. இ
ணையிற்றுக்கு. பி-ம். தத்துவவிளக்கத்தில். "ஆய்ந்தவத்தத்
துவ மைந்தாவன சிவதத்துவத்தோ, டேய்ந்தவச்சத்தி ச
தாசிவமீசனும் வித்தையுமென், றோர்ந்தநிவித்திணுக் குள்
ளெங்கிழ்ப்பான துசத்தியத்திற், போந்தமூமங்குர மைமூக
த்தோனென்று போற்றுவரே." என்றதை இந்தத் தத்துவங்
களைந்துஞ் சிவசத்தியாலே குடிலையிலே தோறு மென்பத
ற்குக் கண்டுகொள்க. இந்தத் தத்துவங்க ளேறியுங் குறை
ந்து மொத்துநின்றதற்கு. பி-ம். தத்துவவிளக்கத்தில். "போ
ற்றும்பரத்திற் பொதிகின்றஞானங் கிரியைபெற்றுத், தோற்
றுஞ்சதாசிவ முன்னதைஞானங் கிரியைகுன்றிற், றோற்றிய
வித்தை யிவற்றின்றிரிவு மகேசன்மயல், மாற்றுஞ்சிரபுரத்
தெங்கோனெறியில் வகுத்தனவே." எ-ம். சித்தியாரிலும்
"ஞானமேயானபோது சிவன்முழுஞ்ஞானமொக்கி, னீனமி
ல்சதாசிவன்பே ரீசனுந்தொழிலதிறறி, லானமேற்கிரியையி
த்தை யுருத்திரனிலையபோக, மானபரகாரத்தோ டதிக
ரணத்தருமே". எ-து. கண்டுகொள்க.

இவையிற்றின் முற்கூறிய விந்துசுநாதமுஞ் சர்வான்
மாக்களுக்கு மறிவையுந் தொழிலையு முண்டாக்குமென்று
மூன்சொன்னதற்கு. பி-ம். சித்தியாரில். "மூவகையணுக்க
ருக்கு முறைமையால் விந்துஞான மேவினதில்லையாகில் விளங்
கியஞானமின்மும்". எ-து. கண்டுகொள்க.

அதனல் மன்னுவரிவ்வனைகளையவர். எ-று. முற்கூறியவை

கையாற் குடிலையுபாதானமாகத் தத்துவங்களைக்குத் தொன்றினவொழுங்கிலே தத்துவகத்தாக்களவருந்தோன்றி யிக்தத்தத்துவங்களோடும் பொருந்திநிற்பார்களென்று பொருட்படுத்தினத்துக்கு வழியேதென்னில் மூற்கூறியவகையாவது அந்தச்சிவமுஞ் சத்தியுங் குடிலையிலே பொருந்தினவதரத் தந்தத் குடிலையுபாதானமாகச் சிவத்தத்துவங்களோடொன்றுகையாலந்தச்சிவமுஞ்சத்தியு மந்தத்தத்துவங்களுடம்பாகவு மதிஷ்டித்தத் தத்துவகத்தாக்களவராகநிற்கையாலே யப்படிச் சொன்னதெனவறிக. அதற்கு வழியேதென்னில் நாததத்துவமுடம்பாகச் சிவமதிஷ்டித்து நிற்கையாலும் விந்துதத்துவமுடம்பாகச் சத்தியதிஷ்டித்து நிற்கையாலு மந்தநாதமும் விந்துவுங்கூடின சாதாக்கியமுடம்பாக அந்தச்சத்தியுஞ் சிவமுங்கூடி சதாசிவமாக அதிஷ்டித்து நிற்கையாலுங் கிரியைபேறி ஞானங்குறைந்து ஈசுரமுடம்பாக மகேசுரமதிஷ்டித்து நிற்கையாலு ஞானமேறிக் கிரியைகுறைந்து சுத்தவித்தையுடம்பாக உருத்திரனதிஷ்டித்து நிற்கையாலுந் தத்துவங்களுடம்பாகத் தத்துவகத்தாக்கள் பொருந்திநிற்பார்களெனவறிக. என்றிங்ஙனந் தத்துவமுடம்பாகத் தத்துவகத்தாக்கள் பொருந்திநிற்பார்களென்பதற்கு. பி-ம். சித்தியாரில். "வித்தையோடீசர் சாதாக்கியஞ்சத்தி சிவங்களாந்தஞ், சுத்ததத்துவஞ்சிவன்றன் சுதந்தரவடிவமாகு, நித்தமென்றுரைப்பர்காலை நீங்கியநிலைமையாலே, வைத்திலர்மூற்பிற்பாடு வருவித்தார் கருமத்தாலே." எ-து. கண்டுகொள்க. என்றிங்ஙனஞ் சிவன்றன் சுதந்தரவடிவமாகுமென்று சிவமொன்றையுஞ் சொல்லியிருக்கச் சத்தியையுங்கூட்டித் தத்துவகத்தாவாகச் சொன்னதெதென்னிலந்தச் சிவமுஞ்சத்தியும்பின்னமற்றிருக்கையால் சிவத்தைச்சொ

ல்லதேவ சத்திக்கு மாமென்பதுகருத்து. அப்படிச் சத்திசிவ மிரண்டும் பின்னமற்றிருக்கு மென்பதற்கு. பி-ம். சித்தியாரில். "சத்திதாலுதமாதி தாலுகுஞ் சிவமுமந்த, சத்திதாலு தியாருந் தருவடிவானவெல்லாஞ், சத்தியுஞ்சிவமுமாகுஞ் சத்திதான்சத்தனுக்குச், சத்தியாஞ்சத்தன்வெண்டிற் றெரிவி லாமாஞ்சத்திதானே". எ-து. கண்டுகொள்க. என்றிங்ஙன மூற்சுறிய வகைகளால் நாதவிந்து விரண்டுதத்துவமும் ஐக்தாக விரிகையால் சத்திசிவமிரண்டுந் தத்துவகத்தாக்க ளாவராகநிற்பதை யநுபவத்தாற் கண்டுகொள்க. என்றிப்படித் தத்துவமென்றுந் தத்துவகத்தாக்களென்று மிருவகையாயிருக்கத் தத்துவங்களின்பேர் தத்துவகத்தாக்களுக்குச் சொல்லியும் தத்துவகத்தாக்களின்பேர் தத்துவங்களுக்குச் சொல்லியும் வருகைக்கு வழியெதென்னில் தத்துவங்களுடம்புந் தத்துவகத்தாக்க ளுயிருமாய்நிற்கையாலே உடம்புக்கிட்டபேர் உயிருக்குநின்றாற்போலத் தத்துவங்களினபேர் தத்துவகத்தாக்களுக்கு நிற்கையாலும் விளக்குச் சுடரெரியுந்தகளி விளக்கென்று பேர்பெற்றாற்போலத் தத்துவகத்தாக்களின்பேர் தத்துவங்களுக்கு நிற்கையாலு மப்படிச்சொன்னதெனவறிக.

இனி விந்துவழாவகையே மூன்னுதவுசூக்குமாதி யொருநான்கும். எ-கு. விந்துவிலேநின்றுந் தோன்றப்பட்ட வாக்குகணுலையுஞ் சிவசத்திக டோற்றுவிக்குமென்று பொருட்படுத்தினத்துக்கு வழியெதென்னில் அந்தவிந்துவானது ஜடமானபடியால் அது தானுகத் தோற்றுவிக்கமாட்டாதாகையா லப்படிச் சொன்னதெனவறிக. இதற்கு. பி-ம். சித்தியாரில். "விந்துவின்மாயையாகி" என்ற விருத்தத்தில். "விந்துதன்பால் வைகரியாதி." எ-ம். "சிவன்றன்சந்நிதி க

ன்னினின்றோ.” எ-ம். வருகையா லப்படிச்சொன்னதென வுரைக. சந்நிதியென்றது அந்தச்சிலையுடைய சந்நிதியென வுரைக.

அன்றியும் முன்னுதவு சூக்குமாதி யொருநான்குமென்ற வும்மைகொண்டே வெறியுஞ் சிலசிதான்றுமென்பது கருத்தெனவுரைக. அஃதாவது முன்சொன்னவிந்துவிற் றோற்றமாகிய வாக்குகளுமன்றியே ஐம்பத்தோரக்கரமும் என்பத்தொருபதமுஞ் சப்தகோடி மகாமந்திரங்களும் வேதாகம புராணசாத்திரங்களும் விஞ்ஞானகலர் பிரளயாகலருக்குத் தனுகரண புவனபோகங்களுந் தோன்றுமென்பது கருத்தாகையா லப்படிச்சொன்னதெனவுரைக. இவையிற்றுக்கு பி-ம். சோயிற்புராணாந்தி ம். “சதநிகளிற்கருத்திருத்தித் தாவிலருமாமாயை, யுட்ந்ததனிநாதாதி யைவகையுமுதிப்பித்து, வைத்தெழுத்து மொழிறைறோன் மந்திரமேமுதலான, சுத்தவழிவிரித்தசுத்த தத்துவங்கடோகுமுதலில்”. எ-ம். சித்தியாரில். “வித்தைகளவித்தையீசர் சதாசிவனென்றிவர்க்கு, வைத்தறும் பதங்கள்வண்ணம் புவனங்கண்மந்திரங்க, டத்துவருசரீரம்போகங் கரணங்கடாமெலாமு, மூய்த்திடும் வயிந்தவந்தா னுபாதானமாகிநின்றோ”. எ து கண்டுகொள்க. வயிந்தவமென்றது குழலியாகிய சுத்தமாயையை யெனவுரைக. சுத்தமாயை படங்குழலாலற்திபோலக் காரணமுங்காரியமுமாகநிற்கையால் சுத்தமாயைச்சொல்லிவ அதனகாரியமாகியவிந்துவுக்குமாமென்பது கருத்தெனவுரைக.

இனி அருங்கலக்கண் முதிர்ந்தவளாதோ. எ-து. அரியநூல்களோயுணர்ந்த பெரியோர்களைறு பொருட்படுத்தினதென்னில் அரியநூல்களோ யுணர்ந்தவர்க ளிங்ஙனங்கூறியபொருளுக்கு மாறுபாடுசொல்லுவர்க ளென்பதுவுலப்படுத்

சொன்னதெனவறிக. இதற்கு. பி-ம். சித்தியாரிஸ். "சுத்தவ டிவியல்பாக வுடையசோதி." என்னுட் விருத்தத்தில் "பித்த ர்குணமதுபோல வொருகாலுண்டாய்ப் பின்னொருகாலறிவி ன்றிப் பேதையோராய்க், கத்திருமான்மாக்களுரைக் கட்டி ற்பட்டோர் கனகவரை குறித்துப்போய்க் கட்டற்கேவிழ்வா ர்". எ-து. கண்டுகொள்க.

இதனாற்சொல்லியது மேலான சிவசத்திகளாலே சுத்த மாயையிலேநின்று நாதவிந்துமுதலான தத்துவங்டோன்று மென்றும் அந்தத் தத்துவங்களுடம்பாக மூற்கூறிய சிவசத் திகளிரண்டுந் தத்துவகத்தாக்களாக வதிஷ்டித்து நிற்பர்க ளென்றும் அதிலே விந்துசத்தியிடமாகச் சூக்குமை பைசந் திமத்திமை வைகரியென்னும் வாக்குகண்முதலானவைக ளெ ல்லாந் தோன்றுமென்று முறைமையு மறிவித்தது. (கூ)

—0—

வேறு—இனிபாசங்களு ளிருவிதமாயையு மாயேயமூஞ் செய்யுளெழிரு வுணர்த்துவான் றொடங்கிரு ர் அவற்றுளி சு சுத்தமாயையு மூலமலந் திரோதாயியாலே பாகம்வருதல் கா ரணமாக வதனினின்றுந் தோற்றிய சுத்ததத்துவமைந்தும் வாக்குகள்நான்கு முணர்த்திற்று.

உன்னலரும் பரசிவன்ற னருளாலே-நினைத்தற்கரிய பர சிவனுடைய பராசத்தியாகிய வருளாலே,—மிகுங்குடிலை தனிருதமுதிக்கும்- மகாமாயையிலே நின்று நாதத்தத்துவந் தோன்றும்,—விந்துவரு நாதந்தனில்-அந்த நாதத்திலே விந்துச்சத்திதோன்றும்,—அதிலொளிவளருஞ் சதாசிவர்-அ ந்தவிந்துவிலே யொளிமிகுந்த சதாசிவதேவர் தோன்றுவர்,— ஆமவரிற் றயங்கவருமீசர்-தோன்றிய வந்தச்சதாசிவரிடத் திலே விளங்கித்தோன்றிய வீசுரதேவர்,—விந்தைதனையளிப் பர்-உருத்திரதேவரைக் கருத்தாவாகவுடைய சுத்தவித்தை

யை யுண்டாக்குவர்,—அதுலிவ்வகையவர் மன்னுவர்-அப்படித்தோன்றிய மூறைமையாலே நாதம் விந்து சதாசிவ ரீசுர ருருத்திரரென்னு மைவருஞ் சிவஞ் சத்தி சாதாக்கிய மீசுரஞ் சுத்தவித்தை யென்னு மைந்து தத்துவங்களினு நிலைபெறுவர்கள்,—வாய்மையினுன் முன்னே வந்திடுமென்றுறைசெய்தவிந்து-உண்மை யான் முன்னேதோன்றுமென்று சொன்ன விந்துவானது, — வழாவகையே-கெடாத மூறைமையிலே,—முன்னுதவுஞ் சூக்குமாதி யொருநான்கும்-ஆதியிலே சூக்குமைமுதலிய வாக்கு நான்கையுந்தோற்றுவிக்கும்,—என்றருங்கலைகண் முதிர்ந்தோளார் மொழிந்திடுவர்-என்றறிய சிவாகமங்களிற்கற்று முதிர்ந்தோர் சொல்வர். எ-று.

தோன்றுவரென்பது சொல்லெச்சம். இனிச் சதாசிவராமிவரிற் றயங்கவருமீசரென் றொருபதமாக்கி அதிலுளிவளருஞ் சதாசிவராகிய விவரிடத்தென் றுரைப்பினுமாம். இப்பொருட்டுச் சுட்டுச் சுறப்பின்வந்தது. சதாசிவதேவராயவர் சிவமூதலீசுரானந்தம் வியாத்தராதலி னென்றறிக. நாதம்விந்து சதாசிவரீசுர ரென்பன வதிட்டான வதிட்டேடயமாக வாகு பெயராய்த் தத்துவங்களாயு முணர்த்திநின்றன. ஈண்டுநாதமென்றது சிவதத்துவம். விந்துவென்றது சத்திதத்துவம். பரநாதமும் பரவிந்துவுஞ் சிவதத்துவத்திலுஞ் சத்திதத்துவத்திலுமடங்கும். இந்தக்குடிலை பரமசிவனுக்கு லயபோகாதிகார மூன்றுக்குமிடமாய்ச் சுத்தமாய்ச் சேடமாயவனுக்குப் பரிக்கிரகசத்தியாய் நித்தியமாய் மேலானகாரணமாயையா லொன்றுய்ச சுத்தாசுத்தமான தத்துவத்துவி கமிரண்டிலும் வியாத்தமாயிருக்கும். இதிற் சிவசத்தியதிட்டிக்கையாலே சிவமூதலிய தத்துவங்களைந்துங் கலைகளைந்துந் தோன்றின: எப்படியெனின் ஞானசத்தி யதிட்டானத்தா

லே சிவதத்துவமுங் கிரியாசத்தி யதிட்டானத்தாலே சத்தி
தத்துவமு மிவையிரண்டுந் சமமாக வதிட்டித்தபோது ச
தாசிவதத்துவமுஞ் ஞானங்குறைந்து கிரியையதிகமாக வதிட்
டித்தபோது ஈசுரதத்துவமுங் கிரியைகுறைந்து ஞானமதிக
மாக வதிட்டித்தபோது சுத்தவித்தியாதத்துவமுந் தோன்
றும். இனி ஞானசத்தி யதிட்டானத்தாலே குடிலையினின்றும்
பரநாதமுங் கிரியாசத்தி யதிட்டானத்தாலே யபரவிந்து
ந்தோன்றும். சிவஞ்சத்தி நாதமென்றுமாகிய ஞான குஞ்சி
னுக்கு நிட்களமான திருமேனியென்றுமையத்தானமென்றுஞ்
சொல்லப்படும். சதாசிவதத்துவஞ் சகளநிட்களமான தி
மேனியென்றும் போகத்தானமென்றுஞ் சொல்லப்படும். இ
ந்தச் சதாசிவதத்துவத்திலே யகாரசொரூபமாய்ச் சகள
மாயிருக்கிற வபரநாதமுமபரவிந்துவு மறுசதாசிவர்களுமே
டங்கும். ஈசுரமுதலிடதான்குஞ் சகளமான திருமேனியுமா
யதிகாரத்தானமுமாயிருக்கும். முன்சொன்னவிந்துவிலே நி
ன்று முற்றுமம்மை யொரோவழி யெச்சமுமாகுமென்றது ரு
லம்பத்தோரகூரமுஞ் சப்தகோடி மகாமந்திரங்களுமிரு
பத்தெட்டு திவ்யாகமங்களுஞ் சாலுவேதமுஞ் தோன்றுமென
வுமறிக. ஈசுரதத்துவத்திலே யட்டவித்தியேசுரருஞ் சத்தி
த்தையிலே சத்தகோடி மகாமந்திரங்களுஞ் சத்தருபமான
வெண்பத்தொருபத மந்திரங்களுங் மாகமங்களுங் வேதங்க
ளுமடங்கும். இனி யவனிட்டமாமும் நிட்களசகளமுஞ் ச
ளமாக மூவிதமான திருமேனி கொண்டபொழுது பரா ச
த்தியும் மூவகைப்படும். எப்படியெனின் அவன் சிவமு நாத
மாக நிட்களமானபோது சத்தியும் விந்துவுமாக நிட்களனா
யிருக்கும். அவன் சதாசிவமாக நிட்களசகளமாயிருந்த
போது மகேஸ்வரமனியாக நிட்கள சகளனாயிருக்கும். அவ

ன் ஈசனுருத்திரன் மாலயனுகச் சகளனுனபோது மகேசை
யுமை திருவாணியாகச் சகலோயாயிருக்கும். இனி கலைகளைக்
திஸ் நிவிர்த்தியாவது தன்னிடத்திலே பொருந்தினவாத்மா
க்களையுடைய சஞ்சற்பத்தை விலக்கையா லிவர்த்தியென்
றபெயராயிற்று. பிரதிட்டையாவது தன்னைப்பொருந்தின
வாத்மாக்களுக்குச் சங்கற்பவிதியை நிலைபெறுக்கையா
ற்பிரதிட்டையாயிற்று. வித்தையாவது அந்தச்சங்கற்ப வி
தி யி நிலைபெற்ற லாத்மாக்கட் கனைத்தறிவையும் விளக்
குதலாம் வித்தியாகலையாயிற்று. சாந்திகலையாவது அந்த
ஞானத்தாலே யாத்மாக்கள்பரிதாகத் தூலவஞ்மின்றி யிருந்த
படியாலே விகற்பஞானஞ் சாந்தமாயிருக்கையாற் சாந்திக
லையென்றுரையிற்று. அதீதகலையாவது அந்த விகற்பஞான
சாந்தமானதென்கிற நினைவுங்கழன்று பரமாகாசரூபமாய்
நிற்கையாலதீதகலையாயிற்று. இந்தக்கலைகளுந்தத்தவமும்
புவனமும்மற்றரூபமும்வாக்குநாமஞ்சுமட்சரங்களும்பதங்
களுமந்திரங்களும்வேதங்களுஞ்சுத்தரூபமுமாயிருக்கும்.
ஆகையாலே மலமாயையசுத்தாசுத்தரூபமாகவிரண்டுவகு
வாயிருக்கும். படங்குழலாலறிகபோலென்றறிக. இதன்விரி
வை யாகமங்களிற்காண்க.

இங்ஙனஞ் சுத்தமாயாகாரணகாரியத்திலியல் பருளிச்
செய்தது மேல் அசுத்தமாயாகாரணத்திலியல்பை யருளிச்
செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

உருவாதி சதுவிதமா யெல்லாஞ்சொல்லுவ
ஞ்ஞமையதாய்நிற்குமா யெல்லாஞ்சூயபஞ்சமே, மருவா
திக்கஞ்மமா ரவுக்களியாக்குமாலாரமாயசித்தா
யசலமாகி, விரிவாய தகங்கொடவிஞ் வியாபியாயெஞ்

லாம் விரிந்தவகை புரிந்தணடவின் மேவியனைவையொ
டுங்க, வருகாலை முயிர்களெல்லா மருவிடாமாய்மலமா
ய் மன்னியிடு மரனருளாள் மாயைதானே. (கற0)

உன்னியசகலர்க் குடம்புமுதலாய்
மன்னியவசுத்த மாயையவகுத்தது.

(இ-ள்.) உருவாதி சதுவிதமாய் தேகமுதலானவை நானு பிரகாரமாவ தேதென்னிற் றனுவென்றுங் கரணமென்றும் புவனமென்றும் போகமென்றும் வரும். அவையாவன: தனுவென்றது டஞ்சபூதங்களுமாயிற்றின் காரியங்களிருபத்தைந்துங்கூடின பூததேகத்தை யெனவறிக. கரணமென்றது உட்கரணங்கள் புறக்கரணங்களெனவறிக. புவனமென்றது கன்மம் புசிக்கைக்குண்டான விருப்பிடத்தையெனவறிக. போகமென்றது இவனுக்குப்புசிப்பாயுள்ள சுத்தாதி விடயங்களெனவறிக

ஒன்றொன்று வாவுமுறைமையினை யுணர்த்தாய். ஒன்றையொன்றொவ்வா முவுறைமையாவது தனுப்போலல்லகரணம் கரணம்போலல்ல புவனம் புவனம்போலல்ல போகம் எனவறிக.

நித்தமாய் ஒருகாலத்தினு மழியாததாய். ஒருகாலத்தினு மழியாததாவது தன்காரியமாயுள்ளனவு சங்காரகாலத்தழியினு மப்பொழுதுமழியாமல் நிலைபேறுய் நிற்பதாயென்றவெனவறிக

ஒன்றாய் அப்படிதனுகரண புவனபோகங்களாய்ப் நின்றுங் காரியப்பட்டும் மூலகாரணமொன் றாயிருப்பதாய்

என்றுமருவாகி எக்காலமுமருபமாயிருப்பதாய். எக் காலமாவது அந்தத் தனுகரணபுவனபோ கங்களாகப் பிரபஞ்சகாரியப் படுங்காலத் துமவையொழிந்தகாலத்துந் தான் கட்பு லனுக்குத் தெரியாதாகையாலே யெனவு ரைக

கன்மமாரணுக்களியார்க்கு மாவாரமாய் கன்மமானது பொருந்தநின்று புரித்து மூடிந்துபோம்படிக் கேதுவாயுள்ளவான் மாக்களுக்கெல்லாந் தாரகமாய். அஃதாவ தாவது ஆன்மாக்கள் கனமந்தொலைந்தித மு த்திபெறவேண்டுகையாலந்தக்கன்மமான தும் மூடிந்துபோம்படி புரிக்குமிடத்து மா யாசரீரமேடுத்து அதனோடுங் கூடிநின்று புரித்துத் தொலையவேண்டுகையா லிந்த மாயையந்தக் கன்மங்களுக்கேற்ற சரீர ங்களைக்கொடுத்து நிற்கையா லப்படிச் சொன்னதெனவுரைக

அசித்தாய் சித்தல்லவாய். சித்தல்லவாவது இந்த மாயையப்படி யான்மாக்களுக்குத் தாரக மாயிருந்துந் தனக்கென்னவோ ரறிவுமில் லையாய்ச் சுத்தஜடமுமாயிருக்கையா லெ னவுரைக

அசலமாகி சலமில்லாததாய். சலமில்லாததாவ தாவது எண்ணிறந்த வான்மாக்களுக்கு மெடு க்கு மெடுக்கும் ஜகநங்களோறு மதறகத

ற்கேற்ற வெகுவிதமான சரீரங்களைக்கொ
டுத்துங் தான் சுவிப்படாதுநிற்கையா லென
லுறிக

விரிவாயதன் செயலின் வியாபியாய்

பரப்பாயுள்ள தன்செயலாலே சுத்தமா
யைக் கப்பாலளவும வியாபகத்தையுடை
யதாய். சுத்தமாயைக் கப்பாலென்றது சீ
தனைப்போல வியாத்தமன்றியே தன்காரி
யமாயுள்ள மூப்பத்தான்றுக்குமூப்ள வி
யாத்தந் தனக்கு மூடையதென்றதனவ
றிக

எல்லாம் விரிந்தவகை புரிந்த டைவின்மேவி

தன்காரியமாயுள்ளவையெல்லாந் தான்
ன்னினவடைவிலே தானு மொக்கக்கூடுங்
னறு. தன்காரியமாவது கலையாதிமன்மு
ந்த மளவாகவுள்ள மூப்பத்தொருதத்து
வமு மவையிற்றி லடங்கிவரப்பட்ட நாற்
வகைத்தோற்றமு மெழுவகைப்பிரப்பு மெ
னவறிக

அவை யொடுங்கவருகாலை மூயிர்களெல்லாமருவிடமாய்

அந்தக் காரியங்களெல்லாந் தன்னிடத்
திலே யொடுங்குதற்கதாகவுரைக்கிற சங்
காரகாலமந்தக் காரியரூபத்தைப்பற்றி நி
ன்ற வான்மாக்களுக்குந் தனிடத்திலே
பொருந்துகைக் கிடமுமாய். அனுயுமிதி
னை எல்லாம் விரிந்தவகை புரிந்தடைவினே
மேவி யவை யொடுங்கவருகாலை மூயிர்க
ளெல்லா மருவிடமாய் எனவொருபதமாக்கி இதற்குத் தன
திடத்திலே தோன்றப்பட்டவெல்லா மொடுங்குங்காலந்
தோன்றினவடைவிலே யொன்றிலே யொனவுகப்பொருந்தி
யவையெல்லாந் தன்னிடத்திலே யொடுங்குதற்குதாக வரு

கிற சங்காரகால மந்தப் பிரபஞ்சரூபத்தைப்பற்றி நின்ற வான்மாக்ளுந் தன்னிடத்திலே பொருந்துகைக்கு மிடமு மாய் என்று பொருளுறைப்பினு மமையும். ஆன்மாக்கள் பொ ருந்துகைக் கிடமென்ற தெத்தாலென்னில் ஆனமாக்க ளாந் தியே மலசகசராகையாலே யந்த ஆணவமலமாகம் வந்தே சிவனுடைய திருவழியைக் கூட்டேயண்டுமாகையால் அவ்வள வும் ஒடுக்கமினைப்பொழித்தல் மற்றுத் தோற்றமலபாகம்வர. எ-ம். மாயைகாரி மலமொழிப்பன முன்றென். எ-ம். நூ ல்களிலே சொல்லிவருகையால் ஒடுங்குங்காலங் காரணமா யையிலே பொடுங்கியுந் தோன்றுங்காலங் காரியமாயையே டுந் தோன்றியும் வருகையா லப்படிச் சொன்னதெனவறிக.

மலமாய்ப் — என்னப்பட்ட மலங்களிலே தானுமொ ருமலமாய். என்னப்பட்டமலமாவது ஆ ணவம் மாயை காமியம். எ-ம். அன்றியும் மலமாயைகன்ம மாயேயம் திரோதாயி எ-ம். என்னப்பட்ட மலங்களிலே தானு மொருமலமா யென்றதெனவறிக.

மன்னியிடம் — இங்ஙன நிலைபெற்றுவறும். நிலைபெறு வது இந்தமாயையானது சிருஷ்டிகாலத்துக்குஞ் சங்காரகாலத்துக்குந் தனக்கோரு போக்குவரவின்றியே தனதுடைய விபாத்திநிலையாமல் அசைவற்றுநிற்கையா லப்படிச் சொன்னதெனவறிக.

அணருளான் மாயைதானே. — இங்ஙன நிலைபெற்றுவருகிறதுதா ரா லேயென்னில் தம்பிரானருள் காருண்ணியத்திருவே நிலைபெறுவரும் அச்சுத்தமாயை தான். எ - று. அணருளா லென்பதற்குத்

தம்பிரூரர் சத்தியாலே யென்று டொரு ரூரைப்பினுமா மெனவறிக.

விதப்பு. இங்ஙனஞ் சங்காரகாலமான்மாக்கள் காரணமாயையிலே யொடுங்குவார்களென்று சொல்லியிருக்கக்கேவலக்குறி சொல்லுமிடத்து "மலத்திரூடும் வியாபிகேவலத்திலான்டா." எ-ம். "மலமன்றியொன்றுமில்லை" எ-ம். "இயல்பால். எ-ம். கேவலத்திலானவமலமொழிய மற்ரொன்றுமில்லை." எ-ம். நூல்களிற் சொல்லுவாதேனென்னில் அம்தாவது ஆணவமலத்துக்குச் சுபாவஞ் செம்பைக் காளிதமறைத்தாற்போலவு மக்கினியைக் காட்டமறைத்தாற்போலவு மான்மபோதத்தைமறைத்து அறியாமையைப்பண்ணிநிற்பதாதலாற் கேவலத்திலறிகருவியாயுள்ள தத்துவங்களுங்கி யறியாமையேவடிவாய்க்கிடக்கையாலப்படிச்சொன்ன தெனவறிக. அப்படியாணவமலமறைப்புத்தாரகமாகாதாசங்காரகாலத்துக்கு ஆன்மாக்கள் மாயைதாரகமாக வொடுங்குவார்க ளென்பானேனென்னில் அப்படியாணவத்தாம் மறைப்புண்டுகிடந்தாலும் அந்தமறைப்புத் தாரகமாகா தென்றபடுவால் மாயைதாரகமாக வொடுங்கவேண்டுகையாலேயப்படிச்சொன்னதெனவறிக. அப்படியாணவமல மறைத்தாலுமாயை தாரகமாக வொடுங்குகைக்கு வழியெதென்னில் மூற்கூறியவுபமானத்தில் காளிதத்தாம் மறைப்புண்டசெம்பு மிருக்கும் பொழுது பூமிமுதலான தாரகங்களைப்பற்றி யிருந்தாற்போலவு மற்றக்காட்டுமப்படிக்கு பூமிமுதலான தாரகங்களைப்பற்றி யிருந்தாற்போலவு மான்மாநித்திரையிற் கேவலப்பட்டுக்கிடக்குமவதாரத்து ஜீவிக்குங் கருவிகளைப்பற்றி யாணவமலத்தான் மறைப்புண்டு உடல்தாரகமாக மூலாதாரத்திலே யொடுங்கிக்கிடக்கையாலுஞ் சங்காரகேவலத்துக்கு மப்ப

டிமாயையிலே யொடுங்குமென்று சொன்னதனைவறிக. அப்ப டிநித்திரையிற் கேவலத்துக்கு ஆன்மாவுட்ல்தாரகமாக வொடு ங்குமென்பதற்கு. பி - ம். சிவஞானபோதத்தில். "அவ்வுட்லினி ன்றுயிர்ப்ப வைம்பொறிகடாங்கிடப்பச், செவ்விதினவ்வுட்லிற் சென்றடங்கி" எ-ம். சித்தியாரில் "உடலினிலஞ்சவத்தை யுறுமு யிர்காவலாக." எ - ம். இருபாவிருபஃதில். "உடலகத்துமூலத் தொடுங்க." எ-ம். வருமேதுக்களைக் கண்டுகொள்க.

அன்றியும் கேவலத்தி லாணவமலமன்றியே மாயாகாரணமு ண்டெனபதற் கநுபவமேதென்னில் அந்தவாணவமல மறைப் பாக மூலாதாரத்திலே யொடுங்கிக்கிடக்கு மவதரத்து அவ்விட த்திலே காரியமாயையாயுள்ள கலையாதி தத்துவங்களோன்றி யக் தவாணவமல மறைப்பை நீக்குகையாலே முளையுள்ளவிடத்திலே கிழங்குண்டென்று கண்டாற்போலக் கலைபாதி தத்துவங்களோ ன்றுகைக்குக் காரணமாயுள்ள மாயையு மவ்விடத்திலே யுண்டெ ன்பது கண்டுகொள்க. அப்படி கேவலத்தில் மாயையிலே நின் றுங் கலையாதி தத்துவங்க ளோன்றுமென்பதற்கு. பி - ம். திரு மந்திரத்தில். "மாயையெழுப்புங் கலாதியைமற்றது, லையவரா கரதி யெப்துந்துரியத்துதித், தோயுஞ்சுழுனை கலவொடுந் தன்னி யே, யாயினனந்தச் சகலத்தளானே." எ - து. கண்டுகொள்க. என்னையெதுரியத்தி லராகாதி யென்பது கொண்டே யதிதத்திற் கலாதிகளென்பது கண்டுகொள்க. அன்றியும் சித்தியாரிலும், "மாயையிற் காலேமோடு நியதிபின் கலாதிதோன்றும்." எ - ம். "மாயையின் வயிற்றுண்மன்னி வருஞ்செயல்ஞானமிச்சை, யெயு மக்கலாதிமூன்று லகதேசத்தினைப்பது." எ - ம். வருவதுமிப் பொருள்படற்றி யெனவறிக.

அப்படி கேவலத்தில் மலமுமாயையுங்கூடி நிற்குமெயா ல் மலத்தை யிருளென்று மாயையை யொள்ளென்று தூல்கவிற்

சொல்லியிருக்க விருளாகிய கேவலத்திலே யொளியாகிய மாயை யுங் கூடிநிற்குமென்னலாமோவென்னில் அப்படி யொளியென்று சொல்லப்பட்டது அந்தக்காரண மாயையிலே நின்றுந் தோன்றி யாணவமல மறைப்பை நீக்கப்பட்ட கலாபாதி தத்துவங்களாகிய காரியமாயையை யெனவறிக. அப்படி யாணவமலமறைப்பை நீக்குகிற கலாபாதி தத்துவங்களை யொளியென்பதற்கு. பி - ம். சித்தியாரில் "போதகாரிய மறைத்து நின்றது புகல்மலங்கா, ணேதலாங் குணமுமாக வுயிரினுள் விரவலாலே, காதலாலவித் தைசிந்தத் தருங்கலாபாதிமாயை, யாதலா லிரண்டுக்கு சாதியிரு ளென வேறுமென்றே". எ - ம். இந்நூலிலும். "புக்குமலமிமாயி த்தற்குக் கலாதிமூதல் மாயைபொருந்தியிதம்." என்றசெய்யுளில் "இகலிவரு மிலையுனரி லிருள் வெளிபாங் தன்மை யெப்தும்" எ - ம். கண்டுகொள்க. அன்றியு மிச்செய்யுளின் கருத்தாகிய "மலநிலையொதுங்க மாயாகாரியங்-குலவிநிமிருளாளி குறிபித் தற்கென்றது." எ-ம். கலாபாதி தத்துவங்களை யொளியென்பதற் குச் சிவஞானபோதத்திலும். "கலாபாதிமன்னுரைத்தங் காணிய னையமாயை, நிலையாவாத்திபமேபோல" எ-ம். "மாயாதனுவினை க்காய்" எ-ம். திருவருட் பயனிலும். "விடவாமளவும் விளக்க னையமாயை வழிவாகு" எ-ம். வருமேதுக்களையுங்கண்டுகொள்க. ஆகவிங்ஙனங் கலாபாதி தத்துவங்களாகிய காரிய மாயையை யொளியென்றது கொண்டே யாண்மாக்கள் கேவலத்தில் மாயா காரணந் தாரகமாக வொடுங்குவார்களென்பதை யநுபவத்தாற் கண்டுகொள்க.

அப்படி நித்திரையிற் கேவலத்துக்கு ஆன்மாக்கள்மாயையி லே யொடுங்குவர்க ளென்பதுகொண்டே சுத்தாத கேவலத்துக் கும் மாயையிலே யொடுங்குவர்களென்று சொல்லலாமோவென் னில் மூன்னே நித்திரையிற் கேவலத்துக்கு மலமன்றி யொன்று

மில்லையெனு மியல்பா யென்று ஆணவ மறைப்புக்குச் சொன்னை தைச் சங்காரகேவலத்துக் குபமானமாகக் கேட்கையா லிதற்கு மப்படிச் சொல்லப்படுமெனவறிக. அல்லியு நித்திரையிற் கேவல ம்போலவிருக்குஞ் சங்காரகேவலமுமென்பதற்கு. பி-ம். நித்து வவிளச்சத்தில். "எல்லியினித்திரைப்போ லிஃபப்பாற்று மலுக் கஃளே." எ-ம். இந்நூலினும். "நீக்கமிலதிகமாசு நிறைந்தசேவ லமாகீர்மை". எ-ம். கண்டுகொள்க. ஆகையாலான்மாக்களுக்கு ஆணவமலம்போலமாயையும் அநாதிகாரணமாகையால் மலமறை க்கமாயைதாரகமாக வொடுகுவார்களென்பதை யநுபவத்தாற் கண்டுகொள்க.

அப்படியாயும் ஒருமலத்தையுடைய விஞ்ஞானகலர் அந்த வாணவ மலமொன்றேறி நின்றும்போலச் சகலருந்தேகவலத்துக் கு ஆணவமல மொன்றேறிநிற்கவும் நிற்பார்களோ வென்னில் அந்த வொருமலத்தையுடைய விஞ்ஞானகலரும் அந்தவாணவமலமா கம்வருமிடத்து ஜீவிக்குங்காலந் சுத்தமாயா காரியத்தோடுகூடி. ஜீவித்தும் ஒடுங்குங்காலம் அந்தச் சுத்தமாயா காரணத்திலே யொடுங்கியு நிற்கையால் அவர்களுக் காணவமல மொன்றென்று சொல்ல வேண்டுவதில்லையெனவறிக. அவர்களுஞ் சுத்தமாயை யோடுகூடி வருவார்களென்பதற்கு. பி-ம். சித்தியாரில் "வித் தைகளவித்தையீசர் சதாசிவ ரென்றிவர்கரு, வைத்தறும்படதங் கள்வண்ணம் புவனங்கண்மந்திரங்க, டத்துவஞ் சரீரம் போகங் கரணங்கடாமெலாமு, மூப்பத்திடம்வபிந்தவந்தா னுபாதானமாகி நின்றே". எ-ம். தத்துவப் பிரகாசத்திலும் விஞ்ஞானகலருக்கு ஆணவமலமென்றியே திரோதமுஞ் சுத்தமாயையு முண்டென்பத ற்கு. பி-ம். "இவ்வுயிர்கள் மூவகையாம் விஞ்ஞானகலர்க ளெ ழுநிற்பிரளயாகலர்கள் சகலர்களென்றிவரி, னவ்வகையே யாணவ மு மாணவமும் விஜ்ஞயு மாணவமும் விஜ்ஞயு மாயையுமுன்முறுறும்,

செவ்வையிலே திரோதமூட்டன் சுத்தமாயை சேர்மூவகைக்கு மூள." எ-ம். நூல்களிற் சொல்லிவருகையா லவர்களு மாணவ மலமொன்றேறுங கூடிநின்றுஇவ்ற் சுத்தமாயையாலே காரியப்ப ட்டுப் பாகம்வரவேண்டுகையால் சகலரும் மாயையிலே யொடுங் கியுந் தோன்றியும் வருவார்களென்பதே துணிபெனவறிக.

இனி யிந்தச்செய்யுளுக்குப் பதந்தோறும் பொருட் படுத்தி வந்த வவதரத்து அவையொடுங்கவருகால முயிர்களெல்லா மரு விடமாய். எ-கு. அந்தக்காரியரூபங்கள் காரணத்திலே யொடுங் குவதான சங்காரகாலம் அந்தக்காரிய வுருவத்தைப்பற்றி நின்ற வான்மாக்களு மந்தக் காரணத்திலே யொடுங்குவர்க ளென்று பொருட்படுத்தினத்துக்கு. பி-ம். தத்துவ விளக்கத்தில். "புல் லியபாசங்க ளுய்த்திடப்போகம்புமாணுகர்ந்து, செல்லியகாய த் துறுஞ்செல்லனீங்கிச் சிரபுரக்கோன், சொல்லிய மண்முத லா யினமாயையி லேதொகுத்தங், கெல்லியினித்திணைப்போ லிசைப் பாற்று மணுக்களேயே." எ-து. கண்டுகொள்க.

அன்றியுமந்தப் பதத்துக்கு ஆணவமலபாகம் வாராதவான் மாக்கள் ஒடுங்குங்காலங் காரணமாயையிலே யொடுங்கியுந் தோ ன்றுங்கால மந்தவாணவமலபாகம் வரக் காரிய மாயையோடுங் தோன்றியும் வருமென்று பொருட்படுத்தினத்துக்கு. பி-ம். சித் தியாரில். "உயிரவையொடுங்கிப்பின்னு முதிப்பதெ னரன்பாலெ ன்னிற், செயிருறுமலத்திரைகுஞ் சிதைந்ததே தென்னிற்சித்தந், தயர்வொழிகாரியங்க ளழியுங் காரணங்கிடக்கும், பயிறருகாரிய ம்பின் பண்டுபோற் பண்ணுமீசன்." எ-து. கண்டுகொள்க. எ ன்றிங்ஙன முதாரணமாகக்காட்டினவிந்தச்சித்தியாரின் செய்யு ளிலே ஆன்மாக்களாணவ மலபாகம் வருமளவுஞ் சங்காரகால மாயா காரணத்திலே யொடுங்கியுஞ் சிருஷ்டிகால மாயாகாரியந் தோடுதோன்றியும் வருவார்களென்பதற்குப் பொருளாவது:—

உயிரவை யொடுங்கிப்பின்னு முதிப்பதென் னரன்பாலென்னில். எ-து. உம்முடையகத்தாவி னுக்கினேபின் பகுதியாலே சங்கார காலம் பிரபஞ்சமுமழிந்து ஆன்மாக்களு மொடுங்குமேயாமாகில் மீளவுந்தோன்றுவா னேனென்று நீகேட்கில்,—செயிருறு மலத்திலுகும். எ-து. அப்படித்தோன்றுகிறது குற்றம் பொருந்தின வாணவமலபாகம் வாராத வான்மாக்கள் அந்த மலபாகம் வருகைப்பொருட்டாக மீளவுமாயையிலே தோன்று நிற்பர்கள்,—சினைந்த தேதென்னில் எ-து. அப்படியான்மாக்கள் மாயையிலே தோன்றுவார்களாகில் உம்முடைய கத்தாவாலே சங்காரகாலத்திலழிக்கப்பட்ட தேதென்று நீகேட்கில்,—சித்தத் தயர்வொழி காரியங்களழியும். எ-து. சித்தமாகிய வான்மாவை அயர்வாக மறைக்கப்பட்ட வாணவமலத்தைப் பாகம் வருத்துகைக்குத் தத்துவமாயுள்ள காரியமாயையழியும். அப்படியழிந்துபோன காரிய மாயை மீளவுஞ் சிருஷ்டியிற் றோன்றுகைக்கு வழியியதென்று நீகேட்கில்,—காரணங்கிடக்கும். எ-து. அப்படிக் காரியங்களோடொன்றியு மழிந்தும் வருகைக் குபாதானமாயுள்ள காரணமாயைசங்காரகாலத்திலு மழியாமற் கிடக்குமாகையாலே,—பயிறருகாரியம்பின் பண்டுபோற் பண்ணுமீசன், எ-து. ஆன்மாக்கள்போகம் புசிதற்குடம்பாகப் பொருந்தப்பட்ட காரியமாயையை முன்பு போல வந்தக் காரணமாயையிலே நின்றுஞ் சிருஷ்டிப்பன் சிவன்றான். எ-று. என்று பொருளுரைத்துக் கொள்க. அன்றியும் சிவாகமத்தில் "மாயாதத்வம் ஜகத்பீஜ மவ்யாப்ருதசிவாத்மகம், விப்ரவேகமமலம் ஸூக்ஷ்ம மநாஸ்தவ்யய மீச்வரம்". "தேதகம் சிவம்பீஜம் ஜகத்சித்ர சக்திமது,சக்காரியா திகாராந்த சம்ரோதிவியோ பிமீச்வரம்" எ-து. கண்டுகொள்க.

எல்லாம் விரிந்தவகை புரிந்தடைவின் மேவியவை யொடுங்க வருகாலமுயிர்களெல்லா மருவிடமாய். எ-கு. ஆன்மாக்கள்

சிவப்பிரகாச சுவ்வியாக்யாநம்.

சங்காரகாலங் காரணமாண்பயிலே யொடுங்குவர்க ளென்பது வ
ழக்கல்லவென்று எல்லாம் விரிந்தவகை புரிந்தடைவின் மேவிய
ணவையொடுங்க வென்றுபதமுறித்து அதனைச் சங்காரகாலமாக்கி
வருகால முயிர்களெல்லா மருவிடமாயென்ற பதத்தைச் சிருஷ்
டிகாலமாக்கிப் பொருளுரைப்பாருமுளர். அதுவழக்கல்லவென்
றுரிக. அதுவேனென்னி லிந்தச் செய்யுளுக்குப் பதந்தோறும் ய
கரவொற்றுமுதிவாகப் பதமுறித்து வருகையாலும் ஒடுங்கவெ
ன்று பதமுறியாதபடியாலும் அன்றியும் முன்னர்ப் பதங்களெல்
லாஞ் சிருஷ்டியைச் சொல்லிவந்து மேற் சங்காரத்தைச் சொல்
லி முடித்துவிடுகிறதொழிட மீளவுஞ் சிருஷ்டியைச்சொல்ல வழி
க்கல்லாத படியாலும் அன்றியு மிச்செய்யுள் காரண மாணைபையைச்
சொல்லுகையா லதனுடைய செய்தியைக் கூறுகிற தொழுபக் கா
ரியமாணைபின் பிரசங்க மிவ்விடத்துக் கூறப்படாதாணையாலும
ஒடுங்கவென்று பதமுறித்து வருகால டென்பதைச் சிருஷ்டிகா
லமென்று பொருட்படுத்துகை வழக்கல்ல வெனவுரிக. இதை
யால் அணவையொடுங்க வருகால முயிர்களெல்லா மருவிடமாய்ள
ன்றொருபதமாக்கிச் சங்காரகால மான்மாக்கள் மாணையிலே
யொடுங்குவர்க ளென்பதே சித்தாந்த வழக்கெனவுரிக. அன்றி
யும் இந்தப் பதத்துச் கிதுவே வழக்கென்பதற்கு மூற்கூறிய வுப
மானவ்களென்றியே இந்நூலைப் பின்சென்ற நூலாகிய திருவருளி
ளக்கத்திலு மிந்தச் செய்யுளுக் கெதிரடை விருத்தமாகிய "பெய்
யாதி நால்வகையா யொன்றுக்கொன் றெவ்வாவெதுவிதமா யே
கமாய் வீதலகன் றருவா, பெய்யாமல் விணையிலுழ லாருயிர்க
ளெலைக்கு மிருப்பாகி யசேதனமாய்ச் சலிப்பிலதாய்த் தனது,
பொய்யாய நிலபளவும் பூரணமாயாவும் பொருந்தவடை வேடு
ரிந்து பொருந்திவினை யொன்றுற்று, செய்யாதவிலுகாலுஞ் சே்னை
ங்கட் கெல்லாஞ் சேர்விடமா மாணையெனச் செப்புநூலே"னென்

டதனுள் "வினையொன்றுஞ் செய்யாத விறுகாலுஞ் சேதனங்கட்
கெல்லாஞ் சேர்விடமாமாயை" என்றபதத்தை அவையொடுங்க
வருகால முயிர்களெல்லா மருவிடமாய் என்றபதத்துக்குக் கண்
டுகொள்க. அதற்கு வழிபேதென்னில் வினையொன்றுஞ் செய்
யாத விறுகாலம். எ-து. சங்காரகால மாகையாலும், சேதனங்
கள் எ-து. ஆன்மாக்களாகையாலும், சேர்விடம். எ-து. ஒடுங்
குமிடமாகையாலும், மாயை. எ-து. அசுத்த மாயாகாரண மா
கையாலும் சங்காரகால மான்மாக்கள் மாயையிலே யொடுங்கு
வர்களென்னும் பொருட் பெற்று நிற்கையா லந்தப்பதத்துக் கு
வமிக்கப்பட்டதெனவறிக. இந்தத் திருநெறிவிளக்கம் பின்னூலா
யிருக்கவு மிதனே யெதுக்காட்டிய தெதென்னி லந்நூல் சிவப்பிர
காசத்தைப் பின்சென்ற நூலா யிருக்கையினாலு மன்றியும் விரு
த்தந்தோறும் விருத்தந்தோறுஞ் சத்தம்பேதித்து வருகையேய
ன்றி யத்தமொன்றுபட்டு வருகையாலு மதுகாட்ட வேண்டி உ
ருவாதி சதுவிதம். எ-கு. மெப்யாதிநால்வகையாயென்ற சத்
தம்போல அவையொடுங்க வருகால முயிர்களெல்லா மருவிட
மாய். எ-கு. வினையொன்றுஞ் செய்யாத விறுகாலுஞ் சேதனங்
கட்கெல்லாஞ் சேர்விடமாம் என்பது காட்டவேண்டி யேதுவா
கவிட்டதெனவறிக. ஆகையால் முற்கூறிய வுபமானங்களினாலு
மேதுக்களினாலு மான்மாகள் சங்காரகாலம் ஆணவமலத்தால்
மறைப்புண்டு மாயையிலே யொடுங்குவர்க ளென்பதே சித்தா
ந்த வழக்கென்பதை யநுபவத்தாற் கண்டுகொள்க. இதுவே
பொருளென்பதற்குக் கற்பகாலத்துப் பிரமாவுக்கு மாயையிலே
யொடுக்கமென்பதற்குச் சூசனசங்கிதை யென்னுங் கிரந்தத்திற்
கண்டுகொள்க.

இதனாற்சொல்லியது அசுத்தமாயையானது சிருஷ்டிகால
ங்களின்னிடத்திலே நின்றுந் தோன்றப்பட்ட காரியங்க ளோடே

கூடி நிற்குமென்று மந்தக் காரியங்களெல்லாந் தன்னிடத்திலே யொடுங்கத்தக்கதாக வருகிற சங்காரகால மந்தக் காரியரூபத் தைப்பற்றி நின்ற வான்மாக்களுந் தன் னிடத்திலே பொருந்து கைக்குத் தாரகமா யிருக்குமென்றும் வருமுறைமையை யறிவித் தது.

(கo)

வேறு—இஃ தசுத்தமாயையை யுணர்த்திற்று.

மாயை - அசுத்தமாயையானது,—உருவாதிசதுவிதமாய்-தனுகரண புவனபோகமென்னு நான்குவிதமாய், — ஒன்றொன் றெவ்வா வுண்மையதாய்-அவைதா மொன்றையொன்றெவ்வா தமுறைமையினை யுடையதாய்,—நித்தமாய்-அழியாததாய்,—ஒன் றாய்-ஒருமுதலேயாய்,—என்றுமருவாகி-எக்காலமுந்தான்று தாய்,—கன்மாந்த மணுக்களியார்க்கு டாவாரமாய்-கன்மந்தொ லையுமளவு டாத்மாக்க ளெல்லாவற்றிற்கும் விஷயங்களிலே யறி வை மயக்குவதாய்,— அசித்தாய்—சடமாய்,—அசலமாகி-சலன மற்றதாய்,—விரிவாயதன்செயலில் வியாபியாய் - தோன்றிப்ப ஞ்ச தன்னுடைய காரியபான நத்துவ மூப்பத்தொன்றினும் வியாத்தத்தை யுடைத்தாய்,—எல்லாம் விரிந்தவகைபுரிந்து-அச் சகலமுந்தோன்றின கூற்றிலே நின்று,—அடைவின்மேவி-அடை வினிலேபொருந்தி,—அவையொடுங்க வருகால முயிர்களெல்லாம ருவிடமாய் - அந்தத்தத்துவங்க ளொடுங்கவருகிற சங்காரகாலத் திலே யவ்வுயிர் நிலைகளெல்லா மங்குராதிவித்திடத் தடங்குமா றுபோலப் பொருந்துதற்கிடமாய்,—மலமாய்-ஆத்மாக்களுள்ள படி காணுமல் பொய்யை மெய்யென்றுகாண மயக்குமலமாய்,— அரனருளான் மன்னியிடும் - சிவ னணுக்கிரகத்தா னிலவெ றும்.எ-று.

கன்மாந்த மாவாரமா யென்பதற் கன்னியவுதாரணம் கரும

த்தகாராந்தத்தளவும் விதிமுறைறகொடுக்கும் வியப்பிற்றம்தென் பதென்றறிக. கன்மமாரணுக்களென்றுபாடமோதிக் கன்மத்தைப் பொருந்திவருகிறவென் றுரைப்பாருமூளர். உயிர்களென்ப தாகு பெயர். உயிர்களைத்தன்வசமாய்மயக்குதலின் மாயையெனப் பெய ராயிற்று. அதுதான் காரணரூபத்தான் மோகிப்பிக்குங் காரியரூப த்தாற் பயன்படும். நூலுருவகப்பயன்படாது காரியமான படத்தா ற்பயன்படுமத்தனை. இதன்பண்டைப்புச் சூக்குமந்தூலமென்றிரு விதமாம். கலைமுதலான காரண மூப்பத்தொன்றுஞ் சூக்குமசிரு ஷ்டி தனுபுவனபோகமூன்றுந் தூலசிருஷ்டியெனவறிக. பூதங்க டன்மாத்திரை யாங்காரம் புத்தி பிரகிருதி கலாதிக ளாகவிவையா றுமொன்றுக்கொன்று சூக்குமமாயிருக்கும். இன்னுமிதன்விரிவை யாகமங்களிற்காண்க.

இங்ஙனஞ் சொல்லப்பட்ட தேகாதிபிரபஞ்சந் தோன்றுமி டத்தும் பரப்பிரமத்திலே நின்றுந்தோன்றி யதிலேயொடுங்குமெ தொழிந்து அப்படி யசுத்தமாயாகாரணமென் றொருமுதல் நாட் டிக்கொள்ள வேண்டுவதில்லையென்கிற மாயாவாதியை நோக்கிச் சித்தாயுள்ள பிரமத்தினிடத்து ஜடமாயுள்ள பிரபஞ்சந் தோன் றுமென்று மறுத்தருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

என்னேயிதுவெனிலுலகுக்குடாதானமில்லையினை வனலுதனினைசித்துச்சித்தினிடத்துதியா, மன்னியுள தேன்முதல்வனென்கொலென்னின் மாயைதானைசித் திருவாய்மருவமாட்டா, தன்னைவணுமிதுவொழியவா க்கமாட்டா னசத்தணுமெனினதுவுமவன்போனித்த, முன்னவனவ்வசித்தைவிரித்தலையுமாக்கு முதன் மையதுகொடுத்ததென மொழிந்திடாரோ. (கக)

உலகுபிரமத் தந்தித்தொடுங்கிடுமெனுங்
கலதிதன்மொழியைக் காட்டிமறுத்தது.

(இ-ள்.) என் பிரபஞ்சந் தோன்றுகைக்கு இங்ஙனஞ்
சொல்லப்பட்ட மாயாகாரணமென் றொருமு
தலை நாட்டிக்கொள்ளவேண்டுவ தில்லையென்
று நீசொல்லில்

பிரபஞ்சந் தோன்றுகைக் கிந்தமாயையென்
றி வேறொரு காரணமுமில்லையாம்.

கத்தாவல்லவோ பிரபஞ்சந் தோன்றுகை
க்குக் காரணமென்று நீசொல்லில்

அசேதனமாயுள்ள பிரபஞ்சஞ் சேதனமா
யுள்ள கத்தாவினிடத் துதித் தோன்றுது. ஆகை
யால் மாயை வேண்டுமெனவறிக.

அப்படி மாயையென்பதொன்று நிலைபெற்
றுடையதாகில் தலைவருயுள்ள கத்தா வென்
னகாரணத்துக்கென்று நீகேட்கிறபடியாகில்

உலகுக் குபா
தானமில்லை
இறைவ னலை
தெனின்
அசித்துச் சித்
தினிடத்துதியா
மன்னியுளதே
ன் முதல்வனை
ன்கொ லென்னி
ன்

அந்த மாயையானது ஜடமாயிருந்தபடியா
லே தானே யுருக்களாகப் பொருந்தமாட்டா
து. ஆகையாலே கத்தாவேண்டுமெனவறிக.

மாயைதா னை
த்துருவாய் ம
ருவமாட்டாது
அன்னவணு மி
துவொழிய வாக்
கமாட்டா னைத்
தரு மெனின்

அந்தக்கத்தாவு மிந்தமாயையைக்கொண்டு
ல்லது பிரபஞ்ச நடத்தமாட்டான். ஆனபடி-
யாலே யவனுஞ் சந்நிஹீனரவனென்று நீ
சொல்லில்

அதுவு மவன்
போனித்தம்
மூன்னவ னவ்

அந்தமாயையு மவனிணப்போலே நித்தியமா
யிருப்பதொன்று. ஆனகடாலே
அநாதியா யிருக்கப்பட்ட கத்தாவுந் தன்

வஸித்ஸை விரித் தெனவையு மாக்கும்

ணைமாயையிலே நின்றுங் காரியமாயையா யிருக்கிற பிரபஞ்சத்தை விரிவிலே தோற்றுவித்துச் சர்வஸ்ஸையு முண்டாக்குவன். அதுதொண்டே

முதன்மை யதுகொடுத்த தென மொழிந்திடாரே.

அப்படி யந்த மாயையைக்கொண்டு கத்தா பிரபஞ்சத்தை யுண்டாக்கிற சாமார்த்தியமும் அந்த மாயைதா னுண்டாக்கினதென்று பெரியோர்கள் சொல்லார்கள். எ-று. என்னவேமுதன்மையது கொடுத்ததென மொழிந்திடாரே. எ-து. அதஸ லரூபமா யிருக்கப்பட்டமாயையிலேநின்று முரூபமாயிருக்கிற பிரபஞ்சத்தையுண்டாக்கிறகத்தா வந்தமாயையில்லாதபோது முதன் முண்டாக்கிக் கொள்ள வல்ல னென வறிக.

உதாரணம். கத்தாவினிடத்திலே பிரபஞ்சந்தான்றி யொருங்குமதொழிந்து மாயாகாரணமென வொன்றுண்டென்ன வேண்டுவதில்லையென்று மாயாவாதிசொன்னதற்கு. பி-ம். சித்தியாரில். "தாங்குமூலகுக்குபாதானஞ் சத்தாஞ் சிலம்பிநூறன்பால், வாங்கிவைத்துக்கூப்பதுபோல் வையமெல்லாந்தன்பக்க, லோங்கவுதிப்பித்தனதாக்கி நிறுத்தியொடுக்கத்திலதாக்கு, மாங்குவந்தவாறதுற்சந்தாஞ் சகத்தினையமெல்லாம்". எ-து. கண்டுகொள்க. அசித்தாயுள்ளபிரபஞ்சஞ் சித்தாயுள்ள கத்தாவினிடத்திலிருந்தான்முதென்று அவனை மதுத்ததற்கு. பி-ம். சித்தியாரில். "மாயநூலது சிலம்பிவாயினிடை வந்தவாறதனைமானவே, மாயலோகமானதம் பிரமமந்நினிலேயெனி லடங்கினை, நேயமாகு மொருசித்துமத்துட னிலாததென்றுபினியபிம்பினீ, பேபமேகடை

பிருத்தில்வந்தது பிறப்பதாவதிலேதெரிலே". எ-று. கண்டுகொ
ள்க.

இதனுற்சொல்லியது அப்படி மாயாகாரணமென்றொரு மூத
லில்லை கத்தாவினிடத்திலே பிரபஞ்சந் தோன்றுமென்ற மாயா
வாதியைமறுத்துச் சித்தாயுள்ள சிவனிடத்திலே ஜடமாயுள்ள பி
ரபஞ்சந் தோன்றுதாகையால் மாயையுண்டென்னு முறைமையை
யறிவித்தது. (கக)

வேறு—இது சிவாத்துவிதி மாயாவாதிகளை மறுத்து மா
யையுண்டென்பது துணர்த்திற்று.

என்னை பிதுவெனி னுலகுக்குபாதானம்-இந்தமாயைதானெ
தற்கென்று நீசொல்லில பிரபஞ்சத்திற் கொருதாரகமாம்,—இல்
லையிறைவனலதெனின்-அங்ஙனந் தாரகமாக மாயையென வொ
ன்றுவேண்டுமோ கருத்தாவினிடத்திலே பிரபஞ்சஞ் சிலந்தியிட
த்து நூலொன்றி யொடுங்கிறற்போலவுங் கடலிற்நிரைதோன்றி
யொடுங்கிறற் போலவும் வானிடத்து மின்னு மிடியுந் தோன்றி
யொடுங்கிறற்போலவுந் தோன்றி யொடுங்கு மாதலா லிறைவனை
ல்ல துபாதானமில்லையென்று நீசொல்லில்,—அசித்துச் சித்தினி
டத்துதியா-அசித்தான பிரபஞ்சஞ் சித்தாகிய சிவனிடத்துத்தோ
ன்றுகாண் பொன்விற்களிம்புதோன்றுமையின், — மன்னியுள
தென் முதல்வனென்கொலென்னின்-மாயை யிப்படி நிலைபெற்று
ள்ளதாயிற் கருத்தா வென்னை யென்று நீசொல்லின்,—மாயைதா
ன் சித்துருவாய் மருவடாட்டாது-அதுதான் சடமாகையாற்றனே
தனுவாதிகளாய்ப் பொருந்தமாட்டாது,—அன்னவனு மிதுவொழி
யவாக்கடாட்டான்-அந்தக் கருத்தாயு மிந்தமாயையைக்கொண்ட
ன்றி யொன்றை யுண்டாக்க மாட்டான்,—அசத்தலுமென்-ஆ
ணவிவன் சத்தியினலுவனென்று நீசொல்லின், — அதுவுமவன்

போனித்தம்-அந்த மாயையு மவணைப்போல வஞ்ஞியேயாதலிற் பு
திதாகவொன்றை யுண்டாக்கிக்கொள்ள வேண்டுவதில்லை, — மு
ன்னவனவ்வசித்தைவிரித் தெவையுமாக்கும் - கருத்தா வந்தமா
யையை விரியப்பண்ணி யெவற்றையு முண்டாக்குவன்,—முதன்
மையது கொடுத்ததென மொழிந்திடாரே-ஆதலாலே கர்த்தவ்வி
யத்தை :பந்த மாயை கொடுத்த தென்று பெரியோர்கள் சொல்
லார். எ-று.

இது வெண்ணெயென்று மிறைவனல திலையுபாதான மென்
று மாயைமன்னியுளதெலென்று மொழிமாற்றுக.

அப்படியே பிரபஞ்சத்தை யும்முடையகத்தாவே காரியப் ப
டுத்துவலுமாகிற் சர்வான்மாக்களையு மொருதன்மையாகச் செய்
வியாதிருப்பானேனென்ற பட்டாசாரியனேநோக்கி யேலருளிச்செ
ய்வா னெடுத்துக்கொண் டருளியது.

படைத்தலிதாருபடியிற்றிப் பறவைபசுராராய்
ப் பண்ணியதென் மூன்னவினைப் பான்மையென்ப,
ரடித்தவினையுளதாயினிறையேயனைன்னி லசேதனமற்
றவையாவிக்கமைத்ததாகு, மெடுத்தவினையுருவுறுவ
துயிர்தாற்றுமோ யிருவினைக்குத்தக்கவுட லெய்துமென்
னிற், சடத்திரளுங்கத்தாவா யறிவொன்றில்லாத் தன்
மையனுங்கூடவொருசங்கையின்றே. (கஉ)

பல்லுருவாகப் பண்ணப்பதற்கேது
தொல்லைவினையின் றொடர்ச்சியைச்சொன்னது.

(இ - ள்.) படைத்தலிதாரு படியிற்றிப் பறவை யாழ்நர் மிருக பசு பக்ஷி தாபராதிகளாயு உம்முடையகத்தா பண்ணுகிடத்தச் சர்வான்மாக்களையு மொருதன்மையாகப் படை

வைபசு நராராய்ப் பண்ணியதென்

ள்ள நால்வகைத்தோற்றமு மெழுவகைப் பிறப்புமாகச் சிருஷ்டிப்பானேனென்று கேட்கிறீயாமாகில்

முன்னை வினைப் பான்மையென்பர்

ஆன்மாக்கள் முன் ஜநநத்திற்செய்த வினையின்பகுதிக் கிடாக வென்று சொல்லுவர்கள் பெரியோர்கள்.

அடுத்த வினையு ளதாயினிறையே னென்னில்

ஆன்மாக்கள்செய்த புண்ணியபாவங்களுக் கிடாகச் சரீரங்க ளுண்டாமாகி லந்தக்கன்ம மேயமையாதோ கத்தா வொருவன்வேறுதோ வென்னில்

அசேதன மற்றுணை யாவிக் கமைத்ததாகும்

அந்தக் கன்மங்களுக் கறிவில்லாத பழியா லே நாளுக வுடம்புகளை யுண்டாக்க மாட்டா தாகையால் கத்தா வான்மாக்கள்செய்த வினைக் கிடான வுடம்புகளை யுண்டாக்கினதாம்.

எடுத்தவினை யுருவுறுவதுயிர்தோற் றுனை யிருவினைக்குத் தக்க வுடலெய்து மென்னில்

அந்தக்கன்மத்துக் கிடாக வெடுக்கப்பட்ட சரீரத்திலே நின்றநுபவிக்கிற தான்மாவேயா கில் தான்செய்த புண்ணிய பாவங்களுக்கிடான சரீரத்தைத் தானே யெடுத்துக் கொள்ளு மென்னில்

சடத்திரளுங் கத்தாவா யறிவொன்றில்லாத் தன்மையளுங் கூடவொரு சங்கையின்றே.

உடமாயுள்ள வுடலினது கூட்டங்களுங் கத்தாவல்லனுமாய்த் தானேயறிகைக்காரறிவில்லாதவான்மாவுந் தம்மிற்கூடியறிகைக் கார்காரனுமில்லை. எ-று. என்னவே சிவனே சர்வமுமறிந்துநின் றுன்மாக்கள்செய்த கன்மத்துக்கிடான சரீரங்களைக் கொடுப்ப னென்பது கருத்து.

வி-பு. படைத்தலொரு படியின்றிப் பறவைபசு ராராய்ப் பண்ணியதென் என்று பட்டாசாரியன்கேட்டது பிரபஞ்ச மொ ருவழிப்பட் டிராததுகொண்டே கத்தா படைக்கிற படைப்பால் பகூடாதியாவனென்பது அவனுக்குக்கருத்து. என்னவே பிரபஞ் ச மகாதியே யுடையதென்பது மது வொருவர் படைக்க வேண்டி வதில்லை யென்பது மவனுக்குப்பகூடம். இதற்கு. பி-ம். சித்தியா ரில். "போக்கொடுவரவுகால மொன்றினிற் புணர்வதின்றி, யாக்க வேறொருவரின்றி யநாதியா யணுக்களாகி, நீக்கிடா வினையிற்கூடி- நிலமுதலாகநீடி, யூக்கமாருலகமென்று மூள்ளதென்றுரைக்கால மே". எ-து. கண்டுகொள்க. அதனை முன்னவினைப்பாலன்மையெ ன்ப ரென்றுமறுத்ததற்கு அடுத்தவினையுளதாகி வினறையேனென்று மீளவுமவன் சொன்னதற்கு. பி-ம். சித்தியாரில். "செயல்களே பலத்தைச்செய்யுந் தெய்வம் வேண்டாவிங்கென்னின், முயலுமி ச்செயல்களிங்கே முழுவது மழியுமெங்கே, பயனளிப்பவ னழிந் தே பலன்களைப்பண்ணுங்கெட்டே, வயலிடுந்தழையுந் தின்னுமருந் தும்பின்பலிக்குமாபோல்". எ-து. கண்டுகொள்க.

இனி யசேதனமற்றவையாவிக கமைத்ததாகும் என்றுமறுத் ததற்கு எடுத்தவினை யுருவுறுவதுயிர்ற்றினை யிருவினைக்குத் தக் கவுட லெய்துமென்று மீளவுமவன்சொன்னனென்பதற்கு. பி-ம். சித்தியாரில் 'நித்தமாயெங்குமுண்டாய் நீடியிரறிவதாலப்ப், பு த்திதாலதியாயகருவியின் புறத்ததாகிச், சுத்தமா யருவமாகித்தொ ல்லைவல்வினையின்றன்னைடக், கொத்தசேதாருருவம்பற்றிப்புல்வழி யுணர்ந்துநிற்கும்". எ-து. கண்டு கொள்க.

என்றிங்ஙனம் பட்டாசாரியன் சொன்னதை, சடத்திரஞ் கத்தாவா யறிவொன்றில்லாத் தன்மையனுங் கூடவொருசங்கை யின்றே னென்றவினை மறுத்ததற்கு. பி-ம். சித்தியாரில். "உலகு டல் கரணங்கால முறும்பல நியதிசெய்தி, பலவினைகொண்டு

கன்மம் பண்ணுவதுண்டதாலு, னிலவிடா வினைதாஞ்சென்று நினைந்துயிர் நிறுத்திக்கொள்ளா, வலகிலாவறிவனுணை யணைத்திடு மருளினலே". எ-து. கண்டுகொள்க.

ஆனபடியிலுலே சிவன் ஆன்மாக்கள்செய்த கன்மங்களி யறிந்து அதற்கதற்கேற்ற சரீரங்களைக் கூட்டிப்புசிப்பிக்கையா லே பக்ஷபாதியல்ல நடுவனென்பதற்கு. பி-ம். இருபாவிருபஃதில். "வாக்குமனமும் போக்குளதனுவுஞ்-சொல்லுநினைவுஞ் செய்யுஞ்செயலு-நல்லவுந்தியவு மெல்லாமறிந்து-முறைபிறழாமற் குறைவுநிறை வின்முய்க்-காலமுந்தேசமு மாலறவகுத்து-நடுவுநின்ற நருத்தலி னடுவனுகுதியே". எ-து. கண்டுகொள்க.

இதனுற்சொல்லியது பிரபஞ்சநித்தியமாயிருப்பதொன்றென்று மதுதானே காரியப்படுமதொழிந்து கத்தா வேண்டுவதில்லையென்று மான்மாத் தானேசெய்த கன்மத்துக்கீடான சரீரத்தைத் தானே யெடுத்துக்கொள்ளு மென்றுஞ் சொன்ன பட்டாசாரியரினை மறுத்துக் கன்மமுஞ் சரீரமும் ஜடமானபடியாலு மான்மா தனக்கென்ன வோரறிவில்லாதபடியாலு மிவையிற்றைக்கூட்டிக் காரியப் படுத்துகிறது சிவனே யென்று முறைமையை யறிவித்தது. (கூ)

——0——

வேறு—இஃ தலகாயதன்முதலியோரை மறுத்துக் கருத்தாகன்மத்துக்கிடக மாயையை வியத்திப்படுத்துவ னென்ப தனைர்த்திற்று.

படைத்ததொரு படியின்றிப் பறவைபசுநரராய்ப் பண்ணியதென் - கருத்தாவே படைப்பாலுயி ரிங்ஙனம் படைக்கப்பட்ட பிரபஞ்சத்தை யொருபடியாகப் படையாமற் பறவைமுதலியனவாகப் படைக்கவேண்டிய தென்னையென்று லகாயதன்சாம்வில்,— முன்னினவினைப் பான்மையென்பர்-

ஆத்மாக்கண் முன்செய்தகண்மத்துக் கிடாகவென்று சொல்லுவர் பெரியோர்,—அடுத்தவினை யுளதாயினிறையேனென்னில் - முன்கூடின கன்மமுண்டாயிற் பின்னைக் கருத்தாவென்னை தானென்று நிரீச்சுரசாங்கியன சொல்லில்,—அசேதனம் - அக்கன்மஞ்சடம்,—மற்றவையாவிக் கமைத்ததாகும்-கருத்தா வந்தவுடம்புகளைப் படைத்தது முன்னரார்ஜித்த கன்மபலங்களைப்புசிக்கு மாத்மாக்களுக்காயிருக்கும்,—எடுத்தவினை யுருவுறுவதுயிரல் - முன்னர்ஜித்த கன்மபலத்தையோ ருடம்பிலிருந்து றனுபவிப்ப தாத்மாவாயின்,—தானே யிருவினைக்குத்தக்க வுடலெய்துமென்னில் - ஆத்மாத்தானே புண்ணியபாவங்களின் மூறைமைக்கிடான உடம்பைப் பொருந்துமென்று பின்னுஞ்சொல்லில்,—சடத்திரளுந்தத்தாவா யறிவொன்றில்லாத் தன்மையனுங் கூடவொரு சங்கையின்றே - சடமான மாயாகாரியத்தின் நிரட்சியுங் கருத்தாவல் லரெய்த் தானே யறிகைக்கோ ரறிவுமில்லாத முறைமையினையுடைய வாத்மாவும் பொருந்துதற் கொரு பிரமாணமில்லை. எ - று.

காரணமில்லை யென்பாருமுளர். என்னிலென்பது முன்னுங் கூட்டப்பட்டது. எடுத்தவினையாகுபெயர்.

அப்படியே கன்மத்துக்கிடாக ஆன்மாக்களுக்குக் கர்த்தா மாயாசரீரங்களைக் கூட்டிப் புசிப்பிக்கு மவதாரத்துக் கன்மமுண்டாயே மாயாசரீரமுண்டானதோ மாயாசரீரமுண்டாயே கன்மமுண்டானதோ வென்றுவினவ மேலருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

அல்லவம்மிக வுரிப்பிக்கினைதா னினைத்ததீச னெருவினைக ளருந்துதற்கே. வினையா வன்றிச், சொல்லிவரு மாயையா வலுவனைவழுந்தச் சூழ்ந்தகனவு மூ

ரைமுதலோர் துடக்கிலாய்ப, லொல்லவருமெளி
ணுளதா முபிருண்டாவே யுளதுமல மலமுளதா யெய
ழிந்தவெல்லா, நெல்லிக்கமுளை தவிடுபிபோ லாநி
யாக நிலுத்திவரிதுரைசவ நிகழ்த்துமாறே. (கஉ)

சாலியின்முளையுந் தவிடுமுமியும்
போலமும்மலமும் புராதனமென்றது.

(இ-ள்.) அல்லன்மிகவுயிர்க் கிலைதானனேனத் தநீசனருவினைகளருந்துதற்கோ தக்கமிகவுண்டாக வான்மாக்களுக்கிந்தவுடம்புகளோத் தம்பிராரூர் கூட்டினதனுபமாயிருக்கிறகன்மங்களைப் புசித்தற்கோ அப்படியாமாலல்

வினையோவன்றிச் சொல்லிவருமாயையேயோ வுணவை முந்தக் சூழ்ந்தது கன்மமோ அதுவொழிந்து சொல்லப்பட்டுவருகிறமாயையேயோ ஆன்மாவை முந்தவந்து பொருந்தினது.

எனுமுனை முதலோர்தொடக்கிலார்பாலொப்பிலவருமெளிதாம் என்றுசொல்லுகிறது

உயிருண்டாகையுளதுமலம் அநாதியேயொருதொந்தனையுமில்லாதாரிடத்திலே மாயாகன்மங்களுண்டாகுவல்லவோ அதற்குத்தாமுளதாவது. இந்தமாயையுங் கன்மமும் மொழிய வேறுளதெதெனனில்

ஆன்மாவென்றுண்டு அன்றேயுள்ளதாணவமலமும். அப்படியாகுல் மாயையுங் கன்மமும் பின்புண்டானதாவென்னில்

மலமூளதா அந்தவாணவமல மூண்டாகவே மற்றுந்
டொழிந்தவெல் ள்ளமாயாமலமுங் கன்மமலமும்
லாம்

நெல்லின் மு நெல்லிலே யுண்டாகப்பட்ட மூளையுங்
ஹா தவிடுமிடோ தவிடு மூமியு மொக்கவுண்டாருத்போலே
லநாதியாகநிறு விலையு மநாதியென்று பெரியோர்க ளிக்
த்திடுவர் சயிப்பர்கள்

இதுசைவ நி இப்படிச் சிவாகமஞ்சொல்லும். எ - று.
கழ்த்துமாறே.

வி - பு. அல்லன்மிக வுயிர்க்கிவைதா னனைத்தநீச ன
ருயினைக ளருந்துதற்கோ என்று நிகண்டாவாதி சொன்ன
னென்னவுமாம். அதுவெங்ஙனேயென்னில் கத்தா சுருபாமூர்
த்தியாகையாலே யவரெல்மாக்கள் துக்கங்களை யநுபவிக்
கத்தக்கதாக வுடம்புகளைக்கூட்டான் ஆன்மா தானேசரீர
த்தோடுங்கூடி யநுபவிக்குமென்பது கருத்தாகையாலும் அ
ன்றியுங்கத்தா பொன்னையில் வட்டத்திலே பிரபஞ்சந்தோ
ய்வற்றிருப்பானெண்ணையாலு மெனவறிக. இதற்கு. பி-ம். சி
த்தியாரில் "அந்தவாய்மொழியி லலவன்சாண மாதியாக
மூநலான்ரு, லிந்தமாநில மயங்கிடாதவகை யிங்கியம்பின
னிதன்பொருள், வந்தகாலமுயிர் கன்மகன்மியற மற்றும் வி
ன்மருவு புற்கலம், பந்தம்விடுதே டநாதியாயிவை படைப்
பதின்றியுள பத்துமே." எ-ம். "கருவிகண்படு தொடக்கொழி
ந்துவரு காலமூன்றுநிகழ் காரியம், பெருகநின்றெரு கணைத்
திலையுளார் பெருந்தவக்கடவுள் பீடரென, மருவநின்றுவழு
பட்டவர்க்கு மலிவுற்றவர்க்கு மனமொத்திடும், குரிசிலெங்
கள்ளிறையென்று பின்னுநிகழ் குற்றமின்மைய தா கூறுவான்"

இது கத்தா விகாரமற்றிருப்பானென் றவன் சொன்னானென் பதற்குக் கண்டுகொள்க.

இனியுயிருண்டாமே யுளதுமலம் எ - து. ஈப்வாவைக் கியவாதியை நோக்கிச் சொன்னதனவுமா மெனவறிக. அ தற்கு வழியெதென்னில் ஆணவமலமென்ப தொன்றில்லை மா யையுங் கன்மமுமேமயுள்ளது என்ப தவன் கருத்தாகையா லப்படிச் சொன்னதெனவறிக. இதற்கு. பி-ம். சங்கற்பநிராக ரணத்தில் "மாயை - யுருவிருவினையாற் வருமிருவினையு - மூ ருவாலன்றி மருவாதிவற்றின் - மூந்தியதேதோ வந்தனவ தற்கோ - ரேதுவேண்டும்" என்றவன் வினவியதற் குத்தர மாக ஆணவமலமுண்டென்று நாட்டுதற்கு "மூலமலத்தாற் சாலுமாயை - கருமத்தளவிற் றருமூருவிறைவன்" என்று ம வனை நோக்கிக் கூறியது கண்டுகொள்க.

இனி நெல்லின்முளை தவிடுமிபோல் என்றுபமானங்கூ றிய வகையெதென்னில் முளை கன்மத்துக் குவமையெனவ றிக. தவிடு ஆணவமலத்துக் குவமையெனவறிக. உமிமாயைக் குவமையெனவறிக. அரிசி யான்மாவுக் குவமையெனவ றிக. என்றிங்ஙனங் கூறப்பட்ட வுபமானத்துக்கு. பி-ம். தி ருமந்திரத்தில் "ஆணவமாயையுங் கன்மமுமாமலங், காண முளையுந் தவிடுமியான்மாவுந், தாணுவெவாவ்வாமலே தன்ம லமாய்நிற்கும், பெணுவாய்மற்றுநின் பாசம்பிரித்தே" எ - ம். வீட்டுநெறிப்பாலினும் "ஆணவம்பிண்டி யருளாணையதாணுமி, காமியமூச்சென்று கான்" எ-ம். கண்டுகொள்க. அன்றியும் நெல்லின்வரு தவிடுமிபோலென்று பாடமோதவாருமுளர். அப்படிப்பாடமாயின் நெல்லிலேவருகிற முளையென்று பொ ருளுரைத்துக்கொள்க.

இதனாற்சொல்லியது கத்தா வான்மாக்கள் கன்மத்

தொலையவேண்டிச் சரீரங்களைக்கூட்டிப் புசிப்பிப்பனென்றும் அப்படிப் புசிப்பிக்குமிடத்து மாயையோகன்மமோமூக்தக்கூடினதென்று கேட்க ஆன்மாவுள்ளவன்றே யாணவமலமுண்டென்றும் ஆணவமலமுள்ளவன்றே மாயாகன்மங்களுமாதியென்றும் வருமுறைமையை கெய்லிலே முளையுக்தவிடுமியு மாதியாஞற்போல வீருக்குமென்றறிவித்தது. (கஅ)

வேறு—இதகன்மத்துக்கிடாகக் கருத்தா சரீரத்தைக் கூட்டுவிப்பனென்னி லந்தக்கன்மமோ சரீரமோ முந்தினதென்னும் விரவிற் குத்தாமுணர்த்திற்று.

ஈசன்முன் - உம்முடைய சுவாமிதான்;—உயிர்க்கல்லன்மிகவணைத்தது - ஆத்மாக்களுக்குத் துனபமிகவுண்டாக வினை வ்யுடல்களைக் கூட்டியது,—அருவினைக ளருந்ததற்கா-நீங்குதற்காரிய வினைப்பயன்களைப் புசித்தற்காகவோ. அங்ஙனமாகுக.—வினையோவன்றிச் சொல்லிவருமாயையோ வனுவைமுந்தச் சூழ்ந்தது - இந்தக்கன்மமோ விதுவன்றிச் சொல்லப்பட்டுவரு மாயையோ வாத்மாவை மூர்பட்டுப்பொருந்தியது,—எனுமுரை - என்றுசொல்லுஞ்சொல், — முதலோர் தொடக்கிலார்பா லொல்லைவரு மெனினுளதாம் - முன்பே யொருமலமு மில்லாதாரிடத்தில் விரையட்பொருந்துமென்னுண்டாம். அத்தனையாயி னத்தொடக்கேதெனில்,—உயிருண்டாமெ யுளதுமலம்-ஆத்மாவென்றுண்டு அனேறயாணவமலமுண்டு. ஆதல் மாயையுங்கன்மமும் பின்புளவானவோ வெனில்,—மலமுளதா வொழிந்தவெல்லாம்-ஆணவமலமுண்டாகவே யொழிந்தமாயையுங் கன்மமும்,—நெல்லின்வருதவிடுமிபோலதுகியாக நிறுத்திடுவர் - நெல்லிடத்

தண்டான தவிதிமுமியு மந்நெல்லிற் கரு திசம்பந்தமாறற் போல வருதியாகச்சொல்வர், —இதுசைவநிகழ்த்துமாறு-
இது சிவாகமிகள் சொல்லுமுறைமை. எ - று.

அருந்துதற்கோவென்னுமோகார மூடம்பாட்டுவிரு. மற்றையோகார மிரண்டு மறியான்வி ரு.

இங்ஙனஞ் சொல்லிவந்த வசுத்த மாயாகாரணத்தி னின் றுண்டாக்கப்பட்ட காரியமாயுள்ள தத்துவங்களின் பேரற்ற மருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

அருத்திமிகுங் கலைகாலை நியதியுடன்வித்தை யராகமிலை யனந்தரான் மாயைதனிலாகு, மூருத்திரராற் கலையதனிற் பிரகிருதிகுணங்க ளுளவாகு மாங்கா ரம் புந்திதனிலுதிக்குங், தெரித்தவிது திரிவிதமாங் தைசதலைகாரி திகழ்தருபூ தாதியெனத் திருந்திய சாத்துவிதம், விரித்தகுண மம்பதத்தி யிற்றிரியமெய் று விளம்பியசோத் திராதிமுதல் விளங்கியிடம்விரிந் தே.

(கச)

கன்றியமாயையிற் கலைமுதலாக
வொன்றுதத்துவம்பதி னொங்குர்ப்பவித்தது.

(இ-ள்.) அருத்திமிகுங் கலை நியதியுடன் வித்தை யராகமிலை யனந்தரான் மாயைதனிலாகும். அதுவயம். மாயைதனிலாகு மூருத்திரராற் கலையதனிற் பிரகிருதிகுணங்க ளுளவாகு மாங்காரம் புந்திதனிலுதிக்குங், தெரித்தவிது திரிவிதமாங் தைசதலைகாரி திகழ்தருபூ தாதியெனத் திருந்திய சாத்துவிதம், விரித்தகுண மம்பதத்தி யிற்றிரியமெய் று விளம்பியசோத் திராதிமுதல் விளங்கியிடம்விரிந் தே.

அதோமாயையிலே நின்றும் அனந்தேசுவராயரு ளருளிறுலே புசிப்பை மிகவுள்ள டாக்குங் கலையுங்காலமு நியதியோடு வித்தையும் அராகமுந் தோன்றும். அருத்திமிகு மென்பதற்கு ஆசைமிகவுண்டாக்கு மென்னவு மாமென வறிக.

னி லனந்தாலை
ருத்தி மிருங்க
லகாலை நியதியு
டன் வித்தை யா
ராக மிவை யா
கும்.

உருத்திரா ராற் கலை யதனிற் பிரகிருதி குண ங்க ளருளவா கும்

உருத்திரதேவநாயனா ரருளிய சிவஞா னபோ தம் மூற்சூறிய கலைபிலை மூலப்பிரகிருதி குணசொரூபங்களாகத் தோன்றும். குணசொரூபங்களாவன? சாத்துவிதகுணமென்றுமி ராசதகுணமென்றுந் தாமதகுணமென்றும் பெயராய் அந்தக்குணங்க ளொற்றுக்குறைவின்றித் தம்மிலொத்து நின்றவிடஞ் சித்தமென்றும் ஒருகுணமறினவிடம் புத்தியென்றும் வருமெனவறிக. ஆகையால் பிரகிருதித்துவந் தானென சித்தமும் புத்தியுமாய் நிற்குமெனவறிக. இதனை மேல்நூட்பத்தில் காட்டுகிற உதாரணத்திலே கண்டுகொள்க.

ஆங்காரம் புத்தி தனி லுதிக்கும்

அகங்காரதத்துவமு மூற்சூறிய புத்திதத்துவத்திலே தோன்றும். என்றிவ்வனஞ் கூறப்பட்ட முன்னர்ப்பதத்திலே புத்திக்குத் தோற்றஞ் சொல்லாமலிருக்கவு மிங்கப்பதத்திலே யாங்காரம் புத்தியிலேதோன்றுமென்பது கொண்டே பிரகிருதிதானே குணசொரூபங்களாய்ச் சித்தமும்புத்தியுமாய் நிற்குமென்பதை யநுபவத்தாற் கண்டுகொள்க.

தொரித்தவி தி திரிவிதம்

இங்ஙனஞ் சொல்லப்பட்ட வாங்கார மூன்றுவகையாயிருக்கும். அஃதெங்ஙனையென்னில்

தைசதவை காரி திகழ்தரு பூதாதி யென. அநுவயம். திகழ்தரு தைசத வைகாரிபூதாதி

விளக்கத்தையுடைய தைசதயாங்கார மென்றும் வைகாரியாங்காரமென்றும்பூதாதியாங்காரமென்றும் பொருளுடைத்தாம். இவையிற்றுள் தைசதம் அறிவென்றறிக. வைகாரி தொழிலெனவறிக. பூதாதியுருவமெனவறிக.

திருந்திய சாத்துவிதம் விரித்தகுண மனம்புத்தி யிந்திரிய மென்றுவிளம்பிய சோத்திராதி முதல்விளங்கியிடும்விரிந்தே. அநுவயம். திருந்திய சாத்துவிதம் விரித்தகுணமுதல்விளங்கியிடு மனம்புத்தியிந்திரியமென்றுவிளம்பியசோத்திராதி விரிந்தே.

நன்மைபொருத்தின வறிவாகிய சாத்துவிதகுணம் விரிந்துபொருந்தின மூந்தக்கூறிய தைசதவாங்காரத்திலே மனதும் ஞானேந்திரியமாகிய சோத்திராதிக ளுந்தும் பிரகாசித்து விரிந்துதோன்றும். எ-று. முதல் விளங்கியிடுமென்றதை மூந்தக்கூறின தைசதவாங்காரமென்றதென வறிக. அஃதாவது ஆங்காரந் தோன்றினவொழுங்கு தைசத வைகாரி பூதாதி யென்றமையால் தைச வாங்கார மூந்தக்கூறுகையாலப்படிச் சொன்னதெனவறிக.

நு-ம். அருத்தமிருங் கலைகாலம். எ-கு. புகுப்புமிசவுண்டாக்குங் கலாதிக ளென்று பொருட்கூறியதே தென்னில் ஆ

ன்மாக்கள் புசிப்புக்கிடாக கலாதிகள்தோன்றுகையா லப்ப டிச் சொன்னதெனவறிக. அன்றியும் அருத்தி மிகு மென்றது ஆசை மிகவுண்டாக்கு மென்றதேதென்னில் இங்ஙனஞ் சொ ல்லப்பட்ட தத்துவங்களிலராகத்துவங் கூடத்தோன்றுகை யால் அராக மிச்சையை யெழுப்புகையால் ஆசையை மிகவு மூண்டாக்குமா மெனவறிக.

இனி யுருத்திராற்கலையதனிற் பிரகிருதிகுணங்க ளுள வாகும். எ-கு. கலையிலே பிரகிருதிகுணங்கள் தோன்றுமெ ன்று சொல்லியிருக்க வந்தக்குணங்கள் தம்மிலொத்தவிடஞ் சித்தமென்றும் ஒருகுணமெறினவிடம் புத்தியென்றும் விதப் பாகப் பொருட்படுத்துகைக்கு வழியேயதென்னில் பிரகிருதித் தத்துவ மூபாதானமாக வான்மதத்துவ மிருபத்துநாலுந் தோ ன்றுமென்று முன்னூல்களிற் சொல்லியிருக்கையா லதிலேயி த்தமும் புத்தியுமொழிய மற்றுள்ள தத்துவங்களின்தோற்ற மேற் சொல்லுகையாலே அந்தச்சித்தமும் புத்தியு மிந்தக் கு ணபேதத்தி லடங்கிவருகையாலே இந்நூற்செய்தருளினவர தனையடக்குவாய்செய் தருளிச்செய்ததை விரித்துப் பொருட் படுத்தின தெனவறிக. அப்படிப் பிரகிருதி தத்துவங் குண சொரூபங்களாகத்தோன்ற வந்தக்குணங்கள் தம்மிலொத்த விடஞ் சித்தமென்றும் அதிலேயொருகுண மேறினவிடம் பு த்தியென்றும் பொருட் கூறியதற்கு. பி-ம். தத்துவ விளக்க த்தில். "கூறியமூலப்பகுதியிற்றோன்றுங் குணமவைதான், றே றியசாத்திகராசததாமதமென்றுசெப்பு, மூறியமூக்குணமொ த்தவைமூன்று முயர்விழிவற், றேறியக்காற்புத்தி தத்துவமா குமென் றெண்ணுவரே." எ-ம் சுத்தியாரிலும். "சித்தமாம வ்வியத்தஞ் சிந்தனையதுவுஞ்செய்யும்." எ ம். வருமெதுக்க ளைக் கண்டுகொள்க.

இனிசர்வமுஞ் சிவசத்திகளாலே தோன்றுமென்று நூல்களிற் சொல்லியிருக்க விந்தத்தத்துவங்கள் அனந்ததேவகாயரூராலும் உருத்திரதேவகாயரூராலுந் தோன்றுமென்றதற்கு வழியெதன்னில் அஃதாவது விஞ்ஞானகலரில் அபகுவரானஅஷ்டவித்தேசுராகிய அனந்தனசூக்குமன் சிவோத்தமன் ஏகநேத்திரன் ஏகவுருத்திரன் திரிமூர்த்தி சிகண்டன் சிகண்டி எனப்பட்ட வெண்மருக்குஞ் சிவஞசாரியகிருத்தியமுமுண்டாக்கி யவர்களுக்குப் பிரபஞ்சநடத்தும திகாரமுங கொடுத்தருளுகையி லவர்களி லனந்ததேவகாயரூருக்கு மூருத்திரதேவகாயரூருக்கு மந்தவதிகாரங் கொடுத்தனவறிக. என்றிங்ஙனஞ் சொல்லப்பட்ட வெட்டுப்பேரும் விஞ்ஞானகலரி லபக்குவரென்பதற்கும் அவர்கள் சிவனுடைடவாக்கினவழியே நடத்துமதிகாரமுடையவர்களென்பதற்கும். பி-ம். தத்துவவிளக்கத்தில். "அறிந்தவர்திர்ந்த தகளினர்தீராத் தகளர்முன்னர், செறிந்தவர்விஞ்ஞைருக்கு நாபகரென்மரெனச்சிறந்தோர், பிறிந்தவர்மந்திரராமெழுகோடியர் பேரொளியால், மறிந்ததிரைப்புனல் வெங்குருவாணர் வகுத்தனரே." என்பதனுள் விஞ்ஞைருக்கு நாயகரென்மரென்பதனை யிதற்குக்கண்டுகொள்க.

இனியாங்காரம் புந்திதனிலுதிக்குந் தெரித்தவிதமாம். எ-கு. புந்தியிலே யாங்காரமொன்றுய்த்தோன்றி மூவகையாங்காரமாக விரிந்ததற்கு வழியெதன்னில் இந்தவாங்காரங் காரியப்படுத்துமவதரத்து மூற்கூறிய குணங்களோடுங்கூடிக் காரியப்பட்டவண்டுகையாலந்தக்குணங்களுஞ் மூவகையாகையாலே யிதனையுமப்படிமூவகையாகச்சொன்னதெனவறிக. அதற்குவழியெதன்னில் சாத்துவிதகுணமுறிவும் இராசதகுணமு விகாரமும் தாமதகுணம் மயக்கமு

மாகையாலும் தைசதவாங்காரம் விளக்கமும் வைகரியாங் காரந்தொழிலும் பூதாதியாங்கார மூருவமும் மாகையாலு மந்தந்தவகைகளிலே கூடிநின்று காரியப்பட்டதெனவறிக, இவைதம்மிற்கூடிக் காரியப்படுந் தோற்றங்களினுங் கண்டு கொள்க. அஃதாவது அறிவாகிய சாத்துவிதகுணமும் விளக்கமாயுள்ள தைசதவாங்காரமுங்கூடி அறிவாயுள்ள மனத்தையு ஞானேந்திரியமாகிய சோத்திராதிகளைந்தையுந் தோற்றுவிக்கையாலு மேல்வருகிறசெய்யுளிலே விகாரமாயுள்ள ராசதகுணமுந் தொழிலாயுள்ள வைகாரியாங்காரமுங கூடித் தொழிலாயுள்ள கன்மேந்திரியமாகிய வாக்காதிகளைந்துந் தோன்றுகையாலு மயக்கமாகிய தாமதகுணமும் உருவமாகிய பூதாதியாங்காரமுங்கூடிப் பூதங்களுக்குக் காரணமாகிய சத்தாதிகள் தோன்றுகையாலு மப்படிச்சொன்னதெனவறிக. எனறிங்ஙன மறிவுந் தொழிலு மயக்கமுமுண்டாகையால்சாத்துவிதகுணமுந்தைசதவாங்காரமுமறிவைப் பற்றி நின்றதெனவறிக. இராசதகுணமும் வைகாரியாங்காரமுந் தொழிலைப்பற்றி நின்றதெனவறிக. தாமதகுணமும் பூதாதியாங்காரமும் மயக்கமாகிய வுருவத்தைப்பற்றி நின்றதெனவறிக. ஞானேந்திரியமாகிய சோத்திராதிகள் அறிவைப்பற்றி நிற்கையாவது சோத்திராதிகளாயுள்ள செவி மெய் கண் நா நாசியென்னப்பட்ட விந்திரியமைந்துஞ் சத்த பரிசரூப ரச கந்தங்களைக் கொள்ளுமிடத்துச் சரீரந்தொழிற்பட்டு ஜீவியாமலெனிவாய் நிகழுகையாலெப்படிச்சொன்னதெனவறிக.

இனி கன்மேந்திரியமான வாக்காதிகள் தொழிற்படுகையாவது அவை காரியப்படுமிடத்துச் சரீரந்தொழிற்பட்டு நின்று காரியப்படுகையாலெப்படிச்சொன்னதெனவறிக.

இனி யிங்ஙனஞ்சொல்லப்பட்ட தத்துவங்கள் மாயை யிலே தோன்றுமிடத்துச் சித்தியாரில் காலமுதலாகத் தோன்றுமென்று சொல்லியிருக்க விந்நூலிற் கலைமுதலாகத் தோற்றஞ்சொன்னதே தென்னில் சித்தியார் செய்தருளினவர்பிரபஞ்சத்தோற்றஞ் சொல்லுகையால் காலமுண்டாதே பிரபஞ்சந்தோன்றுகையாலே காலமுதலாகச் சொன்னதெனவறிக. இந்நூல்செய்தருளினவர் ஆன்மாக்களுக்கு உனர்த்து முறையைச்சொல்லுகையாலே யுனர்த்துகைக்குக் கலை முந்தி யெழுப்பவேண்டுகையால் கலையை முந்திக்கூறியதெனவறிக. அப்படி வேற்றுமைகூறியதுதென்னினிது சார்புனலாகையால் "திரிபுவேறுடையது புடைநூலாகும்" என்னும் விதியைப்பற்றி யெனவறிக. அன்றியும் இந்தத்தத்துவத்தோற்றம் அனந்தேசுவராயரொருவர் நடத்துகையாலப்படி முன்பின்கூறியதெனவுமா மெனவறிக.

இதனுற்சொல்லியது இந்த வசுத்தமாயையில் நின்று தோன்றப்பட்ட தத்துவங்களிலிந்தச்செய்யுளில் காலமுநியதியுங் கலையும் வித்தையு மாகமும் ஆகவைந்தும்பிரகிருதிகுணங்களாகிய அவ்விடத்தமுஞ் சித்தமும் புத்தியும் ஆகமூன்றும் புத்தியிலே ஆங்காரமும் ஆங்காரத்திலே மனதும் ஞானேந்திரியமாகிய சோத்திராதிகளைந்தும் ஆகவேழுங்கூடி ஆகத்தத்துவம் பதினைந்தும் தோன்றுமுறைமையை யறிவித்தது.

(கச)

வேறு—இஃதேதாமரையாசிருஷ்டி யுனர்த்திற்று.

மாயைதனில் - அசுத்தமாயையி—த்திலே,—அனந்தரால் - அனந்தேசுவராருளாலே,—அருத்திமிகுங்கலைகால நியதியுடன்வித்தை யராகமிவையாகும் - ஆசைமிகுதற்குக் காரணமான கலைகாலநியதிவித்தை யராகமாகிய வினைவையைந்து

மூளவாகும்,—உருத்திராற் கலையதனிற் பிரகிருதிகுணங்க ளூளவாகும் - உருத்திரதேவரருளாலே மூன்சொன்னகலையி லே மூலப்பிரகிருதிதோன்றி யதினின்றுங் குணங்கடோன் றும். இக்குணத்தின் மூற்றந்தானே சித்தம் புத்திகளின் மூற்றமும்,—ஆங்காரம் புத்தியினிலுதிக்கும் - புத்தியினின் று மாங்காரந்தோன்றும்,—தெரித்தவிது திகழ்தரு தைசத ம்வைகாரி பூதாதியெனத் திரிவிதமாம் - சொல்லப்பட்ட வி ந்தவாங்காரமானது விளங்கிய தைசதவாங்காரமும் வை காரியாங்காரமும் பூதாதியாங்காரமு மென மூவிதமாம்,— மூதல் - மூதற் சொல்லப்பட்ட தைசதவாங்காரத்திலே,— திரிந்தியசாத்துவிதம் விரித்தகுணம் - கல்ல சாத்துவிதமாக க் கீர்த்திக்கப்பட்ட குணத்தையுடைய,—மனம்புத்தி யிந்தி ரியமென்று விளம்பியசாத்திராதி - மனமு ஞானேந்திரிய மென்று சொல்லப்பட்ட சோத்திராதியைந்தும்,—விரிந்து விளங்கியிடும் - விரிந்துதோன்றும். எ - று.

புத்தி - ஞானம். காலதத்துவந் தோற்றத்தின் முதன் மையாயிருக்க ஈண்டுக்கலையை யெடுத்துச்சொல்லியது ஆத் மாவிற்குக் கேவலத்திருளைநீக்கி ஞானக்கிரியைகளை மூற்ப ட ஜனிப்பித்தலின். காலந்தோன்றியதினின்று பின் னிய தியு மதினின்று பின்கலையுந்தோன்றி யக்கலையினின்று வித் தையு மதினின்றராகமுந்தோன்றும். இங்ஙனந்தோன்றுதலி ற் சமுசயமாகவந்து மாயையிலாகுமென்றார். செய்யுளாதலி ற் செவ்வெண்ணின்மூனை தொக்குநின்றது. குணதத்துவ த்துக்குத் தோற்றஞ்சொல்லவே சித்தமபுத்தியென்னு மிர ண்டின் மூற்றமுஞ் சொன்னதா மென்றதென்னை ? குணங் களின் சமமு மேற்றக்குறைச்சலுஞ் சித்தம் புத்தியாதலின், இராசதமுஞ் தாமதமுங்குறைந்து சாத்துவிதமேலிட்ட வவ

கஅசு சிவப்பிரகாச சவ்வியாக்யாநம்.

தரம் புத்தியென்பதலுமிதற்கு முன்னூலிற் சித்தமா மவ்
வியத்தஞ் சிந்தனையதுவுஞ் செய்யுமென்றும் புத்தி யவ்வி
யத்திற்முன்றி யென்று மிவை யிரண்டிற்கும் பிரகிருதியுற்
பத்தித் தானமாகச் சொன்னதலுமறிக.

இவ்வனம் பதினேந்து தத்துவத்திற்குத் தோற்றமருளி
ச்செய்து மேற்பதினேந்து தத்துவத்திற்குத் தோற்றமருளி
ச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

மன்னியகன் மேந்திரிய மாவிராசதஞ்சேர்
வாக்காதிவைகாரி மருவிவருஞ்சத்தந், தன்னிலுதி
லாகியதா மதமிகுமாத்திரைபின் றருமிதனின் வானை
னிலமனல்புனல்மண்சத்த, முன்னைதனில் வெளியா திரி
யொன்றொன்றுக முறையிலுறு மிருமையயன் முடி
வாமுன்னே, யுன்னுசதா சிவராதி யதிபதிகளாக்
கமுதித்தவடை வெனவுரைப்ப ருணர்ந்துளோரே.

பின்னுமூவைந்து பிறக்குநெறியுஞ்
சொன்னவாறுரைக்கமுந் தோற்றமுஞ்சொன்னது.

நிலைபெற்றுவருகிற கன்மேந்திரியமாகிய
வாக்காதிகளாயுள்ளவை யைந்து மிராச
தருணத்தைப்பொருந்தி யிருக்கிற வைகரி
யாங்காரத்திலே பொருந்தித் தோன்றும்.
பொருந்தித் தோன்றுமென்றது வைகரி
தொழிலாகையாலுங் கன்மேந்திரியந் தொ
ழிற்பட்டுவருகையாலு மிந்தக்கன்மேந்தி
ரியம் வைகரியாங்காரத்திற் றோற்றமாகை
யாலு மப்படிச் சொன்னதெனவறிக.

(இ-ள்.) மன்னிய கன்மேந்திரியமாண விராசதஞ்சேர் வாக்காதிவைகாரிமருவிவரும். அதுவயம். மன்னியகன் மேந்திரியமானவாக்காதி யிராசதஞ்சேர் வைகாரி மருவிவரும்

சத்தந்தன்னை முதலாகிய தாமதமிருமாத்திரைபின்றருவயம். சத்தந்தன்னை முதலாகியமாத்திரை தாமதமிருபின்றரும்

சத்தமென்கின்ற விடயத்தை முதலாகவுடைய தன்மாத்திரைகளாந்தாமத குணத்தை மிருத்திருக்கிற பிற்பட்ட பூதாதியாங்காரத்திலே தோன்றும். பின்றருமென்றதைப் பிற்பட்ட வாங்காரமெனவறிக. அஃதாவது, முன்னர்ச்செய்யுளாங்காத்தினது தோற்றஞ்சொல்லுமிடத்துத்தைசதவைகாரி திகழ்தரு பூதாதியென்றுபூதாதியாங்காரத்தைப் பிற்படக்கூறுகையாலப்படிச் சொன்னதெனவறிக. அன்றியும் பூதாதியாங்காரத்திலே தன்மாத்திரைகளாகிய சத்தாதிகளாந்தோன்றுமென்றதும் பூதாதியாங்கார மூருவத்தைப்பற்றி நிற்கையாலுஞ் சத்தாதிகள் பூதரூபங்கள் தோன்றுகைக்குக் காரணமாகையாலு மெனவறிக.

இதனில் இங்ஙன முற்பதத்திலே சொல்லப்பட்டதன்மாத்திரைகளாகிய சத்தாதிகளாந்திறும்

வானனில மனல்புனல்மண் ஆகாயம் வாயு தேயு அப்பு பிருதிவி என்னப்பட்ட பூதங்களாந்துந் தோன்றுமிடத்து

சத்த முன்னதனில் சத்தமுதலாயிருக்கப்பட்ட முற்கூறியதன்மாத்திரைகளாந்திறும்

வெளியாதியொன் றொன்றுகும் ஆகாயமாதியாதவொன்றிலே யொன்றுகவுண்டாம். அஃதாவது சத்தத்திலே யாகாயந்தோன்றும் பரிசத்திலே வாயுதோன்றும் உருபத்திலே தேயுதோன்றும் இரசத்திலே அப்புதோன்றும்

கஅ்சு சிவப்பிரகாச சுவாமியாக்யாநம்.

கந்தத்திலே பிருதிவிதோன்றும் என்றதென வறிக

மூறையி லுறு மிருமையயன் மூடிவாமுன் னேயுன்னுசதா சிவராதியதிபதி கள். அநுவயம். முன்மேல் யுன்னு சதாசிவராதி யி ருமையயன் மூ டிவாயதிபதிகள் முறையிலுறும்

அநாதியே யெண்ணப்பட்ட சதாசிவமூர்த் தம் பெரியபிரமாவீருக அதிதேவதைக ளாவ ருமந்தந்தவொழுங்கிலே பொருந்துவர் கள். அந்தந்தவொழுங்காவது ஆகாசத்து க்குச் சதாசிவமும் வாயுவுக்கு மகேசுரமூ ர்த்தேயுவுக்கு வருத்திரனும் அப்புவுக்கு வி ஷ்ணுவும் பிருதிவிக்கு பிரமாவுமென வறிக.

ஓடுக்கமுறைத் தவடை வென வுரைப்ப ருணர்ந் துகோரே.

இங்ஙனந் தோற்றமாகச் சொல்லிவந்த தத்துவங்களுக்குந் தத்துவகர்த்தாக்களுக் கும் ஓடுக்கமுந் தோன்றின வொழுங்கிலே யென்று சொல்லுவார்கள் அறிவாலுயர்ந்த பேரியோர்கள் எ - று.

நு-ம். மன்னிய கன்மேந்திரிய மென்றதை நிலைபெற்ற கன் மேந்திரியமென்று பொருட்கூறியதேதென்னில் ஆன்மா வொருசீ ரசம்பந்தியாய் நிற்குநாளெல்லா மிந்திரியங்கள் விடப்படாம னி ற்கையாலே யப்படிச்சொன்னதெனவறிக. இந்தவாக்காதிகளைக்க ன்மேந்திரியமென்ற தேதென்னில் கன்மம் தொழிலென்னும் பொ ருளைப்பற்றித் தொழிற்பட்டு ஜீவிக்கையாலே யப்படிச் சொன்ன தெனவறிக. தொழிற்படுகையாவது வாயுங் காலுங் கையும் மலம் பிரிக்கிற தவாரமுஞ் சலம்பிரிக்கிற தவாரமும் வசன கமனதான விசர்க்காநந்த மென்னும் விடயங்களோடுங் கூடி ஜீவிக்குமிடத்

துச் சரீரந்தொழிற்பட்டு ஜீவிக்கையாலே யப்படிச்சொன்னதென வறிக. வாக்காதியைந்தினும் வாக்கென்றவிந்திரியத்தை வாயென் றதற்கு. பி-ம். "கைகாலவைதரு வாயொடுபாயு ரூபத்தமென்ரூங் கனவுயே." எ-ம். சித்தியாரில் "வாயாதிசோத்திராதி புறத்துவா ழ்கருவியாகும்". எ-ம். வரும துகண்டுகொள்க.

இனி இராசதஞ்சேர் வாக்காதிவைகாரிமருவிவரும். என்பத ற்கும். சத்தந்தன்னை முதலாகிய தாமத்மிகு மாத்திரைபின்றருமை ன்பதற்கும் நுட்பம் முன்னர்ச்செய்யுளில்வந்த விதப்பிலே கண் டுகொளக. அந்த தாமதகுணத்திற் ரூன்றப்பட்ட சத்தாதிகளைங் தையுந் தன்மாத்திரைகளென்று பெயர்கூறியதேதென்னில் அந்தக் தவிந்திரியங்களுக்குத் தக்கதாக நின்று காரியப் படுகையாலு மப் படிக்காரியப்படுமிடத்துத் தத்தங்குணங்களுக் கேற்றக்குறைவி ன்றிநிற்கையாலு மப்படிச் சொன்னதெனவறிக.

இனி சத்தமுன்னதனில் வெளியாதி யொன்ரூன் ரூகும். எ-கு. சத்தாதிகளைந்தினும் பூதாதிகளைந்தந்தோன்றுமென்பதன் றியே சத்தத்திலே பரிசமும் பரிசத்திலேயுருவமும் உருவத்திலே யிரதமும் இரதத்திலேகந்தமுமாக வொன்றிலே யொன்ரூகத்தோ ன்றுமென்றும் அன்றியும் ஆகாயத்திலே வாயுவும் வாயுவிலே தேயு வும் தேயுவிலேயப்புவும் அப்புவிலே பிருதிவியுமாக வொன்றிலே டொன்ரூகத் தோன்றுமென்றும் பொருரூனைப்பாருமூளர். அன் றியும் பூதங்களைந்துகு மொவ்வொருகுணங்க ளேறியிருக்குமெ ன்பாருமூளர். ஒவ்வொருகுண மேற்றமாவது ஆகாசத்துக்குச்சத் தமும், வாயுவுக்குச் சத்தமும் பரிசமும், தேயுவுக்குச் சத்தமும் ப ரிசமும் ரூபமும், அப்புவுக்குச்சத்தமும் பரிசமும் ரூபமும் இரத மும், பிருதிவிக்குச் சத்தமும் பரிசமும் ரூபமும் இரதமுங் கந்த மு மெனவறிக. ஆக விங்ஙனங்கூறப்பட்ட மூவகையாயுள்ளொ ரூரு மப்படியுண்டாலு லுஞ் சத்தமுன்னதனில் வெளியாதி யொ ரூரூன்ரூகும். எ-கு. சத்தாதிகளைந்தினும் வெளியாதி யைந்து

கஅஅ சிவப்பிரகாச் சவ்வியாக்யாநம்.

பூதங்களுந் தோன்றுமென்பதொழிய வந்தப்பொருள்க ளிந்தச்ச
த்நத்துக் ககப்படாதெனவறிக. அப்படிச்சத்தாதிகளொந்நும் பூ
தங்களுந் தோன்றுமென்பதொழிய மற்றுப் பொருள்க ளிந்த
ச்செய்யுளுக் ககப்படாதென்பதற்கு இந்நூலெப்பின்சென்ற நூலா
கிய திருநெறிவிளக்கத்தில் இதற் கெதிரடை விருத்தமாகிய. "எ
ண்ணியகண்மேந்நிய மென்று சொல்லப்பட்ட விராசதமார்வாக்
காதி யெய்திடும்வைகரியி, னவ்வணிபிடம்பூதாதி தாமதன்மாத்தி
ரையா னவி லுறுசத்தாதியினைநல்கியிடுஞ்சத்தக், கண்ணதனில்வெ
ளிபரிசங் காலுருவந்தன்னிற் கனலிரதத்தேதபுனற் கந்தத்தேதத
ரையா, மண்ணிறுதிகலிமுதலா வந்தவகைபடடங்கு மாலயலுதிக
ள்வழிவும் வந்தமைபோலொடுங்கும்." இந்தச்செய்யுளில் சத்தாதி
களொந்நும் வெளியாதியாகிய பூதமைந்தும் தோன்றுமென்றபடி
யாலதற்கு மிப்படிக்கண்டுகொள்க. அன்றியுந் தத்துவவிளக்கத்
திலும். "கொள்ளுபதத்தத்துவம்." என்ற செய்யுளின்பிற்பகுதியில்.
"பின்,றெள்ளியதன்மாத்திரையின், வருஞ்சேர்ந்ததன்மாத்திரையி
லெள்ளியபூதங்களொந்துக்குமாமென்ப ருற்பவமே." என்பதனா
லுஞ் சத்தாதிகளொந்நும் வெளியாதியாயுள்ள பூதங்களொந்தும்
தோன்றுமென்பதே யந்தப்பகுதிக்குப் பொருளெனவறிக.

இந்த மாயாகாரியமான தத்துவ முப்பத்தொன்றென்று நூ
ல்களிற் சொல்லியிருக்க முன்னைச்செய்யுளிற் சுருன்றுந்தத்துவம்
பதினைந்து மிந்தச் செய்யுளிற்சுருன்றுந் தத்துவம் பதினைந்தும்
ஆகதத்துவ முப்பதொழியப் புருடதத்துவ மொன்றுக்குந் தோ
ற்றஞ்சொல்லாததேதென்னில் அது தத்துவசமூகத்திற் சிறந்தமா
கையால் "ஐவகையாலுறுபயன்க ளுகரவருங்கால மதுபுருடந்
துவமென் றறைந்திடுவரறிந்தோர்" என்று காரியப்படுமவகரத்து
த் தோற்றமாகையா லிவ்விடத்துச் சொன்னதில்லை யெனவறிக.
அன்றியு மொடுக்கஞ்சொல்லுமவகரத்தும் "தத்துவ மெண்மூன்

றுஞ்சென் முன்மதத்துவத் தொடுங்கும் வித்தையி லொடுங்குமா றும்" என்றமையால் வித்தையா தத்துவமேழாயிருக்கவும் வித் தையிலொடுங்குமாறு மென்றதுகொண்டே புருடதத்துவத்துக் கொடுக்கஞ் சொன்னதில்லை யெனவறிக.

இதனுற்சொல்லியது இராசதகுணத்தைப்பொருந்தின வை கரியாங்காரத்திலே கன்மேந்திரியங்களாகிய வாக்காதிக ளைந்துந் தோன்றுமென்றும் தாமதகுணத்தைப் பொருந்தின பூதாதியாங் காரத்திலே தன்மாத்திரைகளாகிய சத்தாதிகளைந்துந் தோன்று மென்றும் அந்தச்சத்தாதிகளைந்தினும் பூதங்களைந்துந் தோன்று மென்றும் அந்தப்பூதங்களுக்கு அதிதேவதைகள் சதாசிவமுதல் பிரமாவீறுகிய தெய்வங்களென்றும் இவையிற்றுக்கொடுக்கமுந் தோன்றினவடைவிலே யென்றும் வருமுறைமையை யறிவித்தது.

உருவாதியென்ற விருத்தமுத லிந்தவிருத்தமுடியாகிய செய் யுளாறும் அசுத்தமாயா விலக்கணம்.

வேறு — இஃதேதாமாயா சிருஷ்டியு மிருவிதமாயா சிரு ஷ்டிகளான கருவிகளி லொடுக்கமு முணர்த்திற்று.

வைகாரி-வைகாரியாங்காரத்திலே,— இராசதஞ்சேர் மன் னியகன்மேந்திரியமான வாக்காதி மருவிவரும் - இராசதகுணத் தைப்பொருந்தின நிலைபெற்ற கன்மேந்திரியங்களான வாக்குபா தம்பாணி பாயுவுபத்தங்களான வைந்துந் தங்கள்விடயங்களோ டுபொருந்தித்தோன்றும்,— பின்-முன்வந்தசதம்வைகாரிதிக ழ்ந்தரு பூதாதியென வகுத்தவற்றுட் பின்னுகிய பூதாதி யாங்கார மானது,—தாமதமிகு சத்தந் தன்னைமுதலாகிய மாத்திரைதரும்- தாமதகுணமிக்க சத்தத்தை முதலாகவுடைய மாத்திரைகளைந் தையுந்தரும்,—அதனில் - அந்தச் சத்தமுதலிய தன்மாத்திரையி லே,— வானனிலமனல்புனல்மண்-ஆகாயமுதலிய வைந்துபூதங்

களும்,—முறையிலுறும் - நிரைத்தவடைவே தோன்றும்,—அத னில் - அந்தப்பூதத்திலே,—சத்தமுன் - சத்தமுன்னுகிய மாத்தி ரைகளைந்தும்,—வெளியாதி யொன்றுன்றுகவுறும்-ஆகாய முத லாக வொவ்வொருகுணம் மேன்மேலும் பொருந்தும்,—அதிபதி கள்-அப்பூதங்கட்குத் தெய்வங்கள்,—இருமையயன்முடிவா-பு ரியபிரமனீருக,—முன்னே யுன்னுசதாசிவராதி - பஞ்சமூர்த்திக ளின் முதன்மையாக முந்தநினைக்கப்படுஞ் சதாசிவதேவர் முத லிலோர்களாயிருக்கும்,—ஒடுக்க முதித்தவடைவெனவுரைப்ப ரு ணர்ந்தோனோ-இனித் தத்துவங்களொடுங்குமுறைமையுந் தோ ன்றின முறைமையென்று சொல்லுவர் பெரியோர். எ-று.

காரணத்திலுள்ளது காரியத்துஞ்சேர்தலின் மனமுதலிங்ங னந்தோற்றஞ்சொல்லியதத்துவங்கட்குங் குணமடைகொடுத்தா ர். முன்னுலிருங்குணரூபமாகி யிசைந்திமெங்குமென்றதனலென வறிக. சமவேதமாயிருக்கிற ஞானக்கிரியாசத்திகளுக் கபிமேகஞ் சகமாகையாலெனின் வியாபாரத்துக்கபிமுகங்களாகையா லே ஞானேந்திரியங் கன்மேந்திரியமெனப் பெயர்பெற்றனவென் றறிக. முறையிலுறுமென்ப தீரிடத்துங்கூட்டுக. தன்மாத்திரைபூ தமெனச் சாதியொருமையாகச் சொல்லப்படுதலி னதனிலென் ரூர். இனி யாகாயமுதலாக வொவ்வொரு குணமேறுமென்றதெ ன்னை? ஆகாயமொன்றுக்குமே சத்தகுணமுள்ளது. மற்றைநா லுக் குமில்லை. ஆகாயத்தினுடைய வாசரியத்தாலே யுண்டானததனை யென்று வைசேடிகன் முதலியோர்சொல்லின் ஆகாயத்துக்கெதி ரொலி. வாயுக்குச்சகசகாதியொலி. அக்கினிக்குத் தமதமாதியொ லி. அப்புவுக்குச் சலசலாதியொலி. பிருதிவுக்குக் கடகடாதியொ லி. இப்படிப் பிரத்தியட்சமாக வெவ்வேறு சத்தங்கேட்கப்படு கையா லவர்மதமுமடாது.

இங்ஙனஞ் சொல்லிவந்த மாயையா லுண்டான சரீரத்தை

யான்மாக்கள்பொருந்திக் கன்மத்தைப் புசிக்கையிலேலே யந்தக் கன்மத்தினியல்பு மேற்செப்பு ணன்கிற லருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

நண்ணியிடு மூருவதனுக்கேதுவாகி நானுபோகங் களாய்நாசோற்பத்தி, பண்ணிவரும நாதலாலநாதிய ாகிப் பலவாகியனுக்கடொறும்படர்வதாகி, யெண்ணி வருமனவாசகன்மத்தாவியற்று மியல்பினதாய்மதிக தமாயிருபயனும்பாவ, புண்ணியமாய்ப்புலர்காலமா யைமேவிப் பொருந்துமிதுகன்மமலம்புகலுமாறே.

திங்குநலனுஞ் செய்தவாறுடையும்
பாங்குறுவினைப் பாரித்துரைத்தது.

(இ-ள்.) நண்ணியிடு மூருவதனுக்கேதுவாகி — ஆன்மாக்க ளெடுக்கப்பட்ட வுடம்புகளுக்கு முன்னிலைக்காரணமாய். அஃதாவது, ஆன்மாக்கள் யாதாமொரு சரீரங்களை யெடுக்குமிடத்து முற்செய்த கன்மங்களுக் கேதுவாக வெடுக்கையிலேலே யப்படிச்சொன்னதெனவறிக

நானுபோகங்களாய் — பலவிதமான புசிப்புகளை யுண்டாக்குவதாய்.பலவிதமாவது ஆன்மா விந்திரியங்களைக் கொண்டு விடயங்களைக்கொள்ளுமிடத் தெவ்வொரு விடயங்களிலே வெகுவிதமான கன்மங்களைப் புசிக்கையிலேலே யப்படிச் சொன்னதெனவறிக

நாசோற்பத்தி பண்ணிவரும் — ஜநநத்தையு மரணத்தையு முண்டாக்கிவரும். அஃதாவது, ஆன்மாக்கள் கன்மத்துக்கீடாக வெடுத்தவுடலுக்கு நாசமு மேலெடுக்கு

மூடலுக்குற்பத்தியு முண்டாக்கி வருமென்ற தெனவறிக. அன்றியும் புசித்த கன்மத்துக்கு நாசமு மேற்புசிக்குங் கன்மத்துக் குற்பத்தியு மாமெனவறிக

ஆதலா லநாதி யாகி

ஆகவிவ்வனம்வருகிற தநாதியேயுள்ளதாம். அநாதியென்றது ஆன்மாவுள்ளவன்றே யிந்தக் கன்மமுள்ளதென்ற தெனவறிக

பலவாகி

பலபேதங்களா யிருப்பதாய். பலபேதங் களாவன ஆன்மாக்கள் கன் மத்துக் கீடாக வெடுக்குமுடல்களுக் கந்தந்தவுடலுறும் வடிவு நிறம் சாதி ஒழுக்கம் நெறி உணவு சுகம் துக்கம் ஆயுள் என்னிவ்வனம் பலவகைபோகை யாலேயப்படிச் சொன்னதெனவறிக

அணுக்கடொ றும் படர்வதாகி

ஆன்மாக்கடோறுஞ் சென்று பொருந்துவ தாய். அஃதாவது, ஆன்மாக்க ளெடுக்குமெடுக்கு மச்சுகடோறு மதற்கதற்கேற்ற புசிப்புக ஊக்கொடுத்து நிற்கையாலேயப்படிச்சொன் னதெனவறிக

என்னிவரு மனவாசகன் மத்தா லியற்று மியல்பி னதாய்

நினைக்கப்பட்டுவருகிற மனதிலுவும் வாக் கிலுவுங் காயத்திலுவுஞ் செய்யப்பட்டவிய ல்பினையுடையதாய். அனவபாவன, மனதிலுனி னக்கை வாக்கிலுற்சொல்லுகை காயத்திலு ற்செய்கை யெனவறிக

மதிகதடாய்

நிற்குங்காலம் புத்தியிலேநிற்பதாய். புத்தி யிலேநிற்பதாவது டாதொன்றிலே புத்திநிச்ச யிக்குமிடத்துக் கன்மத்துக்கிடாக நிச்சயிக் கையா லப்படிச்சொன்னதெனவறிக

இருபயனும் பாவ புண்ணியமாய்

இருவகைப்பயனுசச் சொல்லப்பட்ட புண்ணியபாவங்களாய். இருவகைப்பட்ட பயனுவது ஹிதாஹிதங்களிலே விருப்பு வெறுப்புண்டாய் அதனுலே புண்ணிய பாவங்கள் கட்டுப்பட்டு அதனுலே யின்பதுன்பங்களாகிய சுவர்க்கநரகங்களை யநுபவிக்கையாலே யப்படிச்சொன்னதெனவறிக. இங்ஙனஞ்சிருஷ்டிகாலம் பிரபஞ்சங் காரியப்படுமெனவறிக.

புலர்காலே மாயையேமேவிப் பொருந்தும்

சங்காரகால மாயாகாரணத்திலே சென்று பொருந்தும். அஃதாவது, முற்கூறிய பிரபஞ்சமுமதனேடுக்கூடிநிற்கு மான்மாக்களுமாயாகாரணத்திலே யொடுங்குகிற சங்காரகாலம் இந்தக்கன்மமுமந்தக் காரணமாயையிலே சென்று கூடுகையாலப்படிச்சொன்னதெனவறிக. அன்றியும் பொருந்துமென்ற பதத்துக்கு வேறுபொருட்கூறவேண்டுகிலந்தமாயாகாரணத்திலே யொடுங்கினவான்மாக்களேயுங் கூடுமென்று பொருளுரைப்பினுமாம். அஃதெங்ஙனமென்னில் இந்தக்கன்மங்காரியப்படுங்காலத்து அனுக்கடோறும் படர்வதாகி என்றுமையா லொடுக்குங்காலத்து மொக்கவொடுங்குமென்னுங் கருத்தையும்பற்றி யப்படிச் சொன்னதெனவறிக

இதுகன்மமலம் புகலுமாறே.

இங்ஙனஞ் சொல்லப்பட்டது கன்மமலத்தின்முறைமையாம். எ-று. இந்தப்பதத்துக்குப் புகலுமென்று முன்னேவைத்துப் பொருளுரைத்ததெனவறிக. அல்லதூஉம் இதுகன்மமலத்தைச்சொல்லும் வழியாமென்று பொருளுரைப்பினுமமையும்.

வி-பு. புலர்காலமென்றசொல் சிருஷ்டிகாலத்துக்கும் படுமென்று இச்செய்யுளைச் சிருஷ்டியொன்றையுநோக்கிச்சொன்ன

தென்பாருமூளர் அதுபொருளல்லவெனவறிக. அதுவேனென்னில் புலர்காலென்றசொல் அழிதலாகையால் சங்காரமென்பதே பொருளெனவறிக. அன்றியும் யாதாமொன்றைச் சொல்லுமிடத்துத் தோற்றமு மொடுக்கமுஞ்சொல்லவேண்டுகையால் மற்றுள்ளபத மெல்லாஞ் சிருஷ்டியைச்சொல்லிப் புலர்காலை மாயைமேவி என்றபதத்தைச் சங்காரகால மாயாகாரணத்திலே கன்மங்கூடுமென்பதே பொருளெனவறிக. அப்படிப் புலர்காலமென்பது சிருஷ்டிக்கும் படுமென்று பொருளுரைத்த தெதைப்பற்றி யென்னில் திருவாசகத்தில். "ஒன்னித்திலநகையா யின்னம் புலர்ந்தின்றே." எ-ம். "போனதிசைபகரா தின்னம்புலர்ந்திண்றே." எ-ம். வருமேதுக்களைப்பற்றிப் புலர்காலுஞ் சிருஷ்டிகாலமென்றதெனவறிக. அதுவும் புலர்தலுலர்தலாகையால் சங்காரகாலத்துக்குச் சொல்லப்படுமென்பதே பொருளெனவறிக. புலர்தல் சங்காரமென்பதற்கு. பி-ம். காளத்தியக்தாதியில். "அலரோனெடுமா லமரர் கோன்மற்றும், பலராய்ப்பலைத்தங் காத்தாண்டும் புலர்காலத், தொன்றுகிமீண்டும் பலவாகிநிற்கின்றுன், குன்றுத சீர்கயிலைக் கோ." எ-து. கண்டுகொள்க. இதனுள் புலர்காலத்தொன்றுகி. எ-து. சங்காரகாலமென்பதற்குக் கண்டுகொள்க. ஆகையாலிங்ஙனம் புலர்காலமென்பது சங்கார காலத்துக்குச் சொல்லுமதே பொருளெனவறிக. இச்செய்யுளில் புலர்காலமாயைமேவி என்பதைச் சங்காரகாலத்துக் காரணமாயையிலே கன்மங்கூடுமென்பதற்குச் சொல்லுமதே வழக்கெனவறிக. அது வழக்கென்பதற்கு இந்நூலெப்பின்சென்ற நூலாகிய திருநெறிவிளக்கத்திலு மிச்செய்யுளுக் கெதிரடை விருத்தமாகிய. "தொல்குரம்பைகாரணமாய்த் தொகையளவுபடாத தன்பமுடனின்பமாய்த் தோற்றமுஞ்—னீறு, மல்கியிடும்வழியதனு னித்தமாகி மன்னுயிர்கடொறுமருவிப் பின் னுமற்றுப், பல்விதமாயுளைநினைவு தொழிலாற்செய்யும் பண்பினை

தாய்ப் புத்தியினில்வந்தமையும் போன்மை, நல்வினைதீவினையாகிக் கடைநாண்போயை நண்ணியிநி மிதுகன்மநாட்டிலன்றே." என்ப தனுள் கடைநாளென்றது சங்காரகால மாகையால் இந்நூலில் ந ண்ணியிடமுருவதனுக் கேதுவாகி என்றசெய்யுளுக்கு இந்தத் திரு ஞானவிளக்கத்தின் செய்யுளைப் பதந்தோறும் அந்தப் பதத்தையு வமித்துக்கொண்டு புலர்காலமாயைமேவி என்றதற்குக் கடைநா ண்மாயை நண்ணியிடமென்ற பதத்தைக் கண்டுகொள்க. ஆகையா லிச்செய்யுளில் புலர்காலமென்றது சங்காரகாலமே பொருளென் பதை யநுபவத்தாற் கண்டுகொள்க. அப்படியாதலால் மாயையுங் க ன்மமுங்கூடிலால் ஆன்மாவுக்கு ஜீவிப்புண்டாமென்று நூல்களி லே சொல்லியிருக்க ஒருஜீவிப்புடற் றொடுங்கிக் கிடக்கிற சங்கார காலமாயையிலே கன்மமுங் கூடுமென்னலாமோ வென்னில் அப் படிஜீவிக்குமென்றதுஞ் சிருஷ்டிகாலங் காரியமாயையாகிய கலை யாதித்துவங்களோடுங் கூடினவிடத்து ஜீவிப்புண்டாமென்கிற தொழியக் காரணமாயையோடுங் கூடினவிடத்து ஜீவிப்பில்லை யெனவறிக. அதற்கநுபவமேதென்னில் ஒருவிதையிலே மூவையு ண்டாதலால் மந்தவிதையைவிட்டு மூளைதோன்று மவதரத்து ஜீ விப்புண்டாமதொழிந்து அவ்வளவு மந்தவிதைக்குள் மூளையடங் கிக்கிடந்து ஜீவியாமற் கிடக்குமதுபோல வெனவறிக. அப்படியா தலிந்தக்கன்மமும் மாயையைப்போலே தனித்தொரு மூதலாயி ருக்கச் சிருஷ்டிகாலமுஞ் சங்காரகாலமும் மாயையோடுங்கூடி நிற் குமென்பானேனென்னிலப்படியே கன்மந் தனியேயொருமூதலா யிருந்தாலும் மற்றுள்ளமலங்களைச் சார்ந்துநிற்பதொழியத் தனித் துநில்லாதாகையாலப்படிச்சொன்னதென வறிக. அப்படிக் கன் மமலமானது மற்றுள்ள மலங்களையுஞ் சார்ந்துநிற்குமென்பதற் கு. பி-ம். சித்தியாரில். "இருவினையாகாதியாதி யிபற்றலாலுயிர்வா லக்தம், வருமலஞ்சார்ந்துமாயா வுருவுகண் மருவியார்ந்தித், தரு

செயன் முறைமையாலே தான்பலதேதங்காட்டி, யருவதாய்நின்ற ரன்ற ரூபாயினமர்த்துசெலலும்." என-து. கண்டு கொள்க. இதி ல் மாயாவுருவுகள் மருவியார்த்து என்றமையால் சிருஷ்டிகாலங் காரியமாயையோடுங் கன்மங்கூடிநின்று காரியப்படுமென்பதொ ழிபக் காரணத்திலுங் கூடிநிற்குமென்பதற்கு வழியே தென்னில் ஆனமாக்களுக்கு மும்மலங்களுங் கூடிநிற்கும் அது "மும்மல மெ ல்லினுக்கு மூலையொடு தவிடுமிப்போல்" என்றமையால் கன்மத் துக்குவமை மூலையும் மாயைக்குவமை யுமியுமாதலா லந்தநெல்லி லுமிபோலுல் மூலஜீவியாதாற்போலக் கன்மமு மாயையாதார மாக வொடுங்கி மீளவு மாயையாதாரமாக ஜீவிக்குமென்பதை ய றுபவத்தாற் கண்டுகொள்க. அன்றியும் அந்தநெல்லு மக்கினியிலு லே வெதுப்புண்டவவதரத்து உமிகிடந்தாலு மூலையெழாதாகை யாற் கன்மமில்லாதபொழுது மாயையும் ஜீவிப்பற்றுப்போமென் ப தை யறுடவததாற் கண்டுகொள்க. ஆகையால் கன்மத்துக்கீடா கமாயையுண்டாமென்றும் மாயைக்கீடாகக் கன்மமுண்டாமென் று மிரண்டு மொன்றைவிட் டொன்று நில்லாதென்று நூல்களிற் சொன்னது மிப்பொருட்பற்றி யெனவறிக.

இனியிங்ஙனஞ் சொல்லப்பட்ட கன்மமானது அரூபமுமாய் ஜடமுமாயிருக்க அணுக்கடொறும் படர்வதாகி யென்று அறிவாயு ள்ளவான்மாவை ஜடமாயுள்ள கன்மம்பொருந்துமென்பதற்கு வ ழியெதென்னில் அந்தக்கன்மமானது ஜடமாயிருந்தா லு மான்மா வை மூத்தியிலவிட்டு நீங்குவதொழிந்து மற்றவிடமெல்லா மா ன்மாவை விடப்படாததானதுபோ லப்படிச்சொன்னென வறிக. இப்படிக்கன்மம் ஜடமாயிருந்தும் ஆன்மாவை விடப்படாததெ ன்பதற்கு. பி-ம். திருக்களிற்றுப் படியாரில் "இன்றிங்கதேசனை மா மிவ்வினைக ளொரிரண்டிற், சென்று தொடருமவன் சென்றி டத்தே." என-து. கண்டுகொள்க.

இதனுற்சொல்லியது கன்மமலமானது சிருஷ்டிகால மான்மாக்க ளெடுக்கப்பட்ட தேக்ங்களுக்கெல்லா முன்னிலையுமாய்ப் புசிக்கப்பட்ட போகங்களுக்கெல்லாங் காரணமுமாய்த் திரிவித கரணங்களிலுலே புண்ணிபபாவங்களை யிபற்றுவித்து அதனுலே ஜநமரணங்களை யுண்டாக்குவித்துநின்று சங்காரகால மாயாகாரணத்தோடுங்கூடிநிற்குமென்னுமுறைமையை யறிவித்தது.(க-ச)

வேறு— இனிக்கன்மமலத்தைநான்குசெய்யுளாலுணர்த்துவான் மூடங்கினரவற்றுளிது கன்மமலத்தின் றன்மை பொதுவகையா லுணர்த்திற்று.

கன்மமலம்-கன்மமலமானது,—கண்ணியிடி முருவதனுக்கே துவாகி- ஆத்மாக்கள் பொருந்தப்படுமுட்டம்பிற் கோர்காரணமாய்,—நாலுபோகங்களாய்-நாலுவிதமான போகங்களையுண்டையதாய்,—நாசோற்பத்தி பண்ணிவரும்-நாசத்தையு முற்பத்திசையும் பீஜாங்குரநியாயமாக வுண்டாக்கிவரும்,-- ஆதலாலுதியாகி-ஆகையினுலேதான்றுதொட்டுவருவதாய்,—பலவாகி - பலவிதப்படுவதாய்,—அணுக்கடொறும் படர்வதாகி - சிருஷ்டி-காலத்துடலெடுக்குமிடத்துச் சூக்குமமாயாதத்மாக்கடோறுஞ்செல்வதாய்,—எண்ணிவருமனவாசகன்மத்தாலியற்றுமியல்பினதாய்-நிஷவுபரந்தமனவாக்குக்காயங்களால வுண்டாக்கத்தக்க மூறைமையையுடையதாய்,—மதிகதமாய்-திதிகாலத்தி லாத்மாக்களுக்கு ஜீவிதமாகப் புத்திபையடைந்திருப்பதாய்,—இருபயலும் பாவபுண்ணியமாய்-இரண்டு பிரயோசனமான சுவர்க்கநரகங்களை நுண்டாதற்குக்காரணமான புண்ணியபாவங்களாய்,—புல்காலே மாயைமேலிப்பொருந்தும்-ஒடுங்குங்காலத்தி லந்தமாயையிலேயொன்றுபட்டுப்பொருந்தும்,—இதுபுகலுமாறு-இம்மாகமங்களிற் சொல்லும்படி. எ-று.

புண்ணியபாவமாயெனமாறுக. மேவிப்பொருந்தும்என்றது குழிந்தாழ்ந்தகண்போலநின்றது. நாசோற்பத்தி பண்ணிவருமென்பதற் கழிவதுமாவதுமா யென்றுரைப்பாருமுளர். அதற்குப்பண்ணியென்னும் பொருள்படாமை யெனவறிக. வாசவடசொற் றிரிவு. கண்மமாகுபெயராய்க் காயத்தின்மேனின்றது.

இங்ஙனமநாதியாகச் சொல்லப்பட்ட சண்மமாணது ஒவ்வோருடம்புகளோடுங்கூடிக் காரியப்படுமிடத்து மூவகைக்கண்மமாக நின்று காரியப்படுமுறைமையை மேலருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

கன்மமெநிதிரிவிதநற்சாதியாயுட்போகக் கடனெ
தனவருமூன்றுமுழுயிரான்றிற்கலைத்த, றொன்மையெ
துழல்லதுணவாகாதாறுந் தொடங்கடைவினைடுபா
தேதேதான்றுமாறித், தன்மைதருதெய்விகமும்பவுதி
கமான்மிகமாந்தகையிலுறுமதேசதனசேதனத்தாலுஞ்
சாருந, ன்மையெயாடுதீமைதருசேதனறுக்கிவனறு
ழலைதனாழ்வினையாநறுகுந்தாசை. (கள)

ஆயுவும்போகமுஞ் சாதியுமாய்வினை
மாயையுருவில் மருவுமென்றது.

(இ-ள்.) கன் மமெநிதிரிவிதம் நற்சாதியாயுட் போகக் கடன தெனவரும் — ஆன்மாக்களுக்குவந்துகூடுங் கன்மத்தின் வழி மூன்று பிரகாரமா யிருக்கும். அவையாவன நல்லசாதி பொல்லாச் சாதியென்றும் ஏனவாயுள் குறைந்தவாயுள்ளன்றும் நல்லதேபோகம் பொல்லாப்போகமென்றும்வாராநிற்கும். இனவெயெப்பொழு துஞ்சண்டாளனெனல்விப்

மூன்று முயி ரொன்றிற் கலந் தநெருன்மை

இந்தக் கன்மங்கண் மூன்றும் ஒரான்மாவி லே கூடுகிற தநாதியேயுள்ளதாம். சாதியுமாயு ரு முன்னேயுள்ள ஆழாலும் போக மிப் பொழுதுண்டான முயற்சியல்லவோ வென் னில்

அது முல்ல; துணவாகா

அந்தப்புசிப்பு மூழ்வினாலல்ல துண்டா காது. அதுதான் முன்பே யார்ச்சித்த முறை யிலே வருமோ முற்பிற்பாடாக மாறிவருமோ வென்னில்

தாணும்

அப்படியார்ச்சித்த வொழுங்கிலே வருகிற துமுண்டு. அன்றியும்

தொடங்கடை வி னடையாதே தோன்றுமாறி

அப்படிவாராமல் வன்மைமென்மைகளுக் கிடாக மாறிவருகிறதுமுண்டு. அப்படி வருகி ற கன்மத்தின் விதி யெங்ஙனேயென்னில்

தன்மைதருதை யிக மூற்பவுதி கமான்:திகமாந் தநையிலுறும்

இயல்பிலே வரப்பட்ட கன்மங்கள் தெய் வத்தாலும் பஞ்சபூதங்களாலும் ஆன்மாக்க ளாலும்வரும். அவைவருமிடந்து

அசேதன சே தனத்தாலுருச் சாரும்

அறிவில்லாதவைபாலும் அறிவுள்ளவையா லும் வரும். ஆகையால்

நன்மை யொடி தீமை தருசேத னனுக் கிவனுணு டுல்

இங்ஙன நன்மைதிமைகளோப் பொருந்திவ ருகிற ஆன்மாவுக் கிவ்விடத்திற் புசிட்பை வி சாரிக்கில்

அது முழ்வினை யாதனுகுந்தானே

மூன்ஜகத்திற் புசிக்கச்செய்தே யேனை வாகாமியந்தானே இந்தஜகத்தைகளும் புசிப் பர்வேண்டி பொருந்தம். எ-று,

நு-ம். மூன்றுமுயிரொன்றிற்கலத்தல். எ-கு. ஓரான்மாவி னிடத்திலே மூன்றுகாரியபந்திற்குமென்று பொருட்கூறியதெதென் னில் ஆன்மாக்கள் யாதாமொரு சரீரங்களைக் கன்மத்துக் கீடாக வெடுக்குமிடத்து யாதாமொரு சரீரவர்க்கங்களும் வயதுகளும் பு சிப்புகளுமல்லாம லெடாதாகையாலே யப்படிச் சொன்னதென வறிக.

இனியதுழல்ல தனவாகா எ-கு. இப்பொழுதுண்டான பு சிப்புகளு மூழாலொழிய வுண்டாகாதென்று பொருட்கூறியதற்கு வழியே தென்னில் ஆன்மாக்கள யாதாமொரு கன்மங்களைப் புசி க்குமிடத்து வந்துகூடினத்துக்குந் தவறுவருகையாலு நினையாத து வந்துகூடுகையாலும் ஊழாலல்லது புசிப்புண்டாகாதென்ற தெனவறிக. இதற்கு. பி-ம். திருவள்ளுவப்பயனில். "ஊழிற்பெ ருவலியாவுளமற்றொன் று-சூழினுந்தான் முந்துறும்" எ-து. கண்டு கொள்க.

இனிதொடங்கடைவி னடையாதேதொன்றுமாறி. எ-கு. க ன்மத்தின்வழி வன்மை மென்மைகளுகதீடாக மாறிவருகிறது மு ண்டென்று பொருட்கூறிய தேதென்னில் முந்தச்செய்த கன்மம் பிற்பட்டும் பின்புசெய்தகன்ம முற்பட்டும் வருகையாலே யப்படி ச்சொன்னதெனவறிக. அதுவெங்ஙனமெனில் ஒருவன் பயிர் செய்யுமிடத்து முந்தவல்விதையை விதைத்துப் பின்பு இளவிதை யைவிதைத்தாலும் அந்தவிளவிதை முந்தப் பயன்படுமாறுபோல க் கன்மத்தின்மிகுதி முந்தப்பயன்படுமெனவறிக.

இனி தன்மைதருதெய்விகமுற் பவுதிகமான்மிகமாம். எ-கு. தெய்வத்தாலும் பஞ்சபூததத்தாலும் ஆன்மாக்களாலும் வருமென் றதற்கு வழியேதென்னில் தெய்வீக கன்மமாவது மாதாவின் கரு ப்பக்கோளகையிலே யிவனிருக்குமிடத் தண்டான விதனம் ஓ ங்காரத்திலுண்டான விதனம் டமதண்டம் நமகவேதனை இவை

மூதலாகவுள்ளவையிற்றிலே தூக்கப்படுதலெனவறிக. இனிபஞ்ச பூதங்களால் வருகிறபௌதிகன்மமாவது குளிர் வெப்பம் மழை காற்று மின் இடி சுவர்விழுதல் கல்விழுதல் இவைமுதலாக வுள் ளவையிற்றிலே தூக்கப்படுதலெனவறிக. இனி ஆன்மீகன்மம் ஆ ன்மாக்கள் வருகையாவது சரீரத்திலும் மனத்திலுந் தூக்க ப்படுகை. இதற்குவழியேதென்னில் தந்தஞ் சரீரத்தி லுண்டான வியாதிகளிலும் மிருகங்களிலும் பறவைகளிலும் இரா சூதராலும் பசாசுகளாலும் கள்வராலும் மற்றுள்ளமனிதராலும் இவைமுதலாயுள்ள சரீரதுக்கங்களெனவறிக. இனி மற்றமே தூக்கமாவது பிறருடைய கல்வியுஞ் சௌந்தரியமுஞ் செல்வமுங் கண்டு டொழுமை அபிமானங்கெடுதல் எழுந்தது புத்தியாகச்செ ய்தல் கோபியாய்த்திரிதல் என்னுமிவைமுதலாயுள்ளவை யெனவ றிக. மற்றச்சுகன்மங்களும் இங்ஙனஞ்சொல்லிவந்த வொழுங் கிலே கண்டுகொள்க. ஆக விங்ஙனஞ் சொல்லப்பட்ட மூவகை தூக்கமாகிய கன்மங்களுக்கு பி-ம். ஞானமிர்தத்தில் "ஆதிதெய் வீக மாதிபௌதிக- மாதியத்தியான்மீகமென்ன - வோதிபதுக்க மூன்றி னத்தியானமீக - மெய்யிம்மனத்தி லிலயமிலிரண்டே-வளி யிற்பித்தில் விளையாவிளையி - னூனுகுதொழுனையி லுதிக்கக்கோ ட்டில் - வெற்பிற்சூலையின் மக்களின்விலங்கி-னலகையிற்கள்வரி ம் பறவையியினிருதரில் - மைந்தரின்மகளீர் மனைத்திடைதணப் பிற் - பேரறம்வளர்ப்பிற் பெருந்திருநுகர்விற்-சீரியபடாக்கை மா தியர்மாசு - மனத்துறுதுயர நினைப்பருஞ்சோக - மறிவுருவாக்க மடைவனற்பொருமை - மான்மாக்காலம் பூணுதமறுத்த - விச் சையைநினைத விருஞ்சினமிகுத்த - லினையவைமுதலா நினைவருந் திரத்த - வாதிபௌதிகஞ் சீதமாமழை - யுருப்பவிர்வேனி னுட் குவருகடுங்கா - லிருள்கிழிடிமின் பெருவிறலசனி - மன்னுயிர்க் குறுகண் நின்னியாறருந்த - லாதியாயவீவருந்திறத்த - வாதிதெ

ப்வீகம் பேதையாவையின் - கருக்குழியழுங்கல் பிறப்புறும்பே
து - திரைவருந்தீமை வரைவில்பேதமை - மடங்கலாருயிர் தொ
டங்கினவவ்வலி - யாவரும் விழையாக் கொள்வாய்நிரயத்து-வீ
ழ்ந்தனமொழாஅ வான்கழிதுன்ப - மினையமாலைய துயரிடைவிலா
கர் - கருங்கைக்கைமைக் களிறுதைத்த் திரும்புலப்-பெரும்படை
விரிந்து சூழ்ந்திருந்தா - நாற்கதிப்பவனி யுலா-யார்த்தவிழ்திரம்
பிற் போற்றுமதி புரிந்தே" ள-து. கண்டுகொள்க. அன்றியும் இங்
ஙனங் கூறிவந்த மூவகைதுக்கஞ் சிவாகமத்தில் கிரந்தத்திலே
யெடுத்து சதிர்த்தின சங்கிரகத்திலே சேர்ந்த கிரந்தத்தினுங்
கண்டுகொள்க. அந்தக் கிரந்தத்தினத்தமும் மூற்கூறிய ஞான
மிர்தத்தினத்தமும் ஒப்புநோக்கிக் கண்டுகொள்க.

இதனாற்சொல்லியது கன்மமானது காரியப்படுமிடத்து
ஆயுளும் போகமும் சாதியுமாகநின்று காரியப்படுமென்றும்
அது ஆழ்வினையாலொழிய வராதென்றும் அது வருமிடத்து
ஊர்ஜித்த வொழுங்கிலே வருமென்றும் அன்றியும் வன்மை
மென்மைகளுக்கீடாக மாறியும் வருமென்று மதுதெய்வீக
கன்மமாகவும் பௌதீககன்மமாகவும் ஆன்மீககன்மமாகவு
ம் வருமென்றும் புண்ணியபாவங்களுக்குடனாய் நிற்கிற வா
ன்மாக்களுக் கிவையெல்லா மூழ்வினையால்வருமென்றும் வ
ருமுறைமையை யறிவித்தது. (கஎ)

வேறு—இம்முந்தக்கன்ம முடிவுறுநின்று காரியப்படு
முறைமை யுணர்த்திற்று.

கன்மநெறி-கன்மத்தின்வழி,—நற்சாதி யாயுட்போகக்
கடனெதனத் திரிவிதம்-நல்லசாதி வாழ்நாள் புசிப்பான மு
றைமையை யுடையதென்னும்படி மூன்றுவிதமாம்,—வருமூ
ன்று முயிரொன்றிற் கலந்தருன்மைய தது-இங்ஙனம் வருமூ
ன்று மோராத்மாவிலே கூடிப்போதுகிறது பழையதாயிருக்

கும்,—ஊழல்ல தனைவாகாதானும்-அதுதான் முறையிலன்றி ப் புசிக்கலாகாதாயினும்,—தொடங்கடவி னடைப்பாதே தென்றுமாறி-ஆர்ஜித்த முறையிலே கூடாமல் வன்மை மென் மைகட் கிடாக மாறிக்கூடும்,—தன்மைதரு தைவிகமுற் பூவுதிக மான்மிகமாந் தனையிலுறு மசேதன சேதனத்தாலு ஞ்சாரும்-இயல்பாகிய வாதிதைவிக முதலாக வாதிபவுதிக மாதியாத்மிகமான கூறுபாட்டாற் பொருந்துகின்ற யசேத னசேதனங்களாலுஞ் சுகதுக்கமாய்ப் பொருந்தும்,—நன் மையொடு தீமைதரு சேதனனுக் கிவனுணர்டிவன்-இப்படி நன் மை தீமைகளைச் செய்துவருகின்ற வாத்மாவுக் கிவ்விடத்து ப் புசிப்பை விசாரித்துப்பார்க்கில்,—அதனூழ்வினையா னவை ருந்தானே - அந்தக் கனமங்களைப் புசிக்கு முறைமையிலே மேலுஞ் சனனமுண்டாகைக்குக் கன்மமுண்டாகா நிற்கு ம். எ - று.

மேலும் சேதனத்தாலுமென்ற வும்மை இறந்தது தழீஇ யவெச்சவும்மை. மாறித்தோன்றுமென்க. தெய்வத்தால் வ ருவது தைவிகம். பூதத்தால் வருவது பௌதிகம். ஆத்மாக் களால் வருவதாத்மிகம். இவற்று ளாதிமிகமிருவிதம். அவை சாரீரகமு மானசமு மெனவாம். சாரீரகமாவது குன்மங் காசமுதலான வியாதிகளால்வருவது. மானசமாவது சோ கம் அசூயை மாச்சரியங்களால் வருவது. ஒ எண்ணெ.

இங்ஙனமெடுத்தவுடலிலே புசிக்கிறதெல்லா மூழ்வினை ரல் மேலைக்கு ஜாதத்திற்கேதுவாகிய ஆகாமியமுண்டாகி றவகை யெப்படியென்றுவினவ மேலருளிசெய்வா னெடுத் தக்கொண்டருளியது.

மேலைக்கு வருவினையே தென்னிலென்கண் விருப் புவெறுப் பெனவுறிய வ் வினையுமெல்லா, மூலத்த வி

ஊப்பயில்வா மெள்ளிஞமேன் மூற்றியதன் பயனு னக்கு மூளக்குமென்பர், நூலத்து வினைகளிரு நிற னைகும்புந்தி நண்ணுத வினைநலுகும் வினையெனவொ ன்றிரண்டா, மேலத்தா னிதமகித மாமிதனுல்வழுவா தெய்திபிம் புண்ணியபா வங்களென்றே. (கஅ)

மன்னியவிருப்பு வெறுப்பாம்வல்வினை
பின்னும்வினையும் பெற்றியையுரைத்தது.

(இ-ள்.) மேலுக்குவருவினையெதன்னில் அங்கண்விருப்பு வெறுப்பினவறி அவ்வினையுமெல்லா மூலத்தவினைப் பயில்வாமென்னில் நாமேன மூற்றியதன் பயனுனக்கு மூளக்குமென்பர் நூலத்து வினைகளிருநிறமுகும்

இந்தவுடலி லுண்டாகிய புசிப்பெல்லா மூழுழையாகில் மேலுக்கு ஜநமுண்டாகத் தக்கன்மத்துக்கேது வெப்படியென்னில் அந்தவூழாகிய சுகதுக்கம் புசிக்கிறவுதரத்திலே யுண்டாகிய பிரியாப்பிரியக்கள் வித்தாக மேலுக்கு ஜநமுண்டா மென வறிவாயாக

அப்படிப்பிரியாப் பிரியப்பட்டுப் புசிக்கிறது மூன்வினவினையின்பகுதி யல்லவோ வென்னில் அப்படியாகிலும்

நாமூன்புபண்ணின கன்மமல்லோ விப் பொழுது புசிக்கிறோமென்று விசாரியாமல் நாம்செய்தாம் பிறர்செய்தாவென்று நீசுட்டுகையாலே யந்தச் சுட்டாலுள்ள பயன் மேலுக்குற்பனிக்குமென்று பெரியோர்கள் சொல்லுவார்கள். ஆகையால்

பிரபஞ்சத்திற் புண்ணியபாவங்களிரண்டுவகைப்பட்டிருக்கும். அஃதெங்ஙனேயென்னில்

புத்திகண்ணை கயிஞை நணுகும் வினை யென வொன்றி ரண்டாம்

புத்திபூர்வமாகச் செய்ததென்றும் அபுத்திபூர்வமாகச் செய்ததென்று மிரண்டு வகைப்பட்டிருக்கும். என்றியும் புத்திக்குப் பொருந்திய காரியமென்றும் பொருந்தாத காரியமென்றுஞ் சொல்லவுமாம். அதனை விசாரிக்குமிடத்து

ஏலத்தானித மகிதமாம்

அநாதியே ஹிதமென்று மநாதியே மிரண்டுவகையாம்

இதலல்வழு வாதெய்தியிடும் புண்ணிய பாவங்களென்றை.

இந்தஹிதத்தாலுங் தபபாதற்பொருந்தியிடும் புண்ணிய கன்மமும் பாவகன்மமும். எ - று.

வி - பு இப்பொழுது புசிக்கிறதெல்லாம் முறையாலும் மேலைக் காகாமியமுண்டாகிற தெப்படியென்று கேட்டதற்கு இந்தப்பிராகாரத்தம் புசிக்கச்செய்தே யுண்டானவினைப் பிறப்பாகிய ஹிதாஹிதங்களாலே ஆகாமியம் கட்டுப்படுமென்று ஆசாரியர் விடைகொடுத்தருளிற்று. பி-ம். தத்தியாரிம். "முற்செயல்வினையிந்த மூயற்றியோடுதபவித்தாவிச்செயல்பலிக்குமாறென்னிதமிதங்கன்மமுன்னை, மச்செயலாறு லிங்கு மனவுசெயின்மேலைக்காகும், பிற்செயாதுதபவிட்டு நின்றுபின்மூடருஞ்செய்தி." எ - ம். அந்தவினைப்பிறப்பெல்லாம்மெதாட்டு யாருமென்பதற்கு. பி - ம். தத்தியாரிம். "மேலைக்ருவித்தாமாகு வினோர்த்தனை யுனையுணர்வாக், ஞாலத்துவருமாபோல நாஞ்செயுமவினை கலைவல்ல, கோன்பலமாச்செய்யு மிதமிதங்கன்மமுன்னை, மூலத்தகாகியை யென்றும் வந்திடுமுறைமையாடே." எ-ம். என்பதிகாரம். இப்படி முன்புசெய்த கன்மத்தைக்கொண்டாலும் விட்டாலும் புசிக்கிறமென்று விசாரியாமல் கன்மசம்பந்தத்தைப் பற்றி

செய்தாரென்று சுட்டும்வகையா லந்தச்சுட்டாலுள்ள பயன் மேலைக்கு வினவாமென்பதற்கு. பி ம். சித்தியாரில் "யான் செய்தேன் பிறர்செய்தா ரென்னதியானென்னுமிக்காணை ஞானவெரியால்வெதுப்பிநிமிர்த்தந், தான்செய்வேவந்நிட வத்தத்துவன்முனேரதனையளித்துமுன்னிற்கும் வினையொ ளித்திட்டோடு, நான்செய்தேனெனுமவர்க்குத்தானங்கின்றி கண்ணுவிக்கும்போகத்தைப் பண்ணுவிக்குங்கன்ம, மூன்செ ய்யாஞானந்தா னுதிப்பினல்லா லொருவருக்குமியானென தின் கொழியாதன்றே." எ-து. கண்டுகொள்க.

ஞாலத்துவினைகளாகிய விருவகைப்பயனுகிற புண்ணிய பாவங்கள் புத்தி பூர்வத்தாலும் அபுத்திபூர்வத்தாலு முண்டாமென்றதெதென்னில் அபுத்திபூர்வமாவது ஒருபொல்லாங்குகளிலாவது நன்மைகளிலாவது மனதும்வாக்குந் தன்னையறியாமலாடலுற்பின்பு நம்மையறியாடலிப்படிவந்தாயிருந்தனைக் கொள்கை. புத்திபூர்வமாவது வொருவர்க்கொரு நன்மை தீமைகளைச் செய்யுமிடத்து இவர்களுக்கென்னபொல்லாங்கு செய்வேவாமென்று மென்னநன்மை செய்வேவாமென்று மனதும்வாக்குங் காயமுங்கூடி நிகோத்துஞ் சொல்லியுஞ் செய்தும்வருகை யெனவறிக.

இதனுற்சொல்லியது இந்தவுடலிலே புசிக்கிறதெல்லாம் பிராரத்தமாலும் மேலைக்காகாமிய முண்டாம்வழி யெப்படியென்று வினவ இப்பொழுது புசிக்கிறது முன்புள்ள ஊழ்வினையின் பயனல்லாவென்று விசாரியாமல் நான்செய்தென் பிறர்செய்தாரென்ற விருப்பு வெறுப்பாகிய சுட்டால் மேலைக்கு ஜாகமுண்டாமென்று மனவாக்குமிடத்துப் புத்தி பூர்வத்தாலு மபுத்திபூர்வத்தாலும் வருமென்னு முறைமையையு மறிவித்தது. (கசி)

வேறு—இது முன்னர் மேலைக் காகாமியமாய்ப் பொருந்துமென்பதை யாசங்கித் தெப்படி பொருந்துமென்பாலுக்குத்தர மூணர்த்திற்று.

மேலைக்கு வருவினையெதென்னில் லங்கண விருப்புவெறுப்பெனவறி-முன்பு நாருர்ச்சுத்த கன்ம மிப்போது புசித்துவிடுவேரு யிருந்தது மேலு மொரு சனன முண்டாகைக்கு வருகின்ற வினை யெந்தவினை தாவென்று கேட்கி லிப்பொழுது புசித்துவிடுவே னென்ரூயெ யப்படி புசிக்கு மவ்விடத்திலெ யுண்டான விதாகிதங்களால் வரும் வினையென்றறிவாயாக,—அவ் வீளவுமெல்லா மூலத்த வினைப்பயிவ்வா மென்னின்-அங்ஙனமிதாகிதத்தாலுண்டான சகலவினைகளு முன்புள்ள புண்ணியபாவங்களின் ரூடர்ச்சியாமெனின்,—நாமென மூற்றியதன் பயனுனக்கு மூனக்குமென்பர்-நாமென்று மமதைதானே மேலுமொரு பிறப்புண்டாகைக்கு மூதிர்ந்ததன்பயலுகிய கன்மமூலைக் ரூண்டாமென்ப ரூயர்ந்தோர்,—புந்தி நன்ரூது வினை நனுகும் வினையெனைவான் றிரண்டாய் நூலத்து வினைக ளிருதிறமாரும்-அபுத்தி பூர்வமான கன்மமும் புத்தி பூர்வமான கன்மமுமென ஒருகன்மந்தானே யிரண்டாய்ப் பிரபஞ்சத்திலே செய்து போதுகின்ற கன்மங்களெல்லா மிரண்டுவகைகடாம்,—ஏலுத்தா னிதமகிதமாம். அங்ஙனமாயிடத்திற் பொருந்தத் தானிதமும் மகிதமுமாகாநிற்கும்,—இதலால் வழுவாதெயதியிம் புண்ணியபாவங்களென்றே-இந்த விதாகிதத்தாலே தப்பாமற் புண்ணியகன்மம் பாவகன்மமென்று பொருந்தும். எ - று.

விருப்பு வெறுப்பும் வினைவு மாகுபெயர். அவ்வினையு மென்பதனுலும் பாடம். எல்லாமும் எனமாறுக. இரண்டாமென்ற பாடமோதுவாருமுளர். என்றே யெய்திபிடு மெனக்கூட்டுக.

இங்ஙன முண்டாகப்பட்ட வாகாமியத்தாற் புண்ணிய பாவங்களுண்டாம் வழி யெப்படியென்று மதுபோம்வழி யெப்படியென்றும் வினவ மேலருளிச்செய்வா னெடுத்துகொ ண்டருளியது.

உற்றதொழி னினைவுரையி னிருவினையுமுளவா மென்னென்றால் வழியாதா ணெழியாதா ணன்னின், மற்றவற்றி ணெருவினைக்கோள் வினையால்வீடு வைதிக சைவம் பகரு மரபிலாற்றப், பற்றியது கழியுமிது வி லேயாலேற்கும் பான்மையுமாம் பண்ணுது பலிக்குமு ன்னென், சாற்றருநூல் வழியிவ்வா மிகுதிசாருஞ் சோராதங் கதுமேலத் தொடர்ச்சியாமே. (கக)

ஒழியாவிருவினை யொன்றிருலொன்றிங்
கழியாதநுபவ மாகுமென்றறு.

(இ - ள்.) உற்றதொழி னினைவுரையி னிருவினையுமுளவாம் — பொருந்தப்பட்ட வுடம்பின்மூலமாகவு மனதினினைவாலும் வாக்கின்சொல்லாலும் புண்ணியபாவங்க ளிரண்டுமுண்டாம். அப்படியுண்டாமிடத்து ஒருகன்மங்கொண்டொருகன்மத்தைப் போக்கிக்கொள்ளலாமோ இரண்டுமிரண்டாக அநுபவிக்கவேணுமோவென்னில்

ஒன்மெருன்றுலொழியாதா ணெழியாதன்னின் — புண்ணியத்தாற் பாவமும்போகாது பாவத்தாற் புண்ணியமும் போகாது ஆகையாலே விசாரிக்குமிடத்துப் புகிப்புந்தியிராது. அப்படியாலல் ஒருவர்செய்த பாவகன்மங்களைப் போக்கிக்கொள்ளுகைக்கு வழியிம்மையாவெனின்னில்

மற்றவற்றி லொரு ருவினைக் கோர்வினை யாவில்வினை திகைசவும் பகரும்

அப்படிச் செய்யப்பட்ட வினைகளில் ஒரு ருவினையைக் கொண்டொரு வினையைப் போக்குதற்குபாயம் வேதாகமங்கள் சொல்லாநிற்கும்

மாயிலாற்றற் பற்றியதுகழியும்

அந்த வேதாகமங்கள் சொன்னமுறைமையிலே செய்தாற் கூடினகன்மங்களின்கும். அப்படிச் செய்யமாட்டாதவர்களுக் கிந்தத்தோஷங்கள் நிங்கும்வழியெங்ஙனேயென்னில்

இதுவிலையாலேற்கும் பான்மையுமாம் பண்ணுதபசிக்கும்

இந்தத் தோஷங்கள் நிங்குகைக்குத்தான் செய்துகொள்ளமாட்டாவில்லையாகிலுஞ் சிலதிரவியங்களைக் கொடுத்துச் செய்ய வல்லவர்களைக்கொண்டு செய்வித்துக் கொள்ளுகையாலே தான்செய்யாதிருக்கிலுந் தனக்குப்பயனைப் பலிக்கும். இங்ஙனமுண்டான தோஷங்களைப் போக்கிக்கொள்ளலாமென்று நிருக்கசச்செய்தியொன்றுண்டுலகிலியாதென்ற தெதென்னில். அஃதாவது

முன்னுஞ் சொற்றருளாலியறியின் வாமின்மிகுதிசாருஞ்

முன்னே சொல்லப்பட்ட வேதாகமங்களின் முறைமையிலெருவன் முன்செய்த தோஷத்துக்குத்தக்க பிராயச்சித்தஞ் செய்தாலுமந்தத்தோஷத்தின்வளர்வங்கெட்டுத் தோஷமாத்திரநிற்கும். அதேதென்னில் ஒருவன்பிரமஹத்தி கோவதைமுதலாயுள்ள தோஷங்கள் செய்து

அதற்குத்தக்க பிராயச்சித்தஞ் செய்தாலு நரகவேதனைக்கு ள்ள கௌரவங்கெட்டுக் கொலைதாஷமாத்திர நிற்குமென வறிக. அப்படிக் கொலைமாத்திரமாகநின்ற தெதுசெய்யுமெ ன்னில்

சோராதங்க துமேலைத் தொ டர்ச்சியாமே.

நீங்கிப்போகாத கன்ம மேலுடலெடுக் கைக்குத் தொந்தனேயாம். எ - று ஆகை யிறலே ஒன்றுன்று லழியாதெனக்கொ ள்க.

நு - ம். உற்றதொழி னினைவுரையாகிய மனவாக்குக் காயங் களா லுண்டாகிய கன்மங்களாவன? அருணினைவு பொறை பிறர் பொருள்விரும்பாமை செய்நன்றிமறவாமை அபிமானம்பேணல் அழுக்காறின்மை அவாவறுக்கை பிறர்வினங்கண்டிரங்குதல் பி றருக்கு அறிவுஞ் செல்வமுடழுகும் போகமுமாகிய விளைநான் குந் தம்மினு மிகுதியாக வேணுமென்று விரும்பினினைக்கை ஆக விளையித்தனையும் மனதிலுண்டாகிய நல்வழினினைவெனவறிக. இ னையித்தனைக்கு மாறுபட்டினைக்கை தீவழினினைவெனவறிக. இனி வாக்கிலுண்டாகிய கன்மமாவது தன்மம் ஞானங்கூறுதல் புற ங்கூறுமை உண்மையே சொல்லுதல் நூலுரைகூறல் இனியனசொ ல்லுதல் கடுஞ்சொல்விடுதல் வேதாகமங்களை யோதல் ஆகவினை யித்தனையும் வாக்கிலுண்டாகிய நல்லுரையெனவறிக. இனையி ற்றுக்கு மாறுபட்கூறுகை தீடவசனங்களெனவறிக. இனிகாய த்தினுற் செய்யுங் கன்மமாவது அறிதாயதவங்களைச் செய்தல் பூ சைகளோமங்கள்செய்கை பகுத்துண்ணல் பூமரங்கள் நோப்பு கள்வைக்கை பிறர்மனைவிழையாமை குளம்வெட்டுகை கூவமீரு ண்டல் தண்மசாலை பள்ளிக்கூடம் திருக்கோயிலெடுக்கை மடங் கட்டுகை ஆக வினையித்தனையுங் காயத்தினுற்செய்யு நற்கருமங்க ளெனவறிக. இனையிற்றுக்கு மாறுபாடாகச் செய்கையெல்லாங்

தீவழித்தொழிலெனவறிக. இங்ஙனமனத்திலு னிணைத்தும் வாக்கிலுற் சொல்லியுங் காயத்திலுற் செய்தும் வருமென்பதற்கு. பி-ம். சூளுமிர்தத்தில் ''பொய்ப்பொறிபுணர்க்கு மூப்பொறிபுள்ளு - மூள்ளச்செய்தி தெள்ளிதிற்கிளப்பி - னிருவூர்காட்சியருளொடுபுணர்தல் - பெரும்பொறைதாங்கல் பிறன்பொருள்வினையாமை - செய்தநன்றறிதல் கைதவங்கழிதல் - பால்கொடாது பகலிற்றேருன்றல் - மானமதாணி யாணீற்றுங்க - லழுக்காறின்மை யவாவிற்றீர்த - லருந்துயருயிர்கட் கிருந்தகாலை - யழுதேருய்வன்ன ராதியானைக் - கழலுநெஞ்சிற் கையற்றினைத்தல் - பன்னருஞ்சிறப்பின் மன்னுயிர்துடக்கிற் - கறிவும்பொறியுங் கழிபெருங்கவினும்-தெறற்கருந்துறக்கமு மறப்பவாங்குத் - தம்பினும்வென்டி மெண்ணரும்பெருங்குணம் - வாக்கொடுசிவணிய நோக்கினமக்கொள - வறம்பெரிதுணைத்தல் புறங்கூருமை - வாய்மைகல்வி தீமையிற்றிறம்ப - லின்மொழியினைத்தல் வன்மொழிமறுத்த-லறிவுறூஉல்வினித்த லருமுறைகழற - லடங்கியவறைதல் கடிஞ்சொல்வுடுதல் - பயனீன்றபடிக்கல் படிற்றுணைகெடுதல் - காயத்தினையந்தவியாவினையு - ளருந்தவந்தொடங்க றிருந்தியதானங் - கொடையுடம்படுதல் படையுடம்படாமை - யமரர்ப்பேணலாகுதியருத்த-லொழுக்கமோம்பும் விழுப்பெருங்கிழமை - யுடம்பிடியேந்தியுறணிந்திடுமா - றுடைந்தகாலை யவணியருயர்ந்தோ - ராலலர்தெரிந்து மாருயிர்பெரும்பிறிதாகலி - னிரும்பிணமிசைஞரி லெராங்குபட்டா - ரைம்பெரும்பாதகத் தாழ்நீந்த - லிந்தியப்பெரும்படை யிரியநூறும்-வனற்றறுகண்மை வானினிட்டாங்கு-நோவனசெயினு மேவணவிழைத-றவச்சிறிதாணு மிகப்பலவிருத்து - பாத்தாண்செல்வம் பூக்கமழிரும்பொழி - றன்மனைக்கிழத்தி யல்லைப்பிறர்மனை - யன்னையிற்றீரா கன்னராண்மை - கார்கோளன்னகயம்பலகினைத்தல்- கூவலிருட்ட லாதலர்சாலை - யறங்கடைநாவிலண்டிருர்பள்ளிக் - கடவுட்கண்ணிய தடவுநிலைகாட்ட-மினை

மனைமுதலா நிலைவருந்திறத்த - புறத்தனமாதோ வறத்துணைமற
த்துறை - யிவற்றுவழிபடா தெதிர்வணைகிழீஇ - யுஞற்றென்மொ
ழிப வுணர்ந்திசினோரே." எ-து- கண்டிகொள்க.

ஒருவிஜ்ஞக்கோர் விஜனயால்வீடு என்றது சமயாசார மூதலா
யுள்ளத்துக்குத் தவறுவந்தா லுதற்குப் பிராயச்சித்தஞ்செய்து
கொள்ளுமா மென்றதெனவறிக.

இதனுற்சொல்லியது மனவாக்குக் காயங்களிருலே கன்ம
மேறுமென்றும் அப்படியேறினகன்மங்களை நீக்கிக்கொள்ளுதைக்
குப் பிராயச்சித்தமு மந்தப்பிராயச்சித்தத்தாற் போகாத கன்மத்
துக்கு மேலும் ஜாகதொந்தனை யுண்டாமெனனு முறைமையையு
டறிவித்தது. (கக)

வேறு— இது கன்மத்துக்கு மாயையுபாதானமான முறை
மையும் அக்கன்மம் வாதியாதபடிக் குபாயமுண்டென்பதூ மு
ணர்த்திற்று.

இருவிஜனயு முற்றதொழினிஜனவுளைடா லுளவாம் - அந்தப்பு
ண்ணியபாவங்களான விரண்டுவிஜனகளு மெய்மனமொழிகளான
மூப்பொறிகளிற் பொருந்திய தொழிலு நிஜனவு முரையுமான மிம்
மூன்றிலுலே வருவனவாம்,— ஒன்முன்முலதழிபாதது - ஒருவிஜன
பா லொருவிஜனபோகாது,— உன்னிலுரைதழிபாதது - விசாரித்து
ப்பார்க்கிற் புசிப்புத்தவிராது, — மற்றவற்றி லொருவிஜனக்கோர்
வினையால்வீடு-அவ்விருவிஜனகளு ளொருவிஜனயா லொருவிஜனக்கு
விடுதலையும்,— வைதிகசைவம்பகரும் - வேதாகமங்கள்சொல்லு
ம்.ழிதலெப்படியெனில்?—மரபிலாற்றப்பற்றியதுகழியும்-அவை
செய்ன முறையிலேசெய்தாற் கூடின பாவகன்மமீங்கும்,— இ
தை - இங்ஙனம் புண்ணியத்தாற் பாவமொழிகை,— விலேடாலேற்
கும்பான்மையுமாம் - விலக்குக்கொள்ளு முறைமையுடையது
டாம்,—பண்ணுதுபலிக்கும் - இப்படி சாந்திபண்ணுதிருப்பினும்

அபுத்திபூர்வமாகப் பாவமொழிகைக்கேகற்ற புண்ணியமுஞ் சித்திக்கும். ஆதலிந்தமுறையிலே பாவமடங்கலையும் போக்கிவிடலாமோவென்னிற்? —முன்னஞ்சொற்றருநூல்வழியின்வரின் மிகுதிசோருஞ்-இறைவன் முற்காலத்திலே திருவுளம்பற்றினவேதாகமங்களின் முறைமையிலேசெய்தான் மிகுந்த கன்மங்கள்போம், —சோராதகுகதிமேலுத் தொடர்ச்சியாமே - அவ்விடத்துப் போகாதகன்மம் புசிப்பிக்கவேண்டுகையாலே மேலுக்குச் சம்பந்தமாம். எ-று.

வீடுகட்டபின் வீடில்லையென்பதுபோல நினதுபான்மையாகுபெயர். அங்குச்சோராதெனமாறுக. ஒன்றுன்று லழிபாதென்பதற்கு மனமொழிமெய்களிலே யொன்றுற் செய்தகன்மமொன்றுற்போகாதென் றுரைப்பாருமுளர். இந்தக்கன்மம் பிறாங்குரதியாயமாகப் பிரவாகரூபியாயிருக்கும். இன்னுந்திட்டகன்மம் அநிபதகன்மம்னன மூவிதமாம். திட்டகன்மமாவது ஒளட்டதப்பிரயோகத்தாலு மரசராலும் பகைவராலே யபிசாரமாகப் பிரயோகிக்கப்பட்ட மந்திரங்களாலு மிம்மையிற்பலிப்பது. அதிட்டகன்மமாவது சுயர்க்க நரகங்களிலே அநுபவிக்கப்படுவன. அநிபதகன்மமாவது அப்பவமேதமும்பிரமகத்தியுமொருகாலத்திற் செய்யப்பட்டுப் பக்குவம்வந்தவிடத் தொருங்கேயிரண்டுமிப்புசிக்கப்படாமையிற் கருத்தாவின்னகாலத்தி லிதுவென்றுறுத்திப்புசிப்பிக்குமது. இனிமூன்றும்பத்தி திட்டாதிட்டம். அநாவது ஒருவனிம்மையிற்செய்த அப்பவமேதபல மிம்மையிலே பலிப்பது மன்பதுமன்று. கன்மங்களின் மாயையிலே பொருந்திப் பக்குவப்பட்டுச் சிருஷ்டிகாலத்திலே புசிக்கப்படும். இதன்விரிவாகமங்களிற்காண்க.

யதாவெனின்பதுமுதலிரண்டு சூத்திரமும் பஞ்சமலங்களின் காரணவாசியாகவருவனர்த்தநிர்ணயம்.

இங்ஙனம் பஞ்சமலக்களின் காரணகாரியங்களை ஏகமாய் என்னும் விருத்தந்தொடங்கி யிவ்வளவு மருளிச்செய்து மேலிந்தப் பஞ்சமலங்களின் றொகையு மிவையிற்றுடன்கூடி நிற்கு மான் மாக்களுக் கிவைநீங்கியே பருளைப் பெறவேணுமென்னு முறை மையு மருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

மோகமிகவுயிர்க்கடொ ருமூடனையிந்நிற்குமூலவா ணவமொன்று முமுயங்கிநின்று, பாகமிகவுதவுதிரோ தாயியொன்று பகர்மாயையொன்றுபடர்க்கன்மமென்று, தேகமுறுகரணமெடுவனேபோகச் செயலொருமாமாயத்திரட்சியென்றன், ருகமலைமந்தென்பரைந்துமொருதருளென்பதனிதென்பரறிந்துளோ. (உ0)

அலக்கண்படுமுயிர்க் கைகந்துவகையா
மலத்தின்பகுதியை வனப்புறவகுத்தது.

(இ-ள்.) மோகமிகவுயிர்க்கடொருமூடனையிந்நிற்குமூலவாணவமொன்று — அறியாமை மிகவுண்டாம்படியுயிர்மாக்களுடோறுஞ் சகசமுமாயநாதியுமாயிருக்கப்பட்ட வாணவமலமொன்று

முமுயங்கிநின்று பாகமிகவுதவுதிரோதாயியொன்று — அந்தவாணவமலத்தோடுங்கூடிநின்று அதுபக்குவமாமளவுமான்மாவை மறைத்து அந்தமலத்தைப் டாகம்வருத்துகிறதிரோதமலமொன்று

பகர்மாயையொன்று — ஆன்மாக்களுக்குத் தனுவாதிகளைக் கொடுக்குமென்று சொல்லப்பட்டுவருகிற மயக்கத்தைச்செய்யும் அசுத்தமாயாகாரணமலமொன்று

படர்கன்ம மொன்று — ஆன்மாக்கடோறும் விரிந்து அநுபவமாய் நிற்குங் கன்மமலமொன்று

தேகமுறு கரணமொடு புவன போகச் செயலாரு மாமாயைத் திரட்சியொன்று — ஆன்மாக்களெடுக்கப்பட்ட பூததேகமாகிய தனுவு மதனேடுற்றிருக்கப்பட்ட கரணமும் மதனேடுங் கூடிவரும் புவனமும் போகமும் மான்மாக்களோடுங் கூடிக் காரியப்படு மவதரத்து அவையிற்றைமுற்கூறிய அசுத்தமாயாகாரணத்திலே நின்று சிவசத்திகடோற்றுவிக்கு மவதரத்து அவையிற்றோடும் பொருந்திநடத்தப்பட்ட சுத்தமாயையின் றிரட்சியாகிய சுத்ததத்துவங்களென்னு மலமொன்று. அன்றியு மிந்தப்பதத்துக்குப் பொருள்சொல்லு மிடத்து வித்தைகளவித்தையீசர் சதாசிவனென்ற விஞ்ஞானகலர்க்குத் தனுகரண புவனபோகங்களைக் கொடுத்து நிற்கிறசுத்தமாயை யெனபாருமூளர். அஃதிவ்விடத்துச் சொல்லவேண்டுவதில்லை யெனவறிக. அதற்குக்குற்றமே தென்னில் இச்செய்யுள் சகலனாதேநாக்கிப் பஞ்சமலங்களின் றொகை சொல்லுகையாலும் இந்தச்செய்யுளில் விஞ்ஞானகலர் பிரசங்கமில்லாதபடியாலும் பஞ்சமலங்கள் விஞ்ஞானகலர்க்கில்லாதபடியாலு மப்படிச் சொல்லப்படாதெனவறிக

என்றுகமலமலமைந்தென்பர் — ஆகக்கூட்டியிங்ஙனஞ் சொல்லப்பட்ட மலமைந்தென்று பெரியோர்கள் சொல்லுவார்கள். ஆகையால்

ஐந்தாமாறு நருளென்பதறிந்தோரே. — இங்ஙனஞ் சொல்லப்பட்ட மலமைந்தையும் விட்டுநீங்காம லான்மாக்களுக்குத் திருவருளுண்டாகாதென்று பெரியோர்கள்சொல்லுவார்கள். எ - று.

நு-ம். மோகமிகவுயிர்கடொறு மூடலுய்ந்திற்கு மூலவாணவ மொன்று. எ-கு. ஆணவமலமொன்ருயிருக்க வான்மாக்கடோறு நிகூடிநின்று டறைக்குமென்று பொருட்படுத்துகைக்கு வழியே தென்னில் இருளானதொன்ருயிருந்தும் பலகண்களையு மறைத்தா ற்போல ஆணவமலமு மப்படியொன்ருயிருந்தாலும் பலவான்மா க்களையு மறைக்கு மென்றனைவறிக. இதற்கு. பி-ம். திருவருட் பயனில் "பலனைப்புணர்ந்து மிருட்பாலவைக்குண்டெனலுங் கண் வர்க்குந்தான்ருதகற்பு." எ-து. கண்டுகொள்க.

இனி மூயங்கினின்று பாகமிகவுதவு திரோதாயி யொன்று. எ-கு. அருளாகியதிரோதசத்தி யான்மாக்களை மறைக்கப்பட்ட விருளாகிய ஆணவமலத்தோடுங் கூடிநின்று பாகப்வருத்தமென் று பொருட்கூறியதேதென்னில் காணுங்கண்ணுனைத மறைக்கப் பட்ட படலத்தைநீக்கப்பட்டவெளதுதமான து கண்ணோடுங்கூ டிநின்று வினைமாக்கி அந்தக்கண்ணைத்தெரிவித்தாற்போல சிவ னுடையவருளான து திரோதமாய்நின்று ஆன்மாக்களை மறைக்கப் பட்ட ஆணவமலத்தைப் பாகம்வருத்தி அந்தமலபாகம் வந்தவா றேயான்மாக்களுக்கு ஞானம்பிரகாசிக்கையா லப்படிச்சொன்ன தெனவறிக. இதற்கு. பி-ம். சித்தியாரில் "வையமும்மலங்கடத்தந் தொழிலினையியற்றவேவுந், தூயவன்ருனேதார் சத்தி திரோதான கரியதென்றும்" எ-ம். இந்நூலினும் "மூற்சினமருவுதிரோதாயி கருணையாகி" எ-ம். வருமேதக்கவைக்கண்டுகொள்க.

இனி பகர்மாயையொன்று. எ-கு. அசுத்தமாயாகாரணமல மொன்றென்று பொருட்கூறியதேதென்னில் ஆன்மாக்கள் சுவ ரப்பட்டொடுங்கு முவதரத்தைத் தாரகமாய்நின்றுந் திருட்டிகால டான்மாக்களுக்குத் தனு கரண புவன போகங்களாகிய கலையாத் தத்துவங்கள் தன்னிடத்திலே தோன்றுகைக் குபாதானமுமா யிருக்கிற காரணமாயையென்றதெனவறிக. இதற்கு. பி-ம். தத்து

வவிளக்கத்தில் "ஓதியவல்வினையூட்டக்கருவியுடம்புலக, மாதிய போகமூ மாய்நின்றமாணை மயக்குவித்தே, போதந்தரும்பொரு ளாகிநிற்கும்புவ னதிகளுக், காதியுமாய்வினிந் தந்தமூமாகி யொடு ங்கியதே" எ-ம். சித்தியாரில் "நித்தமா யருவாயேக நிலையதா யி லத்துக்கோர், வித்துமாய் சித்தாயெங்கும் வியாபியாய் விமல னுக்கோர், சுத்தியாய்ப் புவனபோகந் தனுகரணமூ முயிர்க்காய், வைத்தநோர்மலமாய் மாயைமயக்கமுஞ்செய்யுமன்றே" எ-ம். இ ந்நூலிலும் "உருவாதி சதுவிதமாய்" என்னும்விருத்தமூ மாகவி ங்ஙனம் வருமேதுக்களைக்கண்டுகொள்க.

இனி படர்கனம மொன்று. எ-கு. எங்கும்விரிந்திருக்கப்ப ட்ட கன்மமலமொன்றென்று பொருட்கூறியதே தென்னில் ஆன் மாக்க ளெடுக்கப்பட்ட அச்சுக்கடோறுங் கூடிநின் றவரவர்க்கு ண்டான புண்ணியபாவங்களுக்கிடான புசிப்புகளைக்கொடுத்து நி ர்க்கையா லப்படிச்சொன்னதெனவறிக. இதற்கு. பி-ம். தத்துவவி ளக்கத்தில் "பிணைந்தவக்கன்மம் பெருகியவாசை யதனுருகர்தற், கணைந்தன கன்ம மிருவகைத்தாமறம் பாவமென்ப, தனைந்துமணைந் தந்தன் சார்பினிற்றோன்றுமென் சந்நிதியா, லுணர்ந்தவர் வித் தம் விளைவுமொப்பாமென வோதுவதே." எ - ம். சித்தியாரில். " இருவினை யடாதியாதி யியற்றலா னுகர்வானந்த, வருமலஞ்சார் ந்து மாயாவுருவுகண் மருவியார்த்து" எ-ம். இந்நூலிலும் "அனு க்கடோறும் படர்வதாகி." எ - ம். வருமேதுக்களைக் கண்டுகொ ள்க.

இனி தேகமூறு கரணமொடு புவனபோகச் செயலாரு மா மாயைத் திரட்சியொன்று. எ-கு. ஆன்மாக்களுக்குண்டான தனு கரனை புவனபோகங்களை நடத்துகிற சுத்தமாயையின் றிரட்சியா கிய சுத்ததத்துவமல மொன்றென்று பொருட்கூறியதேதென்னிற் அசுத்தமாயா காரியமாகிய கலையாதி தத்துவங்களைப் பிரிக்கப்

பட்ட சுத்தமாயாகாரியமாகிய சுத்தவித்தை ஈசுரம் சாதாக்கியம் சத்தி சிவமென்னப்பட்ட சுத்ததத்துவங்களைந்து மொருமலமென்றதெனவறிக. அவையிற்றைப் பிரேரிப்பித்ததுகொண்டே சுத்ததத்துவங்களை மலமென்னலாமோவென்னி லப்படிச் சொல்லப்படுமெனவறிக. அதற்கு வழியேதென்னில்? சிவனுடைய வருட்சத்தியானது திரோதமாய்நின்று மலத்தைக் காரியப்படுத்த அது மலமென்று பெயர்பெற்றாற்போல விதற்கு மப்படிச் சொல்லப்படுமெனவறிக.

இனி யைந்தமாரு வருளென்ப தரிதென்ப ரறிந்தோரே எ - கு. இங்ஙனஞ் சொல்லப்பட்ட மலங்களைந்து நிங்கிலுலொழிய வான்மாக்களுக் கருளுண்டாகாதென்று பொருட்கூறியமேதென்னில்? இந்தமலங்களோந்தோடுங்கூடி நிற்கும்வளவு மான்மாக்களுக்கு ஜநநந் தொலையாததுபற்றேயப்படிச் சொன்னதெனவறிக. இதற்கு பி - ம். திருவாசகத்தில் "மலங்களைந்தாற் சுழல்வன் றயிரிற்பொரு மத்துறவே." எ - து. கண்டுகொள்க.

இதனுற்சொல்லியது ஆன்மாக்களோடு மநாதியாய் மறைக்கப்பட்ட வாணவமல மொருமலமென்றும் அதனோடுங்கூடி யந்த மலத்தைப்பாகம்வருத்துவதான திரோதாயி யொருமலமென்றும் மதனோடுங்கூடிவருகிற வசுத்தமாயாகாரணமலமொன்றென்றும் அதனோடுங்கூடி விரிந்து வரப்பட்ட கன்மமல மொன்றென்றும் அதனோடுங் கூடிவரப்பட்ட வசுத்தமாயாகாரியமாகிய தனுகரணபுவனபோகங்களை நடத்துகிற சுத்தமாயாகாரியமாகிய சுத்ததத்துவங்க ளொருமலமென்றும் ஆகவிங்ஙனஞ் சொல்லப்பட்ட மலங்களைந்து நிங்காம லான்மாக்கள் முத்தியைப் பெறுகைக்கு வழியுண்டாகாதென்றும் பெரியோர்கள் சொல்லுவார்களெனவு மூதைமையை யறிவித்தது. (உ)

வேறு—இது அம்மலங்களின் பெயருந்தொகையும் அவைநீங்கியன்றி முத்தி வாயாதென்பதூஉ முணர்த்திற்று.

மோகமிக வுயிர்கடொறு மூடரூய்நிற்கு மூலவாணவ மொன்று-மறைப்புமிகும்படி யுயிர்கடொறு மதிகியிலை கூ நிற்கு மூலமாகிய வாணவமலமொன்று, — மூயங்கிநின்று பாகமிக வுதவுதிரோதாயி யொன்று-அந்த வாணவமலத்தைப்பொருந்திநின்று பக்குவத்தை மிக உண்டாக்குகின்ற திரோதானசத்தியொன்று,—பகர்மாயையொன்று - தனுவாதிகட்குக்காரணமாகச சொல்லப்பட்ட மாயாமலமொன்று,—படர்கன்மமொன்று-புண்ணியபாவங்களாக விரிந்த கன்மமலமொன்று,—தகமுறுகரணமொடு புவனபோகச் செயலாருமாமாயைத்திரட்சியொன்று - தனுவுமிக்கரணமும் புவனமும் போகமுமாய்நடக்குந் தொழினிறைந்த பெரிய மாயாகாரியமான மாயேயமலமொன்று,—என்று - என்முருவ்வொன்முகவெண்ணி,— ஆகமல மைமந்தென்பர் - பின்னுருதொகையாக மலமைமந்தென்பர்,—ஐந்துமாமு தருளென்ப தரிதென்ப ரறிந்துளாரே - அவ்வைவந்துமலமு மொழியாம லருள் பெறுதல் கூடாதென்று சொல்லுவர் அறிவுடையோர் என-றும்.

ஒருவெண்ணெடு. ஒன்முகமலமைமந்தென்று பாடமாகில் என்றென்னு மிடைச்சொல் வருவிக்க. மாமுதென்னு மெதிர்மறைவினையெச்சம்பெறுதலென்னு மவாய்நிலையான்வந்த வினைப்பெயரிற் பெறுதலென்னுமிவினையோடுமுடிந்தது. அரிதென்பது மனத்தவலமாற்றலரிதென்பதுபோலவினைப்பெருட்டாய்நின்றது. அருளென்பது அருளென்றுயர்ந்தோராலெடுத்துரைக்கப்படுவது. மலமாவதிழுக்கு. ஆன்மாக்களுடையவுராய்கிரியைகளை மறைக்கையிருமல யாணவமலத்தை மலமென்பதனுமதம். ஏனை ஞானக்கையு மலமென்ப தென்னையெனில்

மலபாகத்தின்பொருட்டுக்கருவிகளைக்கூட்டியாத்மாக்களைப் பொய்யைமெய்யென்றுமயக்கிப் போகங்களையனுபவிக்கையாலே யுபசரித்துத் திரோதாயியான சிவசத்திபைமலமூளதாவொழிந்தவெல்லா கெல்லின்வரு தவிடுமிபோலரு தியாகலானவை யொனறிற்கான் றதுவாக மாயையினையுங் கன்மத்தையு மாயாகாரியமாதலின் மாயேயத்தையுமலமென்றார். அதாமாயையைக் காரியங்களின் மிகுதிபற்றி மாமாயையென்றார். மும்மல கெல்லினுக்கென்றும் மாயையின் காரியத்தையென்று மிகுதற்கு முன்னுலினு மலங்களினுந்தாற் சுழல்வனென்னுந் திருவாக்கினு மலமென்றமையறிக.

இங்ஙனஞ் சொல்லப்பட்ட பஞ்சமலங்களோடுங் கூடி நிற்கிறவான்மாக்களையிற்றைநீங்கியருளைப்பெருகைக்குழுலியெங்ஙனமேனையென்றுவினவ அந்தமலங்கள் காரியப்பட்டுப் பாகம்வந்தேயருளைப்பெறுமெயன்றுகையாலனைவகாரியப்படுகைக்குவழியாகக் கேவல சகல சுத்தமென்று மூன்றவத்தைகளை வைத்துக்கொண்டு திதிற் கேவலாவத்தைகளை முந்த வருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

ஓங்கிவருஞ் பலவுயிர்களுஞ் மூன்றவத்தைப்படுற்றி டுற்றிடுங் கேவலசகல சுத்தமெனவுணர்க, வீங்குவெரு ங் கலாதியொடு குறியுருவமெனுன்று மிகுந்நிமல மன்றி யெனுன்று மில்லையெனுமியல்பா, யாங்கறினை யறிவாரி யவறிகருவியினையா தானதினை விருண்மருவு மலர்வி ழிதேபாலதுவாய், நீங்குமவரை யிற்றிறந்த வியாபக மாயங்களணிற்பதுகேவலமெனுன்றுணிக்தற்துரிலே.(உக)

ஆருயிர்மூவகை யவத்தையுமதிற்
கூரிருளவத்தைக் குறியிதுவென்றது.

(இ-ள்.) ஒங்கி வருந் பலவுயிர் கண் மூன்றவத் தைப்பற்றி யுற் றிடம்

அநாதியே நிலைபெறுகி யெண்ணிறந்து மிக்குவருகிய வான்மாக்கள் மூன்றுவகைப்பட்டிருப்பதாகிய வவத்தைகளோடுங் கூடியறியப்பட்டவாயிருப்பதாய்

கேவல சகல சுத்த மெனவு ணர்க

கேவலாவத்தை யென்றுஞ் சகலாவத்தை யென்றுஞ் சுத்தாவத்தையென்றுமறிக. இவையிற்றின் முற்கூறிய கேவலாவத்தை யாவது

ஈங்கு வருங் கலாதி யொடு குறியுருவ மொன்று மின்றிமல மன்றியொன்று மில்லை யெனு மியல்பாய்

இவ்விடத்து விளங்காநின்ற கலையாதி சுத்தாவத்தை களோடுங் கூடியறியப்பட்டவொருநிலை வகளு மொருகாட்சிகளு மில்லாமலறியாமையாயுள்ள வானவமலமொழிய வேறொன்று மில்லையென்றும்போலு மியல்பாயிருப்பதாய்

ஆங் கறிவை யறிவியன்

அவ்விடத்து லான்மா சிற்றறிவா யறியப்படும்பொருளாகிய தன்னையு மறியமாட்டாதாய்

அறிகருவி யனை யா

அறிகருவிகளாகிய சுத்ததத்துவங்களு மவ்விடத்துப் பொருந்தாது

ஆதலி னவ்விரு ண்மருவு மலர் வியதே போலது வாயப்

அப்படி நிற்கையாலே யிருளோப்பொருந்திநின்று விழுத்து ஜீவிக்கிறவண்ணனது அந்த விருளின்வடிவு தானுய்நின்றும்போலு

நீங்கும்வகை யின்றி

அந்த மலத்தைவிட்டு நீங்குகைக்கே காரணமு மில்லையாய்

நித்த வியாப கமாய் அங்ஙணிற்ப தூ கேவலமென் று நிகழ்த்துநூ லே.

அவ்விடத் திழியாம லந்தமலத்தோடும் வியாபித்திருப்பதாய் அப்படிக்கேவலத்துக்குத் தலமாயுள்ள வவ்விடத்திலே மூற்கூறிவந்தபடியே நிற்கிற வதனையே கேவலாவத்தை யென்று சொல்லும் திவ்வியாகமம். எ-று.

நூ-ம். ஓங்கிவருமபலவுயிர்கள். எ-கு. அநாதியேநிலைபெற்று மிக்குவருகிற வான்மாக்க ளென்று பொருட்கூறியதே தென்னில் அநாதியென்றது சிவனுள்ளவண்ணே யான்மாக்களு முண்டாகையா லநாதியென்ற தெனவறிக. நிலைபேறென்றதுஞ் சிவனைப்போல வொருகாலத்திலு மழியாமலிற்கையா லெனவறிக. மிக்கயுயிரென்றது பிரமவிஷ்ணுக்கள் மூதலாயுள்ள வானமாக்களைப் பற்றி யெனவறிக.

இனி மூன்றவத்தை. எ-கு கேவலமென்றுஞ் சகலமென்றுஞ் சுத்தமென்றும் பொருட்கூறியதே தென்னில் கேவலமென்றது மாயாகருவிகளாயுள்ள காரிய மாயையுநீங்கியாணவமலதத்தான் மறைப்புண்டு காரணமாயை தாரகமாகவொடுங்கின வவதாரத்தை யெனவறிக. இனி சகலமென்றது அப்படிநீங்கப்பட்ட தத்துவ மூப்பத்தாறுடுங்கூடி ஜீவித்துநின்ற வவதாரத்தை யெனவறிக. இனி சுத்தமென்றது மூற்கூறிய கேவலசகல மிரண்டு நீங்கிச் சிவனுடைய வருள் காட்டாகச் சென்று அந்தச்சிவத்தோடுங் கூடிநின்ற வவதாரமெனவறிக. இங்ஙனஞ் சொல்லப்பட்ட வவத்தை மூன்றுக்கும் பி-ம். சித்தியாரில் "கேவல சகலசுத்த மென்று மூன்றவத்தையான்மா, மேவுவன் கேவலந்தன் னுண்மைமெய்ப் பொறிகளெல்லாங், காவலன் கொடுத்தபோது சகலரு மலங்களெல்லா, மோவின போதுசுத்த முடையனுற் பவந்தடைத்தே." எ-து. கண்டுகொள்க.

இனி ஈங்குவருங்கலாதி. எ-ரு. இவ்விடத்து விளங்கப் பட்ட கலாதிகளென்று சுட்டிப் பொருட்கூறியதேதென்னில் ஆசாரியனருளிச்செய்யச் சீடன்கேட்டிருக்கு மவதாரங் கருவிகளோடுங் கூடியிருந்து கேட்டறிந்து வருகையாலிவ்வி டமென சுட்டுக் கருவிகளோடுங் கூடியிருந்து ஜீவித்துவ ருகிற சகலாவத்தை யெனவறிக.

இனி குறியுருவமொன்றுமின்றி. எ-கு ஒரு நினைவுகளு மொருகாட்சிகளு மில்லை யென்று பொருட்கூறிய தேதென்னில் இவன்சகலரு கி நின்று ஜீவிக்கு மவதாரத்து உட்கரணங்களிலுலே நினைத்தும் புறக்கரணங்களிலுற் கண்டுங் கேட்டும் வருகையா லந்தக்கேவலத்துக்கு அவையில்லாதபடியாலே யப்படிச் சொன்னதெனவறிக. என்றிங்ஙனங் கேவலப்பட்டுக் கிடக்குமிடத்துக் காரியமாயையாயுள்ள கலையாதித்துவங்களோடுங்கூடி ஜீவிக்கிற சுணங்குறிகளு மில்லை யென்பதற்கு. பி-ம். சித்தியாரில் "அறிவிலன் மூர்த்தனித்தனாகாதி குணங்களோடுஞ், செறிவிலன் கலாதியோடுஞ் சேர்விலன் செயல்களில்லான், குறியிலன் கத்தாவல்லன் போகத்துக் கொள்கையில்லான், பிறிவிலன் மலத்திலேனும் வியாபி கேவலத்தியான்மா" எ-து. கண்டுகொள்க.

இனி மலமின்றியொன்று மில்லையெனு மியல்பாய். எ-கு. கேவலத்துக்கு ஆணவமல மொன்று மொழிந்து மற்றுன்று மில்லையென்றுற்போதுமியல்பா யிருப்பதாய் என்று சங்கேதமாய் பொருட்படுத்தினத்துக்கு வழியெதென்னில் மலமன்றியொன்று மில்லையெனும் என்ற உம்மைகொண்டும் இயல்பா யென்றவையச்சொற்கொண்டும் செத்தமனிதனைப்போலக் கிடக்கின்றூர்கள் பட்டமரம்போலே நிற்குது எனறசொல் அவையிற்றுக் குயிருண்டென்பதை விரோத்துநின்றூற்போல அதுவு மாணவமலமன்றியே மற்றுள்ளமலங்களு முண்டென்ப

தைக் கிளைத்து நிற்கையாலப்படிச்சொன்னதெனவறிக. அஃதெதெவ்வேனையென்னிஃ கேவலத்திலான்மா ஆணவமல மறைப்பாத வொடுங்கு மிடத்து மாயைதாரகமாக வொடுங்குகையாலப்படிச் சொன்னதெனவறிக. அவ்விடத்து மாயையுண்டென்பதற்கு அநுபோகமெதென்னில் நித்திரையிற் கேவலப்பட்டுக் கிடக்குமிடத்து உடல்தாரகமாகக் கிடக்கச்சுகெ கூப்பிட்டெழுப்பவு மெழுந்திராமற் கிடந்து அந்தவுடலைத் தட்டியெழுப்பு மிடத்துக் கலாதிக ளெழுந்திருக்கையாலந் தக்கலாதிகள் மாயையிற் சூற்றமாகையால் காரியமுள்ளவெ டத்திலே காரணமுண்டான தாகையாலே கேவலத்திலானவமல மறைக்க மாயைதாரகமாக ஆன்மா வொடுங்குமென்பதை யநுபவத்தாற் கண்டுகொள்க. அப்படி நித்திரையிற் கேவலப்பட்டுக்கிடக்குமிடத் துடம்புதாரகமாக வொடுங்குமென்பதற்கு. பி-ம். சிவஞானபோதத்தில். "அவ்வுடலினின்று யிர்ப்ப வைம்பொறிகடாங்கிடப்ப, செவ்விதி னவ்வுடலிற் சென்றொடுங்கி." என்பதனுள் "செவ்விதினவ்வுடலிற் சென்றொடுங்கி." எ-ம். போற்றிப் பஃறொடையினும். "மூலவருங் கட்டுலயிர் மூடமாயுட்கிடப்ப." எ-ம். கண்டு கொள்க. என்றிங்ஙனநித்திரையிற் கேவலத்துக்குமலமறைக்க உடல்தாரகமாக மூலாதாரத்திலே யொடுங்கிறற்போலச் சங்காரகேவலத்துக்கு மாயாகாரணந் தாரகமாக வொடுங்குமென்பது கண்டுகொள்க. ஆகையாலானவத்துக்கு மறைக்கையெதாழில் மாயைக்குத் தாரகமாகநிற்கையே தொழிலென்கை. அப்படியானவத்துக்கு மறைப்பே தொழிலென்பதற்கு. பி-ம். தத்துவவிளக்கத்தில். "சேதனன்கண் ணதிகமறைப்பன வாணிரகோடிவிருத்திகளே." எ-ம். சித்தியாரில். "போதகாரியமறைத்து நின்றது புகல்மலங்கான்." எ-ம். "மூன்னமலத்தினிருள் மூடாவகை." எ-ம். இங்ஙனமும்

"செம்பிலுறு களிம்பேய்ந்து நித்தமூலமலமா யறிவுமூடி
னையு மறைக்கும்." எ - ம். ஞானத்தின்கண்ணை மறைத்த க
டையதொழி லாணவத்தால்." எ-ம். வருமெதுக்களிக் கண்டி
கொள்க. இனி மாயைதாரகமாக நிற்குமென்பதற்கு," பி-ம்.
குத்தவினைக்கத்தில். "புல்லியபாசங்க ளுய்த்திடப்போக
ம் புமானுகர்ந்து சொல்லியகாலத் துறுஞ்செல்லனீங்கிச் சிர
புரக்கோன், சொல்லியமண்மூதலாயினமாயையி லெதொகுத்
தங், கெல்லியி னித்திரைப் போலிகாப்பாற்று மனுக்களை
யே." எ-ம். இந்நூலினும். "உருவாதி சதாவிதமாய்." என்ற
இருபத்திரண்டாஞ்செய்யுளிலே "ஒடுங்கவருகால மூயிர்க
ளெல்லா மருவிடமாய் மலமாய் மன்னியிடமானருளான் மா
யைதானே" எ - து. கண்டுகொள்க.

இனி ஆங்கறியையறிவரியன். எ - கு. கேவலப்பட்டுக்
கிடக்குமவ்விடத் தான்மா அறியப்படும்பொருளா யிருக்கி
தன்னை யறியமாட்டானென்று பொருட்கூறியதெதெண்ணில்
அப்படிக் கேவலத்திலான்மாவுக் கறிவாயுள்ளதா மிப்படி ய
றிவற்றுக் கிடக்கிறுமேயென்கிற நினைவுமில்லாததுகொள்
டே யப்படிச்சொன்னதெனவறிக. இதற்கு. பி - ம். சுத்தியா
ரில். "அறிவிலை வரும்சுத்தனித்த னராகாதிகுணங்களோடுந்,
தெறிவிலன் கலாதியோடுந் தொர்விலன் செயல்களில்லான்." எ - ம். "அறிந்திடுந்தன்னையுந் தானறியாமையானும்." எ-ம்.
கண்டுகொள்க.

இனி அறிகருவியனையா. எ - கு. கேவலமாகிய வவ்விட
த்தைச் சுத்தசுத்தாதுவங்களும் பொருந்தாதென்று பொருட்கூ
றியதெதென்னில் அப்படிச் சுத்தசுத்தாதுவங்களைக் கூடினவி
டம் சகலமானையா லப்படிச் சொன்னதெனவறிக. அதுவெ
ங்ஙனையென்னில் அப்படிக் கேவலப்பட்டுக் கிடக்குமிடத்
தச் சிவசத்திக ளைந்தச்சுத்தசுத்தாதுவங்களைக்கொண்டுசுத்

நமாயாகாரணத்திலே நின்றுங் கலையாதி தத்துவங்களோ
நோற்றுவித் தான்மாக்களோடுங்கூடிக் காரியப்படுத்துதலை
யா லதுசகலமாகையாலே யந்தக்கேவலத்திற் சுத்ததத்து
வங்களும் பொருந்தா தென்றதெனவறிக. இதற்கு. பி - ம்.
இந்நூலில். "இத்தகைமை யிறையருளால்" என்னும் விருத்
தத்தையொட்டிக் கண்டுகொள்க.

இனிஇருள்மருவு மலர்விழிபோலதுவாய். எ-து. இருளை
ப்பொருந்தினவிழி யந்தவிருளின்வடிவு தாமரைப்பூவை
லவென்று பொருட்கூறிய தெதென்னில் குற்றமறக்காணுங்
கண்ணானது இருளோடுங்கூடின வவகாரத்து வேறொன்றுங்
காணுமல் அந்தவிருளின்வடிவு தாமரைப்பூபோல வறி
வாயுள்ள வானமாவுங் கேவலப்பட்டு மலத்திரல் மறைப்பு
ண்டுகிடக்குமிடத்து அந்தமலந் தன்னைப்போல வறியாமை
யே வடிவாய்க்கிடக்கையா லப்படிச்சொன்னதெனவறிக.
அப்படிக் கண்ணை யிருள்மறைத்தாற்போல வான்மாவையுங்
கேவலத்தி லானவமலமானது மறைக்குமென்று திருவுந்
டாந்தமா யிருக்கக் கேவலத்தி லானவமலமறைப்பதன்றி
யே மாயைதாரகமாக வொடுங்குமென்ற தெதென்னில் அப்
படி யிருளிரல் மறைப்புண்டு அந்தவிருளின்வடிவு தாமரைப்
பூவின்ற கண்ணிற் சோதியாயுள்ள பிரபையுந் தனக்குடம்பா
யிருக்கப்பட்ட ருவினை தாரகமாக நின்றுற்போல வானவ
மலந்தான் மறைப்புண்டுகேவலப்பட்டுக் கிடக்கு மான்மாவு
மாயைதாரகமாகக் கிடக்குமென்பதை முற்கூறிய வகைக
ளிரலு மநுபவத்திரலுங் கண்டுகொள்க. அப்படிக்கேவல
த்தி லானவமலமன்றியே மற்றுள்ளமலங்களு மென்னடென்ப
தற்கு. பி-ம். சித்தியாரில். "மும்மல நெல்லினுக்கு மூவாயெச
டு தவிடுமிப்போன், மம்மர்செய் தனுவினுண்ணை வடிவினை ம
றைத்துநின்று." எ-து. கண்டுகொள்க.

இனி நித்தவியாபகமாய் எ-கு. அழியாத வியாபகத்தை யுடையதாயென்று பொருட்கூறியதேதென்னில் அப்படியாணவமலத்திற்குமேல மறைப்புண்டி மாயைதாரகமாகக் கிடந்தாலு மவ்விடத்திலான்மாவழியதுஞ் செய்யாம லந்தமலந்தன்னைப்போல வறியாமையாய் வியாபித்திருக்குமென்ற தெனவறிக. இதற்கு பி-ம். சித்தியாரில். "மலத்திலேயும் வியாபி கேவலத்திலான்மா." எ-து. கண்டுகொள்க.

இனி அங்கணிற்பது கேவலம். எ-கு. கேவலத்துக்குத்தலமாயுள்ள வவ்விடமென்று பொதுப்படப் பொருட்கூறியதேதென்னில் நித்திரையிற் கேவலத்துக் குடல்தாரகமாகவு மூலாதாரமிடமாகவுஞ் சங்காரகேவலத்துக்குக் காரணமாயை தாரகமாகவு நிற்கையா லப்படிச் சொன்னதெனவறிக. என்னுமிவை யிரண்டுக்கும். பி-ம். இருபாவிருபஃதில். "கடலுமேதவெண்ணெய்க் கருமபேயென்கண்ணே - யுடலகத்து மூலத் தொடுங்க." எ-து. நித்திரையிற் கேவலத்துக்குக் கண்டுகொள்க. ஆன்மாக்கள் இந்நூலில் "ஒடுங்க, வருகாலமுயிர்களெல்லா மருவிடமாய் மலமாய் மன்னியிடு மரனருளான் மாயைதானே." எ-ம். தத்துவவிளக்கத்தில். "சொல்லியமண்முதலாயினமாயையி லேதொகுத்தங், கெல்லியினித்திரைப் போலினைப்பாற்று மணுக்களேயே." எ-ம். சங்காரகேவலத்துக்குக் கண்டுகொள்க.

இதனாற்சொல்லியது கேவலசகலசுத்தமென்று மூன்றவத்தைப்படுமிடத்து அதில் கேவலாவத்தையாவது மாயாதாரகமாகுளெல்லாங் கழன்று ஆணவமலத்தான் மறைப்புண்டு மாயைதாரகமாக வொடுங்குவர்களென்னு மூறைமையை யுரைத்தது. (உக)

வேறு—இவிக் கேவல சகலசுத்தமென்னு மவுத்தை மூ
ன்றினை யுணர்த்துகின்றவர் முதற் கேவலாவத்தையினை யு
ணர்மலமென்ப தொன்றில்லையென்னும் புறமதத்தை டனைங்க
ளையுஞ் செய்யுணன்கி லுணர்த்துவான் றொடங்கினார் அவற்
றுளிது கேவலாவத்தையை யுணர்த்திற்று.

ஓங்கிவருஞ் பலவுயிர்கண் மூன்றவத்தைப்பற்றியுற்றி
ம்-எண்ணிற் களவுபடாமையி னுயர்ந்துவரு மாத்மாக்களை
ல்லா மூன்றவத்தையைப் பொருந்தியழுந்தும்,—கேவலச க
லசுத்த மெனவுணர்வர்-அவற்றைக் கேவலாவத்தை சகலா
வத்தை சுத்தாவத்தையென்று பெரியோரறிவர்கள்,—கேவ
லம் - அம்மூன்றினுட் கேவலாவத்தையாவது,—ஈங்குவருங்
கலாதியொடு குறியுருவமொன்றுமின்றி - அவ்வுயிர்களிவ்வி
டத்திற் பரந்தகலாதிகளுடனே யோரடையாளமு மொருவ
டிவுமில்லாமல்,— மலமன்றி யொன்றுமில்லை யெனுமியல்பா
ய்-ஆணவமலமொழிந்து வேறுருன்று மில்லையென்னு முறை
மையினை யுடையவாய்,—அறிகருவி யினையாவாதலினால்-அ
றிதற்கேதுவாகிய கருவிகள் கூடாவாதலாலே,— ஆங்கறி
வை யறிவரிதாய்-அவ்விடத் தொருபொருளை யு மறியக்கூடா
மல்,—இருண்மருவு மலர்விழிபோலதுவாய்-இருளைப்பொரு
ந்திய விரிந்தகண்க ளவ்விருடாமுய்ங் நின்றுற்போ லவ்வா
ணவமடந்தாமுய்,— நீங்குமவை யின்றி-அதனைச் சிறிதும்
விட்டு நீங்குமுறைமை யில்லையாய்,—நித்த வியாபகமாய்-அ
ழியாத வியாபகமுமாய்,—அங்கணிற்பது-அவ்விடத்து நீற்
கின்றது,—தானிகழ்த்து மென்று - திவ்வியாகமங்கள் சொ
ல்லும். எ - று.

நிற்பதென்பது தொழிற்மேனின்ற வொருமை. நிகழ்ந்
தலீண்டுச் சொல்லுதல். அறிவரியவென்ற பாடத்திற்கு அ

யென்னுஞ் சொல்வருவிக்க. அறிவையென்பதி லறிவுஆகுபெ
யர். அநிகருவி சுத்ததத்துவ மென்பாருமூளர்.

அப்படி யாணவமலமென்ப தொன்றில்லை மாயாமலமும் கன்மமலமுமேயுள்ளது ஆன்மாவு மகாதியே சுத்தனென்கிற ஐக்கியவாதிமத மேலருளிச்செய்வா னெனத்துக்கொண்டருளியது.

இன்மைமல மாயைகன்ம மென்றிரண்டேயிலைதா னிலங்குபல வுயிர்களுமூன் புரிந்தவிருவினையின், றன்மைகளா லெவர்களுக்குந் தலுகாணபுவனந் தந்திடுமிங் கதனலே யிருபயனுஞ்சார்ந்து, கன்மமெனா நேரா கநரா தன்மருவக் கடவுளரு ளாலெனையுங் கழித்திடினதனுற், பின்மலமா னையுணர்க வெனைப்பணிகொ டெங்ஙனிற்றலுமேற. (உஉ)

மலமெனவேறிலை மாயையுங்கன்மமு
நிலவிடுமுயிர்க்கெனு மவர்நெறியுரைத்தது.

(இ-ள்.) இன்மைமலம் மாயைகன்ம மென்றிரண்டேடு அப்படி யாணவமலமென்ப தொன்றில்லை. பின்னை யுள்ளதுதென்னில் மாயா மலமென்றுங் கன்மமலமென்றுமிரண்டுமேயுள்ளது. அருளினை யானமாயினிடத்திலேவுந்து பொருந்தினமுறைமை யெதுவுந்தானெயென்னில் சுத்தாயிருக்கப்பட்டவான்மாக்கள் முன்னைசெய்யப்பட்டபுண்ணியபாவங்களுக் கிடாகச் சர்வசங்கார முடம்புகளையுஞ் சுத்துவங்களையுமிருப்

ன்மைகளா லெ
வர்களுக்குத்த
னுகரண புவன
ந்தந்திடும்

பிடங்களையும் புசிப்புகளையு மூன்டாச்சுவ
ன். புசிப்பென்றது கூட்டுப்பொருளைவ
நிக. அது ஒழிவுகொண் டறியப்பட்டது

இவ்விடத் தந்தவுடம்பு முதலானவற்
றிலே புண்ணியபாவங்களைப் பொருந்தி
யநுபவித்து மேலார்ச்சித்து மிப்படிப் பிற
ந்திறந்துவருகிற வவதாரத்திலே

இக்கதை
லேயிருபயனுஞ்
சார்ந்து

கன்ம மெலா
தோராத தோரா
தன்மருவ

கண்மங்களெல்லாம் வெட்டன விம்மி
யாம்படி தலையொத்த வவதாரத்தை

கடவு ளொரு
ளா லெவையுங்
கழித்திடுவன்

கத்தாவுந் தனது காருண்ணியத்தி லெ
லெ யந்தக்கன்மங்களையு மானையையும்
போக்குவன்

அதனற்பின்
மலமானவை ய
ணுகா

ஆகையாலெ யான்மாவுக்குப் பின்பு மா
யாகன்மங்கள் பொருந்தா

பெருகொளி
முன்புளதெவெ
ற்றிடும்

ஆன்மாவும் பழையபிரகாசத்தை யுடை
த்தாம்

என்றித்திற
மென் பேசுமா
றே.

என்றிப்படி நீசொல்லுகிறமுறைமை யெ
ப்படியிருந்தது.

வி - பு. ஈசுரனைக்கியவாதி யப்படியானவமலமென்ப
தொன்றில்லெ சுத்தரூபிருக்கிற வான்மாவை மானையுங்கன்
மமும் பின்புவந்து மறைக்குமென்ரு னென்பதற்கு. பி - ம்.
சங்கற்பநிராகரணத்தில். "கருமுகிலடர விரிதருகதிர்போ
ன்-றறிவாமுயிரிற் பிரியாதேயும்" எ ம். சித்தியாரில். "மல

மெணவேவெறுன்றில்லை மாயாகாரியமதென்னி, லிலகுயிர்க்கிச் சாதாரணக் கிரியைகளெழுப்புமாயை, லிலகிடுமலமிவற்றை வேறுமென்றதுவேறுகி, யுலகுடல்காணமாகி யுதித்திடுமுணர்ந்துகொள்ளே" இது மறுப்பென்பது கண்டுகொள்க.

இதறுற்சொல்லியது ஈசுரனைவக்யகிவாதி யாணவமலமில்லையென்று மாயாகன்மங்களே யுள்ளதென்றுஞ் சுத்தராயுள்ள வான்மாக்கள்செய்த புண்ணியபாவங்களுக் கிடாகத்தா வுடம்புமுதலாயினவற்றைக் கொடுக்க வதனுலே ஜகமரணப்பட்டுக் கன்மவொப்புவந்து ஆன்மாப் பண்டுபோலே சுத்தரமென்றுஞ் சொன்னமுறைமையும் இது சித்தாந்தவழக்கல்லவென்றவதீனமறுத்த முறைமையு மறிவித்தது.

வேறு—இது மலமில்லையென்று மைக்கியவாதி பாசுபதிகள்கருத்து மறுத்தனர்த்திற்று.

மலமின்மையே - கேவலாத்வைதிகளிருளென்ற வாணவமல மில்லாமைதானை,—மாயைகன்ம மென்றிரண்டே—மாயையுங்கன்மமுமென விரண்டே யுள்ளன,—இறைதானிலங்கு பலவுயிர்களுமுன்புரிந்த விருவினையின் றன்மைகளாலெவர்களுக்குந் தனுகரணபுவனந் தந்திடும் - அவ்விரண்டு மூன்மையாற் கருத்தாவானவன் விளங்காநின்ற பலவாத்மாக்களுமுற்சனனங்களி லார்ச்சித்த புண்ணியபாவங்களின் மூறைமைகட் கிடாக வெல்லாவுயிர்களுக்குந் தனுவாதிகளைக் கொடுப்பன்,—இங்கிதருலே - இப்படி வினைக்கிடாக வினை வன் கொடுக்குமிதருலே,—இருபயனுஞ் சார்ந்து - மீளவும் புண்ணியபாவங்களை யார்ச்சித்துப் பொருந்துதலால்,—கன்மமெலாகோராக கோராதன்மருவ - அந்தக் கன்மங்களெல்லாங் தூலியொக்கச் செவ்வாதூலப் பொருந்தினவிடது,—கடவுளருளாலெனைவபுங் கழித்திடுவன் - அவ்வினைவன்மன்

கருணையாலெ யக்கன்மங்க ளெல்லாவற்றையும் போக்குவ
ன்,—அதற்பின்மலமாணவை யணுகா - ஆதலாற்பின்பந்த
மலமிரண்டும் பொருந்தா,—பெருகாளி முன்புஈதே பெற்
றிம் - உயிர்களு முன்புள்ளபிரகாசத்தையேபெறும்,—என்
றித்திரமென் பேசுமாறே - என்றிப்படி ஐக்கியவாதியும் பா
சுபதியுஞ் சொலலும்படியென். எ - று.

பயன் காரணத்தை யுணர்த்துகின்ற வாகுபெயர். ஆதா
ரவாதேய வொற்றுமையாற் புவனஞ் சொல்லவே போகமு
மடங்கிற்று. இரண்டேயென்னுந் தேற்றகாரம் இன்மையி
ஞ் சேர்க்கப்பட்டது. இங்கிதுவென்பது இங்கிவை யுங்கு
வைபோ லொருசொல்லாய்நின்றது. சார்ந்து சாரா.

அப்படி நான்சொன்ன வத்தத்தை இத்திறமென் பேசு
மாறே என்று உதாசனமாகச் சொல்லவேண்டுவா னெனெ
ன்று ஈசுரனைவக்கியவாதி கேட்க அப்படியாணவமலமில்லை
மாயையுங் கன்மமுமேயுள்ளதென்று நீ சொல்லுகிறது கொ
ட்டைமுந்தினதோ பனைமுந்தினதோ வென்கிற அருவமுங்
திலெவருமென்று மறுத்து மேலாணவமலமுண்டென்னு மு
றைமையை யருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

மாயைமுதலெனவினையின் பாசமைமுதலெனவே மன்னுபசு விதைமரபின் மயங்குமலஞ்சாத்தற், கேயுரைறி யென்கெலாத னியல்பாயின்முத்தி யென்பதென்மற் றிவைநிற்க வீருங்கலாதிபுனைவாய், மேயபின் றன்னுருவம் விளங்காமைவிளக்கு மிருமூலகந்தனிலென்னி னிவைவிடுங்காலுணைவட், டோயுரைறியிலதாத லறியாமையெனநீ சொல்லியது மலமென்பாற் துணிந்துளோரே. (உக)

அறிவுறுங்கலாதியா லறியாநிலையைச்
செறிவுறுமதுமலச் செய்தியாமென்றது.

(இ - ள்.) மாயையுமுதலெனவினையின் பான்மைமுதலெனவே

அநாதியிற் சுத்தனான வான்மாவினிடத்திலே யிந்த மாயாகன்மங்கள் கூடுமிடத்து மாயாதேகமுண்டாகக் கன்மமுண்டானதோ கன்மமுண்டாக மாயாதேகமுண்டானதோ வித்திலெதுதான் முந்தினதென்னுமிடத்து

மன்னுபினவினைதமரபின்மயங்கும்

நிலைபேறுகட்பொருந்தப்பட்ட பினைமுந்துவுண்டாக வினையுண்டானதோ வினைமுந்துவுண்டாகப்பினையுண்டானதோவென்று மயங்குந் தன்மைக் கொக்கும். இந்தக்குற்றமன்றியும்

மலஞ் சுத்தற்கேயு நெறியென்கொல்

நீசொன்னமாயாமலமுங் கன்மமலமுஞ் சுத்தனான வான்மாவினிடத்திலே பொருந்துகைக்குக் காரணமேதாம்

அதனியல் பாயின்

அதற்கு வேறுகாரணமுமில்லை அது வியல்பாகவந்து கூடுமாயின்

முத்தியென்பதென்

அப்படியியல்பேயாயில் வீடுபேறுண்டென்று சொல்லவேண்டுவதில்லை. அதுவேனென்னிற் சுத்தரையிருக்கப்பட்ட வான்மானவ மாயாகன்மங்களியல்பாகச்சென்று பொருந்துமாகிற் சாயுச்சியம்பெற்ற விடத்திறு மாயாகரணமங்கள்சென்று பொருந்துகைக்கு வழக்குண்டாம். அதுவொன்றேடை முத்தியுண்டென்று சொல்லவேண்டுவதில்லையென்ற தெளிவறிக. ஆகையால்

மற்றிவைவிற்க

(மற்றுவிசேடமாற்று.) நீசொல்லுகிற வினையியற்கை விடுவாயாக. அன்றியும்

இருங்கலாதியு ஞர்வாய் மேயபி ன்றன் னுருவம் வினங்காமை வினக்கு மிகு மூலகத்தனில்

பெரியகலாதியாயுள்ள தத்துவங்கள் மூப்பத்தொன்று முனக்கறியும்பகுதிக் குதவியாகப் பொருந்தி ஜீவிக்குமவதரத் தான்மரூபத்தை யறியாமலிருப்பானே னென்னில் ஆன்மரூபந் தெரியாதபடி மாயாகருவிகளை மறைத்துத் தன்வடிவை மிகுதியாக வினக்கிக் கொண்டு நிற்கும் பிரபஞ்சத்திலே

என்னி லினை விடுங்கா லுணர் வுட் டோயுநெறி யிலது

அப்படியாலு லந்தத் தத்துவங்களோ நீங்கினவிடத்திலு மறிவிலாதிங் கூடிப் பற்றுநெறியில்லாம லிருப்பானேன்

ஆகலறியாமை

அப்படியானதறியாமையாலென்று நீசொல்லில்

எனநீசொல்லி யதுமலமென்பர் துணிந்தோனோ

என்றுநீ சொல்லப்பட்ட விதனையே யானவமலமென்று சொல்லுவர்கள் நூலினையுணர்ந் தறுதிப்பட்ட பெரியோர்கள். எ-று.

உதாரணம். தாலபீஜநிபாயமாகியகொட்டைமுந்திரிதோ பையுமுந்திரிதோ வென்பதுபோல மாயைமூற்பட்டதோ கன்மமுற்பட்டதோவென்று ஈசுரனைக்கியவாதியை மறுத்ததற்கு. பி-ம். சங்கற்பநிராகரணத்தில். "சுத்த-வறிவெனிற்பாசஞ் செறியாமாயை-யுருவிருவினைபால் வருமிருவினையு-முருவாலன்றி மருவாதிவற்றின் - முந்தியதேதோ வந்தினைவதற்கோ - தோதுவேண்டும்." எ - து. கண்டுகொள்க.

இனிஇயல்பாயின் முத்தியென்பதெனன்று மறுத்ததனை வெள்ளப்புடவைக் கழுக்கேறினாற்போல முத்தியிறு மாயாகன்மங்கள் மீளவுங்கூடுமென்றதெனவறிக. பி-ம். சங்கற்பநிராகரணத்தில். "தானியல் பென்னில் வீடுற்றவரினுங் கூடக்கூடும்." எ-து. கண்டுகொள்க.

இனி என்கீசொல்லியது மலமென்பதொன்று மறுத்ததற்கு. பி-ம். சங்கற்பநிராகரணத்தில். "அறிவிலாமை யென்றவினையதுமலமாக் - குறிகொளாள ரைதருவரன்றே." என-து. கண்டுகொள்க.

இதனாற்சொல்லியது ஆணவமலமென்ப தொன்றில்லை சுத்தருயுள்ளவான்மாவை மாயாகன்மங்களியல்பாகவந்து பொருந்தாமென்ற வைக்கியவாதியை நோக்கி யப்படியாயுல் கொட்டை முந்தினதோ பனைமுந்தினதோவென்கிற அருவழக்கிலே வருமென்று மியல்பாயின் முத்தியைப்பெற்றவிடத்தும் மீளவுமாயாகன்மங்கள் கூடுமென்றுமறுத்து ஆணவமலமுண்டென்று நாட்டின முறைமையு மறிவித்தது. (உங)

——0——

வேறு—இது விரவுத்தரமாக வவருளொருவனோமறுத்து மலமுண்டென்ப தினைத்திற்று.

மானையமுதலென விடினபின்பான்மை முதலெனவே மன்னுப
னாவினதமரபின்மயங்கும் - முன் சுத்தலையிருக்கிறவனே மானையயுங் கன்மமூல கூடுமென்று நீசொல்லுதலின் மானையமுந்தியதனகன்மத்தின் பகுதிமுந்தியது என்றுன்றுசொல்லவே நிலைபெற்ற தாலோ நியாயமாகமயங்கும்,—மலஞ்சுத்தற்கேயுரியனியென்கொல் அதுவனறிச் சுத்தரானவர்களுக்கு நீசொல்லியமலங்கள் பொருந்தியபடியெப்படி,—அதனியல்பு - அஃதவ்வாதிமாவினியற்கையாம்,—ஆயின் - அதனியல்பாயின், முத்தியென்பதென் - ஆனவியல்பான தழியாமையின் வேதாகமங்களில் வீடென்றுசொல்லுவதென்,—மற்றிவைநிற்க-அதனாலீசொல்லுமிவையொழிக,—இருங்கலாதியுணர்வாய்மேயபின்-பெரியகலாதிகளிவனுக்கறிவை யுண்டாக்குவதாகக் கூடியபின்,—மிகுமூலகந்தன்னில் - பெரியபிரபஞ்சத்திலே,—தன்னுருவை விளங்காமையினைக்கும் - ஆத்மாவினுடைய சொரூபம் தோன்றுதபடியப்பிரபஞ்சத்தை விளக்கி

நிற்கும்,—எனின் - என்று நீசொல்லில்,—இவைவிங்காலுணர் வுட்டோயு நெறியிலதாதலென - இக்கலாதிகள்நீக்கின வதிதத்தி னுள்ளே யறிவுபொருந்தா முறைமையில்லாமைமுயன்,— அறியா மை - அவ்விடமறியாமைகாணும்,—என நீசொல்லியது மலமென் பர் துணிந்தோரே - என்றுநீசொல்லியவிதுகூறக்கா ணைவ மலமென்றுசொல்லுவ ரறிவாற்றெளிந்தோர். எ-று.

என்னென்பதனை யிலதாதலென்பதிறுங்கூட்டுக. மற்றைச்

அப்படியே யோராணவ மலமென்ப தொன்றுண்டாமலென் னுற் காணப்படாதோவென்று மீளவு மைக்கியவாதிவினவ அ ந்தவாணவமலமானது திருவருட்பிரகாச முண்டானவர்களாலே காண்கிறதொழிய வுன்னுற் காணப்படாதென் றவனை மறுத் தருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

அந்தியமா னவையுணர்த்தி யநந்தியமாய்நிறைந்த வறிவறிய மையினுணு மருணிலவுங்காலந், தன்னிலவ னேயாவு மாய்ந்தின்றதென்மை தாமுணர்தலாறு முயிர்தானெனவொன்றிலதாய், மன்னியிடு மலமா னைய கன்மங்கண்மாறி வந்திடுமிங் கிதுவழுவா தாதலின் மனத்தா, லுன்னரிய திருவருளை யெழியமலமு ளதென்றுணர்வரிதா லதனுண்மை தெரிவரிதாமுனைக்கே. (உசு)

பற்றுதல்விடுதல்மற் றவற்றுளதொன்று
யுற்றிடுமலமுனு ணர்வரிதென்றது.

(இ-ள்.) அந்தி யமானவையுணர்த்தி யநந்தியமாய்நி றைந்தவறிவறியா மையினை னும்

தனக்கு வேறுனபிரபஞ்சத்தையறிவித்துத் தனக்குவேறற நிறைந்துநிற்கிற திருவருளைத் தானறியாதபடியா னும்

அருணிலவுங் காலத்தன்னிலவு மேயாவுமாய்நி ன்ற தொன்மை தாமுணர்தலா னும்

அந்தத் திருவருட்பிரகாசமுண்டான காலத்துத் தன்னிடத்திலே நிற்கிற சிவமுதமுமேயெவ்விடத்தினு நிறைந்து நிற்கிற பழைமையைத் தானறிகையாலும்

உயிர்தானெனவொன் றிலதாய் மன்னியிடுமலம்

ஆன்மாவென்றொரு முதலில்லையென்னும்படி நிலைபெற்றுநிற்கு மாணவமலமானது. ஆணவமென்றுன்னுவேனுமோ மாயைதான்மறையாதேதாவென்னில்

மாயை கன்மமக்கண் மாறிவந்திடும்

மாயாமலமுங் கன்மமலமுங் காரணத்தினுங் காரியத்தினும் விட்டும்பற்றியும்வரும்

இங்கிது வழுவாது

இவ்விடத்திந்த மாயையுங்கன்மமு மாறிவருகிறதும் மலமெவ்விடத்திருந் சகசமாயான் மாவோடு நிலைபெற்றுநிற்கிறதுந் தப்பாது.

ஆதலினன் மனத்தா னுன்னரி யதிருவருளோயொழிய மலமுளதென் றுணர்வரிது

இப்படி-யாணவமலஞ் சகசமாய்நிலைபெற்றுள்ளதாகையான் மனத்தினு வினைத்தற்கரிய திருவருட்பிரகாசித்தகாலத்தல்லது ஆணவமலமொன்றுண்டென்றறியப்படாது. (ஆல் அசை.)

அதனுண்மை தெரிவரிதா மெனக்கே.

அந்தத் திருவருளுனக் கில்லாதபடி-யாலேயந்த வாணவமலத்தினுண்மை யுன்னாலறியப்படாது. எ-று.

வி-டு. அந்தியமானவையுணர்த்தி யநந்தியமாய்நிறைந்த வறிவரியாணமையினுணர்வென்றது ஐக்கியவாதினைமறுத்திப்பொழுதிந்த மாயாகன்மங்கள்கூடினு சகலத்துத் தேகாதிபிரபஞ்சத்தையறிந்து மிந்த மாயாகன்மங்கள் கூடுவதற்குமுன்பு நீசுத்தனென்று சொ

ன்னவவதரத் தான்மாவிலேணைட்க்கியமா யெக்கு நிறைக் துவிற்கிற
திருவருளைத் தரிசியாதிருந்தபடியாலு மகாதியே யக்கினையைக் கா
ட்டமறைத்து நின்றுற்போல ஆன்மாவென்றொரு மூதலிற்லியெ
ன்னும்படி யாணவமல மறைக்கையினாலுமெனவறிக. என்றிங்க
ன மவனைமறுத்ததற்கு. பி-ம். சங்கற்ப நிராகரணத்தில் "முன்
பு நன்றுடனென்றியகாலை - யின்பமெய்துதற் கிலதுபிராகவி-னீ
யலிபொருதமாயாவாதி - யாயினையமையும்." எ-ம். "மூலமலத்
தாற் சாலுமாயை - கருமத்தளவிற் றருமுருவிறைவன்." எ-ம்.
கண்டுகொள்க.

இனிமாயைகன்மங்கள் மாறிவந்திடுமென்பது மிந்தவானவ
மலம்போல மாயாமலமுங் கன்மமலமு மான்மாவை யகாதியேய
ற்றிநிற்கவு மவையிற்றின்காரியங்கள் விட்டும் பற்றியும் வருமென்
றெனவறிக. அப்படிக் காரணமலமூன்று மான்மாவையகாதியே
கூடிநிற்குமெனபதற்கு. பி-ம். சித்தியாரில். "மும்மலநெல்லினு
க்கு முளையொடுதவிடுமிப்போன், மம்மர்செய்தனுவினுன்மை வ
ழிவினைமறைத்துநின்று." எ-து. கண்டுகொள்க. அப்படியந்தயா
ணவமல மகாதியே யான்மாவை மறைத்துநிற்க மாடாசாரியமான
கலியாதி தத்துவங்க ளந்தமறைப்பை நீக்குமென்பதற்கு. பி-ம்.
சித்தியாரில். "போதகாரியமறைத்து நின்றதுபுகல்மலங்கா, லேனை
தலாதகுணமுமாக வுயிரினுள்விரவலாலே, காதலாலவித்தைசிந்த
த் தருங்கலியாதிமாயை, யாதலாலிரண்டுஞ்சோதி யிருளெனலே
ருமன்றே." எ-ம். "மலமெனவேவெறுன்றில்லை மாயாகாரியமதெ
ன்னி, னிலகுயிர்க்கிச்சாஞானக் கிரியைகளெழுப்புமாயை, விலங
டுமலமிவற்றை.', எ-ம். "பருதியை முகின்மறைப்பப் பாயொளி
பதுங்கினற்போ, லுருவுயிர்மறைக்கின்ஞானக் கிரியைகளொளிக்
குமாகுங், கருதிடுமிச்சாஞானக்காரியக்காயம்பெற்றுல், மருவிடு
முயிர்க்குக்காயம் வந்திடாவிடின்மறைப்பு." எ-ம். கண்டுகொ
ள்க.

இதனுற்சொல்லியது ஆணவமலமில்லையென்ற லவக்கியதா
தினையேநோக்கி அந்தமலமுண்டென்று அநுபவத்திலுற் காட்டியபூ
ரணமையுமத்தமலமும் திருவருட்பிரகாசமுள்ளவற்கொழிய காண
ப்படாதென்னு முறைமையு மறிவித்தது. (உச)

வேறு— இதுவுமது.

மலம் - இந்தவாணவமலமானது,—அன்னியமானவை யுணர்
ர்த்தி - தான்பக்குவமாமளவு முயிர்கட்கு வேறுய்ப் பொருளல்
லாத பிரபஞ்சத்தைப் பொருளென்னும்படி யறிவித்தலால்,—அ
ந்நியமாய் நிறைந்தவறி வறியாமையினுலும் - அவ்வுயிர்கடமக்கு
வேறன்றிப் பரிபூரணமாய்நிற்கின்ற ஞானத்தையறியாதபடியாலு
ம்,—அருணிலவுங்காலந்தன்னி லவனேயாவுமாய்நின்றதொன்மை
தாமுணர்த்லாலும்-அந்த வருள்விளங்குங்காலத்திற் கருத்தாவே
சர்வமுமாய்நின்ற பழமையை யவைகடாமறிகையாலும், உயிர்தா
னென வொன்றிலதாமன்னியிடம் - அவ்வருள் பிரகாசிக்குமளவு
மாதிமாவென வொருபொருளில்லையாக வது தானேயாய்நிலைபெ
ற்றுநிற்கும்,—மாயைகன்மங்கண்மாறிவந்திடும் - மாயையுங் கன்
மமுஞ் சிருஷ்டி சங்காரங்களிலே பற்றுவது விடுவதா யிருக்கு
ம்,—இங்கதுவழுவாது-இந்தவாணவமலமப்படி பற்றுவது விடு
வதாகாது,—ஆதலினுன் மனத்தாலுன்னரிய திருவருளையொழிய
மலமுளதென்றுணர்வரிதாம் - ஆகையினுலே மனத்தாலினைத்த
தற்கரிய திருவருளைக்கொண்டறிதலன்றி யாணவமல முண்டென்
றொருவர்க்கு மறியக்கூடாது, — அதனுண்மை தெரிவரிதாமுனக்
கே - ஆகையினுலே மலத்தி னுண்மைத்தன்மை யுனக்கறியக்கூ
டாது. எ-று.

இங்கது ஒருசொல். உணர்த்தி யுணர்த்த தாவிகாரம்.

இப்படியுண்டென்று காட்டப்பட்ட வாணவமல நீங்கும்வ

ழியேதென்றுவினவச் சிவன்றன்னருளாலே மாயாகாரியமாகிய கலையாதித்தத்துவங்களைக்கூட்டி மலபாகம்வருத்துவனென்னுமுறைமையை மேலருளிச்செய்வானெடுத்துக்கொண்டருளியது.

புகலுமல மொழிதற்குக் கலாதிமுதன்மாயை
பொருந்தியிடு மரனருளாற் போதந்தீபஞ்,
சகலமெலா மூடணைய வாறுபோலத்
தருமருளா மலமுயிர்கள் சாரா மன்மறைக்கு,
மிகனிவரு மிணைபுணரி னிருள்வெளியா
ந்தன்மை யெய்துமிவை தன்செய்தி யிலங்குமின்றி,
பகர்வரிய வுணர்வாகி யொளியாயுள்ளப்
பான்மையினை லொருநாதம் படருந்தானே. (உரு)

மலநிலையொதுங்க மாயாகாரியன்
குலவிடுமிருளொளி குறிபிதற்கென்றது.

(இ-ள்.) புகலு மலமொழிதற்குக் கலாதிமுதன் மாயை பொருந்தியிடு மரனருளால் போதந்தீபஞ் சகலமெலா மூடணைய வாறுபோல தருமருளா மலமுயிர்கள் சாரா மன்மறைக்கும் — முன்னேசொல்லப்பட்ட வாணவமலத்தைப் போக்குதற்குக் கலையாதி தத்துவங்களாகிய காரியமாயையான்மாவோடுங்கூடுந் தம்பிரானுர் காருண்ணியத்திருவுலே. அதுவென்போல வென்னில்

ஆன்மபோதம் ஜீவிக்குமிடத்து விளக்கானது பிரகாசித் தெரியுங்கால் தகளியுந் திரியுநெய்யுங் கூடிப்பிரகாசித் தெரிந்தாற்போல. அப்படியான்மாவையுங் கருவிகளையு மந்தவருளேகூட்டி ஜீவிப்பிக்குமாகி லந்தவருளையிந்தவான்மாவாலறிந்து கூடப்படாதோ வென்னில்

மிகனிவரு மிணைபுணரி னிருள்வெளியா
ந்தன்மை யெய்துமிவை தன்செய்தி யிலங்குமின்றி,
பகர்வரிய வுணர்வாகி யொளியாயுள்ளப்
பான்மையினை லொருநாதம் படருந்தானே.

அப்படிக் கூடிநின்றறிவிக்கிற திருவருளையான்மா வறியாதபடி டாணவமலமானது மறைத்துநிற்கும்

இகலி வருமி ைய யுணரி னிரு ள்வெளியாந் தன் மை யெய்தும்.

இங்ஙன மாறுபட்டுவருகிற வானவமலமு மாயாகாரியமும் விசாரித்தறிப்பார்க்குமிடத் திருளையு மொளியையு முவமிக்கிற குறியை யுடைத்தா யிருக்கும்

• இவை தன் செய்தி

இந்தமலங்களின் முறைமை யிப்படியாயிருக்கும். அன்றியு மிந்தப்பதத்துக்கு இங்ஙனஞ் சொல்லப்பட்ட செய்யுளோந்துங் கேவலத்தின் முறைமையாமென்று பொருளுரைப்பினுமாம். அஃதாவது "ஓங்கிவரும் பலவுயிர்கள்" என்ற செய்யுளில் "ஈங்குவரும்" என்ற பதந்தொடங்கியிவ்வளவுங் கேவலாவத்தையின் முறைமையைச்சொல்லுகையிறு லெனவறிக. மேற்சகலாவத்தைக்குச் சுத்தமாயையிற் காரியமாகிய விந்துசத்தியிற்றோற்றமாகிய வாக்குகள் காரியப்படுமுறைமை யருளிச்செய்கின்றது.

இலங்கும் விந் திபகர்வியவுண் ர்வாக் யொளியா யுள்ளப்பான்மை யிறு லொருநாத ம் படருந்தானே

விளங்காநின்ற விந்துசத்தி சொல்லுதற்கரிதாகிய வறிவுடாய் விளக்கமுமா யான்மாக்களிடத்திலே யவரவர்களுக்குண்டான கன்மங்களுக்கீடாக வாக்குகளைத் தோற்றுவிக்கைப் பொருட்டாக வொருநாதத்தை யுண்டாக்கும். எ – று.

உ–ம். புகலுமலமொழித்தற்குக் கலாதிமுந்நான்மாலையொருங்கியிடம். எ–கு. ஆணவமலபாகம் வருகைக்கு மாயாகாரியங்களான்மாவைவந்து பொருந்துமென்றைக்கிய வாதினை மறுத்தற்கு. பி–ம். சிவஞானபோதத்தில் "மாயாதனுகரணாதி யினைமல மலமலத்தாற், கழுவுவனென்றுசான்ற காரணமென்னை யென்னிற், செழுங்கலை யறுவைசாணி யுவர்செறிவித் தழுக்கை, முழுவதுங் கழிப்பன்

மாணை கொடுமலமொழிப்பன் முன்னேனன்." எ-ம். கண்டுகொள்க.

இனி தருமருனை மலமுயிர்கள் சாராமன்மறைக்கும். எ-கு. அருளானது விகாரப்படாது நிர்விகாரியாயிருக்கும், ஆன்மாத் தானேவிகாரப்பட்டறியுமென்கிற வவிகாரவாதியைநோக்கி மறுத்துச் சொன்னதாகவுமாம். இதற்கு. பி-ம். சங்கற்ப நிராகரணத்தில். "நீர்நிழலனைய சீர்பெறுகடவுளைச் - சேர்ந்தவர்க்கின்பம் வாப்ந்திடுமென்றனை - பாத்வமென்றுஞ் சேதனமின்மையி-னிழைத்தோர்வம்மி னென்பதுந்துன்பம் - விளைத்தோர்தம்மில் வெறுப்புமொன்றிலதே." எ-து. கண்டுகொள்க.

இனி இருள்வெளியாந் தன்மையெய்தும். எ-து. ஆணவமலத்துக் கான்மாவைமறைக்கிறது சுபாவம் மாயாகாரியமான கலாதிகளுக் கந்தமறைப்பை நீக்குகிறது சுபாவம்என்றுபொருட் கூறியதற்கு. பி-ம். சித்தியாரில். போதகாரிய மறைத்து நின்றது புகல்மலங்கா, ணேதலாங் குணமுமாக வுயிரினில் விரவலாலே, காதலா லவித்தைசிந்தத் தருங்கலை யாதிமாயை, யாதலாலிரண்டுஞ்சோதி யிருளென வேறுமன்றே." எ-து. கண்டுகொள்க.

இனி இலங்கும் விந்து பகர்வரிய வுணர்வாகி. எ-கு. விளக்கத்தைச்செய்கிறவறிவுமாயென்று பொருட்கூறிய தேதென்னில்? இது மூவகை யான்மாக்களுக்கு மறிவைக் கொடுக்கையிலுலே யெனவறிக. இதற்கு. பி-ம். சித்தியாரில். "மூவகை யான்மாக்களுக்கு முறைமையால் விந்துஞான, மேவின தில்லையாயின் விளங்கிய ஞானமின்றும்." எ-து. கண்டுகொள்க.

இனி உள்ளப்யான்மையினு லொருநாதம் பட்டும். எ - து. சூக்குமை வாக்கெனவறிக. இதற்கு. பி-ம். சித்தியாரில். "சூக்குமைவாக்கதுள்ளோர் சோதியாயதுவுன்றி." எ - து. கண்டுகொள்க.

இதனுற்சொல்லியது ஆணவமலநீங்குதற்கு மாயாகாரியமா னகலையாதித்தத்துவங்களைச் சிவன்கூட்டுவனென்றும் அப்படிக்கூ ட்டியறிவிக்கிறசிவனே யான்மாவறியாதபடி யாணவமலமறைக்கு மென்னு முறைமையும்இங்ஙனங் கேவலாவத்தையைமுடித்துமே ற்சகலாவத்தையிற் சூக்குமை வாக்குத்தோற்றுமுறைமையு மறி வித்தது.

(உரு)

வேறு—இது சகசமலநீங்குதற் காகந்துகமலம்வேண்டுமெ ன்பதனுளுஞ் சகலாவத்தை நிகழ்தற்குச் சுத்தமாயையிற்றோன்றிய வாக்குநாலிற் சூக்குமைவாக்கு மூலாதாரத்தைப்பொருந்திய விக் துவினின்றுந் தோன்றுமென்பதனு முணர்த்திற்று.

புகலுமல மொழித்தற்கு - அங்ஙனஞ் சொல்லப்பட்ட வா ணவமலம்போக்குதற் பொருட்டாக,—அரனருளால்-கருத்தாவி னருளுலே,—கலாதிமுதன் மாயைபொருந்தியிடும் - கலாதிமு தலிய மாயாகாரியங்க ளாத்மாக்களைப்பொருந்தும்,—போதம்-சு த்தமிச்சூராசுத்தமென்று பின்னமாயிருக்கிற தத்துவங்களா லவ் வுயிர்கட் கறிவுவிளங்கும்படி, — தீபஞ்சகலமெலா முடலுயவா றுபோலும் - தீபமானது சகலமாய தண்டு தகழி நெய் திரி யெல் லாவற்றுடனும் பிரகாசமானபடிபோலும்,—தருமருூள மலமுயி ர்கள் சாராமன்மறைக்கும் - இப்படி கூட்டுகின்றவருூள யாத்மா க்கள் பொருந்தாதபடி யவ்வாணவமலமறையாநிற்கும்,—இகலிவ ரு மிவையுணரி னிருள்வெளியாந்தன்மை-இப்படி மாறுபட்டுவரு மாணவமு மாயையும் விசாரிக்குமிடத்தி லிருளும் வெளியுமான முறைமைபாயிருக்கும்,—எய்தம்வகைதன்செய்தி - இப்படிபொ ருந்திப்போதுகின்ற தன்மாத்திரையே முறைமை,— இலங்கும் வித்து - இனிச்சகலாவத்தை நிமித்தமாக மூலாதாரத்திலே வி ள

ங்காதின்ற விந்துக சத்தியிலேநின்றும்,—பகர்வரிய வுணர்வாகி யொளியாய் - சொல்லுதற்கரியவறிவாய் விளக்கமாய்,—உள்ளப் பான்மையில்-ஆத்மசொரூபத்தி னியல்பே துவாக,—ஒருநாதம்ப டரும்-ஒப்பற்ற சூக்குமைவாக்குப் புறப்பட்டுத் துரியத்திற்செல் லும். எ-று.

விந்துவினெனவிரிக்க. தான்அசை. நாதமென்று சூக்குமை க்கும் விந்துவென்று பைசந்திக்கும்பெயர். இதற்குமுன்நூலி னவ்வுடனுவ்வுமவ்வு மனம் புத்தியாங்காரங்கள் செவ்விய விந்து நாதஞ்சித்தமோடுள்ளமாகு மென்பதனுலே நாதமுள்ளத்தையதி ஷ்டித்து நின்றுவிளக்குமென்பதறிக. உள்ளப்பான்மையிரலொ ருநாதம் படருமென்றார், உள்ளமாவ தாத்மா. இச்சாஞானக்கிரி யைகளைவிளக்குங் கலேழுதலிய கருவிகளின் சூழுகமாதலி னுள் ளப்பான்மையிரு லென்றதற் கவ்வாறுரைத்தாம். காலோத்தரா கமத்தில் என்றதனு லுள்ள மாத்மவிக்ரகமாம். சூக்குமைமுதலிய வாக்குநான்கு மொன்றிலொன்றுகவு மொன்றுகலகொன்று தலைமா கவும் பிறத்தலி லெருநாதமென்றார். பான்மையிரலென்பது ம னைழயிரற் றெய்வம் பராவிரு ரென்றதுதோலநின்றது. விந்துப் படருந்தானே என்பதற்குச் சிலர்விந்துவிலேநின்றுஞ் சூக்குமை வாக்குத்தோன்றி யுணர்வாயொளியா யாத்மாவின் பகுதியாலே யொருநாதமாய்த் துரியத்தானத்தைப் பொருந்துமென்றும், சிலர் விந்துச்சத்தி யறிவாயறிவிப்பதுமா யாத்மாவின் பகுதியாலே நாலுவாக்கையுந் தோற்றுவித்தற்பொருட்டு அதிலேலயொருநாதந் தோன்றுமென்று முரைப்பர். இனி அருளாற்போலுமென ஒருப டாக்கிக் கருத்தாவா லிவன்போதஞ் சீவிக்கும்படி விளக்கைக் கொண்டு பலபொருளையுங் காண்பதுபோலு மென்றும் இகலிவ ருந்தன்மை என்பதற் கிப்படி மாறுபட்டுவருகிற வானவத்தையு மருளையும் விசாரிக்கலென்று முரைப்பாருமுளர். சகலமாருபெயர்.

மேற் பைசந்தி மத்திமை வைகரியென்னும் வாக்குகள்மூன்றுங் காரியப்படுமுறைமை யருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

வந்தடைந்து பின்னமாய்ப் வன்னங்கடோற்றம் வருமனைடவு படவெடுக்கி மாயிலண்டசலநேர், சிந்தைதனி லுணர்வாகும் பைசந்திபுயிரிற் சேர்ந்துவரு மவைமருவு முருவெவைவயுந்தெரித்து, மூந்தியிடுன் செவியிலுறு துள்ளுணர்வாயேயாசை முழங்கியிடு மத்திமைதான் வைகரியிலுதானன், பந்தமுறு முயிரணைந்து வந்தமொழிச்செவியின் பாலணைய நினைந்தபொருள் டாகருந்தாமே. (உசு)

சூக்குமைமுதலாச் சொற்பதமீரு
வாக்கிடம்வாக்கி னைடவினவகுத்தது.

(இ-ள்.) வந்தடைந்து பின்னமாய் வன்னங்கடோற்றம் வருமனைடவு படவெடுக்கி மாயிலண்டசலநேர், சிந்தைதனி லுணர்வாகும் பைசந்திபுயிரிற் சேர்ந்துவரு மவைமருவு முருவெவைவயுந்தெரித்து, மூந்தியிடுன் செவியிலுறு துள்ளுணர்வாயேயாசை முழங்கியிடு மத்திமைதான் வைகரியிலுதானன், பந்தமுறு முயிரணைந்து வந்தமொழிச்செவியின் பாலணைய நினைந்தபொருள் டாகருந்தாமே.

அந்தநாதமாகிய வறிவுதானேவழிவாகச் சூக்குமைவந்து உந்தித்தானத்திலே பொருந்தி வெவ்வேறுபிவருமக்கரங்களினுடையொருபங்கடோன்றுமுறைமை தெரியாதபடி மறைத்துநிற்கும்

மயில்முட்டைக்குள் ஜலமானது புறம்பே மயிலினிறமாய்ச் சொரூபீகரிக்குதத்தோன்றச் செய்தே யுடைத்தால் ஜலமாய் விடுமாப்போல

பைசந்தி வாக்கானது ஆன்மாவினிடத்திலே சிவசுமாத்திரமாய் நிற்கும்

சிந்தைதனி லுணர்வாகும் பைசந்தி

மாயிலண்டசலநேர்

பின்னமாய் வன்னங்கடோற்றம் வருமனைடவு படவெடுக்கி

உயிரிற் சேர்ந் துவரு மவைமரு வு முருவெவையு ந்தெரித்து முந்தி யிடுஞ் செவியி லுரு துள்ளுணர்வா யோசை முழங்கி யிடு மத்திமைதா ன்

மத்திமைவாக்கானது மேற்சொல்லப்போ கிற வக்கரங்களினுடைய சொரூபங்களைப் பி ராணவாயுவோடுங்கூடி யொழுங்குபடநிறுத் திச் செவிக்குங்களாதே யான்மாவினிடத்தி லே யுள்ளறிவுமாய்த் தொனியுமுன்டாய் முற் படடுநிற்கும்

வைகரியிலுதா னன் பந்த முறு முயிரணைந்து வந் தமொழிச் செவி யினடாலணைய நி லும். எ-று. னைந்தபொருள் ப கருந்தானே.

வைகரிவாக்கானது முற்கூறிய பிராணவா யுவோடுங்கூடிவந்து உதானவாயுவிலேயும்பந் தித்துச் செவிப்புலனிடத்திலே கேட்கத்தக்க தாக நினைவிலுண்டான வசனத்தைச் சொல் லும். எ-று.

நு-ம். இங்ஙனஞ் சொல்லப்பட்ட வாக்குகளுக்குத் தான மும் வடிவுமாவது சூக்குமைக்குத்தான காபியடியு காதத்துவம் வடிவுமெனவறிக.

பைசந்திக்குத்தானம் உந்தியும் பிராணவாயு வடிவுமென வ றிக.

மத்திமைக்குத்தான நெஞ்சுங்கண்டமுமாய்நின்று பிராண வாயுவடிவுமெனவறிக.

வைகரிக்குத்தானம் தாலுமூலமும் பிராணவாயுவு முதான வாயுவும் வடிவெனவறிக.

ஆக விங்ஙனஞ்சொல்லப்பட்ட வாக்குகளுக்கும். பி-ம். சித்தியாரில். "சூக்குமைவாக்கதுள்ளோர் சோதியாயதிவதின்றி"

எ-ம். "வேற்றுமைப்பட்ட வன்னம்." எ-ம். "உள்ளுணர்வோ சையாகி." எ-ம். "வைகரி செவியிற்கேட்பதாய்." எ-ம். வரும் விருத்தநாலையு மொட்டிக்கண்டுகொள்க. இந்தவைகரிவாக்குக் காரியப்படு மிடத்து நாக்கு உண்ணுக்கு பல்லு உதடு மூக்கு இவை யோடுங்கூடி நின்று காரியப்படுமென வறிக. இவையிற்றுக்கு. பி-ம். நேமிநாதத்தில். "உந்தியிற்மூன்றி யுதானவளிபிறந்து, கந்தமலிமெஞ்சுதலைகண்டத்து - வந்தபின், ஞசிநாவண்ணமிதழெயிறு மூக்கென்னப், பேசுமெழுத்தின் பிறப்பு." எ-து. கண்டுகொள்க.

ஆக விங்ஙனஞ் சொல்லப்பட்ட விந்தவாக்குகணலுந் தோன்றுகைக்குக் காரணமாகப் பஞ்சமையென்மூரு வாக்குண்டென்று மதற்குத்தானம் மூலாதாரமென்று மதுபிரணவ சொரூபமாயிருக்குமென்றுஞ் சொல்லுவாருமுளர். அதனையாராய்ந்து கண்டுகொள்க.

இந்தவாக்குகள் காரியப்படு மிடத்துச் சாந்தியாதீதமுதலான கலைகளைந்திலேடும் பற்றுக்கோடாகநின்று காரியப்படுமென வறிக. அப்படிக் காரியப்படுமிடத்துப் பராசத்தியுந் திரோதசத்தியு மிச்சாசத்தியு ஞானசத்தியுங் கிரியாசத்தியுங் கூடிநின்று காரியப்படுத்துமெனவறிக.

இதில் சூக்குமைவாக்குக்குச் சாந்தியாதீதகலையுஞ் சாந்திகலையும் பற்றுகநிற்கப் பராசத்தியுந் திரோதசத்தியுங் காரியப்படுத்துமெனவறிக.

இனி பைசந்திவாக்குக்கு வித்தியாகலை பற்றுகநிற்க விச்சாசத்தி காரியப்படுத்துமெனவறிக.

இனி மத்திமைவாக்குக்குப் பிரதிட்டாகலைபற்றுகநிற்க ஞானசத்தி காரியப்படுத்துமெனவறிக.

இனி வைகரிவாக்குக்கு நிவிர்த்திகலைபற்றுகநிற்கக் கிரியாசத்தி காரியப்படுத்துமெனவறிக.

அன்றியு முற்கூறியபஞ்சமையென்னும் வாக்குக்கூட்டுகில்ப
ராசத்தியுஞ் சாந்தியாதிதகலையு மதற்குக் கூட்டிக்கொள்க.

இங்ஙனஞ் சொல்லப்பட்ட வாக்குகணலுங் கலைகளைந்தி
லேடுங்கூடிக் காரியப்படுமென்பதற்கு. பி-ம். சித்தியாரில். "நி
கழ்ந்திடும்வாக்குநான்கு நிவர்த்தாதிகலையைப்பற்றித், திகழ்ந்தி
டுமைஞ்சதாக." எ-து. கண்டுகொள்க. இதனுள் நிகழ்ந்திடும்வாக்
குநான்கு மென்றதுகொண்டே— நிகழாதவாக்குமொன்றுண்டென்
பது கருத்தாகப் பஞ்சமைபென்னும் வாக்குண்டானதெனவறிக.
இங்ஙனங் கூறப்பட்டவையிற்றில் சத்திக ளிவையிற்றைக்காரிய
ப்படுத்துமெனவறிக. இதற்கு. பி - ம். இந்நூலில். மேல்வருகிற
"இத்தகைமை யிறையருளால்" என்னும் விருத்தத்தை முடிய
வொட்டிக் கண்டுகொள்க.

இனி யுயிரிற்சேர்ந்தவருமவைமருவும். எ-து. உயிரென்பது
கொண்டே ஆன்மாவென்பாருமுளர்; அது பிராணவாயுவெனவ
றிக. அப்படிப் பிராணவாயுவை யுயிரென்பதற்கு. பி-ம். சித்தி
யாரில் வாக்குகள் காரியப்படுமிடத்துச் சொன்னவிருத்தத்தில்.
"உள்ளுணர்வோசையாகிச் செவியினிலுறுதல்செய்யா, தொள்ளி
யபிராணவாயு" எ-ம். "ஐயமில்பிராணவாயு வடைந்தெழுந்தடை
வுடைத்தாம்." எ-ம். கண்டுகொள்க. உயிர்வாயுவென்றுஞ் சொல்
லுமென்பதற்கு. பி-ம். "உயிரொலிவங்கூழ் சலநம்வாதம் வளி
மாருதம்." என்னுமிலக்கணங்களினுங் கண்டுகொள்க.

இதனுற்சொல்லியது சூக்குமைவாக்கு நாதவழிவாக வந்தி
யைவந்துகூடியாதாமொன்றைச் சொல்லுமிடத்துப் பைசந்திவா
க்கானது அந்தவசனத்துக்குரித்தாகிய வக்கரங்களை மயில்மு—
டையில் ஜலம்போலத் தோற்றுவித்து நிற்குமென்றும் மத்திமை
வாக்கானது பிராணவாயுவையுங் கூடியுள்ளே தொனியாய் நிற்
குமென்றும் வைகரிவாக்கானது பிராணவாயுவோடு உதானவாயு

வையுங் கூடிச் செவிப்புலனுக்குக் கேட்பதாக வசனிக்குமென்னும் வருமுறைமையை யறிவித்தது.. (உசு)

வேறு— இஃ தேனவாக்குமூன்றின் காரியப்பாடு முணர்த்திற்று.

பைசந்திவந்து - பைசந்திவாக்கான தந்தநாதத்திலேதான்றி,—அடைந்து - சுழுத்தித்தானத்தைப் பொருந்தி,—பின்னமாய் - வெவ்வேறுய்,—வன்னங்கடோறற்றம் வருமடைவுபடவொடுக்கி - அக்கரங்கடோன்றுகின்ற முறைமை தெரியாமற் றன்னுள்ளேயொடுக்கி,—மயிலண்டசலநேர் - மயில்முட்டையிற் சலமொப்பாய்,—சிந்தைதனி லுணர்வாகும் - சித்தத்திலே யறிவாய்நிற்கும்,—மத்திமைதான் - மத்திமைவாக்கானது,—உயிரிற்சேர்ந்து வருமவைமருவு முருவெவையுந்தெரித்து-பிராணவாயுவுடனேபொருந்திவருகின்ற வவ்வக்கரங்கள் பொருந்திய சொருபங்களெல்லாவற்றையு மவற்றின் பொருள்களையும் புந்தியிலே யொழுங்குபடநிறுத்தி,—முந்தியிருஞ்செவியி லுறுது - ஞானேந்திரியங்களின் மூற்பட்டுவருஞ் செவிக்குக் களாமல்,—உள்ளுணர்வாயோசை-உள்ளேயறியத்தக்க தொனியாய்,—மூழங்கியிடம் - கண்டத்திலே மூழங்காநிற்கும்,—வைகரியினுதானன் டந்தமூறுமுயிரணைந்து வந்தமொழி - வைகரியிலே யுதானவாயுவானது சுழுமுனையிற்சேரும் பிராணவாயுவோடு கூடுதலாலே வந்தசத்தமானது,—செவியின் பாலணைய-சொல்லுவோன் செவியினிடத்திலே பொருந்தும்படி,—நினைந்தபொருள் பகருந்தானே - அவ்வைகரியான தவனினைந்த பொருளைச்சொல்லும். எ-று.

தான் அசை. ஏராயெனவிரிக்க. இந்தவாக்குநான்குஞ் சுத்தாத்துவாவிற் சூக்குமமாகவு மிச்சிராத்துவாவிற் றூலமாகவு மசுத்தாத்துவாவிற் றூலதரமாகவுஞ் சீவிக்குமெனவறிக. பைசந்தி

சித்தத்தை யதிஷ்டித்து விளக்குதலிற் சிங்கைதனி லுணர்வாகு மென்றார்.

இவ்வாக்குக ணலோடுங்கூடி யான்மா வருளாலேகாரியப்ப டுமிடத்துச் சுத்ததத்துவங்களைந்திலுலே காரியப்படுமென்று மத்துச் சுத்ததத்துவங்களிலேயசுத்தமாயையிற் ரோற்றப்பட்ட கலி யாதித்துவங்களிற் கலையும் வித்தையுங் காரியப்படுமுறைமையு மேலருளிச்செய்வா னெடுத்துக்கொண்—ருளியது.

இத்தகைமை யிறையருளா லுயிரறியுமறிவுக் கீடாக வாடாதே யீரிரண்டிலுரைத்த, வித்தைமுத லிலவான் விளங்குரான மேவியிடுமெனவுணைப்ப ரசுத்தமாயை, வைத்தகலை தான்மூல மலஞ்சிறிதேதங்கி மருவும்வகை தெரிவிக்கும் வாயில்களின்பயனைப், புத்திதர வித்தையிடை நின்றறிவையுயிர்க்குப் பொருந்தியிடும் வகைபுணரும் புனிதசத்தி புணர்ந்தே. (உஎ)

சுத்ததத்துவத்தாற் ரெல்லுயிருணர
வைத்திடுங்கலைவித்தை மருவுமென்றது.

இந்தமுறைமையாலே கெடாதேவருகிற வாக்குகணலினுங்கூடித் தம்பிரானர் காருண்ணியத்திலுலே யாண்மாவறியுமறிவுக்குத்தக்கதாக

(இ-ள்.) இத்த கைமையிறையரு ளாலுயிரறியுமறி வுக்கீடாகவாடா தேயீரிரண்டில். அறுவகம். இத்த கைமைவாடாதே யீரிரண்டிலிறை யருளாலுயிரறியு மறிவுக்கீடாக

உரைத்த வித் தைமுத லிவரா ன் விளங்கு ஞா னமேவியிடு மெ ன வுரைப்பர்

முன்னே சுத்தமாயையிற் ரோற்றமாகச் சொல்லப்பட்ட சுத்தவித்தை ஈசுரன் சாதா க்கிடஞ் சத்தி சிவமென்கிற தத்துவங்களோந்தி ருலும் பிரகாசிக்கிறவறிவு பொருந்தியிடுமெ ன்று பெரியோர்கள் சொல்லுவார்கள். அன்றி யும்,

அசுத்த மாயை வைத்த கலைதான் மூலமலஞ்சிறிதே நீக்கி மருவும் வ கை தெரிவிக்கும் வாயில் களின் ப யனே

அசுத்தமாயையிலே யுண்டாகப்பட்ட கலை யானது அந்தச்சுத்ததத்துவத்திற் சத்திதத்து வ முதவியாகக்கொண் டான்மாவை மறைக் கப்பட்ட வாணவமலத்தைச் சற்றேபொதுக் கியிந்திரியங்களின் பயனாகிய விடயங்களோடா ன்மாப்பொருந்தும்படி யெழுப்புவிக்கும்

புத்திதர வித் தையிடை நின்ற றிவை யுயிர்க்குப் பொருந்தி யிடும் வகைபுணரும். அ நுவயம். வித்தை யிடை புத்திதர வுயிர்க்கு நின்ற றிவு பொருந்தி யிடும் வகைபுண ரும்

சுத்தமாயையிற் ரோற்றமாயுள்ள சுத்த வி த்தை யுதவியாகக்கொண்டு சொல்லப்பட்ட வசுத்தமாயையிற் ரோற்றமாயுள்ள வித்தை யானது அந்தவிடயங்களை யான்மாக்கொள் ளுமிடத் தின்னதென்று நிரூபித்தறியத்தக்க ஞானத்தை யான்மாவுக்கும் விடயங்களுக்குந டுவேநின்று அறிவுண்டாம்படி கூட்டும். இது தான் கூட்டுமுறைமை யாராலே யென்னில்

புனிதசத்தி பு ணர்ந்தே.

சுத்தரெகிய சிவனுடையசத்திக டொழிலா கட்டுவன்றுநின்றுசெலுத்த வதரேறுங் கூடிக் கொண்டுநின்று. எ-று.

நு - ம். உரைத்த வித்தைமுதலிலவரான் விளங்குஞானம். எ-கு. சுத்ததத்துவமைந்திலு மான்மாக்களுக்கு ஞானமுண் டாமென்கிற தெங்ஙனே யென்னில் சிவசத்திகள் சுத்ததத்துவங் களைக் காரியப்படுத்தச் சுத்ததத்துவங்க ளைசுத்தமாயையிற் கலா திகளைக் காரியப்படுத்த அவையிற்றிலுலே யான்மாக்களுக் கறிவுண்டாமென்றதெனவறிக. அம்நாவது கிரியாசத்தி சுத்திதத்துவத்தை யெழுப்பச் சுத்திதத்துவங் காலமுநியதியுங் கலையுமெழுப்பக் கலை தழற்பொடி நீங்கிணற்போல வாணவமலத்தைச் சிறிதுநீக்கி யந்தக் கலையே வழிவாச வான்மாவுக்குச் சிறிதறிவையுண்டாக்க ஞானசத்தி சுத்தவித்தையை யெழுப்ப சுத்தவித்தை வித்தையையெழுப்ப வித்தை யான்மாவுக் கறிவையுண்டாக்குமென்றதெனவறிக.

இனி புத்திதர வித்தையிடைநின்று எ-கு. புத்திதரவென்பதை புத்திதத்துவமென்பாருமுளர், அதுபொருளாகாதெனவறிக. "புந்தி பஞ்சாசற்பாவகமும் பண்ணிவிக்குந் தானே" என்று புத்திதத்துவத்தின் காரியப்பாடு பின்பேவருகையால தனை யிவ்விடத்துக் கூறவேண்டுவ தில்லையெனவறிக. ஆகையால் புத்திதரவென்பதை யான்மா வந்தவிடயங்களை நிரூபித்தறியவென்று பொருட்கூறுமதே வழியெனவறிக.

இதனுற்சொல்லியது முன்னர்ச்செய்யுளிற் கூறிய வாக்குகளிலு மான்மாக்களறியுமிடத்துச் சிவதத்துவங்களிலுலே யறியுமென்று மவையாலே யசுத்தமாயையிற் கலையும் வித்தையுங் காரியப்படுமுறைமையையு மறிவித்தது. (உஎ)

———o———

வேறு—இது சுத்த தத்துவமைந்தும் வாக்குகாலையுங் கொண்டாத்மாவுக் கறிவையுண்டாக்கு முறைமையு மசுத்தமாயா தோற்றமான கலைவித்தைகளின் காரியப்பாடு முணர்த்திற்று.

இத்தகைமை - இந்தமுறைமையிலே,—உரைத்த வீரஞ்யுன் - சொல்லப்பட்ட காலுவாக்கிருலே,—வித்தைமூதலிவரால் - சுத்தவித்தை முதலான தானங்களிலே யிருக்குமைவராலே,—உயிரறியு மறிவுக்கிடாக - ஆத்மாக்களறிகிறவறிவுக்கிடாக,—இறையருளால் - பரமசிவனருளாலே,—வாடாதே-கெடாதே,—விளங்குஞான மேவியிதமெனவுறைப்பர் - விளங்காநின்ற ஞான மவ்வுயிர்க்குப்பொருந்து மென்று பெரியோர்சொல்வர். அஃதெப்படியெனின் நாதத்தத்துவ மூலாதாரத்தையும் விந்து நாபியையுஞ் சாதாக்கிய மிதயத்தையு மதிட்டித்துச் சூக்குமைமுதலான மூன்றையும் பிரேரிக்கும், ஈசுரமூஞ் சுத்தவித்தையுந் தன்செவி பிறர்செவிகட்குக்கேட்கும் வைகரி யிருவித்தத்தையுங் கண்டத்தையு மூகத்தையு மதிட்டித்துக்கொண்டு பிரேரிக்குமெனவறிக. இனி,—அசுத்தமாயை வைத்தகலைதான் மூலமலஞ் சுறிதேநீக்கி மருவும்வகை தெரிவிக்கும் - அசுத்தமாயை யுண்டாகிய கலையான தாணவமலத்தைச் சற்றே நீக்கி யாத்மாவுக்குக் கிரியாசத்தி பொருந்துமுறைமையை விளக்குவிக்கும்,—வித்தை-வித்தையானது,—வாயில்களின்பயனைப் புத்திதர - இந்திரியங்களின் விடயங்களைப் புத்திகரத்துத் தன்பாற்கொடுக்க,—இடைநின்று-தாரதம்மஞானத்துக்கும் புத்திக்கு மிடையேநின்று.—அறிவைப்பொருந்தியிடும் வகையுயிர்க்குப்புனரும் - விடயஞானத்தை யாத்மாப்பொருந்தி யறியும்படியவ்வாத்மாவுக் கந்தரங்கமாகப் பொருந்தும். இவை தாமாகச் செய்யவல்லனவோ வெனின்,—புனிதசத்தி புனர்ந்தே-சுத்தனுடைய சத்தியைக் கூடுநின்றே செய்யும். எ - று.

புனைந்தகலைதெரிவிக்கும் எனமுடிக்க. அந்தரங்கமாகவெனவும் கிரியாசத்தியெனவும் வருவித்துரைக்க. கலைவித்தையிலு மாத்மாவுக்கந்தரங்கமான கருவியாதலிற் போகங்

களுக் காதாரமாயிருக்கும். மட்குட மக்கினியிற்காய்ச்சின போது மெழுகுகூட்டுகைக்கு யோக்கியமாலுற்போல வாத் மாவுங் கலையைப்பொருந்தினபொழுது போகங்களைப் புரி க்கைக்குப் பாத்திரமாவன். கலையாலே கிரியாசத்திவிளங்க வே ஞானசத்தியும் விளங்குமாயினு மந்தஞானசத்தி யெரு ருகாரணங் கூடாமல் விடயங்களைக் கிரகிக்கமாட்டாமை யாலே விடயங்களை யறிவது பொருட்டாகக் கலையிநின்றும் வித்தைதோன்றிற்று. ஆத்மா வீந்திரியங்களைப்பொருந்திச் சத்தாதிவிடயங்களைக் கிரகிக்குமிடத்துப் புத்திகருவி, புத் தியிற்பொருந்திய விடயங்களை யறியுமிடத்து வித்தைகருவி யெனவறிக.

மேல் அராகதத்துவமூநியதித்துவமுங் காலதத்துவ மூங் காரியப்படுமுறைமை யருளிச்செய்வா னெடுத்துக்கொ ண்டருளியது.

பேசரிய வராகந்தன் கன்மத்துக்கீடாய்ப் பெற் றதனி லாசைதனைப் பெருகுவிக்குநியதி, தேசமிகு ம நசர்தரு மாணைசெய்தி செய்தவரைத் துய்ப்பிக்குஞ் செய்கைபோல, நேசமுறுந் தங்கன்ம நிச்சயித்துநிறு த்து நிகழ்காலங் கழிகால மெதிர்காலமென்ற, யோ சைதர வருங்கால மெல்லைபலம்புதுமை யுறுவிக்கு மி றைசத்தி புடனுய்ந்நின்றே. (உஅ)

மாலுறுமராகமு மன்னியநியதியுங்
காலமுமூன்றின் கருத்தையுமுரைத்தது.

(இ-ள்.) பேசரியவராகந்தன் கன்மத்துக்கீடாய்ப் பெற்றது சொல்லுதற்கரிய வராகதத்துவ மான் மாக்கள்செய்த கன்மத்துக்கிடாகப் பெற் றதிலே நின்றும் பெருததுக்காசையை மி கவு முண்டாக்கும்

னி ல ா ச தஜீனப் பெருகுவிக்கும் நியதி தேசமி குமரசர்தருமா ஜீனசெய்தி செ ய்தவரைத் தய் ப்பிக்குஞ் செய் கைபோல நேச மூறுந் தங்கன் மநிச்சயித்து நி றுத்தும்	நியதித்துவமானது பொதுவாக விரா ஜ்ஜியம்பண்ணு மிராஜாவினுடைய வாக் கினையைக்கொண்டுலகி லான்மாக்களை யெ ல்லைவிட்டுக்கடவாதபடி யந்தவாக்கினை யி லேநிறுத்தி நடத்து மந்திரியைப்போல வி வ்வான்மாக்கள்செய்த கன்மத்தின் வழிய ன்றி யெரக்குறையப் போகாதபடி யறுதி யாக நிறுத்தும்
நிகழ்காலங் கழிகாலமெதிர் கால மென்றே யோசைதரவரு ங்கால மெல்லை பலம் புதுமையு றுவிக்கும்	காலதத்துவமானது நடக்கிறகால மென் றுமிறந்தகாலமென்றும் வருகிறகாலமெ ன்றுஞ் சொல்லப்பட்டுப் போனகாலத்தி லுண்டாகியவெல்லையு நடக்கிறகாலத்தி லு ண்டாகிய பலத்தையும் வருகிறகாலத்தி லு ண்டாகியபுதுமையு முண்டாக்கிநிற்கும். இ வைதாரராலே யுண்டாக்குமென்னில்
இறைசத்தி யு டலுய்ந்நின்றே.	கத்தாவினுடைய திருவருளான சத்தி கூடிநின்றுகாரியப்படுத்தும். எ - று.

நு - ம். பேசரியவராகம். எ-து. ஆசையின்மிகுதி சொ ல்லுதற்காரிதென்றதெனவறிக.

கழிகாலத்துக் கெல்லையென்றது ஆண்டுதிங்கள் நா ளெனவறிக. நிகழ்காலத்துக்குப் பலனென்றது தனக்கநுப வமான புசிப்பாயுள்ள விடயங்களையெனவறிக. எதிர்காலத் துக்குப் புதுமையென்றது தானறியாததன்றி யறிந்தவற்றை யும் புதுமை யென்றதெனவறிக.

இனி இறைசத்தியுடலுயிர்நின்றே. எ - து. இச்சாசத்தி ஈசுரகத்துவத்தை யெழுப்ப ஈசுரதத்துவ மாகதத்துவத் தை யெழுப்ப அராகதத்துவ மான்மாவுக் கிச்சையையெழுப் பு மென்றதனைவறிக

இனி நியதி யாதாமொருபொருளை நிச்சயிக்குமிடத்துக் கிரியாசத்தி சத்திதத்துவத்தைக்கொண்டு நியதியையெழுப் பு நியதி யாதாமொரு பொருளை நிச்சயிக்கு மென்றதனை வறிக.

இனி காலங்கூட்டுமென்றது கிரியாசத்தி தத்துவத்தை க்கொண்டு காலத்தை யெழுப்பக் கால மான்மாப்புசிக்கு ம வதாரங்களைக் கூட்டுமென்றதனைவறிக.

இதனாற்சொல்லியது ஆன்மாவுக் காகதத்துவங் கன் மங்களுக்கிடாகப் பெற்றதைச்சிறிதாக்கிப் பெருததிலை யா சையை மிகவுமுண்டாக்குமென்று நியதித்தத்துவ மிராஜாக் தினைபோலக் கன்மத்தை நிச்சயித்து நிறுத்துமென்றுங் கால தத்துவங் கழிகாலத்தினைல்லையு நிகழ்காலத்திற் பலத்தை யு மெதிர்காலத்திற் புதுமையு முண்டாக்குமென்றும் வருமு றைமையை யறிவித்தது. (உரி)

வேறு—இது காலநியதி யராகமென்னு மூன்றின் காரி யமு முணர்த்திற்று.

பேசரியவராகம்-சொல்லுதற்கரிய வராகதத்துவமான தது,—தங் கன்மத்தக்கிடாப் பெற்றதனி லாசைதனைப் பெரு குவிக்கும்-ஆத்மாக்க டங்களுடைய கன்மத்துக்கிடாகப் பெ ற்றதிலை யாசையைமிகுவிக்கும்,—நியதி - நியதியானது,— தேசமிகு மரசர்தருமாணை - தேசங்கண் மிகுத்த வரசரா ற் கற்பிக்கப்பட்ட வாணையானது,—செய்தி செய்தவரைத் தி

ப்பிக்குஞ் செய்திபோல - யாதொரு தொழிலுச்செய்தவ ரை யத்தொழிற்கேற்ற பயன்களைப் புசிப்பிக்கு முறைமை போல,—நேசமூறுந் தங்கன்ம நிச்சயித்து நிறுத்தும் - ஆத் மாக்கண் மூன்னை விருப்பமூற்றுச்செய்த கன்மங்களை நிச்ச யம்பண்ணி நிறுத்தும்,— நிகழ்காலங் கழிகால மெதிர்கால மென்றே யோசைதர வருங்காலம்-இறப்பு நிகழ் வெதிர்வெ னச் சொல்லவருங் காலதத்துவ மானது,— இறைசத்தியுட லுய்ந்நின்று - சிவசத்தியுடன் கூடிநின்று,—எல்லாபலம் புரு மையுறுவிக்கும் - இறந்தகாலத் தெல்லையினையு நிகழ்காலத் திற் பலத்தினையு மெதிர்காலத்திற் புதுமையினையும் பொருந் துவிக்கும். எ-று.

நிகழ்காலமெனச் செய்யுளின் முடையின்பநோக்கி முதலின்றது. செய்தெதாழில். ஆணைசெய்தென்று பாட மோதி யரசர் தாங்கற்பித்த வாணைகளைச் செலுத்தி பவ்வ வர்செய்த வறுவகைத்தொழிலான் வந்த பயன்களை யவ்வ ராப்புசிப்பிக்கு முறைமைபோல வென்பாருமுளர். கலையிரு லும் வித்தையிருலும் பிரகாசிக்கப்பட்ட கிரியாசத்தி ஞான சத்திகளையுடைய வாத்மாவுக்குப் போகத்திலாசையை யெ ழுப்புதல் காரணமாக வித்தையினின்று மாகந்தான்றிற் று. இனி யராகதத்துவம் வேண்டுமோ விடயந்தானே யா சையை யெழுப்பாதாவென்னின் விடயங்களி லுள்ளபடி யறி ந்திருக்கையிலும் விர்த்தர்க் கவற்றிலாசையற்றிருக்கையா லே விடய மாசையையெழுப்பமாட்டாது. ஆயிற் புத்திருண மானவவ்வயிராக்கியந்தானெழுப்பாதா வெனின் அது புத் தியின் வாதனையாதலா லுத்மாக்களி விடயங்களிலே செலு த்தமாட்டாது, பாண்டத்திற் பற்றிய பெருங்காயவாசனை யோர்காரியத்திற்குச் செயற்படாமையின். இன்னு மந்தவாத னை தா மேலுர்காலத்திலே தனித்தனியே யனந்தமாசையையெ

ழுப்பும் அவற்றை யிவனெருகாலத்திலே யறியமாட்டாஅதி லாலாசையை யெழுப்புதற் காகதத்துவம் வேண்டுமென்ப தாம். இனி நியதியில்லாதபோதொருவன் செய்தகன்மத்தை யொருவனனுபவித்தல்கூடும், அரசராஜ்ணை யில்லாதபோதொ ருவன்செய்த போகத்தைப் பலவாலெருவ னனுபவிப்பரு தலின். ஆயிற் கன்மந்தானேநியதியாதெவெனி னதுபோக த்தைக் கொடுக்குமன்றி நியமிக்கமாட்டாது. சிவசத்தி நிய மியாதேவெனின் அஃதியாதானு மோர்தத்துவத்தை யிடை யிட்டன்றி யோர்காரியத்தை நடத்தாது, நடத்தின்மற்ரூரு தத்துவமும் வேண்டாவாய் முடிதையாலே நியதி தத்துவ நியமிக்கவேண்டும். இவனுக்கு விருப்பமின்றி யிருக்கவுஞ் சூ லமுதலிய பிணிகளைத் தப்பாதுபுசிப்பித்து நிறுத்துவது நிய தியெனக்கொள்க. இனி வாலையவ்வன விருத்தங்களை விளப் பித்து நிற்கையானும் பிறப்புக்களை யுண்டாக்குதலானு மாறி ருதுக்களினு மவ்வப் பலங்களைத் தப்பாது விளவிக்கையா லுங் காலதத்துவம் வேண்டும். இதனாற் காலதத்துவ மில்லை யென்னு மூலகாயதனும் புத்தனு நிராகரிக்கப் பட்டார்கள். இந்தக்காலம் பூத பவிஷ்ய வர்த்தமானமென மூவகைப்படு தலாலே இதனை நித்தியமென்ற கையாயிகன் வைசேடிகன் மதங்களு நிராகரிக்கப்பட்டன. என்னை ? நித்தியமாயுள்ள தொன்முயிருக்கவேண்டு மாகையாலுஞ் சேடமாய்ப் பலவா யிற் கடாதிகளைப்போல வழியுமாதலானுமென்க. உறுவிக்கு மிறைசத்தியுடனுய்நின் றென்றதனாற் காலேசுரவாதியு நிரா கரிக்கப்பட்டான், சேடந் தானுகப் பிரவர்த்திக்க மாட்டா தாகையா லெனவறிக. பெற்றதனி லாசைதனைப் பெருதுவிக் குமென்பதற்குப் பெற்றதனிற்றின்று பெருததற்க் காசையை யுண்டாக்கு மென்பாருமுளர்.

இங்ஙனஞ் சொல்லப்பட்ட தத்துவ மைந்துங் காரியப் படுகிற சமூகந்தானே புருட தத்துவமென்றும் பிரகிருதி தத் துவங் காரியப்படி மவதரத்து மூன்றுகுணமாக நின்று காரி யப்படி முறைமையு மேலருளிச்செய்வா னெடுத்துக்கொண் டருளியது.

ஐவகையா லுறுபயன்க ணுகரவருங்கால மதுபு ருட தத்துவமென் றறைந்திடுவ ரறிந்தோர், மெய்வ கைய கலாசுத்தி தனினிதற்குஞ்சுத்தி மேவியிடும் வ கைதானும் விரும்பியநூல்விளம்புஞ், செய்வகையின்ற் றொடர்ச்சியிங்குத் தோன்றுவிக்குங்குணத்தின் சேர் வபுரி பிரகிருதி திரிகுணமாமவைதா, னிவ்வகையிற் சாத்துவித ராசததாமதமா யியம்புவர்க ளொன்றிர ண்டு குணமேற்கவுடைத்தே. (உகூ)

புகன்றவற்றுல்வரு புருடதத்துவமு மகன்றமானு மதன்குணம்விரித்தது.

(இ-ள.) ஐவகையா லுறுபயன்கணுகரவருங் கால மதுபுருட தத்துவமென்ற றைந்திடுவ ரறிந்தோர் மெய்வகைய கலாசுத்தி தனினிதற்குஞ்சுத்தி மேவியிடும் வ

ஆன்மாவானது காலம் நியதி கலை வித் தை யாக மிவையைந்துந் தனக்குடம்பா கக்கொண் டிந்திரியங்களுடனேசூடிச் ச த்தாதிவிடயங்களைப் புசிக்கவருகிறவத ரத்தைப் புருடதத்துவமென்று சொல்லு வார்கள் பெரியோர்கள்

உண்மையாகச் சொல்லப்பட்ட மந்திர முதலானவைந்து நிவர்த்திமுதலான கலை களைந்தினுமடைந்த சுத்திபண்ணுமிடத் திற்புருட தத்துவத்தையுஞ் சுத்திபண்

ணைதானும் விரும்பிய நூல்விளம்புபும்

ணைப்படுமென்று நம்மால் விரும்பப் பட்ட திவ்வியாகமங்கள் சொல்லும். அன்றியும், மெய்வகையகலாசுத்தி. எ-கு. மெய்யாகியசரீரத்தி லுவகைப்பட்ட கலாசாதனை செய்யுமிடத்து மெனவறிக

செய்வகையின்குறுடர்ச்சியிங்குத்தோன்றுவிக்குங் குணத்தின் சேர்வுபுரிபிரகிருதிதிரி குணமாம்

ஆன்மாக்கள் மூன்ஜாநத்திற் செய்த கன்மத்துக்கேதுவாயுள்ள சுகதுக்கங்களினியிப்பொழு துண்டாக்குங் குணங்களின்வடிவாய்ப்பொருந்துகிற பிரகிருதி மூன்றுவகையாகிய குணமாம்

அவைதான் இவ்வகையிற் சாத்துவிதராசததாமதமாயிய ம்புவர்கள்

அந்தக்குணங்களின் பெயராவன? இந்த முறைமையிலே சாத்துவிதகுணமென்றும் இராசதகுணமென்றும் தாமதகுணமென்றும் பெரியோர்கள் சொல்லுவார்கள்

ஒன்றிரண்டு குணமேற்கவுடைத்தே.

இந்தக் குணங்கள் மூன்றுக்கும் மொவ்வொன்றுக்கிரண்டுகுணமாக வாறுகுணமும் மதாதியே பொருந்துமியல்பினையுடைத்து. எ-று.

நூ-ம். மெய்வகையகலாசுத்தி. எ-கு. மெய்யாகியசரீரத்தி லுவகைப்பட்டகலாசாதனைசெய்யுமிடத்து மென்னவுமாமென்று பொருட்கூறியதேதென்னில் ஆசாரியன் தீக்ஷை செய்யுமவதாரத்துக் கலாசாதனைசெய்யவேண்டுகையாலுத்தரு நிவர்த்திமுதலான கலைகளைந்தினையுஞ் சிடன்சரீரத்தி லேயைவகைப்படுத்திச் செய்யவேண்டுகையாலப்படிசொன்னதெனவறிக.

அதற்குவகை யெங்ஙனேயென்னில் மூலாதாரந்தொட ங்கி யுந்திக்குமே லெண்விரலளவு நிவர்த்திகலைத் தெவ்வி யெனவறிக. அதற்குமண்டலம் அக்கினிமண்டலம். ஆதாரம் மூலாதாரமூஞ் சுவாதிட்டானமும். அக்கரம் அகாரம். பிர காசஞ் சொரிதழற்கொழுந்து. மலம் மாயாமலம். அவத்தை சாக்கிரம். மாத்திரை-ங. மந்திரம் இருதயமூஞ் சத்தியோ சாதமும். பதம் ஓம்நமோ மூதல் மாதேவாந்தமாக-உஅ-ம். வன்னம் கூகாரமொன்றும். புவனம் காலக்கினிமுதல் வீரப த்திரர் மூடிவாகிய - ஈஅ - ம். தத்துவம் பிருதிவியான் றும். தெய்வம் பிரமா. தொழில் சிருஷ்டி. என்றிங்ஙன நிவ ர்த்திகலைக்குக் கண்டுகொள்க.

இனி பிரதிஷ்டாகலைக்கு ஹ்ருதயந்தொடங்கி கண்டத் தளவு மெல்லெனவறிக. அதற்கு மண்டலம் ஆதித்தமண் டலம். ஆதாரம் மணிபூரகம். அக்கரம் உகாரம். பிரகாசம் அக்கினியு மாதித்தனுங் கூடின பிரகாசம். மலம் சன்மமலம். அவத்தை சொப்பனம். மாத்திரை-உ. மந்திரம் சிரசும் வாம தேவமும். பதம் மஹாசுரமூதல் அருபுனிமுடிவாகிய-உக-ம் வன்னம் ஹ்ஓ முதல் டூ அந்தம்-உசு-ம். புவனம் அமரேசர் முதல் சிகண்டிமுடிவாகிய - ருசு - ம். தத்துவம் ப்ருதிவி நீங்கலாக ஆன்மதத்துவம்-உஙு-ம். தெய்வம் விஷ்ணு. தொ ழில் திதி. எனறிங்ஙனம் பிரதிஷ்டா கலைக்குக் கண்டுகொ ள்க.

இனி வித்யாகலைக்குக் கண்டத்துக்குமேல் தாலுமூல த்தளவு மெல்லெனவறிக. அதற்குமண்டலம் ஆ தித்தமண் டலம். ஆதாரம் அநாகதம். அக்கரம் மகாரம். பிர காசம் மின். மலம் மாயேயமலம். அவத்தை சுழுத்தி. மாத்தி ரை - க. மந்திரம் சிகையு மகோரமும். பதம்வியாபினிமுதல்

தியானகாரியமுடிவாகிய - உ0-ம். வன்னம் ஞ0 முதல் வ0 அந்தமாகிய - எ-ம். புவனம் தியானமுதல் வாமமுடிவாகிய- உன - ம். தத்துவம் வித்யாதத்துவம் - எ - ம். தெய்வம் உருத்திரன். தொழில்சங்காரம். என்றிங்ஙனம் வித்யாகலக்குக் கண்டுகொள்க.

இனி சாந்திகலைக்குத் தாலுமூலத்துக்கு மேற் புருவமத்தியத்தளவு மெல்லி நாலங்குலமெனவறிக. இத்ற்கு மண்டலம் சோமமண்டலம். ஆதாரம் விசுத்தி. அக்கரம் விந்து. பிரகாசம் விளக்கொளி. மலம் திரோதாயி. அவத்தை துரியம். மாத்திரை - உ. மந்திரம் கவசமுந் தற்புருடமும். பதம் நித்தியநியோகினிமுதல வியோம வியாபினி முடிவாகிய. கக-ம். வன்னம் ம0 முதல் க0 அந்தமாக - ஙா - ம். புவனம் வெளி முதல் சதாசிவமுடிவாகிய - கஅ-ம். தத்துவம் சுத்தவித்தையும் ஈசுரமும் சாதாக்கியமும். தெய்வம் மகேசுரம். தொழில் திரோபாவம். என்றிங்ஙனஞ் சாந்திகலைக்குக் கண்டுகொள்க.

இனி சாந்தியாதீதகலைக்கு புருவமத்தியத்துக்குமேல் மூன்றங்குலமெல்லியெனவறிக. இதற்குமண்டலம் சோமமண்டலம். ஆதாரம் ஆக்கினை. அக்கரம் நாதம். பிரகாசம் வாளொளி. மலம் ஆணவமலம். அவத்தை துரியாதீதம். மாத்திரை - வ. மந்திரம் நேத்திரமும் அஸ்திரமும் ஈசானமும். பதம் பிரணவ மொன்றும். வன்னம் சு0 முதல் - சூ0 அந்தம கசு - ம். புவனம் நிவர்த்திமுதல் சமாஞ்தமுடிவாகிய- கரு - ம். தத்துவம் சத்தியுஞ் சிவமும். தெய்வம் சதாசிவம். தொழில் அநுக்கிரகம். என்றிங்ஙனஞ் சாந்தியாதீதகலைக்குக் கண்டுகொள்க.

ஆக விங்ஙனங் கலைபஞ்சத்துக்கும் கண்டுகொள்க.

இங்ஙனங் கூறிவந்த பொருள்களிற் கலாசோதனைக் கு மந்திரங்கள் பதங்கள் வன்னங்கள் புவனங்கள் தத்துவ ங்கள் கலைகள் என்று சொல்லியிருக்க விவைதீங்கலாக மற் றுள்ள ஆதாரமுதலான பொருள்கள் கூறவேண்டிய தேதென் னில் அஃதாவது கலாசோதனை செய்யுமிடத்துச் சரீரத்தி லவகைப்படுத்திச் செய்யவேண்டுகையா லந்தத் தத்துவங் களோடு நிற்கும்பொருள்களை வகுத்துக்கூறியதெனவறிக. இதற்கு. பி - ம். சித்தியாரில். "மந்திரங்கள்முதலங்தங் க லையைந்தில்வியாத்தி." என்னும் விருத்தமுதலாகிய செய்யுள் மூன்றிலும் பிரசாதவகவலினும் தத்துவப்பிரகாசத்தில் "இ வ்வகைய மனவிகற்ப மெட்டுமேவி லெழுவிலகாரமுஞ் சொ ரிதழல் மாத்திரையும் எ-ம். விருத்தமுதலாகிய செய்யுளெட் டினுங் கண்டுகொள்க.

இனி ஒன்றிரண்டு குணமேற்க வுடைத்தே. எ - கு. ஒவ் வொரு குணத்திதே யிவ்விரண்டுகுணமேற்க வுண்டாமெ ன்று பொருட்கூறியதற்கு வகுப்பேதென்னில் சாத்துவிதத்தி லிராசதமுஞ் சாத்துவிதத்திற்குமதமும் இராசதத்திற் சா த்துவிதமு மிராசதத்திற்குமதமும் தாமதத்தி லிராசதமுங் தாமதத்தில் சாத்துவிதமும் என்றிங்ஙனங் கண்டுகொள்க. இதற்கு. பி - ம். சித்தியாரில். "வருங்குணவடிவாய்மூலப் பி ரகிருதிகலையிற்றோன்றித், தருங்குண மூன்றுமொன்றிற் று ன்மூன்றுய்ம்மும்மூன்றுகி, யிருங்குணருபமாகி யிசைந்திடுமெ ங்குமான்பாப், பெருங்குணவடிவாய்ப்போக சாதனம்பெத் தமாமே." எ - து. கண்டுகொள்க. குணத்தின் சேர்வுபரிபி ரகிருதி என்பதற்கு மிந்தப்பிரமாணத்திலே கண்டுகொள்க.

இதனாற்சொல்லியது காலமு நியதியுங் கலையும் வித் தையு மராகமுங்கூடினசமுகந்தானை புருடதத்துவமென் னும் தினைகூயிலே கலாசோதனை செய்யுமிடத் திந்தப்புரு

தத்துவத்தக்குஞ் சோதனை பண்ணவேண்டுமென்றும் குணசொரூபமாயுள்ள பிரகிருதிதானே மூன்றுகுணமாகக் காரியப்படுமென்னு முறைமையு மறிவித்தது. (உக)

வேறு—இது புருடதத்துவத்தின் சொரூபமும் பிரகிருதியின் சொரூபமுங் குணங்களின் வகையு முணர்த்திற்று.

ஐவகையாலுறுபயன்களுணகரவருங்கால மதுபுருடதத்துவமென் றறைந்திடுவ ரறிந்தோர் - கலாதிகளாந்திரையும் பெந்திக்கப்பட்டுச் சோத்திராதிகளாற் பொருந்தப்பட்ட விடயங்களைப் புசிக்கவருகிறவவதரத்திலே புஞ்சதத்துவமென் றொருமலமுண்டா யவ்வாத்மாப் புருடதத்துவமாமென்றறிந்தோர் சொல்வார்கள்,—மெய்வகைய கலாசுத்திதனி னிதற்குஞ்சுத்தி மேவியிடும்வகைதானும் விரும்பிய நூல் வினாம்பும் - மெய்யின் கூறுபாடாகிய கலைகளைச் சோதிக்குமிடத்தினிங்கப் புருடதத்துவத்திற்குஞ் சுத்திபொருந்து முறைமையினையும் விரும்பப்பட்ட திவ்யாகமங்கள்சொல்லும்,—செய்வகையின் றொடர்ச்சியிற்குத் தோற்றுவிக்குங் குணத்தின் சேர்வுபரி பிரகிருதி திரிகுணமாம் - ஆத்மாக்களுக்குப் போகத்தைச்செய்யுங் கருவிகளின்றொடர்ச்சியை யிற்குத் தோற்றுவிப்பதான குணத்தின் கூட்டமாகக் கடவுளாற்செய்யப்படும் பிரகிருதியான தது பிரிவின்கண் மூன்றுகுணமாம்,—அவைதாம் - அந்த மூன்றுகுணங்களாம்,—சாத்துவிதராசததாமதமாய் - சாத்துவிதகுணம் ராசதகுணம் தாமதகுணமாய்ப் பிரிக்கையாலே,—இவ்வகையா லியம்புவர்கள் - இந்தக்கூறுபாட்டாற் பெயர்சொல்லுவர்கள்,— ஒன்றிரண்டுகுணமேற்கையுடைத்தே - அவற்று ளொவ்வொன்றுதானே யிவ்விரண்டுகுணங்களைப் பொருந்துகையுடைத்து என - று.

ஆய் ஆகவெனத் திரிக்கப்பட்டது. ஏற்கவென்று பாடங் கொள்வாருமுளர். வித்தியாகலையைச் சொரிக்குங்கால் வித்தியாதத்துவங்களான கலாதிக ளைந்தினையுஞ் சோதனை பண்ணினமே புருடதத்துவத்துக்குச் சுத்தியென்று நூல் சொல்லுதலிற் கலாதிசுத்திதனி னதற்குஞ் சுத்திவிளம்புமென்றார். மூன்னூலிற் றொழிலறிவிச்சைமூன்றுமென்றுசொல்லவிண்டுப் பஞ்சகஞ்சுகஞ் சொல்லியதென்னை? மதங்காகமத்தின் மூன்றனைவும் பௌஷ்கரமுதலியவற்றி லிங்தனைவுஞ் சொல்லியவாகமமேபதமெனவறிக. அதுவுஞ்சிருட்டிபேதமே. பிரகிருதி யரும்பின்மனம் விளங்காதடங்கிநிற்றல்போல மூக்குணங்களும் விளங்காதடங்கி நிற்கின்ற சொரூபமவ்வியத்தமா மென்ப தறிதற்குக் குணத்தின் சேர்வுபுரி பிரகிருதியென்றார். அதுதானை காட்பூவின்மணம் விரிந்தாற்போலக் குணத்திரயமும் விளங்கிநிற்கு முருவமே குணமாதலிற் பிரகிருதி திரிகுணமாமென் றுரற்றுணையாற் கூறினர். இத்தப்பிரகிருதிதான் மாயையென்று பெயர்பெற்று வித்தியாதத்துவங்களு ளைழாவதாகிநிற்கும். அதுதான் பஞ்சகஞ்சுகனை புருடனுக்குப் போக்கியமான புத்தியாதிகளை ஜனிப்பிக்கு முபாதானமாகையா லதற்கு வேறுதாழி லில்லையெனக்கொள்க. தோற்றுவிக்கும் பிரகிருதியென வியையும். சேர்வாகவெனவிரிக்க. புத்திமுதலியன புருடனுக்குப் போக்கியமாதலிற் செய்வகையின் றொடற்சியென்பதற் கவ்வாறுரைத்தாம். மூக்குணங்களும் புத்தியையு மகங்காரத்தையும் பற்றிநின்று விளங்கும் தனித்துநின்றுவிளங்கா வெனக்கொள்க. இனிப் புத்திக்குக் காரணமாயிருக்கின்ற குணதத்துவமேயவ்வியத்தமென்று சாங்கியர்சொல்வர், அஃதடாது. குணங்கள் பலவகையாலே யொன்றினது காரியமாயிருக்குமாதலி னவற்றிற்குக் காரணமொன்றுயிருக்கின்ற மூலப்பிரகிருதியே

யவ்வியத்தமாம். அவரிப் பிரகிருதியை நித்தியமென்பதூஉம டாது. என்னை ? இஃ தாத்மாக்கடோறும் வேறுபட்டுப் பல வாயிருக்கையாற் கடாதிகளைப்போல வனித்தமாதலின். ஆக வே யிதற்குக்காரண மாயை யெனவறிக.

இங்ஙனஞ்சொல்லப்பட்ட குணமூன்று மொன்பதிவகையாக் காரியப்படுகைக்கு வகுப்பெங்ஙனேயென்று வினவ வனவு காரியப்படுமுறைமையு மேல் புத்திதத்துவங் காரியப்படுமுறை மையு மளிருச்செய்வா னெடுத்துக்கொண்டாருளியது.

அலகில்குணம் பிரகாசம் லகுதைவியாபிருதி யடர்ச்சிமிகுங் கௌரவ மந்தியம்மிவையடவே, நிலவியி டுமும்மூன்று முயிரொன்றிற்கலந்தே நிற்குமினை நி றைபுலனின் பயனெனைவபுங்கவருங், குலவிவரு போ கங்கொ ளிடமாமாறுக் குறைவிலொளி யாமலகில் பு லனிடத்திறைருமை, பலவகையு மூடையதாப்ப் பரனு ரூபாற்புந்தி பஞ்சாசற் பாவகமும் பண்ணுவிக்குந் தானே. (கூ0)

விளம்பியகுணநவ மாகவிரித்தும்
வளந்திகழ்புத்தியைம் பதுவகைத்தென்றது.

(இ-ள்.) அலகில்குணம் பிரகாசம் — எண்ணிறந்திருக்கப்பட்ட விந்தக்குணத்தின் விரிவைச் சொல்லுமிடத்து முன்சொல்லப்பட்ட பிரதானமான குணமூன்று மொழிந்து ஏனைகுண மாறுக்கும் வகையாவன?

பிரகாசமாயிருக்கும். அஃதாவது சாத்துவிகத்திலே யிராசதங்கூடுதலால் அந்தச்சாத்துவிகத்தைப் பிரகாசித்துக்கொண்டுநிற்கு மென்றவாறு.

லகுதை — நொய்தாயிருக்கும். அஃதாவது சாத்துவித
த்திலே தாமததங்கூடினால் நல்லொழுங்குகளை
மறைத்துக்கொண்டிருந்தப்பிரகாசத்தை நெ
ய்தாக்கிக்கொண்டு நிற்குமென்றதனைவறிக

வியாபிருதி — தெரியாமல் மறைத்துநிற்கும். அஃதாவது
இராசதத்திலே தாமததங்கூடினால் நல்லொழு
ங்குகளை மறைத்துக்கொண்டு நிற்குமென்ற
தனைவறிக

அடர்ச்சிமிகும் — செறிவித்துநிற்கும். அஃதாவது இராசதத்
திலே சாத்துவிதங்கூடினால் நன்மைகளைச்
செறிவித்துநிற்குமென்றதனைவறிக

கௌரவம் — பெருமையை யுண்டாக்கும். அஃதாவதுதா
மதத்திலே யிராசதங்கூடினால் கர்வத்திலே
பெருமையைப்பண்ணி நிற்குமென்றதனைவ
றிக

அந்நியம் — நல்லநியமமல்லாததைச்செய்வித்துநிற்கும்.
அஃதாவது தாமதத்திலே சாத்துவிதங்கூடி
னால் அந்நிய நியமங்களைச் செய்வித்துக்கொ
ண்டு நிற்குமென்றதனைவறிக

இவையடை — இத்தக்குணங்களிரண்டொன்றுமுறை
வேநிலவியிடம் — மையிலே பொருந்திநிற்கும். இவை வெவ்வே
ருய்நிற்குமோ கூடிநிற்குமோ வென்னில்

மும்மூன்றுமு — இவையொன்பதுகுணமும் மொருஆன்மா
யிரானின்றிற்கவ — விலே கூடிநிற்கும். ஒன்பதுகுணமாவது சா
க்தநிற்கும் — த்துவிகத்திற் சாத்துவிகமென்றும் சாத்துவி
கத்தி விராசதமென்றும் சாத்துவிகத்திற் மூ
மதமென்றும், இராசதத்தி விராசதமென்றும்
இராசதத்திற் சாத்துவிகமென்றும் இராசதத்

திற் முமதமென்றும், தாமதத்திற் முமதமென்றும் தாமதத்திற் சாத்துவிதமென்றும் தாமதத்தி லிராசதமென்றும் இங்ஙனமொ ன்பதுவகைப்படும். அதற்குவகையேதென்னில் சாத்துவிதத்திற் சாத்துவிதமாவது துறவும் சாந்தமும் மோகூத்திலே மிருந்தா கமு மாகையெனவறிக. சாத்துவித்தி லிராசதமாவது துறவும் சாந்தமு மிடையேநழுவ முத்தியில்முயலுகையுமா மெனவறிக. சாத்துவித்திற் முமதமாவது துறவும் சாந்தமு மோகூத்திலே முயலுகையுமன்றி விடயவிருப்பமு முண்டாகையெனவறிக. இனி லிராசதத்தி லிராசதமாவது தன்மத்தி லாசையோடுங்கூடி யிடை விடாமற் செய்கையெனவறிக. இராசதத்திற் சாத்துவிதமாவது யாவர்க்குங் கிருபையோடே யறங்களைச்செய்கை யெனவறிக. இராசதத்திற் முமதமாவது இலையிற்றினையிகழ்தலும் பாவத் தொழில்களைச் செய்தலு மெனவறிக. இனி தாமதத்திற் முமதமா வது மயக்கமு மிகழ்ச்சியும் பாவமு மாசையும் பயமு முறக்கமு மெனவறிக. தாமதத்தி லிராசதமாவது தகாதனசெய்தலு மூன்ன ணுதனவுண்ணலுங் களிப்பும் வெகுளியுமெனவறிக. தாமதத்திற் சாத்துவிதமாவது வேதாகமங்களில் விருத்தமாயிருக்கிற திருத்தி யமான சிறுதேவதைகளைப் பிரதிடத்தி பண்ணுகையெனவறிக. இப்படி யெண்ணிறந்தகுணங்களை யுடைத்தாகையாலே யலகில் குணமென்று சொல்லப்பட்டதெனவறிக. இங்ஙனங் குணபேத ங்களாகக் கூடிநின்றுசெய்யுமிடத்து

இவை நிறைபு ணின் பய னைவையுங் கவரும் குலவி வரு போகங்கொளிட மா மாருக்குறை வினொளியாம்

இந்தக்குணங்களொன்பது நிறைந்தினிற்கிற விந்திரியங்களின் பயனை யின்னிடத்திலே சுவர்ந்துகொள்ளும் சர்வராலுங் கொண்டாடப்பட்டு வருகிற புசிப்புகளை யான்மாக்கொள்ளுகிறவிடமும யுடல்முழுதும்விட்டு நீங்காதகுறைவற்ற பிர காசமுமாய் நிற்கும். இவ்வளவும் விந்தியாக

த்துவத்தின் கலைதொடங்கிப் பிருகிருதி மாயையாகியகுணங்கள் காரியப்படுகையை யருளிச்செய்து மேலான்மதத்துவத்திற் புத்தித்துவங் காரியப்படுகையை யருளிச்செய்கின்றது

அலகில் புலனிடத்தி லெருமை பலவகையுமுடையதாய்ப் பரனருளாற் புந்தி பஞ்சாசற்பாவகமும் பண்ணுவிக்குந்தானே.

என்னிறந்த விருத்தியாகியவிடயங்களையிந்திரியங்களைக்கொண்டான்மாக் கொள்ளுமிடத்து நிச்சயித்தலைப் பலவகையாலு மூண்டாவதாய்ச் சிவனுடையவதுக்கிரகத்திலேலே புத்தியான தைம்பதைம்பதுபேதங்களையொவ்வொறு குணங்களோடுஞ் செய்து நிற்கும். எ-று.

நு-ம். இந்தப்புத்தியின் விருத்தி யெங்ஙனே யென்னில் அவ்வியத்தமாவது மூன்றுகுணங்களுந் தோன்றுமல் வடவித்துப்போலேயிருந்த வவதரமெனவறிக. குணதத்துவமாவது வடவித்திலேநின்று மங்குரந் தோன்றினாற்போல வவ்வியத்தத்திலே மூன்றுபத்தோன்றிச் சமமாயலைவறநின்றவவதரமெனவறிக. வேறுபட்ட குணங்களையுடைத்தா பேற்றக்குறைச்சல் புத்திமுதலானதத்துவங்களெனவறிக. புத்தி தத்துவமாவது இராசதமுந் தாமதமுங்குறைந்து சாத்துவிதகுணமேலிட்ட வவதரமெனவறிக. இந்தப்புத்தியினது காரியமாவது தன்ம ஞான வைராக்கிய வைசுவரியமென்றும் அதன்ம அஞ்ஞான அவைராக்கிய அனைசுவரியமென்று மெட்டுவகையாம். இதில் தன்மத்திலேநின்றும் பத்துபாவகந்தோன்றும். ஞானத்திலேநின்று நாற்றெண்பதுபாவகந் தோன்றும். வைராக்கியத்திலே நின்று மறுபத்துநாலுபாவகந் தோன்றும். ஐசுவரியத்திலே நின்று நாற்றெழுபதுதாறு பாவகந்தோன்றும். எ-ம். மற்ற வதன்மத்திலேநின்று முப்பத்தெட்டுபாவகங்

தோன்றும். அஞ்ஞானத்திலேநின்று மூப்பத்தெட்டு பாவகந்தோன்றும். அவைராக்கியத்திலேநின்று நாறுபாவகந் தோன்றும். அநைப்வரியத்திலேநின்று மெட்டுபாவகந்தோன்றும். ஆகடித்தியினுடையகாரிய மறுநூற்றெருபத்து காலெனவறிக. அப்படியிருக்க இந்நூலிலே பஞ்சாசற்பாவகமென்று நானூற்றைம்பதாகச் சொல்லுவா னேனென்னி லப்படியுஞ் சிலவாகமங்களிலே சொல்லுகையாலெனவறிக. அன்றியும் பஞ்சாசற்பாவகமுமென்ற வும்மைகொண்டே மற்றதுமுண்டெனவறிக.

இனி புத்திதத்துவத்தை, அலகில்புலனிடத்திலெருமை பல வகையுமுடையதாய் என்றதேதென்னில் அது கன்மாகன்மங்களுமுடையதாய் சத்தாதிவிடயங்களிலே நிச்சயித்தலுமுடையதாயின்பதன்பங்களிலே மோகத்தையு முடையதாய் அறிவுதொழில்களுமுடையதாய் நிற்கையிலேலே யப்படிச் சொன்னதெனவறிக. இதற்கு. பி-ம். சித்தியாரில். "சித்தமாமவ்வியத்தஞ் சிந்தனையதுவுஞ்செய்யும், புத்தியவ்வியத்திற்றோன்றிப் புண்ணியபாவஞ்சார்ந்து, வத்துநிச்சயமும்பண்ணி வருஞ்சுகதுக்கமோகப், பித்தினின் மயங்கிருளானக் கிரியையும்பேணிநிற்கும்." எ-து. கண்டுகொள்க.

இனி புந்தி பஞ்சாசற்பாவகமும் பண்ணுவிக்கும். எ-கு. புத்திதத்துவமானது குணங்களோடுங்கூடிச் சம்பந்தமாயிருக்கையிலேலே யொருகுணத்துக் கைம்பதுவகையாக வொன்பதுகுணத்துக்கு நானூற்றைம்பதுவகையாகப் பேதித்ததெனவறிக. என்றிங்ஙனம் புத்திகுணத்தோடு சம்பந்தமாய்நிற்கு மென்பதற்கு. பி-ம். தத்துவவிளக்கத்தில். "எண்ணியபுத்தியில் முக்குணஞ் சேர்யல் பாற்கரந்து" எ-து. கண்டுகொள்க.

இதனுற்சொல்லியது குணதத்துவ மொன்பதுவகையாகக் காரியப்படுமுறைமையும் புத்திதத்துவ மொன்பதுகுணத்துக்கு

மொவ்வொருகுணத்துக் கைம்பதைம்பதாக நாணூற்றைம்பது பா
வகமாகக் காரியப்படுமுறைமையு மறிவித்தது. (கூ0)

வேறு—இது மேலொன்றிரண்டுகுண மேற்கை யுடைத்தென்றவை யிலையெனக் குணதத்துவத்தின்காரியமும் புத்திதத்துவத்தின்காரியமு முணர்த்திற்று.

அலகில்குணம் - குணமென்னிறந்தன,—அடைவே - முன்னர்ச்சாத்துவித ராசத தாமதமென்றமுறையே,— பிரகாசம்லகுதை - சாத்துவிதகுணத்திலே பிரகாசமானஞானமும் லகுதையாகிய மனமொழிமெய்களிற் பிரவித்தியின் மெத்தனவும்,—வியாபிருதியடர்ச்சி - இராசதத்திலே வியாபிருதியாகிய மூப்பொறிகளின்மிகுந்த வியாபாரமு மடர்ச்சியாகிய குரூரமான வுளைசிந்தின செயல்களும்,—மிகுங்கௌரவமன்னியம் - தாமதத்திலே மிக்க கௌரவமாகிய மமதையும் அந்நியமாகிய தகாதகாரியத்தைச் செய்யவேண்டுமென்னுஞ் சங்கற்பமும்,—இவை நிலவியிடம் - எனவிவை யொவ்வொன்றிற் கிவ்விரண்டாக வினங்கியிடும்,—மும்மூன்று முயிரொன்றிற் கலந்தேநிற்கும் - இவை யொன்பதுகுணமு மொவ்வோருயிர்தோறுங் கூடிநிற்கும்,—இவை - இம்மூன்றுகுணங்களுள்,—நிறைபுலனின் படனெவையுங் கவரும் - எதிர்நிரணிரையாகத் தாமதநிறைந்த விந்திரியங்களின் விடயங்களெல்லாவற்றையுங் கைக்கொண்டு மடங்கும்,—குலவிவரு போகங்களிடமாம் - இராசதகுணங் கொண்டாடப்பட்டுவரும் போகங்களினியாதுமாக்கொள்கைக் கிடமான வியாபாரத்தை யுடைத்தாம்,—மாறுக் குறைவி லொளியாம் - சாத்துவிதம் போகம் புகிக்கைக் கொருப்படுவிக்க வொழியாத மிக்க பிரகாசமாயிருக்கும்,—புந்தி - புத்தியானது,—அலகில்புலனிடத்து லொருமை - எண்ணிறந்தவிடயங்களினைப் புகிக்கிரவிடத்தில் நிச்சயம்பண்ணுகின்ற வெ

ரூமைப்பாடு,—பலவகையு மூடையதாய் - அனேக விதங்களையுமு
ண்டத்தாய்,—அரனருளால் - சிவனநுக்கிரகத்தாலே,—பஞ்சாச
த்பாவகமும் பண்ணுவிக்குந்தானே - ஐம்பது பாவகத்தையும், மூ
ற்றும்மையொரோவழி பெச்சமுமாதலி லறுநூற்றிருபத்திரண்
டு பாவகத்தையும் பண்ணும். எ-று.

தான்அசை. அலகிலென்பது இரவினிளிவந்தது லென்றுற்
போனின்றது. ஒருமை பலவகையும் என்பதற்குப் புசிக்குமிடத்து
ஒன்றுபலவிதமா யென்றுரைப்பாரும் பிரகாசம்லகுதை யென்ப
வற்றை சாத்துவிதத்தில் ராசதஞ் சாத்துவிதத்திற் ரூமதமென்
றுரைத் தேனையவற்றையு மிவ்வா றுரைப்பாருமுளர். சாத்துவித
ம் பதினைந்துவிதமாம். அவை சாதிநெறிநிற்றல், பெரியோரைப்
பேணல், கற்றறிவுடைமை, இனியவைகூறல், தற்புகழாமை, உள்
ளதே வருமென மகிழ்ந்திருத்தல், நடு நிலைமை, சுத்தநியமம்,
பொறை, கடைப்பிடி, பிறர்க்கிதகாரியஞ்செய்தல், இந்திரலோகா
திகளில்வாஞ்சை, பிறர் தன்னைப்புகழுங்காற் ரூன்றன்னையிகழ்த
ல், அடக்கமுடைமை, தன்பாலிரந்தார்க் கிரங்குதல் எனவறிக.
இராசதமொன்பது விதமாம். அவை சூரவுகை, குரூரமுடைமை,
ஊக்கமுடைமை, மானமுடைமை, வயிராக்கியம், பலம், வன்க
ண்மை, போகியாதல், இடம்பத்தனமான கூடாவொழுக்கம், என
வறிக. தாமதகுணமொன்பதுவிதம். அவை, அழத்தகாதனவற்றி
ற்கழுகை, கல்வியிலாதாவருகை, இழந்தாரைச் சேர்ந்துவாழ்தல்,
சோம்புரை, மடமை, பேருறக்கம், நன்மைசெய்தற் கிசைக்கை, கு
லங் குண மீகை யிரக்கங்களா லெனக் கியாருமிணையில்லையென்
கை, திருடுதல், எனவாம். ஆகமூப்பத்து மூன்றெனவறிக. மூக்கு
ணங்களுளொன்று மேலிட்டு மற்றையிரண்டு மடங்குச் சிறிதுவி
ளங்கும். ஒருவனுக்கு மூக்குணங்களு மொத்துவிளங்குத லில்லை
யெனக்கொள்க. சாத்துவித விராசத தாமதங்களா லைட்டேவி
திற் சுவர்க்கமு நரகமும்பெறுவர். சாத்துவிதத்திற் சாத்துவித

மூதலிய வொன்பதுபேதமு மந்தமுப்பத்துமூன்று ளடங்கும். விரிகனம்பெருகும். இவனனம்பெருகுதலி னலகில்குணமென்னூர். இனிச்சித்தம்புத்தியின்விகற்ப மெப்படியெனின் அவ்வியத்தமா வதாதலின்வித்துட்போல மூக்குணவ்கருடங்கிநிற்கும். அவை தூங்குணதத்துவமாவது. வித்தினின்று மங்குரந்தோன்றிலுற் போல வவ்வியத்திலேதின்று மூன்முப்த்தோன்றிச் சமமாயலவற நின்றவவதரம், அதுவேவசித்தம். இவற்றி னேற்றக்குறைச்சலே புத்திதத்துவம், அது இராசதமுந் தாமதமுங்குறைந்து சாத்துவித மேலிட்டவவதரம். இஃ தருத்திமிகுமென்றதிலு முறைத்தாம். புத்தியின்காரியந் தன்மனுனவபிராக்கிய வைப்பவரியபானகும், அ தன்மாதி நான்கு மெட்டாம். இவற்றுடன்தன்மத்திநின்றும் பத் பாவகமும் ஞானத்தினின்று நூற்றெண்பது பாவகமும் வைராக் கியத்தினின்று மறுபத்துநான்கு பாவகமும் ஐசுவரியத்தினின்றுச த்தியென்று பெயரையுடைய நூற்றுழுபத்தாறு பாவகமும் இனி யதன்மத்திற் பத்தும் அஞ்ஞானத்திலறுபத்தாறும் அவைராக்கிய த்தினாறும் அனேசுவரியத்தி லெட்டும் ஆகப் புத்தியின் பாவக ம நூற்றிருபத்துநான்கு வகையிற்காண்க. விரிவை யுரைப்பிற் பெருகும். •

மேல்ஆங்காரமு மனதுஞ் சித்தமுஞ் காரியப்படுமுறைமை யை யருளிச்செய்வா னெடுத்துகொண்டருளியது.

ஆனதனு வதனிலுறு மனிலனேயுபியக்கி யாங் கார நிங்கா த வகந்தைக்குவித்தா, யாலைது பிறரா ருவ ரெனேயொப்பாப்புவியி னிஸ்லையெனு மியல்பினை தா மிந்திரியம்புலன்க, டானுகரு மளவிலுதின் முந்தி யுறுமிச்சை தானுருவாய்ச் சங்கற்ப சதாகதியுந்தந்து, மானதமா னதுநிற்குஞ் சிந்தைநினேவையம் வந்துகரு மனமொழிய வகுப்புணர்த. (நக)

கஅ

உளச சிவப்பிரகாச சவ்வியாக்யாநம்.

அகந்தைக்கிடமா மாங்காரத்திட
னிகழ்ந்தெழுமனஞ்சித்த மிவ்வகைத்தென்றது.

(இ-ள்.) ஆனதனு வதனிலுறு மனிலனையு மிபக்கியாங்கார நீங்காதவகந்தைக்குவித்தா யானலதுபிறரொருவனை யொப்பார் புவியினில்லையெனு மியல்பினதாம்

ஆங்காரத்திவமான தான்மாக்கள் கன்மத்துக்கிடாகவுண்டானசரீரத்திலே பொருந்திப்போதும் வாயுவையு மியங்கும்படி நிறுத்தி நீங்காதமமதைக்கு மூலமுமாய் நானேயொழியப் பிறனெனக்கொப்பார் பூமியி லில்லையெனுமியல்பினையுடையதாய்நிற்கும். இனி மனது காரியப்படும்வகையாவது

இந்திரியம் புலன்க ளானுகரும ளவிலதின் மூந்தியுறுமிச்சை தானுருவாய்ச் சங்கற்ப சதாகதியுந்தந்து மானதமானது நிற்கும்

இந்திரியங்களானது விடயமாகிய புலன்களைப் புசிக்குமிடத்ததற்குமுந்திச்செல்லுமதாயிருக்கிற விச்சையே தனக்குவழிவாப்த் தனக்குவேண்டினதிலே சதாகாலமுஞ் சங்கற்பித்துக்கொண்டுநிற்கு மனதானது. இனிச் சித்துங்காரியப்படும் வகையாவது

சிந்தினினைவு

சித்தமானது நினைவுமாத்திரமாய் நிற்கும். இங்ஙனமிவை காரியப்படுமிடத்து

ஐபம்வந்ததருமனமொழிபவகுப்புணர்தே.

யாதாமொன்றின்மேலே செல்லுமிடத்து ஆமோவல்லவோவென் றையப்பாட்டையுமுடைய மனதாலொழிய வவை காரியப்படமாட்டாது. எ-று.

இதனுற்சொல்லியது யானெனதென்னு மமதையையுடைய வாங்காரமு மாமோவல்லவோவென்கிற சந்தேகத்தினையுடைய ம

னது நினைவுமாத்திரமாயிருக்கிற சித்தமுங் காரியப்படுமுறைமை யை யறிவித்தது. (நூக)

வேறு—இது ஆங்காரமு மனமுமான விரண்டின்காரியமுஞ் சித்தத்தின்காரியமு மதன்சொரூபமு முணர்த்திற்று.

ஆங்காரம் - ஆங்காரத்துவமானது,—ஆனதனுவதனி லுறு மனிலனையுமியக்கி - வினைக்கீடாக வுடம்பிலேநிற்கும் பிராணவா யுவையுஞ்செலுத்தி,—நீங்காதவகந்தைக்குவித்தாய் - நீங்காதமம தைக்குமூலமாய்,—எனையொப்பார் யானலதுபிறர்புவியி லொருவ ரில்லையெனு மியல்பினதாய் - என்னையொப்பவர் யாருமிந்த பி றர்புவியி லொருவருமில்லையெனு மியல்பினை யுடையதாய்,—இந் திரியம் புலன்கடாநுகருமளவில் - இந்திரியங்களுந் விடயங்களுஞ் புசிக்கவும் புசிக்கப்பட்டவுமாகின்றவளவிலே,—அதின் முந் தியுறுமிச்சை தானுருவாய் - அவ்விடயத்திலே முற்பட்டுப் பொ ருந்துகின்ற விச்சை தானே வடிவாகநிற்க,—மானதமான து சங்க ற்பசதாகதியுந் தந்நிற்கும்-மனத்தத்துவமான தொன்றைச் சங் கற்பிக்கையு மனவரதசலனத்துவமுந் தந்நிற்கும்,—சித்த நினை வு-சித்தமானது நினைவுமாத்திரமே,—ஐயம்வந்ததரு மனமொழி யவகுப்பொணாதே - சந்தேகத்தைவந் தெண்—ணக்குகின்ற மனதை யொழிய வேறுகவகுத்துக் கூறவொண்ணாது. எ-று.

இவ்விரண்டி னொற்றுமை கருதி மனம் புத்தி யாங்கார மே னுமூன்றே யந்தக்கரணமென்று பிறவாசிரியர் நூலிற்கு மிதற்கு மாறுபாடின்மை காண்க. எனையொப்பார் யானென விடுமம்பா லுடம்படுங்கிய தலைதியாற்கொள்க. அலதென்பது அன்றியென்னும் வினையெச்ச வாய்பாடு. விடயமொவ்வொன்று யனுபவித்தலினதி லென்றார். நுகருமென்பது செய்வதற்குஞ் செயப்படுபொருட்கு மொப்பதின்று இந்திரியம் புலன்களென்று மெழுவாய்கட்கு முத

பாயிற்று. இனித்தாமென்பதை இந்திரியங்களி லேற்றிப் புலன்க ளாயெனவிரிக்கினுமாம். உருவாகவென்பது கடைகுறைபப்பட் டுக் காரணகாரியங்களன்றி நிற்குமென்னும் பிறவினை கொண்டது. சதாகதியுமென் றோதுவாருமுளர். சங்கற்பமுஞ் சலமுந் தன்னை டுசேர்ந்த வுபாதியா லாத்மாவுக் குண்டாக்கலிற் றந்தநிற்குமென் றூர். இனி ஆங்காரமானது ஜீவனுஞ் சங்கற்பங் கர்வமென மூன்றும், அவற்றுள்ஜீவனம் பிராணதிவாயுவிலே யன்னபான தெகளைக்கிரகிக்கை. சங்கற்பமாவது எவற்றினும் பிரவர்த்திப்பிக் கை. கர்வமாவது யானல்லதில்லையென்கை. புத்தியுமாங்காரமு நிச்சயிக்கும் வியாபாரத்தா லொக்குமாதலிற் புத்தியொன்று மமைபாதோவெனிற் புத்தியானது கிரகிக்கப்படும் விடயங்களை வெகுமுகமாக வறுதியிடுவதாயிருக்கும். ஆங்காரம் புத்தியாலே புறம்பேநிச்சயித்துக் கிரகிக்கப்பட்ட விடயங்களை யுள்ளே யாத் யாவினிடத்திலே கூடி நான்செய்தேனென்று நிச்சயம்பண்ணி நி ற்கும். இனிமனமு மிருகுணைப்படும். ஒன்றுள்ளே சங்கற்பவிகற் பங்களைப்பண்ணும். ஒன்று புறம்பேநின்று இந்திரியங்கட்கு வி ரைக்கொடுக்கும். இந்தச்சங்கற்ப மொருகாரியத்திலே யொருமை ப்படாது. இந்திரியங்களும் விடயங்களு மாத்மாவுங் கூடியிருப்பி னு மனம் வேறொன்றிலே புரிந்தபோ தந்திரியங்கள் சேஷ்டிக்க மாட்டா. இதுவே சேஷ்டிப்பித்தல் வேண்டுமென்றுரைக.

மேல்சோத்திராதியுஞ் சத்தாதியும் வசுதியும் வாக்காதியு மாகத் தத்துவமிருபதுங் காரியப்படுமுறைமையை யருளிச்செய் வானெடுத்துக்கொண்டருளியது.

சொன்னமுறை செவித்துவக்கு நாக்குநாக்குத் துண்டமிலை யையந்நிற்குந் தொகுவிடயமாக, மன்னி யசத்தப்பரிசரூபரசகந்த மருவியிடு மிலையடைவே வாக்குப்பாதம், பின்னர்வரு பாணிமிகு பாயுவிலை

பெத்தம் பேசலுறு மைந்திற்கும் பிறங்கொழிகொள்
வசனை, முன்னரிய கமனதான விசர்க்காகந்த முற்ற
தொழில் பெற்றிவ துண்மையாமே. (நஉ)

ஞானமுங்கன்மமு நன்னுமிந்திரியமு
மூனமில்விடயமுந் தொழிலுமுறைத்தது.

(இ-ள்.) சொன்னமுறைசெவி துவக்கு நோக்கு நாக்குத் தண்டமிணை யைந்திற்குந் தொகுவிடையாக

முன்சொல்லிவந்த முறைமையிலே யுட்கரணங்களன்றியே புறக்கரணமாயுள்ள சோத்திரம் தொக்கு சக்ஷு சிஹ்வை ஆக்ராணமென்னு மிவையைந்துக்குங் கூடத்தக்க விடயமாக

மன்னிய சத்த ப்பரிசரூபரசகந்தமிடருவியிடம்

நிலைபெற்ற சத்தம் பரிசம் ரூபம் ரசம் கந்த மிவையைந்தும் பொருந்தியிடம்

இவையடை வே வாக்குப்பாதம் பின்னர் வரு பாணி மிகுபாயுவிரே டபத்தம் பேசலுறு மைந்திற்கும்

வாக்கும் பாதமும் பின்வரப்பட்டபாணியும் மிகுதலையுடையபாயுவும் இதரே டபத்துமென்று சொல்லப்பட்ட கன்மேந்திரியமைந்திற்கும்

பிறங் கொழிகொள்வசன முன்னரிய கமனநான விசர்க்காகந்த முற்ற தொழில்

விளங்கப்பட்ட வோசையையுடைய வசனமும் நினைத்தற்கரிய கமனமும் தானமும் விசர்க்கமும் ஆநந்தமுமென்று பொருந்தப்பட்டவைந்துதொழிலு மடைவே யுண்டாகிறது முறைமையாம். எ-று.

உளஅ சிவப்பிரகாச சவ்வியாக்யாகம்.

பெற்றிடுவ தண்
ணையாமே.

நு-ம். வாக்கென்றது வாயெனவறிக.

இவையடைவே என்றதற்கு வகையாவது சோத்திரத்தின் வழித்து வாக்கு. தொக்குவின்வழித்துப்பாதம். சகூஉவின்வழித்துப் பாணி.சிங்நுவையின் வழித்துப் பாயுரு.ஆக்ராணத்தின்வழித்து உபத்தம். என்னுமிவையிற்றைக் காரியப்படுத்துமவதரத்திலுங் கண்டுகொள்க.

இதனுற்சொல்லியது புறக்கரணமாயுள்ள ஞானேந்திரியமாகிய சோத்திராதியு மதன்விடயமாகிய சத்தாதியுங் கன்மேந்திரியமாகிடவாக்காதியு மதன்தொழிலாகிய வசனாதியும் ஆகவிருபதுங் காரியப்படு முறைமையை யறிவித்தது. (நூ2)

——0——

வேறு—இது இந்திரியம்படத்தின் காரியமு முணர்த்திற்று.

சொன்னமுறை - புத்திபிந்திரியமென்று மன்னியகன்மேந்திரியமென்று முன்னர் சொன்னவாறே,—செவி தூவக்கு நோக்கு நாக்குத் தண்டமிவை யைந்திற்கும் - செவிமுத லாக்கிராணமீறுனவிந்திரியங்களைந்துக்கும்,—தொகுவிடயமாகமன்னிய - கூடுகின்ற விடயங்களாக நிலைபெற்ற,—சத்தப்பரிச ரூபரசகந்தமெனையனைவே மருவியிடும் - சத்தமுதற்கந்தமீறுகிய விவையனைவேபொருந்தும்,—வாக்குப்பாதம் பின்னர்வருபாணி மிகுபாயுவிசேடநிபத்தம் பேசலுறு மைந்திற்கும்-வாக்குப்பாதமென்னுங்காற் பின்வருகின்றபாணி மிக்கபாயுவுட னுபத்தமாகச் சொல்லுகின்ற வைந்திற்கும்,—பிறங்கொலிகொள்வசன முன்னரிய கமனதான விசர்க்கானந்த முற்றதொழில்-பெரியதேவாசை பொருந்திய வசனமுத லானந்தமீறுகவுற்றவிடயமாகிய,—இவையனைவே-இவையந்து மனைவிலே,—பெற்றிடுவ தண்ணையாமே - பெறுகின்றதியல்பாம். எ-று.

இனிச்சாருவாகனு நியாயவைசேடிகனுஞ் சோத்திராதியைங் தமொவ்வொருவிடயங்களைக் கிரகிக்கையிலுலே யவ்விடயங்கள் பூதங்களின் குணமாகையிலுலே பூதங்களேளென்று சத்தாதிகளைக்கிரகிக்கு மத்தனை ஞானேந்திரியம் வேண்டாவென்று சொல்வன். பூதங்களே யிந்திரியங்ளாயிற் றத்தங்குணங்களொன்றையுமே யறியவேண்டும். அப்படியின்றி யிந்தவிந்திரியங்க ளன்னியபூதங்களையு மவற்றின் குணங்களையும் போக்குவரவான கன்மங்களையுடாயுண்டென்ப துபோலுஞ் சாதிகளையுங் குணகுணிகளுடைய நிமித்தசம்பந்தங்களையு மறிகையாலே ஞானேந்திரியம் பூதகாரியமல்ல. இனி வசனதிகிரிபைகளைச் செய்கையாலே கன்மேந்திரியமுண்டு. இம்மின்றேறலொருதொழிலுங் கூடாது. ஆகையிற்றொழிலுக்குக் கன்மேந்திரியமே துவேற் புருவமுதலிய வுறுப்புக்கள் துடிக்கின்றது தொழிலன்றே, யத்தொழிற்கு விந்திரியமுண்டாகில் வேண்டும். அப்போதிந்திரியம் பலவென்னீரொன்று லோகாயதன்சொல்லில் துவக்கிந்திரியஞ் சர்வாங்கமும் வியாபித்துநிற்குமாப்போல வெல்லாவிந்திரியங்களு முடலெங்கும் வியாபித்துநிற்கும். அன்றிப்பாணிக்குதானமே தொழிலாயிருக்க முடவனெருவன்கையானடக்கும். காலிரண்டும் பாதவிந்திரியமின்றிக் கமனக்கிரியை நிகழாது. ஆதலாலே புருவமுதலிய துடிக்குந்தொழில்களெல்லாம் பாணிமுதலியவற்றின் வியாபாரமென்றறிக. இவை தொழிலுடன் கூடியிருக்கையா லிராசதகுணஞ்சேர்ந்தது. இவையடைவேயென்ப திரிடத்து மேற்றப்பட்டது.

மேற்பூதங்களைந்துங் காரியப்படுமுறைமையை யருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

மூந்தியவைம்பூதங்கள் வாஞ்சையாகமுயங்கியதற் செவிநாசி கண்ணுமெய்ம்முறையா, விந்தவயி னின்றுவருமைம்புலனுமுயிர்தா மெய்துமவை தம்மு

ருவி னிலங்கியிடிம்புறத்தும், வந்தடைய விட்ங்கொடு க்கு நிரந்தரமாய்வானம் வாயுமிகச் சுலித்திதலைவடுந் திரட்டிந்தீவெம்மை, தந்தவைசுட் டொன்றுவிக்கு நீ ர்குளிர்ந்துபதமே தருமூரத்துத் தரிக்குமிகு தாணி தானே. (கூகூ)

ஒன்றுமைம்பூதங்க ளுள்ளும்புறம்பு
நின்றுகாரியப்படு நெறியிதுவென்றது

(இ-ள்.) மூந்தியவைம்பூதங்கள் வாயுதியாக மூபங்கிய நற்செவி நாசி கண்ணே

தத்துவங்களெல்லாவற்றினு மூத்தத்தாசப்பட்டுவருகிற ஆகாசமாதியான பூதங்களினும்

பொருந்தப்பட்ட சோத்திரமுதலாக்கிராணமீருகவுள்ள விந்திரியங்களினுமிடமாக

மெய்ம் முறையா லிந்தவயினின்றுவருமைம்புலனும்

உண்மையாக வடைவே யிந்த விடையங்களிலே நின்றுகூடாநிற்கும் விடையங்களினும். அன்றியும் இந்தப்பதத்துக்கு இந்திரியங்களினுற்கு மடைவிலே பொருட்சொல்லவேண்டுகில் முயங்கிய நற்செவிமெய்கண்ணுசி முறையானிந்தவயினின்று வருமைம்புலனும் என்றுபாடமோதி பொருட்படுத்துமிடத்து பொருந்தப்பட்ட ன்மைப்பகுதியினையுடைய சோத்திரம் தொக்கு சகூசி ங்நுவை ஆக்கிராண மிவையடைவேவின்று வருகிற சத்நாதியாகிய விடையங்களினுமென்று பொருட்படுத்திக்கொள்க

உயிர்தா மெய்த்வகை தம்முருவி னிலங்கியிடம்

ஆன்மாக்கள் பொருந்தம்பதிதங்களிலே விளங்காந்ற்கும்

புறத்தும்	உள்ளன்றியே புறம்பேயும் பூதங்கள் ஜீவி க்கும்படியுடாவது
வந்தடைய வி டங்கொடுக்குநிர ந்தரமாய்வானம்	ஆகாசமானது சர்வமும் தன்னிடத்திலேவ ந்து பொருந்துகைக் கிடத்தினையுங் கொடுத்து வெளியாய்நிற்கும்
வாயுமிகச் சலி த்தெனையுந் திர ட்டும்	வாயுவானதெல்லாத்தையு மிகுதியாக வீச க்கிவித்துக் கூட்டும்
தீவெம்மைதந் தனைசுட்டொன் றுவிக்கும்	அக்கினியானது உஷ்ணத்தையு முண்டாக் கித் தன்னேறுங்கூடினவையிற்றையுஞ் சுட் டொன்றுபடுத்தும்
நீர் குளிர்ந்து பதமேதரும்	அப்புவானது தன்னேறுங்கூடினவையிற் றைக் குளிர்வித்து நெகிழ்ச்சியாக்கும்
உரத்தைத் தரிக் குமிகுதரணி தா	பிருதிவியானது கடினமா யெல்லாவற்றை யுந் தாங்கிநிற்கும். எ - று.

னை.

நு-ம். மூந்திய வைம்பூதங்கள் தம்முருவினிலங்கியிரு மென்றது ஆன்மாக்கள் சோத்திராதிகளைக்கொண்டு சத்தா திகளை யறியுமிடத்துப் பூதங்களிடமாகநின்று கொள்ளவே ண்டுகையா லெனவறிக. அதற்குவகையாவது ஆகாசமிடமா கநின்று சோத்திரத்தைப்பொருந்திச் சத்தத்தை யறிவன். வாயுவிடமாகநின்று தொக்கைப்பொருந்திப் பரிசத்தையறி வன். தேயுவிடமாகநின்று சக்ஷுவைப்பொருந்தி யுருவத் தையறிவன். அப்புவிடமாகநின்று சிங்ஙவையைப்பொருந் திரதத்தையறிவன். பிருதிவியிடமாகநின் ருக்கிராணத்தைப் பொருந்தி கந்தத்தையறிவன். இப்படி ஞானேந்திரியங் கா ரியப்பட்டாற்போல வாகாசமாதியான பூதங்களிடமாகநி

ன்று கன்மேந்திரியமான வாக்காதிகள் காரியப்படுமுறை மையை யநுபவத்தாற் கண்டுகொள்க.

தம்மூருவினென்றது பூதரூபமென்றுமாம்.

புறத்துமென்ற வும்மைகொண்டே வுள்ளுமப்படிக் காரியப்படுமென்றதினவறிக.

இதனாற்சொல்லிய தான்மாசத்தாதிகளை யறியுமிடத்துப் பூதங்களிடமாகநின்றறியுமென்று மந்தப்பூதங்கள் காரியப்படுமிடத் துள்ளும்புறம்புமாகநின்று காரியப்படுமென்றும் வருமுறைமையை யறிவித்தது. (நஉ)

வேறு—இது முறையே பூதங்களின் காரியப்பாடுணர்த்திற்று.

மூந்தியவைம் பூதங்கள் வாலதியாக - தத்துவங்களெண்ணுங்கான் மூந்தியெண்ணப்படும் பஞ்சபூதங்களுமாகாச முதலாகக்கொண்டு,—முயங்கியநற் செவிநாசி கண்ணுமெய்ம் முறையால் - நற்செவி மெய் கண் நாசி முறையால் முயங்கிய நல்ல சோத்திரந் தொக்கு சிங்ஙவையாகினாணமென்று சொல்லப்பட்ட ஞானவிந்திரியமைந்து மனைவே பொருந்தற்காதாரமாக,—இந்தவயினின்றுவருமைம்புலனு முயிர்தாமெய்துமவை - இந்த விந்திரியங்களிடத்திலே நிலைபெற்றுவருமைந்துபுலன்களையு மாத்மாக்களனுபவிக்கும்படி,—தம்மூருவினிலங்கியிடும் - தங்கள்சொரூபத்தோடே விளங்காநிற்கும்,— புறத்தும்வந்தடைய விடங்கொடுக்கு நிரந்தரமாய்வானம் - புறம்பேயு மாகாசமானது மற்றைப் பூதமெல்லாந் தன்னிடத்திலே வந்தடைய வெளியாயிடங்கொடாநிற்கும்,—வாயு மிகச்சலித்தெவையுந் திரட்டும் - வாயுவானது மிகவுஞ் சலனமாயெல்லாவற்றையுந் திரட்டாநிற்கும்,— தீவெம்மைதந் தவை சுட்டொன்றுவிக்

கும்-தெயுவானது பிறபொருட்கும் வெப்பத்தைக்கொடுத்து அவற்றைச் சுட்டொன்றுபடுத்தும்,—நீர்குளிர்ந்து பதமேதருும் - அப்புவானது குளிர்ந்து பதங்கொடுத்துநிற்கும்,— மூதரணி யுரத்துத்தரிக்கும் - மூந்திய பிருதிவியானது கடினமா யெவற்றையுந்தரியாநிற்கும் எ - று.

கடினத்துக்கேற்ப மூந்திபென்றூர். எய்தும்வகை யிலங்கியிதம் புறத்துவான்கொடுக்கும் வாயுதிரட்டும் தியொன்றுவிக்கும் நீர்பதமேதருும் தரணிதரிக்கு மெனமூடிக்க. நிற்குங் குநியெழுத்து வடிவுமுதலியவற்றிறு டென்பார் தம்முருவினென்றூர். ஞானேந்திரியங்கட்கு விடயமான தன்மாத்திரைகள் சூக்குமரூபமா யனைய ளிருக்குமென்பதை முன்னூல்களினுமறிக.

இங்ஙனஞ்சொல்லப்பட்ட தத்துவமுப்பத்தாறுஞ் சுத்தமா யிருப்பதான்றூ வசுத்தமாயிருப்பதான்றூ வென்றும் இந்தத் தத்துவங்களோடான்மா கூடிநிற்குமிடத்திவர்களுக்குண்டாகிய பயனேதென்றும் வினவ மேலருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

இந்நிரயிரனங்துசுத்த மேழசுத்தாசுத்த மென்றூமூன்றுமசுத்தமெறு மிவைமூப்பத்தாறூ, மன்னியதத்துவங்களினிடமயங்கிநெடுந்துயர்தரு மருவுமுருநிலையழிய வருமெபாழுதுவரியாயி, பன்னகமன்டசங்கனைவுபடர்வனைகையுமூன்னெம் பகரவருங் கலாதிநிலபரவியசூக்குமமாங், தன்னைருவினைணைந்துபய னைருந்தியரனைருளாற் றனையினிடவருமென்று சாற்றுவாலே. (உச)

உசை சிவப்பிரகாசச் சுவியாக்யாநம்.

தூலவுடல்விட்டுச் சூக்குமவுருவுடன்
மேலுறுபயன்றுய்த்து மீளுமென்றது.

(இ-ள்.) இக் இந்த முறைமையிலே

நிரையின்

ஐந்து சுத்தம் முன்னே "உன்னலரும் பரசிவன்றன்
ருளாலே" என்னும் விருத்தத்திற் சூசூற்ற
மாசுச் சொல்லப்பட்ட சிவதத்துவமைங்
தஞ் சுத்ததத்துவமென்று போராம்

ஏழுசுத்தா சு வித்யாதத்துவமேழும் சுத்தா சுத்தமை
த்தம் ன்றுபோராம்

என்மூன்றுமை ஆன்மதத்துவ மிருபத்துநாலு மசுத்த
சுதம் மென்றுபோராம்

எனுமிவை மூ என்றிங்ஙன மூன்றுவகையாகச் சொல்
ப்பத்தாரும் லப்பட்ட தத்துவங்களினை துதொகை மூப்
பத்தாறென்று காட்டப்பட்டிருக்கும்

மன்னிய தத் இப்படி நிலைபெற்ற தத்துவங்களினை டு
துவங்களிடை வேயான்மாமயக்கமுற்று
மயங்கி

நெடுங் துயர் மிகவுஞ் சுகதுக்கவேதனைகள் பொரு
தாமருவுமுருவி ந்தப்பட்ட தூலசரீரத்திலேயுள்ள கண்மங்
லையழியவரும் தொலைந்திதனைவிட்டுப் போங்காலத்து
பொழுது

வரியார் பன் வரிபொருந்தினபாம்பு தோலுரித்தப்
னைக மண்டூகங் போமாறுபோலவு மூட்டையில் ஜந்தமா
கனவுபடர்வ யுள்ளவை அந்தத்தோடுவிட்டு நீங்குமாறு
னைகயே போலவு நனவிலேயுள்ளவர்கள் கனவிலே
யடையுமாறுபோலவும்

மூன்னம்பக ரவருங் கலாதி நிலபாவியசூக் குமமாந் தன்னு ருவிலசைந்து ப யனருந்தி

மூன்னே சொல்லப்பட்டு வருகிற கலை யாதியாயுள்ள தத்துவ மூப்பத்தொன்றும் விரிந்திருக்கப்பட்ட சூக்குமதேகமான யாதவுசரீரத்தைப் பொருந்தி சுவர்க்க ரகங்களிலுண்டான வின்பதுன்பங்களைப் புசித்து

அரனருளாற் றரையினிடைவ ருமென்று சாற் றுறுமே ல.

தம்பிரானர் கர்ருண்ணியத்திருலீல மீ ளவும் பூமியின்கண்மேண வருமென்று சா த்திரங்கள் சொல்லும். எ - று.

நு - ம். சிவதத்துவமைந்தையுஞ் சுத்தமென்ற தேதென்னில் அதுசுத்தமாயையிற் ரோற்றமாகையாலுங் கத்தா கொள்ளப்பட்ட திருமேனியெல்லா மதனிடமாகக் கொள் ருகையாலும் சிவதாகமங்க டோற்றுகையாலு மெனவறிக.

இனி வித்யாதத்துவ மெழையுஞ் சுத்தாசுத்தமென்ற தேதென்னில் இவையிற்றைச் சுத்ததத்துவங்கள் காரியப் படுத்துகையாலு மசுத்தமாயையிற் ரோற்றமாகையாலு மெனவறிக.

இனி யான்மதத்துவ மிருபத்துநாலையு மசுத்தமென்ற தேதென்னி லது பிரகிருதியிற் ரோற்றமாகையாலு மும்மலத் தையுடைய சகலர்க்குத் துணுகரணபுவன போகங்களா யிருக்கையாலு மெனவறிக.

இனி வரியார் பன்னகமண்டசமென்றது தூலவுடல்விட்டுச் சூக்குமதேகத்தோடும் போகிறத்துக் ருவமையெனவறிக.

இனி கனவு படர்வகையெயென்றது ஒருஉடலிற் செய்ததகாரிய மற்ரோருருடலிற் றெரியாததற் ருவமையெனவறிக.

இனி கலாதிநிலபரவிய சூக்குமமாமென்றது கலையாதி

தத்துவ மூப்பத்தொன்றுங் கூடியே சூக்குமதேகமா மென்
றதெனவறிக.

இனி பயனருந்தி யென்றது தூலதேகத்தோடுங் கூடிநி
ன்று செய்தபுண்ணியபாவத்துக்குத் தக்கதாகச் சூக்கும
தேகத்தோடுங்கூடி யியமதண்டத்தினு நரகசுவர்க்கங்களி
லுள்ள வின்பதுன்பங்களினு மநுபவிக்கிறதெனவறிக.

இனி தாயினிடவருமென்றது அப்படித்தொலந்தங்
தொலயாத சேடகன்மத்தைப் புசிப்பதாக மீளவுந் தூலதே
கத்தை வந்தெடுக்கையெனவறிக.

இதுற்சொல்லியது தத்துவ மூப்பத்தாறுஞ் சுத்தமை
ன்றுஞ் சுத்தாசுத்தமென்று மசுத்தமென்று மிந்தத் தத்துவ
ங்களிலே ருடுங்கூடி நிற்கப்பட்ட வான்மாக்கள் தூலதேகத்
தையிட்டுப் போய்ச் சூக்குமதேகத்தோடுங்கூடி யின்பதுன்
பங்களை யியமதண்டத்தினு நரகசுவர்க்கங்களினு மநுபவித்
து மீளவும் பூமியின்கண்ணேவந்து தூலதேகத்தை யெடுப்ப
ர்களென்றும் வருமுறைமையை யறிவித்தது. (நச)

வேறு—இது தத்துவங்களின்முறைகயு மவற்றிடையே
யுயிர்கண் மயங்கின்று சரீரங்களை விடுதல்பற்றுத லுணர்த்
திற்று.

இந்நிலையில் - இங்ஙனஞ் சொல்லிவந்த வடைவிலே,—
ஐந்துசுத்தம் - சிவதத்துவமைந்துஞ் சுத்ததத்துவம்,—ஏழ்
சுத்தாசுத்தம் - வித்தியாதத்துவங்களேழுஞ் சுத்தாசுத்த
த்துவம்,—என்மூன்றுமசுத்தம் - ஆன்மதத்துவ மிருபத்துநா
ன்கு மசுத்ததத்துவம்,--எனுமிவைமூப்பத்தாரும்-என்றுசொ
ல்லப்படு மிவைக ளொருதொகையாக மூப்பத்தாரும்,—இ
ம்மூன்றுக்குமடைவே பிரகாண்டம் போககாண்டம் போ

க்கியகாண்டம் என்று முணைக்கப்படும். மன்னியதத்துயங்க ளிடமயங்கி நெடுந்துயர்தா மருவுழுருநிலையதிய வரும்பொ ழுது - இங்ஙன நிலைபெற்ற தத்துவங்களி னிடத்திலே மய ங்கிப் பெரியதன்பங்களைப் பொருந்தப்பட்ட சரீரமான து நிலைகுலையக் கூடும்பொழுது,— வரியார் பன்னகமண்டசங் கனவுபடர்வகையே - வரியார்ந்துபாம்பு மூட்டையிற் சனி த்தலையுங் கலுவிற் கேற்றவுடலும் போகின்றபடியே,— முன்னம் பகரவருங்கலாதிநிலை பரவியங்ஙுக்குமமாந் தன் னுருவிலசைந்து - முன்னை யதேதாமரயா சிருட்டி சொல்லு தற்குவருங் கலைமுதலிய மூப்பது தத்துவங்களி னிலை விரி தற்கிடமான ஞக்குமமாகிய தனக்குரிய புரியட்டகத்தோ டே நல்வினை தீவினைக்கிடான பூதசாரம் பூதமானசரீரங் களிலே பொருந்தி,--பயனருந்தி யரனருளாற் றறையினிடைவ ருமென்று சாற்றுநூலே -சுவர்க்கநரகங்களின் பயனை யனு பவித்துச் சுவாணுக்கிரகத்தாலே பூமியின்கண் மீண்டு பூதபரி ணமவுடலோடே பிறக்குமென்று திவ்வியாகமங்கள்சொல் லும். எ - று.

பூதம்-ரு. தன்மாத்திரை-ரு. ஞானேந்திரியங்கள்-ரு. கன்மேந்திரியங்கள்-ரு. அந்தக்கரணம்-ஈ. குணம்-க. அத ற்குக்காரணமான பிரகிருதி - க. கலாதி - ரு. ஆக எட்டுங் கொத்தாதலிற் புரியட்டகமாயிற்று. எனு மூப்பத்தாரு மன் னியதத்துவ மிவைக ளிடையென மாறிணுமாம். உயிரெனவ ருவிக்க. படர்வகையே யென்பதி லகையுவமவுருபு ஏகாரம். என் சர்வசங்கார பரியந்தமன்றி மோட்சபரியந்தந் தனனி ங்காம லேனையுடற் றுகில்போலினி தனக்குரியவுடலெ ன்பதுபோதத் தன்னுருவினென்றார். கனவு ஆகுபெயர். பா ம்பு தாலவுடல்விட்டுச் சூக்குமவுடலோடு போதற்கும் அண் டசம் மூன்பழகின வுடலைப் பாராமற்போதற்கும் கனவு

னலரீதகத்திற்செய்த காரியத்தைச் சூக்குமதேதகத்தி லறியா மைக்கு முவமையாயிரை. வித்யாதத்துவங்களைச் சுத்தா சுத்தமென்றது ஆத்மாக்களுக்குச் சிறிதறிவை விளக்குதற்குச் சாதனமாகையாலும் சூக்குமரூபத்துவாரத்தா லெண்குணரூபமான சுகதுக்கமோகங்களை யுண்டாக்குதற்குச் சாதனமாகையாலு மெனவறிக.

இங்ஙனம் ஜாகமரணப்பட்டிவருகிற வான்மாக்களெடுக்கப்பட்ட யோனிபேதமெத்தனைவகைப்பட்டிருக்குமென்றுவினவ நால்வகைத்தோற்றமும் மெழுவகைப்பிறப்பு மென்பத்தாகான்குநூறுயிர மிரையானிபேதமுமா யிருக்குமென்னு முறைமையை மேலருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

தோற்றியிடி மண்டசங்கள் சுவேதசங்கள்பாரிற் றுளைதங்துவரு மூற்பீசஞ் சராயுங்களல்கி, ஈற்றமிகு தாபரங்கள் பத்தொன்பதென்ற மூபாவதி னீங்தமர் பதினைஞ்சேருலவா, மாற்றருநீ ருணரவைநற் பறவைகணாற்கா லி மன்னிடிதிம் பப்பத்து மாவிடொன்ப பதின்ம, மேற்றியொரு தொகையதனி லியம்டிவர்க்கள்யோனி யெண்பத்து நான்குநூ றுயிரமென்றுத்தி. (கூ)

பாயிரமாகவெண் பத்துநான்குநூ
றுயிரயோனிக் கடைவிதுவெணறது.

(இ-ள்.) தோற்றியிடி மண்டசங்கள் சுவேதசங்கள் பாரிற்றுளைதங்துவரு மூற்பீசஞ் சராயுங்களல்கி, ஈற்றமிகு தாபரங்கள் பத்தொன்பதென்ற மூபாவதி னீங்தமர் பதினைஞ்சேருலவா, மாற்றருநீ ருணரவைநற் பறவைகணாற்கா லி மன்னிடிதிம் பப்பத்து மாவிடொன்ப பதின்ம, மேற்றியொரு தொகையதனி லியம்டிவர்க்கள்யோனி யெண்பத்து நான்குநூ றுயிரமென்றுத்தி.

ஆணமாக்கள் ஜாகமெடுக்குமிடத்து மூட்டையிற்சேருன்றுவன வேர்வையிற்சேருன்றுவன பூமியிற்செறிந்துவருகிற வித்திற்சேருன்றுவன பைக்குடரிலேதான்றுவன.

ணைந்தவரு மூற்பீசஞ் சராயுசங்கண்ணுன்கின்	இந்தநால்வகைத் தோற்றத்திலு மூண்டாகப்பட்ட வெழுவகைப் பிறப்பாவன
ஊற்றமிகுதாபரங்கள் பத்தொன்பதென்றும்	மிகவு மூறுதிபெற்றுடைய தாபரவர்க்கங்கள் பத்தொன்பதுநூறுயிரவர்க்கமென்றும
ஊர்வபதினைந்து	ஊர்ந்தறிவன பதினைந்துநூறுயிரவர்க்கமென்றும்
அமரர்பதினென்மூலவாமாற்றருநீருறைவன நற்பறவைகணூற்காலிமன்னியிடும்பப்பத்து	தேவர்கள் பதினைந்நூறுயிரவர்க்கமென்றும் ஒருகாலத்திலு நினைவிட்டு நீங்காமலுண்டாகப்பட்ட பத்தநூறுயிரவர்க்கமென்றும் நல்லபறவைகள் பத்தநூறுயிரவர்க்கமென்றும் நாலுகாலியுடையவை பத்தநூறுயிரவர்க்கமென்றும்
மானுடரொன்பதின்மர்	மனிதரொன்பதநூறுயிரவர்க்கமென்றும்
ஏற்றியொருதொகையதனியிம்புயர்கள்	ஆகவிவையொன்முகவெண்ணியொருதொகைப்படுத்துவர்கள் பெரியோர்கள். அதுவேவதென்னில்
யோனியெண்பத்தாகான்கு நூறுயிரமென்றெடுத்தே.	யோனிபேதங்களெண்பத்தாகான்கு நூறுயிரமென்று வகையினைத்தெரித்தனம்.

நூம். அஃதாவது மென்றதேதாற்றம் பறவைபாம்பு மூவாயுள்ளவை யெனவறிக.

சுவதேஜமென்ற தோற்றம் கிருமி கிடம் விட்டில் பெண் முதலானவை யெனவறிக.

உற்பீஜமென்ற தோற்றம் மரம் பூண்டு கொடி முதலானவை யெனவறிக.

சராயுஜமென்ற தோற்றம் நாற்காலிகள் மானுடர் தேவர்க்க முதலானவை யெனவறிக.

ஆகத் தோற்றம் நால்வகையெனவறிக.

இதிலெழுவகைப் பிறப்புக்கு வகையாவன? தேவர்நரர் மிருகம் பக்ஷி ஊர்வன நிருறைவன விருக்ஷமெனவறிக.

இதனுற் சொல்லியது நால்வகைத்தோற்றமு மெழுவகைப்பிறப்பு மிதிலுண்டானயோனிபேத மெண்பத்துநான்கு நூருயிரமாக விரிக்தமுறைமையு மறிவித்தது. (நடு)

வேறு—இது அவ்வுயிர்கள் விடுதல் பற்றுதல்செய்யு மூடல்களின் முற்றமும் யோனிபேதத்தின் முறைகயு முணர்த்திற்று.

தோற்றியிடுமண்டசங்கள் சுவேதசங்கள் ஜாரிற்றுணைதங் துவரு முற்பீசஞ் சராயுசங்களுன்கின் - தோன்றப்பட்ட மூட்டையிற் சனிப்பவைகள், வியர்வையிற் சனிப்பவைகள், பூமியியில் நெருங்கிவாழ்த்தக்க வித்திற் சனிப்பவைகள், பையிற் சனிப்பவைகளாகிய நால்வகைத் தோற்றத்தின்கண்,—ஊற்றமிகு தாவரங்கள் பத்தொன்பதென்றும்-நிலைபெறுமிக்க தாபரயோனிகள் பத்தொன்பதுநூருயிரபேத மென்றும்,—ஊர்வபதினைந்து - ஊர்கின்றவை பதினைந்துநூருயிரபேதமென்றும்,—அமரர் பதினைஞ்நூறு - தேவயோனி பதினெருநூருயிரமென்றும்,—உலவாமாற் றருநீருறைவன நற்பறவைக ணூற்காலி மன்னியிடும் பப்பத்தும்-ஒழியாத பெரு

மைதங்கிய நீர்வாழ்சாதிகள் நல்லபட்சிகள் நாற்கான்மிரு
கங்களான மூன்று மொவ்வொன்று பொருந்தப்பட்ட பத்
தநூறுயிர பேதமென்றும்,—மானுடரொனபதுமா வேற்றி-
மானுடயோனி ஒன்பதுநூறுயிரபேதமென்றுமாக வேற்றி:-
யோனியென்பத்துநான்குநூறுயிர மென்றெடுத்து - யோனி
யென்பத்துநானகுநூறுயிரபேதமென் றெடுத்து,—ஒருதொ
கையாக வியம்புவர்கள்-ஒருதொகையாகச் சொல்லுவர் பெ
ரியோர்கள். எ - று.

எழுவாய்வருவிக்க. அமரரும் மானுடரும் ஆருபேயர்-
நானகின் இன் ஏழனுருபாதல் புறநடையாற்கொள்க. ஒடு
என்னெடு. நூறுயிரமென்பதனையு மென்று மென்பதனையு
மெங்குந்தந் தின்னைத்துணையென்று மாவேற்றியென்றியத்
தணைக்க. மால்பெருமை. தருதல் ஈண்டித்தங்குதல். மன்னு
தல் பொருந்துதல். இயல்மன்னு மனபுதந்தார்க் கென்னுங்
கோவைத திருவாசகத்தி னுன்கு மன்னுப்பொருள் வருத
ல்காண்க.

இங்ஙனமானமாக்கள் ஜாகமரணப்பட்டு வருமவதரத்
தை மலபாகம்வந்து சத்திநிபாதமுண்டாகு முறைமையை மே
லருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

இனையபல பிறவிகளி னிறந்துபிறந்தருளா விரு
வினைகள் புரிந்தருந்து மிதுசகலமகலா, முனமருவு மி
ருபயனு மொருகாலத்தருந்த முந்துறுக வுந்துபய ன
ந்தமுறவெந்த, வினையுமெதிர் வினையுமுழுவி வினையுதவுபய
ன னேராக நேராதல் மேவுங்காண்மூற், சினமருவு
திரோதாயி கருணையாகித் திருந்தியசத் திநிபாதந் தி
கழுமன்பேறு. (நகூ)

உருவுடன்போகத் துற்றிடுஞ்சகலமு
மருவியசத்திநி பாதமும்வருத்தது.

(இ-ள்.) இனையபல பிரவிகளினிறந்துபிறந்தருளா லிருவினைகள் புரிந்தருந்துமிதுசகலம்

ஆன்மாக்களித்தன்மைத்தாகியவென்பத்துநான்கு நூறுயிர யோனிகடோறுஞ் சிவனுடையவருளாலே பிறந்திறந்து புண்ணியபாவங்களீட்செய்து இன்பதுன்பங்களை யநுபவிக்கிறது சகலாவத்தை. மூன்னர் "புகலுமம்மொழித்தற்கு" என்றசெய்யுளில் "இலங்குமும்மிந்து பகர்வரிய வுணர்வாகி" என்றபதந்தொடங்கி இவ்வளவுஞ் சகலாவத்தையை யருளிச்செய்ததனவநிக. மேற்சுத்தாவதத்தையை யருளிச்செய்கின்றது.

அகலா முனமருவுமிருபயனு மொருகாலத்திருந்த

இங்ஙனஞ் சொல்லப்பட்ட சகலாவத்தையைவிட்டு நீங்காமல் முன் ஜாகங்களடோரும்பொருந்தி வருகிற புண்ணியபாவங்களிரண்டு மொருஜாகத்திலே புசித்துத் தொலையுமதுக்கதாக

மூந்தறுக ருத்துபயன்

மூன்ஜாகத்திலே புசிக்கச்செய்தேயெறி யார்ஜிதமாயத்துவாவிலேகட்டுப்பட்ட சஞ்சிதமும்

அந்தமுறவந்தவினையும்

இப்பொழுது புசித்து முடிவதாகவந்தவடலிலே கட்டுப்பட்ட பிராரத்துகன்மமும்

எதிர்வினையும்

இப்பொழுது புசிக்கச்செய்தேயுள்ளவினைதாவிதங்களிலுலே யெறுகிற வாகாமியமும்

மூடிவினையுத வுடபறு னோரா வுங்கால்

இந்தக்கண்மங்க ளிவனுக்கு மூடிந்து போம்படி சிவபுண்ணியத்தி னதிகத்தாலே யெல்லாஞ் சோரத்துலையொக்கப் பொருந் தினவிடத்து

மூற்சினை மருவு திரோதாயிக ருஉனையாகித் திருந்திய சத்திநி பாதந் திகழுமன்றே.

முன்கோபம்போலே மறைத்தநின்ற திரோதாயிசத்தி காருண்ணியத்தைச் செய்து நன்மையுடைய சத்திநிபாதம் விளைக்கும். எ - று.

நு - ட். சத்திநிபாதமாவது சத்திசெலுத்தாமனிற்கிற தெனவறிக. அஃதாவது புண்ணியபாவந் துலையொத்த வான்மாக்களைத் திரோதானசத்தி நிக்கிரகமும் அநுக்கிரகசத்தி பதிதலுமாமெனவறிக.

இனி மூந்நுக ருந்துபயனென்றது முன்ஜநங்களிலெடுக்கப்பட்ட வுடம்புகளோடுங் கூடிநின்று புசிக்கச்செய்தே யிந்தவுடம்புகளெடுக்கைக் கேதுவாகக் கட்டுபபட்ட சஞ்சிதகன்மமெனவறிக.

இனி அந்தமூற வந்தவினையென்றது இந்தத்தேகாந்தமட்டும் புசிக்கிற பிராரத்த கன்மமெனவறிக.

இனி எதிர்வினையென்றது இந்தப்பிராரத்தம் புசிக்கச்செய்தே யுண்டாக்கிய ஹிதாஹிதத்தாலே விளைகிற வாகாமிய கன்மமெனவறிக.

இங்ஙனஞ் சொல்லப்பட்ட கன்மங்களுக்கு. பி - ம். சித்தியாரில் "மூற்செயல் விதியையிந்த மூயற்சியோடனுபவித்தா, லிச்செயல்பயிக்குமாறென்னிதமாகிதங்கள்முன்ன, ரச்செயலாலுயிங்கு மவைசெயின் மேலைக்காகும்." எ-ம். "மேலைக்குவித்தமாகி விளைந்தவையுணவுமாகி, நூலைத்தவருமா

போல நாஞ்செயும்வினைகளெல்லா, மேலத்தான்பலமாச்செ
ய்யு மிதமகிதங்களெல்லா, மூலத்தாகியென்றும் வந்திடு மு
றைமையோடே." எ - ம். கண்டுகொள்க.

இனி மூடிவினையுதவுபயரு னேராகநேராதல். எ - து. சிவபுண்ணியத்திரலே பசுபுண்ணியமும் பாவமுங் தலை யொத்ததெனவறிக. இதற்கு. பி - ம். சித்தியாரில் "புண்ணி யமேமேலுக்குவிக்கும் பாவங்கீழ்நோக்கும் புண்ணியனைப்பூசித் த புண்ணியத்திரலே, கண்ணியபூரானத்திரு லிரண்டினையு மறுத்து நூலமொடு கீழ்மேலு கண்ணுரகு, யெண்ணுமிக லோகத்தே முத்திபெறுமிவன்ரு னெங்கெழிலென் நூயிரை மக் கென்று குறைவின்றிக், கண்ணுதறன்னினைறவதனிற் க லந்தகாயங் கழிந்தக்காலெங்குமாய்க் கருதன்போனிற் பன்." எ - து. கண்டுகொள்க.

இனி சினமருவு திரோதாயியென்றது ஆன்மாக்களுக்கு ஞ்டான மலங்களைப் பாகம்வருத்தவேண்டிப் புண்ணியபா வங்களைச் செய்வித்துச் சுவர்க்கநரகங்களிலே செலுத்திப் பாகம்வருத்துகையாலெனவறிக. திரோதாயியென்றது அவ தரப்பெயரெனவறிக.

இனி திருந்தியசத்தி நிபாதந் திகழுமென்றது முன்னர்ப் பிரபஞ்சத்தைப் பொருளென்றுகாட்டி ருசிப்பித்துநின்ற திரோதாயிதானே யருளாய்ப்பிரகாசித்துப்பழையப்பிரபஞ் சத்தை யுவர்ப்பித்துச் சிவனளவிலுந் திருவேடத்தாரளவி லுஞ் சிவாகமங்களிலும் பிரியத்தை யுண்டாச்ருவித்து நிற்கை யெனவறிக. இதறகு .பி-ம். பொற்றிப்பம்ரொடையிற். "அனை பரைக்கண்டின்புறுத, லுய்யுநெறிசிறிதே யுண்டாக்கிப்— பையவே, மட்டாய்மலராய் வருநாளின்மூன்னாநாள், மொ ட்டா யுருவாமுறைபோலக்—கிட்டியதோர், கல்லபிறப்பித் பிறப்பிக்நாகம்மினை, யெல்லையிரண்டி மிடையொப்பிற்—

பல்பிறவி, யத்தமதிலன்றே ருவளவென்று பார்த்திருந்து, சத்திபதிக்குந்தரம்போற்றி." எ - து. கண்டுகொள்க.

இதனுற்சொல்லியது முன்னர்ப்பதத்திலே சகலாவத்தையின்முறைமை முடிந்ததென்றும் சுஞ்சிதம் பிராரத்த மாகாமியமென்னப்பட்ட மூவகைக்கன்மங்களுஞ் சிவபுண்ணியத்தினமிகுதியாலே நீங்குமென்றும் அப்படி நீங்குமிடத்திருவினையொப்புண்டாமென்றும் அப்படி யிருவினையொப்புண்டாகவே திரோதாயியாய்நின்ற வருள் காருண்யசத்தியானமுறைமையு மறிவித்தது. (நகூ)

வேறு—இது ஓங்கிவருமென்னுஞ் செய்யுளி னிறுத்தமுறையே சகலாவத்தையுஞ் சுத்தாவத்தையுஞ் சுத்தாவத்தைக்கு நிமித்தமான விருவினையொப்புயுஞ் சத்திநிபாதமுமுணர்த்திற்று.

இனையபலபிறவிகளி னிறந்துபிறந்தருளா லிருவினைகள் புரிந்தருந்து மிதசகலம்- இத்தன்மையான பலபிறவிகளிலே பிறந்துமிறந்துஞ் சிவாஞ்கூலத்தாலே புண்ணியபாவங்களைச்செய்தவற்றின் பலன்களை யனுபவிக்கு மிதுசகலாவத்தை,—இனி மூந்நூநகர் - மூற்பவங்களிலே சுகதுக்கபலன்களை நுகருநுகர்ச்சியிடத்திலே,—உந்துபயன்- ஆகாமியமாய் வந்தேதறியசஞ்சிதமும்,—அந்தமுற வந்தவினையும் - புசித்தறுவதாகவந்த பிராரத்தமும்,—எதிர்வினையும் - இப்பிராரத்தம் புசிக்குமிடத்தேதறிய வாகாமியமுமாய்,—அகலாமுனமருவு மிருபயனு மொருகாலத்தருந்த - நீங்காமல் முற்சனனங்களிலே பொருந்திய புண்ணியபாவங்களாகிய விரண்டின் பிரயோஜனங்களையு மொருகாலத்திலே யொருவன் புசிக்கும்படி,—முடிவினை யுதவுபயலல் - விட்டினைத் தருகின்ற

சிவதன்மங்களாலே,—நோகநோராதன் மேவுங்கால்-அக்க ண்மமெல்லாம் பக்குவத்தாலே தூலயொக்கச் செவ்வாதலே ப் பொருந்துமிடத்தில்,—மூற்சினமருவு திரோதாயிகருணை யாகி - இருவினையொப்பு வருமுன்னெல்லா மாத்மாக்களை யீடேற்றுகைக்குத் தனக்கில்லாத கோபத்தைப்பொருந்திய திரோதானசத்தியானது கிருபையாகாநிற்க,—அன்றே-அப் பொழுதே,—திருந்தியசத்திநிபாதந் திகழும் - நன்ருனசத் திநிபாதக்குறி விளங்கும். எ - று.

உந்துபயன் உதவுபயன் இரண்டு மாகுபெயராய்க் காரணத்தைவிளக்கின. நோதல் ஆகுபெயர். ஆக உயமவாசகம். இது முன்னநின்மைமலமென்ற செய்யுட்கு மொக்கும். செய்யுளின்பநோக்கி யிருத்தலே மூற்கூறினர். உம்மை தொக்கது. நிபாதம்பதிதல், அஃதுபசாரம். கருணையாகி ஆக உந் தபயனுமென்னு மும்மை விகாரத்தாற்ருக்கது. பயனும் வினையு மெதிர்வினையுமாயென வருவித்த வாக்கவினையெச்ச மீறுகெட்டெதிர்மறையாய்நின்ற வகலாவென்னும் வினையெச்சத்திற் காலவினைகொண்டது. சத்திநிபாதம் ஆகுபெயர். நுகர்முதனிலவினை, அது பெயராய்நின்ற றொழாவதுதொகப் பட்டது: நுகருங்காலென்க. மூடுதலும் வீடலும் ஒருபொருளாதலின் மூடிவுவிடனப்படும். இனி மூந்நுகர மேவுங் காலென்பதற்குச் சஞ்சிதம் பிராரத்த மாகாமியமான மூவகை வினைகளு மிவனுக் கில்லையாதலி லுண்டாக்காநின்ற சிவ தன்மங்களாலே விட்டுப்போம்படி யொத்தலிப் பொருந்துமிடத் தென்பாருமுளர்.

இங்ஙனஞ் சொல்லப்பட்ட சத்திநிபாதம் மெத்தனை வகைப்பட்டிருக்குமென்றும் இந்தச்சத்திநிபாத மூன்றானவர்க்களுக்குக் கத்தா வணுக்கிரகஞ்செய்யு முறைமை யெப்படி

யென்றும்வினவ மேலருளிச்செய்வா னெடுத்துக்கொண்டரு
ளியது.

நாடியச்த் திநிபாத நாலுபாத நன்ணூம்வகை
யெண்ணரிய ஞானபாதங், கூடுமவர் தமக்குணர்வாய்
நின்றஞானக் கூத்தலைரு மூர்த்திகொடு குறுகிமோ
க, நீடியகே வலசகல நிகழாவா றுநிறுத்திமல மறுக்
குமிது நிலையார்சுத்தங், கேடில்டுகழ் தருஞ்சரிதை கி
ரியாயோகக் கேண்மையரே வினைவயுணர்த்தக் கிளக்
குறுலே. (நஎ)

கேவலசகல மேவலுற்றரு ருநிலை
யாவதுசுத்தா வத்தையென்றது.

(இ-ள்.) நா டியசத்திநிபாத நாலுபாதம் நண்ணூம்வகை யெண்ணரிய ஞானபாதங், கூடுமவர்தமக்குணர்வாய் நின்றஞானக்கூத்தலைரு மூர்த்திகொடுகுறுகி மோகநீடிய கேவலசகல நிகழாவாறு நிறுத்தி நாலுபாதத்திநிபாத நாலுபிரகாரமாயிருக்கும் அந்தச்சத்திநிபாதநாலினும் பொருந்தும்வகையெ நினைத்தற்கரிதாகிய ஞானபாதத்தைச் சேருகைக்குரித்தான நாலாஞ்சத்திநிபாத மூள்ளவர்களுக்கு உயிர்க்குயிராய் நிற்கிற ஞானநடனத்தினையுடைய தம்பிரானுசாரியமூர்த்தமாக வெழுந்தருளிவந்து மறைப்பை மிகவுண்டாக்குகிற கேவலாவத்தையும் விகற்பத்தையுடைய சகலாவத்தையையுந் தோற்றுதபடியருளிலேநிறுத்தி

மலமறுக்குமி	இங்ஙனமலத்தைப் போக்குகிறவி துநி
துநிலையார்சுத்	லைபெற்ற சுத்தாவத்தையாம். இது யாவர்
தம்	க்காமென்னில்
கேடில் புகழ்	அழிவில்லாத புகழைத்தருவதாயுள்ள
தருஞ்சரிதை கி	சரிதை கிரியா யோகமென்னுநிலகளைக் கு
ரியாயோகக்கே	றைவறச் சரித்தவர்களுண்டாமாகிலவர்க
ண்மையரே வி	ளுக் கிந்தச்சுத்தாவத்தையின் முறைமை
னை யுணர்த்தக்	யை யுணர்த்தப்படுமென்றுசொல்லுந் திவ்
கிளக்குறூலே.	வியாகமம். எ - று.

நு - ம். சத்திநிபாத நாலென்றதற்கு வகையெதென்னில் மந்தமென்றும் மந்ததரமென்றும் தீவிரமென்றுந் தீவிரதரமென்றும் வருமெனவறிக. அஃதாவது முதற்சத்திநிபாதமாகிய மந்தம் வாழைத்தண்டிலே நெருப்புப்பற்றியற்போலெனவறிக. இனி யிரண்டாஞ்சத்திநிபாதமாகிய மந்ததரம் பச்சைவிறகிலே நெருப்புப்பற்றியற்போலெனவறிக. இனி மூன்றாஞ்சத்திநிபாதமாகிய தீவிர மூலர்ந்தவிறகிலே நெருப்புப்பற்றியற்போலெனவறிக. இனி நாலாஞ்சத்திநிபாதமாகிய தீவிரதரங் காயிலே நெருப்புப்பற்றியற்போலெனவறிக. இவையிற்றுக்கு. பி-ம். "நாலுவகைச் சத்திநிபாதத்துக் கற்பருவ, மூலகுருவே மொழியெனக்குக்—கோல, வரம்பைதத்தண் டொண்பச்சைக் கூட்டமூலர்ந்த, நிரம்புகரி தாநினை." எ-து. கண்டுகொள்க. இந்தச் சத்திநிபாதநாலுக்கு மநுபோகமாவது:—முதற்சத்திநிபாதமாவது நமக்குப் பேரறியுள்ளதொரு கத்தாவுண்டென் றறிவெழுந்திருக்கையெனவறிக. இரண்டாஞ்சத்திநிபாதமாவது தந்தக்கத்தாவைப்பெறுகைக்கு வழியெப்படியென் றாராய்கையெனவறிக. இனி மூன்றாஞ்சத்திநிபாதமாவது தப்பறி யாராய்ந்தறிந்தகத்தாவைப் பெறவேணுமென்ற பிரபஞ்சத்தையுவர்த்துப் புளி

யம்பழமு மதன்றோடும்போல நிற்றலெனவுறிக. இனி நான் காஞ்சத்திநிபாதமாவது பிரபஞ்சத்தை மூற்றத்துறந் தாசா ரியனே பொருளென்றுகொண்டு தானறநின்று வழிபடுகையெ னவுறிக. அப்படிப் பிரபஞ்சத்தை மூற்றத்துறக்கவென்பதற் கு. பி-ம். சித்தியாரில். ஆசைதருமுலகமெலா மலகைத்தே ராமென் றறிந்தகல வந்நிலேயையாகும்." எ-து. கண்டுகொ ள்க. ஆசாரியனைப் பொருளென்று கொண்டு வழிபடுகைக்கு. பி-ம். சித்தியாரில். "பரப்பிரம மிவனென்றும் பரசிவன்மு னென்றும் பரஞானமிவனென்றும் பராபரன்மு னென்று, ம ரன்றருஞ்சீர்நிலையெல்லா மிவனேயென்று மருட்குருவைவழி படமே யவனிவன்மு னுறுதியே, யிரங்கியவாரணமாமை மீன்ள் டஞ்சினையை யியல்பினெடும்பரிசித்து நினைந்தும் பார்த்தும்" பரிந்தனைதாலக்குமாபோற் சிவமேயாக்கும் பரிசித்துஞ் சி ந்தித்தும் பார்த்துந் தானே." எ-ம். பன்னிரியபரமகுரு மற் றவனேநாளும் பணிந்துபணி செய்யவந்து பலிக்கு மன்றே." எ-ம். கண்டுகொள்க.

இனியுணர்வாய்நின்ற ஞானசூத்தமெருமூர்த்திகொடுகுறுங். எ-து. அருமியாய்நின்றகத்தா வருபியாய்வந்தானென்று பொரு ட்கூறியதற்கு. பி-ம். திருவாசகத்தில். அருபரத்தொருவ னவனி யில்வந்து - குருபரனாகி யருளியபெருணமையைச் - சிறுமைபென்றி கழாதே திருவடியினையே." எ-ம். போற்றிப் பஃறொடையில்"பூ வலயம், தன்னின்றுங்காச் சகலர்க்கவர்போல, முன்னின்றுமும் மலந்தீர்த்தாட்கொள்கை—யன்னவனுக், காதிருணமாதவிளை லா டுந்திருத்தொழிலுஞ், சோதிமணிமிடற்றுச் சுந்தரமும்—பாதியா ம், பச்சையிடமும் பவளத்திருச்சடைமேல், வைச்சந்தியு மதிக் கொழுந்து—மச்சமுற, வாடமரவு மழகார்திருநுதன்மே, னீடிரு வவன்னிநெடுங்கண்ணுங்—கடிலையும், சூட்டுந்தமருகமுங் கோ லவெரியகலும், பூட்டரவக்கச்சும் புலியதளும்—வீட்டின்ப, வெ

ள்ளத்தழுத்தி விடுந்தாளினுமடியா, ருள்ளத்தினும்பிரியா வொ
ண்சிலம்புங்—கள்ளவினை, வென்றுபிறப்பறுக்கச் சாத்தியவீரக்
கழலு, மொன்றுமுருத் தோன்றும லுள்ளடக்கி—யென்று, மிற
வாதவின்பத்தினமையிருத்தவேண்டிப், பிறவாதமுதல்வன்பிறக்
னது—நறவாருந், தாருலாவும்புயத்துச் சம்பந்தனாதனென்று, பே
ரின்லாநாதனருட்பேர்புனைந்து—பாரோர்த்த, மூண்டியுறக்கம்பயமி
ன்பமொத்தொழுகிக், கொண்டுமகிழ்ந்த குணம்போற்றி." எ-ம்.
கண்டுகொள்க.

இதனுட்சொல்லியது சுத்திநிபாத நாலுவகைப்பட்டிருக்கு
முறைமையு மந்தச்சுத்திநிபாதத்துக் கிடாகக் கத்தா வாசாரியமூ
ர்த்தமாகவுந் திரணுதிக்குமுறைமையு மப்படி யிரணுதிக்குமிடத்துக்
கேவலாவத்தையுஞ் சகலாவத்தையு நீக்கிச் சுத்தாவத்தையிலே
நிறுத்துவனென்னு முறைமையு மறிவித்தது. (கூஎ)

வேறு—இது சுத்திநிபாதத்தின் பாகுபாடுஞ் சுத்தாவத்
தையு மிப்பொருள்களி யின்னோர்க் குணர்த்தலாமென்பதூஉ மு
ணர்த்திற்று.

நாடியசுத்திநிபாத நாலுபாதம் - ஆராயப்பட்ட சுத்திநிபா
தமானது மந்தம் மந்ததரம் தீவிரம் தீவிரதரம்னன்று நான்குபா
தமாயிருக்கும்,—கண்ணுறும்வகையெண்ணரியதூனபாதவு கூடமவ
ர்தமக்குணர்வாய் நின்றதூனக் கூத்தனருளூர்த்திகொடுகுறுகி-
அந்தநான்கினுட் பொருந்துமுறைமையைக் கிளர்த்தற்கரிய தீவிர
தரமான ஞானபாதமானது பொருந்தப்படுமவர்க்கு நிலைபெற்ற
ஞானக்கூத்த னெப்பற்ற குருமூர்த்தங்கொண்டறியப்படும்பொ
ருளா யெழுந்தருளிவந்து,—மோகநீடிய கேவலசகலநிகழாவாறு
நிறுத்திமலமறுக்கும் - மயக்கமிகவுண்டான கேவலாவத்தையும்
விகற்பமிகவுண்டான சகலாவத்தையு மூண்டாகுந்தபடியருளினாலே

நிறுத்தி மலங்களைப் போக்குவன்,—இது நிஷ்யார்சுத்தம் - இது நிஷ்மைநிறைந்த சுத்தாவத்தை,—கேடில்புகழ தருஞ்சரியை கிரி டாடோகக் கேண்மையரேல்-கெடாதபுகழையுண்டாக்குஞ் சரியை கிரியாயோக வுறவையுடையவர்களாயின்,—இவை யுணர்த்தக்கின க்குறுலே - அவர்களுக் கிந்தப்பொருளை யறிவிக்கச்சொல்லு மாகமம். எ-று.

சத்திநிபாதமாவது ஜன்மாந்தரங்களிலே செய்யப்பட்ட சிவதன்மங்களிலுலே யாத்மாக்களுக்குக் கன்மசாமீபமும் பரிபாகமு முண்டானவளவில் சிவசத்திபதிதல். கன்மசமத்துவமே யன்றி மலபரிபாகமில்லாதபோது சிவசத்தி யந்தவிஷயிரண்டினை யுஞ்சேதித்து விஞ்ஞானகல பிராப்தியாக்குமெனவறிக. கன்மசம த்துவமின்றி மலபரிபாகமுண்டாலுற் கன்மங்களாற் பலமில்லை. பாதம் நான்கிலோர்கூறு. உணர்வுஆகுபெயர். தமக்குணர்வாய்க் குறுகியறுக்குமெனவினையும். நூல் கிளக்குமெனக் கருவி கருத் தாவாயிற்று. சத்திநிபாதங்களாற்பயன் சரியைமுதலிய பாதங்க ளிலே நிறுத்தி மனவாக்குக்காயங்களைச் சுத்தமாக்கி ஞானத்து க்கு யோக்கியராகப்பண்ணும். இவற்றுண்மந்தரத்தினியல்பா வது, இலிங்க மாயேசுர ரிடங்களிலே பத்தியுண்டாக வதலுலே பரமசிவன் சாதகாசாரியனையதிஷ்டித்துச் சமயதீட்சைபண்ணி யவன்மனமொழிமெய்களைச் சரியைத் தொழிலிலே புரிவிப்பன். இச்சரியையின் முற்றுதலாலே மந்தசத்திநிபாதமுண்டாய்ச் சிவா ர்ச்சனையி லாதரவுண்டாக்கிப் போதகாசிரியனை யதிஷ்டித்து வி சேடசமயமுடித்துச் சிவார்ச்சனைகற்பித்து அந்தரியாக வெதிரியா கங்களிலே யவன்மனமொழிமெய்களைப் புரிவிப்பன். இக்கிரியை யின் முற்றுதலாலே தீவிரசத்திநிபாதமுண்டாக யோகவாஞ்சை யுண்டா யவ்வாசிரியலுலே யட்டாங்கயோக வுண்மையை யறிவி த்துக் காமாதியறுவித்தமும்விடித்து அவன்சித்தத்தைத் தியானத்

திலே நிறுத்திச் சமாதியிலேயொடுக்குவன். இம்மூன்றின் முற்று தலாலே தீவிரதராசத்திநிபாத முண்டாய்ச் சிவஞானிகளிடத்தி லே பத்தியுந் திரிபதார்த்தசொரூபமறியவேண்டுமென்னு மறிவுந் தேகாதிபிரபஞ்சங்களை நீக்கவேண்டுமென்னும் வைராக்கியமு மு த்தியிலாசையும் பிறவியிலே பயமும் மிகலோக பரலோகத்திலே வெறுப்பும் நமக் கிந்தக் கவர்ச்சியைநீக்கிச் சிவரூபத்தைத் தெரி ப்பிக்கு நாதராவர் ராரென்று பசித்தவ னன்னதாதாவைத் தேடு மாறு போலவும் பிறவிக் குருடனவன் கோடைக் காலத தின் மத்தியானத்திலே நீர்தேடித் தியுமாறுபோலவும் ஞானசா ரியனைத்தேடி மிகவும் வருந்துகின்ற வாஞ்சையுண்டாம். இந்தத் தீவிரதர சத்திநிபாதமுந் தாரதம்மியத்திலே மந்ததரமாதியா கன்காம். இந்நான்குவித சத்திநிபாதமுடையவர்கள் ஞானசா ரியனையடைந்துள்ளவி லவ்வாசாரியனாலே பரமசிவன் ஞானதீ ட்சையைப்பண்ணி யவர்கண்மலத்திரியங்களைச் சேதித்துக் கர ணகுணியம்பிறப்பித்து ஞானனந்தானுபூதியைக் கொடுப்பன். இ ந்நால்வர்தன்மையு மிவர்களையாசாரியன் றிருத்து மருமையு மெளி மையு மவர்களுக்குள்ள குருபத்தியு மவர்களுக்கு ஞானம் பிரகா சிக்குந்தன்மையும் பிரகாசித்தா லவர்களுக்குப் பிரபஞ்சத்திலே வெறுப்பு முவமைமுகத்தாலே விளங்கச்சொல்லுவான் புகிற் பெ ருகும், விரிந்தநூல்களிற் காண்க.

மேல் மற்றுமுண்டான உலகாபதன் முதலாயுள்ள சமயிக ளுக்கு மிப்படிச்சுத்தாவத்தையிலே நின்றே முத்தியென்றிருக்கு மோ வெவ்வேறு வழிகளாயிருக்குமோவென்ற மாணவகனோ க்கி அவர்களுக்குண்டான நிலைகளு முத்திகளு மின்னபடியென் றும் அது குற்றத்தையுடைய முத்திகளாமென்றும் மேலருளிச்செ ய்வா னெடுத்துக்கொண்டருளியது.

அரிவையரின் புயமுத்தி கந்தமைந்து மறுமுத்

தி திரிகுணமூ மடங்குமுத்தி, விரிவுவினை கெடுமுத்தி மலம்போமுத்தி விக்கிரக நித்தமுத்தி விவேகமுத்தி, பரவுமுயிர் கெடுமுத்தி சித்திமுத்தி பாடாண முத்தி யிவை பழுதீசர்முத்தி, திரிமலமூ மகலவுயி ரருள்சேர் முத்தி திகழ்முத்தி யிதுமுத்தித் திறத்ததாமே. (நஅ)

தவமென்றவநெறி சரிப்பார்முத்தியுஞ்
சிவகதிதனையு முறையுறவகுத்தது.

(இ - ள்.) அரி மகளீரிடத்துண்டான போகமே முத்தியை வையரின்புறுமு ன்கிற உலகாயதன்முத்தியும்
த்தி

கந்தமைந்துமமு உருவம் வேதனை குறிப்பு பாவனை விஞ்ஞா றுமுத்தி னமென்கிற பஞ்சகந்தங்களுங் கெடுகிறதே முத்தியென்கிற புத்தரிற் சௌத்திராந்திகன் முத்தியும்

திரிகுணமூ ம முக்குணங்கெடுகிறதே முத்தியென்னு மா டங்குமுத்தி னரில் நிகண்டாவாதி முத்தியும். அன்றியும் மாயாவாதத்தி னரீச்சுரசாங்கியன் முத்தியு மாம்

விரிவுவினைகெ எங்கும் விரிந்திருக்கப்பட்ட கன்மங்கள் டுமுத்தி கெடுகிறதே முத்தியென்கிற பிரபாகரன்முத் தியும்

மலம்போமு ஆணவமலங்கெடுகிறதே முத்தியென்கிற அ த்தி கச்சமயத்திற் பேதவாதி முத்தியும்

விக்கிரக நித்த இந்தச்சரீரம் முத்தியிலு மழியாது நித்தி முத்தி யமாயிருக்குமென்கிற அகச்சமயத்திற் சிவச மவாதிமுத்தியும்

விவேக முத்தி — இந்தச்சரீரந் தொந்தனைப்பட்டு நிற்கிற சீவான்மாவுக்கு விவேகஞான முண்டாகிறது தானே முத்தியென்கிற மாயாவாதி முத்தியும்

பரவுமுயிர்கெ டுமுத்தி — சொல்லப்பட்டுவருகிற வான்மா கெடுகிறதே முத்தியென்கிற மாயாவாதத்திற் பாற்கரியன் முதலியும்

சித்திமுத்தி — பசுகரணங்கெட்டுச்சிவகரணமாகிறதே முத்தியென்கிற அகச்சமயத்திற் சங்கராந்தவாதிமுத்தியும். அன்றியுமிதற்கு அட்டமாசித்தியென்னவுமாம்

பாடாணை முத்தி — ஆன்மா கேவலத்திற்கிடக்குந் தன்மைபோல முத்தியிலு மொன்றுமறியாமற் பாடணம்போற் கிடக்குமென்கிற பாடாணவாதிமுத்தியும்

இவைபழிசேர் முத்தி — என்றிங்ஙனஞ் சொல்லப்பட்ட பத்துவகைமுத்திகளுங் குற்றத்தையுடைய முத்திகளாம். பின்னை நன்மையாகிய முத்தியேதென்னில்

திரிமலமு மகலவுயிரருள்சேர் முத்தி திகழ்முத்தி — ஆணவ மாயை காமியமென்கிற மூன்றுமலங்களுநீங்கி யான்மா வருளோடுங்கூடிநிற்கிறதே விளக்குதலையுடைய முத்தியாம்

இது முத்தித் திறத்ததாமே. — இதுவே முத்தியென்றுசொல்லப்பட்டவையெல்லாவற்றிலுங் திறப்பாட்டினையுடைய முத்தியாம். எ-று.

வி-பு. உலகாயதன் அரிவையரின்புறுமுத்தி யென்றதே தென்னில் அவன் பிரத்தியக்ஷமொழிய அநுமானங் கொள்ளாதபடி

யாலே கன்மமு மான்மாவுந் சிவனு மில்லையென்றுசொல்லி இம்
மைப் பயனுகிய மகளிரிடத்தண்டாகிய சிற்றின்பமே பொருளெ
னக்கொண்டா னெனவறிக. இதற்கு. பி-ம். சித்தியாரில். "ஊடு
வதினைர்வ தற்ற கலவிமங்கையனையுள்ளி, வாடுவதடியில்வீழ்ந்த
வருந்துவதருந்தவம்பின், கூடுவதுணர்வுகெட்டுக் குணமெலாம்
வேட்கையாகி, கீடுவதின்பமுத்தி யித்தினின்றூர்கண்முத்தர்."
எ - ம். அவன் மறுமைப்பயன்கொள்ளா னென்பதற்கு. பி-ம்.
"வாசமார் குழலார்தங்கண் மணிபல்குற்றடத்தேதழுழ்கி, நேசமா
ர்சூழுதக்செவ்வா யழுதினைநிறையவுண்டு, தேசுலாமணிமென்மே
ன்மேற்சேர்ந்துவீற்றிருந்திடாதே, மாசுலாமனத்தோரெல்லா ம
றுமைகாண்டழிவர் மன்னே." எ-ம். "வீட்டினையுளதென்னேறுழி
மெனிவதிங்கென்னைவீடு, காட்டுவோர்கண்டோர் கேட்டோர் கரி
யவை யுண்டோற் காட்டூர், நாட்டினிலரசனைனைக் கிசைபவேவந்
தகாலை, மீட்டிய பொருள்கொண்டிங்கே யின்பத்தி னிசைந்திடு
மே." எ-ம். கண்டுகொள்க.

அவனிங்ஙனஞ் சொன்ன மூத்தியை பழிசேர்முத்தியென்று
மறுத்ததேதென்னில் பன்றியானது கன்மத்துக்கிடாக விட்டை
யை விரும்பிப் புசித்தாற்போல வவனு மசுத்தமாயிருக்கிறமகளிரி
டத்துண்டாகிய சிற்றின்பத்தை யநுபவிக்கிறதுதானே முத்தி
யென்னையு மெனவறிக. என்றிங்ஙன மறுத்ததற்கு. பி-ம். சித்
தியாரில். "ஆசையுற்றுழல் சூகரங்க ளசுத்தமேவி யினங்துதின்,
றேசுகித்தன வாயிதிற்சுக மேழையோடுறு மின்பந். மாசுதற்றூ
ளிர் நித்தசுத்த வளந்தருஞ்சுக வாரிகா, னீசனுக்கடி மைத்திற
த்தி னியைந்துநாம்பெறு மின்பமே." எ-ம். ஸ்ரீகள அசுத்தமெ
ன்பதற்கு. பி-ம். சித்தியாரில். "தோலிரத்த மிறைச்சிமேதை
யெலும்புமச்சை சுவேதநீ, ராலெடுத்த மூடைக்குரம்பை யழுக்கி
னூறு புழுக்குழா, நூலொழுக்கிடு கோழையீர னுரைக்குழுத்திர
யாத்திரஞ், சேலடர்த்த கண்ணுர்க ளென்பது தேர்மலத்தி

டிண்ணமே." எ-ம். "பொன்குலாவு மணிக்கலன்கண் மலம்புகு
ற்கை பொருந்திடா, மின்குலாமினைடயார்கடா மூலகத்தின்வேட்
கை விடும்பொருள், புன்புலான்மல மூத்திராதி பொசிந்தூகாறு
டூலைக்கல, மென்கொலாமிவர் மேல்விழுந்த திவற்றினென்பெற
வெண்ணியே." எ-ம். கண்டுகொள்க. அன்றியு மிம்மைப்பயனுந்
திவறலே யுண்டாகவேழுறுமென்று அவனைமறுத்ததற்கு. பி-ம்.
சித்தியாரில். "வேதரரணரரணம் மறியாவிழுப்பொருள்பே
தைபாற், றூதலுயிருகானடந்திடு தோழன்வன்மைசெப் தொண்
டனுக், காதலாலடியார்களுக் கெளியானடிக்கமலங்கணீ, காத
லாலணையீண்டன் வேண்டின விம்மையேதருங் கண்டீரே."
எ-து. கண்டுகொள்க.

இனி இரண்டாவது புத்தரிற் சௌத்திராந்திகன் கந்தமைந்
தமறுமுத்தி யென்ற தேதென்னில் பிருதிவி யப்பு தேயு வாயுவெ
ன்கிற பூதநாலும் வலி கந்தம் இரதம் வன்னம் என்கிற உபாதான
ரூபநாலும் ஆக உருவகந்தமெட்டும் குசலாவேதனை அகுசலா
வேதனை குசலாகுசலாவேதனை என்கிற வேதனைக்கந்தமூன்றும்
சோத்திரம் துவக்கு சகூஉ சிங்ஙவை ஆக்ராணம் மனது என்
கிறகுறிப்புக்கந்தமாறும் பொய்சொல்லல் கோட்சொல்லல் கோபி
த்துச்சொல்லல் பயனிலசொல்லல் என்கிறவாக்கின்குணை நாலும்
களவுக்குப்போதல் வறிதேதொழில்செய்தல் கொலைசெய்தல் என்
கிறகாயத்தின்குணமூன்றும் கொலைநினைக்கை காமப்பற்று ஆசை
என்கிற மனத்தின்குணமூன்றும் ஆகக்கூறிய வகைமூன்றினுந்
செய்யப்பட்ட திக்குணம்பத்தும், அன்றியும் மெய்யுரை நல்வார்
த்தை இனியனகூறல் பயன்படுசொல்லலென்கிற வாக்கின்குணைநா
லும் பள்ளிவலம்வருதல் தவம்புரிதல் தானஞ்செய்கையென்கிற
காயத்தின்குணமூனறும் அருணினைவு ஆசையறுத்தல் தவப்பற்று
என்கிற மனத்தின் குணமூன்றும் ஆக நற்குணம்பத்தும், ஆகவ்
கையிரண்டினுக்கு முண்டாகப்பட்ட பாவனை கந்த மிருபதும்;

சத்தம் பரிசம் ரூபம் ரசதம் கந்தம்சித்தம் என்கிற விஞ்ஞானகந் திமாறும், ஆக விங்ஙன நாற்பத்தமூன்றுவகையாக வெண்ணப் பட்டுவருகிற டஞ்சகந்தங்களைந்து காரணங்கெட்டுக் காரியங்கி டக்குமென்கிறது மிகுத்துனை யில்வழக்குமாய்ப் பந்தத்துக்கமுமா யவி துகுற்றவீடென்றும் கந்தங்களைந்து நேராகக்கெட்டு வீட்டை யடையுமென்பதுவே முத்தியின்பமெனக் கொண்டானெனவறிக. இதற்கு. பி-ம். சித்தியாரில். "ஓங்கியவுருவமோடும் வேதனைகுறி ப்பினேறுந், தாங்குபாவனைவிஞ்ஞானந் தாமிவையைந்துங்கூடிப், பாங்கிறற்சந்தானத்திற் கெடுவதுபந்தத்துக்க, மாங்கதுபொன்ற க்கேடா யழிவதுமுத்தியின்பம்." எ - து. கண்டுகொள்க. அன்றி யும் இந்தப்பஞ்சகந்தங்களு நாற்பத் துமூன்றுவகையாய் நிற்குமெ ன்பதற்கு. பி-ம். புத்தநூலில். "எட்டிலையுருவமூன்றுவேதனை யாறுஞான, மொட்டியகுறிப்போராறு செய்கையுமிருபதாகக், க ட்டியபஞ்சகந்தங் கணத்தினிற்பங்கமாகித், தொட்டநாற்பத்து மூன்றும் சுகதநூற்றுணிவுதானே." எ-து. கண்டுகொள்க.

அவ னிங்ஙனஞ் சொன்னமுத்தியைப் பழிசேர்முத்தியென் று மறுத்தசேதனென்னில் அவனென்மாவில்லையென்கையினு லுமப் பழியுண்டென்று நாட்டப்பட்ட பஞ்ச கந்தங்களுங் கற்பூரத்தீ பம்போல வறக்கெட்டுப்போ மென்கையினு லுமந்தமுத்தியைப் பெறுவானில்லாதபழியாலு மெனவறிக. இதற்கு. பி-ம். சித்தி யாரில். "ஐந்துகந்தஞ்சந்தானத் தழிதல்பந்தத்துக்க மறக்கெடுகை மூத்தியின்ப மென்றறைந்தாய்கந்த, மைந்துமழிந்தான் முத்தி யணைபவராரொன்ன வணைபவர்வேறில்லையென்று யார்க்குமுத்தியி ன்ப, மைந்தினுணர் வினுக்கென்னி லெழியாதவ்வுணர்வுண், டாகவேயெவ்விடத்து முருவாதிகந்த, மைந்துமுளவாமதுவும் பந்த மாகியரந்தைதரு முத்தியின்ப மறிந்திலகாணீயே." எ-து. கண் டுகொள்க.

சிவப்பிரகாச சுவ்வியாக்யாகம்.

இனி மூன்றுவது திரிகுணமுமடங்குமூத்தி யென்றது அமணரில் நிகண்டாவாதிசொன்னதென்று தேதென்னில் ஞானவாணியம் தரிசனவாணியம் வேதநியம் மோகநியம் ஆயுசு நாமம் கோத்திரம் அந்தராயம் என்கிற குணங்களைட்டும் பசித்தல் தாகம் பயம் செற்றல் உவகை மோகம் சிந்தனை பதித்தல் நோய் நசித்தல் வேர்வை கேதம் மதம்வேண்டல் அறிசயித்தல் உருசிப்பு பிறப்பு உறக்கம் என்கிறகுணங்கள் பதினெட்டும் அரதி அரதிசோகம் சுகுச்சை பயம் என்கிறகுணங்களாறும் ஆகவிங்கனஞ் சொல்லப்பட்டுவருகிற மூவகைக்குணங்களோயும்விட்டுப் பூர்வகன்மத்திலுண்டாகிய கன்மங்கள் புசித்துத்தொலைந்த வவதாந்தானே விட்டின்பமெனக்கொண்டானெனவறிக. இங்ஙனஞ் சொல்லப்பட்ட மூன்றுவகைக்குணங்களினு மூதற்சொன்ன ஞானவாணியமாதியாயுள்ள குணங்களைட்டுக்கும். பி-ம். சித்தியாரில். "ஈறிலாதனவந்தஞானமுதலெண்குணங்களினு மொன்குணை, மாறிலாதமதிமேவுசீதனென மன்னிவானவர்வணங்கவே, வேறுலாவுகுணஞானவாணிய மதாதிபெட்டினையும்விட்டசீ, ரேறுபான்மையுடனீடுவாழுக னெங்களுக் கிறைவனென்றனன்." எ-ம். இரண்டாவதுசொன்ன பசித்தலாதியாயுள்ள குணங்கள் பதினெட்டுக்கும். பி-ம். சித்தியாரில். "பசித்தருகபயஞ்செற்றமேதுவகை மோகசிந்தனைபதித்தநோய், நசித்தல்வேர்வினொடு கேதமோடுமதம் வேண்டலீண்டதிசயித்தலும், புசிப்புவந்திடு பிறப்புறக்கமவை விட்டொராட்டகுணபூதரைப், வசித்தவன்னலகினை மேவிருந்தொரு சொ லிகலறுக்கருளுமென்றனன்." எ-ம். மூன்றுவதுசொன்ன அறிசிகமாதியாயுள்ள குணங்களாறுக்கும். பி - ம். சித்தியாரில். "ஏறுமொன்றுடைய வாகியெங்குமணு வாயிரும்புகன் மரங்களும், பூணுமங்குரு வெலாமுமாகுமனை புற்கலப்பொருள்க ளனைலாய, காணுமங்கறு வகைத்தொழிற்களனை கட்டிவிட்டதெ

நிகண்மமேமன், மாண நின்றுவரு மாறிமாறிமுன் வைாந்தநண்டு விடமாட்சியே." என - ம். கண்டுகொள்க.

அவ ஸ்ங்ஙனஞ் சொன்னமுத்திபைப் பழிசோர்முத்தி யென்று மறுத்ததேதென்னில் குணங்களைவிட்டவிடந் தவமாகாதாகையாலும் பூர்வகன்மநிச்சயித்துப் புசிக்கைக் கிவ்விடத்தான்மாவுக்குத் தனக்கென்னவோ ரறிவுமில்லாதபடியாலு மெனவறிக. இதற்கு. பி-ம். சித்தியாரில் "பூர்வகன்மமற்றிடப் புசித்தபின்பு பொன்னெயி, னேர்வதென்னினக்கன்மத்து நிச்சயமிலாமையிற், றீர்தலின்மை தேரின்வாயில் சேர்தலின்மைதெண்கடல், னீர்வறந்தபினபுபூனை மீனருந்தின்றதே" எ-து. கண்டுகொள்க.

அன்றியும் திரிகுணமுமடங்குமுத்தி என்பதற்கு மாயாவாதத்திற் பேதமாயுள்ள நிரீச்சுரசாங்கியன் முத்தியென்னவு மாமெனவறிக. அஃதெங்ஙனமெனில் பிரகிருதித்தவமானது தூலசூக்குமமுமாயெல்லாப்பதார்த்தங்களுக்குங் காரணமுமாய் முக்குணங்களு மொத்திருந்திறதே தனக்குவடிவுமாய் அமூர்த்தமாயிருக்கும். புத்திமுதல் பிருதிவியீறுகிய தத்துவ மிருபத்துமூன்று மிதனுடைய வியாத்தியாயிருக்கும். அதனெடுங்கூடின் சுத்தபுருடனும் பாலுறுகிய பிள்ளைகளைப்போலச் சேட்டையுண்டாய்ப் பல யோனிகளையுமெடுத்துத்தக்குணங்களோடு மநாதியேகூடிப் புத்தியையுடைத்தா யவித்தையின் வசத்திலே யொழுகி ஜநநசம்பந்தமுண்டாயிருக்கிற சுகதுக்கமானகுணங்களு முண்டாயிருக்கும். இதுவிடத்தம். இனியவன் முத்தியிலிருக்கும்படியாவது அந்தப்பிரகிருதியினுடைய தன்மையையறிந்து புத்தியையடைந்திருக்கிற வறியாமைபோய் விகிருதியாலுண்டான சுகதுக்கங்களைப் பிரகிருதிக் குண்டான தென்றுகண்டிது ஆன்மாவுக் கில்லையென்று குணத்திரயங்களடங்க விருப்பது. இதுவே மோகூடமென்று சொல்லுவனெனவறிக. இதற்கு. பி ம். சித்தியாரில். "மூலம்புரியட்டகம்விகிர்தியாய்மூன்றுபிரகிருதி, தூலஞ்சூக்குமம் பர

மாய்ச் சுத்தப்புருடன் சந்நிதியிற், பாலன்சேட்டை புரிந்தலக மியோனிபலவாய்ப் பரந்தொடுங்குஞ், சாலவன்று நிரீச்சுவர சாங்கியன்முன் சாற்றிடுமே." என-து. கண்டுகொள்க.

இதனைப் பழிசேர்மூத்தியென்று மறுத்ததேதென்னில் அப்பழியான்மா வநாதியே சுத்தமுலல் பிரகிருதியான் மறைப்புண்டு கிடக்கமாட்டான். அன்றியும் அதுநீங்கி மூத்தியைப் பெற்றாலும் முன்புபோலே மீளவுங்கூடும். ஆகையா லிவையிற்றைக்கூட்டுமைக்கொருகத்தாவும் வேண்டுகையா லதுபொருளல்லவெனவறிக. இதற்கு. பி - ம். சித்தியாரில். "சுத்தனறிவன் புருடனெனிற் குழாதாகும் பிரகிருதி, பெத்தநீங்கிலுலும் பின் பெத்தமுவன் பேரறிவாற், கத்தமேவும் பிரகிருதி கண்டுகழிக்கமாட்டாதேனல், மூத்தமுகான்சுத்தனுக்கு மூலப்பிரகிருதியிலையாம்." என-ம். "அறியான்புருடன் பிரகிருதி யசேதனங் காரியத்தினுக்குக், குறியாய்நாதனுளனென்று கூறுமூத்திவிவேகமெனிற், செறிவாந்தானே போகாதறியிற் சேர்த்தோன் வேண்டுஞ்செயலிற்போ, நெறியாற்பணிசெய் துடற்பாச நீக்கிக்கொண்ணீ நின்மலனுல்." என-ம். கண்டுகொள்க.

இனிநான்காவது விரிவுவினைகெடுமூத்தியென்று பிரபாகரன் சொன்னதேதென்னில் அவனரிதாகச் செய்யப்பட்ட கன்மத்தின் மூடிவிலே ஞானமென்பதொன்றுண்டா யந்தக்கன்மத்திலே யறிவுகூடி-நின்று தொழிற்பட்டடங்தக் கன்மமு ஞானமுங்கெட்டு ஆன்மா மண்போலவுங் கல்லுப்போலவுங் கிடக்குமே மூத்தியென்று கொண்டானெனவறிக. இதற்கு. பி-ம். சித்தியாரில். "அருஞ்செயலின் பாவத்தேய் பூர்வமெனு மதுதானறித், தருஞ்செயலே நின்றழியிற் முன்பலிப்ப தாகுமது, வருஞ்செயலொன்றி.ன்றியே மண்சிலேபோ லாமுத்தி, தருஞ்செயலு மெனவுணர்ந்து காரணிமே லவன்சாற்றும்." என-து. கண்டுகொள்க.

அவனிங்ஙனஞ்சொன்ன முத்தியைப் பதிசேர் முத்தியென்று மறுத்ததேதென்னில் கன்ம மறுமைப்பயனைத் தருமென்று வேதஞ் சொல்லுகைச்செய்தே யந்தக்கன்மங் கெட்டுப்போமென்றவன்சொல்லுகையினுலு மந்தக்கன்மத்தா லுண்டாகிய ஞானமுங்கெட்டுக் கல்லுப்போல்வு மண்போலவுங் கிடக்குமென் றவன் சொல்லுகையா லவ்விடத்துப் பேறில்லாதபடியா லெனவறிக. இதற்கு. பி-ம். சித்தியாரில். "வேறுபலன் றருவதுதான் விணையென்று வேதங்கள், கூறுவோர்பூர்வந்தான் கொடுக்குமெனக் கொண்டவுனா, மாறுதரு மறையோடு முன்பின்றிவந்ததாற், றேறியவின் பூமுடிமேற் சேர்ந்துமணங் திகழ்ந்ததுவாம்." எ-ம். "ஆகந்தங்கதியென்ன வறிவதறிகைவிடன்கை, யூனம்பினுணர்வழிந்தோர்க் குளதாகுமோமுத்தி, தானிங்குச்சிவப்பொழிபத் தழனிற்குமாறில்லை, ஞானக்கெட்டுயிர்நிற்கு மெனுமுனாதானன்றுதால்." எ-ம். கண்டுகொள்க.

இனி ஐந்தாவது மலம்போ முத்தியென்றதைப் பேதவாதி சொன்னுனென்றதேதென்னில் அவன்செம்பான திரதகுளிகையி னுலே காளிதங்கெட்டுப் பொன்னன தன்மைபோலச் சிவனுடைய வருளாலே யான்மாவுக்கு மலமான துகெட்டுப் பெறுவா னும் பேறுமாக முத்தியிலேயிருப்பதே பொருளெனக் கொள்ளுகையினு லெனவறிக. இதற்கு. பி-ம். சங்கற்பநிராகரணத்தில். "ஈசனதருளாற் பாசத்தொகுதி - செறிவுறுசெம்பிற் கறையுறுகளிம்பு - குளிகைதாக்க வொளிபெற்றுங்கு - நித்தசுத்த முத்தராக - வைத்தனருலகின் மறைவல்லோரே." எ-து. கண்டுகொள்க.

அவனிங்ஙனஞ்சொன்ன முத்தியைப் பதிசேர்முத்தி யென்றதேதென்னில் வேதாகமங்கள் பதிபசுபாச மூன்றுநித்தியமென்று சொல்லுங்கைச்செய்தே ஆணவமலங் கெடுமென்னையினு

லெனவறிக. இதற்கு. பி-ம். சங்கற்பநிராகரணத்தில் அவன் மறுப்பிலே "மறைகளாகமத் தறைகண்மற்றெலையு - நாசமில்பதி பசு பாசமென்றுணாத்த-லயர்த்தோர்குளிகை சயத்நாற்றுமிரக்-காளிதநாசம் பாசத்தேய்த்தல் - கூடாதன்றியுங் குள்ளைகசீருண-ீடாதழித்த நிலைநிலையாகலிற் - பேதவாத மோதுதல்பிழையே." எ-து. கண்டுகொள்க.

இனி ஆறுவது விக்கிரகநித்தமுத்தி. எ-கு. சிவசமவாதி சுத்தமாயாசரீர மழ்பாமல் நித்தியமா யிருக்கிறதே முத்தியென்று னென்றதேதென்னில் வேட்டுவாளியான து ஒன்றுமறியாத பச்சை ப்புழுவையெடுத்துத் தற்சொரூபமாக்கின தன்மைபோல வொ ன்றுமறியாத வான்மாவையுஞ் சிவனுடைய வருளெடுத்துக்கொ ண்டு தற்சொரூபமாக்க வந்த மாயாவுடல்தானே நித்தியதத்துவத் தைப் பெற்றிருப்பதுதானே முத்தியென்று கொள்கையிலுலென வறிக. இதற்கு. பி-ம். சங்கற்பநிராகரணத்தில். "மூன்றுமன்ற னது முதிரொளிஞான-மறியாப்பச்சைச் சிறுபுழுக்கவர்ந்த-வண் டெனவுபிரைக் கொன்றுடலுயிரது - தன்னேதோக்கித் தான தா வாகி - யையவகைத்தொழிலு மெய்வகையுணர்வும் - பிரியாவாறு பெற்றுத் - திரியாப்பெரியோர் திரட்சிசேர்ந்திடமே." எ - து. கண்டுகொள்க.

ஆவனிவனஞ்சொன்ன முத்தியைப் பழிசேர் முத்தியென் றதேதென்னில் அருள்பொருந்தின ஆன்மாக்களுடைய மாயாதே கந்தானே நித்தியதத்துவத்தைப் பெற்றிருக்கிறது பதமுத்தியா கிய சாரூபமொழிந்து சாயுச்சியமாகாதாகையாலும் அன்றியும் யா தாமொரு சரீரந்தாங்தினை யுள்ளமட்டு மூன்றுமலமும் போகாதா கைபோலு மப்படிச் சொன்னதெனவறிக. இதற்கு. பி-ம். சங்கற் பநிராகரணத்தில். "முத்தியுற்ற நற்றவரவையிடை - சேர்வொன் றினை சார்தருமுத்தி - சாலோக்கியமோ சாயுச்சியமேற் - பந்தமு

ற்ற கந்தலகழித்த - லறிவிலோடறிவு பிரியாப்பெற்றி - வேண்டு மென்பதற் கிண்டி-வரிவ்வா - றிருப்பொன்பதற் குருத்தான்வே ண்டும்.', எ-ம். சித்தியாரில். "அநாதியுட லொன்றினவிட் டொ ன்றுபற்றிக் கன்மாலா யழிந்துவருநலா லந்தமில்லைப், பிறதிய ருள் பெற்றவர்க ணித்தவுருவத்தைப் பெற்றிருக்கை மூத்தியெ னிற் பெறும்படதமே யிதுவு, மிறுதிநிலை யிதுதானுங் காயமுண் டே விருங்கன்மமாயை மலமெல்லாமுண்டா, மறுதிதருமுட் லாதி காரியத்தாலநாதி மலமறுக்குமருந்தற்று ளுடன்மாயுங்கா ணை." எ-ம். கண்டுகொள்க.

இனி ஏழாவது விவேகமுத்தி. எ-கு. மாயாவாதி யிவனு க்கு விவேகஞான முண்டாகிறதே முத்தியென்றுனென்று பொரு ட்கூறியதற்கு வகையேதென்னில் அவன்கருத்து நிர்மலமாயிருக் கிற ஆகாசத்தை மேகமறைத்ததன்மைபோலச் சுத்தமாயிருக்கிற பரப்பிரமமு மாயாவுபாதிகளிருலே வாதிக்கப்பட் டிந்தவுடலி லே மயங்கிநிற்கிறதே ஜீவான்மாவாவது. அந்த வாகாசத்திலே யொரு காற்றுத்தோன்றி யந்தமேகத்தை நீக்கினதன்மைபோல விந்தஜீவான்மாவி னிடத்திலே யொருவிவேகஞானந்தோன்றி யந்தமாயாவத்தையை நீக்குகிறதே முத்தியெனக்கொண்டானெ னவறிக. இதற்கு. பி-ம். சங்கற்பநிராகரணத்தில். "இவ்வியற் பந்தப் பௌவமதகல - விண்முதறந்த கொண்மூப்படலத்-திரு ளறவுதித்த காறகவிவேகந் - தன்னிற்றேருன்றிச் சாதகமனத் தையு - மன்னகப்பிரிப்பு மடியிழைவாங்கலும் - போலஞாலம் பொய்யறக்கழிஇத் - தானேதாலய்த் தன்னிற்றன்னைத் - தானே கண்டு தன்னலமுற்று - வசையிறத்தவ மகிபதத்தெளிவா - லக மேபிரம மாயினனெனவறிந் - தசலஞகிநற் சலசலமதுபெனக- கண்டிடுமுடலம் விண்டகல்கடந்த - மங்குலதுடைதர வெங்கு மாந்தகைத்தே." எ-து. கண்டுகொள்க.

அவனிங்ஙனஞ் சொன்ன முத்தியைப் பதிசேர்முத்தி யென்ற தேதென்னில் இந்த ஜீவான்மாவினிடத் தண்டாகிய விவேகஞான மூன்பேயுள்ளதாகி லிவனுக்கு மயக்கம்வர வழக்கில்லை: பின்புள்ளதாகி லாகாயப்பூப்போல வில்லாத தண்டாகாதாகையா லெனவறிக. இதற்கு. பி-ம். சங்கற்ப நிராகரணத்தில். "பந்தமதகல மூந்துவிவேகம் - வான்வளி யெனத்தனிற் ரூனேதான்றின் - மூன்புளதாயின் மயங்கா திலதெனிற் - பின்புளதாகா திலதுளதெனின்வெளி - மலர தருமணம்." எ-து. கண்டுகொள்க.

இனி எட்டாவது பரவுமுயிர் கெடுமுத்தி. எ-கு. மா யாவாதத்திற்பாற்கரியன் ஆன்மாகெடுகிறதே முத்தியென்ரு னென்று பொருட்கூறியதற்கு வகையேதென்னில் அவன்கரு த்து பாப்பிரமந்தானே பிரபஞ்சமுமா யான்மாவுமாய்நின்று காரியப்படுகிறவிடத்து ஆன்மா கன்மத்தை யநுவத்தித்து ஞானமூன்டானவாறே பிரமத்தோடுங்கூடி யான்மா வழிந் தபோகிறதே முத்தியெனக்கொண்டா னெனவறிக. இத ற்கு. பி-ம். சித்தியாரில். "சித்தேயுலகாய்ப் பரிணமித்துச் சிவஞகித்திகழ்ந்தமையாற், சத்தேயெல்லா முத்திதனைச் சாரக்கண்டஞானங்கள், வைத்தேதமொழியுமாமறைகள் சொ ன்னமரபேவத்தக்கா, லொத்தேதுகெட்டுப்பிரமத்தோ டொ ன்ரூய்ப்போமென் றுணைத்தனனே." எ-து. கண்டுகொள்க.

அவனிங்ஙனஞ்சொன்ன முத்தியைப் பதிசேர் முத்தி யென்றதேதென்னில் அந்தப்பரப்பிரமம் பிரபஞ்சமாகாதப டியாலும் அன்றியு மான்மாவாகாதபடியாலு முத்தியி லான் மாக்கெட்டுப்போ மென்கையிஞற் பெறுவானில்லாதபடியா லுமெனவறிக. இதற்கு. பி-ம். சித்தியாரில். "இயம்புகின்ற லகாயிடாது சடமென்றுமின்று சடமாகியே, முயங்குகின் றமையி னிலவணைத்திரத முழுதுமேகமதை முயல்கைபோற்,

பயந்தென்னி லறியப்படும்பொருளு மறிவுமென்று பலவா
குமோ, தியங்குகின்றதெ னுணாத்திடாய்கடின மாதியாக
வருசித்தேன்" எ-ம். "அறிவிதொடு செயல்மாறவிடதினை
யணுகாதவையிரண்டு, லுறுதியான பிரமத்திரு டி
ழியலொன்றலா மெனவுரைத்திகா, ணிறுதியே யிதனுடை
சைவதின்றிசைவ தள்ளதாயிடனுமின்பமே, பெறுதிநீயட
லொயிர்களாயது பிறக்குமாறுசெயல் பெற்றியால்." எ-ம்.
கண்டுகொள்க.

இனி ஒன்பதாவது சித்திமுத்தியென்று அகச்சமயத்
திற் சங்க்ராந்தவாதி யான்மா பசுகரணங்கெட்டுச் சிவகர
ணமாகிறதே முததியென்று ணென்று பொருட்கூறியதற்கு
வகையெதன்னில் அவனென்மாவுக்கு மலபாகம்வந்தவிடத்
தக் கண்ணுடியிற்காட்டினநிழ லந்தக்கண்ணுடியிற பொரு
ந்திறற்போலச் சிவனுடையவருளான்மாவிலே பிரகாசித்த
வவதரத்துக் காட்டத்தைப்பொருந்தின வக்கினிபோலவு
முப்பளத்தைப் பொருந்தின புல்லும் வைக்கோலும் போல
வும் பசுத்துவங்கெட்டுச சிவத்துவமாய்ப் பசுகரணங்கெட்
டுச் சிவகரணமாகிற சித்தியதே முத்தியெனக் கொள்ளுகை
யிது லெனவறிக. இதற்கு. பி-ம். சங்கற்பநிராகரணத்தில்.
"பழமலநீங்க நிகழுங்காலை - வெற்பேர்முகவொளி தோற்
றுங்கலனெனைத் - தலைவனதருளுயிர் நிலவிடநிலவக் - காட்
டத்தங்கி மாட்டத்தங்கிய - தனமையுமளத்த புல்லைவினிப்
பும் - போன்றதுவாகித் தோன்றிடுமதுற்ற - பசுகரணங்கள்
சிவகரணங்க - ளாகமாறியறிவு - மேகமாமுயிர் யானெனதி
ன்மே றை." எ-து. கண்டுகொள்க.

அவனிங்ஙனருளானை முத்தியைப் பழிசேர் முத்தி
யென்றதேதென்னில் அப்படிக்கண்ணுடியான தை கொடுத்
தது கொள்ளுங் கண்ணையுள்ளானையிலு மான்மாவுக்கது

வில்லாதபடியாலு மாயாகருவிகள் ஜடமானபடியாலெ யது சிவசொரூபமாகாதபடியாலு மெனவுறிக. இதற்கு.பி-ம். சங் கற்பநிராகாரணத்தில். நோக்குமுகவொளி நீக்காதானென க்-கவருந்தன்மை முகுரம்போலக்-கொடுத்த தநோகாடற் கடு த்தநுண்டன்றே - காட்டத்தங்கி கூட்டக்கூடு - மிந்தனத் தியற்கை வெந்தழருங்கா - வுப்பளத்தடுத்த புற்பலாலங் கள் - சடத்தவேணுங் கொடுத்த நிகாள்ளுந் - தன்மையுண் டெனக் கின்மையதன்றே - யவமுறுகறுவி சிவமயமாமெனக் - கூறினதாகமம் வேறுருக்கவரா - தென்பதெ னைவழூற் றுன்பந்தொடைக்குந் - திருவருண்மருவ வுரியனவென்னி - லருளுருமாயா விருளினதாங்கொல்.'' எ - று. கண்டுகொ ள்க.

அன்றியு மிங்ஙனஞ்சொல்லப்பட்ட சித்திமுத்தியென்ப தற்கு அட்டமா சித்தியென்னவுமாமென்று பொருட்கூறியத ற்கு வழியேதென்னில் அணுமா மகிமா லகுமா கரிமா ஈசத் வம் வசித்துவம் பிராத்தி பிராகாமியம் என்னும் பெயர்களா யிருக்கும். இவையிற்றினுள் மூதற்கூறிய அணுமாசித்தியாவ தி இவன் சூக்குமதேகமாகவேண்டுமென்றுற் சூக்குமதேகமா கையெனவுறிக. இனி இரண்டாவது மகிமாசித்தியென்றது இவன் மகாமேருபோலப் பெருக்கவேணுமென்று லப்படியே பெருக்கையெனவுறிக. இனி மூன்றாவது லகுமாசித்தியென் றது பதிநாலுலகங்களினுங் தடைபடாமல் மனோவேகம்போல் விவனினைந்தவிடத்திலே போயிருக்கையெனவுறிக. இனி நா ன்காவது கரிமாசித்தியென்றது ஐராவதமுதலாயுள்ளவை யனைப்பினு மிவனைசவற்றிருக்கையெனவுறிக. இனிஐந்தா வது ஈசத்துவமென்றது சர்வான்மாக்களையுந் தன்னுடைய வாச்கினையிலே நடத்திவித்துக் கொள்ளுகை யெனவுறிக. இனி ஆறாவது வசித்துவசித்தியென்றது பூலோகத்தைத்தெ

யிவலோகமாக்கியுந் தெய்வலோகத்தைப் பூலோகமாக்கியும் வருகையெனவறிக. இனி ஏழாவது பிராத்திசித்தியென்றது அரிபிரமாதியான தேவர்கள் போகங்கள் தனக்குவரவே ஏவுமென்று மனதிலெநினைந்தா லப்பொழுதே சித்திக்கிறதெனவறிக. இனி எட்டாவது பிராகாமியசித்தியென்றது ஒரு கணப்பொழுதிலே வனேக நூறுயிரம் பூரீ களீச்சிருஷ்டித்து அப்பொழுதே யந்த பூரீ களுக்குப் பத்தவா யநுபவிக்கையெனவறிக. ஆகச்சித்தியெட்டு மிங்ஙனங்கண்டுகொள்க.

இது மூத்தியாகாதென்று மறுத்ததற்கு. பி-ம். சித்தியாநில். "குறித்தடியி னின்றட்ட குணமெட்டுச்சித்திக் கோகன கன்முதல்வாழ்வு குலவுபதமெல்லாம், வெறுத்துநெறி யறுவகையு மேலொடுகீழடங்க வெறும்பொயென நினைந்திருக்க மேலொடுகீழில்லா, னிறுத்தவதோர் குணமில்லான் றன்னை யொருவர்க்கு நினைப்பரியா னென்றுமிலா னேர்படவந்துள் ளே, பொறுப்பரிய பேரன்பை யருளியதன்வழியே புகுந்தளிப்ப னெங்குமிலாப் போகத்தைப்புரிந்தே." எ-து. கண்டுகொள்க. இதனு ளெட்டுச்சித்தியென்பதை யட்டமாசித்தியுகன்மூத்தியாகா தென்பதற்குக் கண்டுகொள்க. அன்றியும் தெவிகாலோத்திரத்தில். "அட்டமாசித்திமுத லனைத்துள்ள பேறுகளுங், கட்டமாங்கதிகடரும்பரகதிகாணைக்கொடா." எ-ம். கோயிற்புராணத்தில். மூத்தியு முடிவிலாத போகமுநாலிரண்டாஞ் சித்தியுமென்செய." எ-ம். வருமேதுக்களினுங் கண்டுகொள்க.

இனி பத்தாவது பாடாணமூத்தி. எ-து. இவன்பாடாணம்போலே கிடக்கிறதேமூத்தியென்று பாடாணவாதிசொனனுனென்று பொருட்சுடறியதெதென்னில் அவனறிவில்லாதவன்மாக்க ளதிதாவத்தைப்பட்டுக் கிடக்குந்தன்மைபோலச் சுத்தாவத்தையினு மான்மாவொன்றுமறியாமற் கல்லுப்

போலே கிடக்குமென்று கொள்ளுகையாலப்படிச்சொன்ன தெனவறிக. இதற்கு. பி-ம். சங்கற்பநிராகரணத்தில் "கொத்தைமாந்த ருய்த்திடுதுயில்போற் - காட்சியென்னைக் காணுத்துயர - மாட்சியைமுத்தி யெனவகுத்தனரோ." எ-து. கண்டுகொள்க.

அனிங்ஙனஞ்சொன்ன முத்தியைப் பதிசார்முத்தியென்றதெதென்னில் ஆன்மா கேவலப்பட்டுக் கிடக்குந்தன்மைபோல முத்தியிலு மொன்றுமறியாமற் கிடப்பனென்கையினல் சிவாநுபோகமில்லாதபடியாலது நன்முத்தியாகாதென்றதெனவறிக. இதற்கு. பி-ம். சங்கற்ப நிராகரணத்தில் "காட்சியென்னைக் காணுத்துயர - மாட்சியைமுத்தியெனவகுத்தனைக்கிற் - கரணபாவ மரணங்கருமய - மேய்ந்தவர் முத்தி சேர்ந்தவரன்றே - யனேயகதிக்கோர் முனைவருமேவண்டா - தனிதருதுயர மெனுமிதுதிடமே - பர்டானைத்திற் கூடாமுத்தி." எ-து. அவனை மறுத்ததிலே கண்டுகொள்க.

இனி திரிமலமு மகலவுயி ருள்சேர்முத்தி திகழ்முத்தி என்றபதத்தில் திரிமலமுமகல. எ-கு. ஆணவ மாயை கார்மிய மென்று சொல்லப்பட்ட. மலங்கள்மூன்று நீங்கவென்று பொருட்கூறியதேதென்னில் அந்தமலங்கள்மூன்று நீங்கினவிடமே சிவஞானத்தைப் பெற்றவிடமாதலாலப்படிக்சொன்னதெனவறிக. இதற்கு. பி-ம். சிவஞானபோதத்தில். "புண்ணியபாவம் பொருந்துமிக் காமியமு, மண்முதன்மாயை காண்மாயையுங் - கண்ணிய, வஞ்ஞானங்காட்டுமிவ் வானவமும்மூன்று, மெய்ஞ்ஞானிக்காகாவிடு," எ - து. கண்டுகொள்க. அப்படி மூன்றுமலங்களும் விடுவென்றதும் அந்தமலத்தின் குணமாதமான காரியங்களைவிடுவென்றதெனவறிக. அவையாவன? ஆணவத்தின்குணமெட்டு மாயையின்குணமேழுங் கன்மத்தின் குணமாறுமெனவறிக. இவையிற்று

க்கு. பி-ம். இருபாவிருபஃதில். "கூறியமூன்றுமலத்தின்குண
ககுறி - வேறுகிளக்கின் விகற்பங்கற்பங் - குரோதமோகங்
கொலையளர்மதகைகை - விராயெண்குணமூமா ணவமெனவி
ளம்பினை - யஞ்ஞானம் பொய் யயர்வேமோகம் - பைசாசூந்
நிய மாச்சரியம்பய - மாவேழ்குணனு மாயைக்கருளினை -
யிருத்தலுங் கிடத்தலு மிருவினையியற்றலும் - விடுத்தலும்பர
ஙிந்தை மேவலென்றெடுத்த - அறுவகைக்குணனுங் கருமத்த
ருளினை." எ-து. கண்டுகொள்க. உயிரருள்சேர்மூத்தி திக
ழ்மூத்தி. எ-ரு- ஆன்மாவருளோடுங் கூடினவிடமே விளங்கு
தலையுடைய மூத்தியாமென்று பொருட்கூறியதே தென்னில்.
ஆன்மாக்கள் சிவனைப்பெறுமிடத்துச் சிவனுடைய வருட்சத்
தியினிடமாகச்சென்று பெறவேண்டுகையா லப்படிச் சொல்
லப்பட்டதெனவறிக. இதற்கு. பி-ம். தத்துவவிளக்கத்தில்.
"பவமேவியநெறி பந்திக்குமீசன் பசுக்கடமை, யவமேவிய
நெறிப் போகங்களால்முற்ற வந்நிலையே, தவமேவியநெறி
சத்திகண்ணுய்ச்சென்று சார்ந்துபின்னைச், சிவமேவுவரென்
றுகாண் கொச்சைக்காவலன் சித்திரிப்பே." எ-ம். சிவபுரா
ணத்தில். "அவனருளாலே யவன்ரூள்வணங்கி." எ-ம். இப்
பொருட்பற்றியே யெனவறிக.

இனி யிதுமூத்தித் திறத்தநாமே. எ - கு. இதுவே மூத்
திகளென்று சொல்லப்பட்டனவை யெல்லாவற்றினுந் திறப்பா
ட்டினையுடைய மூத்தியாமென்று பொருட்கூறியதேதென்னில்.
ற்றுள்ள மூத்திகளென்று சொல்லப்பட்ட பத்துவகைமூத்
திகளு மழியப்படுமாகையா லப்படிச்சொன்னதெனவறிக.
வனைவகளெல்லா நன்மூத்தியல்ல வென்பதற்கு. பி - ம். சித்தி
ரோளில். "இம்மையேயீரெட்டாண்டெய்தியெழிலாரு மேந்தி
ழையார்மூத்தியென்று மிருஞ்சுவர்க்கமூத்தி, யம்மையேயெ
ர்று மூத்தியைந்துகந்த மறக்கெடுகையென்று மட்டகுண

மூத்தியென்று, மெய்மையேபாடாணம் போல்கைமூத்தியெ
ன்றும் விவேகமூத்தியென்றுந்தன்மெய்வடிவாஞ்சிவத்தைச்,
செம்மையே பெறுகைமூத்தி யென்றுஞ்செப்புவர்கள் சிவ
னடியைச்சேருமூத்தி செப்புவதிங்கியாமே.” என்றமையால்
சிவனடியைச்சேருமூத்தி யிவைநீங்கலாக வேற்றையுமுண்டெ
ன்பது கருத்தெனவறிக. அஃதாவது சித்தியாரில். “இரும்
பைக்காந்தம் வலித்தாற்போ லிணைந்தங்குயிரை யெரியிரும்
பைச்செய்வதுபோலிவனைத்தாரூக்கி,யரும்பிந்தனத்தையனை
லழிப்பதுபோன் மலத்தை யழித்தமல னைப்பணைந்தவுப்பெ
போலணைத்து, விரும்பிப்பொன்னிணைக்குளிகை யொளிப்பது
போ லடக்கி மேலளித்துத்தானெல்லாம் யெதிப்பாரூகிக்,
கரும்பைத்தினைப்பாலிக்கனியமுதைக்கண்டை கட்டியை
யொத்திருப்பனந்தமுத்தியினிற்கலந்தே ” எ-து. கண்டுகொ
ள்க. ஆகையால் முத்திக்கேதுவான வான்மாக்களுக்குச்
சிவன்றனது திருவடிஞானத்தைக் கடாஞ்சிக்கு மவதரத்து
அவர்களுக்குண்டான மலமாயாகன்மங்களை நீக்கித் தன்னு
டைய திருவடியிலே கூட்டிக்கொள்ளுவனென்பதை சைவசி
த்தாந்த முத்தியெனவறிக. இதற்கு. பி-ம். சித்தியாரில். “படி
க்குநூல்கள்சிவாகமம் பசுபாசமோசபதித்நு, மெடுத்தியம்
புவதிசன்வார்கழு லேத்திடுந்தாழிலெனுமே, விடித்திடும்
பொருள்காமமாதிகள் வேண்டிடும் பொருளீண்டருள், மூடி
த்துமும்மலம்விட்டு நின்மல ரடிநிழன்றிடன் முத்தியே.”
எ-ம். அதாதி முத்தலையப்பரது யசலரையெல்லா வறிவுதொ
ழிலறுக்கிரக மூடையவரன்கன்ம, நுரதிகமற் றெருத்தவிட
த்தை சத்திநிபாத நுழைவித்து மலங்களைலாநுங்கரொக்கி,
மலதிகரணங்களைலாமடக்கித்தன்னை வழிபடுதல்லறிவருளி
மாக்கருணைகையா, லிலகுபிறப்பினின்று மெடுத்தமாரு

வின்பமுத்திக்கேகவைப்ப னெங்கண்முத்தியி துவே." எ-ம். கண்டுகொள்க.

இதனாற்சொல்லியது ஆன்மாக்கள் முத்தியைப்பெறுமி டத்து மகளீருடத்துண்டாகியபோகமே முத்தியென்கிறவுல காயதனும் பஞ்சகந்தங்களுங் கெடுகிறதே முத்தியென்கிற புத்தரிற்சௌத்திராந்திகனும் மூன்றுவகையாகச் சொல்லப் பட்டகுணங்கள் கெடுகிறதே முத்தியென்கிற அமணரில் நிக ண்டாவாதியும் எங்கும் விரிந்திருக்கப்பட்ட கன்மங்கெடுகி றதே முத்தியென்கிற பிரபாகரனும் ஆணவமலங்கெடுகிறதே முத்தியென்கிற அகச்சமயத்திற் பேதவாதியும் முத்தியிலுஞ் சரீரமுடியுடனென்கிற அகச்சமயத்திற் சிவசமவாதியும் இந்த வுடலிலே ஜீவித்துநிற்கிற ஜீவான்மாவுக்கு விவேகஞானமு ண்டாகிறதே முத்தியென்கிற மாயாவாதியும் இந்தவான்மா கெடுகிறதே முத்தியென்கிறபாற்கரியனும் ஆன்மா பசுகரணங்கெட்டுச் சிவகரணமாகிறதே முத்தியென்கிற சங்கராந்த வாதியும் முத்தியிலு மொன்றுமறியாமற்கிடக்குமென்கிற பா டாணவாதியும் ஆக விப்படிச் சொல்லப்பட்ட பத்துவகை முத்தியு மற்றுத்து இவையெல்லாங் குற்றத்தையுடைய முத்தி களென்றுகாட்டி ஆன்மா வாணவ மாயை காமியமென்னப்ப ட்ட மும்மலங்களுநீங்கிச் சிவனுடைய திருவருண்ஞானத் தைப்பெற்றுச் சிவானுபவமாய்நிற்கிறதே சைவசித்தாந்த மு த்தியென்று முறைமையையறிவித்தது. (ஈ-அ)

வேறு—இது உலகாயதன்முதலிய பரசமயிகள் முத்தியுஞ் சுத்த சைவசித்தாந்திகண் முத்தியு முணர்த்திற்று.

அரிவையரின்புறுமுத்தி - மகளிரிடத்திற் சுகத்தையடைபவி ப்பதே முத்தியெனு முலகாயதன் முத்தியும்,—கந்தமைந்த மறு

இனிகருத்தென்றன்றே. எ-கு. சிவனுக்கு மான்மாவுக்கு மோரறிவல்ல வென்றதற்கு. பி-ம். சித்தியாரில். "சிவன்சிவனென் றிரண்டுஞ் சித்தொன்றுமென்னிற் சிவனருட்சித் திவனருளைச் சேருஞ்சித்தவன்றன், பவங்கெடுபுத்திமுத்தி பண்ணுஞ்சித்தவ ற்றிற் படியுஞ்சித்தறிவிக்கப் படுஞ்சித்தமிவன்று, னவன்றனே யறியுஞ்சித் தாதலிருவிரண்டு மணைந்தாலுமொன்றுகா தநியமா யிருக்கு, மிவன்றனுபுத்தியுஞ்சித் திவனேமோபுத்தி யிதுவுசித் தென்றிடலவனுக் கிவனுமசித்தாமே." எ-று. கண்டுகொள்க.

இதனுற்சொல்லிய தென்னுக்கு விளகுக்காட்டக் கண்க ண்டதெனொன்றே டானன்மாவுக்குச் சிற்றறிவுதானுமில்லையென்ற பரிணமவாதியையமறுத்து விளக்கோடுகூடிக் கண்கண்டதாமாகி லும் விளக்கிலொளி கண்ணிற்றருக்காம விருளிலே நின்றுகாண் கையா லான்மாவுக்குச் சிவனறிவித்தாலு மநாதியே சிற்றறிவுண் டென்னு முறைமையை யறிவித்தது. (அ)

வேறு—இது கருத்தா வாத்மாவுக் கறிவைக்கொடுப்பனென் னும் பரிணமவாதியை மறுத்துணர்த்திற்று.

கண்ணெளி விளக்களித்துக் காட்டிடுமென்னின் முன்னங் கண்ணெளியொன்றுமின்றும் - கண்ணுக்கொளியை விளக்குக் கொடுத்துப் பொருள்களைத் தெரிசிப்பிக்குமென்று நிமித்த பரி ணமவாதிசொல்லின் முன்புகண்ணுக்கொரு பிரகாசமுமிலையாய் மூடியும்,—விளக்கொளி கலந்தவற்றைக் கண்ணெளியகலநின்றே கண்டிடும் - விளக்கொளி கலக்கப்பட்டவற்றைக் கண்ணினிற் பிர காசமானது வேறுக நின்றேகாணும்,—வேறுகாண - இப்படியக லநின்று காண்கையிலும் விளக்கொளியொடுகாண்டலின்றிக் கண் ணெளிகடாமே காணமாட்டா,—கண்ணெளி விளக்கின்சோதிக லந்திடும் - கண்ணெளியும் விளக்கொளியுந் தம்மிற்கலந்து நிற் கும்,—கருத்தொன்றன்றே - கலந்தாலும் பொருந்தியபொருள்க ளைக்கத்தா லொன்றெனலன்றிப் பொருளிரண்டே. எ-று.

கருத்தொன் றன்றென்பதற்குக் கண்ணிற்பிரகாச மொன் றைச்சுட்டிநின்றேகாணும் விளக்கிற்பிரகாச மொன்றையுஞ் சுட் டாமனின்றே பிரகாசிக்குமென்பா ருமுளர்.

இங்ஙனஞ் சிற்றறிவனென்றுசொல்லி நாட்டப்பட்ட விந்த வான்மா வொருசரீரத்தோடுங்கூடிநின்று ஜீவிக்கு மிடத்து ஒரு தானத்திலே நின்றறியுமென்றுஞ் சரீரமெங்கு நிறைந்தறியுமெ ன்று மெங்கும்பூரணமாய் நின்றறியுமென்றுந் நானேவினவ்கினவ நிவாய் நிற்குமென்று மறியாமையா யிருக்குமென்றும் இங்ஙனம் பலவகைகளாகச் சிலசமயிகளா யுள்ளவர்கள் சொல்லுமத்தங் களி னுண்மையாகச் சொல்லுவதேதென்று வினவின மாணவ கனேநோக்கி யிவைகளெல்லாஞ் சித்தாந்தவழக்கினையறிந்த நம் லோர்கள் சொல்லார்களென்று மேலருளிச்செய்வா னெடுத்துக் கொண்டருளியது.

ஓரிடத் திருத்தல்மாயா வுருநிறைந் திடுதலெ
ல்லும், பேரிடத் துறைதருமே பிறங்கறி வாகிநிற்றல்,
சோர்வுடைச் சடநிகழ்த்த லெறுமிவை சொல்லார்கல்
லே, சோர்விடத் துணருமுண்மை யொளிதரு மூப
லம்போலும். (க)

தொடுத்தவைவகைகயின் மெல்லுயிர்த்தன்மை
யடித்ததனியல்பியல் பாருமென்றது.

(இ-ன்.) இரிடத்திருத்தல் மாயாவுருநிறைந்திடுதல் ஒன்றும் பேரிடத்துறைதருமே பிறங்கறிவாகிநிற்றல் சோர்வுடைச்சடநிகழ்த்தல் எறுமிவை சொல்லார்கல்லோர் ஓர்விடத்துணருமுண்மை யொளிதருமூபலம்போலும்.

ஆன்மா வோருடலிலேயின் றறியுமிடத்து ஒருதானத்திலேயின் றறியுமென்றும் இந்தமாயாதேகமெங்கு நிறைந்தறியுமென்றும் எங்கும்பூரணமாய்நின்றறியுமென்றும் ஒருத்தரறிவியாமற் முனே விளக்கமுடைய வறிவாயிருக்குமென்றும் குற்றத்தையுடைய வசேதனமாயிருக்குமென்றும் என்றிவ்வனைந் சொல்லப்பட்ட வத்தங்களைச் சித்தாந்தவழக்கையறிந்த பெரியோர்கள் சொல்லார்கள். பின்னெப்படியெனில் விசாரிக்குமிடத்து ஆன்மா வொருசரீரத்திலேயின்ற றறிதிமுறைமையை பிரகாசத்தினுடைய நன்மையாயிருக்கும். எறு.

வி - பு. இரிடத்திருத்தலென்றதை நல்லோர் சொல்லாதென்று மதுதகுதேதெனில் அப்படியான்மா வொருதானத்திலே

நின்றறியுமாறு லுருப்பட்டழிவதஞ்செய்யும் சரீரமெங்கும் பரி
சித்தாலு மறியமாட்டாதெனவறிக. என்றிங்ஙனமறுத்ததற்கு.
பி-ம். சித்தியாரில். "உடலினிலகதேசி யுயிரெனி லுருவாய்மா
யும், படர்வுறுமறிவின்றெங்குஞ் சுடரொளிப் பண்பதென்னிற்,
சுடர்தொழிற்சுடுவதெங்குந் தொட்டிடமறிவுண்டாகு, மடர்புலனி
டத்துமோக்க மறிவெழுவேணுமன்றே." எ-து. கண்டுகொள்க.
ஆகையா லிப்படியில்லாததுகொண்டே யகதேசஞ்சொல்ல வழு
க்கில்லையெனவறிக.

இனி யிரண்டாவது மாயாவுருநிறைந்திடுத லென்றதை நல்
லோர் சொல்லாவென்று மறுத்ததேதென்னில் அப்படியான்மா
வொருசரீரமெங்கு நிறைந்துநின் றறியுமேயாமாகிற் கீழாலவத்தை
ப்பட்டு மூலாதாரத்திலே யொடுங்கிக் கிடக்கவும் வழக்கில்லை.
அன்றியுஞ் சத்தாதி விடயங்களை யறியுமிடத்துப் புலன்களெல்லா
மொக்க ஜீவிக்கவும்வேண்டும். அன்றியுஞ் சரீரத்திலே சில குறைவு
பட்டாலதற்குத்தக்க தான்மாவிலுஞ் சில குறைவுபடவும்வே
ணும். என்றிங்ஙனமறுத்ததற்கு. பி-ம். சித்தியாரில் "உருவினி
னிறைந்துநின்றங் குணர்ந்திடுமிரதென்னின், மருவிடாதறக்க
ம்வாயி லறிவொக்க வழங்கவேண்டும், பெருகிடுந்சுருங்கும்போ
தம் பேருடற் சிற்றுடற்கண், வருமுடல்குறைக்கவொக்கக் குறை
க்குபின் மாயுமன்றே" எ-து. கண்டுகொள்க. ஆகையா லப்படி
யில்லாதுகொண்டே சரீரமெங்கு நிறைந்துநின்றறிய வழக்கில்
லையெனவறிக.

இனி மூன்றுவது ஒன்றும்பரிடத் துறைதலென்றதை நல்
லோர் சொல்லாவென்று மறுத்ததேதென்னில் அப்படியான்மா
வெங்கும் பூரணமாய் நின்றறியுமேயாலுல் அவதனைப்படவும்
வழக்கில்லை ஜகநமாணப்படவும் வழக்கில்லை. அன்றியுஞ் சத்தாதி
விடயங்களைக் கொள்ளுமிடத் தொவ்வொரு புலன்களாக ஜீவிக்
கவும் வழக்கில்லையாகவும்வேண்டும். என்றிங்ஙன மறுத்ததற்கு.

பி-ம். சித்தியாரில். "எங்குந்தான் வியாபியாய்நின் றுணருமிவ்வா
ன்மாவென்னிற், றங்கிடுடவத்தைப்போக்குவரவுகள்சாற்றவேண்
டும், பங்கமார்புலனென்றொன்றுப் பார்த்திடல்பகரவேண்டு,
மிங்கெலாமொழிந்தாலிற்ப தெங்ஙனமியம்பவேண்டும்." எ-து.
கண்டுகொள்க. ஆகையா லப்படியில்லாததுகொண்டே யெங்கும்
பூரணமாய் நின்றறியுமென்பது வழக்கில்லையெனவறிக.

இனி நான்காவது தானே பிறங்கறிவாகி நிற்றலென்ற
தை நல்லோர் சொல்லாரென்று மறுத்தீதெனின் அப்
படியான்மாதானே யறியுமெயாலற் சத்தாதி விடயபகளைக்
கொள்ளுமிடத்துப் புலன்களைக் கொண்டறியவேண்டுவதி
ல்லை. அன்றியு மந்தக்கரணங்களைக்கொண்டு மறியவேண்டு
வதில்லை. என்றிங்ஙனமறுத்ததற்கு. பி-ம். சித்தியாரில் "அறி
விச்சைசெயல்களெல்லா மடைந்தனல் வெம்மையும்போற்,
குறியுற்றங்கானைகானைக குணகுணிபாவமாகி, நெறியுற்றுநி
ற்குமென்னி னிகழ்புலன்கரணமல்லாஞ், சிறிவுற்றங் கறி
வுகொள்ள வேறுமோகிவரார்க்கே." எ - து. கண்டுகொ
ள்க. ஆகையா லப்படியில்லாததுகொண்டே யான்மாதா
னே யறிவனென்பது வழக்கில்லையெனவறிக.

இனி னைந்தாவது சோர்வுடைச் சடநிகழ்த்து லென்ற
தை நல்லோர் சொல்லாரென்று மறுத்தீதெனின் அப்ப
டியான்மாவறியாமையா யிருக்குமேயாலு லொருத்தரறிவி
த்தாலு மறியவழக்கில்லை. அன்றியும் உபாதியைநீங்கி மூத்தி
யைப்பெற் றறுபவிக்கவும் வழக்கில்லையாம். என்றிங்ஙன
மறுத்ததற்கு. பி-ம். சித்தியாரில். "அசித்தெனினுணரா தான்
மா வசித்தசித்தாகுமென்னி, லசித்தசித் தாகாதாகுஞ்
சித்தசித்தாயதில்லை, யசித்தொருபுறமாயொன்றிச் சித்தொரு
புறமாய்நில்லா, தசித்தாகுசித்தெயென்னி லசித்தடைந்தறி

வதின்ரும்." என்பதனுள். "அசித்தெனி லுணராதான்டா." எ - து. கண்டுகொள்க. ஆகையா லப்படியில்லாதது கொ ண்டே யான்மாவை யறிவல்லவென்னவும் வழக்கில்லையென வறிக.

ஆக விங்ஙனஞ்சொல்லப்பட்ட வகைகளிரந்தினையு மறு த்து ஓரிடத்துணருமுண்மை யொளிதரு முபலம்போலும். எ-து. ஆன்மாவானது சுத்தபடிகம்போலக் கூடினதின்றன் மையா யிருக்குமென்று பொருட்படுத்தினதற்கு தூறபவுமே தென்னில் சுத்தபடிகமானது இருள்வந்து மேலிட்ட வஸ்து த்தத்தமிருளோடுங்கூடி யிருளினிறமாயிருந்தும் பஞ்சவ ன்னங்களோடுகூடின வஸ்துரத்தப் பஞ்சவன்னங்களி னிறமாயிருந்தும் ஒளிமேலிட்டபொழு தந்தவொளியோடுங் கூடி யொளிதாரையிருந்துள்வரும். அதுபோல வான்மாவும் ஆணவமலமேலிட்டு மறைத்தவஸ்துரத்தத்த மலத்தோடுங் கூடி யறியாமையாய்க்கிடந்தும் அப்படிக் கிடக்கச்செய்தே கலையாதி தத்துவங்களோடுங் கூடிப் பிரபஞ்சகாரியப்பட் டுச் சகலரகியும் இவையிரண்டுபகுதியு நீங்குவதாக வருள் மேலிட்ட வஸ்துரத்தத்தவருளோடுங்கூடி யறிவரப்பின்றும் இங்ஙனங் கேவலரகியுஞ் சகலரகியுஞ் சுத்தரகியுங் கூடி னதின்றன்மையாய் நிற்கையாலே படிகத்தை யுவமைசொன் னதெனவறிக. இங்ஙனஞ் சொல்லப்பட்ட வஸ்துத்தை மூன்று க்கும். பி-ம். சித்தியாரில். "கேவலசகலசுத்த மென்று மூன் றவஸ்துத்தையான்மா, மேவுவன கேவலந்தன் னுண்மைமெய்ப் பொறிகளெல்லாங், காவலன்கொடுத்தபோது சகலமலங் களெல்லா, மோவினபோதுசுத்த முடையனுற்பவந் தடைத் தே." எ-து. கண்டுகொள்க. இதுவன்றியுஞ் சகலமொன்றை யும்பற்றி யான்மாபடிகம்போலக் கூடினதின் றன்மைக்குப் பஞ்சவர்ணத்திரியங்களோடுங் கூடிநிற்பதே சொல்லலாம். அது

வன்றியு மூன்றவத்தைக்கு மறுபவங்காட்டிச் சொன்ன தா படுக முற்றுவமையாகையா லெனவறிக. இப்படிக்கூடுன தின் றன்மையாயுள்ள வான்மாவி ணுண்நிலைமையு மாசாரியன் காட்டக்கண்டு அதையறிந்துகொள்ளுக.

இதனுற்சொல்லிய தாவது ஆன்மாவொருசரீரத்தோடுங்கூடி நின்று ஜீவிக்குமிடத்து நிற்குமுறைமை யெப்படியென்று வினவினமாணவகனோடாக்கி ஒருதானத்திலே நின்றறியுமென்றுஞ் சரீரமெங்கு நிறைந்துநின்றறியுமென்று மெங்கும் பூரணமாய்நின்றறியுமென்றட் விளங்கினவறிவாயிருக்குமென்று மறியாமையாயிருக்குமென்று மிங்ஙனம்பலவகையாகச் சொல்லப்பட்ட சமயிகள்கருத்தாகளை மறுத்து ஆன்மாவினையிற் சேருமிடத்துப் படிகமானது பஞ்சவண்ணங்களோடுங்கூடி யதுவதுவாய்நின்று காரியப்படுவதுபோலவ ன்மாவுங் கூடினதின் றன்மையாய்நின்று ஜீவிக்குமென்னு முறைமையையறிவித்தது. (கூ)

——o——

வேறு—இது இப்படிப்பட்ட வாத்மவிலக்கணத்தைப் பாசமயிகள் வேறுவேறு கூறவவற்றை நிராகரித்ததன்மையை யுவமைமுகத்தா லுணர்த்திற்று.

ஓரிடத்திருத்தல் - யோகிகளாத்மா தேகத்தி லெதேசத்திலேயிருந்தறியுமென்னு மதுவும்,—மாயாவுருவினைக் கிடத்தல் - சமணன் மாயாகாரியமான தேகத்திலே நினைத்தினின்றறியுமென்னு மதுவும்,—ஒன்றும்போரிடத்துறைதல்-மாயாவாதியாகசம்போ லெவ்விடத்தும் பூரணமாய்நின்றறியுமென்னு மதுவும்,—தானேபிறங்கறிவாகிநிற்றல் - சாங்கியனுமைக்கவாதியும் விகாரவாதியுமாக ஒருகருத்தா வறிவியாம லாத்மாவானே யுயர்ந்தவறிவாய் நிற்குமென்னு மது

வும்,—சொர்வுடைச் சடநிகழ்த்தல் - நியாய வைசேஷிகன் குற்றத்தையுடைய மனமுதலிய கருவிகளதற் கறிவைக்கொடுக்குமென்னு மதவும்,— எனுமிவை சொல்லார் நல்லோர்- என்றெண்ணப்படு மிவற்றைச் சைவசித்தாந்திகள் சொல்லார்கள்,—ஓரிடத் துணரு முண்மை - ஆத்மாவறியுமுண்மையை விசாரிக்குமிடத்து,—ஒளிதரு முபலம் போலும் - விளக்கந்தரும் படிகம்போல வகுத்ததன்றன்மையாய் நின்றறியும். எ - று.

உணருமுண்மை யோரிடத்தெனமாறுக. ஓரிடம் விளைத்தொகை. ஓரிடத்திருப்பி னேகதேசவுருவாய்ச் சடமாய் மற்றுள்ளவிடங்களி லறிவுமற்றழியும். உடன்முழுதுநிற்பி னவத்தைப் படுங்குற்றமும், முடல்வளரவளர்ந்து சிறுகச்சிறுகு தலாகிய சங்கோசவிகாசதன்மமென்னுங் குற்றமும், மிந்திரியமைந்தும் புலன்களிளைந்தையு மொருகாலத்திலே நுகராதகுற்றமும், முடல்வளரவளர்ந்து சிறுகச்சிறுகுதலாகிய வவயவங்குறைய வாத்மாவுஞ் சின்னபின்னப்படுங்குற்றமு மேறும். எவ்விடமு நின்றறியிற் போக்குவரவுடைய குற்றமும், மொருவன்கருத்தை யொருவனறியானென்னுங் குற்றமுந் தங்கும். தானேயறியி லவத்தைப்படுவது மொருவரறிவிக்கவறியுங் குற்றமுங், கருவிகளாலறியுங்குற்றமு மூளவாம். கருவிகளறிவைக்கொடுப்பி னுத்மாவுக்குச் சடத்துவமுண்டாம், அறியுஞ்சடமான கருவிகளொன்றுக் கறிவைக்கொடுக்கமாட்டாவாகையா லிவையுமுழுவதூஉ நல்லோர்சொல்லார். ஓர்வுடைத்தென்பதூஉம் பாடம். எ-று.

☞ மூன்றுசூத்திரமாகிய வான்மவிலக்கணமுற்றிற்று.

இங்ஙனங்கூடினதின் றன்மையாயுள்ள வான்மாவுக் கவத்தைப்படு முறைமையுமுண்டாகையால் ஆன்மவிலக்கணத்துக்குமேலாக நான்காஞ்சூத்திரமாகிய வவதனைத்தன்மையென்னு மதிகாரம்வைக்கப்பட்டது.

இவ்வதிகார நான்காஞ்சூத்திரமாக நின்றமுறைமையெங்ஙனமேயென்னில் சிவஞானபோதத்தி னென்காஞ்சூத்திரமும் அவைவத்தைத்தன்மையை யருளிச்செய்கையி னிதுவுமப்படி வைக்கப்பட்டதெனவறிக. அதுவெங்ஙனையென்னில்:—"அந்தக்கரண மவற்றி னென்றன்றனை, சந்தித்தறன்மாச் சகசமலத்தனாரா, தமைச்சரசேப்பநின் றஞ்சவத்தைத்தே." எனவுஞ் சூத்திரத்துக் கிவ்வான்மாக்கள் சகசமலத்தி னிணர்வின்றென்பது கருத்தாகையால் இச்சூத்திரனும் இவ்வதிகாரமாகிய "எண்ணெவான் றிலாததீதம்." "இவ்வகையவைவத்தை" "நிக்கமிலதீதம்" என்னும் விருத்தமூன்றும் அவத்தைத்தன்மையைச் சொல்லுகையா லிதுவுகான்காஞ்சூத்திரமாக நின்றதெனவறிக.

அப்படியுண்டாகப்பட்ட வவத்தை யெத்தனை வகைப்பட்டிருக்குமென்னில் அது பதினெட்டுவகையவத்தை யுண்டாய்வருமென்.

அதற்குவழியெதென்னில் காரணவத்தை மூன்றுங் காரியாவத்தைப் பதினைந்துமாய்வருமென்றறிக.

இதிற்காரணவத்தை மூன்றெதனிற் காரணமலமென்றுங் காரணசகலமென்றுங் காரணசுத்தமென்றும் வருமெ.

இதிற்காரணமலமாவது சர்வசங்காரகாலத்தான்மாக்கள் சுத்தமாயாகாரணத்திலே யொடுங்கிச் சிருஷ்டிகாலமளவும் ஆணவமலத்தான் மறைப்புண்டொன்றுமறியாமற்கிடக்கு மவதரமெனவறிக.

காரணசகலமேமதென்னிற் சிருஷ்டிதொடங்கிச் சர்வசங்காரம் வருமளவு மான்மாக்களியோனிவிட்டுயோனிபத்தி யெண்பத்தாநான்குநூறுயிரமியோனிபேதத்திலும பிறந்திறந்து திரிகிறவவதற மெனவறிக.

காரணசுத்தமேதென்னில் இங்ஙனங் கேவலசகலப்பட்டுப் பிறந்திறந்து திரியுமவதாத் தாணவமலபாகம்வந்த வான்மாக்களுக் கிருவினையொப்புஞ் சத்திநிபாதமுமுண்டாமாகையா லந்தவவதாரத்துச் சிவஞசாரியமூர்த்தமாக வெழுந்தருளி யிரணுகித்துத் தனதுதிருவருளான் ஞானத்தையுங் கடாஷுகித்து நிவ்ட்டாபராராக்கிப் பிராரத்தந் தொலைந்தவா றே தனது பூரணநிஷ்டையோடுங் கூட்டிக்கொண்ட வவதாரமெனவறிக.

இங்ஙனங் கூறப்பட்ட காரணவத்தை மூனறுக்கும். பி - ம். சித்தியாரில். "அறிவிலனமூர்த்தனித்த னாகாதிகு ணங்களோடுஞ், செறிவிலன்கலாதியோடுஞ் சேர்விலன்செ யல்களில்லான், குறியிலன்கத்தாவல்லன் போகத்திற்கொள் கையில்லான், பிறிவிலன்மலத்திலேறும் வியாபிகேவலத்தி லொன்மா." எ-து. கேவலத்துக்குக் கண்டுகொள்க.

உருவினைக்கொண்டுபோக போக்கியத்துன்னல் செப்பல், வருசெயல்மருவிச்சுத்த மாதியாம்விடயந்தன்னிற், புரிவதுஞ்செப்தங்கெல்லா யோனியும்புக்குழன்று, திரிதருஞ் சகலமான வவத்தையிற்சிவன்சேர்ந்தே." எ-து. சகலத்துக்குக்கண்டுகொள்க.

"இருவினைச்செயல்களொப்பி லீசன்றன்சத்திதாயக், குருவருள்பெற்றுஞான யோகத்தைக்குறுகிமுன்னைத், திருமலமறுத்துப்பண்டைச் சிற்றறிவொடுநிற்றுஞானம், பெருகிஅ டையன்றன்பாதம் பெறுவதுசுத்தமாமே." எ - று. சுத்தத்துக்குக் கண்டுகொள்க.

இனி காரியாவத்தை பதினைந்துக்கு வழியெதென்னில் கிழாலவத்தையைந்தும் நிலையிற்படுமவத்தை யைந்தும் நின்மலாவத்தை யைந்துமென வறிக. இவை பதினைந்துக்கும். பி - ம். சிவஞானபோதத்தில். "இலாடத்தே சாக்கிரத்தை யெய்தியவுள்ள, மிலாடத்தே யைந்தவத்தையெய்த - மிலாடத்தே, யவ்வவ்விந்திரியத் தத்துறைகள் கண்டதுவே, யவ்வவற்றினீங்கலதுவாங்கு" எ - ம். சித்தியாரில். "அறிதருமூலவத்தை யடைதருமிடத்தையைந்துஞ், செறிதருங்கரணந்தன்னிற் செயலெறுமூணர்ந்தெகான்னே, பிறிவிலாஞானத்தோரும் பிறப்பறவருளாலாங்கே, குறியொடுமஞ்சவத்தைக் கூடுவர் கீடகூட." எ-ம். இந்நூலினும். "இவ்வகையவத்தைதன்னில்" என்றவிருத்தமுமிப்பொருட்பற்றி யெனவறிக.

ஆக முன்னுங்கூட்டி யவத்தைப் பதினெட்டும் இவ்வதிகாரத்துவருத்த செய்யுண் மூன்றினுங் கண்டுகொள்க. அவை வருமாறு.

இங்ஙனஞ் சொல்லப்பட்ட வவத்தைகளிற் கிழாலவத்தையிற் காரியாவத்தையைந்துஞ் சாக்கிரமுதலாக வருளிச்செய்யாம லதீதமுதலாக வருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

எண்ணெவான் றிலாததீத மெய்திய தூரியத்தென்றாயின்று, கண்ணிதிற்சுழுத்திகன்னி னையங்குளதென்றாயின்று, மண்ணிதிங் கனவுதன்னி லாதேறழாஞ்சாக்கிரத்திலன், கண்ணுறுமற்சாரூப கருவிகள்காணுங்தானே. (கo)

உடலிடையுயிருறுமோரைந்தவத்தையி
னடையுறுகருவியி னடைவினவகுத்தது.

(இ-ள்.) எண்ணெவொன் றிலாததிதம்

ஆன்மாவான து ஆணவமலமறைப்பாகக் கிழாலவத்தைப் பட்டுச் செல்லுமவதரத்துப் பிரகிருதித்துவ மூடம்பாகச்சென்று மூலாதாரமாகிய அதிதத்தானத்தில் சென்றொடுங்கு மவதரத்து அவ்விடத்து ஜீவிக்குங்கருவிக ளொன்றுமின்றி யந்தப் பிரகிருதியென்னத் தானென்னைப் பிறிவற்றுக்கிடந்தழுந்து மதேயதிதமாம். என்னவே அழுந்துந்தொழில் பிரகிருதிக்குடையதாகையா லதிதத்திற் பிரகிருதியுண்டென்பதை யறுபவத்தாற் கண்டுகொள்க. அன்றியு மிதற்குமேலிச்செய்யுளுக்கெழுதுகிற நூட்பத்திலே யேதக்கனும் பிரமாணங்களுங்காட்டி யெழுதுகிற வகையினுங் கண்டுகொள்க.

எய்திய தூரியத்தொன்று

அந்தமூலாதாரத்துக்கு மேலாகப்பொருந்தப்பட்ட நாபியாகிய தூரியத்தானத்திலே நிற்குங்கருவி பிராணவாயுவொன்று. பிராணவாயு நிற்கையாவது ஆன்மா தூரியத்திலே பிரகிருத்தித்துவ மூடம்பாகப் பிராணவாயுவோடுங்கூடி நிற்குமவதரத்தந்தத்தூரியத்தைவிட்டு அதிதத்திலே பிரகிருதித்துவ மூடம்பாகச் சொல்லுமிடத்தந்தத் தூரியத்திலே பிராணவாயு நின்றுவிடுகையடா லப்படிச் சொன்னதெனவறிக.

நண்ணிடுஞ் சூழ்த்திதன்னி னயத்துளதொன்று

அந்தத்தூரியத்துக்கு மேலாகப்பொருந்தப்பட்ட விதயமாகிய சூழ்த்தித்தானத்திலே விருப்பத்துடனே நிற்குங் கருவி சித்தமொன்று. சித்த நிற்கையாவது ஆன்மாவந்தச்சுழித்தியிலே பிரகிருதித்துவமூடம்

பாகச் சித்தத்தோடும் பிராணவாயுவோடு
ங்கூடி நிற்குமவதரத்தந்தச்சுழுத்தியைவி
ட்டுப்பிரகிருதித்துவமூடம்பாகப் பிராணவாயுவோடுங்கூ
டித் தூரியத்திற்செல்லுமிடத் தந்தச்சுழுத்தியிலே சித்தமொ
ன்று நின்றுவிடுகையா லப்படிச்சொன்னதெனவறிக.

பின்னுமண்
ணிடுங்கனவுத
ன்னிலாறே
ழாம். அநுவயம்.
அண்ணிடுங்கன
வுதன்னிற் பின்
னுமாறேழாம்

அந்தச் சுழுத்திக்குமேலாக வடுத்தகண்
டமாகிய சொப்பனத்தானத்திலே (பின்னு
மென்றவிதப்பால் முற்கூறுய பிராணவாயு
வுக்குப் பின்னுள்ள வொழிந்த வாயுக்க
ளொன்பதும்) ஆறேழாகிய சந்தாதிகளோ
தும் வசனாதிகளோந்தும் அந்தக்கரணங்க
ளிற் சித்தநீங்கலாக மனம் புத்தி யாங்கா
ரமும் ஆகப்பதின்மூன்றும் ஆகமூன்றுங்கூ
ட்டி யிருபத்திரண்டுநிற்கும். அன்றியு மிங்
தப் பதத்துக்குப் பின்னுமென்றது வாயுக்
களொன்பதுக்குப் பொருட்படாதென்று பின்னுமண்ணிடுங்
கனவிலாறே ழொன்பதாமென்று பாடமோதி இருபத்திரண்
டுகருவி சொப்பனத்தானத்திலே நிற்குமென்று தொகைப்ப
டுத்திப் பொருளுரைப்பாருமுளர். இதைப் பொருளுக்கேற்க
அந்தப் பாடத்தைக் கூட்டிக்கொள்க. சொப்பனத்தானத்
தில் நிற்குங் கருவி யிருபத்திரண்டாவ தெதென்னில் ஆன்மா
வந்தக் கண்டத்தானத்திலே வாயுக்கள் பத்தும் வசனாதி
யைந்தும் சந்தாதியைந்தும் அந்தக்கரணங்க ளைலும் ஆகவி
ருபத்திரண்டுங்கூடிப் பிரகிருதித்துவ மூடம்பாகநிற்கு
மிடத்து அந்தக்கண்டமாகிய சொப்பனத்தானத்தைவிட்டுப்
பிரகிருதித்துவ மூடம்பாகப் பிராணவாயுவோடுஞ் சித்தத்
தோடுங்கூடி இதயமாகிய சுழுத்தித்தானத்திலே செல்லுமவ

நான்காவது சிவப்பிரகாச சுவ்வியாக்யானம்.

தரத்து முற்கூறிய கருவிகளிருபத்திரண்டுஞ் சொப்பனத் தானத்திலே நின்றுவிடுகையா லப்படிச் சொன்னதெனவறிக

சாக்கிரத் தின் கண்ணுறு மஞ்சாமுய கருவிகள்

-கண்டத்துக்கு மேலாகிய இலாடத்தான மாகிய சாக்கிரத்தானத்திலே பூதங்களைந் தின் வழித்தாகிய ஞானேந்திரியமாகிய சோத்திராதிகளைந்தும் கன்மேந்திரியமா கிய வாக்காதிகளைந்தும் ஆகப்பத்துக்கரு விகளுஞ் சாக்கிரத்திலே நிற்கும். பத்துக் கருவிகள் நிற்றலாவது ஆன்மா தத்துவ மூப்பத்தாமூடுங்கூடி விசுவவியாத்தரய் நிற்கச்செய்தே யதிலே யறிகருவிகளாகிய சிவதத்துவமைந்தும் வித்தியாத் தத்துவமேழிற் பிரகிருதிதத்துவ நீங்கலாகக் கலாதிகளாறும் ஆன்மதத்துவ மிருபத்துநாலிற் பூதங்களைந்தும் ஆகப் பதி னெறு நீங்கலாக நின்றகருவி யிருபதும் தொன்னூற்றாறு வகையில் வாயுக்கள் பத்தும் வசனுதியைந்தும் ஆக மூப்பத் தைந்தோடுகூடி ஆன்மாவோடச் சமைந்தோடுகிறதெரியற்று வானகைவிட்டு நின்றாற்போல அந்த விலாடத்தானத்திலே சாக்கிராவத்தைப்பட்டு நிற்கச்செய்தே யான்மா வதனைவிட் டுச் சொப்பனத்தானத்திற செல்லுமிடத்து வாயுக்கள் பத் தும் வசனுதியைந்துஞ் சத்தாதியைந்தும் அந்தக்காணைங்க ளைலும் ஆக விருபத்துநாலோடிங் கூடிப் பிரகிருதித்தத்து வ மூடம்பாகச் செல்லுகையா லிந்த விருபத்தைந்து நீங்கலாக மற்றுள்ள சோத்திராதியைந்தும் வாக்காதியைந்து மந்த விலாடத்தானத்திலே நின்றுவிடுகையா லப்படிச் சொன்ன தெனவறிக. அஞ்சாமுயகருவிகள் எ-று. பூதங்களைந்தின் வழித்தாகிய கருவிகளென்றதனால் ஆன்மா விந்திரியங் களைக்கொண்டு விடயங்களைக் கொள்ளுமிடத்துப் பூதங்க

னிடமாகநின்று கொள்ளுகையாலப்படிச் சொன்னதெனவறிக.

காணுந்தா ஆன்மாவவத்தைப்பட்டுச் செல்லுமவேண்.

தரத் தந்தந்தத் தானங்களோடாறு மந்தந்தக்கருவிகளை விட்டுவிட்டுப்போ முறைமையையிங்ஙனமிப்படியறியப்படும். எ-று.

வி-ப. இங்ஙனம் பொருட்கூறிவந்த வகையில் பின்னுமண்ணிடுங்கனவுதன்னிலாறேழாம். எ-கு. பின்னுமென்றது வாயுக்களொன்பதுக்கும் பொருட்படாதென்று பின்னுமண்ணிடுங்கனவி லாறேழொன்பதாம் என்று பாடமோதுவாருளரென்றதற்கு வழியேதென்னில் இந்தச்செய்யுளுக்குக் கருத்து ஆன்மாவவத்தைப்பட்டுச் செல்லுமவதரத் தந்தந்தத் தானங்களோடாறும் விட்டுவிட்டுப்போங் கருவிக்குத் தொகை சொல்லுகையாற் சொப்பனத்தானத்தில் விட்டுப்போங் கருவி யிருபத்திரண்டுக்குத் தொகை சொல்லுமிடத்துப் பின்னுமண்ணிடுங்கனவுதன்னி லாறேழாம் என்று பதின்மூன்றுக்குத் தொகைசொன்னதொழிய மற்றவொன்பதுக்குத் தொகை சொல்லாதபடியால் பின்னுமண்ணிடுங்கனவி லாறேழொன்பதாம் என்று பாடமோதி யிருபத்திரண்டென்று பொருட்கூறுகை கருத்தாகையா லப்படிப் பாடமோதினதெனவறிக. அப்படியாலல் முன்னே பிரணவாயுவைச் சொல்லிவருகையாற் பின்னுமென்றது பிற்பட்ட வாயுக்களொன்பதுமென்றுபொருட்கூறுகைக்குத்தொகையாகாதாவென்னிலப்படி முன்னே பிராணவாயுவென்றதும் வியாக்கியாநஞ் செய்தவர்கள் சொன்னதொழியப் பாடத்திற் சொல்லாதாகையால் அதுவும் பொருளல்லவென்பது கருத்தெனவறிக. இங்ஙனம் பொருட்கூறிவந்த வகைக் குதாரணங்கள் வருமாறு:—அஃதாவது ஆன்மாவவத்தைப்படுட்செ

ல்லுமிடத்துச் சாக்கிரந்தொடங்கி யதீதமளவு மந்தந்தந் தானங்களோறுங் கூடிநிற்குங் கருவிக ளின்னின்னதென்று தொகை சொன்னதற்கு. பி-ம். திருமந்திரத்தில்" மூப்பதோ டைந்தாய் முதல்விட்டங் கையைந்தாய்ச், செப்பதின்மூன் றுய்த் திகழ்ந்திரண்டொன்றதா, யிப்பதிநின்ற வியல்பையய றிந்தவ, ரப்பதிகொள்பவ ராய்ந்துகொள்ளீரே." எ-ம், சித் தியாரில். "சாக்கிரமூப்பத்தைந்து நுதலினிற்கனவுதன்னி, லாக்கிய விருபத்தைந்து களத்தினிற் சுழுஷ்ணமூன்று, நீக்கிய விதயந்தன்னிற் றுரியத்திலிரண்டுநாடி, நோக்கிய தரியாதித நுவலின்மூலத்திலொன்றே." எ - ம். மெஞ்ஞான விளக்கத் தில். "நனவுதனிற்கருவி மூப்பத்தைந்தாகுங், கனவிருபத் தோரைந்தாங் கானில் - முனிசுழுத்தி, மூன்றுருகுங்காஷ மூழுத்துரிய மோரிரண்டே, யூன்றுமதிதந் தருமாலென்று." எ-ம். வருமேதுக்களைக் கண்டுகொள்க.

என்றிங்ஙன மவத்தைக்குக் கருவி மூப்பத்தைந்தென்று சொல்லியிருக்கிற விதிலே மூப்பத்தாநாலு கருவியென்றும் ஒன்று ஆன்மாவென்றுஞ் சில நூல்களிற் சொல்லுவானென்னி லப்படிச் சொன்னதும் பிரகிருதித்துவத்தை யான்மா வென்று சொன்னதெனவறிக. அதற்கு வழியேதென்னில் பிர கிருதித்துவ மற்றுள்ள கருவிகளைப்போல வான்மாவைவி ட்டும் பற்றியும் வாராமற் கேவல சகலமிரண்டினு மூயிருமூ டம்பும்போலப் பிறிவற்று நிற்கையால் உடலுக்கிட்டபெயர் உயிருக்கு நின்றுற்போலப் பிரகிருதி தத்துவத்தின்பெயர் ஆன்மாவுக்குச் சொல்லியும் விளக்குச் சுடரொளியுக்தகளி யும் விளக்கென்று பெயர்பெற்றுற்போல ஆன்மாவின்பெயர் பிரகிருதி தத்துவத்திற்குச் சொல்லியும் வருகையால் இவ்வி டத்துக்கும் ஆன்மாவின்பெயர் பிரகிருதி தத்துவத்துக்குஞ் சொன்னதெனவறிக. அப்படி யொன்றின்பெய ரொன்றிற்கு

மாநிவருகைக்கு. பி-ம். சிவஞானபோதத்தின் மூன்முஞ்சூத் திரத்தின் சூரணையிம். "ஒடுங்கினவிடத் தின்பதன்ப ஜீவ னம் பிரகிருதிக்கின்மையி லொடுங்காவிடத் தின்பதன்பம் ஜீவியாநிற்ப தளதாதலி னதுவே யவ்வான்மாவாம்." என்ற தனுள் "ஒடுங்கினவிடத் தின்பதன்ப ஜீவனம் பிரகிருதிக்கி ன்மையின்" என்பதைப் பிரகிருதி தத்துவத்தின்பேர் ஆனமா வுக்கு வருமதுகண்டுகொள்க. இனி யான்மாவின்பெயர் பிர கிருதி தத்துவத்துக்கு வருமதற்கு. பி-ம். சித்தியாரி லிரண் டாஞ் சூத்திரத்திலே தத்துவத்தின் முறைசொல்லுமிடத் தண்டாகிய விருத்தத்தில் "சுத்ததத்துவங்களென்று மூன் னமே சொன்னவைந்து, மித்தகைமையி னியம்பு மிவை மூப் பத்தொன்றுமாகத், தத்துவ மூப்பத்தாமுஞ் சைதன்னியங் கலந்து, சித்தசித்தான்மாவொன்று மூப்பது மசித்தேசப் பிம்" இதிற் சித்தசித் தான்மா வொன்று மென்பதைக் கண் டுகொள்க.

இதனையுஞ் சித்தசித்தான்மாவென்று ஆன்மாவின் பெ யர் வருகையா லான்மா வென்பாருமூளர். அது வழக்கல்ல வெனவறிக. அதுவேனென்னில் தத்துவங்களுக்குத் தொ னைசொல்லிச் செலவுசொல்லுமிடத்து மீளவுந் தத்துவங்க ளைச் சொல்லாமல் ஆன்மாவைச் சொல்லுகை வழக்கல்லாத படியா லதனைச் சொல்லவொண்ணு தென்ற தெனவறிக.

அன்றியும் சித்தசித் தான்மாவென்றதைப் புருடதத்துவ மென்பாருமூளர். அது வழக்கல்லவெனவறிக. அதுவேனை ன்னில் அதனைத் தத்துவசமூகத்திற் முன்றுங் கருவியை ன்று "நிச்சயம் புருடஞுகிப் பொதுமையி னிற்குமன்றே." எ-ம். "ஐவகையாலுறுபயன்க ணுகரவருங்கால மதுபுருட தத்துவம்." எ-ம். நூல்களிற் சொல்லிவருகையால் ஆன்மா தத்துவங்களோடுங் கூடிநின்று சகலராய் ஜீவிக்குமவதரத்

தண்டாகுங் கருவியாகையாலும் பிரகிருதி தத்துவம்போல ஆன்மாவை விடப்படாமற் கேவலசகல மிரண்டினுங் கூடுதில்லாதாகையாலு மதனையாகாதென்ற தெனவறிக.

அன்றியும் புருடதத்துவந் தன்னை யான்மாவென்றலு மான்மாவின்பெயர் தத்துவத்துக்கும் வருமென்பது கண்டுகொள்க.

என்றலுஞ் சித்தசித்தான்மாவென்றது பிரகிருதி தத்துவமே தணிபெனவறிக.

அப்படியாயினு மவத்தைப்பட்டுச் செல்லு மவதரத்து மற்றுள்ள தத்துவமூடம்பாகச் செல்லாதோ பிரகிருதிதத்துவம் வேணுமோவெனினில் அப்படி மற்றுள்ள தத்துவ மூடம்பாகத் தரியமளவும் வந்து சென்றதாகிலுந் தரியத்திலே பிராணவாயு நின்றுவிடுகையாற் றரியத்தைவிட் டதீதத்திலெசெல்லுமிடந் தான்மாவான தனித்துச்செல்லாது. அஃதெப்படியென்னில் "அங்கியானது தானுமொன்றை யணைந்துநின்று நிகழ்ந்திடும், பங்கியாவுயிர்தானு மிப்படி பற்றியல்லது நின்றிடா." என்று நூல்களிற் சொல்லிவருகையால் ஆன்மாவான தொன்றுகூடி நிற்பதொழியத் தனித்துநில்லாதாகையாலவ்விடத்துக்குப் பிரகிருதி தத்துவமூடம்பாகச் செல்லவேண்டுகையாலது வேண்டுமென்பதை யநுபவத்தாற் கண்டுகொள்க.

அப்படியாயு லான்மாவுக் காணவமலஞ் சகசமாய்நிற்கையாலந்த வாணவமலந் தாரகமாகச் சென்றுங்காதோ பிரகிருதிதத்துவம் வேணுமோவென்னில்? அந்தவாணவமலமு மான்மாவோடுங் கூடிநின்று மறைக்கிறதொழியத் தாரகமாகாதாகையாலதனைச் சொல்லவேண்டுவதில்லை யெனவறிக.

ஆகையா லல்விடத்துக்குப் பிரகிருதி கத்துவ முடம்பா கச் சென்று அதீதத்திலும் பிரகிருதிதத்துவமு மான்மாவுங் கூடிக்கிடக்குமென்பதே வழக்கெனவறிக. அப்படி யதீத த்தி லிரண்டுங் கூடிக்கிடக்குமெயாலல் சித்தியாரில் அவத் தைக்குச் சொல்லுமிடத்து "படைகொடு பவனிபோதும் பா ர்மன்னன் புகும்போதில்லிற், கடைதொறும் விட்டுவிட்டுக் காவலுமிட்டுப்பின்னை, யடைதருந்தனியேயந்தர்ப் புரத்தினி லதுபோலான்மா, வுடலினிலிலந்தவத்தை யுறுமுயிர்காவலா க." எ - ம். இந்நூலினும் "அடையுஞ்சுவத்தைப் பெருகியம லத்தாற்பேணி யுறுந்தனியதிதமுண்மை யுயிர்கெனவுணர்த் தாமன்றே." எ - ம். அதீதத்திலொருமுதலாகச் சொல்லுவா னேனென்னி லப்படி யொன்றென்றதும் பிரகிருதியையு மா ன்மாவையுங் கூட்டியே யொன்றென்ற தெனவறிக. அத ற்குவழியேயதென்னில் ஓரான்மா வோருடலோடுங்கூடி யிருக் மிருடத் தடலென்று முயிரென்று மிரண்டுமுதலாயிருக்க செய்தெயு மவனென்று மவளென்று மதுவென்று மொன்றுய் நின்றுற்போல ஆன்மாவும் பிரகிருதியுந் தேகமுந் தேகியும் போலப் பிறிவற் றிரண்டுமுதலு மொன்றுய்நின்றதெனவ றிக. அப்படியான்மாவைவிட்டுப் பிரகிருதிதத்துவ நில்லா தென்றும் பிரபிருதிதத்துவத்தைவிட் டான்மா நில்லாதென் றுஞ் சொன்னதற்கு. பி - ம். சித்தியாரில். "புருடன் பிரகிரு திபெற்றுற் போதஞ்சிறிதங்குண்டாகிக், குருடன்முதலில் மூடவனிருந் தூர்ந்தார்ப்போலப்பிரகிருதி, யிருடனிடத்தே யிருந்தியங்கும்." எ - து. கண்டுகொள்க. அப்படிப்புருடன் பிரகிருதிபெற்றா லென்பதுதெரண்டே பிறகுவந்து கூடினதா மேயென்னில் அப்படிச்சொன்ன தந்தவதீநந்தன்னிலே யந் தப் பிரகிருதியழுந்த அந்தப் பிரகிருதியுங்கழன்று மாயாசா ரண்டத்திலே கூடுந்தனைர்ந்துமூலைறைமையிற் கூடினதெனவு

றிக. ஆகையாற் கேவலசகலமிரண்டினு மான்மாவும் பிரகிரு திய மொன்றை யொன்றுவிடப்படாம லுயிருமுடலும்போ லப் பிறிவற்றுநிற்குமென்பதே வழக்கெனவறிக.

அப்படிக் கேவலத்திற் பிரகிருதித்துவமுண்டாமாகிற் றத்துவத்தோற்றுஞ் சொல்லுமிடத்துச் சித்தியாரில். "வரு ங்குணவடிவாய்மூலப் பிரகிருதிகலையிற்றோன்றித், தருங்கு ணமூன்றுடையொன்றிற் முன்மூன்றுய் மும்மூன்றுகும்." எ - ம். இந்நூலினும். "உருத்திராற்கலையதனிற் பிரகிருதிகுணங்க ளாவாகும்." எ - ம். தோற்றஞ்சொல்லுவானேனென்னில் அப்படித் தோற்றஞ்சொன்னது மான்மாவானதிதத்தில் ஜீவியாமற்கிடந்து சகலராக ஜீவிக்குமவதரத்து இச்சாஞா னக்கிரியாசொரூப ரூற்போல வந்தப்பிரகிருதித்துவமு மான்மாக்க ளொடுங்குமவதரத்துபாதானமாக ஜீவியாம னின்றும் தோன்றுமவதரத்துக்குக் குணசொரூபமாகத்தோ ன்றி ஜிவித்தும் வருகையாலு மப்படிச்சொன்னதெனவறிக.

அப்படிப் பிரகிருதித்துவ மோகினியிற்றோற்றமாகிய காரி யமாயையோடுந் தோன்றியுமொடுங்கியும் வரச்செய்தே யிதுவொ ன்று மூபாதானமாய் நிற்குமுறைமை யெங்ஙனேயென்னி லதுச த்தமாயையிற் காரியமாகிய விந்துசத்தி சூக்குமைமவாக்கு முதலா னவையிற்றுக் குபாதானமாய் நின்றொடுங்குமதுபோல வெனவ றிக.

அப்படியாரு லொருபாதானத்திலே யொருபாதானமொடு ங்குமுறைமை யெங்ஙனேயென்னில் அஃதொருவரிடத்திலே மற் றுமோரான்மா கர்ப்பத்திலே பதிந்து கிடந்தாற்போல வெனவ றிக.

அப்படியாரு றற் கருவி கூடின விடமெல்லா மான்மாவுக்கு ஜீவிப்புண்டென்று சொல்லியிருக்கக் கேவலத்திற் பிரகிருதித்

தூவங்கூடி நிற்குமேயாகி லான்மா ஜீவிப்பற்றுக்கிடக்குமுறைமை யெங்ஙனேயென்னில் ஆன்மா வொருசரீரசம்பந்தமாய் நின்றவி டமெல்லாம் ஜீவிக்குமென்று சொல்லியிருக்கவுங் கேவலப்பட்டு க்கிடக்கு மவதரத்துச் சரீரசம்பந்தமாய்க்கிடந்து ஜீவியாமனிற்கு மதுபோல வெனவறிக.

ஆகையாற் பிரகிருதிதத்துவ மான்மாவோடுங்கூடி யெவ்வி டத்திலு முயிரு முடலும்போலப் பிரிவற்றுநின்று சகலத்திற் குணசொரூபமாய்நின்று காரியப்பட்டுங் கேவலத்தி லுபாதான மாய் நிற்குமென்பது முற்கூறிவந்த வுபமானங்களிலு மநுபவ த்திலுங் கண்டுகொள்க. அன்றியு மிச்செய்யுளில். "எண்ணை வொன்றிலாததிதம்" என்கையா லதிதத்திற் கருவிகளொன்றுமி ல்லை மற்றுள்ள நாலவத்தைக்குமே கருவியுள்ளதென்பாரு முளர். அதிதத்திற் பிரகிருதிதத்துவ முண்டென்பதைப்பற்றி முற்கூறிவ ந்தவகைகளி லிந்நூலுக்குக்கருத்தாகக் காணையம்பலநாதந் தம் பிரானுரைருளிச்செய்த குறட்பாவி லிச்செய்யுளுக்கு வகுத்த குறட் பாவாகிய "உடலிடையுயிருறு மோரைந்தவத்தையி, னிடைவுறுக ருவியினடைவினவகுத்தது." என்று ஐந்தவத்தைக்குங் கருவியு ண்டென்றருளிச் செய்கையாலு மதிதத்திலுங்கருவியுண்டென்ப தை கண்டுகொள்க. என்னவே யதிதத்திற் பிரகிருதிதத்துவமுண் டென்பது கருத்து.

அன்றியு மப்படியான்மாவைக்கேவலசகலமிரண்டினும் விட ப்படாமல் வருங்கருவி பிரகிருதிதத்துவமல்ல டருடதத்துவ மென் பாருமுளர். அதுவழக்கல்லவெனவறி. அதுவேனென்னில் ஆன் மாவிசுவவியாத்திபைவிட் டவத்தைப்படு மவதரத்து அறிகருவி பதிரூறுகீங்கி யவத்தைப் படுகையா லதிலே காலமு நியதியுங் கலையும் வித்தையு மராகமுங்கூடி கீங்குகையா லந்த வைந்து கரு விகளுங்கூடி ஜீவிக்குஞ் சமூகத்திற்றோன்றுங் கருவி புருடதத்

கூஅo சிவப்பிரகாச சவ்வியாக்யாகம்.

துவமாதலா லந்தக் கலாதிகளுந்து மவத்தைப்படு மவநரத்துக் கூடாததுகொண் டந்தச் சமூகத்திற்றோற்றமாகிய புருடதத்துவ மும மவத்தையிற் கூடாதெனவறிக.

அன்றியும் புருடதத்துவத்தையும் பிரகிருதி தத்துவத்தையு மொருகருவியென்று மதுவான்மா வவத்தைப்படு மவநரத்துத் துரியமளவும் புருடதத்துவமென்று பெயர்பெற்றுநின் றதீதத்திற் பிரகிருதிதத்துவமென்று பெயராய் நிற்குமென்பாருமுளர். அஃ திரண்டு மொருகருவியென்பது வழக்கல்லவெனவறிக. அதுவெங் ஙனேயென்னில் இந்நூலிலே தத்துவத்தோற்றஞ் சொல்லுமிட த்தில் "அருத்திமிருங்கலிகாலம்" என்னுந் திருவிருத்தத்திலே "உருத்திரராற் கலியதனிற் பிரகிருதிகுணங்க ளுளவாகும்" என் றும் பிரகிருதிக்குத் தோற்றஞ்சொல்லியும் "ஐவகையாலுறுபயன்க ணுகரவருங்கால மதுபுருடதத்துவமென் றறைந்திடுவரறிந்தோர்" என்று புருடதத்துவந் தத்துவ சமூகத்திற்றோன்றுங் கருவியெ ன்று சொல்லுகையாலும் புருடதத்துவம்வேறு பிரகிருதிதத்து வம் வேறெனவறிக. அன்றியு மிதுவேகருத்தென்பதைப் பற்றிக் காவையம்பலநாதத் தம்பிரானர் இந்நூலுக்குக் கருத்தாகவருளி ச்செய்த குறள்வெண்பாவில். "ஐவகையாலுறுபயன்க ணுகரவ ருங்கால மது புருடதத்துவம்." என்னுஞ் செய்யுளின் கருத்தா கிய "புகன்றவற்றுலவர் புருடதத்துவமு, மகன்றமாறு மதன்கு ணம் விளித்தது" என்று தத்துவங்கள் சாரியப்படுமிடத்துப் புரு டதத்துவம் பிரகிருதிதத்துவமும் வேறுவேறுகச் சொல்லுகை யாலு மவை யிரண்டையு மொருகருவியாகச் சொல்லவொண்ணு தெனவறி. அன்றியுந் தத்துவ மூப்பத்தாறுக்குந் தொகைசொல் லுமிடத்து ஆன்மதத்துவ மிருபத்தாலு வித்தியாதத்துவமேழு சிவதத்துவமைந்தென்று சொல்லுமிடத்து அவையிரண்டு மொ ருகருவியாலுல் மூப்பத்தாறுக்குந் தொகையில்லாதபடியாலும் அன்றியும் அத்துவாசோதனையிற் கலைபடைப்புக்குச் சித்தியாமில்.

"தத்துவமுமோரேழு." என்றுவித்தியாகலைக்கு வித்தியாதத்து வமேழையாகிலும் அவையிரண்டையு மொருகருவியென்ன வொன்ணுதெனவறிக.

அப்படியாலுல் வித்தியாதத்துவ மேழென்பதற்குக் காலம் நியதிகலை வித்தை யராகம் புருடன் மாயையென்று நூல்களிற் சொல்லுகையால் புருடனையும் பிரகிருதியையு மொருதத்துவமாக்கி மாயையென்பதை யொருதத்துவமாக்கி ஆக வித்தியாதத்துவ மேழென்று தொகைப்படுத்தி ஆகத்தத்துவ மூப்பத்தாறென்று சொல்லப்படாதோவென்னில் அப்படி மாயையென்றதும் பிரகிருதிதன்னையே யெனவறிக. ஆகையாற் புருடன்வேறு பிரகிருதிவேறெனவறிக. அப்படிப்பிரகிருதி தன்னையே மாயையென்பதொழிய மாயையென்றொரு கருவி தனித்தில்லையென்பதற்கு வகையேதென்னில் தத்துவத்தோற்றஞ் சொல்லுமிடத்துக் காலம் நியதி கலை வித்தை யராகம் பிரகிருதியென்று ஆறுக்குத் தோற்றஞ்சொல்லி வருகையாலும் புருடதத்துவத்தோற்றம். "ஐவகையாலுறுபயன்க ளுகரவருங்கால மதுபுருடதத்துவமென்று." அவ்விடத்திற் றோற்றஞ்சொல்லுகையாலு மாயையென் றொருகருவிக்குத் தோற்ற மோரிடத்திலுஞ் சொல்லாதபடியாலும் அன்றியுந் தத்துவங்கள் காரியப்படுமிடத்து மாயையென்றொருகருவி காரியப்படுகை சொல்லாதபடியாலும் பிரகிருதி தன்னையே மாயையென்பதொழியத் தனித்தொரு கருவி மாயையாகச் சொல்லப்படா தெனவறிக. ஆகையாற் புருடன்வேறு பிரகிருதிவேறெனவறிக.

அப்படிப் புருடனொருகருவியும் பிரகிருதியொருகருவிபுமா லுல் ஓடுக்கஞ் சொல்லுமிடத்து "வித்தையிலொடுங்குமாறும்" என்று ஆறுகச்சொன்னதேதென்னில் புருடதத்துவந் தத்துவசூ மூகத்திற் றோற்றமாகையாலு மற்றுள்ளகாலமு நியதியுங் கலையும் வித்தையு மராகமும் பிரகிருதியுங் காரணமாயையிற் றோற்றமா

கையாலுந் தோன்றினவொழுங்கிலே யொடுக்கஞ் சொல்லவேண்
டுகையாற் புருடதத்துவத்துக்குக் காரணமாயையிற் றோற்றமில்
லாதபடியாலும் மற்றுள்ள ஆறுதத்துவமுங் காரணமாயையி
லொடுங்குகையால் "வித்தையிலொடுங்குமாறும்." என்றதென
வறிக. ஆகையாற் புருடதத்துவம்வேறு பிரகிருதிதத்துவம்வேறெ
னவறிக.

அன்றியும். "சித்தமாமவ்வியத்தம்." என்று நூல்களிற் சொ
ல்லிவறுகையால் அவ்வியத்தமான பிரகிருதிதானே சித்தமுமாய்
த்தோன்றுகையால் பிரகிருதியையுஞ் சித்தத்தையு மொருகருவியா
க்கி அவத்தைக்குக்கருவி மூப்பத்தாலென்று சொல்வாருமுளர்.
அதுவும் பொருளல்லவெனவறிக. அதற்குக் குற்றமேதென்னில்
அப்படிப்பிரகிருதியுஞ் சித்தமு மொருகருவியானால் ஆன்மதத்
துவ மிருபத்தாலினுஞ் சித்தத்தை யொருகருவியாகவும் வித்தி
யாதத்துவ மேழினும் பிரகிருதியையொருகருவியாகவும் சொல்
லித் தத்துவமுப்பத்தா றென்கையாலும் அன்றியும் இவை காரிய
ப்படுமிடத்துச் சித்தமானது நினைவுமாத்தியமாய்நின்று காரியப்ப
டுமென்றும் பிரகிருதி மூக்குணங்களா யொன்பதுவகையாக நின்
றுகாரியப்படு மென்றுஞ் சொல்லிவருகையால் இரண்டையுமொரு
கருவியாகச் சொல்லவொண்ணுதெனவறிக. அன்றியும் பிரகிருதி
தானே சித்தமாமென்னும் வழக்கைப்பற்றி யிரண்டுமொன்றுமெ
ன்றலும் பிரகிருதியினின்றுஞ் சித்தமுண்டாகையாற் சித்தமா
னது சுழுத்தியில் நினைவுமாத்திரமாய் நிற்குமென்று நூல்களிற்
சொல்லுகையாலும் பிரகிருதிகாரணமாய்ச் சித்தந்தோன்றுகை
யாற் பிரகிருதிகெட்டுச் சித்தநிற்க வழக்கில்லாதபடியினாலும் அப்
படிச் சொல்லவொண்ணுதெனவறிக. அப்படிப்பிரகிருதி காரண
மாகச் சித்தந்தோன்று மென்றது ஆன்மதத்துவ மிருபத்தாலும்
பிரகிருதியிலே தோன்றி மீளவு மதிலேயொடுங்குகையாலும் அது

வழக்கல்லவெனவறிக. அப்படிப் பிரகிருதியிலே யான்மதத்துவ மிருபத்தாஅலுந்தோன்றி மீளவு மதிலே யொடுங்குமென்பதற்கு. பி-ம். இந்நூலில் "உருத்திராற் கலையதனிற் பிரகிருதிகுணங்க ளுளவாகு மாங்காரம் புந்தியினிலுதிக்கும்" என்று தோற்றத்துக்குச் சொல்லியும் சித்தியாரில் "தத்துவமென்மூன்றுஞ் சென்ருன்மதத்துவத்தொடுங்கும்" என்று ஒடுக்கத்துக்குச் சொல்லியும் வருமதுகண்டுகொள்க. ஆகையாற் புருடதத்துவம்வேறு பிரகிருதி தத்துவம்வேறு சித்தம்வேறெனவறிக.

அன்றியு மவத்தையிற் பிரகிருதிதத்துவங் கூடாதென்னிலதிற்றோற்றமாயுள்ள வந்தக்கரணங்களு மிந்திரியங்களும் அவத்தைத்தானங்களினின்று காரியப்படுகையாற் காரணமில்லாதபொழுது காரியம் ஜீவியாதாகையால் அவத்தையிற் பிரகிருதியுண்டென்பதை யநுபவத்தாற் கண்டுகொள்க. என்னவே ஆன்மா வவத்தைப்படுமிடத்துப் பிரகிருதிதத்துவ மூடம்பாகச் சென்று மூலாதாரத்திலே யந்தப்பிரகிருதியோடு மழுந்திக்கிடக்குமென்கிறதே சித்தாந்தப் பொருளெனவறிக.

என்றிவ்வனைஞ் சொல்லிவந்தவகையில் அவத்தைக்குக் கருவிமூப்பதந்தைதென்பதும் ஆன்மாவதிதத்திற் பிரகிருதிதத்துவமூடம்பாகச் சென்றொடுங்குமென்பதே வழக்கெனபதுங் கண்டுகொள்க. இதற்கு. பி - ம். சிற்றம்பலநாடித் தம்பிரானரருளிச்செய்த ஞானப் பஃறொடையில். "ஐயாறுமைந்து மலகருவியென்றுமிதிற், புருவத்திடை பத்தம் போக்கிருபத் தைந்தோடே களத்திற் றங்கிச், சுழுத்திதனின்மூன்றும் தூயத் திரண்டும், விழுத்தகினைவற்றுயிரை விட்டு - அழுத்தியிடி, மூலப் பிருகிருதியோடையம் மூலடலங், கோலக்கிடந்தணைத்தக் கூறுங்கால்." என்றருளிச்செய்ததுங் கண்டுகொள்க. அன்றியுஞ் சிவாகடத்தில் அசிந்திதமென்கிற வாகமத்தின் கிரந்தத்திலே யவத்தைக்குக்

கருவி மூப்பத்தைந் தென்பதற்குப் பிரமாணங் கண்டுகொள்க. ஆன்மதத்துவ மிருபத்துநாலுக்கும் பிரகிருதித்துவம் பிரதான மாகையால் பிரகிருதியை சூஷத்திரக்ய னென்றதெனவறிக.

இதனாற்சொல்லியது ஆன்மாகிழாலவத்தைப்பட்டுப் பிரகிருதித்துவ மூடம்பாகச் சென்று மூலாதாரத்திலே யொடுங்குமவதாத்துச் சாக்கிரத்தானத்தில் விட்டுப்போங் கருவி பத்தென்றும் சொப்பனத்தானத்தில் விட்டுப்போங்கருவி யிருபத்திரண்டென்றும் சுழுத்தித்தானத்தில் விட்டுப்போங் கருவியொன்றென்றும் துரியத்தானத்தில் விட்டுப்போங் கருவி யொன்றென்றும் வருமுறைமையையு மறிவித்தது. (கo)

வேறு—இனி நிறுத்த முறையானே செய்யுண்மூன்றினு ளாஞ்சூத்திரத்தி லவத்தைத்தன்மை யுணர்த்துவான் றொடங்கினாரவற்று ளிது கீழாலவத்தை யைந்தையு மதிதமுதலாக வுணர்த்திற்று.

எண்ணெவான் றிலாததிதம் - மூலாதாரத்திலே யாத்மாவானவமலமேமயா யெண்ணுதற் கொருகருவிகளுமின்றி நின்றறிவதாமதிதம்,—எய்திய துரியத்தொனறு நண்ணிடும் - பொருந்தப்பட்ட துரியத்திலேநிற்கும் பிராணவாயுவொன்று பொருந்தும்,—சுழுத்திதன்னினையந்துளதொன்று-சுழுத்தியிலே விருப்பமுடையதித்தமொன்று. பொருந்தும் நண்ணிடுமென்பதனை யிதனோடுங்கூட்டுக,—கனவுதன்னி லாறைழாம் - சொப்பனவவத்தையிலே சதாதிணையந்தும் வசனதிணையந்தும் மனம் புத்தி யாங்கார மூன்று மாகிய பதின்மூன்றுமாம்,— பின்னுமண்ணிடும் - இனையவன்றிகின்ற பிரதான வாயுக்களொன்பதும் பொருந்தும்,—சாக்கிரத்திற் கண்ணுறுமஞ்சாறுய்-சாக்கிரத்தின் ஞானேந்திரியங்களைந்து மதன்வழியென்னுவதாய கன்மேந்திரியங்களைந்தும் பொருந்தும்,—

கருவிகள் காணுந்தானே-ஆராயுமிடத் திந்தானங்கடோறு மிந்த முறையே கருவிகள் பொருந்தும். எ-று.

காணுந்தானே பென்பதனுலும் பாடம். சாக்கிரத்தானம் நெற்றி. இது தொட்டுக் கண்டமளவுஞ் சொப்பனத்தானம். மூன்னுலகிய சிவஞானபோதத்திலே யொன்றனைபாலூலத் துபிரனையுகாபிதனி லென்றுற்போ லிவ்வாசிரியருஞ் சிருட்டிக் கிரமமாகவுரைத்தார். கேவல சகல சுத்தமென்னுங் காரணவத்தை மூன்றினுட் சகலாவத்தை பதினைந்துவிதப்படும். அவை சகலத்திற் கேவலமொன்றும் சகலத்திற் சகலமொன்பதும் சகலத்திற் சுத்தமைந்துமாம். சகலத்திற் கேவலமொன்றுவது அதிதம். சகலத்திற் சகலமொன்பதாவது மத்தியாலவத்தை யைந்தும் கீழாலவத்தையிற் சாக்கிரமுதலென்குமாம். மத்தியாலவத்தையுஞ் சகலத்திற் சுத்தமைந்து மேற்காட்டுறும். கீழாலவத்தையைந்திற் சாக்கிரத்திற் கருவி மூப்பத்தைந்து. சொப்பனத்திற் கருவி இருபத்தைந்து. சுழுத்தியிற்கருவி மூன்று. துரியத்திற் கருவி இரண்டு. அதீதத்தில் ஒன்று. அது புரு—ஞதவி லெண்ணெ வொன்றிலா ததீத மென்றூர். இனிச் சாக்கிரத்திலே இந்திரியம் பத்தநிற்க நின்ற இருபத்தைந்தடோனை சொப்பனவத்தையுறுவன். இவ்விடத்தி லெறிகருவியான இந்திரியங்களினெறி யிருக்கையிலுஞ் சாக்கிரத்திற் கண்டவாதனின சொல்லுமாட்டாமை னிற்பனபற்றி நிச்சயித்தெழுங் கருவிகளானெழுன்மையின் அறிவாழுகக்காய்ந்த விரும்பிறுதிச் சிறுதுசிவப்பு நின்றூற்போலவும் புத்தியிலே பிரகாசிப்பிக்கும். அதெப்படியெனில் ஒழுகக்காய்ந்த விரும் பக்கினிவைவிட்டு நீங்கியிருக்கையிலு மக்கினிசெய்யுந்தன்மை செய்து நின்றூற்போலவும் பவுரிசுழன்றவை னதிங்கியிருந்தவிடத்து மந்தப்பிரமைநின்றூற்போலவும் யானைகண்ட வேகமுழப்போய் மீண்டுவருங்காலுங் கவ்வியானை யாண்டுஞ்சில்லா திருக்கவு மனத்தின்கணிற்று யானுபோ

லவுமாம். இனிச்சுழுத்தியிலே சொப்பனவாதனை நிகழ்த்து சொ
ல்லுமாட்டாம னிற்பனபற்றி நிச்சயித்தெழுங்கருவிக ளாண்டின்
மையின் அறிவொழுகக்காய்ந்த விரும்பிறுகிச் சிறிது சிவப்பு நின்
ருற்போலவுஞ் செறிந்தவிருளிலே மின் பிரகாசித்தழிக் கண்ணுக்
கொருபொருளை நிச்சயிக்கவொண்ணு திருந்தாற்போலவு மாம்.
இனியத்துரியத்திலே பிராணவாயுவின் சேட்டையேயன்றி வே
ருரு நினைவுமற்றிருப்பன். அறிவுமவ்விரும்பு மிகவப்பிரகாசமும்
வெப்பமுமாறிச் சிறிதுவெம்மையுட னிற்பதுபோலவு மின்மறைந்
தவிடத்து மிக்கவிருளிற் கூடிநின்ற கண்போலவுமாம். இனியதி
தத்திலேயறிவு வெம்மையற்ற விரும்புபோலவும் பிறவிக்குரு—
னந்தகாரத்திலே விழித்திருக்குந் தன்மைபோலவு மிருக்கும்.

"நனவுமுகந்தன்னி னுலேழுமேழுங், கனவிருபத்தைந்துங்
களத்தி-நினைவாஞ், சுழுனையொரு மூன்று மாற்பிற்றுரிய, மெழுவ
பிழுல மிரண்டொன்று. இந்திரியமீரைந்து நிற்கவிலாடத்திருபத்,
தைந்துங்களத்தி னடைந்தாங்கனவு-முந்தைதன, வென்னவிலங்
குந்துயரு மின்புந்தினைக்குழுயிர்,பின்னைய தெ பொய்யாம் பிரிந்து.
இந்திரியமீரைந்து நிற்கவிலாடந்தன்னி, லந்தத் தொழில்விடய
மார்கனவின்-வந்துறலென், வாதனையிலுலே விளங்குடன்றி மற்
றிவற்றை, யாதலிலுற் புக்கனவென்றுர். உயிராவிசித்த மூரந்தி
லெடுங்கி, டயர்வுநினைவுஞ் சிறிதேதயாகு-முபர்கனவிற், சேறன்று
நினைவு மிதனைச்சுழுத்தியெனச், சான்றேருரைப்ப ரடைந்தார்
க்கு. நாபிக்குக்கிழ்மேலு நாலங்குலமங்கே, டாவிக்குயிர்க்கொ
டுக்க மாந்தரிய-மாவிதனிற்; றொன்றியிலங்கத்திருளி னுற்றவி
ழுக் கொப்பாகி, நின்றததிதநிலை. இவற்றின்பொருளுங்காண்க.

இங்ஙனஞ் சொல்லப்பட்ட வவத்தைக ளைந்து மடிமேயுணர்
குத் தரிசனம் வந்தநில்லையென்ற மாணவகனைநோக்கிச் சகலாவ
ந்தையிற் காரியமாயுள்ள நிலையிற்படி மவதாரத்திலுண்டான வைங்

நவத்தைகளினுங் தரிசனப்படுத்தியதுகொண்டே திருவருட்பிரகா சமுள்ள புண்ணியவான்களுக்குண்டான மேலாலவத்தையும் ஆசா ரியன்கண்ணுக வறியவேணுமென்னு மூன்றாமையு மருளிச்செய்வ னெடுத்துக்கொண்டருளியது.

இவ்வகை யவத்தைதன்னி லெய்திடுங் காணமெல்லா
மெய்வகை யிடத்திலுற்று மேவுமா கண்டுமிக்க
பொய்வகைப் பவமகற்றப் புரிந்திடி லருளாலாங்கே
யைவகை யவத்தையுய்க்கு மறிவினலறிந்துகொள்ளே.

தத்துவசமூகந் தன்னிலெந்தவத்தையுந்
சுத்தமதாமைந் தவத்தையுஞ்சொன்னது.

(இ-ள்.) இவ் வகையவத்தை தன்னி லெய்திடுங் காணமெல்லாம் மெய்வகை யிடத்திலுற்று மேவுமாகண்டு.

இந்தவண்டவிலே முற்கூறப்பட்ட அவத் தைகளைந்திலு முண்டானகருவிக ளேற்றக்கு றைச்சலாய் நின்றமுறைமைக ளெல்லாத்தை யும் மெய்யிலேவகைப்பட்ட விலாடத்தானத்தி லே யஞ்சவத்தைப்படு முறைமையையறிந்து

மிக்க பொய்வகைப் பவமகற்றப் புரிந்திடில்
அருளாலாங்கே யைவகையவத்தையுய்க்கும்
அறிவினலறிந்துகொள்ளே.

மிகவும் பொய்யாயிருக்கப்பட்ட ஜநமன தக்கங்களைநீக்க விசாரிக்கில்

தம்பிரானுர் காருண்ணியத்திலேலேலான சுத்தாவத்தைகளைந்தையு மந்தவிலாடத்தா னத்திலே செலுத்தாநிற்கும். அதனையறியுமு றைமை யெங்ஙனேயென்னில்

ஆசாரியன் கண்ணுக வறிந்து கொள்ளுக.

எ-று. அன்றியும் ஐவகையவத்தையுய்க்கு மறி வினலறிந்துகொள்ளே யென்றுரைபதமாக்கி

மூற்கூறிய கீழாலவத்தைகொண்டும் நிலையிற் படு மவத்தைகொண்டும் மேலாலவத்தையு மறியப்படுமென்னவுமா மெனவறிக.

நு-ம். மெய்வகையிடத்திலுற்றுமேவுமாகண்டு. எ-து. சாக் கிரத்தானத்திலே யுண்டாகிய நிலையிற்படு மவத்தை யைந்தையுங் கண்டென்றதெனவறிக.

அஃதாவது - ஒருபண்டத்தை மறந்தவனந்தப்பண்டங் காணுதபொழுது பிராணவாயுவு மியங்காமல் மூர்ச்சித்திருந்தவவத்தை நிலையிற்படுமவத்தையிற் சாக்கிர துரியாதீதமெனவறிக.

இனியந்தப்பிராணவாயு வியங்கத்தக்கதாகப் பெருமூச்செறிந்து விசாரித்தறிவோமென்று நின்றவவத்தை நிலையிற்படுமவத்தை யிற் சாக்கிரதுரியமெனவறிக.

இனியவ்விடத்திலேயல்லோ போகுமென்று நினைவெழுந் திருந்தவவத்தை நிலையிற்படுமவத்தையிற் சாக்கிர சுழுத்தி யெனவறிக.

இனியின்னவிடத்திலே யல்லோ பண்டம்வைத்தோ மென்று விசாரப்பட்டறிந்தவவத்தை நிலையிற்படுமவத்தையிற் சாக்கிர சொப்பனமெனவறிக.

இனியந்தப்பண்டம் வைத்தவிடத்திலேசென்று கண்டது நிலையிற்படுமவத்தையிற் சாக்கிர சாக்கிரமெனவறிக.

இந்தநிலையிற்படு மவத்தைக்குக் கருவிகளாவன. சுத்ததத் வங்களைந்துமெனவறிக.

அது வெங்ஙனேயென்னில் அதீதத்துக்குச் சிவதத்வமொ ன்று மெனவறிக.

துரியத்துக்குச் சிவதத்வமுஞ் சத்திதத்வமு மெனவறிக.

சுழுத்திக்குச் சிவதத்வமுஞ் சத்திதத்வமுஞ் சாதாக்யதத் வமு மெனவறிக.

சொப்பனத்துக்குச் சிவதத்வமும் சத்திதத்வமுஞ் சாதாக்கியதத்வமு மீசுரதத்வமு மெனவறிக.

சாக்கிரத்துக்குச் சுத்ததத்வமைந்து மெனவறிக.

இதற்கு. பி-ம். சித்தியாரில். "ஐந்துசாக்கிரத்திலுன்கு கனவினிற்சுழுனைமூன்று, வந்திடுந்துரியந்தன்னி லிரண்டொன்று துரியாதிதந், தந்திடுஞ்சாக்கிராதி யவத்தைகடானந்தோறு, முந்திடுங்கரணந்தன்னிற் செயலெருருமூணர்ந்துகொள்ளே." எ-து. கண்டுகொள்க.

இனி யிந்த நிலையிற்படி மவத்தைகொண்டே கீழாலவத்தை யறியப்படுமென்பதற்கு மிந்த நிலையிற்படி மவத்தையிற் கருவிகளீங்குகிறதுதானே சுத்தாவத்தையா மென்பதற்கும். பி-ம். சித்தியாரில். "அறிதருமுதலவத்தை யடைதருமிடத்தே யைந்துஞ், செறிதருங்கரணந்தன்னிற் செயல்தொறுங்கண்டுகொண்ணி, பிறிவிலாஞானத்தோரும் பிறப்பறவருளாலாங்கே, குறியொடுடைந்த வத்தை கூடுவர்விடுகூட." எ-ம். சிவஞானபோதத்தில். "இலாடத்தேசாக்கிரத்தை யெய்தியவுள்ள, மிலாடதேதனையந்தவத்தை யெய்து - மிலாடத்தே, யவ்வவ்விந்திரியத் தத்துறைகள்கண்டதுவே, யவ்வவற்றினீங்கலதுவாங்கு." எ-ம் கண்டுகொள்க. என்னவே யிந்தச் சகலாவத்தையிலுண்டான கருவிகளேற்றக்குறைச்சல் போல வந்தக்கீழாலவத்தைக்கு மெனவறிக. இது சகலாவத்தையிற் காரியாவத்தையைச் சொன்னதெனவறிக.

இனி யருளாலாங்கே யைவகை யவத்தையுய்க்குமென்றது சுத்தாவத்தையெனவறிக.

அவைவருமாறு:— நின்மலசாக்கிர நின்மலசொப்பன நின்மலசுழுத்தி நின்மலதுரிய நின்மலதுரியாதிதமெனவறிக.

அஃதாவது சுத்ததத்துவமைந்தில் சுத்தவித்தைகீங்கினவவதஞ் சாக்கிரத்திற் சாக்கிரம்.

சுத்தவித்தையு மீசுரமு நீங்கினவவதரஞ் சாக்கிரத்திற்செ ப்டனம்.

சுத்தவித்தையு மீசுரமுஞ் சாதாக்யமு நீங்கினவவதரஞ் சாக் கிரத்திற்சுழுத்தி.

சுத்தவித்தையு மீசுரமுஞ் சாதாக்யமுஞ் சத்தியு நீங்கினவ வதரஞ் சாக்கிரத்திற்றுரியம்.

சுத்ததத்துவமைந்து நீங்கினவவதரஞ் சாக்கிரத்தி லதித மெனவறிக.

இவை யைந்துதத்துவமு நீங்கவென்றதுகொண்டே யிவை யைந்தும் பிரேரிக்கப்பட்ட கருவிகளு நீங்கவென்பதை யநுப வத்தாற் கண்டுகொள்க.

இதற்கு. பி-ம். சிவஞானபோதத்தில். "இலாடத்தேசாக்கி ரத்தே" என்றசெய்யுண்முடிவில். "அவ்வவற்றி னீங்கலதுவா ங்கு." எ-து. கண்டுகொள்க. இதுசுத்தாவத்தையிற் காரியாவத் தையெனவறிக.

இதனுற்சொல்லியது கீழாலவத்தை யைந்தையுந் தரிசனப்ப டுத்தவேண்டிச் சகலாவத்தையிற் காரியாவத்தையாகிய நிலையிற்ப டுமவத்தைகொண்டே தரிசிப்பித்த முறைமையும் அதுகொண்டே சுத்தாவத்தையிற் காரியாவத்தை யைந்தையுந் தரிசிப்பித்த முறை மையு மறிவித்தது. நிலையிற்படுமவத்தையென்றது மத்தியாலவத் தை யெனவறிக. மேலாலவத்தை யென்றது சுத்தாவத்தையை யெனவறிக. (கக)

வேறு—இது மத்யாலவத்தையுஞ் சகலத்திற் சுத்தாவத் தையு முணர்த்திற்று.

இவ்வகை யவத்தைதன்னி லெய்திடுங்காரணமெல்லாம்-இந்த வுலகங்கூறுபாடான கீழாலவத்தையிற் டொருந்தப்பட்ட தத்

துவ மூப்பத்தைந்தும்,—மெய்வகை யிடத்திலுற்று மேவுமாக ண்டு - உணர்த்து முறைமைக்குத் தானமான விலாடத்தானத்தி லும் பொருந்திப் பஞ்சாவத்தை கூடும்படிகண்டு,—மிக்க பொய் வகைப் பவமகற்றப் புரிந்திடி லருளால் - மிகுத்த பிரபஞ்சத்தி லே பொய்யின் கூறுபாடான பிறவிகளைப் போக்குதற்குச் சிவ னருளாலே மேலாமவத்தையைப் புரியுமிடத்தில்,—ஆங்கேயை வகையவத்தை யுய்க்கும் - அவ்விடத்திலும் பஞ்சாவத்தை யவ்வ ருளாற் செலுத்தப்படும்,—அறிவு லறிந்துகொள்ளே - இந்த வவத்தையை யாசிரியனுணர்த்திய உபதேசவறிவாலறிக. எ - று.

அறிந்துகொள் ஒருசொல். எச்சவும்மைகள் விகாரத்தாற் றொக்கன. நிலைபாமையிற் பொய்வகையென்றார். மத்யாலவத்தை யையுஞ் சுத்தாவத்தையையு மதிதமுதலாகத் தரிசிப்பான்.

"விரும்பு, மரும்பொருளை விழ்த்துமயங்க, விரிந்தவனிலன் பெறுகை-வருந்தறிவு, தோன்றுதலேயம் விழுந்தவிடந் தோன்றுத லென், றுன்றவைந்துஞ் சாக்கிரத்திரும். ஒருவர்க் கொருவர்க் கொருகா லொருகா, லருகிவரு மிவ்வவத்தை - கருவிகளை, முன் ணம்பகர்ந்த முறையிற் கொருகழுகம், பன்னியவிவ் வைந்திணுக் கும் பாலது. கலாதிகள் போகழுணுங் காலக்கருவி, கலாதிகளை ச்சாக்கிரதீத காணுங் - கலாதிகளை, யின்றியும்போக முயிருக்கி லங்குமேன், றன்றுபுகழாய் சூழ்ந்துசொல். கலாதிகளாவிக் கொ ருவர்க்கஞ் சுகமாகையாற், கலாதிகளைக்கட்டினையார் கற்றோர்-ம லாரியுறை, வந்தணரியனென் வாறேயவனடியிற், பந்தனைசொ ல்லா ரிதுபோற் பார். இனிச் சுத்தாவத்தை, ஆருயிரின்மேலதனு ளைந்தைந்தை லையந்திணுரும், பேருயிர்நிற்கும்பார் பெரும்பினி போம் - பேருயிரை, யாருயிர்மேற்பார்க்கை யதிதந்தரியாதி, யா ருயிருளாதியிற் பார்க்கை. என்னும் பெரியோர்வாக்கியங்களா லறிக.

இங்ஙனஞ்சொல்லப்பட்ட காரியாவத்தைகள் தரிசிப்பித்தா
ற்போல மூற்கூறிய காரணவத்தைதகள் மூன்றுந் தரிசிப்பிக்கவே
ணுமென்று மாணவகஜனநோக்கிக் காரியாவத்தையி லுண்டான
கேவலசகலசுத்தம்போலவிருக்குங் காரணவத்தையி லுண்டான
கேவலசகலசுத்தமென்னு மூறைமையை மேலருளிச்செய்வா னெ
டுத்துக்கொண் டருளியது.

நீக்கமி லதீதமாசு நிறைந்தகே வலமா நீர்மை
சாக்கிரங் கலாதிசேர்ந்த சகலமாந் தன்மையாகு
நீக்கமி லிரண்டுங்கூடா தொழியவோர் நிலையினீடுற்ற
சாக்கிர வதீதஞ்சுத்தத் தகைமைய தாகுந்தா னே.

கேவலசகல சுத்தமென்றுரைத்த
மூவகைதெளியு மூறைமைமொழிந்தது.

(இ-ள்.) நீக்க மி லதீத மாசு நிறைந்தகேவலமா நீர்மை — ஆன்மாக்கண் மாயாகருவிகளெல்லா நீங்க நீங்காத வாணவமலத்தாலே மறைப்புண்டு மூலாதாரத்திலே கிடக்கிற வதிதம்போலே யிருக்குஞ் சர்வசங்காரத்துங் காரணமாயையிலே தத்துவங்களெல்லாமொடுங்க வதிலே சர்வாண்மாக்களுமொடுங்கி யாணவமலத்தாலே மறைப்புண்டு கிடக்கிறதே காரணமாகிய கேவலாவத்தையின் முறைமை

சாக்கிரங் கலாதிசேர்ந்த சகலமாந் தன்மையாகுந் சாக்கிரம் — ஆன்மாக்கள் கலையாதியாயுள்ள தத்துவங்களுடனே கலந்து ஒவ்வொருவிடயங்களிற் கூடிநின்று பிறிதிறகாரியமாகிய சாக்கிராவத்தைக்கொடுக்கும் கன்மத்துக்கிடாகவெண்ப தத்தானன்குறாயிர மியோனிகடோறும் பிறந்திறந்து திரிகிற சகலாவத்தையாகிய காரணவத்தையின் முறைமை

நீக்கமி லிரண்டு ஞ்கூடா தொழி யவோர்நிலையினு முஞ் சாக்கிரவதீ தனுஞ் சுத்தத் தன்மைய தாகுந்தா னை.

ஞ்ஞன்றவிட்டொன்றுபற்றி யான்மாவைவிட்டு நீக்காமல்வருகிற பெருமைபொருந்திய கேவலசகல மிரண்டினுங் கூடாம லருளுடனே கூடி யிரண்டறநிலைபெற்று நேயத்துடனே யழுந்துகிறதே சாக்கிராதீதத்துக்கொக்கும் பரமுத்தியான சுத்தாவத்தையாகிய காரணமும். எ-று.

ஞ-ம். அதீதமென்றது ஜீவிக்குங்கருவிகளெல்லாங் கழன்றவிடமெனவறிக.

கேவலமென்றது சர்வசங்காரமெனவறிக.

சாக்கிரமென்றது கலையாதி தத்துவங்களோடுங்கூடி ஜீவித்திருநிற்கை யெனவறிக.

சகலமென்றது சிருஷ்டிதொடங்கிச் சங்காரமளவும் பிறந்து வருகிற தெனவறிக.

சாக்கிரவதீதமென்றது கருவிகள் முப்பத்தாறுங்கழன்று வலசகலத்தினுமழுந்தாமலருளிடமாகச்சென்று நேயத்தழுந்தலாகிய வுன்மைநிட்டையை யெனவறிக.

சுத்தமென்றது திருவடியிலே யிரண்டறக்கூடிநின்ற பரமுத்தியை யெனவறிக.

இவையிற்றுக்கு. பி-ம். சித்தியாரில். "கேவலசகலசுத்த மென்னு மூன்றவத்தையான்மா, மேவுவன்" எ-ம். அறிவில னளூர்த்தனிந்த னராயாதி குணங்களோடுஞ் செறிவிலன்" எ-ம். "உருவினைக்கொண்டு போகபோக்கியத்தன்னல்" எ-ம். "இருவினைச்செயல்களொப்பி லீசன்றன் சத்திதோய" எ-ம். வரும் விருத்தங்களைக் கேவலசகலசுத்தமூன்றுக்குங் கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது ஆன்மா தத்துவங்களெல்லாங் கழன்று ஆணவமலத்தான் மறைப்புண்டு பிரகிருதித்துவ மூடம்

பாக மூலாதாரத்திலே கிடக்கிற வதீதம்போலே கிடக்குஞ் சார்வச
ங்கார கேவலத்திலென்றும் ஆன்மா கலையாதி தத்துவங்களோடு
ங்கூடி யொவ்வொன்றுக ஜீவிக்கிற சாக்கிரம்போலவிருக்கு மி
யோனிவிட்டுயோனிபற்றிப் பிறந்திரந்துவருகிற சகலமென்றும்
இந்தக்கேவலசகல மிரண்டுநீங்கின சாக்கிராதீதம்போலவிருக்குக்
திருவடியிலே யிரண்டறக்கூடின சுத்தமான பரமுத்தியென்றும்
வருமுறைமையை யறிவித்தது. (கூ)

வேறு—இது காரியாவத்தை பதினைந்திற்குங் காரணமான
கேவல சகல சுத்தங்களின் தரிசன மூணர்த்திற்று.

நீக்கமிலதீதம் - இவ்விடத்துக் கருவிகழன் றஞ்ஞானநீங்
காத வதீதமான்று,—மாசுநிறைந்த கேவலமா நீர்மை-ஆணவம்
பரிபூரணமாயிருக்கிற சார்வசங்காரமென்று சொல்லப்பட்ட கேவ
லாவத்தையாகிய தன்மைடாம்,—சாக்கிரங் கலாதிசேர்ந்த சகல
மாந் தன்மையாகும் - கலாதிகளுடனே கூடிநின்று விடயங்களி
லேலவந்த சுகதுக்கங்களை யனுபவிக்குஞ் சாக்கிரமானது சிரு
ஷ்டிதொடங்கிக் கன்மத்துக்கிடாக நாலுயோனிகளிலும் புக்கு
ழன் மூர்ஜிக்கப்பட்ட புண்ணியபாவங்களுக்கிடாகச் சுவர்க்கந
ரகங்களை யனுபவித்துச் சார்வசங்காரமளவாக ஜனனமரணப்ப
ட்டுத் திரியுஞ் சகலாவத்தையான தன்மையாயிருக்கும்,—ஊக்க
மிலிரண்டுங்கூடாதொழிய வோர் நிலையிநீடுஞ் சாக்கிரவதீதம்-
தீவிரதர சத்திநிபாதத்தாலே கேவலத்தி லறியாமையுஞ் சகலத்தி
லவிகாரமுமான நீங்காத விவ்விரண்டுந் தாக்காதுவிடச் சிவனரு
ளான ஒப்பற்றசார்பிலே நிலைபெற்றுநிற்குஞ் சாக்கிரவதீதமான
து,—சுத்தத் தகைமையதாகுந்தானே - பரமுத்தியான சுத்தா
வத்தையின் முறைமையாம். எ-று.

கலாதிசேர்ந்த சகலமென்று கூட்டினுமாம்.

இம்மூன்றுசெய்யுளானும் பெத்தமுத்தி யிரண்டினுமுள்ள வவத்தைக ளடங்கலுஞ் சொல்லப்பட்டன. அவத்தைமுடிந்தது.

☞ நாலாஞ்சூத்திரமாகிய அவத்தைத்தன்மை முற்றிற்று.

இங்ஙன முற்கூறியவகையே யவத்தைப்பட்டுகிடக்கு மான்மாக்களுக்குச் சிவ ஞானர்த்துமுறைமையு முண்டாமா கையால் அவத்தைக்குமேல் ஐந்தாஞ்சூத்திரமாகிய உணர்த்து முறைமையென்னு மதிகாரம் வைக்கப்பட்டது.

இவ்வதிகாரத்தில் ஐந்தாஞ்சூத்திர நின்ற முறைமையெங்ஙனேயென்னில் சிவஞானபோதத்தில்:— "விளம்பிய வுள்ளது மெய்வாய்கண்மூக், களந்தறிந்தறியா வாங்கவை போலத், தாந்தமுனர்வின் றமியருள், காந்தங்கண்ட படாசத்தவையே." என்னும் ஐந்தாஞ்சூத்திரத்துக் கிவ்வான்மாக்க ளிடத்துத் தமது முதலுபகார முணர்த்துத னுதவிற்று என்றமையால் இந்நூலினு மிவ்வதிகாரத்து. "மருவிய பொரியிலென்றும்" என்றவிருத்தந் தொடங்கி "அறிந்திடுமது." என்ற விருத்தமுடிவாகிய செய்யுளைந்தும் ஆன்மாக்களைச் சிவ ஞானர்த்து முறைமையைச் சொல்லுகையால் இதுவு மைந்தாஞ்சூத்திரமாக நின்றதெனவறிக.

இச்செய்யுட்களி லவைவருமா றெங்ஙனே யென்னில் "தன்கென வறிவிலாதான்." என்ற செய்யுளில் "தனக்கென வறியாவுலிச் சகலமு நுகருந்தானே." "அறிந்திடுமது" என்ற செய்யுளில். "கன்மத் தொன்மை யறிந்தவை நுகருமாறு மருளுவ னமலன்றானே." எ - ம். வருகையாலட் படுத்துச் சொல்லப்பட்டதெனவறிக.

சிவப்பிரகாச சவ்வியாக்யாநம்.

இங்ஙன மிவ் வதிகாரத்துக்கு வகுத்த செய்யுட்களிற் சில விருத்தங்களைச்சூத்திரத்துக் குவமைகாட்டி மற்ற விருத்தங்களுக் குவமைகாட்டாதது தெதெனிலில்? அஃதாவது இங்ஙனந் தப் பொருளுக்கு மாறுபாடு சொல்லுஞ் சமயிகள் கருத்தைக்களை மறுத்த செய்யுட்களாகையா லெனவறிக. மேல்வருஞ் சூத்திரங்களுக்கு மிங்ஙனங் கண்டுகொள்க.

இனி யிவ்வதிகாரத்துக்கு முதற் செய்யுளாகிய "மருவிய பொறியி லொன்றும்" என்ற செய்யுளுக்குத் தொகுத்தலே வருமாறு.

அப்படி யவத்தைப்பட்டுக் கிடக்கு மான்மாக்க ளுணருமுறைமை யெங்ஙனமென்று விளையுதற் குத்தர மருளிச்செய்வா னெடுத்துக்கொண் டருளியது.

மருவிய பொறியிலொன்று மாபூத மைத்திலொன்றுங், கருவிக ணைங்குநீங்கக் கலாதிக ளைந்துங்கூடி, யொருபுல னுகருமிந்த வொழுங்கழிந்து துயிருமை யன்றித், தெரிவுறு தவறிழைத்தத் திரள்களுஞ் செய்வினைவிலாவே. (கக)

உணர்த்துமுறைமையி லொருபுலனுகர்
வினைக்குறுகருவிக ளிலையாமென்றது.

ஆன்மா விந்திரியங்களைக் கொண்டு விடயங்களைக் கொள்ளுமிடத்து
அப்பொழுதைக்குப் பொருந்தப்பட்ட

(இ-ள்.) மருவிய பொறியி லிந்திரியங்களிலே யொன்றும்
லொன்றும்
மாபூத மைம்
திலொன்றும்

பெரிய பூதங்களாகிய பிருதிவியப்புதேயு வாயு வாகாசமாகிய விலையிற்றிலையப்
பொருளுக்கேற்ற பூதமொன்றும்

கருவிகளுன் மனம் புத்தி யாங்காரஞ் சித்தம் என்கிறகும் அந்தக்கரணங்களுன்கும்

நீங்காக்கலா திகள் முற்கூறிய கரணங்களிலிட்டு நீங்காத கலை காலம் நியதி வித்தை அராகம் புருடன் பிரகிருதி மாயையென்கின்ற வித்யாதத்துவமேழும்

ஐந்தும் சுத்தவித்தை ஈச்வரம் சாதாக்கியம் சத்தி சிவம் என்கின்ற சிவதத்துவமைந்தும்

கூடியொருபுலனுகரும் ஆக விங்ஙனஞ்சொல்லப்பட்ட தத்துவங்கள் பதினெட்டுங்கூடியே யான்மாவெர்ருவிடயத்தைப் புசிப்பன். இந்தக்கருவிகள் கூடாதபொழுது ஆன்மாவுக்குப் புசிப்பில்லையாவென்னில்

இந்தவொழுங்கொழுங் துயிருமொன்றைத் தெரிவுறுது இந்த முறைமையிலே சொல்லப்பட்ட கருவிகள் கூடிலொழுகிய வான்மாவுமொன்றைப் புலப்பட வறியமாட்டாது. அந்தவான்மாக் கூடாதபொழுது அந்தக் கருவிகள் தாமுகவறியாதோ வென்னில்

அவ ளெழுங்கிரள்களுஞ் செயலிலாவே. அந்தவான்மாவைக் கூடாமலந்தக்கருவிகளுந் தாமுக வறியமாட்டா. எ-று.

நு - ம். இங்ஙனம் பொருட்கூறிவந்த வகையிலான்மாயாதொருவிடயத்தைப் புசிக்குமிடத் தந்த விடயங்களுக் கேற்ற விந்திரியங்களிலே யாதாமொன்றும் அதற்கேற்ற பூதங்களிலே யாதாமொன்றும் அந்தக் கரணங்கள் நாலும் கலாதிகளெழும் சுத்ததத்துவமைந்தும் ஆகப் பதினெட்டுக் கருவிகளுங் கூடியே புசிக்கவேணுமென்று பொருட்கூறியதற்கு

வழியேதென்னில் அஃதாவது சிவனுடைய சத்திகள் சுத்த தத்துவமைந்தையுங் கொண்டு வித்யாதத்துவமாகிய கலாதிகளேழையுங் காரியப்படுத்தியும் அந்தக்கலாதிகளேழும் ஆன்மதத்துவ மிருபத்தாறையுங் காரியப்படுத்தியும் வருகையாலப்படிச் சொல்லப்பட்டதெனவறிக.

அவையொன்றிலொன்று காரியப்படுமுறைமையெங்ஙனேயென்னில் சிவனுடையசத்திகள் சுத்ததத்துவமைந்தையுநடத்தும் வகையாவது:—இச்சாசத்தி யீச்வரத்தை நடத்தும். கிரியாசத்தி சத்திதத்துவத்தையுஞ் சாதாக்கியத்தையும் நடத்தும். ஞானசத்தி சிவதத்துவத்தையும் சுத்தவித்தையையு நடத்துமெனவறிக. இதற்கு பி - ம். "இச்சைநடத்தியிடு மீச்சுரதத்துவத்தை, மெய்ச்சத்தி சாதாக்ய மேவியிடுநிச்சயமே, யென்றகிரியை நடத்தியிடு மெய்ஞ்ஞான, மென்ற சிவஞ் சுத்தவித்தையாம்." எ-து. கண்டுகொள்க.

இனி சுத்ததத்துவ மைந்தாலும் வித்தியா தத்துவமாகிய கலாதிகளேழுங் காரியப்பட்டு வருகையாவது:—நாதசொரூபமாகிய சிவதத்துவ மதோமாயையிலே நின் ஞான்மதத்துவ மிருபத்தாலுக்கு மூலதானமாகியபிரகிருதி மாயையைத் தோற்றுவித்தும் அதற் கந்தமாகிய விந்துவடிவாகிய சத்தி தத்துவத்தைக் கொண்டு காலமூனியதியுங் கலையுந் தோற்றுவித்தும் சுத்தவித்தை வித்தையைத் தோற்றுவித்தும் ஈச்வரம் அராகத்தைத் தோற்றுவித்தும் ஆக விங்ஙனந் தோன்றப்பட்ட காலமூ நியதியுங் கலையும் வித்தையுமாகமுங் கூடின சமூகத்திலுண்டான புருட தத்துவத்தைச் சாதாக்கிய தத்துவங் காரியப்படுத்தியும் வருமென்பதை நூல்களிலுலுமநுபவத்திலுங் கண்டுகொள்க. இவையிற்றுக்கு. பி-ம். "காலநியதி கலைசத்திதானடத்து, மெலும் வித்தை வித்தையரா கம்மீசர் - சாலவே, மாயை சிவம்புரு

டன் சாதாக்கிய மேவி, நேயமுட னடைத்து நின்று." எ-து. கண்டுகொள்க.

இனி யிந்த வித்தியாதத்துவ மேழாலும் ஆன்மதத்துவ மிருபத்துநாலுங் காரியப்படும்வகை யெங்ஙனே யென்னில் கலையானது முற்கூறிய பிரகிருதி மாயையை யெழுப்பி யதிலே நின்றுங குணங்களைத் தோற்றுவிக்க அந்தக் குணங்களிடமாக வந்தக் கரணங்களு மிந்திரியங்களும் விடயங்களும் பூதங்களு மொன்றிலே யொன்றுகத் தோன்றி விரிக்கவதரத்து அந்தக கலையானது சித்தத்துக்கு மூட்கருவியாய் நின்று போகங்களிலே நினைவை யெழுப்பியும் நியதி புத்திக்கு மூட்கருவியாய் நின்று போகங்களை நிச்சயித்து அறுதிப்படுத்தியும் வித்தை டாங்காரத்துக்கு மூட்கருவியாய் நின்று போகங்களிலே யறிவை யெழுப்பியும் அராக மனதுக்கு மூட்கருவியாய் நின்று போகங்களிலே யாசையாகப் பற்றியும் புருடன் இந்திரியங்களை யெழுப்பிப் போகங்களைப் புசிப்பித்தும் பிரகிருதி போகங்களிலே யழுத்துவித்தும் காலமிவையெல்லாவற்றையுங் கூட்டியும் வருகையாலப்படிச் சொன்ன. தெனவறிக. என்றிங்ஙனம் பொருட்கூறிவந்த வகையிற் கலை சித்தத்துக் குட்கருவியென்றும் நியதி புத்திக் குட்கருவியென்றும் வித்தை யாங்காரத்துக் குட்கருவியென்றும் அராக மனத்துக் குட்கருவியென்றும் சொன்னதற்கு வழியெதெனிற் "அந்தக்கரணங்களின் குணம் நினைந்தாராய்ந்து துணிந்து செயல் மனந்து" எ - ம். "நியதி சித்தித்தாராய்ந்து துணிந்து செயற்படு மந்தக்கரணவமைக்கரும்." எ-ம். நூல்களிற் சொல்லிவருகையாற் சித்த நினைவை யெழுப்புங்கருவியாயும் ஆங்கார மறிவைமேலிடுவிக்குங் கருவியாயும் புத்தி நிச்சயிக்குங்கருவியாயும் மனது பற்றுங்கருவியாயும் இவையிற்றுக் குட்கருவியென்ற கலையும் வித்தை

யும் நியதியும் ஆாகமும் நிற்கும் வகையாவது கலை யாண வமலத்தைச் சிறிதேநீக்கி யறிவை யெழுப்புங் கருவியாகை யாலும் வித்தை யறிவை மேலிடுவிக்குங் கருவியாகையாலும் நியதி நிச்சயிக்குங் கருவியாகையாலும் அராக மாசையை யெழுப்புங் கருவியாகையாலு மப்படிக் கூறப்பட்டதென வறிக. என்னு மிவையிற்றுக்கு. பி-ம். இந்நூலில் "அசுத்தமா யை, வைத்தகலைதான்மூல மலஞ்சிறிதேநீக்கி, மருவும் வகை தொிவிக்கும்." எ - ம். சித்தியாரில் "சித்தமா மவ்வியத்தஞ் சிக்தனை யதுவுஞ் செய்யும்." எ - ம். வருமது கலையுஞ் சித்த மூம் நினைவை யெழுப்புங் கருவி யென்பதற்குக் கண்டுகொ ள்க. இனி வித்தையு மாங்காரமு மறிவை மேலிடுவிக்குங் கருவியென்பதற்கு. பி - ம். "வித்தை, யுயர்கலை யதனிற்றோ ன்றி யறிவினை யுதிக்கப்பண்ணும்." எ-ம். "ஆங்காரம் புந்தி யின்கண் ணுதித் தகங்தைத்குவித்தா, யிங்கார்தா னென்றெ டொப்பார்." எ - ம். வருமது கண்டுகொள்க. இனி நியதியும் புத்தியும் நிச்சயிக்குங் கருவியென்பதற்கு பி-ம். "நியதிபின் றோன்றிக்கன்ம நிச்சயம் பண்ணிநிற்கும்." எ-ம். "புத்தியவ் வியத்திற்றோன்றிப் புண்ணியபாவஞ் சார்ந்து, வத்து நிச்சய மூம் பண்ணி." எ-ம். வருமது கண்டுகொள்க. இனி மனதும் அராகமும் ஆசையைப் பற்றுவிக்குங் கருவி என்பதற்கு. பி-ம். "விச்சையி லிராகந் தோன்றி வினைவழி போகத்தின்க, னிச்சையைப் பண்ணிநிற்கும்." எ - ம். "மனமது தைசதத் தின் வந்தொரு பொருளை மூந்தி, நினைவதுஞ்செய்து." எ-ம். வருமது கண்டுகொள்க. ஆகையா லந்தக் காணங்க ளைலுக் குஞ் சித்தத்துக்குக் கலையும் ஆங்காரத்துக்கு வித்தையும் புத்திக்கு நியதியும் மனத்துக்கு அராகமும் உட்கருவியாய் நிற்குமென்பதை யிறபவத்தாற் கண்டுகொள்க.

இனிச் சுத்ததத்துவங்க ளைந்தும் வித்தியாதத்துவங்க ளேழையுங் காரியப்படுத்து மென்றும் வித்தியாதத்துவ மெழும் ஆன்மதத்துவ மிருபத்தொராலையுங் காரியப் படுத்துமென்றுஞ் சொன்னதற்கு வழியெதென்னில் சிவதத்துவ மைந்தும் பிரேரகாண்ட மென்றும் வித்தியாதத்துவ மேழும் போகசயித்திரிய காண்டமென்றும் ஆன்மதத்துவ மிருபத்தொராலும் போக்கிய காண்டமென றுஞ் சொல்லுகையா லப்படிச் சொல்லப்பட்ட தெனவறிக. இதற்கு. பி-ம். சித்தியாரில். "ஐந்து சுத்தத்தின் கிழே ழுசுத்தாசுத்தம சுத்தந், தந்திடும் புமான்கி ழெண்மூன் ருயதத்துவஞ் சீவர்க்கு, வந்திடும் பிரேரகாண்ட மருவுபோக சயித்திரியத்தோ, டைந்தமி லணைக்களுக்குப் போக்கிய காண்டமாமே." எ-து. கண்டுகொள்க.

இனி வித்தியாதத்துவ மேழும் ஆன்மதத்துவ மிருபத்தொராலையுங் காரியப்படுத்துமென்பதற்கு பி-ம். சித்தியாரில். "வாயாதி சோத்திராதி புறத்துவாழ் கருவியாகு, மோயாத மனதிகாயத் துணருமூட் கருவியாகு, மாய்வார்கட் காதி யவற்றினுட் கருவியென்பர், மாயாடன் வயிற்றிவற் றுற் றுடக்குண்டு வாழுமான்மா." எ-து. கண்டுகொள்க.

இனி சிவசத்திகளாலே யிந்தத் தத்துவங்க ளொன்றை யொன்று காரியப் படுத்துமென்றும் அப்படிக் காரியப்பட்டுத் தோன்றுமிடத்துச் சுத்தமாயையாலே யசுத்தமாயை காரியப்படுமிடத்து அதிலே பிரகிருதி மாயையான து ஆன்மதத்துவ மிருபத்தொராலுக்கு மூபாதானமாகத் தோன்றுமென்று மற்றுள்ள தத்துவங்களு மவையிற்றிலே தோன்றுமென்றுங் கூறியதற்கு. பி-ம். சித்தியாரில். "விந்துவின் மாயையாகி மாயையி னவ்வியத்தம், வந்திடும் விந்துதன் பால் வைகரியாதிமாயை, முந்திடு மாகமாதி மூக்குண மாதிமூலந், தந்திடுஞ் சிவனவன்றன் சந்நிதி தன்னிலென்றே." எ-து. கண்டுகொள்க.

இங்ஙனம் பிரகிருதி மாயையை யவ்வியத்தமென்றும் மூலமென்றும் பெயர்கூறிய தேதென்னில் பிரகிருதிமாயைக்கு மூலப் பிரகிருதி யென்றும் அவ்வியத்தமென்றும் புமானென்றும் மானென்றும் மாயையென்றும் உள்ளமென்றும் ஆன்மதத்துவ மென்றும் பெயராகையா லப்படிச் சொன்னதெனவறிக. என்றிங்ஙனங் கூறிவந்த வகைகளா லான்மாவொரு விடயத்தைக் கொள்ளுமிடத்துப் பதினெட்டுக் கருவியுங் கூடியே புசிக்கவேணு மென்பதை யநுபவத்தாற் கண்டுகொள்க.

இங்ஙனம் பொருட்கூறி வந்த விந்தச் செய்யுளின் மூதற்பதமாகிய மருவிய கூடி யொருபுலனுகரும் என்ற பதத்தை ஐக்கியவாதியை நோக்கி மறுத்துக் கூறிய தென்னவுமாம். அஃதெங்ஙனேயென்னில் உணர்த்து முறைமைக்குச் சொல்லுமிடத் தாணவமலத்தான் மறைப்புண்டு கிடக்கு மான்மாவைச் சிவன் மாயாகருவிகளைக் கூட்டியுணர்த்துவ னென்றமையா லப்படியானவமலமென்ப தொன்றில்லை மாயாகருவிகளே யான்மபோதத்தை மறைக்குமென்பது ஐக்கியவாதிகருத்தாகையால் மாயாகருவிகள் கூடியே யான்மபோதம் ஜீவிக்குமென்று இந்தப் பதம் நடக்கையா லவனை மறுத்துக் கூறினதென்ற தெனவறிக.

இனி யந்த வொழுங்கொழிந துயிருமொன்றைத் தெரிவுரு தென்றபதமும் அவிகாரவாதியை நோக்கி மறுத்துக்கூறின தென்னவுமாம். அஃதெங்ஙனே யென்னில் அவனென்மாதானே யறியுமென்று சொல்லுகையால் இந்தப்பதங் கருவிகள் கூடியே யான்மாவறியு மென்றமையா லவனை மறுத்ததென்ற தெனவறிக.

இனி யவலெழுந் தத்திரள்களுஞ் செயலிலாவே யென்றபதமும் சங்கிராந்தவாதியை நோக்கி மறுத்துக்கூறின தெ

ன்னவுமாம். அஃ தெங்ஙனே யென்னில் அவனென்மா வறி யாது கருவிக ளறியுமென்று சொல்லுகையா லிந்தப்பத மா ன்மாவைக் கூடாமற் கருவிக ளறியாதென்று மறுத்துக் கூறு கையால் அவனே மறுத்த தெனவறிக.

இந்த மூன்றுவகைக்கு முதாரணம் சங்கற்ப நிராகர ணத்திலே கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது சிவ னென்மாக்களே யுணர்த்து முறைமையி லான்மாக்கள் பதினெட்டுக் கருவிகள் கூடியறி யுமென்றுங் கருவிகளைக் கூடாம லான்மா வறியாதென்று மான்மாவைக் கூடாமற் கருவிகள் தாமாக வறியாதென் றுஞ் சொன்ன முறைமையை யறிவித்தது. (கங)

வேறு—இனிச்செய்யு ளந்திர லந்தாஞ் சூத்திரமான உணர்த்துந் தன்மையை யுணர்த்துவான் றொடங்கினர்; அவ ற்று ளஃ தாத்மா வொருபுலனை நுகர்தற் கித்துணைக் கருவி வேண்டுமென்ப துணர்த்திற்று.

மருவிய பொறியி லொன்றும் - தத்தமக்கான விடயங்க ளைப் பொருந்திய சோத்திராதிகளி லொன்றும்,—மாபூத மைந்தி லொன்றும்-பெரியபூதங்க ளைந்தி லொன்றும்,—கரு விக ணென்றும் - அந்தக் கரணங்க ணென்றும்,—நீங்காக் கலா தித ளைந்தும் - விட்டு நீங்காத கலாதித ளைந்தும்,—கூடி யொருபுல னுகரும் - ஆகப் பதினென்றுந் தம்மிற்கூட வாத்மா வொரு விடயத்தைப் புசிக்கும்,—இந்த வொழு ங்கொழுங் தியிரு மொன்றைத் தெரிவுரை-இந்த முறைமை யொழுங் தாத்மாவு மொன்றை யறியமாட்டாது,—அவனது ழுங் தத்திரள்களுஞ் செயலிலாமே - அவ் வாத்மாவை யொ ழுங் தந்தத் தத்துவங்களுஞ் சேட்டிக்குஞ் செயலுடையன வல்ல. எ - று.

இலவென்னும் பன்மை விணைக் குறிப்பு மூற்றுச் சொல் லீறு திரிந்து நின்றது. கூடியென்னும் விணையெச்சங் கார ணப் பொருட்டாய் நின்றது. கலாதிக ளைந்து மென்பதனை க் கலாதிகளு மைந்துமெனப்பிரித்துக் கலாதிகளைழுஞ் சுத்த தத்துவமைந்துமென் றுரைப்பாருமுளர். அது பொருந்தா மையறிக. என்னை? முன்னும்பின்னு மும்மைவிரிய நடுவேவதொ குதல் சிறப்பன்மையானு மாயை யுபாதானமாகையானும் புரு டனை யெவகையா லுறுபயன்க ளுகரவருங்காலமென் றிவ் வாசிரிய ரொதினமையானு மிவ்விரண்டு மத்துணைச் சிறந்த கருவிகளல்லவென்பதை நோக்கி நீங்காமை யடைகொடுத்த திவ்வைந்திற்குமே சிறப்புடைமையானுஞ் சிவதத்துவ மைந் தும் வாக்குத்துவாரத்தா லறிவித்தலன்றி மூப்பத்தொருதத் துவங்கள்போலுங் கருவியன்மையானு மங்ஙனம் பகுத்த லாசிரியர் கருத்தன்மையறிக.

அப்படி யான்மாவுங் கருவிகளுந் தம்மிற்கூடு மறியுமா ற்றுற் கத்தா வுணர்த்துவனென்பா னேனென்று வினவின மானவகணோக்கி யருளிச்செய்வா னெடுத்துக்கொண்ட ருளியது.

தனக்கென வறிவிலாதான் றுணிவை யறிந்துசாரான் றனக்கறி விலாதவாயி றுனறி யாதுசாரா
தனக்கென வறிவிலாதான் றத்துவ வன்னளருபன் றனக்கென வறிவாணவிச் சகலமு நுகருந்தானே. கச
தத்துவஞ் சடமுயிர் தானுவறியா
தெதத்துணர்வ தபதி யுணர்வாலென்றது

(இ-ள்.) தன ஒருத்த ரறிவியாமற் றனக்கெனவோ க்கென வறிவி ரறிவில்லாத வான்மா அதீதப்பட்டுகிடகு

ஸாதான் முனி மவதாரத்துத் தாலுக விந்தத்தத் துவங் ளையறிந்து சா கனைக்கூடி யறியமாட்டான் ரான்

தனக் கறிவி லாதவாயி ருன றியாதுசாரா

தனக்கென்ன வொருகாலத்திலு மறிவ ற்று ஜடமாயிருக்கப்பட்ட விந்திரியங்க ளதீதப்பட்டுக்கிடக்கிற வான்மாவையறி ந்து கூடமாட்டாது. அப்படியாலும்

தனக்கெனவ றிவிலாதான் றத் துவ வன்ன ரு பன்

தனக்கென்ன வோரறிவில்லாத வான் மா பஞ்சவன்னங்களினயடுத்த படிகம்போ லத் தத்துவங்களினது சொரூபமே தன க்கு வடிவாய்நிற்பன். இப்படிக் கூடினதி ன்றன்மையாய் நிற்கிறவ ரூகையாற் றற்சு தந்தரமுள்ளவனல்ல. ஆ ரூவினைவதன்னிற் கூடியறிந்தபடி யெங்ஙனெயென்னில்

தனக் கென வறிவாலுலிச் ச கலமு நுகருந் தானெ.

தனக்கொருவ ரறிவியாமற்ரூனெ சர்வ த்தையு மறியத்தக்க சிவரூலே யான்மா சர்வத்தையுமறிந்து ஜீவியாநிற்பன். எ-று. ஆன்மா சர்வத்தையு மறிவனென்றது அந் தக்காணங்களோடுஞ் சேராத்திராதிக ளோடுங்கூடிச் சுத்தாதிகளேயறிவனென்ற தெனவறிக.

நு-ம். ஆன்மாவைத்தனக்கென வறிவிலாதானென்றது அதீதப்பட்டுக்கிடக்கு மவதாரத்துச் சரீரசம்பந்தரூயிருந்து மொனறையு மறியாமற் கிடக்கையிரூலெனவறிக. இதற்கு. பி-ம். சிவஞானபோதத்தில் “அவ்வுடலி னின்றுயிர்ப்ப வைம்பொறிக ளாங்கிடப்பச், செவ்விதினவ்வுடலிற் சென்றடங்கி” எ-து. கண்டுகொள்க.

இனி கருவிகளை ஜடமென்றது மப்படியொன்றையு மறியாமற் கடக்கையிலு லெனவறிக.

இதலுற்சொல்லியது ஆன்மாவுக்குத் தனக்கென வோ ரறிவில்லாதபடியாலே தாலுகத் தத்துவங்களைக் கூடி யறியமாட்டாதென்றுங் கருவிகள் ஜடமாகையாலே யவைதா லுக வான்மாவைக்கூடி யறியமாட்டாதென்று மிவையிரண் டையுங்கூட்டிக் காரியப்படுத்துவது சிவனேயென்றும் வரு முறைமையை யறிவித்தது. (கசு)

—o—

வேறு—இது அப்படி யாத்மாவுங் கருவியுங் கூடி யறி யுமாயிற் கருத்தா வெண்டுமோவென்று வினவியதற் குத்தர மூளர்த்திற்று.

தனக்கென வறிவிலாதான் ருனிவை யறிந்துசாரான்— தனக்கென வோரறிவில்லாத வாத்மா ஒருவ ரறிவியாமற்ரு னேயிந்தத்தத்துவங்களை யறிந்து கூடமாட்டான்,—தனக் கெனவறிவில்லாதவாயி ருனறியாசார - தனக்கெனவறிவில் லாத சடமான விந்திரியந் தாலுக வாத்மாவைக் கூடவறி யாது,—தனக்கென வறிவிலாதான் றத்துவவன்ரூபன்-இத் தன்மையலுன வவன் றத்துவங்களுடைய வன்னமே தனக் குச் சொரூபமாய் நிற்பன்.ஆலு லிவ னிவைகளா லெப்ப டிப் புசிப்பனென்னில்?—தனக்கென வறிவாலு லிச்சகலமு நுகருந்தானே - சுதந்தர வறிவையுடைய சிவலுலே யிவை யெல்லாவற்றையு மறிந்து கூடி புசியாநிற்பன். எ-று.

பின்வந்த தனக்கென வறிவிலாதா னென்பது அவனை ன்னுஞ் சுட்டுப் பெயர்த்தன்மைத்தாய் நின்றது. தனக்கென வறியாலுலென் ரு துவாருமுளர்.

அப்படி யான்மாவையுங் கருவிகளையுஞ் சிவனை கூட்டி

யறிவிப்பனென்கிற தென்ன சிவன் விகாரமறநிற்க வவனரு ளைக்கொண் டான்மாத்தானை சுட்டியறிந்து வருமென்கிற அவிகாரவாதியையும் அப்படியல்லவென்று ஆன்மாவுக்காக ச் சிவன்ருனை பிரபஞ்சத்தைச் சுட்டியறிந்து நிற்பனென்ற பரிணமவாதியையு மறுத்தருளிச்செய்வா னெடுத்துக்கொ ண்டருளியது.

கண்டறி புலன்கள்காணுங் கருத்திரு லொருத்த ன்ருரைங், கொண்டுள மறியுமென்னிற் கொள்பவன் முதலியாகு, மண்டிய வுணர்வுயிர்க்கா மன்னிநின் றறி யுமென்னி, லுண்டிட வேண்டுவா னுக்கொருவன்வே றுண்டலா மே. (கஞ)

இப்பரிசன்றி யிகலுறுசமயிகள்
செப்பியமொழியைத் தப்பெனமறுத்தது.

(இ-ள்.) கண்டறி புலன்கள் காணுங் கருத்திரு ல் கண்டுகேட்டுண்டுயிர்த் துற்றறியப்பட்ட விந்திரியங்களைக் கொண்டு ஆன்மா தனக்கேகற்ற விடயங்களைக் கொள்ளுமு றைமைபோல

ஒருத்தன்ருனங்கொண்டுள மறியுமென்னில் எங்குந்தா னொருவனுமாய்நின்று சர்வான்மாக்களுக்கு முயிர்க்குயிராயுநின்று செட்டிப்பிக்கிற சிவனுடைய ருானத்தைக்கொண்டு ஆன்மாவறியுமென்று நீசொல்லில்

கொள்பவன் முதலியாகும் என்றிங்ஙன மறிந்துகொள்ளுகிற வான்மாவே கர்த்தாவாவன். அப்படியல்ல வான்மாவுக்காகச் சிவனறிவனென்ற பரிணமவாதியை மறுத்தருளிச்செய்கின்றது

மண்டியபுணர்வுயிர்க்காமன்னினை றறியுமெ ன்னில் — சிவனுடைய மிகுத்தஞானமான தான் மாவுக்காக நிலைபெற்றறியுமென்று நீசொல்லில்

உண்டிட வேண்டுவானுக்கொ ருவனே வுண்டுலாமே. — பசித்திருப்பா லொருவனுக்காக வயலி லொருவனுண்டானென்னுந் தனைமக்கொ க்கும். எ - று. ஆதலாற் சிவனுடைய ஞானத்தைக்கொண்டான்மா முதன்மையாக நின்றறிவதுமில்லை யான்மாவுக்காகச் சிவனறிந்து நிற்பதுமில்லை பென்பதாகருத்து. என்னவே சிற்றறிவாயுள்ள வான்மாவைப் பேரறிவாயுள்ள சிவனறிக்க வந்தவறிவே யாதாரமாக வான்மாவறிவனென்ற தெனக்கொள்க. இதற்கு பி-ம். திருவாசகத்தில் "அவனருளாலே யவன்முள்வணங்கி." எ - ம். தேவாரத்தில் "காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக்கா லே" எ - ம். வருமேதுக்களைக்கண்டுகொள்க.

உ - ம். ஆன்மாவிந்திரியங்களைக்கொண்டு விடயங்களை யறிந்தாற்போலச் சிவன்விகாரமறநிற்க வவனருளைக்கொண் டான்மாமுதன்மையாக நின்றறிவனென்று அவிகாரவாதிசொன்னதற்கு. பி - ம். சங்கற்பநிராகரணத்தில் "கீர்நிழலனைய சீர்பெருகடவுள் - சலமிலருகிச் சார்ந்தவர்க்கென்று - மலமிகநல்கு நாதனையணைந்து - பூழிவெம்மை பொருந்தாதுயர்ந்த - நீழல்வாழு நினைவினர்போலத் - திருவடிநீழல் சேர்ந்து - கருவுறுதுயரங் களைந்திருந்திடுமே" எ - து. கண்டுகொள்க.

இது வத்தமாகாதென் றவனை மறுத்ததற்கு. பி-ம். சங்கற்ப நிராகரணத்தில் "பாதவமென்னுஞ் சேதனமின்மையி-னினைந்தோர்வம்மி னென்பதுந்தன்டம் - வினைந்தோர் தம்

மின் வெறுப்புமொன்றிலதே - பொடித்திடுகொப்புள் வெடித்திடுபாதம் - வெய்யபூழியி னுள்ளுறவழுங்கி - யாற்றுதலின்றி யாறியங்கினர்முன் - ரூற்றிடுமென்று சொல்லவுமிலதா - லிவ்வகைக்கடவுட் கியம்புதறவறே.” எ - து. கண்டுகொள்க.

ஆன்மாவுக்குச் சிற்றறிவுதாணுமில்லை யவனுக்காகச் சிவனறிவுமென்று பரிணமவாதி சொன்னதற்கு. பி - ம்.*சங்கற்பநிராகரணத்தில் “அறிவான்ரூணு மறிவிப்போனு - மறிவாயறிகின் ரூணுமறிவுறு - மெய்ப்பொருடானும் வியக்கிதுவெனப்படு - மப்பொருளியாவு மவனேயென்றும்” எ - து. கண்டுகொள்க.

இது வத்தமல்லவென் றவனே மறுத்ததற்கு பி - ம். சங்கற்பநிராகரணத்தில் “அறிவான்றில்லோர்க் கிறையருளுதவல்- பிறிவறிவரிய செறியிருளிடத்தோ - ரந்தகர்க்காணு வந்தோரெம்மை - நீயிருங்காண வேணுமென்றுங் - கெடுத்தோர்நீபங் கொடுத்ததையொக்கு - மிச்செயற்கிறைவன் கொச்சையனன்றே” எ - து. கண்டுகொள்க.

இதற்சொல்லியது சிவன் விகாரமறநிற்கச் சிவனுடைய ரூனத்தைக்கொண் டான்மாவறிவனென்ற வவிகாரவாதியையு மப்படியல்ல வான்மாவுக்காகச் சிவனறிகறென்றவிய வான்மாவுக்கென்ன வொருசிற்றறிவுதாணு மில்லையென்கிற பரிணாம வாதியையு மறுத்தமுறைமையை யறிவித்தது.

வேறு—இது ஆத்மாவானது சிவனறிவுகொண் டறியுமென்றுஞ் சிவன்முனை யவனுக்காக வறிவனென்றுஞ் சொல்லுஞ் சமயிகளை மறுத்துணர்த்திற்று.

கண்டறிபுலன்கள் காணுங்கருத்திலல் - லணுபவித்தறி
கின்ற பொறிகண்மனத்திலேவிடயங்களை யணுபவியாநிற்

ருமதுபோல,—ஒருத்தன் ஞானங் கொண்டுள மறியுமென்னில் - ஆத்மா வானவ ரெறப்பில்லாத சிவனுடைய ஞானத்தைக் கருவியாகக்கொண்டு சகலத்தையு மறிவனென்று விகாரவாதி சொல்லில்,—கொள்பவன் முதலியாகும் - கொண்டறிகின்ற வாத்மாவே கருத்தாவாவன்,— மண்டிய வுணர்வுயிர்க்காய் மன்னினின் றறியுமென்னில் - சிவனுடைய மிகுத்த ஞானமானது ஆத்மாவுக்காக நிலைபெற்றுநின் றறியுமென்று சங்கிராந்தவாதி சொல்லில்,—உண்டிட வேண்டுவானுக்கொருவன் வேறுண்டலாமே - பசியாலுண்ணவேண்டிய ஒருவனுக்காக வேறொருவ னுண்டலையொக்கும். எ - று.

உளம் ஆத்மா. கண்டு அநுபவித்தற்குத் தன் மாத்திரைகளோ டொற்றுமையுண்மையிற் பொறியும் புலனெனவாகுபெயராய்நின்றது. திருப்புல னைந்திரமிலாஞ் சினையெழுதுவினைப்-புகழ்ச்சிப்புலவர் பொறியெனப்புகல்வ ரென்பதனு மறிக. கண்டறி புலன்கள்காணுங் கருத்திரு லென்பது எடுத்துக்காட்டுவமை. இனி இந்தப்பதத்திற்கு ஆதமா விந்திரியங்களாலே புலன்களைக் காணுகிற்கும். அதுபோலென்றும், ஆத்மாவினுடைய ஞானத்தைக்கொண்டு பொறிகள் புலன்களைக்கண்டறியும் அதுபோலென்றும், மூன பிந்திரியங்களாலே கண்டனுபவித்த விடயங்களைப் பின்பு மந்தவிந்திரியங்களாலே காணவேண்டுன வுண்மைபோலவென்று முறைப்பாருமுளர். உயிர்க்காகவெனத்திரிக்க.

இப்படியே சிவனறிவிக்கச்செய்தே யந்தச் சிவன்செய்விக்கிறதை யறியாமலான்மாக்கள் நான்செய்தேன் பிறர்செய்தாரென்று சுட்டிக்கொண்டந்தச்சிவனையிழந்து நிற்கிறமுறைமை யெப்படியென்று வினவின மாணவகனைநோக்கித் திருவுள்ளமுகமாகவருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

இருணனி யிரவிதான்வந் திரித்தலு மிரவிலெண்ணும்
பொருணிலை கண்டுமாந்தர் பொருந்திடு மாறுபோல
மருணிலை யெங்குநீங்க மகிழ்ந்துயிர் தன்னுண்மன்னு
மருளையுமொழியவுலகத்தறிந்தவாறறியுமன்றே.(கசு)

பருதியுதவியைப் பாரறியாதோ
லருளுதவியையுயி ரறியாதென்றது.

(இ - ள்.) இருணனி யிரவிதான் வந் திரித்தலும் இரவிலெண்ணும் பொருணிலை கண்டுமாந்தர் பொருந்திடுமாறு போல மருணிலை யெங்குநீங்க மகிழ்ந்துயிர்த் தன்னுண்மன்னு மருளையுமொழிய வுலகத்தறிந்தவாறறியுமன்றே.

இருளினது பிருதியையாதித்தன்வந்து நீக்கினவிடத்து

ஆன்மாக்க ளிராக்காலத்தில் விசாரித்த காரியங்களெல்லா மவன் சந்நிதியிலே கண்டு தந்தாந் தொழில்களைச் செய்யுமிடத் திந்த வாதித்தன் காட்டவல்லோ நாங் கண்டோமென நினையாமலந்த வாதித்தனை யிழந்து நின்று தங்கள் சாமர்த்தியமாகக் கண்டு செய்து வருமாறு போல

ஆணவமலத்தின் மறைப் பெவ் விடத்தி னும் விட்டு நீங்க விருப்பத்துடனே யான்மா வி னிடத்திலே நிலைபெற்றுப் பிரகாசிக்கிற வருளாலே யான்மாக்க ளறிந்து ஜீவித்து நிற்க விந்த வருளாலொழிந் தறிந்து புசிக்கக் கூடா தென்றறியாமற் முந்தாஞ் சாமர்த்தியத்தாலே யல்லோ வறிந்து புசிக்கிறோமென்று விசாரித்திருக்கின்றது எப்படியென்னில்

முன்சொன்னபடியே பிரபஞ்சத்தி லான்மாக்க ளாதித்தன் சந்நிதியிலேகண்டுந் தந்தாந் தொழில்கள் செய்யச்சேயு மந்தவாதித்தனையி

முந்துநின்று தாங்கள்செய்தோமென்னு முறை
மைபோலும். எ-று.

நு-ம். மருணிலை யெங்குநீங்க வென்றது ஆன்மாக்கள் புசி
க்குமிடமெங்கு மவதரந்தோறு மல நீங்குமென்ற தெனவறிக.
இதற்கு பி - ம். "நிலைக்குணங் கணந்தோறு மவத்தை நீடுதல்."
எ-து. கண்டுகொள்க.

இதனுற்சொல்லியது சர்வான்மாக்களு மாதித்தனுலே யிரு
ளானதுநீங்கத் தந்தாந்தொழில்கள் செய்யச்சேயு மவனை யிழந்து
தாங்கள் செய்தோமென்னுந் தன்மைபோலச் சிவனுலேயறிந்து
சர்வமும் ஜீவிக்கச்செய்தேயு மந்தச்சிவனை யிழந்து தாங்கள்செ
ய்தோமென்று நிற்கிறது மத்தன்மைக்காகுமென்னு முறைமை
யை யறிவித்தது. (கசு)

வேறு—இது அப்படிக்கூடிநின் றுணர்த்துவிக்குஞ் சிவனை
யிழந் தாத்மாக்கள் யான்செய்தேன் பிறர்செய்தாரென்று நிற்கு
முறைமையை யொருதிஷ்டாந்த பூர்வமாக வுணர்த்திற்று.

இருணனி யிரவிதான்வந் திரித்தலு மிரவிலென்னுமொ
ருணிலை கண்டுமாந்தர் பொருந்திடு மாறுபோல-ஆதித்தன்வந் த
ருளின மிருதிணைத் தூரப்ப வவ்விராக்காலத்திலே விசாரித்த கா
ரியங்களை மானிடர்கண் டவ்வவர் தொழில்களிலே யவனுதவி
யறியாமற் பொருந்து முறைமைபோல,—மருணிலை யெங்குநீங்க
மகிழ்ந்துயிர் - ஆத்மாவானது மனத்தினிலைமை புலன்களை யறி
பவிக்குமிட மெங்குங் கலாதிகளாலே நீங்குதலின் மகிழ்ச்சிபெ
ற்று,—தன்னுண்மைமன்னு மருளையுமொழிய ஞாலத்தறிந்தவா
றறியுமனமேறை - அம்மலத்தினீக்கம் பண்ணுவித்துத் தன்னுளை
பொருந்துந் திருவருளையும் விட்டுப் பூமிக்கண்மேனை தாழைகவறிந்
தாற்போல வறியும். எ-று.

அருளையு மென்புழியும்மை சிறப்புப்பும்மை. இதற்குப் பிரவாது மூனைப்பார்.

இந்தவத்தத்தை யின்னமு மொருவநுபோக திருஷ்டாந்த மாக வருளிச்செய்கின்றது.

அறிந்திடு மறுதிவாயி லானவை யவன்றனுலே,
யறிந்திடு மென்றுமொன்று மறிந்திடா வவைபோலி
யாவு, மறிந்திடு மறியுந்தன்மை யறிந்திடா கன்மத்
தொன்மை, யறிந்தவை நுகறுமாறு மருளுவ னமல
ன்றூனே. (கள)

பொறியுங்கரணமும் போலுயிரருளா
லறியுந்தன்மை யறியாதென்றது.

(இ-ள்.) அறிந்திடுமறுதி வாயிலானவை — யாதாமொன்றை யறியத்தக்க வந்தக்கரணங்களு மிந்திரியங்களு மென்று சொல்லப்பட்ட கருவிகரணங்கள்

அவன்றனுலே யறிந்திடும் . — ஆன்மாவினுலே பிரபஞ்சவிடயத்தை யறியாநிற்கும். அப்படியறியச்செய்தேயும்

என்றுமொன்று மறிந்திடா அவைபோல் — எக்காலமு மான்மாவினுலேயல்லா நாமநிகேரூமென்றந்தக்கரணங்களு மிந்திரியங்களுஞ் சிறிதுமறியமாட்டாது. தனக்குக்காட்டாக வுள்ளவான்மாவை யந்தக்கருவிகரணங்க ளறியாதிருந்தாற்போல

யாவு மறிந்திடு மறியுந் தன்மை யறிந்திடா — சர்வான்மாக்களுந் தங்களுக் கறியவேண்டிய தெல்லாஞ் சிவனுடைய ஞானத்தாலே யறிந்து புசியா நிற்கச்செய்தேயு மந்த வருளாலே யல்லாலோ வறிந்து புசிக்கவேரூமென்றறியமாட்டார்கள். ஆகையா லதுவுமன்றி

கன்மத்தொன் பழையதாக வூட்டுகிற கன்ம பலன்களையு
மையறிந் தவை மான்மாக்கள் தானே யறிந்து புசிக்கமாட்டா
நுகரு மாறு மரு ர்கள். அதுகொண்டே பலவகையிற்றைப் புசிக்
ருவ னைமலன்ரு கிற முறைமைகளையுங் கூட்டுவ னிமலனாகிய
னே. சிவன்ரு னே. எ - று.

நு - ம். கன்மத்தொன்மை யறிந்தவை நுகருமாறு மருளுவ னைமலன்ரு னே. எ-து. சைவ ரத்தத்தை மறுத்தவென்னவுமாம். அஃதெங்ஙனேயென்னில் அவர்க ளநாதியுள்ள கன்மங்களைப் புசிக்குமிடத்து ஆன்மாக்கள் தானே யறிந்து புசிக்குஞ் சிவன்கூட்ட வேண்டுவதில்லை யென்கையாலெனவறிக. அஃதாவது சிவனென் மாவையுங் கருவிகளையுங் கூட்டினற் பின்னைத் தானே ஜீவிக்குமென்பது கருத்து. இதற்கு. பி-ம். சங்கற்ப நிராகரணத்தில் "அண்ணல் - களமுதலாக நிலவிய கருவிகள் - விளக்கெனவுதவுந் தளக்கறப்பொருந்தி - யிருவினை நுகர்வில் வருவினைசெய்து - மாறிப் பிறந்து வருநெடுங்காலத்து." எ-து. கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது அந்தக் கரணங்களு மிந்திரியங்களு மான்மாவினாலே யறிந்து புசிக்கச்செய்தேயு மந்த வான்மாவினாலே யல்லாவறிகிறமென் றறியாதாற்போல வான்மாக்களுஞ் சிவனாலே யறிந்து ஜீவிக்கச்செய்தேயு மந்தச் சிவனை யிழந்துநிற்கிறது மப்படியென்னு முறைமையை யறிவித்து. (கள)

வேறு—இதுவுமதற்கொரு திருஷ்டாந்த முணர்த்திற்று.

அறிந்திடு மநாதிவாயி லானவை யவன்றனாலே யறிந்திடு மென்றும் - அறியத்தக்க மநாதிகளு மிந்திரியங்களு மானவைக ளவ்வான்மாவி லெப்பொழுது மறியா நிற்கும்.—ஒன்று மறிந்திடா-இப்படி யவனாலே யறிகையிலு மிவனாலன்றே வறிகின்றோமென்னுந்தன்மை யொன்றையு மறியமாட்டா.—அவைபோ லியாவும

நிந்திடும் - அவற்றை யொப்ப வாத்மாவுஞ் சிவஞானத்தாலே சக லமு மறிந்து புசியாநிற்கும்,—அறியுந்தன்மை யறிந்திடா - அவ ஞலன்மே ரு வறிகின்மே ருமென்னு முறை யொன்றையு மறியமாட் டா,—கலமத்தொன்மை யறிந்தவை நுகருமாறு மருளுவ னமல ன்ருனே-இவ்வகக் கன்மங்களை யறிந்து புசிக்கமாட்டா வகை யாலே பழுதாய தேடிவைத்த கன்மபலத்தா லெதையு மறிந் தவற்றை யிவன் புசிக்கு முறைமையினையுங் கூட்டுவ னின்மல ஞ கிய சிவன்ருனே. எ - று.

☞ ஐந்தாஞ் சூத்திரமாகிய வுணர்த்து முறைமை முற்றிற்று.

இங்ஙன முணர்த்து முறைமையிற் பிரபஞ்ச காரியப்பட்டு வரு மாண்மாக்களுக்கு மலபாகம்வந்து முத்தியுமுண்டா மாகை யா லிவ்வதிகாரத்துக்கு மேலாக வாருஞ்சூத்திரமு மேலதற் கோர் புறநடையாகிய வேழாஞ்சூத்திரமுமாகிய ஞானவாய்மையெ ன்னு மதிகாரம் வைக்கப்பட்டது.

இவ்வதிகாரத்துக்குச் சூத்திரமிரண்டு நின்றமுறைமை யெ ங்ஙனேயென்னில் "காட்டிடுங்காரணம்" என்றவிருத்தமொன்றும் ஆருஞ்சூத்திரமாகவும் "பன்னிறங்கவரும்." மாயைமாமாயை." என்ற விருத்தமிரண்டும் ஏழாஞ்சூத்திரமாகவும் நின்றனவறிக.

இதற்கு வழியேதென்னில் சிவஞானபோதத்தில் ஆருஞ்சூத் திரமாகிய "உணருருவசத்தெனி னுணரா தின்மையி, னிருதிறனல் லது சிவசத்தாமென, விரண்டுவகையி னிசைக்குமன் னுலகே." எ-கு. சத்தாமசத்தும் வரைசெய்து நிற்றலாஞ மீண்டறிவு லறி யப்பட்ட சுட்டசத்தாகையினுலும் "அறிதரும் பொருளாவிச னறிவுருதவமே ல." எ - ம். "உணராத பொருள்சத்தென்னி லொ

ரூபயனில்லை." எ-ம். சித்தியாரி லாரூஞ் சூத்திரத்தில் வருகையா யாலும் இவ்விரண்டு தன்மையுமின்றி வாக்குமலதித கோசரமா யுள்ளது சத்தாயுள்ள சிவமென்கையாலும் இந்நூலினும் "காட்டி டுங்கரணமொன்று மில்லையேற்காணுணுதா, நாட்டியவிவற்றுள் ளோனை நளுகவுமொண்ணு". எ-ம். சத்துமசத்தும் வரைசெய்து நிற்றலால் இதுவு மாருஞ்சூத்திரமாக நின்றதெனவறிக.

மற்றுள்ள விருத்தமிரண்டு மேலதற்கோர் புறனடையாகிய ஏழாஞ்சூத்திரமாக நின்றமுறைமை யெங்ஙனையெனில் சிவ ஞானபோதத்தில் ஏழாஞ்சூத்திரமாகிய "யாவையுஞ்சூனியஞ் சத் தெதிராதலிற், சத்தேயறியா தசத்திலதறியா, திருதிறனறிவுள திரண்டலாவான்மா." எ-கு. மெய்யினிடத்துப் பொய்ப்பிரகாச மாய்நிற்றலான். எ-ம். உதாரணத்திலும் "அந்நியமிலாமையற் கொன்றுணர்வின்று, மந்நியமிலானசத்தைக் காண்குவனை-லந் நியமாய்க், காணனவன் முன் கதிர்முன்னிருள்போல, மாணவசத் தின்மை மற்று." எ-ம். வருங்கருத்தால் இந்நூலினும் "பன்னி றங்கவரும்." என்றவிருத்தத்தில் "வளரொளி போலணையுங் நன் னகம் பயிலுநற்சிற், சடங்கடன் றண்மைதாவா." என்கையாலும். இனி அசத்தினுக்குணர்வின்றென்னுங் கருத்தா லிவ் விரண்டையு மறிவதா யுபதேசியாநின்றவறி விரண்டின்பாலு மூளதா யுள்ள வதுவே யவ்வான்மாவா மென்றதால் இந்நூலினும் "மாயைமா மாயை." என்னும் விருத்தம். "இருதிறனறிவுள திரண்டலா வா ன்மா." என்னுங் கருத்தைப்பற்றி "மருளெனி லிருளாய்நிற்கு மருளெனி லொளியாய்நிற்கும்." எ-ம். ஆன்மாவுக்குக் கூடினதின் றன்மைக் கருளிச்செய்கையால் இவையு மேழாஞ் சூத்திரமாம் நின்றதெனவறிக.

மேல் "காட்டிடுங் கரணம்." என்னும் விருத்தத்துக்குத் தொக்கதனையாவது இங்ஙன மிவ் வதிகாரத்தா லருளிச்செய்யப்ப

ட்ட ஞானத்தினுண்மையை யடியேன் போதங்கொண்டறியப்ப
டும் பொருளா யிருக்குமோ வறியப்படாத பொருளாயிருக்குமோ
வென்று வினவினமாணவகனை நோக்கி யருளிச்செய்வா னெடுத்
துக்காண்டருளியது.

காட்டிடுங் கரணமொன்று மில்லதேயற் காணுணர்தா
காட்டிய விவற்றுள்ளா னாநனுகவு மொண்ணுமுன்னை
மீட்டிய தவத்தினுலே யிறையருளுருவாய்வந்து
கூட்டுமிவற்றைநீக்கிக்குரைகழல்குறுகுமாறே.(கஅ)

மூற்பவத்துயிர்கள் முயன்றநற்றவத்தா
லற்புதன்றிருவுருவாவனென்றது.

(இ-ள்.) காட்டிடுங் கரணமொன்று மில்லாத பொழுது பழையவறிவுதானு
ன்று மில்லதேயற் மில்லையாய்ச் சுத்தகேவலமே முத்தியென்கிற
காணுணர்தாம் பாடானைவாதியத்தமுமாய்முடியும்

காட்டியவிவற் இங்ஙனஞ் சொல்லப்பட்ட தத்துவங்க
றுணர்ஞானநனு ளோடுங் கூடியறியுமென்னில் ஒருகாலத்து
வுமொண்ணுன் மருளிற்சென்று கிட்டவுமொண்ணுது. இதுச
ங்கியாந்தவாதியத்தமுமாய் முடியும். இந்தவி
ரண்டுவகையுமன்றி யந்தஞானத்தை யறிந்து
பெறுமுறைமை யெங்ஙனே யென்னில்

முன்னீட் ஆன்மாக்கள் முன்ஜநங்களிற் செய்த நல்
டிய தவத்தி புண்ணியத்தின் மிகுதிடாலே தம்பிரா ரா
லேயிறையருள் சாரிய மூர்த்தமாகத் திருமேனிகொண்டெழு
வாய்வந்து கூ ந்தருளிவந்து கூட்டாநிற்கும்
ட்டிடும்

இவற்றைநீக் இங்ஙனமுன்சொன்ன கேவல சகலமிர
கிக்குரைகழல் ண்டையுநீக்கி யாரவாரத்தை யுடைத்தாகிய

உன

சகஅ சிவப்பிரகாச சுவ்வியாக்யாநம்.

குறுகுமாறே. வீரக்கழல் பொருந்தின ஸ்ரீபாதத்தைச் சென்று பொருந்து முறைமை. எ - று.

உ - ம். கருவிகளெல்லாங் கழன்ற கேவலம் பாடாணவாதியத்தமாமென்று மறுத்ததற்கு. பி-ம். சங்கற்ப நிராகரணத்தில். "காட்சியென்னைக் காணுத்துயர - மாட்சியைழுத்தி யெனவுதுத் தூரைக்கிற் - கரணபாவ மரணங்கருமர - மேய்ந்தவர்முத்தி சேர்ந்தவரன்றே - யனையகதிக்கோர் மூவைவரும் வேண்டா - தனிதரு தயர மெனுமிதுதிடமே - பாடாணத்திற் கூடாமுத்தி." எ - ம். சித்தியாரில். "கரணங்கள் கெடவிருக்கை முத்தியா மென்னிற் கதியாகுஞ் சினைமுட்டை கருமரத்தி னுயிர்கள், மரணங்கொண் டிடவுறங்க மயங்கி மூர்ச்சிக்க வாயுத்தம் பணைபண்ண வல்விடத்தை யடையச், சரணங்கள புகுநிழற்போற் றனையடையுஞ் சாமாதி தவிராது மலமதுவும் பசுஞானமாகு, மரணங்களெரித்தவன்ற னழியை யறிவிரந்தங் கறிந்திடூர் செறிந்ததுக ளகற்றிடுரே." எ-து. கண்டுகொள்க.

இனி கருவிகளோடுங் கூடிநின்றறிகிற சகலஞ் சங்கிராந்தவாதியத்தமாமென்று மறுத்ததற்கு. பி-ம். சங்கற்ப நிராகரணத்தில். "நிறைந்தநீயாய் நின்றனையேயது-மறைந்தைம்புலனாய் வாராயென்றுங - கரணமெல்லாங் கழன்றனையென்று - மரணமையங் தினப்புறத்தென்று - முன்னருட்டலிலவர் பன்னினரெனவு-மினையவையொழிய வறிகுவதெவ்வா - றென்றனிற்கலிக் கொன்னியவின்பங் - கூறுதறகுமருட் பேறினையன்றே." எ-து. கண்டுகொள்க.

அன்றியு மிந்நவிருத்த மாருஞ் சூத்திரமென்பதற்கு. பி-ம். சித்தியாரில். "அறிதருபொருளாவிச னறிவுறுநவதே ரெவன்னி, லறிபொருளசித்தசத்தா மறிடாதநின்றுமெங்குஞ், செறிசிவ மிரண்டு மின்றிச் சித்தொடு சத்தாய்நிற்கும்." எ-து. கண்டுகொள்க.

இதனுற்சொல்லியது கருவிகளெல்லா நீங்கின கேவலத்தி லுயிர்க் கருவிகளைக் கொண்டறிகிற சகலத்திலுயிருஞ் சிவசொரூபத்தை யறியப்படாதென்னு முறைமையும் ஆன்மாக்கள் முற்செய்த தவத்திலுலே கத்தா வாச்சாரியமூர்த்தமாக வெழுந்தருளி யந்தவுண்மைஞானத்தைக் கடாவுதித் தருளுவனென்னு முறைமையு மறிவித்தது. (கஅ)

வேறு—இது அந்தச்சிவஞானமே குருமூர்த்தமாய்வந் திரட்சிக்குமென் முறுஞ் சூத்திரமான ஞானவாய்மை யுணர்த்திற்று.

காட்டிடுங் கரணமொன்று மில்லையேற் காணுணர்நாம்-அறிவிக்கத்தக்க கருவிகளொன்று மில்லையாயி ணுத்மாவா லொன்றையு மறியவொண்ணுதாம்,—நாட்டிய விவற்றுன்ஞான நனுகவுமொண்ணு - இக்கருவிக ளெல்லாவற்றையு மறியுமோவெனிற் சொன்னவத் தத்துவங்களாலே ஞானத்தைக்கூடவுமொன்னுது. ஆனற்கூடும்படி யெங்ஙனமெனின்,—முன்ன மீட்டிய தவத்திலுலே யிறையருளுருவாய்வந்து-முற் சன்மங்களிலே செய்த சரியைகிரியை யோகங்களின் முற்றுதலாலே யிவன் பக்குவங்கண்டு பரமசிவனருளே திருமேனியாக வெழுந்தருளிவந்து,—கூட்டிடு மிவற்றைநீக்கிக் குரைகழல் குறுகுமாறே - இந்ததத்துவங்களைப் பொருளல்லவென்று நீக்கித் தன்னுடைய சீர்பாதத்தைப் பொருந்தும்படி யடைவிப்பன். எ-று.

ஒண்ணுவெனக் கடைகுறைந்தது.

☞ இந்தவிருத்தத்தா லாறுஞ்சூத்திரமுஞ் சொல்லிற்று.

இவ் வதிகாரத்துக்குமேல் வரும் விருத்தமிரண்டும் ஏழாஞ் சூத்திரத்தின் கருத்தாகையால் மேலதற்கோர் புறனடையாகிய ஏழாஞ்சூத்திரத்தில் வைத்துக்கொண் டருளிச்செய்வா னெடுத் துக்கொண் டருளிய தது.

மேல்வரும் விருத்தத்துக்குத் தொந்தனையாவது அப்படியா சாரியமூர்த்தமாக வெழுந்தருளிவந்து கடாகூடித்தருளுகிற ஞா னமேதென்றுவினவ மேலொரு திருவுடாந்தமுமாக வருளிச் செய்வா னெடுத்துக்கொண் டருளியது.

பன்னிறங் கவருந்தான்மைப் படிகநீ டொளியும் பன்மை, மன்னிலங் கியல்புந்தந்த வளரொளி போல வையம், தன்னைகம் பயிலுநற்சிற் சடங்கடன் றன்மை தாவா, நன்னலம் பெறநிறைந்த ஞானமே ஞானமென் பாரிர். (கசு)

பன்னிறம்பளிங்கிற் பற்றிடப்பற்றுப்
பொன்னெளிபோலு மன்னருளென்றது.

(இ-ள்.) பன் னிறங் கவ ருந் தொன்மைப் படி- க நீடொளியும் — பலநிறங்களையுந் தன்னிடத்திலே கவர்ந்து கொள்ளுகிற வநாதியேயுடைத்தாகிய படிகத் தினது நிலைபெற்ற பிரகாசத்தினையும்

பன்மை மன் னிலங் கியல்பும் — அந்தப்படிகத்திலே பொருந்தப்பட்ட பல வண்ணங்களு மதிலே பிரதிபிம்பஞ்செய்து நிற்கிறமுறைமையும்

தந்த வளரொ ளிபோல — அவையிரண்டையுங் கூட்டிக் காரியப்படுத் துகிற வாதித்தப் பிரகாசம்போல

வையந் தன்ன கம் பயிலு நற்சி த் தா — பிரபஞ்சமாகிய பாசங்களையு மான்மாக்க ளையுந் தன்னுடைய சேட்டையாலே கூட்டிக் காரியப்படுத்தி நிற்குந்திருவருள் ஞானமானது

அப்படிக்கூட்டிக் காரியப்படுத்தி நிற்கச்செய்
தே முற்கூறிய வுபமானத்திற் பழுகத்தையும்
வன்னங்களையுங் கூட்டிக் காரியப்படுத்தினை
வாதித்தப் பிரகாசமும் அவையிற்றிற்றேமுப்ம
ற்று நின்முற்போல

சடங்கடன்ற ன்மைதாவா நன் னலம்பெற நிறை ந்தஞானமே ஞா ன்மென்பார்.

சடமாகிய பாசமயக்கந் நன்னவந்து பொ ருந்துதாதபடி தோய்வற நிற்ற திருவருள் ஞானத்தையே மேலான வுண்மை ஞானமெ ன்று பெரியோர்கள் சொல்லுவார்கள். எ-று.

நு-ம். பன்னிறங்கவருந் தொன்மைப் பழுகநீடொளியும் பன்னை மனனிலங்கியல்புந்நந்தவளரொளிபோல என்று பழுகத் தையும் வன்னங்களையும் ஆதித்தப்பிரகாசத்தையு முபமானமாகக் கூறியது பழுக மான்மாவுக் குவமையெனவறிக. வன்னங்கள்பாச த்துக் குவமையெனவறிக. ஆதித்தப்பிரகாசந் திருவருள்ஞானத் துக் குவமையெனவறிக.

இனி வையந்தன்னகம்பயிலும். எ-கு. வையமெனறது ஆன் மாக்களும் பாசங்களு மென்று பொருட். கூறியத்துக்கு. பி-ம். தத்துவவிளக்கத்தில் "கருமலிபாச மசேதனங்கட்டுண்பர் சே தனரென், றிருமையில்லைய மடங்குமென்றென்னுக." எ - று. கண்டுகொள்க.

இனிநற்சித்து. எ-கு. இந்நூலிலே "இருளகற்றிப்பாத மூற் றிடு நற்பசுவர்க்கம்." என்னுங் கருத்தைப்பற்றி யான்மாவிலே வைத்துக்கொண்டு மலபாகம்வந்த வான்மாவென்று பொருளு ரைப்பாரு முளர். அப்படியாயு மிந்தச் செய்யுள் ஞானவாய் மையெனனு மதிகாரத்தி லுள்ளதாகையா லந்தத்திருவருள் ஞா னத்திலே கூட்டிப் பொருளுரைப்ப தொழிய வான்மஞானத்திற்

கூட்டிப் பொருட்கூறுகை வதியல்லவெனவறிக. அன்றியும் நற்சி த்து என்பதை திருவருள் ஞானமென்பதே பொருளாமென்பத ற்கு. பி-ம். இந்நூலைப் பின்சென்றநூலாகிய திருநெறிவிளக்கத் திலே யிந்தச்செய்யுளுக் கெதிரடை விருத்தமாகிய "பற்றிய நிற ங்களாகும் பளிங்கின தொளியும்பற்றி, நிற்றலேயளிக்கும் வெய் யோ னீடொளி யதுவும்போல, மூற்றுலகதற்குச் சார்வாய் முயற் றினு முன்னீர்வின்போற், றிற்றினிற் சடங்க டோயா வென்பர் சிற் சத்திசேர்ந்தோர்." என்பதற்குப்பொருள் திருவருள்ஞானம் பிரபஞ்ச காரியப்படுத்தி நிற்கச்செய்தே தோய்வற்று நிற்குமென் பதற்குச் சமுத்திரத்திற் கூடின ஆகாயத்தைப்போலத் தோய்வற நிற்குமென்று கூறுகையால் நற்சித்து என்றதைத் திருவருள் ஞா னமென்பதே பொருளெனவறிக. அன்றியு மிச்செய்யுளிற் கருத்தா கிய குறள் வெண்பாவிலும் "பன்னிறம் பளிங்கிற் பற்றிடப்பற் றுப் பொன்னெளிபோலு மன்னருளென்றது." மிப்பொருட் பற்றி நின்றதெனவறிக. அல்லதூஉம் சதுர்த்த சங்கிரகத்திலே யிந்தச் செய்யுளுக்குச் சேர்த்த கிரந்தத்தினுங் கண்டுகொள்க.

இனி நன்னலம்பெறநிறைந்த ஞானமேஞானம். எ-று. சிவ னுடைய நலத்தை மற்றொருவர் பெறவேண்டுகையா லிந்தச் செய் யுளுக்குச் சேர்த்த கிரந்தமு மிப்பொருளைப்பற்றி நின்றதெனவ றிக. அன்றியும் இதற்கு மலபாகம் வந்த வான்மாக்களுக்குத் திரு வருள்ஞான முண்டாம்படியென்று பொருளுரைப்பினுமாம். அத ற்குவழியேதென்னில் முற்கூறிய வுபமானத்தில் ஆதித்தப்பிரகா சத்திலுலே படிகத்திலே வன்னங்கள் பிரதிபிம்பஞ்செய்யுமிடத் தந்தவாதித்தன் சாயவோடும்பொழு தலே பிரதிபிம்பஞ்செய் தும் அந்தவாதித்தன் மத்தியானமான பொழு தந்தப்படிகத்தி னுச்சியிலே சேர்பட்டவவதரத் தந்த வன்னங்கள் கூடியிருக்கச் சே யந்தப்படிகம் வன்னங்களிற் பற்றும லாதித்தப் பிரகாசத்

தைக் கவர்ந்துகொண்டு நின்றுற்போல வந்தத்திருவருள் ஞானமு மான்மாக்களுக்கு மலபாகம் வாராத காலெல்லாம் பிரபஞ்சத்தி லே புகிப்பித்து மலபாகம்வந்த வவதரத் தந்தப்பிரபஞ்சப் பற்ற றும்படி நேர்பட்டுத் தனது திருவருளைக் கடாகூத்து நிற்கையா லப்படிச்சொன்னதெனவறிக. இதற்கு. பி-ம். திருவருட்பயனில். "தனக்குநிழலின்று மொளிகவருந்தம்ப மெனக்கவர நில்லாதிரு ள்." எ-து. கண்டுகொள்க. அன்றியு மந்தத் திருவருண்ஞானம் ஆன்மாக்களைப் பெத்தமுத்தி யிரண்டினுங் காரியப்படுத்திநிற்கு மென்பதற்கு. பி-ம். இந்நூலில் "ஏற்றவினை" என்னுஞ்செய்யுளி லே "போற்றவருமருளருளே யன்றிமற்றுப் புகன்றனையு மருளொழியப் புகலொணாதே." எ-து. கண்டுகொள்க.

இதனாற்சொல்லியது ஆதித்தப் பிரகாசமானது படிகத்தை யும் வன்னபேதங்களையுங் கூட்டிக் காரியப்படுத்தி நிற்கச்செய் தேடந்த வன்னங்களிற் றோற்றுற நின்றுற்போலச் சிவனுடைய திருவருண்ஞானமு மான்மாக்களையும் பாசங்களையுங் கூட்டிப் பிரபஞ்ச காரியப்படுத்தி நிற்கச்செய்தேயு மந்தப் பிரபஞ்சபாசங் களிற் றோற்றநிற்கின்ற ஞானத்தையே வுண்மைஞான மென்னு முறைமையை யறிவித்தது. (ககூ)

——o——

வேறு—இது இனியதற்கே புறனடையாக வருளிச்செய்யு மூராந்தத்திரமான செய்யுளிரண்டினு ளிஃ தப்படிக் கூடிநின்று காரியப்படுத்துகிற சிவஞானம் பிரபஞ்சத் தோற்றநிற்குமுறை மையைத் திருட்டாந்த பூர்வகமாக வுணர்த்திற்று.

பன்னிறங் கவருந்தான்மைப் படிக நீடொளியும்பனை மன்னிலங் கியல்புந் தந்தவளரொளித்பால-பல நிறங்களையுங் கவர்ந்து கொள்வதான பளிங்கினது நிலைபெற்ற வொளியையும் பலவாய் நிலைபெற்று விளங்காநின்ற வன்னங்களி னியற்கைகளை

யுங் கூட்டுகின்ற வாதித்தனுடைய மிக்கவொளி யவ் விரண்டின் றன்மையுந் தாக்காது விளங்குமாறுபோல,—வையந் தன்னகம் பயிலுநற்சிற் சடங்களின் றன்மை - தத்துவத்தினிடத்திற் பயிலு நல்ல வாத்மாவுந் தத்துவங்களுமாகிய விரண்டின்றன்மையும்,—தாவா நன்னலம்பெறநிறைந்த ஞானமே ஞானமென்பர் - தாக்காது நல்லசிறப்புண்டாய்நிறைந்த ஞானந்தானே ஞானமென்று சிறப்பித்துச் சொல்வர் பெரியோர். எ-று.

இதற்குப் பிறவு முரைப்பர்.

இங்ஙன மநாதியே கூடிநின்று காரியப்படுத்தி நிற்கிற வருளான திற்றைவரையும் பிரகாசியாம லிருந்தே னென்று வினவின மானவகளை நோக்கி யான்மாக்களுக் கருளுமளவும் மநாதியே கூடிநிற்கிறதே முறைமையாகையால் அந்த மல மேலிட்டபொழுதருள் மறைந்துநின்று காரியப்படுத்து மென்றும் அந்த மலம் பாகம்வந்த வவதரத் தந்தவருள் பிரகாசித்து நிற்கிறது மியல்பாகையாலந்த மலநீங்கியே யருட் பிரகாசிக்குமென்னு முத்தர மேலருளிச்செய்வா னெடுத்துகசொண் டருளியது.

மாயைமா மாயைமாயா வருமிரு விணயின்வாய்மை
யாயவா ருயிரின்மேவு மருளெனி லிருளாய்நிற்கு
மாயைமா மாயைமாயா வருமிரு விணயின்வாய்மை
யாயவா ருயிரின்மேவு மருளெனி லொளியாய்நிற்கும்.

இருண்மலமொழிய வேணயவொளியா
டருளுன்—மருவு மவர்திறமுரைத்தது.

(இ - ள்.) மாயைமாமாயை மாயா வருமிருவிணயின்வாய்மை யாத்தமாயையிற் றோற்றப்பட்ட தத்துவமூப்பத்தொன்றுஞ் சுத்தமாயையிற் றோற்றப்பட்ட தத்துவ மஞ்சு மாகத்தத்துவ மூப்பதுந் தாமுங் கெடாதே வரப்பட்ட புண்ணியபாவ

யவாருயிரின் மே ங்கண் மேன்மேல் வர்த்தியாநிற்கிற ஆன்மா
வுமருளெனிலிரு வினிடத்திலே யாணவமலமாகிய வறியாமை
ளொய்நிற்கும் மேலிட்டமொழு தான்மாவு மறியாமையாய்
நிற்கும்

மாயை மாமா அசுத்தமாயையிற் றோற்றப்பட்ட தத்துவ
யை மாயா வருமி மூப்பத்தொன்றுஞ் சுத்தமாயையிற் றோற்ற
ருவினையின் வாய் ப்பட்ட தத்துவ மைந்தும் ஆகத் தத்துவ
மையாய வாருயி மூப்பத்தாறு மாய்ந்துபோவதாகப் புண்ணிய
ரின்மேவுமருளெ பாவங்கள் கூடியம்வந்த வான்மா விடத்திலே
னிலொளியாய் நி யருள்மேலிட்டபொழுது ஆனமாவு மறிவாய்
ற்கும். ப் பிரகாசித்து நிற்கும். எ-று.

உ - ம். இந்தச்செய்யுளுக்கிட்ட தொந்தவினையி லான்மாவை யருளுமலமு மாதியே கூடிநிற்கு மென்பதற்கு. பி-ம். சித்தியா ரில் ஏழாஞ்சூத்திரத்தில் "சுத்தமெய்ஞ் ஞானமேனிச் சோதி பால்." என்ற செய்யுளின் முடிவிலே "சத்துளபோதே வேருஞ் சதசத்து மசத்துமெல்லாம், வைத்திடு மாதியாக வாரிநீர் லவணம்போல." எ - து. கண்டுகொள்க.

இந்தச் செய்யுளின் முற்பதத்திலும் பிற்பதத்திலு மருளெனி லிருளாய்நிற்கும் அருளெனி லொளியாய்நிற்கும் என்றது ஆன்மா வருளோடு மலத்தொடுங்கூடி- யதுவதுவாய்நிற்கு மென்றது. இதற்கு. பி-ம். சிவஞானபோதத்தில் ஏழாஞ் சூத்திரமாகிய "யாவையுஞ் சூனியம்." என்ற செய்யுளின் பிற்பதத்தில் "இருதிறனறிவுள திரண்டலா வான்மா." எ-து. கண்டுகொள்க.

இனி யருளானது ஆன்மாவோடு மாதியே கூடியிருக்கச்செ யத்தே மலபாகம்வாராத வான்மாக்களுக்கு அந்தவருள் கூடிநிற்க ச்செய்தேயும் பிரகாசியாதென்று பொருட்கூறியதற்கு. பி-ம். திரு வருட்பயனில் "ஊமன்கண்போல வொளியுமிகவிருளே - யாமன் கண்காணுறுதலை." எ-து. கண்டுகொள்க. ஊமனென்றது கூடை

யெனவறிக. ஒளியுமிகவிருளெனறது கூகைக்குப் பகற்கால த்திற் கண்தெரியாதென்பதுகருத்து. திருவள்ளுவதேவரும். "பக ல்வெல்லுங்கூகையைக்காக்கை." என்றதுமிப்பொருட்பற்றி யெ னவறிக. அன்றியும் சித்தியாரிலேயும் "இங்குத்தானந்தகருக் கிர வியிருளாகு மீசனருட்கண்ணிலார்க் கொளியாயே யிருளாம்." என்பதுமிப்பொருட்பற்றி யெனவறிக.

இனி யிந்தச் செய்யுள் மாயை மாமாயையென்று மிதித்ததை மிதித்து ஒருசொல்லே யிருகாற் சொல்லியதெதென்னில். "கூறிய பொருளைக் கூறலுமாகும் வேறொருபொருளை விளக்குமாகில்." என்னும் விதியைப்பற்றி யெனவறிக. வேறொருபொருளை விளக் தலாவது மூற்பதத்துக்கு மாயாவென்றது மாயாகண்மங்கள் கூடிய ம்வாராத வான்மாவென்ற தெனவறிக. பிற்பதத்துக்கு மாயாவெ ன்றது மாயாகண்மங்கள் கூடியம்வந்த வான்மாவென்ற தெனவறிக. அப்படி யொருசொல் விரண்டாவது யெங்ஙனையென்னில் வாரா ப்போது னென்றசொல் வந்தபோனதற்கும் வராமற் போனதற் கு நின்றூற்போல வெனவறிக.

இதனுற் சொல்லியது ஆன்மாக்கள் மாயாகண்மங்கள் கூடிய ம்வாராதகாள்களெல்லா மலத்தோடுங்கூடி யறியாமையாய் நிற் பார்களென்றும் மாயாகண்மங்கள் கூடியம்வந்தகாலைக் கருவிளா டுங்கூடிப் பிரகாசமாய் நிற்பார்களென்று முறைமையு மறிவித் தது.

(உ)

வேறு—இது இந்தச் சிவஞான மிற்றைவனையு மென்னி—த் நிற் பிரகாசியாதிருந்த தென்னெனவென வினாயதற் குத்தர முணர்த் துற்று.

மாயை மாமாயை மாடா வருமிரு வினையின் வாய்மை யாயவா ருயிரின்மேவு மருளினி லிருளாய் நிற்கும் - ஆணவமலத்தி னீட்ட

த்தாலே யிருவித மாயையு மொழியாமல் வரு மிருவினைகளுமான வி வற்றி னுண்மையேயாய் நின்று போகங்களை யனுபவிக்கின்ற வாத்மாவினிடத்திலே பொருந்திய மயக்கத்தினிடத்திலே யந்த ஞான மிருளாகவே நிற்கும்,—மாயை மாமாயையுமாயா வரு மிரு வினையின் வாய்மை யாய வாருயிரின்மேவு மருளினி லொளியாய் நி ற்கும் - இனி யந்த வாத்மாவினிடத்திலே யாசாரியனற் பொருந் திய வனுக்கிரகத்தினிடத்திலே யதுபிரகாசமாகவேநிற்கும். எ-று.

மருள் - மயக்கம். சத்தார்த்தக்கிரியா சொரூபமான விந்த மாயாசத்திகளுடைய தன்மையும் பிறவித்துன்பமு மாத்மாக்கட ன்மையு மவற்றிற்கு வேரூய் நிற்கும் வீட்டின்பமு மிவற்றிற்செ லுத்துந் தன்மையு மொன்றுந் தோன்றுதபடி யாணவகாரியமாயி ருக்கிற வஞ்ஞானத்தைக்கொண்டு மறைத்து அவ்வஞ்ஞானமே யாய் நிற்குமாதலி னிருளாய்நிற்குமென்று மிந்த மலமாயாகன்மங் களினுடைய தன்மையுங் காட்டிப் பிறித்துத் தேகாந்தமளவுமு ள்ள பிராரத்தவாதனையு மாத்மாவிற் ருக்காமலெவ்விடத்திலேயு நாலெழுபவில்லை யென்னும்படி பிரகாசமாய்ப் நிற்குமாதலி னெ னியாய் நிற்குமென்று முரைத்தார். அந்த ஞானமென்ப ததிகாரத் தாற்பெற்ரும். பின்வந்த வாருயி ரடையவித்த சூட்டுப்பெயா. இத ற்குப் பிரவுமுரைப்பர்.

☞ ஏறாவ்ருத்திரமாகிய ஞானவாய்மை முற்றிற்று.

முன்னதிகாரத்தி லருளிச்செய்த ஞானத்தினுண்மை யென்பதினிடத்து ஆன்மதரிசனமென்றும் ஆன்மசுத்தியென் றும் ஆன்மலாபமென்றுந் தெரித்தற்பயன்படவேண்டுதலை யால் மேலதன் பயனென்று மதிகாரம் வைக்கப்பட்டதென வறிக.

அப்படி யதிகாரமொன்றுயிருக்க மூன்றுவகையாகவே ண்டுவானேனென்னிஸ் இவ்வதிகாரத்தில் மூன்றுசூத்திர மடங்கிவருகையா லப்படி வைக்கப்பட்ட தெனவறிக. அஃ தெங்ஙனேயென்னில் ஆன்மதரிசன மெட்டாஞ்சூத்திரமாக வும் ஆன்மசுத்தி யொன்பதாஞ்சூத்திரமாகவும் ஆன்மலாபம் பத்தாஞ்சூத்திரமாகவும் நிற்கையா லப்படிச்சொன்னதென வறிக. அதற்கு வழியேதெனனில் சிவஞானபோதத்தில் எட் டாஞ்சூத்திர மான்மதரிசனமாகவும் ஒன்பதாஞ்சூத்திர மா ன்மசுத்தியாகவும் பத்தாஞ்சூத்திர மான்மலாபமாகவும் வரு கையா லிதுவுமப்படி வைக்கப்பட்டதெனவறிக. அஃ தெங் ஙனேயென்னில் "தேசுறமருவும்." என்ற விருத்தந்தொட ங்கி "எல்லையில்பிறவி" என்ற விருத்தமுடிவாகிய செய்யுட் பத்தென்பதினுள்ளும் "தேசுறமருவும்" என்ற விருத்தமொ ன்றும் இவ்வதிகாரங்கள் மூன்றுக்கும் வகுப்பாகவருளிச்செ ய்து மேல் "தன்னறிவதலால்." என்ற விருத்தந்தொடங்கி "சுத்தமாஞ்சத்தி." என்ற விருத்தமுடிவாகிய செய்யுள் நா லும்ஆன்மதரிசனமாகவும் "புகலரும்சத்தர்" என்ற விருத்த ந்தொடங்கி "அடைபவர் சிவமேயாரும்." என்ற விருத்தமு டிவாகிய செய்யுள்நாலும் ஆன்மசுத்தியாகவும் "பொற்புறு கருவி." என்ற விருத்தந்தொடங்கி "எல்லையில்பிறவி." என்ற விருத்தமுடிவாகிய செய்யுட்பத்தும் ஆன்மலாபமாகவும் வரு கையால் சிவஞானபோதத்தில் "ஐம்புலவேடரி னையர்ந்தோ வளர்ந்தெனத், தம்முதல் குருவுமாய்த் தவத்தினிலுணர்ந்த விட், டந்நியமின்மையி னரன்கழல்செலுமே." என்ற எட்டா ஞ்சூத்திரத்தின் கருத்து இவ்வான்மாக்களுக்கு. ஞானத் தினை யுணர்த்தமுறைமையினை யுணர்த்ததனைதெளிற்று என்ப தனால் இந்நூலினும் ஆன்மதரிசனத்துக்கு வகுத்தசெய்யுட் களில் "தன்னறிவதனால்." என்ற விருத்தத்தில் "தன்னை யு

ந்தாேனகாணுந் தானதுவாகிநின்றே.” என்பதலல் ஆன்மதரிசனமென்னு மதிகாரம் எட்டாஞ்சூத்திரமாகுமென்றறிக.

மேலான்பதாஞ்சூத்திரத்துக்கும் சிவஞானபோதத்தில் “ஊனக்கண்பாச மூணராப்பதியை, ஞானக்கண்ணினிற் சிந்தைநாடி, யுராத்துரீனத்தேர்த்தெனப் பாசமொருவந், தண்ணிழலாம்பதிவிதி, யெண்ணுமஞ்செழுத்தே.” என்னுஞ்சூத்திரத்தின்கருத்து ஆன்மசுத்திபண்ணுமாறுணர்த்துதனுதலிற்று என்பதலல் இந்நூலினும் ஆன்மசுத்திக்குவகுத்த செய்யுட்களில் “இந்நிலை.” என்னும் விருத்தத்தில் ”கரணமாகாவகையதி லறிவடங்கி மன்னிடவியாபியாய வான்பயன் முன்றுமன்றே.” என்பதலல் ஆன்மசுத்தியென்னு மதிகாரம் ஒன்பதாஞ்சூத்திரமாக நின்றதெனவறிக.

மேற் பத்தாஞ்சூத்திரத்துக்கும் சிவஞானபோதத்தில் “அவனேதானே யாகியவங்நெறி, யேகமுகியிறைபணிநிற்க, மலமாயையதன்னெறி வல்வினையின்றே.” என்னுஞ்சூத்திரத்தின்கருத்து யானெனதென்னுஞ் செருக்கற்றவனது ஸ்ரீபாதத்தையணையுமென்பதலல் இந்நூலினும் ஆன்மலாபத்துக்குவகுத்த செய்யுட்களில் “தோன்றிநின்ற சிற்பரமதலுள்ளச் செயலறுத்திட வுதிக்குந்தற்பரம்.” எ - ம். “மற்றதும் பகல்விளக்கின் மாய்ந்திட வருவதுண்டோல் பெற்றிடுமதனை” எ - ம். “பாவிக்கவேண்டாவாண்ட பரனருள்பற்றிநேர்க்கே.” எ - ம். தற்போதந் தொடர்நிற்பதுவே கருத்தாகையாவினுவமபத்தாஞ்சூத்திரமாக நின்றதெனவறிக.

அப்படியாதலல் மூன்னை முகவுரையில் சூத்திரவகுப்பிலை இதற்குப் பின்னேவருகிற வைந்தெழுத் தருணிலையை ஒன்பதாஞ்சூத்திரத்திற் கூட்டினதெதெனனில் அஃதாவது சிவஞானபோதத்தில் ஒன்பதாஞ்சூத்திரமாகிய “ஊனைக்

கண் பாசமூணாப்பதியை." என்னுஞ் சூத்திரத்தின் பிற்பக் கத்திலே "பாசமொருவுத் தண்ணிழலாம் பதிவிதியென்னு மஞ்செழுத்தே" என்பதனாலும் சித்தியாரிலும் ஒன்பதாஞ் சூத் திரமாகிய "பாசஞானத்தாலும் பசுஞானத்தாலும்" என்ற செய்யுளிலேயும் "ஓசைதரு மஞ்செழுத்தை விதிப்படி யுச்ச ரிக்க" என்பதினாலும் அந்தப் பஞ்சாக்கரத்தையும் ஒன்ப தாஞ் சூத்திரத்திலே கூட்டி வைக்கப்பட்ட தெனவறிக. அப்படி யொன்பதாஞ் சூத்திரத்தின் பகுதியாயிருக்க இந் நூலிலே பத்தாஞ் சூத்திரமாகிய வான்மலாபத்துக்குப் பின் பாகப் பஞ்சாக்கரமாகிய வைந்தெழுத் தருணிலை வைக்க வேண்டுவா னேனென்னில் அந்தப் பத்தாஞ் சூத்திரமாகிய வான்மலாப மென்பதனில் சிவமேறுடங் கூடிப் பிறிவறநின்று சிவாநுபவத்தை யநுபவிக்கப்பட்ட சிவஞானிக ளெந்த நிலை குலைந்த வவதாரத்தும் வேறு பிரபஞ்ச வாதனையிற் கூடாத படி யதுவு மோருபாய நிட்டையாகக் கொண்டு மீளவும் பழைய வான்ம சுத்தியில் நிற்கவேண்டுகையாற் பத்தாஞ் சூத்திரத்துக்கு மேலாகவும் ஒன்பதாஞ் சூத்திரத்தின் பகுதி யாகிய வைந்தெழுத் தருணிலையை வைக்கப்பட்ட தெனவ றிக. இந்தப் பஞ்சாக்கர தரிசனத்தை மூற்கூறப்பட்ட நூல் களைப்போலவொன்பதாஞ் சூத்திரத்திலேறுடங் கூட்டினை யாமல் இந்நூலில் வேறேபகுத்துவைக்கைக்கு விதியேதென் னில் இந்தச் சிவப்பிரகாசஞ் சார்புநூ லாகையால் "இருவர் நூற்கு மொருசிறை தொடங்கித் திரிபுவேறுடையது புடை நூலாகும்" என்னு மிலக்கண விதியைப்பற்றி அந்நூல்களி லெழுங்கில் வராமல் முற்பிற்பாடாக வைக்கப்பட்டதென வறிக.

ஆகையால் முற்கூறிய "அதன்பயன்" என்ற செய்யுள் முதலிய பத்தொன்பது மிந்தப் பஞ்சாக்கர தரிசனத்தின்

பருதியான விருத்தமூன்றும் ஆகச்செய்யு ளிருபத்திரண்டும் ஆனமதரிசனமாகிய எட்டாஞ்சூத்திரமும் ஆன்மசுத்தியாகிய ஒன்பதாஞ்சூத்திரமும் ஆன்மலாபமாகிய பத்தாஞ்சூத்திரமுமாக நின்றனவறிக.

இங்ஙனம் வருத்தருளிச் செய்யப்பட்ட எட்டாஞ்சூத்திரமாகிய ஆன்மதரிசனத்துக்கும் ஒன்பதாஞ் சூத்திரமாகிய ஆன்மசுத்திக்கும் பத்தாஞ்சூத்திரமாகிய ஆன்மலாபத்துக்கு மதிகாரவுப் பருளிசெய்வா னெடுத்துக்கொண்டருளினியது.

தேசுற மருவுமான்ம தரிசன மான்மசுத்தி
யாசிலா வான்மலாப மாகலுமன் றுகுமென்றும்
பாசுப தகலுஞானம் பற்றறுன் பணியைநீத்த
லேசினோ யத்தழுந்தலெனுமிவற்றடங்குமன்றே.(உக)

உயர்தவஞ்செய்தவர்க் குற்றமூவகையாம்
பயனுறும்வழியைப் பாரித்துரைத்தது.

(இ-ள்.) தேசுற மருவுமான் மதரிசன மான் மசுத்தி யாசிலா வான்மலாப மாகலுமன் றுகும் மூன்றும் பாசுப தகலஞானம்பற்றல் — விளக்கமுண்டாகப் பொருந்தப்பட்ட ஆன்மாவைத்தரிசிக்கை யென்றும் ஆன்மாவைச் சுத்திபண்ணுகையென்றும் குற்றமில்லாத வான்மாவினுடைய பிரயோசனமென்றும் ஆகமூன்றுவகையாம்

இந்தமூன்றுவகையுமேதென்னில்

பாசங்களாகிய தேகாதிபிரபஞ்சங்களாயுள்ளவை நீங்கும்படியிவையிற்றைக் கூடினவருளாலும் பொருந்துகையான்மதரிசனமாம்

தான் பணி யைகீத்தல் — தன்னுடைய விச்சாஞானக் கிரியைகளா விட்டுந்த வருளிலே மூழ்குகிற தற்போ தம் ஜீவியாமலிற்கிறது தானென யான்மசு த்தியாம்

ஏகினேயத்த மூந்தல் — குற்றமில்லாத சிவரூபமாகிய ஞேயத்தி லே யழுந்துகிறது தானே யான்மாவினு டைய விலாபமாவது

எனுமிவற்றட ங்கு மன்றே. — என்றிங்ஙனஞ் சொல்லப்பட்ட ஞாது ரு ஞான ஞேயமென்னு மூன்றினுள்ரு மட ங்கும். எ-று.

நு-ம். ஆன்மதரிசனமாவது தனக்கறிவாகக் கூடிநின்று காரியப்படுத்துகிற பிருதிவிமுதலான தத்துவங்களை காமல் லிவென்றுகழிந்து அந்தவருளே தனுவாகப்பொருந்தி யந்த த்தத்துவங்களையுந் தன்னையு மந்த வருளையுந் தரிசித்துநி ன்ற விடமெனவறிக.

அன்றியு மான்மசுத்தியென்றது அந்த வருள்காட்டத் தான் காண்கிற காட்சியை யிழந்தந்த வருளே தலிடமறை வாக நின்ற விடமெனவறிக.

அன்றியு மான்பலாப மென்றது அந்தவருள்மேலிடாக நிற்கச்செய்தே யவ்விடத்திலே யொரின்பம் விளைதலெனவ றிக.

என்றிங்ஙன மூன்றுவகையாகச் சொன்னதற்கு. பி-ம். உருபசொருபவகவல் "மன்னருள் தன்னின் மன்னுயிர்மனனு த-லின்னுயிர்த்தரிசன மென்பர்நல்லோர் - சுத்திதன்போதந் தோன்றுநிருக்கை - யத்தகுபிலாப ஞேயத்தழுந்தல்." எ-று. கண்டுகொள்க.

இதனுற் சொல்லியது அந்த வுண்மைஞானத்தை யான் மாக்கள் பெறுமிடத்து ஆன்மதரிசன மென்றும் ஆன்மசுத்தி

யென்றும் ஆண்மலாப மென்றும் மூன்றுவகையாக நின்று பெ
ருமென்னு முறைமையை யறிவித்தது. (உக)

வேறு—இனி எட்டு மொன்பதும் பத்துமான சூத்திரங்
களின் பொருளான வதன் பயனை யாத்மதரிசன மாத்மசு
த்தி யாத்மலாபமென மூன்றுக்கிப் பத்தென்பது செய்யுளா
னுணர்த்துவான் றொடங்கிரு ரவற்று ளிஃ தம் மூன்றினையும்
வகுத் துணர்த்திற்று.

தேசுறமருவுமான்ம தரிசன மான்மசுத்தி யாதிலாவான்
மலாப மாகமூன்றுகும் - அந்தப்பயலுவது விளக்கமிகவும்
பொருந்தியவாத்மாவைத் தரிசிக்கை யந்தவாத்மாவை நிரு
விகற்பமாம்படி சுத்திபண்ணுகை யங்ஙனங் குற்றமற்றவாத்
மாவின் பிரயோசனமாக மூனறுவிதமாயிருக்கும்,—மூன்
றும்-இந்த மூன்றுவிதமும்,—பாசமதகலஞானம் பற்றறுன்-
மூன சொன்னவனடமே யாத்மாவானவன் பாசமானது விட்
டுப்போகப் பரஞானத்தைத் தரிசிக்கை,—பணியைநீத்தல்-
அந்த ஞானத்தைக் கூடித் தன்னுடைய செயலை விடுதல்,—
ஏகினையத்தழுத்தல் - அந்தஞானத்தாலே குற்றமற்ற சிவ
ரூபத்தைப்பெற்று அதிலே யழுந்துதல்,—என்னிவற் றடங்கு
மன்றே - என்று சொல்லப்பட்ட வினைமூன்றினுள்ளு மடங்
கும். எ - று.

எனவே இம்மூன்று தொழிலுமே யம்மூன்றுபெயரு மெ
ன்பதாம், ஒன்றனு ளொன்றடங்கு மென்பதன்று. அகலப்ப
ற்றலென்பது தொழிகூவப் பொழுதுவிடுத்த தென்றுற்போ
னின்றது. பணியை நீத்த லாத்மாயி னிச்சாஞானக் கிரியை
கூட விடுத்த லென்பாருமுளர். தான் ஈண்டுப் பெயர்.

இங்ஙனஞ் சொல்லப்பட்ட மூன்றுபருதியி னுள்ளு மெ

ட்டாஞ்சூத்திரமாகிய ஆன்மதரிசனத்தை மூந்த வருளிச்செ
ய்வா னெடுத்துக்கொண் டருளியது.

தன்னறி வதனூலெதுந் தனக்கறி வில்லையே யனுந்
தன்னறி வாகவெல்லாந் தனித்தனிப் பயனருந்துந்
தன்னறி வறியுந்தன்மை தன்னூலே தனையறிந்தாற்
றன்னையுந் தானேகானுந் தானது வாகுநின்றே.(உஉ)

பவமாரூவிதன் பரிசினையுணர்ந்துபின்
சிவமாய்நிற்க வுயிர்தெரியுமென்றது

(இ-ள்.) தன் னறி வதனூலெ துந்தனக்கறிவி ல்லையேயனும்

ஆன்மாவானதுக்குத் தன்னுடைய வறி வாலே யாதாமொன்றை யறிகைக்குத் தனக்கென்ன வோரறிவுமில்லையா மாயினும்

தன்னறி வா கவெல்லாந்தனித்தனிப்பயனருந்தும்

தானிந்திரியங்களுடனே கூடி நின்றறிகிற வறிவுக ளெல்லாத்தையுஞ் சிவன்கூட்டி யறிவிக்கிறதென் றறியாமற் றன்னூலே யறிந்ததாக வொவ்வொரு விடயங்களிலே யொற்றித்துநின் றநுபவியா நிற்கும்

தன்னறி வறியுந் தன்மை

இப்படி யறிகிறது ஆன்மபோதத்தின் மூறைமையாம். இங்ஙன மாறுபாடாக வறிகிற மூறைமையை விட்டு

தன்னூலே தனையறிந்தால்

அந்தச் சிவனுடைய ஞானத்தாலே சிவனையறிந்தால்

தன்னையுந் தானேகானுஞ்

ஆன்மாவி னுடைய செயலறுதியையு மந்தவான்மா தன்னூலே காணவும் படும். அஃ தெங்ஙனே யென்னில்

தானது வாகி நின்றே.

ஆன்மாவான தந்தச் சிவஞானத்தோடுங் கூடுநின்ற வவதாரத்து. எ - று. தன்னை

யுமென்ற விழித்துரை கொண்டே யான்மா
தற் சுதந்தரமாக வறியமாட்டா னென்ப
து கருத்தெனவறிக. இதற்கு. பி-ம். சித்
தியாரில். "அறிந்திடு மான்மா வொன்றை மற்றுன்று லறி
தலானு, மறிந்தவை மறத்தலானு மறிவிக்க வறிதலானு, மறிந்
திடுந் தன்னையுந்தா னறியாமை யானுந்தானே, யறிந்திடு
மறிவ னன்று மறிவிக்க வறிவனன்றே." எ-து. கண்டுகொ
ள்க.

இதனாற் சொல்லியது ஆன்மா பெத்தத்தன்மையிலு
நின்றும் பிரபஞ்சத்தோடுங்கூடி ஜீவிக்குமிடத்துத் தனக்கெ
னவொருசெயலில்லாம லிருக்கச்செய்தேயுந் தனசெயலா
கச் செய்கிறுமென்று நின்ற முறைமையு முத்தித்தன்மை
யிலே சிவனுடைய வருளாலே தற்றெரிசனம் வந்தவிடத்துத்
தவருளோடுங் கூடியறிகிற தொழிந்து நமக்கென் றுருசெ
யலில்லையென்று தன்னுடைய செயலறுதியை யறிந்த முறை
மையு மறிவித்தது. (உஉ)

வேறு—எட்டாஞ் சூத்திரமான வாத்ம தரிசனத்தைச்
செய்யுணன்கு ணுணர்த்துகின்றார். அவற்றுளிஃ தருளாலே
யருளைத் தரிசித்தபின் றன்னைத் தரிசிக்கலா மென்ப துணர்த்
திற்று.

நன்னறிவதற் கேதுத் தனக்கறி வில்லையேனும் - ஆத்
மாத் தன்னுடைய ஞானத்தா லொன்றை யறிதற்குச் சிறிதுந்
தனக்கறிவில்லை யாயினும், —தன்னறி வாகவெல்லாந் தனித்
தனிப் பயனருந்தும் - பயனெல்லாஞ் சிவஞானத்தா லொவ்
வொரு விடயங்களாக நின்று புசிக்கின்ற வவைக ளெல்
லாம், —தன்னறிவாக - தன்னுடைய ஞானத்தி னாலே யறிக்க
புசிக்கிறுனுக, — தனித்தனிப் பயனருந்தும் - தனித்தனியே

புசியாநிற்பன,—தன்னறி வறியுந் தன்மை - ஆத்மா ஞானத் தா லறியுமுறைமை,—தன்மேல தணையறிந்தாற் றன்னையுந் தானெகாணும் - தனக்குப் பிராணமுய் நிற்கிற ஞானத்தி லே யந்த ஞானத்தைத் தரிசித்தாற் றன்னையு மவ்விடத்தி லேதானெ காணு நிற்கும். தனனைத்தானே காணவல்லே வெனில்,— தான துவாகிநினே ற-தானந்த ஞானமாய் நிற்கை யால். எ-று.

நிற்றலான் நின்றெனத் திரிந்து நின்றது. தன்மேல தணை யறிந்தா லென்பதற்கு ஆத்ம சிற்சத்தியாலே தன்னை யறிந் தாலெனிற் குற்றமென்னை? அஃ திவ்வாசிரியர் கருத்தன்று. அது சித்தியாரிற் சூரியகாந்தக் கல்லி னிடத்தே யெண்ணுந் திருவிருத்தத்திற் காண்க. அன்றியு ஞானநாட்டம் பெற்ற பின்யானு-நின்பெருந்தன்மையுங் கண்டேன் காண்டலு-மெ ன்னையுங் கண்டே னென்னும் பட்டினத்துப் பிள்ளையார் திரு வாக்காணு மறிக.

இன்னமு மிந்த மூவகை யந்தத்தைநந் தெளிட வருளிச் செய்பவேணுமென்று வினவ மேலருளிச்செய்வா னெடுத்து க்கொண்டருளியது.

தத்துவ மானவற்றின் றன்மைக ளுனைருங்கா லே யுய்த்தறிந் திடவதிப்ப தெளிவளர் ஞானமாகு மத்தன்மை யறியுமாறு மகன்றிட வதுவாயா னம்மா சுத்தமாஞ் சுத்தஞானத் தொகுமுத லிறன்றுமன்றே.

அதனை நிருபித் தந்தமூவகைப்பயன்
விதமுடனி தெவென விளங்கவுரைத்தது.

(இ-ள்) தத்து தத்துவங்களி னுடைய வுருப சொரூப
வ்மான வற்றின் சுபாவத்தை யறியுமிடத் தவையிற்றை யுங்
றன் மைகளுனை நியமாக வறிந்திடத் தொன்றுவது பிரகா

ரூங்காலை யுய்த் நிந்திடவுதிப் பதொளிவளர் ஞான மாகும்

சத்தினை மிகுதியாகவுடைய வருளென்றே சொல்லப்படுவது

அத்தன்மை யறியுமாறு மகன்றிட

அப்படியந்த வருள்காட்டக் காண்கிற காட்சியை நீங்கி

அதுவாயான் மாசுத்தமாம்

அந்த வருளோடுங்கூடி யதுதானுய்த் தற்போதம் ஜீவியாமலிற்கவே யான்மசுத்தியாம். அப்படி நிற்கவே

சுத்தஞானத் தொகுமுதன் மூனறு மன்றே.

அப்பொழுதே நின்மலமாகிய வருளுக்கு முதலாயுள்ள சிவமாகிய நேயந் தோன்றும். எ - று.

நு - ம். தத்துவங்களி னுண்மையை யுணரவென்றது அவையிற்றை ஜடமென்று காண்கை யெனவறிக.

இனி யுய்த்தறிந்திட வென்றது தேகாதி பிரபஞ்சங்களை நீங்குகை யெனவறிக.

அத்தன்மை யறியுமாறு மகன்றிட வென்றது தன்னுடைய போதத்தின் மேலீடாகிய விச்சாஞானக் கிரியைகளை விடுகை யெனவறிக.

இதனாற் சொல்லியது ஆன்மாவானது தத்துவங்களை ஜடமென்று கண்டு நீங்கி யருளோடதனுவாய் நின்றவிடமான்ம தரிசன மென்றும் அப்படி நிற்கச்செய்தேயந்த வருளோடமே விடாகத் தற்போதம் ஜீவியாமலின்றவிடமான்மசுத்தி யென்றும் அப்படி நிற்கச்செய்தேயந்த ஞானத்துக்கு முதலாகிய சிவமான நேயந் தோன்றுகிறதேதியான்மலாப மென்றும் வருமுறைமையை யறிவித்தது. (உக)

வேறு—இஃ தந்த வருளாத்மாவுக்குத் தோன்று முறைமையு மவன் சுத்தரு முறைமையும் பணியற நின்ற காலத்தின் றேயங் தோன்று மென்பதூஉ முணர்த்திற்று.

தத்துவ மானவற்றின் றன்மைக ளுணருங்காலை - தத்துவங்களை நீங்குகைப் பொருட்டாக வவற்றி னுண்மைகளையு மாராயுமிடத்து,—உய்த்தறிந் திடவுதிப்ப தொளிவளர் ஞானமாகும் - அவைகளிலே தனித்தனி தன்புத்தியைச் செலுத்தி யவற்றி னுண்மையை யாராய்ந்து பார்க்கவே நிலைபெற்ற பொருளாய்த் தோன்றுவது பிரகாசத்தையுடைய ஞானமேயாம்,—அத்தன்மை யறியுமாறு மகன்றிட - அப்படி யறிகிற முறைமையும் விட்டுநீங்க,—அது வாத்மாச் சுத்தமாம் - அந்த ஞானந்தானே யாத்மாச் சுத்தமாம்,—சுத்தஞானத் தொரு மூதேறுன்றுமன்றே-அப்பொழுதே யந்த ஞானத்துக்கு மூதலாகிய றேயந் தோன்றும். எ - று.

அப்படியிருந்த ஞானத்துக்கு மூதலா யொருறேயந் தோன்றுமென்கிற தென்ன விந்தஞானமாகிய வருளோடுங் கூடியந்தவருளதாலாய் நிற்கிறதல்லா பயனென்கிற சங்கிராந்தவாதியை மறுத்து அந்தவருளையுந்தவிர வேறே றொரு யமாகிய சிவமுண்டென்று மேலருளிச்செய்வா னெடுத்துக் கொண்டருளியது.

உறைதரு முணர்வுமன்றி யதன்மூத லுள்ளதென்றிங்
கறைவதே னென்னிலண்ண லருளெனு மதுவேயன்றி
நிறையெளி மூதலுந்தன்றி நின்றிடா நிமலனுக்கு
மிறையவன் மூதலவன்ற னிலங்கருட் சத்தியாமே.உ

அன்னதோரொளிக் காதவன்மூதலாங்
கன்மமோலருட்கரன் முன்மூதலென்றது.

(இ-ள்.)உறை தரு மூணர்வுமன்றி யதன்மூதலுள்ளதென்றிங் கறைவதேனென்னில்

ஆன்மாவினிடத்திலே பொருந்திநிற்கிற வருளாகிய ஞானமொழிய வதற்கு முதலாகவொருவேறாய மூன்டென்று சொல்லுவானேனென்று நீகேட்கில்

அண்ணலருளெனும்

அது தம்பிராஅரருளே யென்று சிவாகமங்கள்சொல்லும். அப்படி அந்த வருளென்றுஞ் சிவமென்று மிரண்டாயிருக்குமோவென்னில்

அதுவேயன்றி

அந்தச்சிவத்தை யொழிந்து அருள் தனித் தொருமூதலாய்ந்ல்லாது. அதென்போல வென்னில்

நிறைவெளிமூதலதன்றி நின்றிடா

மிக்க பிரகாசமானது அதற்கு மூதலாகிய வாதித்தனேயன்றித் தனித்துண்டாகாது. அதுபோல

நிமலருகுமிறையவன் மூதல்

நின்மல சோரூபமாகிய சிவனைத்தஞானத்துக்கு மூதலாகிய காரணமாய்நிற்பன். அப்படியந்த வருளுஞ் சிவமும் பிறிவற்றுநிற்குமாகிலந்தவருளே யமையாதோவென்று நீகேட்கில் அப்படிப்பிறிவற்று நின்றாலுமான்மாக்கள் பயன்படுமிடத்தந்தவருள்கொண்டே போதாது. அதேனென்னில்

அவன்றனிலங்கருட் சத்தியாமே.

அப்படியந்தச் சிவனிடத்து விளங்காநின்ற வருளானது அந்தச்சிவனுக்குச் சத்தியாட். எ-று. என்னவே சத்தியாமெயெ

ன்ற விதித்துரையால் இந்தச் சத்தியால் ஆன்மாக்களுக் கின்பம் விளையாதென்பது கருத்து. அதெனென்னில் இந்தச்சத்தியும் பெண், அந்தச்சிவமே ளுடுங்கூடி யான்மாவோ ரின்பத்தையறு பவிக்க வேண்டுகையா லான்மாவும் பெண், ஆகையாலிரண்டுபெண்கள் தம்மிற்கூடி யநுபவித்தா லின்பம் விளையாதது போல்வெனவறிக. இதற்கு. பி-ம். திருவருட்பயனில். "இருவர்மடந்தையருக் கென்பயனின்புண்டா-மொருவனொருத்தி யுறின்." எ-து. கண்டுகொள்க. ஆன்மாவையும் பெண்ணென்பதற்கு. பி-ம். திருப்பாட்டில். "தன்னேமறந்தா டன்னுமங் கெட்டா டலைப்பட்டா, ணங்கை தலைவன்ளுளே" எனளுமெதுக்தளைக் கண்டுகொள்க.

உ-ம். அந்தவருளைப்பெற்ற வான்மாக்களுமந்தவருளோடுங் கூடியுப்பளத்தைப்பொருந்தினபுல்லும் வைக்கோலும் உப்பாந்தன்மைபோல வந்தவருளே சொரூபமாய் நிற்கிறதொழிய வதற்குமேலாக வேறொரு ரூபமென்பதொன்றில்லையென்று சங்கராந்தவாதி சொன்னதற்கு. பி-ம். சங்கற்பநிராகரணத்தில் "ஏற்றேர்ர் முகவொளி தோற்றுங்கலெனைத்-தலைவனதருளுயிர் நிலவிடுநிலவக்-காட்டதற்கி மாட்டத்தங்கிய-தன்மையுமளத்த புல்லைவயினீப்பும்-போன்றதுவாகித் தோன்றிடுமதனற்-பசுகரணங்கள் சிவகரணங்களாகமாறியறிவுறு-மெகமாமுயிர் யானெனதின்றே." எ-து. கண்டுகொள்க.

இது வத்தமல்லவென்றவனை மறுத்ததற்கு. பி-ம். "ஞாக்குமுகவொளி நீக்காதானெனக்-கவருந்தன்மை முகரம் போலக்-கொடுத்தருகோடற் கடுத்தநுண்டன்றே-காட்டத் தங்கி கூட்டக்கூட்டு-மிந்தனத்தியற்றை வெந்தழுருங்கா-

வுப்பளத்தடுத்த புற்பலாலங்கள்-சடத்தவேனுங் கொடுத்த தகொள்ளுங் - தன்மையுண்டெனக் கின்மையதன்றே." எ-து. கண்டுகொள்க.

இதனுற்சொல்லியது ஆன்மாக்கள் மூத்தினைப்பெறு மிடத்து அருளாகிய ஞானத்தோடுங் கூடுகிறதொழியச் சிவ மாகிய ஞேயமென்ப தொன்றில்லை யென்ற சங்கிராந்தவாதி யை மறுத்து அருள் சத்தியாகையாலே யந்தச்சிவத்தோடுங் கூடியே யான்மாயகி யின்பமநுபவிக்கையால் சிவம் வேறு மென்னு முறைமையை யறிவித்தது. (உசு)

வேறு—இது அப்படிக்காட்டாகின்ற ஞானமேயன்றி வேறு ஞேயமில்லையென்னுஞ் சங்கிராந்தவாதியை மறுத்த னார்த்திற்று.

உறைதரு முணர்வுமன்றி யதன்முத லுள்ளதென்றிங் கறைவதென் னென்னில் - தன்னிடத்திலே பொருந்திய ஞா னமும் மல்லாம லதற்குமுதலாகிய ஞேயமுமுண்டென் றிவ்வி டத்துச் சொல்லுகின்ற தென்னையென்றுகேட்கில்,—அண்ணா லருளனு மதுவே - (அதுவே யண்ணலருளனு மெனமா றுக) அந்தஞானமே சிவனுடையவருளென்று சொல்லப்ப டும்,—அன்றி - அல்லது,—நிறையொளி முதலதன்றி நின்றி டா - நிறைந்த பிரகாசமான தது ஆதித்தனையொழிந்து நில்லா ததுபோல ஞானமு ஞேயத்தையன்றி நில்லாது,—நிமலமு மிறையவன் முதலவன்றனிலங்கருள் சத்தியாமே-ஆவலங் தஞானமதது ஞேயமெதன்னி னின்மலமுகியசிவனை ஞா னத்து ஞேயமாகிய முதலவனிடத்து விளங்கிய வருளாகிய ஞான மவனுடைய சத்தியாம். எ - று.

ஒளிநின்றிடா வென்பது பண்மை யொருமை மயக்கம்.

சூசஉ சிவப்பிரகாச சுவ்வியாக்யாகம்.

அப்படியாலு லந்தச்சத்தியாற் பயனில்லேயா வென்று மீளவு மவனவினவ அப்படி யநுபவத்துக்குப் பயனில்லை யென்னலாமொழிய வான்மாக்களுக் குண்டாகிய வநாதிமலங்க ளோநீக்கி யந்தச்சிவத்தோடுங் கூட்டுகைக் கந்தச்சத்தியே வேணுமென்னு மூறைமையை யொருதிருஷ்டாந்த முகமாக வருளிச்செய்வா னெடுத்துக்கொண் டருளியது.

சுத்தமாஞ் சத்திஞானச் சுடராகுஞ் சிவமொழிந்தச்
சத்திதா னின்றுமுன்னைத் தகவிலா மலங்கள்வாட்டி
யத்தனை யருளுமெங்கு மடைந்திடு மிருளகற்றி
வைத்திடு மிரவிகாட்டும் வளரொளிபோன்மகிழ்ந்தே.

ஒத்தறுபருதியை யொளிதருவதுபோற்
சத்தியும்பிராணைத் தருமென்றுரைத்தது.

(இ-ள்.) சுத் தமாஞ் சத்தி ஞானச் சுடராகும் — நின்மல சொரூபமா யிருக்கப்பட்ட சத்தியாலது ஞானப்பிரகாசமா யிருக்கும். அப்படி இருக்கவும் சிவம் வேணுமென்பானேனென்னில்

சிவ மொழிந்தச் சத்திதானின்றும் — அந்தச் சிவமில்லாம லிந்தச் சத்திதாணுண்டாக மாட்டாது. ஆதலிந்தச் சத்தியாற் பயனில்லேயாவென்னில்

முன்னைத்தகவிலா மலங்கள் வாட்டியத்தனை யருளும் — அநாதியே வரப்பட்ட சூற்றத்தையுடைத்தாகிய மலங்களின் கௌரவத்தைக் கெடுத்துத் தனக்குமுதலா யிருக்கிற சிவமேயுமான்மாக்களைக் கூட்டும். அதென்போலவென்னில்

எங்குமடைந்திடு மிருளகற்றி வைத்திடு மிரவி — எவ்விடத்திலுஞ் செறிந்திருக்கிற விருளின் மேலீட்டைக் கிழ்ப்படுத்தித் தனக்குமுதலாயிருக்கிற வாதித்தனைக்காட்டுகிற

காட்டும் வள ரொளி போன் மகிழ்ந்தே.

பெரிய பிரகாசம்போல வந்தச்சத்தியுங் கிருபையுடனே. எ-று. என்னவே யான்மாக்கள் சிவனைப்பெறுமிடத் தருளாகிய சத்தியிடமாகப் பெறவேணுமென்பது கருத்து. இதற்கு. பி - ம். தத்துவவிளக்கத்தில். "பவமேவியநெறி பந்திக்குமீசன் பசுக்கடமை, யவமேவிபநெறி போகங்களால்முற்ற வந்நிலையே, தவமேவியநெறி சத்திகண்ணுற்சென்று சார்ந்துபின்னைச், சிவமேவுவரென்றுகாண்கொச்சைகாயலன் சித்திரிப்பே." எ-து. கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது திருவருளாகியசத்தி யான்மாக்களுக்குண்டாகிய மலங்களைப் பாகம்வருத்தித் தனக்குமுதலாகிய சிவத்துடனைகூட்டு முறைமையை யறிவித்தது. உரை

வேறு—இது பின்னு மந்தஞானமாகிய வருளாற் பயனின்மேலுவென வினவ வதன் சொரூபமுஞ் சிவத்துடன் வேறின்மையு மதனாற் பிரயோசனமு முணர்த்திற்று.

சுத்தமாஞ் சத்திஞானச் சுடராகும் - நின்மலமான வந்தச் சத்தி ஞானப்பிரகாசமாயிருக்கும்,— சிவமொழிந்தச் சத்திதானின்றுகும் - அதுதான் சிவத்தையொழிந்தது தனித்தொரு முதலாகமாட்டாது,—ஆலலந்தச் சிவமேயமையாதோ சத்தியாற் பயனென்னையெனின் - முன்னைத்தகவிலா மலங்கள்வாட்டியத்தனையருளும்-அந்தச்சத்தியதிலேமயக்கநின்ற மலங்களைப்போக்கித் தனக்கு முதலாகிய சிவனைக் காட்டும்,—எங்குமடைந்திடு மிருளகற்றி வைத்திடு மிரவி காட்டும்வளரொளிபோன் மகிழ்ந்தே-எங்குஞ்செறிந்தநிற்கு மந்தகாரத்தை யோட்டித் தனக்கு முதலாகவைத்துச் செய்

ல்லப்பட்ட யாதித்தனைக்காட்டும் பெரிய பிரகாசத்தைப் போல மகிழ்ந்து. எ - று.

ஒளிபோல மகிழ்ந் தத்தனையருளுமென மாறியுரைக்க.

☞ எட்டாஞ் சூத்திரமாகிய ஆன்மதரிசனம் மூற்றிற்று.

மேலொன்பதாஞ்சூத்திரமாக்ய ஆன்மசுத்தி வருமாறு. அஃதாவது ஆன்மா தத்துவங்களோடுங் கூடிநின்று ஜீவிக்கிற முறைமையைவிட்டடந்த வருளோடுங்கூடியதுமேலீடாக மூழ்கித் தற்போதம் ஜீவ்யாமனிற்கிற வவதாரத்தைச் சொல்லுவதெனவறிக.

அப்படியருளைப்பெற்றவர்கள் நற்போதம் ஜீவியாமனிற்பர்களென்னவேண்டுவதில்லை பசாசுபிடியுண்டவனந்தப் பசாசு செய்யுங் கிருத்தியங்களெல்லாஞ் செய்துதின்றாற்போலவந்த வருளைப்பெற்றவர்களு மந்த வருளுக்குண்டான கிருத்தியங்களெல்லாஞ் செய்து நிற்பர்களென்கிற சமவாதியை நோக்கி மறுத்தருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

புகலரு மசுத்தர்தம்பாற் பொருந்திய வலங்கையேபோ
லகிலமு முணருமீச னருளுயிர் மேவலாலே
சகலமு நிகழவேண்டுந் தலைவனைத் தொழுதுய்ந்தாலே
யிகலறவியற்றல்வேண்டு மென்றதுங்கன்றியின்றே. உசு

அருளுயிர்தன்னி லலகைசேர்குறிபோல்
மருவிடுமுதன்மை வாய்மையன்றென்றது.

(இ - ள்.) புகலரு மசுத்தர் தம்பாற் பொருந்திய வலகையேபோல் ஒருகற்குணமு முண்டென்று சொல்லுதற்கரிய வருளாணிகளிடத்திலே பொருந்தின்ற பசாசுபோல

அகிலமு முண ருமீச னருளுயிர் மேவலாலே சகலமு நிகழ வேண்டுந் தலைவ னொழிலுந் தானே யிகலறவி யற்றல் வேண்டு மென்றது நன்றி யின்மே ற.

சர்வத்தையு மொரு நிகழ்ச்சியாக வறிகற சிவனுடைய வருளானது ஆன்மாவிலே பொ ருந்துகையிலுமே லந்தப் பேய்க்குள்ள தன் மைக ளெல்லாம் பிடியுண்ட வர்களுக்குமுன் டானற்போல

அந்தச் சிவனருளைப் பெற்றவர்களுக்கு மந் தச் சிவனைப்போலச் சர்வஞ்ஞத்துவ முண்டா மென்றும் பஞ்சகிருத்திய மாறுபாடில்லாமல் செய்வதுஞ் செய்யுமென்றும் நீ சொன்னது சித்தாந்த வுத்தத்துக்கு நன்மை யிருந்தபில்லை. எ - று.

வி - பு. இச் செய்யுளுக் கிங்ஙனம் பொருட்படுத்தி வந்தவ கையால் சகலமு நிகழவேண்டுந் தலைவ னொழிலுந் தானே யிகலற விபற்றல் வேண்டும். எ-கு. பேய்பிடியுண்டவ னப்பேய் செய்யுங் கிருத்தியங்களை யெல்லாஞ் செய்வதுபோலச் சிவனைப் பெற்றவர்களுஞ் சிவனைப்போலச் சர்வஞ்ஞத்துவமும் பஞ்சகிரு த்தியமுஞ் செய்யவேண்டுமென்று சமயிகள் மதத்தை மறுத்ததா கப் பொருளுரைப்பாருமுளர், அது கருத்தல்ல. அஃதெங்ஙனே யென்னில் அப்படிச் சொன்ன தந்த வருளைப் பெற்றவர்களுக்குச் சர்வஞ்ஞத்துவமும் பஞ்சகிருத்தியமு முண்டாமென் றந்தச் சம யிகள் மதமாகச் சொன்னரென்பதே கருத்தெனவறிக. அதுவே கருத்தென்பதற்கு. பி-ம். இந்நூலைப் பின்சென்றநூலாகிய திரு நெறிவிளக்கத்திலு மிந்த விருத்தத்துக் கெதிரடை விருத்தமாகிய "பூசுரக்குடியசந்தன் றன்னிடைப் பொருந்தல்போல, வீசனருளுயிர்ப்பா லெய்தலா லிவனேயாவு, மாசற வறியுமென்று மைந் தொழில் புரியுமென்றும், பேசுந லுண்மைஞான மன்றிது பிரா ந்

ஞானம்." இதனுள் "ஈசன தருளுயிர்ப்பா லெய்தலாலிவனே யாவு, மாசற வறியுமென்று மைந்தொழில் புரியுமென்றும், பேசுத லுண்மைஞான மன்றிது." என்றமையா லவன் சர்வஞ்ஞத்துவ மும் பஞ்ச கிருத்தியமு முண்டாமென்று னென்றதையே மறுத்த தென்பதை யநுபவத்தாற் கண்டுகொள்க. ஆகையாற் பேய்பிடியுண்டவ னந்தப்பேய்க்குள்ள கிருத்தியங்க ளெல்லாஞ் செய்தாற் போல வருளப்பெற்ற வான்மாக்களு மந்த வருளுக் குண்டான சர்வஞ்ஞத்துவமும் பஞ்ச கிருத்தியமுஞ் செய்வார்க ளென்பதே கருத்தெனவறிக. அப்படியாகு லந்தப் பேய்க் குண்டான தன்மைகளெல்லாம் பிடியுண்டானவனுக் குண்டானது போலச் சிவனுக்குண்டான தன்மையுஞ் சிவனருளப்பெற்ற வான்மாக்களுக்கு முண்டாகுமென்று சமவாதி சொன்னதற்கு வழியேதென்னில் அப்படிப் பேய்பிடியுண்டவ னின்று னின்னபண்டங் கொண்டுவருகிறு னென்றும் இந்நாள் மழைபெய்யு மென்றும் நெருப்பை மிதித்துநின் முடியும் சுடுகிற பாற்சோற்றிலே கையையிட்டுத் துழாவியும் நின்றுற்போல வந்தவருளப் பொருந்தின வான்மாக்களுக்குஞ் சர்வஞ்ஞத்துவமும் பஞ்சகிருத்தியமு முண்டாமென்று சொன்றனென்ற தெனவறிக. அவனப்படிச் சொன்றனென்பதற்கு. பி-ம். சங்கற்ப நிராகரணத்தில். "முன்னேனவ்றனது முதிரொளிஞான - மறியாப்பச்சைச் சிறுபுழுக் கவர்ந்த - வண்டெனவுயிரைக் கொண்டிடு முயிரது - தன்னேநோக்கித் தானது வாகி - யையவகைத் தொழிலு மெய்வகை யுணர்வும் - பிறியாவாறு பெற்றுத் - திரியாப் பெரியோர் திரட்சிசேர்ந்திடுமே." எ - து. கண்டுகொள்க.

என்றது நன்றியின்றே என் றவனை மறுத்ததற்கு. பி - ம். மேல்வருகிற செய்யுளுக்குக் காட்டி மறுக்கிற உதாரணத்திலே கண்டுகொள்க.

இதனுற் சொல்லியது பசாசு பிடியுண்டவனுக் கந்தப்பசா சின் குணமுங் தொழிலு முண்டானுற்போலச் சிவனருளைப்பெ ற்ற வான்மாக்களுக்குஞ் சிவனுடைய சர்வஞ்ஞத்துவமும் பஞ்ச கிருத்தியமு முண்டாமென்று சமவாதி சொன்னனென்னு முறை மையை யறிவித்தது. (உசு)

வேறு—இனி யொன்பதாஞ் சூத்திரமான வாத்ம சுத்தியை ச்செய்யுணன்கிறை ஆனார்த்துகின்றார். அவற்று ளிஃது முற்றுணர் வான வந்தச் சிவஞானத்தைப் பெற்றவர்கள் சிவனைப்போலப் பஞ்சகிருத்தியம் பண்ணவேண்டு மென்னுஞ் சிவசமவாதியை மறுத்தனர்த்திற்று.

புகலரு மசத்தர் தம்பாற் பொருந்திய வலகையேபோல்- சொல்லுதற்கரிய வஞ்ஞானிக ளிடத்திலே பொருந்திய பசாசு- தன் வசமாக்கிக்கொள்ள வவனு மந்தப் பசாசாய் நின்றுற்போ ல,—அகிலமு முணருமீச னருளுயிர் மேவலாலே - சகலத்தையு மறிகின்ற சிவனுடைய ஞான மாத்மாவிலே பொருந்துகையினு லே,—சகலமு நிகழவேண்டும் - சர்வமு மிவனுளத்து நிகழவே ண்டும். அஃ தின்றி,—தவல வனந்தொழிலுந்தானே - கருத்தாட த்தப்பட்ட பஞ்சகிர்த்தியங்களையுந் தானே,—இகலற வியற்றல் வேண்டும் - மாறுபாடற நடத்தவேண்டும்,— என்றது நன்றியி ன்றே - என்றுசொன்ன விது நன்மை யுடைத்தன்று. எ - று.

நிகழ்த்த லீண்டறிதல்.

அப்படி யாதே கூடமாக்கிக் கொண்டு நன்றியின்றேறயென்ற தே தென்று மீளவுஞ் சமவாதிகேட்க நீ சொன்ன திருவுடாந்தத்தா லந்த வருளைப் பெற்றவர்களுக்குச் சர்வஞ்ஞத்துவமும் பஞ்சகி ருத்தியமு முண்டாகாதென்னு முறைமையை மேலருளிச்செய்வா னெடுத்துக்கொண் டருளியது.

சுசு சிவப்பிரகாச சுவ்வியாக்யாகம்.

இன்றுநோக் குராகடக்கு மியல்பிலொர்க் கினை யவாய்ந்து, நின்றதோ ராலகைநோர்ந்தால் நிகழ்வதெ னதுபோலுள்ளத், தொன்றிய வுணர்வுதம்பா லுள்ள துநிகழ்த்துமீசன், றன்னெழுநி னாடாத்துமேனி- தனைக் கொணக்கொண்டுதானே. (உஎ)

பற்றியவலகையின் பரிசுயிர்க்குளதெனுஞ்
சொற்பழுதறும்வகை தோனறமறுத்தது.

(இ-ள்.) இன்றுநோக் குரைகடக்கு மியல்பிலொர்க்கினையவாய்ந்து நின்றதோல் நிகழ்வதென் றதுபோல் உள்ளத் தொன்றிய வுணர்வுதம்பாலுள்ளது நிகழ்த்தும் ஈசன் றன்னெழுநினாடாத்துமேனி தனைக்கொணக்கொண்டுதானே.

இப்பொழுது குருடனுமாய் ஊமையுமாய் மூடவனுமா யிருப்பா னொருவனைப் பசாசு பிடித்தபொழுது அவன்காலைவல்லவ னவனே னவ பேசவல்லவ னவனே னவ நடக்கவல்லவ னவனே னவ

அத்தன்மைபோல

ஆன்மாவினிடத்திலே பொருந்தின வுரு ளான தவர்களுக் குண்டான விச்சாஞானக்கி ரியைகளுக் கிடாக வநிவித்து நிற்குமாகை யால்

பரமேச்வரனுந் தனக்குப் பொருந்தின தொரு திருமேனியைத் தானேயெடுத்துக்கொ ண்டு தனக்குமுறைமையான கிருத்தியங்களை நடத்துவன். எ - று.

று - ம். உள்ளத் தொன்றிய வுணர்வு. எ-து. உயிர்க் குயி ராய் நிற்கிற திருவருளை யெனவறிக.

தம்பாலுள்ளது நிகழ்த்தும். எ-து. ஆன்மாவுக் குண்டான ஞற்றறிவுக்குத் தக்கதாக வநிவித்து நின்றதெனவறிக.

இவ்வனஞ் சமவாதிசொன்ன திருஷ்டாந்தத்தையும் பொருளாயு மறுத்ததற்கு. பி - ம். சங்கற்ப நிராகரணத்தில் "அவனி வருகி லிவனவன்செய்தி - யென்றுசெய்வா னென்றியம தத்தா-லெல்லாமறிதல் செல்லா துயிர்கள்-சிற்றறிவினுடிச் சொற்றவரு-குடனென்பதனலகை தன்பதமடைதோர் - கொண்டவாறு கண்டனமென்னின் - மூவ்வகையந்தருற் றோருங்கிய குணங்குறி - செய்வதெனினும் பவ்வமுற்றழுந்தினு-நாழிகாள்ளா தாழினினலபுன-லதனுற் கருத்து முதலுளதாக - வேண்டுமன்றே." என-து. கண்டுகொளக.

இதனுற் சொல்லியது அருளைப் பொருந்தின வான்மாக்களங்க வருள்செய்யுங் திருத்தியங்களெல்லாஞ் செய்வர்களென்று சொன்ன சமவாதியை மறுத்து அப்படி யருளோடுங் கூடினலும் தேயந்தோன்றுத விடத் தவர்களுக் குண்டாகிய சிற்றறிவாழுந்து பேரறிவுண்டாகாதென்று முறையிட்டது. (உஎ)

வேறு—இது அந்த முத்தாத்மாக்க ளியல்புஞ் சிவனியல்பு மூணர்த்திற்று.

இன்றுநோக் குரை நடக்கு மியல்பிலோர்க்கு - இப்போது கண்ணுறும் வாக்குங் கமனக் கிரியையு மில்லாக் குருட் டிமை மூடவனிடத்திலே,—இவையபவாய்ந்து நின்றதோ பலகைநோர்ந்தா னிகழ்வதென்-இவையெல்லாஞ் சிவித்து நிற்கின்ற தொரு பசாசுபொருந்திய வெறுக்குக் கண்டெரிந்ததோ சொல் வழங்குமோ நடைவருமோ விலலையே,—அதுபோ லுள்ளத் தொன்றிய வுணர்வுதம்பா லுள்ளது நிகழ்த்தும் - அத்தன்மைபோல வாத்மாவி னிடத்தி லெபொருந்திய ஞானத் நவ்வாத்மா பிரயோசனமான சிவத்தை விரும்ப,—மற்றத்தன்மைய தாகுந்தானை-அங்குள்ளதையே யுண்டாக்கு மிதம்,— நாசன்றன் றெழினடத்து மேனி தனக்கென

கொண்டுதானே - பரமசிவன் தனக்குப் பொருந்திய திருமேனியைத் தனக்குந் திருமேனியாகத் தானே கொண்டு தனக்கு முறைமையான பஞ்சகிருத்தியத்தை நடத்தாநிற்பன் எ - று.

முன்னர் நிறுத்திடுவ னிணைந்தவுரு வென்றது மிது.

அப்படியாலு லிந்த வான்மசுத்தியாற் பயனேதென்று வினவின மாணவகணேநோக்கி மேலருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

இங்கிலை தன்னின்மன்னி யெய்திடுங் கலாதிபோதந்
தன்னளவறிந்துநிற்குந் தகவிலா மலங்கணீத்த
வங்கிலை காரணமாகா வகையதி லறிவடங்கி
மன்னிடவியாபியாயவான்பயன் மேலுன்றுமன்றே. உஅ

உளத்தறிவடங்க வொடுங்குமெல்லையிற்
றுளக்கறுபரனுந் தோன்றுமென்றது.

(இ - ள்.) இங்கிலை தன்னின் மன்னி யெய்திடுங் கலாதி போதந் தன்னளவறிந்து நிற்குந் தகவிலாமலங்கணீத்த வங்கிலை காரணமாகா வகையதி லறிவடங்கி மன்னிடவியாபியாயவான்பயன் மேலுன்றுமன்றே.

இந்த வான்மசுத்தியாவது ஆன்மாவுங் கருவிகளுங் கூடி ஜீவிக்குமிடத்துக் கலாபாதியாயுள்ள தத்துவங்களிலுலே யான்மபோதம் ஜீவிக்கு மதுவும் அந்தத் தத்துவங்கள் ஜடமென்பது முணர்ந்து

இங்ஙனங் கூடி நிற்கப்பட்ட குற்றத்தையுடைய தத்துவங்களை நீக்கி யந்தவருளே தனுவாக நிற்கிற வான்ம தரிசனத்தையும் விட்டு அந்தவருளே மேலீடாகத் தற்போதம் ஜீவியாம லிற்கிறதே யான்மசுத்தியாவது. இந்த வான்மசுத்தியிலே நிற்கவே

எவ்விடத்து நிறைந்து நிற்கிற சிவமாகிய சுகரூபந் தனக்குத் தோன்றும். எ - று.

வி-பு. தகவிலா மலங்கணீத்த வந்நிலை. எ - து. ஆன்மதரி சன மெனவறிக.

கரணமாகா வகையதி லறிவடங்கிமன்னிட. எ - து. ஆன்ம சுத்தி யெனவறிக.

வியாபியாய வான்பயன் மூன்றும். எ-து. ஆன்மலாப மெனவறிக.

இதனாற் சொல்லியது அருளானது தன்னையு மான்மாவையு மலங்களையுங் காட்ட வான்மா கண்டுநிற்கிற வவதர மான்ம தரிசனமென்றும் ஆன்மா வந்த வருளோடுங்கூடித் தற்போதம் ஜீவியாம லந்த வருளே மேலீடாக மூழ்கிநிற்கிற விடம் ஆன்ம சுத்தி யென்றும் அப்படித் தற்போதம் ஜீவியாம னிற்கவே மேலான்ம லாப முண்டாமென்னு முறைமையு மறிவித்தது. (உஅ)

——o——

வேறு—இது அங்ஙனமாயி னிந்த வாத்மசுத்தியாற் பயனே தென்று விளையதற் குத்தர முணர்த்திற்று.

இந்நிலை தன்னின் மன்னி - ஆசிரிய னுபதேசித்த விந்த மார்க்கத்திலே நிலைபெற்று,—எய்திடுங் கலாதி போதம் - ஆணவமலத்தை நீக்குதல் காரணமாகப் பொருந்தின கலாதிகளாலே யெழுப்பப்பட்ட தன்னுடைய விச்சாஞானக் கிரியைகளையும்,—தன்னளவு - அவற்றைக் கொண்டறியுந் தன் னுண்மையையும்,—அறிந்துநிற்குந் தகவிலாமலங்கள் - தன்னை யறுதியே பொருந்திய மயக்கத்தைச் செய்துநிற்கிற மலங்களினுடைய தன்மையையும் அருள் கண்ணுரைக்கண்டு,—நீந்த வந்நிலை - நீக்கிய வந் நிலையிலே,—காரணமாகாவகையதி லறிவடங்கி மன்னிட - இச்சா ஞானக் கிரியைகள் கூடாம லாத்மா ஞாதுரு வென்கின்ற தன்மையை யொழிந்து வேறின்றி யருளிலே நிலைபெற்றிட,—வியாபியாய வான்பய னென்று மன்றே - அப்பொழுதே யெங்கு மொழிவற நிறைந்து நிற்கும் பெரிய பயனுகிய தற்காட்சி தோன்றும். எ - று.

சருஉ சிவப்பிரகாச சவ்வியாக்யாநம்.

நேயந்தோன்று மென்பாரு முளர். அது மன் சுத்தஞானத் தொருமுதலுன்று மென்றதனை மினிவருஞ் செய்யுளின் பொ ருளா லும் டொருந்தாது.

அப்படி யந்தவருளிடமாகச் சிவத்தோடுங் கூடினவர்க ளந் தச் சிவத்துடனே யொன்றுபட்டுப் போகிற தொழிந்து அங்கே யொரு நேடந்தோன்று மென்கிறது பொருளல்லவென்ற சைவ ரை மறுத் தருளிச்செய்வா னெடுத்துக்கொண் டருளியது.

அடைபவர் சிவமேயாகு மதுவன்றித் தோன்று மென்ற, கடனேதெ னென்னில்முன்னங் கண்டிடார் தம்மைப்பின்னுந், தொடர்வரு மருளினாலுந் தோன்று மாகாணராபி, னுடையவ னடிசேர்ஞான மூனர் தனின்றணைதலின்றே. (உக)

ஒன்றுறுபய னுணராதபிரனின் னன்றுமுத்தியை நாடானிதென்றது.

(இ - ள்.) அடைபவர் சிவமேயாகு மதுவன்றித் தோன்றுமென்ற கடனேதெ னென்னில் — அப்படியே சிவத்தோடுங் கூடின ஆன்மாக்கள் சிவமாய்ப் போகிற தொழிந்து அவ்விடத்து வேறுமொரு பயன் மேலுன்றுமென்றகா ரண மேதென்னில்

முன்னங் கண்டிடார் தம்மை பின்னுந் தொடர்வரு மருளினாலுந் தோன்றுமாகாணராபின் — முன்பு பெத்தத்திலே மலமாயா கன்மவ்க ளோடுங் கூடி மயங்கி நிற்கையிலேலே தங்க ளுண்மையை யறிந்தாரில்லை. என்ன வே தங்க ளுண்மையை யறியாதது கொண் டே சிவனையு மறியமாட்டார்கள்

அந்தப் பெத்தத்தை நீங்கினபின்பு தனக் குக் கிட்டுதற் கரிதாகியஞானத்தைப் பெற்று

லுங் தோன்றுமா காணரர்யின் உடையவ னழி சேர்ஞான மூணர்தலின் றஜனதலி ன்றே.	வவதரதது சிவதரிசனப்பட்டுச் சிவபோசத் தைடறுபவியா ராமாகில் சர் வான்மாக்களையு மழிவைமையாக வுடைய சிவனது திருவடியைக் கூடுகைச்குக் காரண மான ஞானத்தையறிந்தது மில்லை அந்த ஞா னத்தாலே சிவனுடைய திருவடியிலே யிரண்டறக் கூடினது மில்லையாம். எ - று.

உ-ம். ஆன்மா சிவத்தோடுங்கூடித் தற்போதங் கெட்டுச் சிவமாய் விடுமென்று சைவர் சொன்னதற்கு. பி - ம். சங்கற்ப நிராகரணத்தில் "தன்னையுமதனையுந் தன்முதற்பொருளையு-மின்ன தென்றறியா விருவருமுபங்கி-யொன்றுயுறுபய னுவப்பு - மொன்று மிதுசிவகதியே" எ-து. கண்டுகொள்க.

இது அத்துவாகாதென்று சைவரை மறுத்ததற்கு, பி-ம். சங் கற்ப நிராகரணத்தில் "இருவருங்கூடி யொரு பயனெய்துதன்-மருளினையிவ்வா றபேதிகணினிலே - யொன்றுமென்ற லென்றியுமு வப்பு - மின்றுமென்று லென்பய னியம்புக" எ-து. கண்டுகொ ள்க.

இந்த விருத்தத்தா லான்மா சிவத்தோடுங் கூடித் தற்போ தங் கெட்டுச் சிவமாய்விடுகிறதே முத்தியென்கிற சைவரை மறு த்து அப்படியாதற் பெறுவானும் பேறுமில்லையாய்ச் சாயுச்சியமு மில்லையென்னு முறைமையை யறிவித்தது. (உக)

வேறு—இது அப்படி ஞானத்தை யடைந்தவர்கள் நேயமா ன சிவபாவதேயன்றி வேறு மொருபயன் பேறன்றுமென்பதென்ன வென்பாரை மறுத் துணர்த்திற்று.

அடைபவர் சிவமேயாகு மதுவன்றித் தோன்று மென்ற கட னதேனென்னில் - சிவஞானத்தை யடைந்தவர் சிவமாய் விடுத

லையன்றி யவ்விடத்து மற்றுமொருபயன் றோன்றுமென்ற முறை
மையென்னையென்ற ஐக்யவாதியுந் சிவாத்துவிதியுஞ் சொல்வி
ல், —முன்னங்கண்டிடார் தம்மை-முன்பே மலமாயாகன்மங்களு
டனேகூடித் தேகாதிகளைத்தாமென் றபிமானம்பண்ணித் தம்மை
க்காணுர்கள், —பின்னுந் தொடர்வருமருளினாலுந் தோன்றுமா கா
ணுராயின்-அனுக்கிரகம்பெற்ற பின்புங் கிட்டுதற்காரிய விந்தஞான
த்தாலுந் தன்மை தோன்றும்படி காணுராயின், —உடையவனடி
சேர்ஞான முணர்தலின் றணைதலின்றே-குருத்தன் றிருவடியாகிய
ஞேயத்தைச் சேர்தற்குக் காரணமான சிவஞானத்தை பறிதலுங்
கூடா தறியாமையாலே திருவடியைக் கூடுதலுமில்லை. எ - று.

☞ ஒன்பதாஞ் சூத்திரமாகிய ஆன்மசுத்தி
முற்றிற்று.

மேற் பத்தாஞ் சூத்திரமாகிய ஆன்மலாப மருளிச்செய்வா
னெடுத்துக்கொண்டருளியது. அஃதாவது சிவனுடைய வருளா
லுங்கூடித் தற்போதம் ஜீவியாமனிற்கவே யந்தச் சிவமாகிய ஞே
யந் தோன்றுமாதலால் அந்தச் சிவத்தோடுங்கூடி யான்மா சிவா
நுபவத்தைப் பெற்றிருக்கு முறைமையைச் சொன்னதென வறிக.

மேல்வரும் விருத்தத்துக்குத் தொந்தனையாவது அந்த ஞேய
மாகிய சிவத்தோடுங்கூடி யநுபவிக்கு முறைமை யெப்படியென்று
வினவின மாணவகனேநோக்கி யருளிச்செய்வா னெடுத்துக்கொ
ண்டருளியது.

பொற்புறு கருவியாவும் புனராமே யறிவிலா
மற், சொற்பெறு மதிதம்வந்து தோன்றுமே தோன்
றினின்ற சிற்பர மதனுலுள்ள செயலறுத் திடவுதிக்குந்,
தற்பர மாகிநிற்றல் சாக்கிரா தீதந்தானே. (கூ0)

நீக்கமில்சிவத்துட னிலைபெறநிற்குஞ்
சாக்கிராதீதந் தன்மைசாற்றியது.

(இ-ள்.) பொற்புறு கருவி யாவும் புனராமே — அந்தச் சிவத்தோடுங்கூடி யநுபவிக்குமவ தரத்துப் பொலிவினை யுடைத்தாகிய கருவிகள் முப்பத்தாறும் பொருந்தி விகற்பியாதே. அதுவன்றியும்

அறிவிலா மற்சொற்பெறுமதீதம் வந்து தோன்றுமே — அறியாமை யென்னுஞ் சொற்பெற் றிருக்கிற வாணவமலத்தால் மறைப்புண்டதிதாவத்தைப்பட்டுக் கிடவாதே. இங்ஙனஞ் சொல்லப்பட்ட சகலாவத்தையுங் கேவலாவத்தையும் விட்டு நீங்கின வவதரத்து

தோன்றிநின்ற சிற்பர மதனுள்ள செயலறுத்திட வுதிக்குந் தற்பரம் — ஆன்மாவிடத்திலே யநாதியே கூடிநின்று பக்குவத்திலே பிரகாசிக்கப்பட்ட மேலான வருளானது காட்டத் தான் காண்கிற காட்சியைவிட்டு அந்தருஞானந் தாலாய்நிற்கவே யந்தருஞானமாகிய வருளுக்கு முதலா யிருக்கப்பட்ட சிவமாகிய தேசுடன்தோன்றிப் பிரகாசியாநிற்கும்

ஆகிநிற்றல் சாக்கிராதிதந்தானே — அங்ஙன முதயஞ் செய்யப்பட்ட வந்தச்சிவத்தோடுங்கூடிச் சிவபோகமாய் நிற்கிறதுதானே சாக்கிரத்தி லதீதம். எ-று.

நு-ம். பொற்புறு கருவியாவும் புனராமே. எ-கு. கருவிகள் முப்பத்தாறும் பொருந்தி விகற்பியாதே யென்று பொருட்படுத்தினத்தக்கு வழியே தென்னில் சகலாவத்தைப்பட்டு நில்லாதே னென்பதுமன்றி யாவும் என்றசட்டியுலே கலையாதிமண்ணைந்தமாயுள்ள தத்துவ மூப்பத்தொன்று நீங்கலாகச் சுத்தமாயையிற் றோற்றமாயுள்ள சிவதத்துவங்கள் நீங்கியே முத்தியென்டனைப்பற்றி

பெனவறிக. அப்படி யந்தச்சிவதத்துவங்க ளொந்தையுங் குறித்துச் சொல்லவேண்டுங் காரணமேதென்னில் அந்தச் சிவதத்துவங்க ளொந்திணுந் தத்துவகத்தாக்க ளாவரு மதிஷ்டித்து நிற்கையால் மூத்தியைப்பெறு மவர்களுக்குப் பிரமசாயுச்சியமென்றும் விஷ்ணு சாயுச்சியமென்றும் உருத்திரசாயுச்சிய மென்றும் மகேஸ்வர சாயுச்சிய மென்றும் சதாசிவ சாயுச்சியமென்றும் விந்து சாயுச்சிய மென்றும் நாதசாயுச்சியமென்றும் வருகையா லனைவையெல்லாந் சுத்தமாயையிலடங்கி வருகையாலே யனை வைசுத்தாந்தத்துக் விரோதமாகிய சமயிகள் கருத்தைப்பற்றி நிற்கையாலு மதுபதமூத்தியிலே கூடிவருகையாலு மதுசாயுச்சியத்துக் காகாதபடியா லே யதனையடாகாதென்ற தெனவறிக. அப்படிச் சுத்ததத்துவங்களு நீங்கியே சாயுச்சியமென்பதற்கு. பி-ம். சித்தியாரில். "மூவகை யணுக்களுக்கு முறைமையால் விந்துரோன, மேவினதில்லையாகில் விளங்கிய ஞானமின்று, மோவிடவிந்துரோன முதிப்பதேதார் ஞா னமுண்டோடற், சேவுயர் கொடியிருன்றன் சேவடி சேரலாமே." என்பதனுள் "விந்துரோனமோவிட" என் றறுவயித்துப் பொரு ள்கூட்டி விந்தாதமூலாயுள்ள தத்துவங்களு நீங்கியே மூத்தி யென்றதெனவறிக.

இனி தத்துவங்களுந் தத்துவகத்தாக்களு நீங்கியே மூத்தி யென்பதற்கு. பி-ம். புராணசாரத்தில். "பாரணவும் புல்லனந்தக் கரணமொன்றும் பாராமே நடுநாடி பயிலுநாதங், காரணபங்க யன் மூதலா னைமவர்வாழ்வுங் கழியுநெறி வதிபடவுங் கருதிமே லைப், பூரணமெய்ப்பரஞ்சோதி பொலிவுநோக்கி." எ-ம். திருவா சகத்தில். "ஆட்டுத்தேவர்தம் விதியொழித்தன்பா லெயனேயென் றன்னருள்வழியிருப்பேன்." எ-ம். தத்துவ மூப்பதுதாறு நீங்கி யே மூத்தியெனபதற்குக் கோயிற்புராணத்தில். "தரைமூதலாரு நினவரு நாதாதியின்மீதே." எ-ம். திருக்களிற்றுப் படியாரில்.

"நாதாந்தத்தே யிருப்பர்." எ-ம். திருப்புகழில் "விந்தநாதவோ சைக்குத் தூரமானது." எ-ம். வருமேதக்கஸைக் கண்டுகொள்க.

இனி யந்தச்சுத்ததத்துவங்கள் சுத்தமாணயயிற் றோற்றமாகையாற் சுத்தமாயையைப்பற்றி நினறவிடம் பதமுத்தியாகையால் பதமுத்தியைச் சாயுச்சிய மென்கிற சமயிகள் கருத்தாமென்று சொன்னதற்கு. பி-ம். சங்கற்ப நிராகரணத்தில் சிவசமவாதியை மறுக்குமவதரத்தில் "செடியுடலுறுகாக் குடிலைகொடுக்குமென்-றோதினுங்கியே பேதாய்பகட்டுர - லொளிர்சினைமுச்சித் தளிரெறு மிதுதகு - மிச்சாரூப நச்சினரென்னின் - மும்மலத்தேதுமின் மையதன்றே - யிதுவளர்முத்திப் பதமெனவிளம்புவர்." எ-ம். சித்தியார்லும். "அநாதியுட லொன்றினைவிட் டொன்றுபற்றிக் கன்மாலா யழிந்துவருதலா லந்தமில்லைப், பிறதியருள் பெற்றவர் கள் நித்தவுருவத்தைப் பெற்றிருக்கை முத்தியெனிற் பெறும்பத மேயிதுவு, மிருதுநிலை யிதுதானுங் காயமுண்டே, யிருங்கன்மமா யைமல மெல்லாமுண்டா, மறுதிதருமுடலாதி காரியத்தாலநாதி மலமறுக்கு மருந்தற்று லுடன்மாயுங்காணை." என்பதனுள் "நித் தவுருவத்தைப் பெற்றிருக்கை முத்தியெனிற் பெறும்பதமே யிதுவும்," எ-து. கண்டுகொள்க. என்றிங்ஙன முத்தியைப்பெறுமிடத்துச் சுதததத்துவ நிங்கியே முத்தியாகையாற் றத்துவ மூப்பதற்றாறு நிங்கியே முத்தியென்பது கருத்து. இதற்கு. பி-ம். ஞானமிர்தத்தில். "மூப்பதிலூதுதரை மூவிரண்டோவா - வொப்பிறத் துவ மொரீஇயதிபமென்." எ-ம். திருமந்திரத்தில்." மூப்பதுமா றும் படிமுத்தியேணியா, யொப்பிலாப் பேரண்டத் துள்ளில்வெ ளிபுக்குச், செப்பவரிய சிவங்கண்டு தாந்தெளிந், தப்பரிசாகி யுமி ர்ந்திருந்தானே." எ-ம். கண்டுகொள்க. ஆகையால் கருவியாவும் புனராணமையென்பது ஆன்மதத்துவ மிருபத்துநாலும் வித்யாதத் துவமேழுஞ் சிவதத்துவமைந்தும் ஆகத் தத்துவ மூப்பத்தாறு மெனவறிக்.

சூத்-அ சிவப்பிரகாச சுவ்வியாக்யாநம்.

இனி யறிவிலாடற் சொற்பெறு மதிதம்வந்து தோன்றுமே. எ-து. அறியாமையென்கிற வதீதாவத்தைப்பட்டுக் கிடவாதேயெ ன்று பொருட்படுத்தினதத்துக்கு வழியேதென்னில் முத்தியைப் பெறுமவர்கள் நத்துவ மூப்பத்தாறையுங் கழன் றந்தச்சிவத்தோ டுங்கூடிச் சாக்கிராதீதம் புரிந்திருக்கு மவதரத்துக் கருவிகளெல் லாங் கழன்றவிடங் கேவலத்துக் கிடமாகையா லறியாமையோடு ங்கூடிக் கேவலப்பட்டு வீழாதேயென்று சொன்னதென வறிக. அன்றியு மான்மா முத்தியிற் பாடாணம்போலே கிடக்குமென்று சொல்லுகிற அகச்சமயத்திற் பாடாணவாதி புறச்சமயத்திற் பிர பாகர னென்னுமிவர்கள் கருத்தைப்பற்றியு மதனையாகாதெனவு மாமெனவறிக. அவர்க ளப்படிச் சொன்னதற்கு. பி-ம். சங்கற்ப நிராகரணத்தில். "காட்சியென்னக் காணுத்துயர - மாட்சியைமு த்தி யெனவகுத்தனரே." என்று பாடாணவாதி சொன்னதற்குக் கண்டுகொள்க.

அதனையாகாதென் றவனை மறுத்ததற்கு. பி-ம். சங்கற்பநி ராகரணத்தில். "காட்சியென்னக் காணுத்துயர - மாட்சியைமு த்தி யெனவகுத்துரைக்கிற் - காணபாவ மரணங்கருமர - மேய்க் ந்தவர்முத்தி சேர்ந்தவரன்றே - யனையகதிக்கோர் முனைவரும்வே ண்டா - தனிதருதயா மெனுமிறதிடமே - பாடாணத்திற் கூடா முத்தி" எ-து. கண்டுகொள்க.

மற்றப் புறச்சமயதத்திற் பிரபாகரன் முத்தியிற் பாடாணம் போலக் கிடக்கு மென்பதற்கு. பி-ம். சித்தியாரில். "அருஞ்செய லின்பாவத்தே பூர்வமெனு மதுதோன்றித், தருஞ்செய லொன்றி ன்றியே தானபவிப்ப தாகுமது, வருஞ்செய லொன்றின்றியே மண் சிலைபோலாமுத்தி, தருஞ்செயலு மெனவுணர்ந்து காரணமே லவன்சாற்றும்." எ-து. கண்டுகொள்க.

அதனை யாகாதென் றவனை மறுத்ததற்கு வழியேதென்னி ன்மா வப்படி முத்தியிற் பேதங்கெட்டுப் பாடாணம்போற்

கிடக்குமென்றுல் முத்திபெற் றநுபவிக்கப் போதமில்லாதபொ ழுது அநுபவமாகாதபடியா லதனை யாகாதெனற தெனவறிக. அப்படிப் பிரபாகரனை மறுத்ததற்கு. பி-ம். சித்தியாரில். "ஆகங் தங்கதியென்ன வறிவழிகை வீடென்கை, யூனம்பின் ணணர்வழிந் தோர்க் குளதாகுமோமுத்தி, தானிவ்குச் சிவப்பொழியத் தழனி ற்குமாறில்லை, ஞானங்கெட் டுயிர்நிற்கு மெனுமுரைதா னண்ணு தால்." எ-து. கண்டுகொள்க. அன்றியு முத்தியிலான்மா போதங் கெட்டுப் பாடாணம்போற் கிடக்குமென்பது சித்தாந்தப் பொரு ளுக்கு விரோதமென்பதற்கு. பி-ம். சித்தியாரில். "கரணங்கள் கெடவிருக்கை முத்தியாமென்னிற் கதியாகுஞ் சினைமுட்டை கரு மாத்திணுயிர்கள், மரணங்கொண்டிடவுறக்க மயங்களூர்ச்சிக்க வாயுந்தம்பனைபண்ண வல்விடத்தைதடையச், சரணங்கள் புகுநி ழற்போற் றனையடையுஞ்சமாதி தவிராது மலமிதுவும் பசுஞான மாகு, மரணங்க ளெரித்தவன்றன் னடியையறிவிறந்தங் கறிந்தி டார் செறிந்ததுக ளகற்றிடோ." எ-து. கண்டுகொள்க.

இனி தோன்றிநின்ற சிற்பரமதனுணுள்ளச் செயலறுத் திடவுதிக்குந் தற்பரம் என்றபதத்தில் தோன்றிநின்ற சிற்ப ரம். எ-கு. தன்னிடத்திலேகூடிப் பிரகாசித்து நிற்கிற ஞான மென்று பொருட்படுத்தினத்துக்கு வழியேதென்னில் அஃதா வது கண்களுக்கு ஆதித்தப்பிரகாசங் காட்டாகநின்றுற் போலச் சர்வான்மாக்களுக்கு மூயிர்க்குயிராய்நின் றறிவிக் கிறது பூரணமாகிய திருவருளே யெனவறிக. அப்படிக்கண் களுக் காதித்தன் காட்டாகநின்றுற்போலத் திருவருள்ஞா னாகிய ருன்மாககளை யறிவிக்குமென்பதற்கு. பி-ம். சித்தியா ரில். "மருளினை யருளாஸ்வாட்டி மன்னுயிர்க் களிப்பன்கண் கட்., கிருளினை யொளியாலொட்டு மிரவியைப் போலவீசன்." எ - து. கண்டுகொள்க.

இனி யதனுலுள்ளச் செயலறுத்திட வுதிக்குந் தற்பரம். எ-று. ஆன்மா வந்த வருளானது காட்டத் தான் காண்கிற காட்சியை யிழந்து ஞானந் தானுய்ந் நிற்கவே யந்த ஞானத்திக்கு முதலாகிய சிவமாகிய ரூபந் தோன்றுமென்று பொருட்படுத் தினத்துக்கு வழியேயதென்னில் அந்த நிஷ்களசொரூபமாயுள்ள சிவமானது தன்னை யான்மபோதத்தாற் சுட்டியறியுமாளெல்லாங் கூடி நிற்கச்செய்தே யுமறைந்நின்றருளுவான்மாவானது தன் செயலறுதியைக்கண்டு தற்சிட்டைகெட நிற்குமவதரத் தந்தச் சிவம்பிரகாசிக்கையாலப்படிச் சொன்னதெனவறிக. இவை யிரண்டுக்கும். பி-ம். சிவஞானபோதத்தில். "ஞானவனென் றறைஞனினைச்சு ஞாதிரூளரு ண்டாதல், தானைனவொன் றின்றியே தானதுவாய்-நானெனவொன், றில்லென்றுதானே யெனுமவரைத் தனைமுனைவித், தில்லென்று தாளுமிறை." எ-து. கண்டுகொள்க. அனறியும் திருக்களிற்றுப்படியாரிலும். "உள்ளமுதலினைத் துமொன்ற வுருகவரி, னுள்ளமுருகவங் துடனுங - தெள்ளி, யுணருமவர் தாங்க ளுளராகிலென்றும், புனராவரநில்லாப் பொருள்." எ-து. கண்டுகொள்க.

இனி தற்சிட்டைகெடநின்றதே சிவானுபவம் என்பதற்கு. பி-ம். தேவாரத்தில். "தன்னைமறந்தா டன்னுமங்கெட்டா டலைப்பட்டா ணங்கைதலைவன் முளை." எ-ம். திருவாசகத்திலும். "ளுண்கெட் டுயிர்கெட் டுணர்வுகெட் டென்னுள்ளமும்போய், நான்கெட்டவாபாடித் தெள்ளேணங்கொட்டாமோ." எ-ம். கண்டுகொள்க. அன்றியும் திருவள்ளுவர். "யானெனதென்னுஞ் செருக்கறுப்பான் வாலறிவர்க், குயர்ந்தவுலகம் புகும்" என்பதுமிப்போருட்பற்றி யெனவறிக.

இனி யாகிநிற்றல் சாக்கிராதீதந்தானே என்றபதத்தில் ஆகிநிற்றல். எ - று. ஆன்மா வந்தச்சிவத்தோடுங்கூடிச் சிவமாய்நிற்கவென்று பொருட்படுத்தினத்தக்கு வழியேதென்னில் அப்படிச்சொன்னதந்தச் சிவத்தோடுங்கூடிப் பிறிவறநிற்கவெனவறிக. அஃதெங்ஙனமெயென்னில் ஆதித்தப்பிரகாசங் காட்டாகப் பிரபஞ்சரூபத்தைப் பற்றிநின்ற கண்ணுனது அந்தவுருவங்களைவிட்டந்தப்பிரகாசமிடமாகச்சென்றந்தப்பிரகாசத்துக்கு மூதலாயிருக்கிற வாதித்தனைக்கண்டு பிறிவறநின்ருற்போல வான்மாவு மருளிடமாகக் கூடிநின்று சுத்தாதிவிடயங்களைப் புசித்துநிற்கச்செய்தே யதனையும்விட்டு மேருவிகாரமுமடங்கியந்தவருளுக்கு மூதலாயிருக்கிற சிவத்தோடுமந்தவருள்காட்டாகச்சென்று கூடிப்பிறிவற்றிரண்டறநிற்கையாலப்படிச்சொன்னதெனவறிக. அப்படிப் பிரபஞ்சரூபத்தைப் பற்றிநின்ற கண்ணுனது திருப்பியாதித்தனை நோக்குமளவிலந்தப்பிரபஞ்சரூபங்கள் தெரியாததுபோலவென்றுபமானங்கூறினதற்கு. பி - ம். ஞானமிர்த்தத்தில். ”தீதருநெடுங்கண்ணுதவலட்டத்-தயலான்றன்மைபோலவும்.” எ-று. கண்டுகொள்க. அன்றியு மான்மா சிவதோதாடுங்கூடிச் சிவமாய்நிற்குமென்பதற்கு. பி-ம். திருவாசகத்தில். “அவமாயதேவ ரவகதியிலழுந்தாதே, பவமாயங்கெடுத்தெனையாண்டுகொண்ட பரஞ்சோதி, நவமாயசெஞ்சுடர்ஞாயிறோடுதிங்க, ளிவமானவாபாடித்தென்னோணங்கொட்டாமோ.” எ - று. கண்டுகொள்க. என்னவே சிவமாயென்றது ஆன்மாத்தற்போதமாய்நிற்பதுஞ் செய்யாமற் முனைன்கிற மூதல்விகுதிவதுஞ் செய்யாமற்றற்போதங்கெட்டந்தச்சிவதோதாடுங்கூடியிரண்டறநின்றறுதிபவித்தெனவறிக. அப்படிச் சிவமாயென்றசொல் அந்தச்சிவமாவதுஞ் செய்யாமற் பிறிந்துநிற்பதுஞ் செய்யாமல் நிற்கை

யென்பதற்கு. பி - ம். சங்கற்பநிராகரணத்தில். "ஆஞையெ ன்ப தனேத்தமவ்வகை-தாகுகாமையைச் சாற்றிடுமென்க-தானேயெனுமித் தனியேகார - மழிந்திலரதுவே யாய்ந்திலதுவிட் - டொழிந்திலர்பிறிதில ரெனுமிவையுணர்த்தும்:" எ - து. கண்டுகொள்க.

இனி சாக்கிராதீதந்தானே. எ - கு. கேவலசகல மிரண்டையு நீங்கிநிற்கவென்று பொருட்படுத்தினத்துக்கு வழியேதென்னில் அஃதாவது கீழாலவத்தைப் பட்டாணவமலத்தான் மறைப்புண்டறியாமையாய்க் கேவலாதிதமாய்க் கிடப்பதஞ் செயயாமல் உட்கரணம் புறக் கரணங்களோடுங் கூடிச் சகலநுய்ச் சுத்தாதி விடயங்களோடுங் கூடி ஜீவிப்பதஞ் செய்யாம லின்ற விடமெனவறிக. இதற்கு. பி-ம். சித்தியாரில். "அறியாமையறிவகற்றி யறிவுதனேயருளி லறியாதேயறிந்து, குறியாதகுறித் தங்தக் கரணங்களோடுங் கூடாதேவாடாதே குழைந்திருப்பை யாயிற், பிறியாத சிவந்தானே பிறிந்துதோன்றிப் பிரபஞ்சமே தமெல்லாந் தாருய்த்தோன்றி, நெறியாலே யிவையெல்லா மல்லவாகி நின்றென்றுந் தோன்றிடுவ னிராதாரனே." எ-ம் தேவிகாலோத்திரத்தில். "திருந்தகு சமாதியைச் செய்யுங் காலத்துக், கருந்தெழுந் தடங்காது கலங்குமாயினும், வருந்தமாய் நித்திரை மருவுமாயினுந், திருந்தறி வுறுத்தந்தன் னிலையிற்சேர்க்கவே." எ-ம். "நித்திரையும் பராக்கினையு நீக்கிச், சித்தமொருநிலையு நீங்காம னிறுத்திக்கொண்டால்." எ - ம். கோயிற்புராணத்தில். "கரணமனத்தும் புலனினைவகாலை கைவிட்டால், மரணமெமக்கிங் கிதுதமி யேம்வாழ் வருண்மாறிற், நிரணமுமெய்ச்சுக சுலபமிலதென் றொன்றுலனின்,, புரணமெனக்கொன்ட ருருகவென் றூர் நினைமூர்கள்." எ - ம். திருக்களிற்றுப்படியாரில். "உனை

ராதே யாது முறங்காதே யுண்ணிப், புணராதே நீபொதுவே நிற்கில்." எ-ம். திருமந்திரத்தில். "நினைப்புமறப்பு மிலாதவி டத்தே, வினைப்பற் றறுக்கும் விமலனிருப்பன், வினைப்பற்ற றுக்கும் விமலனோடி, நினைக்கப் புகிலவ னீளியனுமே." எ - ம். "இரவும்பகலு மிலாதவிடத்தே, குரவஞ்செய்கின்ற குழலியைநாடி, யரவஞ்செய்யாதவ ளோடுஞ்சந்திக்கிற், பரவஞ்செயாவகைப் பாலனுமாமே." எ-ம். வருமேதனக்கனைக் கண்டுகொள்க. ஆகையாற் கேவலசகல மிரண்டினும் கூடாமலந்தச் சுத்தத்தோடுங் கூடி நின்றவிடமே சாக்கிராதித மெனவறிக. அதற்குவழி யேதென்னில் தத்துவ மூப்பத்தாறோடுங் கூடி நிற்கச் செய்தே யவையிற்றோடுங் கூடி ஜீவிப்பதுஞ் செய்யாமலறிவுகெடுவதுஞ் செய்யாமல் நின்ற விடமெனவறிக. இதற்கு. பி - ம். திருமந்திரத்தில். "நின்றவச் சாக்கிரந் தூயமதாலல், மன்றனு மங்கேமணஞ்செயா நின்றிடு, மன்றன் மணஞ்செயின் மாயையு மாய்ந்திடு, மன்றெ யிவனு மவனென லாமே." எ-ம். சிததியாரில். "சாக்கிரத்தே யதிதத்தைப் புரிந்தவர்க ளுலகிற் சர்வசங்க நிவிர்த்தி வந்த தபோதனர்க ளவர்கள், பாக்கியத்தைப் பகர்வது வென னிம்மையிலே யுயிரின் பற்றறுத்துப் பரத்தையடை பாவுசிவரன்றே ரு." என்றது மிப்பொருட்பற்றி யெனவறிக. அனறியு மிதனைக் குருமுகாந்திரமாகப்பெற் றநுபவித்த பெரியோர்கள் திருவாக்கினுங் கண்டுகொள்க. அஃதாவது "அதிரைம்புலன்களிக ளாயுமணந்திண்டோர், சதிரொன்றியகுணமாக் காலாட் - சதுரங்கம், பூட்டுறற்போலிருக்கப் புக்கடிநிற்கும்புதுமை, காட்டுவ னம்பலவன்கான்." என்றமையா லிதனை யிருவினையொப்புஞ் சத்திநிபாதமு மூன்றான பக்குவான்மாக்கள் குருசாரியனிடத்திலே குரு வடதேசத்தைப் பெற்றுச் சாத்திரங்களை யோதியுணர்ந்து

பதிபசுபாசத்தின் வழக்குகளையும் பிறித்தறிந்து ஞானசாத்திரங்களைக் கேட்டுஞ் சிந்தித்துந் தெளிந்தும்வரு மவதரத்தநிஷ்டாபராாணைக்குப் பக்குவரானவர்களுந்தவாசாரியனிடத்திலே யுண்மையைப்பெற் றநுபவத்திலறிகிறதொழிய நூல்களிலே லறியப்படாதாகையா லந்தவுண்மையை யாசாரியன் கண்ணுகக் கண்டிகாள்க. அப்படியாகவுண்மையை யாசாரியன் முகாந்திரமாக வறிகிறதொழிய நூல்களிலேலே யறியப்படாதென்பதற்கு. பி - ம். ஔவையார். "கல்லன நூல்பல கற்கினுங் காண்பரிதை-யெல்லையிலாதசிவம்." எ-ம். திருமந்திரத்தில். "காட்டுங்குறியுங் கடந்தவர்காரண, மேட்டின்புறத்தி லெழுதிவைத்தனபயன், கூட்டுங்குருநந்தி கூட்டிடினல்லது, வாட்டுண்கழுத்தின தாகாத்தற்றே." எ - து. கண்டிகாள்க. அன்றியுங் கேட்டுஞ் சிந்தித்துந் தெளிந்து நின்றாலு நிஷ்டைகூடுமெபாழு தாசாரியனேலே கூடவேணுமென்பதற்கு பி-ம். சித்தியாரில். "கேட்டலொடுசிந்தித்தல் தெளிதல் நிட்டை கிளத்தலென விரண்டாங்கினாக்கிற்ரானை, விட்டை யடைந்திடுவர் நிட்டை மேவிடினுர்கள் மேவாது தப்பினவர் மேலாய படங்கட், டிட்டுய புன்னியநாதராகி யினைபமினி தாறுகர்ந தரணருளாலி ருந்தப்டார்மே, லுட்டுயாநற் குலத்தினிலுவந் தவதரித்துக்குருவான் ரானநிட்டை யடைந்தவர் நாதன்ரூரே." எ-து. கண்டிகாள்க.

இதனுற்சொல்லிய தநுபவத்தை யுடைய வருளிடமாகநின்று ஆன்மசுத்தி பண்ணி நிற்குமளவாக ளந்த வருளுக்கு முதலாகிய சுவதேதாதிங்கூடி ரேயத்தழுந்தி யாண்மலாபட்டிருந்திருக்குமிடத்துக் கேவலசகலமிரண்டு நீங்கிச் சுத்தத்தேதாதிங் கூடினைசுருத்தத்தாவழுப்பத்தாரேருதிங்கூடி நிற்கச்சையத்தே யணையிற்றேருதிங்கூட்டி ஜீவிப்பதுக்கெய்யாமலறிவுகு

லவதஞ் செய்யாமல் நிற்கிறதே சாக்கிரத்தி லதிதமென்னு மூன்றமையை யறிவித்தது. (கூ)

வேறு—இது பத்தாஞ்சூத்திரமாகிய வாத்மலாபத்தைச் செய்யுட் பத்திரு லுணர்த்துவான் றொடங்கிரர் அவற்றுளி ஃதந்த ரேயமான சிவத்துடனேகூடி யனுபவிக்குமுறைமை யுணர்த்திற்று.

பொற்புறு கருவியாவும் புணராமே - பொலிவினேயு டைய கருவிகண் மூப்பத்தாறும் பொருந்தி விகற்பியாமல்,- அறிவிலாமைமச் சொற்பெறு மதிதம்வந்து தோனருமே - அறிவில்லாமையையுடைய தெனனுஞ் சொல்லைப் பெறுகின்ற வதிதம்வந்து கூடி மயங்காமல் தோன்றநின்ற,—சிறபர மதனு லுள்ளாச் செயலறுத்திட - தன்னிடத்திலே பிரகாசித்து நிலை பெற்ற மேலான ஞானசத்தியாலே யாத்மாவின் செயலாகிய வகம்பிரம ஞானத்தை யறுத்திட,—உதிக்குந் தற்பரம்-அப் பொழுதே யந்தமேலாகிய சிவம் பிரகாசியாநிற்கும்,—ஆகிநி ற்றல் சாக்கிராதீதந்தானே - அங்ஙன மந்தக்கிவன் தானே யா யாகாயத்தில் வாயுத் தம்பித்தாற் போலவு மப்புவியுப் புப்போலவு மேகீபாவம்பிறந்துநிற்றலே சாக்கிராதீதம் என-று.

உள்ளம் ஆத்மா. உள்ளசெயலென்று பாடமாக்கிக் காட்டுந்தன்மையாகிய ஞானசத்தியின் செயலுங் காலுந்தன்மையாகிய தன்செயலு மவிழ விருக்கவென்பாருந் தன்னுடைய விச்சாஞானக்கிரியை யடங்கலையு மொழிக்கவென்பாரு முளர்.

அப்படியருளிச்செய்த முறைமையிலே கரணங்களொடுங்குமோவென்று பார்த்தளவில் ஓரவதரத்திலு மொடுங்குகைக்கு வழியில்லை இனியடியேன் தாளகவறிந் தொடுக்கிக்

கொள்ளுவது பயனே தற்சுபாவத்திலே யொடுங்குகிறது பயனுவென்ற மானவகளினோக்கி யருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

ஒடுங்கிடா கரணந்தானே யொடுங்குமா றுணர்ந்தொடுக்க, வொடுங்கிடு மெல்னினின்ற தொடுங்கிடா கரணமெல்லா, மொடுங்கிட வொடுங்கவுள்ள வுணர்வு தா னெழுதியும்வேரு, யொடுங்கிடி லல்லதற்ற வுண்மை யை யுணரொணாதே. (நக)

இந்திலகரண மிறந்தவிடமெனு
மந்நிலபழுதா மதுவேயென்றது.

(இ-ள்.) ஒடு கரணங்கள் தானுக வொடுங்கமாட் டாதே

ஒடுங்குமா றுணர்ந்தொடுக்க வொடுங்கிடு மெல்னின்

நின்ற தொடுங்கிடா

கரணமெல்லா மொடுங்கிட வொடுங்க

உள்ள வுணர் வுதா னெழுதியும்

கரணங்களொடுங்கும்வகுனையறிந்து ஒடுக்க வகையொடுங்கு மெல்னில்

நீயறிந் தொடுக்குகையிலுதிலை யறிகைக் கருத்தினைக்கருவிகளா யுள்ளது ஒடுங்குதலில்லையாம்

தத்தவங்களெல்லா மொடுங்கத் தக்கதாக வொடுங்கின பொழுதே யான்மபோது மொடுங்குமெல்னில் அப்பொழுது

பழைய சிற்றறிவுதானு மில்லையாய்ச் சுத்தகேவலமே முத்தியென்கிற பாடானவா தியத்தமாய்விடும். அப்படியாகலந்தச் சிவத்தையறிந் தநுபவிக்கும்வழி யெங்ஙனேயென்னில்

வேறு யொடு இந்தக்கரணங்க ளந்நியமாய் விடும்படி
ங்கிடலன்றி ம யுனக்குத் தரிசனமான ஞானத்தோடுங்
ற்றவுண்மையை கூடி நின்று லொழிந்து அந்தச்சிவத்தைய
யுணரா ரஞ்தே. றிந் தநுபவிக்கவொண்ணா து. எ - று.

உ - ம். கரணங்க ளெல்லா மொடுங்கின விடம் பாட்ர
ணவாதி யத்தமாம் என்பதற்கு. பி - ம். சங்கற்ப நிராகரண
த்தில் "கரணபாவ மரணங்கருமர - மேய்ந்தவர்முத்தி சேர்
ந்தவரன்றே." எ-ம். சித்தியாரில் "கரணங்கள்கெடவிருக்
கை முத்தியாமென்னிற் கதியாகுஞ் சினைமூட்டை கருமரத்
திணையிர்கண், மரணங்கொண்டுடலுறங்க மயங்கிமூர்ச்சித்க
வாயுத்தம்பனை பண்ணா வல்விடத்தையடைடச், சரணங்கள்
புகுந்திழற்போற் றணையடையுஞ்சமாதி தவிராது மலமிதுவும்
பசுஞானமாகும்." எ-று. கண்டுகொள்க.

வேறுயொடுங்கிடனன்றி என்றதற்கு. பி - ம். சித்தியா
ரில் முன்னி லுதாரணக்குறை "அணைங்களெளித்தவன்றனு-
யைபறிவிறந்தங் கறிந்திடார் செறிந்ததுக ளகற்றிடாரே."
எ - று. கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது ஆன்மா தத்துவாதீதனாய் நின்று
சிவானுபவத்தை யநுபவிக்குமிடத் தந்தத் தத்துவங்கள் தா
ருக வொடுங்காதென்று மறிந்தொடுக்கிக்கொள்ளு மவதா
த்து நீயறிந் தொடுக்குகையிலுலே யறிகைக்குத் துணைக்க ரு
வியாயுள்ள தொடுங்காதென்றும் ஆலொடுங்குகைக்கு வ
ழி யெங்ஙனெயென்று வினவ விரண்டுணுங் கூடாம
லொடுங்குகைக்கு வழி வேறெயென்று முறைமையை யறிவித்
தது. (கூக)

வேறு—இது கருவிகடாமே யொடுங்குதலோ வடியே
னறிந்தொடுக்குதலோ பயனென்று மாணாக்கன் வினவ வவற்

ரை மறுத்துப் பாசஞானம்போ லென்றிச் சிவஜே யறியவொ
ண்ணாதென்ப தணர்த்திற்று.

ஒடுங்கிடா கரணந்தானை - தத்துவங்கள் சடமாகை யாலே தாமே பொடுங்கமாட்டா,—ஒடுங்குமா றுணர்ந்தா டுக்க வொடுங்கிடு மென்னின்-ஒடுங்கு மூறைமையை கானறி ந்தொடுக்க வவை யொடுங்குமென லு சொல்லின்,—நின்ற தொடுங்கிடா-நீ யறிந்தொடுக்குதலி னுன்னுடைய விச்சாசூ னைக்கிரியைகளாய் நிலைபெற்ற சத்தி யொடுங்கா து. ஆகவே யவையு மொடுங்கா,—கரணமெல்லா மொடுங்கிட வொடுங்க வுள்ள வுணர்வுதா னொழியும்-கரணமெல்லா மொடுங்கும் படி நா னொடுங்குவேனென்று நீ சொல்லி னுனக்குள்ள வறி வுங்கெடும். ஆறற் காணங்களை யொடுக்கிச் சிவஜேத் தரிக் க்கும்படி யெப்படியென்னின்,—வேறு யொடுங்கி னென்றி மற்ற வுண்மையை யுணரொ னாதே - அத் தத்துவங்க ளென்னி யமாக வுனக்குத் தரிசனமான ஞானத்திலே யுன்னுண்மை நியாதபடி யொடுங்கி யந்த ஞானமயமாய் நின்ற லொழுங் தச் சிவத்தைத் தரிசிக்கவொண்ணாது. எ - று.

இதனிவு சிறப்பும்மை தொக்கது- மற்றசை. நின்றதொடு ங்கிடா வென்ப தொருமை பன்மை மயக்கம்.

அப்படி யந்தத் தத்துவங்களோடுங் கூடி நிற்பதுமென்றிக் கேவலப்பட் டொன்று மறியாமற் கிடப்பது மன்றி வேறுயொடுங்கி யந்தச் சிவஜேப் பெறுகைக்கு வழியெப்படியென்று வினவ மெலருளிச்செய்வா னெடுத்துக்கொண்ட ருளியது.

பற்றிடுங் கருவியாவும் படர்ந்துணர் வெளிக்குங்காலை
யுற்றுறுங் திவ்வினாவி னுணர்வினி னுண்மையாகு

மற்றது பகல்விளக்கின் மாய்ந்திட வருவதுண்மேடல்
பெற்றிடு மதனமாயப் பிறப்பினை யறுக்கலாமே. ந உ

பற்றிடுங் கருவிகள் பகல்விளக்கெனவே
பொற்பழிவுறவருள் பொருந்துமென்றது.

(இ - ம்.) பற்றிடுங் கருவியாவும் படர்ந்துணர் வளிக்குங் காலை

ஆன்மா கூடத்தக்க பிரபஞ்சத்தொடுங் கருவிகளெல்லாங் கூடி விரிந்தறிவிக்குமுடத்து

உற்றறிந்திடுவ தொன்றினை யுணர்வினி னுண்மையாகும்

அந்தத் தத்நவங்களோடுங் கூடியது வதுவாய் நினறறிந்து ஜீவிக்கிறது ஆன்மபோதத்தி னுண்மையாம்

மற்றது டகல்விளக்கின் மாய்ந்திட வருவது ணேடல்

அந்தக் கருவிகளுமான்மாவு மாதித்தன் சந்நிதியி லெரிக்றவிளக்குப் பிரகாசங் கெட்டுகின் றறிந்தாற்போலத் தந்தம் நிலைகுலையாம லிற்கச்செய்தே தம்மிற் கூடி ஜீவியாதபடி யருட்பிரகாச மேலிடத்தக்க தண்டாமாகில்

பெற்றிடு மதனை

மாயப் பிறப்பினை யறுக்கலாமே.

ஆன்மா வந்தச் சிவாநுபவத்தைப் பெறுவதுஞ் செய்யும். அப்படிப் பெற்றால் மயக்கத்தைச் செய்கின்ற ஜாகரத்தையும் போக்கலாம். எ - று.

நு - ம். மற்றதுமென்ற வம்மைகாண்டே ஆன்மாவுங் கருவிகளு மெனவறிக. என்னவே கருவிகளு மான்மாவும் பகல்விளக்குப்போல் நின்றே சிவஞாப் பெறவேறுமென்பது

மிரண்டுங்கூடி ஜீவியாமலிற்கவேணு மென்பதுங் கருத்து. இதற்கு. பி-ம். திருக்களிற்றுப்படியாரில். "அன்றிவருமைம் புலனுரியுமனையாதே, நினறபடிநிற்க முன்னிற்கும்." எ-து. கண்டுகொள்க.

பகல்விளக்குப் போலவென்பது தற்போதங் கெட்டுநி ற்கை யெனவறிக. இதற்கு. பி-ம். திருவாசகத்தில். "வான கெட்டுமாருது மாய்ந்தழனீர்மண்கெடினுங், தான்கெட்டலி ன்றிச் சலிப்பறியாத் தன்மையனுக, கூன்கெட் டுயிர்கெட் டுணர்வுகெட் டென்னுள்ளமும்போய், கான்கெட்டவாபா டித் தெள்ளேணங் கொட்டாமோ" எ-ம். திருமந்திரத்தில். "ஒத்திட்டிருக்க வுடம்போடுயிர்தான், செத்திட்டிருப்பர் சில சிவயோகிகள்" எ-ம். கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது தத்துவங்களு மான்மாவுந் தம் மிற்கூடி ஜீவிக்கு முறைமையு மப்படி ஜீவித்து நிற்கச்செய் தெயவை யிரண்டும் பகல்விளக்குப்போலத் தற்போதமும் ஜீவியாமனிற்கவே யந்த வருள்மேலிட்ட வவதாத் தான்மா வந்த வருளோடுங்கூடி யந்தச் சிவானுபவத்தைப் பெறுமு றைமையு மறிவித்தது. (நடு)

——0——

வேறு—இது பசுஞானத்தாலுங் கூடவொண்ணு முறை மையை யறிவித்தற் கப்பசுபோதத்தினுண்மைத் தன்மையு மப்போத மிப்படியாலெலாதுந்து தெயத்தைப் பெறவொ ண்ணுதென்பதூஉ முணர்த்திற்று.

பற்றிடுங் கருவியாவும் படர்ந்தணர் வளிக்குங்காலை- விடையுங் கதைப் பொருந்திநிற்குங் கருவிகளெல்லாம் விரிந் தா த்மாவுக் கறிவைக் கொடுக்குங்காலத்து,—உற்றறிந் திவ தென்றி னுணர்வினி னுண்மையாரும்-ஒரு விடையத்திலே பொ ருந்தி யிதுவென்று சுட்டியறிகிற தாத்மாவினுடைய வறிவில்

செய்தியாகும்.—மற்றது பகல்விளக்கின் மாய்ந்திட வருவ தண்டேடல்-அந்தத் தத்துவங்களெல்லாஞ் சாக்கிரத்திலே நிற்கையிலே யவைகளிற் ருக்காம லருளைப்பொருந்தி மத் தியானகாலத்தில் விளக்குப்போலத் தற்போதஞ் ஜீவியாம னிற்குமுறைமை கூடுமாயின,—பெற்றிடுமதனை-அப்போதத்தி னேயமான சிவத்தைப்பெறும்.—மாயப் பிறப்பினை யறுக்க லாமே-பெறவே மயக்கத்தைச்செய்யும் பிறவியை யறுக்க லாம் எ-று.

ஒன்றி னுற்றறிந்திடுவ தெனமாறுக. ஓராத்மாவினுடைய வென்றுமாம்.

இங்ஙனந் தற்போதம் ஜீவியாமத்தின் றக்தச் சிவாநுபவ மாகிய முத்தியைப் பெறுதைக்கு அடியேன் செய்துவருகிற விடற்கை யெதென்று வினவ அதற்குவழு மேலருளிச்செய்ப வாளெடுத்துக்கொண்டருளியது.

மூந்திய வொருமையாலே மொழிந்தனைகேட்டல் கேட்டல், சிந்தனை செய்தலுண்மை தெளிந்திடலுதாரணை, வந்தவா றெய்தனிட்டை மருவுதலென்றுகாண்க, பிந்தவா றுடைந்தோர்முத்தி யெய்திய விபல்பிறீரே. (கூகூ)

கேட்டல்முதலாக் கிளர்த்தல்நால்வகையும்

வாட்டருமுத்தியை மருவுமென்றது.

(இ-ள்) மூந் தியவொருமையாலே மொழிந்தனைகேட்டல் முன் ஜாதங்களிற் செய்துவந்த சரிதை கிரியாயோகங்களினது முற்றுதலிலேல் யாசாரிய னருளிச்செய்த ஞானவுபதேசங் கனை யேகாக்கிர சித்தமுயிருந்து விரும்பி க்கேட்டல்

கேட்டல் சிந்தனை செய்தல் — முன் சொல்லப்பட்ட ஞானவுபதேசமாகிய திரிபதார்த்தங்களை யிப்படியோ பதியினுண்மை யிப்படியோ பசுவினுண்மை யிப்படியோ பாசத்தினுண்மையென்று மாராய்ந்து சிந்தித்தலாம்

உண்மை தெளிந்திடல் — அப்படி யாராயப்பட்ட மூன்றினுள்ளும் பாசஞான மஞ்ஞானம் பசுஞானஞ் சுதந்தாவீனமாகையால் இவை யிரண்டையுங் கூட்டிச் சேட்டிப்பிக்கிறது பதிஞானம். அதுவே யுண்மையாக வுள்ளதென்று கண்டதுவே பொருளாகத் தெளிதலே தெளிதலாம

அதுதானுகவந்தவா றெய்தினிட்டை மருவுதல் — அந்தப் பதியானது பெத்தான்மாக்களோடுங் கூடிநின்று காரியப்படுத்தச் செயற்படுதல் தானுருமூதலியல்பு யென்னும்படி தானுருமனின்று காரியப்படுத்திறற்பால நியுமந்த ஞானத்திருலே யல்லதுவா காரியப்பட்டு வருகிறுமென்கிறதை யறிந்து ஆன்மபோதம் நீங்கியாமல் ஞானந்தானெய்நின்றுவிடுதலே நிஷ்டையாம்

என்று நான்காம் — என்றிப்படி கேட்டல் சிந்தித்தல் தெளிதல் நிஷ்டையென்று காலுவகையாம்

இந்தவாறடைந்தோர்முத்தி யெய்தியவியல்பிதேறுதே. — இந்த வொழுங்கிலே கேட்டுச் சிந்தித்துத் தெளிந்த நிஷ்டையைக் கூடினவர்களே முத்திநெறியைப் பொருந்தினவர்கள். எ - று.

உ-ம். அதுதானுக வந்தவா றெய்தினிட்டை மருவுதல். எ - று. பெத்தத்திற் சிவன்றுற்றமற் றுனைமாவின் றுற்ற

மாய்நின் ரூற்போல மூத்தியி லான்மாவின் ரூற்றமற் றுச் சிவதோற்றமாய்ந் நிற்க வென்றதற்கு. பி - ம். இருபா விரு பம்நில். "காடா - வென்னுட்காந் தென்பின் வந்தருளி - யென்னையுந்தன்னை யு மறிவின்றியற்று - மென்ன தியானெனு மகந்தையுங்கண் - டியாவரியாவையு மியாங்குணருஞ் சென் றுபுக்குழிப்புக்குப் பெயர்த்துழிப்பெயர்த்து - மிக்கபோகம் விளையாலல்விளைத்திட் - டெற்பணியாளா யெனைப்பிறியாதே - யோடிமீள்கென வாடல்பார்த்திட்-டென்வழிநின்றென னெனக்தை." இது பெத்தம். இனிமூத்திக்கு. பி-ம். மூன்னி லுதார ணைக்குறை "அன்றே ரு-வருண்மிகவுடைமையி னருட்டிரைவ ந்து-பொருண்மிகவருடலும் பொய்ப்பகையாதலுங் - கைக கண்டுகொள்ளெனக் கடலுலகறிய - மெய்கண்டதேவ னெனப்பெயர்வீரீ இத் - தன்னுட்காந்து தான்மூன்றுகித் - தன்னை தந்தாணுமா யென்னையின்ரூக்கி" எ - து. கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது ஆன்மாக்கள் மூத்திபெறுமிடத் தைக் கேட்டுந் நிச்சித்துந் தெளிந்து நிஷ்டைகூடியு மூத்தி யைப்பெறு முறைமையை யறிவித்தது. (ஈஉ)

வேறு—அந்தப்பாச பசு ஞானங்களிற் கூடாம லந்தச் சிவத்தைப் பெறுமுறைமை யெந்த முறைமையென்று வினவு வதற் குத்தர முணர்த்தற்று.

மூந்திய வொருமையாலே மொழிந்தவை கேட்டல்-முற் சனனங்களிற் செய்த சரியைய மூதலியவற்றின் முற்றுதலு ன்டானவொருமைப்பாட்டினாலே யாசிரிய னுபதேசித்த உப தேசங்களைக் கேட்டல்,—கேட்டல் சிந்தனைசெய்தல் - கே ட்டவொருளைச் சிந்தித்துப் பார்க்கை,—உண்மை தெளிந் தல் - அந்தப் பொருளினுண்மையைத் தெளியவறிதல்,—அது

தாலுக வந்தவா றெய்தநிட்டை மருவுதல்-அந்தச் சிவஞ் தா லுகவேண்டி யாசாரியலு லந்த வுபதேசத்தின் வழியைப் பொருந்த நிட்டைபொருந்துதல்,—என்று ஞானகாம்-என்று ஞாலுவிதமா மந்தச் சிவத்தைப் பெறுமுறைமை,—இந்தவா றடைந்தோர்முத்தி யெய்திய வியல்பிலுரே - இந்தப்படி நிட்டை கூடினவர்கண் முத்தியைப்பெற்ற முறைமையிலே யுடையோர். எ - று.

இந்தக் கேட்டன்முதலிய ஞான்கு ஞானத்திற் சரியை முதலிய ஞாலுபாதமுமாம். இவற்றுட்கேட்டல், கேட்டுப் பற்றுதலா னினமலசாத்திரமு நின்மல சொற்பனமுமாம். சிந் தித்தல சிந்தனமாத்திரமாதலி னின்மலசுழுத்தியாம். தெளி தல் தெளிந் தருளுடன்கூடுநிற்றலி னின்மல துரியமாம். நிட் டை யதுதாலுக விரண்டறக்கலத்தலி னின்மலவதீதமாம். இந்தவடைவிலே நின்றேறாந்தந்தவளவிலே தேகாந்தமான விடத்துச் சுத்தத்திற் சாலோகாதிகளை முறைமையிலே யடைவர்கள். கேட்டலுடன் சிந்தித்த றெளிதனிட்டையென னுஞ் சிவஞானசித்தியாலுங் காண்க.

அப்படி நிஷ்டைகூடி முத்தியைப்பெறுகிற தொழியச் சாத்திரங்களையோதிக் கேட்டுஞ் சிந்தித்துந் தெளிந் தநின்ற லதுகாண்டே முத்தியாகாதே தவென்ற மாணவ கனை நோக்கி யனை பாசஞானமும் பசுஞான முமாகையா லதனல் முத்தியுண்டாகாது, அந்தப் பதிஞானத்தோடே கூடுகிறதே நிஷ்டையென்று மந்த நிஷ்டையுண்டாகிறதே முத்தியென்றும் வருமுறைமையை மேலருளிச்செய்வானெடு த்துக்காண்டருளியது.

பாசமா ஞானத்தாலும் படர்பசு ஞானத்தாலும் மீசனை யறியவொண்ணு தெறியருள் ஞானங்காணிற்

தேசுறு மதனைம்மூன்னைச் சிற்றறி வொழிந்துசேர்ந்து
நேசமோ டியற்பரத்து நிற்பது ஞானநிட்டை. (கூச)

பலகலைஞானமும் பல்லுயிர்ஞானமுந்
தலைவனையணுகாத் தன்மைசாற்றியது.

(இ - ள்.) பாசமாஞானத்தாலும்படர்பசுஞானத்தாலும் பீசனையறியவொண்ணாது

வேதாகம புராண சாத்திரங்ளென்று சொல்லப்பட்டவையிற்ற லறியும் பாசஞானத்தாலுந் தத்துவங்களெல்லாங் கழன்றவிடத் தான்மாதானே சிவமாமென்று சொல்லுகிற பசுஞானத்தாலுஞ் சிவனைக் கூடவொண்ணாது. பின்னை யெங்ஙனேயெனிற்

இறையருள்ஞானநண்ணித் தேசுறுமதனைம் மூன்னைச் சிற்றறி வொழிந்து சேர்ந்து

நேசமோடியற்பரத்து நிற்பது ஞானநிட்டை.

கத்தாவினுடைய திருவருளாலே யந்தஞானத்தைப் பொருந்தியவ்விடத்துப் பிரகாசித்துநின்ற திருவருளாலே

பழைய விச்சாஞான க்கிரியைகளாகிய வான்மபோதத்தைவிட்டு அந்தச் சிவஞானத்திலே பொருந்தி

விருப்பத்துடனே யந்தஞானத்துக்குலானசிவத்துடனே நிற்குமதுவே ஞானநிஷ்டையாம். எ - று.

வி-டு. வேதாகம புராண சாத்திரங்களைப் பாசஞானமென்றது அவையிற்றை யறியுமிடத்துத் திரிவித கரணங்களைக்கொண்டறிபவென்றினைகையிறலெனவறிக. இதற்கு. பி-ம். சித்தியாரில். "வேதசாத்திர மிருதிபுராணகலைஞானம் விரும்பசவை வைகரியாதித்திரங்கள்மேலா, நாதமுடிவான வெலாம்பாசஞானம்." எ-து. கண்டுகொள்க.

ஆன்மா தத்துவங்களெல்லாங் கழன்ற விடந்தானே சிவ மென்று சொல்லுகிறதைப் பசுஞானமென்றது ஆன்மா வவ்விடத் தொருபொருளோடுங்கூடி யநுபோகப்படாததுகொண் டெனவ றிக. இதற்கு. பி - ம். சித்தியார்சில். முன்னி லுதாரணக்குறை. "நணுகியான்மாவினை கீழ்நாடலாலே, காதலினு ணன்பிராமமை ன்னுஞானங் கருதுபசுஞான மிவணுடலிற் கட்டுண், டோதியுணர் ர்ந்தொன்முன்று யுணர்ந்திடலாற் பசுவா மொன்முகச் சிவனிய ல்பி ணைர்ந்துவன்காணே." எ-து. கண்டுகொள்க.

ஆகையா லான்மா சிவமாகாதெனக்கொள்க. ஆன்மா சிவமா மென்னிற் சகசஞான முண்டாகவும் வேறுமெனவறிக.

இறையருண் ஞானகண்ணி என்றது ஆன்மா சிவனை யறியுமி டத் தந்தச் சிவனுடைய ஞானத்தைக் கொண்டு சிவனை யறியவே ன்றுமென்ற தெனவறிக. இதற்கு. பி-ம். திருவாசகத்தில். "அவ னருளாலே யவன்முள்வணங்கி." எ-து. கண்டுகொள்க.

இதனுற் சொல்லியது ஆன்மாக்கள் சிவனைப்பெறுமிடத்துப் பாசஞானத்தாலும் பசுஞானத்தாலும் பதினைக்கூட வொன்றை தென்றும் அந்தப்பதிஞானங் கொண்டே பதினைக் கூடவேறு மென்று முறையையு மறிவித்தது. (நூசு)

வேறு—இது பதிஞானத்தாலன்றி யவனை யறிந்த லரிதென் பதனை நிட்டையின் சொரூபமு முணர்த்திற்று.

பாசமா ஞானத்தாலும் பட்பசு ஞானத்தாலு மீசனையறிய வொண்ணுது - நாதாந்தமான பாச ஞானத்தாலுந் சிவனை யறியக்கூடாது, —இறையருண் ஞானகண்ணினுத் தெளியுமதனால்- சிவனுடைய திருமேனியையுடைய ஞானத்தைப் பொருந்தியது வா ணமாகத் தற்காட்சி விளக்கமுற்ற தன்மையிலேல, —முன்னைச்

சிற்றறிவொழிந்து - பழைய சிற்றறிவைவிட்டுச் சேர்ந்து, அகம்பிரம ஞானமன்றித் திருவருளிலே பொருந்தி,—தேசமோடியைப்பத்தி நிற்பது ஞானநிட்டை - மகிழ்ச்சியுட னதற்குமேலான சிவத்திலேகூடி முன் சொன்ன படியே நிற்பது ஞானநிட்டையாம். எ - று.

நண்ணியென்பது பிறவினைகொண்டது. இந்தநிட்டை திவிரதரசத்தி நிபாதரான வுத்தமர் நிற்குநிலை.

அப்படித் தற்போதம் ஜீவியாமனிற்கவென்ற லதுமுடியாது அழியேனின்று சாதித்துப் பெறத்தக்கதாக வெளிதாக வொருவழி கற்பித் தருளவேணுமென்ற மானவகனைநோக்கி முனகற்பித்த நிஷ்டை கைகூடுகைக்கு வேறே யுபாய நிஷ்டையாக வொருவழி யருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

விளம்பிய வகையினிட்டை மேவிட லரிதேன்மு
ன்னை, முளந்தயி வளித்தவற்றி னளவுமற் றவற்றிலை,
வளங்கெழுமுந் தனையுமுள்ள படியுமுற் றுணர்ந்துசெ
ல்லினை, களர்ந்திடா துவப்பமற்றுத் தன்மைய தாகுந்
தானே. (நருு)

போற்றருநிட்டை பொருந்தாதவருக்
கூற்றமுளதா முபாயமுரைத்தது.

விளம்பிய வ முன்சொன்ன முறைமையிலேயுண்டா
கையி னிட்டை ன நிஷ்டைகூடுதற் கரிதாமாயின்
மேவிடலரிதேல்

முன்னமளந்த நிவளித்தவற்றினளவும் மற்றவற்றினை

முன்பு பெத்தநிலையிலே தனக்குவேண்டின புசிப்புக்குத் தக்கதாக பறிவித்துக்கொண்டு நின்ற தத்துவங்களின தண்மையும் அந்தத் தத்துவங்களிலேயறிந் தின்பது

லேயுளங்கொளு ன்பங்களைப் புசித்துவருகிற தன்னுடைய வு
த்தினையும் ண்மையும்
உள்ளபடியும் கன்மத்தக்கீடாகத் தத்துவங்களையுந் தன்
னையுங் கூட்டிப் புசிப்பிக்கிற கத்தாவின் மு
றைமையும்
உற்றுணர்ந்து இவைமூன்றையு மநுபவத்திலேயறிந்து
செவ்வேதளர் இவைபிற்றுக்குச் சனிப்பின்றித் தவறுவரா
த்திடாதுவப்ப மனேரோன்று அந்தப்பொருளை விரும்பவே
மற்றதன்மை முன் சொல்லப்பட்ட நிஷ்டையின் முறை
யதாகுந்தானே. மையாகும். எ-று.

நு-ம். தத்துவங்களி னுண்மையறிய என்றது தத்துவங்க
ளான்மா கூடி-னலொழிய வறியாதாகையா லவையிற்றை ஜடமெ
ன்ற தெனவறிக.

ஆனமாவி னுண்மையை யறிய என்றது ஆன்மா தானுகவறி
காக்குச் சுந்தரமில்லாததுகொண்டே சுதந்தரனினனென்ற தெ
னவறிக.

கத்தாவி னுண்மையையறிய என்றது அந்தத் தத்துவங்கள்
ஜடமாகையா லும மானமா தற்சுந்தரமில்லாதுவ ணுகையா லும மினை
யிரண்டையுங்கூட்டிப் புசிப்பிக்கிறது கத்தாவென்ப தெனவறிக.
என்னுமிவையிற்றுக்கு. பி-ம். போற்றிப்பம்மிறுடையில். "நாடு
கின்ற, வெப்பிறப்புழுற்செய் பிருவினையா லிச்சையித்துப்—பொ
ற்புடைய தாய்தந்தை போகத்திற்—கர்ப்பமாய்ப், புல்லிற்பனி
போற் புகுந்திவுலக்குட்புகுங்கா—லெல்லைப்படாவுதரத் தின்டி
யதிப்—பல்வகையா, லங்கேகிடந்த வகாதியுயிர் நம்பசியா—லெ
ங்கேனுமாக வெடுக்குமென—வெங்கும்பிக், காயக் கருக்குழியிற்
காத்திருந்துங் காமியத்தக்—கேயக்கை காலழுதலா லெவ்வுறுப்
புக்—தோறுமே, செய்துதிருத்திப்பின் பிசைபோற்றிருத்திமுன்புக்க—
வையவழியேகொண் டுனைகின்ற—பொய்யாதை, வல்லபமேபோற்

நியம் மாயத்தாருன்மறைப்ப—நல்ல வறிவொழிந்து நன்குதீன்—செல்லையுரு, வக்காலந்தன்னிற் பசியையறிவித்தழுவித்—துக்காவிசோரத்தா யுண்ணடுங்கி—மிக்கோங்குஞ், சிந்தையுருகமுலையுருகத் தீஞ்சுவைப்பால்—வந்தமடுப்பக்கண்டு வாழ்ந்திருப்ப—பந்தித்த, பாசப்பெருங்கயிற்ருற் பல்லுயிரும் பாலிக்க—நேசத்தைவைத்த நெறிபோற்றி—டாசற்ற, பாலைப்படிசும்பதத்தும் பாலுமப்பதத்து—நாளுக்குநாள்சகல ஞானத்தும்—மீள்வித்துக், கொண்டாளவாளக் கருவிகொடுத் தொக்க நின்று—பண்டாரி யான பதிபோற்றி.” எ-து. கண்டுகொள்க.

செவ்வே தளர்ந்திடா தவப்ப. எ-கு. சலிப்பற்று நேரே நிற்க என்றது எல்லாஞ் சிவசேட்டையென்று கண்டு யானெனது கெட நிற்கையெனவறிக. இதற்கு. பி-ம். சித்தியாரில் “யான்செய்தேன் பிறர்செய்தா ரென்னதியானென்று மிக்கோணைஞானவெரியால்வெதித்பிநிமிர்த்துத், தான்செவ்வேநின்றிடவத் தத்துவந்தானோ தனையளித்து முன்னிற்கும் விதனொளித்திட்டோடு, நான்செய்தேதனெனு மவர்க்குத் தானங்கின்றி நண்ணுவிக்கும் போகத்தைப் பண்ணுவிக்குங்கண்ம, மூன்செய்பா ஞானந்தா னுதிப்பினல்லா லொருவருக்கு மியானெனதிங் கொழியாதன்றே.” எ-து. கண்டுகொள்க.

இதனுற் சொல்லிய துழன்புகற்பித்த நிஷ்டை கைகூடாதென்ற மானவகனேநாக்கி வேறுமோ ருபாயநிஷ்டையாகக் கொண்டு தத்துவங்களை ஜடமென்றுகண்டும் ஆன்மாவைத் தனக்கென்ன வறிவில்லாதவனென்று கண்டு மினவு யிரண்டையுஞ் சிவனேகூட்டிக் காரியப்படுத்துவ னென்பதுங்கண்டு தற்சேட்டை கெட நிற்கவே பண்டுகற்பித்த நிஷ்டை தானேகைகூடுமென்னு முறைமையை யறிவித்தது. (கூரு)

வேறு—இது அந்தவுண்மை நிட்டை கூடாதார்க் குபாயநிட்டை யுணர்த்திற்று.

விளம்பிய வகையினிட்டை மேவிடலரிதேல்-முன்சொன்ன முறைமையிலே நிட்டைகூடுதலரிதாயின்,—முன்னை மளந்தணைர்வளித்தவற்றினளவும்-முன் பதுவி துவென்று சுட்டிவனையறுத் தறிவித்த ததுவங்களின் பிரமாணங்களையும்,—மற்றவற்றிலுமேலுளங்கொளுந்தினையும்-அந்தத் தத்துவங்களிலுமேல யறிந்துபுசுக்கின்றதன்னையும்,—உள்ளபடியும்-தனக்குச்சிவனையன்றிச்சேட்டையில்லையென்னு முண்மையினையும்,—உற்றுணர்ந்து - அந்த ஞானத்திலே நிலைபெற்று நின்றறிந்து,—செவ்வே தளர்ந்திடாதுவப்பகேட்டன்முதலிய மூன்றனப்பியாசத்திலுமேல மயக்க விகற்பங்களைக் கிரமத்திலே செய்தந்த ஞானமேயாப்த்தனக்குப் பிரயோசனமான சிவத்தை விரும்ப—மற்றத் தன்மைய தாகுந்தானே-முனசொன்ன நிட்டையின்முறைமை பரத்திலேகூடும்.என-று.

தன்மையதுவுஞ் சொல். ஆகும் கூடும். மற்று அசை.

இங்ஙன மருளிச்செய்த நிஷ்டையை யடியேன் பாவித்துக்கொண்டு வருகிறேனென்று விளவின மாணவகனைநோக்கி யப்படி நீபாவிக்கிற பாவகங்களாலக்தப்பொருளைப் பெறவரிதென்னுந் தம்பிரானர் திருவருளைப்பெற்ற வடியார்களுக்கொருபாவங்களுமில்லாமலெளிதாகப் பெறலாமென்றும் வருமுறைமையை மேலருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளிய து.

பாவிக்கின்மறுதிவென்றும் பயனிலை காணீத்துப், பாவிப்ப னென்னினிலென்ன பழுதுள பாவகத்தார், பாவிக்க வொன்றனொன்றென்ற பாவிப்ப னென்னினீயென், பாவிக்க வென்னடாவென்ன பரனருள் பற்றினேற்கே.

(கட.சிற)

நீக்கமில்பாவக நிலையெப்பொருளுக்
தாக்கருஞானஞ் சாராதென்றது.

(இ-ள்.) பாவிக்கின் மறுதிவேண்டும்
பயனிலை

அந்த வுண்மையை நீ தியானிக்கு மிடத்து அந்தக் காரணங்களாகிய மறுதிகள் கூடியே தியானிக்கவேண்டும். ஆகையால் அது

அந்த வுண்மையாகிய சிவம் வாக்குமறுதி மா யிருக்கையா லதனைக் காரணங்களைக் கொண்டு நீ தியானிக்குமளவி லுனக் கொருபிர யோசனமு மில்லையாம்

காரண நீத்துப் பாவிப்ப னெண்ணில்
என்ன
டழுதாள

அந்தக்காரணங்களை நீக்கியே யந்தப்பொரு ளைப் பாவித்துக்கொள்ளுவேனென்று நீசொல்லில்

அதற்குற் பயனே தண்டாவது

அந்தக்காரணங்கள் நீங்கினவிடங் குற்றத் தையுடைய கேவலமுமாய் முத்திப்பழுதுசொல்லுகிற பாடாணவாதியத்தமுடாகையா லது பயனல்ல

பாவ கருத்தாற் பாவிக்க வொண்ணாமை னென்று பாவிப்பனென்னில்
நீயென்

அப்படியல்ல அடியேன் பாவிக்கிற பாவங்களா லந்தப்பொருளைப் பாவிக்கப்படாதென்று பாவித்துக்கொள்ளுவே னென்னில்

அந்தப்பொருளுனுடைய பாவங்களாற் பாவிக்கப்படாதேயாரு னுடைய முயற்சியேன். ஆகையால்

பாவிக்க வே வென்டாவொண்டா பரணருள் பற்றி னேர்க்கே.

அப்படியான்மபோதத்தா லொன்றையுஞ் சுட்டிப் பாவிக்கவேண்டுவதில்லை கண்மையாண்டகம்பிராரு ரதுக்கிரகித்தருந் திருவருளைப் பெற்ற வடியாராயுள்ளவர்களுக்கு. எ - று.

உ-ம். கரணநீத்துப் பாவிப்பனென்றது பாடாணவாதியத் தமாமென்று சொன்னதற்கு. பி-ம். சங்கற்ப நிராகரணத்தில். "காட்சியென்னைக் காணுத்துயர - மாட்சியைமுத்தி யெனவகுத்த னேர." எ-து. கண்டுகொள்க.

அதனைப் பழுதென்று மறுத்ததற்கு. பி-ம். சங்கற்ப நிராகரணத்தில். "காட்சியென்னைக் காணுத்துயர - மாட்சியைமுத்தி யெனவகுத்துரைக்கிற் - காணுபாவ மரணங்கருமர - மேய்ந்தவர்முத்தி சேர்ந்தவரன்றே - யனையதுக்கோர் மூனவரும்வேண்டா - தனிதருதுயர மெனுமித்துடமே - பாடாணத்திற் கூடாமுத்தி." எ-ம். சித்தியாரில். "கரணங்கள் கெடவிருக்கை முத்தியா மென்னிற் கதியாகுஞ்சினமுட்டை கருமரத்திலுறபீர்கள், மரணங்கொண்டிடவுறங்க மபங்கிமூர்ச்சிக்க வாயுத்தம்பனைபண்ணை வல்லிட்டத்தையடையச், சரணங்கள் புகுந்திழற்போற் றனையடையுஞ்சமாதி தவிராதுமலமித்துவும் பசுஞானமாகு, மரணங்க ளெரித்தவன்ற னடியை யறிவுறந்தங் கறிந்திடூர் செறிந்ததுக ளகற்றிடுமே." எ-து. கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது அந்த வுண்மைஞானத்தைப் பாவகத்திலேலே தியானித்துவருகிறனென்ற மானவகனைநோக்கியதனை தியானிக்குமிடத்துக் கரணங்கள்கூடித் தியானிக்கையாலதுவுமத்தமெல்லவென்றுங் கரணங்களைநீக்கித் தியானிக்குமிடத்துக் குற்றத்தையுடைய கேவலமே முத்தியென்கிற பாடாணவாதியத்தமாமென்றுஞ் சிவனருளைப்பெற்ற வடியார்களுக் கொருபாவகங்கரஞ் வேண்டா மென்றும் வரு முறைமையையறிவித்தது. (கூ சிஞ)

வேறு—இது அப்படி பாவிப்பதேயுவென்று வினவியடமாறுக்கனுக் குத்தர முணர்த்திற்று.

பாவிக்கின் மருதிவேண்டும் பயனிலை - அந்தச்சிவத்தை நீ தியானிக்கி லதற்குக் காரணங்கள் வேண்டுங். காரணதீதன் பாவ னைக் கெட்டானையி னுனக்குப்பயனிலை,—காரணத்துப் பாவிப் பனென்னிலென்ன - காரணங்களை யொழித்துத் தியானிப்பனென் னிற் குற்றமென்னை,—பழுதுள - காரணநீத்த பொழுதே மலம றைக்கும்,— பாவகத்தாற் பாவிக்க வொண்ணுனென்று பாவிப் பனென்னி னீயென் - தியானத்தாற் நியானிக்கப் படானெனறு தியானிப்ப னென்றுசொல்லிற் பாவாபாவ மிரண்டினுங் கூடிநி ற்கிற உன்னுடைய போத மவ்விடத்திற் சிவிப்பதென்னை,—பாவி க்க வேண்டாவாண்ட பரனருள் பற்றிநேரக்கே - தம்மையாண்ட சிவனருள் பொருந்தினவர்கட்குப் பாவிக்க வேண்டா. எ-று.

எனவே பாவாபாவமிரண்டும் வேண்டாவென்பதாம். நீயென் னென்பதற்கு நீயேண்டுமோ வென்னினுமாம்.

இங்ஙனஞ் சொல்லப்பட்ட நிஷ்டையாலு முன்சொன்ன வுண்மை நிஷ்டையாலு மந்தச்சிவனைப்பெற்ற வான்மாக்க ளந்தச் சிவமேறுங்கூடி யொன்றுபட்டுப் போவர்களோ இரண்டுபட்டு நிற்பர்களோவென்று மாணவகன் ஆசாரியரை வினவின வவ்தர த்து டாயாவாதி யநாதியி லொன்றுயிருந்து டொன்னிலேயிருந்து பணிகள் விரிந்தாற்போல ஜீவான்மாவும் பிரபஞ்சமுமாக விர ண்டாய்விரிந்து மீளவு மொன்றுபட்டுப் போமென்று சொல்லு கையும், அதனை யதல்லவென்று சைவர்வந்து அநாதியி லான்மா வுந்சிவமு மிரண்டாயிருந்து முத்தியி லொன்றுபட்டுப் போமெ ன்று சொல்லுகையும், அன்றியும் ஐக்டவாதிவந்து அநாதியில் ஆன்மாவுஞ் சிவமு மிரண்டாயிருந்து முத்தியி னீருநீருக்கூடி யொன்றுறுற்போல ஒன்றுபட்டுப்போமென்று சொல்லுகையும், அதனை யல்லவென்று சமவாதிவந்து ஆன்மாவுஞ் சிவமு முத்தி யிலு மிரண்டாயிருக்குமென்று சொல்லுகையும் அன்றியும் மீளவு

மவனக்கினையைச்சேர்ந்த விரும்பு அக்கினியாலும்போலச் சிவஜீன
ச்சேர்ந்த வான்மாக்கள் சிவமாமென்று சொல்லுகையுமான வவந
ரத்து இவர்கள் சொன்னதெல்லாஞ் சித்தாந்தவத்தமல்லவென்று
அவரவரத்தங்களை மறுத்துக் காட்டிச் சித்தாந்த வுண்மையை
யோ ருபமானங்காட்டி மேலருளிச்செய்வா னெடுத்துக்கொண்
டருளியது.

ஒன்றிரண் டாகியொன்றி லெருமையா யிருமை
யாகி, யொன்றிலொன் றழியுமொன்று தன்னினெஞ்
ருகாதியி, னைன்றிரும் புறழினைன்று மூயிரினங் தா
ழிலும்வேண்டு, மொன்றினின் றுணருமுண்மைக் குவ
மையா ணைவத்தா டொன்றே. (கூன)

குற்றமருவுங் கோட்பாடகற்றி
மூற்றியகதியின் முறைமையீதென்றது.

(இ - ள்.) ஒன் றிரண்டாகி யொன் றி லெருமை யாம் — எங்கு மொருமுதலாக விரிந்திருக்கப்பட் ட பிரமமானது ஜீவான்மாவாகவிரிந்து மீளவு மொன்றுபட்டுப் போமென்னில் அது ஜீவான் மாவாக விரிந்தவவதாரத்தும் அந்தப்பிரமத்தி ன் செய்திகளெல்லா முண்டாகவேணும். அப் படியில்லையாகையா லது வத்தமல்லவெனவு றிக

இருமை யாகி யொன்றி லொன் றழியும் — அநாதியே யான்மாவுந் சிவமு மிரண்டும் தலாய்நின்று முத்தியி லொன்றுப் விடுமென் னில் அப்பொழு தானமாவழியவேண்டும். அந் றற் பெறுவானில்லையாம். ஆகையா லதுவும த்தமல்லவெனவுறிக

ஒன்று தன் னினொன்றுகா — ஆன்மா முத்தியிலுந் சிவந்தோடுங் கூடா மலிரண்டுபட்டுநிற்குமென்னில் அப்பொழுது

மூத்தியி லொன்றுபட் டநுபவிக்கிறதே பய
னென்கிற பேறுமில்லையாமெனவறிக

தீயி னென்றி ரும் புறழி னன் ரும்

அக்கினியைச் சேர்ந்த விரும்பு அக்கினியா னேற்போல ஆன்மாவு மந்தச் சிவத்துடனே கூடிச் சிவமா மென்னில் அப்படி யாகாது. அதேனென்னில்

உயிரினைந் தொ ழிலும்வேண்டும்

ஆன்மாவுக்குப் பிராணனுய்நின்று சேட்டி ப்பிக்கிற சிவனுடைய பஞ்சகிருத்தியமு மந்த ச்சிவனைப்பெற்ற வான்மாக்களுஞ் செய்யவே ண்டும். அத்தன்மை யான்மாக்களுக்கில்லையா னைபோ லதுவுத்தமல்ல வெனவறிக. அப்படி யாலு லான்மாக்கள் சிவனைப்பெற்று நிற்கு முறைமை யெங்ஙனேயென்னில்

ஒன்றி நின் று ணரு முண்மைக் குவமையாணவத் தோ டொன்றே று.

அந்தச்சிவத்தோடுங்கூடி முத்தியைப்பெற் நின்பத்தை யநுபவிக்கிறதற் குவமையாவது ஆணவமலத்தோடுங்கூடி யநாதிப்பட்ட வான் மாக்கள் அந்தமலத்தோடு மொன்றுபட் டழி ந்துபோவதுஞ் செய்யாம லிரண்டுபட்டு நீங் குவதுஞ் செய்யாமல் நின்றாற்போலக் கூடிய நுபவிக்கும். எ - று.

உ - ம். இங்ஙனஞ் சொல்லப்பட்ட சமயிக ளெல்வர்க்கு முன்—ான மதத்துக்கு மறுப்புக்குஞ் சங்கற்ப நிராகரணத்திலே காட்டுதும். அவைவருமாறு:—

ஒன்றிரண்—ாகி யொன்றும் என்று மாயாவாதி சொன்னதற்கு. பி - ம். "பொற்பணியியல்பினின்-வான்வளியுநனீர் மண்மமுந்தன்ன-வானதாது வாறைங்கோசத் - தொகுதியாக்கை படுதியதொருபுடை." எ-ம். மீளவும் பரத்திலே யொடுங்குமென்றவன்

சொன்னதற்கு. பி-ம். "வாலர்ந் திரைறுரைதரு வாய்மையிற் கூடும்." எ-ம். கண்டுகொள்க.

அந்தப்பரத்திலே நின்றுதோன்றி ஜீவான்மாவாக நின்று மீளவும் பரத்திலேயொடுங்குமென்றதை யந்தப்பரத்துக் குண்டான வியல்பெல்லா மிந்த ஜீவான்மாவுக் குண்டாகவேணுமென்று அவனை யொருமையாமென்று மறுத்ததற்கு. பி-ம். "பாத்தளதே லிவையும் பரமார்த்தம் - பரத்திலதேலொழி முனபகர்மாற்றம்." எ-து. கண்டுகொள்க.

இனி யிரண்டாவது இருமையாகி யொன்றும் என்று ஐக்யவாதிசொன்னதற்கு. பி-ம். "நிருநிருந் சேருந்தகையி - னறிவி னறிவு செறிவுறப்பொருந்தி - யொலறும்." எ - து. கண்டுகொள்க.

அதனை மறுத்ததற்கு. பி-ம். உண்மையினிருமையு மொளியே யெனிலொரு - தன்மையதாகமுன் சாற்றினாலே." எ-து. கண்டுகொள்க.

அன்றியும் இருமையாகி யொன்றும் என்று ஸைவர் சொன்னதற்கு. பி-ம். "கருவியு மலமும் பிறிவுறப் பிறியா - னாலைங்கலுந் தானதுநோக்கித் - தன்னையு மதனையுந் தன்முதற்பொருளையு-மின்னதென் றறியா விருவருமுயங்கி - யொன்றுயுறுபய னிலப்பு-மின்றுய்ந்திற்கு மிதுசிவகதியே." எ-து. கண்டுகொள்க.

அப்படி முத்தியி லொன்றுபட்டுப் போமென்னில் ஆன்மா வழிந்துபோமாகையினு லது வுத்தமல்லவென்று மொன்றினென் றழியுமென்று மவனை மறுத்ததற்கு. பி-ம். "இருவருங்கூடி யொருபயனுய்த்தென் - றருள்னையிவ்வா றபேதிகணிலையே." எ - து. கண்டுகொள்க. அன்றியும் சித்தியார்லும். "அனேகந்தனெட்டெனவினிற், பொன்றுகையேயல் முத்தியினைப் பெற்றவராயர் புகல்வீ, யொன்றுகையே முத்தியெனிற் புருடனித்த னென்றும்." எ-து. கண்டுகொள்க.

இனி மூன்றுவது ஒன்றுதென்று சமவாதி சொன்னதற்கு. பி-ம். "மூன்றேயென்றனது முதிரொளிஞான - மறியாப்பச்சைச் சிறுபுழுக்கவர்ந்த - வண்டெனவுயிரைக் கொண்டிடுமுபிரது-தன் னைநோக்கித் தானதுவாகி - யைவகைத்தொழிலு மெய்வகையுணர் வும் - பிறியாவாறுபெற்றுத் - திரியாப்பெரியோர் திரட்சிசேர்ந்தி டுமே. எ-து. கண்டுகொள்க.

அப்படிக்கூடி யநுபவிடாதபொழுது சாயுச்சிய மாகாதாகை யா லொன்றுகாதென் றவனை மறுத்தற்கு. பி-ம். "மூத்தியுற்ற நற்றவரணையிடைச் - சேர்வரென்றனை சார்வருமுத்தி - சாலோக் கியமோ சாயுச்சியமெனிற்-பந்தமுற்ற கந்தலகழித்த - லறிவிலை டறிவு பிறியாப்பெற்றி - வேண்டுமென்பதற் கிண்டிவரிவ்வா-றிரு ப்பரென்பதற் குருத்தான்வேண்டு - மண்ணலதருளி னண்ணனியி ருப்பினுந் - சீவன்முத்தரென் றோதினரகன்று - நிங்கியு முருவ நீங்காதாயி - னேங்கியமுத்தி யாவதெனுரைக்க." எ-து. கண்டு கொள்க.

இனி தியிலென்றிரும் புறழினன்றும் என்று மீளவு மவன் சொல்ல அப்படியாகாது ஆமென்னில் உயிரினங்தொழிலும் வே ன்டும் என்று காலாவது அவனை மறுத்தற்கு. "முன்னவன்றன் னை - யெய்தினரெல்லாச் செய்தியுஞ்செய்வ - ரிரும்பெரியெய்தித் தருஞ்செயறகவெனிற் - பொருணிலைக்க வொருதிட்டாந்தப் - பேரேயாயிற் சீருக்கதுவிய - புன்லொருபுடைசார் கனறகுமாயி னும் - வேலொருரு டொருனை நீருக்கிலதே - கெருப்பெனுமிதனி லுருத்தனிகாட் டுக - வங்கியுமொன்றிற் றங்கினன்றல்லது - தன் னெழுனைடத்தா தெனறறி யினிகி - யிரும்பனற்செய்தி தரும்பரிசு ளதே." எ-து. கண்டுகொள்க.

இனி யைந்தாவது ஒனறுபட்டு முத்தியிலையநுபவித்து நிற் கறத்துக்குத் திருவுக்டாந்த மானவ மலத்தோடுங்கூடி யநிதப்ப

ட்டுக் கிடக்குமாபோல வென்றது ஆன்மா சிவத்தோடுங்கூடி-யொன்றுபட்டழிவதுமில்லை இரண்டுபட்டிருங்குவதுமில்லையென்ற தெனவறிக. இதற்கு. பி-ம். இந்நூலிலே முன்னே "உடலுயிர்க் கண்ணருக்க னறிவொளிபோற் பிரிவருமத்துவிதம்" என்றதுமிப்பொருட்பற்றி யெனவறிக. அன்றியுந் திருவருட்பயனில். "ஒன்றுலுமொன்றுந் திரண்டாலு மோசையெழா-தெனறுலுமொன்றிரண்டுமில்." எ-ம். "தாடலேபோற் கூடியவை தானிகழாவேற்றின்பக் - கூடலேதீயேகமெனக் கொள்." எ-ம். இந்நூல்களன்றித் திருவருளைப்பெற் றறுபவித்த வருயார்கள் திருவாக்குகளிலுமுண்டானகருத்து சிவாநந்தமாலையில். "தாணுவிடமுடத்துவித நஞ் சாதிக்கு மானவுணே, யானவத்தோடத்துவித மாக்கினாரார்— கோணறவே, யென்றுணே யென்றுணே யென்றுணே யேகமிரண்டு, டென்றுமற்சும்மா விரு." என்னும் வகைகளினுமிப்படொருவாக்கண்டுகொள்க.

ஆகையால் திருவுடாந்தத்திலுமறுபவத்திலுஞ் சிவனைப்பெற்ற வான்மாக்கள் முத்தியிலொன்றுபட்டழிவதஞ்செய்யாமலிரண்டுபட்டு நிங்குவதுஞ் செய்யாமலத்துவிதமாய்நின்றே யநுபவிப்பார்க ளென்பது கருத்து.

இதனுற் சொல்லியது ஆன்மா வுந்தப்பரத்திலே நின்றுந்தோன்றி மீளவு மந்தப்பரத்திலே யொன்றுபட்டுப்போமென்கிற மாயாவாதியும், அதல்ல ஆன்மா வுமாதியிலிரண்டாயிருந்து முத்தியிலொன்றுமென்கிற ஐக்யவாதியுஞ் சைவரும், அதல்ல முதற்றியிலுமிரண்டுபட்டுச் சிவனைப்போலுஞ் சமமாயிருக்குமென்றும் அன்றியும் அக்கினியைச்சேர்ந்த விரும்பு அந்த வக்கினிசெய்யுமுறைமைகளெல்லாஞ் செய்தாற்போலச் சிவனைப்பெற்றவர்களுஞ் சிவனைப்போலப் பஞ்சகிருத்தியங்களுஞ் செய்வர்களென்ற சமவாதியும், தந்தமதங்களைச்சொல்ல, வவர்களுந்தங்களை மறுத்துக்

காட்டிச் சைவசித்தாந்தவுண்மை யான்மா வானவமலத்தோடுங் கூடினதன்மைபோல விருக்குமென்னு மூதாரணையை யறிவித்
தது. (கூன)

வேறு—இது அபேதமுதலியவற்றை மறுத் தாத்மாவுஞ் சிவமு மயிக்கமான சாயுச்சியத்தி னிலைமை யுணர்த்திற்று.

ஒன்றிரண்டாகி யொன்றி லொருருமையாம் - கடோபாதிவசத் தா லகாயமான திரண்டாய் நின்முற் போலவும் பல பாத்திரங்க ளிலுள்ள சலோபாதிவசத்தா லொருசந்திரன் பலவாய்த் தோன் றிலுற்போலவும் அகண்ட பரிபூரணமா யிருக்கின்ற பரப்பிரமந் தானே மாயாகாரியங்களாக விருக்கிற தேகோபாதிகடோறுஞ் சிவபேதத்தையடைந்து பெத்தநீங்கி முத்தியின்க ணைந்தக்கடமும் பாத்திரங்களும் பின்னமா யுள்ளளவிற் கடாகாயமு மகாகாயமு மொன்முய் நின்முற்போலவும் பலவாகாயத்தொன்றின சந்திரப் பிரதிபிம்பங்கள் போ யொன்முய் நின்முற்போலவு மகத்துக்கரீ யாப்ரயித்து வேதாந்த சிரவணஞ்செய்து அதனன் முன்னுண் டான டாயோபாதி நீங்கிற் சிவனே பிரமமென்னு மாயாவாதி யொ ருபொரு ளிரண்டாய்ப் பின்னொன்முமென்னிற் சீவபரமிரண்டி ற்குங் குணமொன்று யிருத்தல்வேண்டும். அன்றியு மிப்படி யிருப் பதொன்றுக்கு மாயோபாதிகளிலேநின்று சுகதுக்கப்படவு மவை நீங்குதற்கு மகத்துக்கரீச்சேர்ந்து வேதாந்தங் கேட்கவும்வேண் டும். அன்றியும் சாயுச்சிய மின்பம் பெற்முலும் பின்பு ஜனனமு ண்டாதல்வேண்டும். ஆதலா லிந்த மாயாவாதி ஏகாத்மவாதமும டாது,—இனி யக்கினியினின்றும் பலபொறிகளும் புகையுந் தோ ன்றினுற்போல வருநிபாயிருக்கிற சிவந்தானே பிரபஞ்சகாரண மாய்ச் சடசத்தியா யிருக்கிற மாயை மாமாயையகரீயு மாத்மாக் கரீயும் பருதத்துத் தன்னிடத்தினின்றுந் தோற்றுவித்த அந்த மா

யையிறலே பிரபஞ்சத்தைப் படைத்துச் சராசரபேதமான வெ
ண்பத்து நான்குநூயிரபேத யொனிகடோறு நின்று விகாயா
டிப் பெத்தகிங்கின முத்தியின்கண் கன்மசமத்துவமும் சத்திநி
பாதமு முண்டானவளவிற் சற்குருவைவயடைந்து சாம்பவிதீட்சை
பெற்றுக் குரு உபதேசத்தாலே ஜகத்துடங்கலையுஞ் சிவமாகவநி
ந்து பெறுமிழவும் பெறுவானும் ஈவானும் வேறில்லையென்று
கருதிச் சீவனே சிவன் சிவனே சீவனென்று பேதாபேதங்கொ
ண்டிருக்கை மோகூமென்று சிவாத்துவிதி சொல்லிற் சித்தியா
யிருக்கிற சிவனிடத்திலே யசித்தாயிருக்கிற மாயைதான்று தி
சிவனிடத்திலே யாத்மாக்கள் தோன்றிற் கடாதிகளைப்போன்று
மூர்த்தமாயடியும் பேறுமிழவும் பெறுவானு மீவானும் வேறில்லை
யெனி லாகியனையடைந்து பெற்ற மோட்சத்தா லொருபிரயோச
னமு மில்லையாம். ஆதலி லவன்மதமும்,—இருமையாகி யொன்றி
லொன்றடியும் - அருதியிலே யாத்மாவுந் சிவமும் வேருயிருந்த
முத்தியிலே கிரினீருந் பாலிற்பாலு நெய்யினெய்யுங் கலந்தாற்
போல வொன்றுமென் றைக்கவாதிசொல்லி லதுதியே வேருயி
ருந்த முதலிரண்டி லொன்றடியும். ஆகையா லவன் சித்தாந்தமும
டாது,—ஒன்றுதலின் வென்றுகா - சிவநு பாத்மாவு முத்தியிலு
மொன்றாது பேதமாயிருக்குமென்னு பேதவாதி சொல்லிற் சாயுச்
சியமென்பதுமின்றிச் சிவனைப்பெற்றதாக மில்லையாம். ஆகையா
லதுவுமடாது,—தியிலென்றிரும் பூரணினின்றும் - தியிற்சேர்ந்த
விருப்பு தியானற்போ லாத்மாவுஞ் சிவத்து—னை கூடிச் சிவமா
மென்று சங்கராக்கவாதிசொல்லி லுக்மாவுக் கங்ஙனமாந்தன்
மையில்லை. யம்மதன் னென்னிலம்,—உயிரி னொங்தொழிலும்வே.ம்
திம் - தனக்குப் பிரானுயிருக்கிற கர்த்தானுடைய தலைமைபோ
லவுணும் பஞ்சக்ர்த்தியமுகடத்தம்வேண்டும். கடத்தி லவனுடைய
தலைமைகெடும். அன்றியுங் தினையச்சேர்ந்த விருப்பு திச்செய்யுங் தொ

நிலைச்செய்யாது. இரும்பைச்சேர்ந்த தீயே தகிக்கும். ஆதலினப் படிசொல்லுஞ் சங்கிராந்தவாதமுமடாது,—ஒன்றினின் றுணருமு ண்மைக் குவமை யாணவத்தோ டொன்றே,—ஆத்மாச் சிவனுடனே யேகிபவித்தித் தான்கெடாமன்றி பரமானந்தத்தை யறுபவிக்கு முண்மைக் குவமை முன்பிவ ரனைவத்தோடுகூடி யதுவாகவேயிருந்த தன்மையாம். எ-று.

ஒன்றென்பது முதனிலைவினை யீண்டுப் பெயராய் நின்றது. ஏகாரம் தேற்றம். கருவிகளெல்லாங் கழன்ற சேவலத்திலே யாணவமலத்தை யிவன்சென்று கூடாம லதுவு மிவனைவந்து பொருந்தாம லாத்மாத்தான்கெடாம லந்த மலத்தை யிதுவென்று சுட்டிக் காணுமலதுவுந்தானு மொன்றுகாம லிரண்டாகாம லொன்றுமிரண்டுமின்றுகாம லிருக்குந் தன்மைபோலா மென்பதாயிற்று. இன்னு மிதனுண்மைகளைக் குருமுகத்தானறிக. உவமை ஏகதேசமெனக்கொள்க.

இங்ஙனஞ் சொல்லப்பட்ட வுண்மைஞானத்தைப்பெற்றவான்மாக்களிடத்துண்டாகிய பாசமான வாணவமல மழியுமோ நிற்குமோவென்று வினவின மாணவகனை நோக்கிப் பாசமழியுமென்னிற் பேதவாதியத்தமாமென்றும் பாசமழியாதென்னிற் சமவாதியத்தமாமென்றும் இந்தவிரண்டுவகையு மறுத்துக்காட்டி மேலருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

அழிந்திடும் பாசமென்னினித்தமென்றுரைத்தல்வேண்டா, வழிந்திடா தென்னினன்றா மனைவதுங் கருதவேண்டா, வழிந்திடுந் சந்திநித்த மழிந்திடா வொளியிலன்றுன்னை, யழிந்திடி மிருளுநாச மடைந்திடா மலைடைந்திடாவே. (கூ)

மொழிந்திடுமூல மலத்தின்சத்தி
யழிந்திடுந்தனியல் பழியாதென்றது.

(இ-ள்.) அழிக்திடும் பாசமெனினில் நித்தமென்றுரைத்தல்வேண்டா

அழிக்திடாதென்னில் ஞானமடைவது கருதேவனைடா

மூத்தியைப்பெற்ற வான்மாக்களிடத்தநண்டாகிய வாணவமலமான து அழிந்துபோமென்று சொல்லுகில் பதி பசு பாசமென்று சொல்லப்பட்ட மூதல்மூன்று மநாதிநித்தமென்று வேதாகமங்கள் சொல்லவேண்டுவ திலையாம். ஆகையாலது வந்தமல்ல மூத்தியிலு மழியாதெனனில் ஆணவமல மறியாமையைப் பண்ணி நிற்கையாலது வான்மாவேயாடுங்கூடி மறைத்துகின்றுமட்டு மறியாயுள்ள சிவத்தோடுங்கூடி யநுபவிக்கவென்கிறது சற்று நினைக்கவேண்டுவ திலையாம். ஆகையாலதுவு மந்தமல்ல. பின்னை யெங்ஙனமென்னில்

அழிக்திடுஞ்சத்தி. நித்தமழிக்திடாது

ஒளியின்மூன்னாழிக்திடு மிருளுபோல மலைட்டிக்திடாமிலைடக்திடாவே.

ஆன்மபோதத்தை யநாதியே மறைத்துப்பட்ட வந்தமலத்தின் காரியமாயுள்ள சத்தியழியும். அதனுடைய காரணமாய்ய நித்தியத்தக் கழிவில்லையாம். அஃதென்போலவென்னில்

ஆதித்தப்பிரகாச மூதல்லாயுள்ள வொளிகளில் மூன்னில்லாத விருளானது அழிக்தமில்லை மறைத்துநின்றது மில்லை என - று. என்னவே ஒளியின் மேலேடுகொண்டிருளடங்கித் தோற்றமூமற்றுக் காரியப்படாம

நின்ரூற்போல வருளின் மெலீடுசெகாண்டு மலங்கிழ்ப்பட்டு நினறதெனவறிக. இதற்கு. பி - ம். போற்றிப்பம்ரூடையில். "சேணரிருள்வடிவுஞ் செங்கதிரோன் பானிற்பாற்—காணுதொழியுங் கணக்கேபோ—லாணவத்தி, ருதிகுறையாம லென்பாலணுகாமை—னீதிநிறுத்து நீலமேபோற்றி." எ - து. கண்டுகொள்க.

நு - ம். பாசமழியுமென்பதைப் பேதவாதி கருத்தென்றது அவன் செம்பிற் காளிதமானது ரூளிகையிலேல கெட்டுப் பொன்னனதன்மைமேபால வான்மாவுக்குண்டான வாணவமலமும மருளிரூலே கெட்டுச் சிவமயமாமென்ரூ னெனவுறிக. இதற்கு. பி - ம். சங்கற்பநிராகணத்தில். "ஈசனதருளாற் பாசத்தொகுதி - செறிவுறுசெம்பிற் கறையுறுகளிம்பு-குளிகைதாக்க வொளிபெற்ரூங்கு-நித்தசுத்த மூத்தாக-வைத்தனருளகின் மறைவல்லோரே." எ-து. கண்டுகொள்க.

இதனை யாகாதென்று மறுத்தலேதென்னில் பதிபசுபாசமூன்று நித்தியமென்றிருக்கையாலே பாச மழியவொண்ணுதென்றதெனவறிக. இதற்கு. பி - ம். சங்கற்பநிராகரணத்தில். "மறைகளாகமத் துறைகள் மற்றெலையு-நாசமில் பதிபசு பாசமென்றுரைத்த - லையர்த்தோர்குளிகை சயத்தாற்ரூம்பிர - காளிதநாசம் பாசத்தேய்த்தல்-கூடாதென்றியுங் குளிகைரூளை - நீடானழித்த நிலைநிலையாகலிற் - பேதவாத மோதநல்பிழையே - யின்னுமின்னுயி ரேமங்குளிகை - தன்னிலங்நியந் தருவதறிடனே." எ-து. கண்டுகொள்க.

பாச மழியாதென்றது சமவாதி கருத்தென்றலேதென்னில் அவன் முத்தியைப்பெற்ற விடத்துஞ் சரீரமழியாதென்கையிரூலே சரீரமுள்ளமட்டும் மும்மலமும் போகாதென்கையிரூலே யதனையாகாதென மறுத்தனெனவறிக. இதற்கு.

பி-ம். சங்கற்பநிராகரணத்தில். "அகன்று - நீங்கியுழுருவ நீங்காதாயி - லேங்கியழுத்தி யாவதெனுரைக்க - செடியுட லணுகாக் குடிலெகாடுக்குமென் - லேநிதினீயே பேதாய்ப கட்டுர - லொளிர்சினேமுச்சித் தளிரெனிமிதுதகு-மிச்சாருப நச்சினெரென்னின் - மும்மலத்தேது மின்மையதனேறு-யிதுவ ளர்முத்திப் பதமெனவியம்புக." எ-து. கண்டுகொள்க.

இனி மலத்தின் சத்தியாகிய காரியமழுயு நித்தமாகிய கா ரணமழுயாதென்பதற்கு. பி-ம். சித்தியாரில். "தெரிவரியமெ ய்ஞ்ஞானஞ் சேர்ந்தவாறே சிவம்பிரகாசிக்கு மிங்கே சீவன் மூத்தனுகு, மூரியமல மெளடதத்தாற் நறுப்புண்டவிடமு மொள்ளொரியி லெருளிமுன்ன ரிருளுந்தேற்றின், வருபயல்சே ர்நீர்மருவு கலங்கலுந்போலாகி மாயாதேதன்சத்தி மாய்ந்து காயந், திரியுமளவும் மூளதாய்ப் பின்புகாயஞ் சேராதவகை தானுந தேயுமன்றே." எ - து. கண்டுகொள்க. அன்றியும் ஞா ருமிர்த்தத்திலும் "மிக்க-விடங்கெழுபருவலி யுளங்கொள மந்திரத் - தடங்கியதன்மையு மற்றேருடங்கரிற்-கலங்கணீரி னலங்கிளர்விழுக்கா - லதொந்தமாறென விளங்கிறந்தகன்ற பாசப்பெருவலி தீர்த்தனன் - மாசில்ஞானப் பெருந்தகை யே." எ - து. கண்டுகொள்க.

இதனுற்சொல்லியது பாசமழுயுமோவென்று மழுயா தோவென்றுங் கேட்ட மாணவகனேநோக்கிப் பாசமழுயில் நித்தியத்துக்கு மழிவுண்டாமென்றும் பாசமழுயாதென்னில் ஞானம்பிரகாசிடாதென்று மறுத்துப் பாசத்தின் சத்தி யழுயு மன்றி நித்திய மழுயாதென்று வருமுறைமையை யறிவித் தது. (கடை)

வேறு—இது இந்தப் பேறடைந்தவரிடத்து மூலமல

மழியுமோவென்று வினவ வழியா தழியுமென்பதனைத் திருட்டாந்த பூர்வமாகவுணர்த்திற்று.

அழிந்திடும் பாசமென்னினித்தமென்றுரைத்தல்வேண்டா-பாச மழிவாமென்னின் மூனறுமுதலுநித்தமென முகமஞ்சொல்லவேண்டுவ திலவே,—அழிந்திடா தென்னின் ஞான மடைவது கருதவேண்டா - அழியாதென்னின் ஞானமுண்டாமென்று நிலைக்கவேண்டா ஆகலழிந்ததேதெனனில்,—அழிந்திருந்து சத்திநித்த மழிந்திடாது - இவனுடைய போதத்தைத் தெரியாதபடி மறைக்கின்ற காரியத்திற் கழிவுண்டாமத்தலை யொழியப் பாசத்திலுடைய வலுதித்தவத்திற்கு அழிவில்லை. அஃதெப்படியென்னின,—ஒளியின்முன்னரழிந்திடுமிருளுநாசமடைந்திடாமிடைந்திடாதே - விளக்கின்முன்னில்லாவிருளான தழிந்ததுமில்லை பிரகாசத்தின்முன்னின்றதாவுமில்லையதுபோலும். எ - று.

இருளுமென்னு மும்மையையழிதலுமிடைதலுமென மாறியுரைக்கப்பட்டது. இருளடைந்திடாவென பனவெருமை பன்மை மயக்கம்.

மற்றுண்டான கன்மமூமாயையும் போகைக்கு வழியெய்வனேனென்று வினவ மெலருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

எல்லையிற்பிறவிநல்கு மிருவினையொரீஇச்சிவித்தி
னெல்லையிலாகலுமேமன்றவுடற்பழவினைகளைநட்டுந் [டே
தெல்லையிலாவருதல்போலத் தோன்றிருவினையதுன்
லெல்லையினிடையுரையுரானைத்தழலுறவழிந்துபோமே. கூக

மும்மையாம்வினையு முயங்கியமாயையுஞ்
செம்மையாலகலுந் திறந்தெரிந்துரைத்தது.

(இ-ள்.) எல் அளவிடப்படாத ஜ்ஞாநங்களைத் தருகிற ஜலயில் பிறவிந ல்ரு மிருவிணை எரிசோவித்தி லெல்லையி னகலும்

புண்ணியபாவமாகிய சஞ்சித கன்மங்கள் அக்கினியைச்சேர்ந்த விதைகளைப்போல வாசாரியன் செய்யப்பட்ட தீக்ஷைகளிரு லே விரைவிலே கெட்டுப்போம்

ஏன்ற வுடற் பழ வி ணைக ளரு ட்டும்

எடுத்தவுடலுக் கமைத்தபிராரத்த மந்தி வுடலுள் ளதனையும் புசித்து அந்த வுட லோடே யொக்கக்கெட்டுப்போம்

தொல்லையில் வருதல்போலத் தோன் றிரு வி னையதுண்டேல்

முன்புண்டான ஜ்ஞாநங்களோறும் பிரா ரத்தகன்மம் புசிக்கச்செய்தே யாகாமியக ன்ம மேநிரூற்போல இப்பொழுது பிரார த்தகன்மம் புசிக்கச்செய்தே ஆகாமியங் கட்டுப்படாதேனவெனனில் அப்படி யுண்ட டாகாது. வாதரூபலத்தாலும் அபுத்திபூர் வத்தாலும் புண்ணியபாவங்கள் மேலேக்கு ஜ்ஞாநமாகக் கட்டுப்படுமாகில்

அல்லொளி புரையுறானத் தழுறவழிந்து போமே.

விளக்கின்முன் னிருள் போரூற்போல விவனிடத்தி லுண்டாயிருக்கப்பட்ட ஞா ருக்கினியி னலே யழிந்துபோம். எ - று.

வி - பு. எல்லையில்லாத ஜ்ஞாநங்களைத் தருகிற விருவிணை யென்றது யெங்ஙனேயென்னி லொவ்வொரு ஜ்ஞாநங்களை யெடுத்தாலந்த ஜ்ஞாநங்கடோறும் வெகுவிதமான ஜ்ஞாநங்களைக் கட்டுப்படுத்துமென்ற தெனவறிக. இதற்கு. பி - ம். இருபா விருபஃதில். "அத்துவாமெத்தி யடங்காவிணைகள்." எ - ம். இந்நூலினும். "முந்துறுகருந்துபயன்." எ - ம். வருமேலதுக் களைக் கண்டுகொள்க.

இங்ஙனங் கட்டுப்பட்டுக் கிடக்கிற சஞ்சிதகன்மங்களை யாசாரியன் திணைகளிலே போக்குவனென்றதற்கு. பி-ம். தித்தியாரில். "மூன்றுதிறத்தணுக்கள்செய்யுங் கன்மங்கட்கு மூன்னிலேயா மூவிரண்டாமத்துவாவி, ஒன்றுமூறை யனைவயருத்தி யறுத்தமல மூதிர்வித் தரும்பருவ மடைதலுமே யாசாரிகித், தோன்றிநுகராதவகைமூற்செய்கனமத் தகளறுத்தங் கத்துவா தொடக்கறவேசாதித், தென்றவுடற்கன்ம மநுபவத்திலுலறுத்திங் கினிச்செய்கன்ம மூலமலஞானத் தாலிடுப்பன்." எ-ம் போற்றிப் பஃறொடையினும். "செய்யதிருக், கண்ணருளாலேநோக்கிக் கடியபிறப் பாற்பட்ட—புண்ணுடலிருவினையும் போயகல." எ-து. கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது சஞ்சிதகன்ம மாசாரியன் செய்யப்பட்ட திணைகளிலே போமென்றும் பிராரத்தகன்ம மூடலுள்ளமட்டும்புசித் துடலோடே யொக்கமாயுமென்றும் ஆகாமியகன்ம மூண்டாலுமிவனிடத்தி லுண்டாயிருக்கப்பட்ட ஞானக்கினியிலுலே போமென்று மூறைமையு மறிவித்தது. (நூக)

வேறு—இது மற்றைக்கன்மமு மாயையும் போம்வழியுணர்த்திறறு.

எல்லையில் பிறவிகட்கு மிருவினை யெரிசேர்வித்தி லெல்லையினகலும் - முடிவில்லாத சனனங்களை யுண்டாக்குவதாய்ச் சடாத்துவாக்களிலுங் கட்டுப்பட்டுக் கிடப்பதாயிருக்கிறு புண்ணியபாவங்களான சஞ்சிதகன்மத்துவ சாதனை யான தீக்கையிலே யாசிரியன் பார்வையாலே தீசேர்ந்தவித்தழற்போல விரையக்கெட்டுப்போம்,—என்றவுடற் பழவினைகள்-எடுத்தவுடலுக் கடைத்த பிராத்தகன்மங்கள்,—ஊழ்

நூ

டும் - அவ்வுடல் போமளவுநின்று புசிக்கும்படி புசிப்பிக் கும்,—தொல்லையின் வருதல்போலத் தோன்றிருவினையுண்டேல் - முன்பு கூடுவதுபோலத் தேகத்திற் பிராரத்தம் புசிக்கையிலே மருதிகளின் வாதனையாலே தோன்றப்பட்ட வாகாமிய மூண்டாயிற்றுயின்,—அல்லொளி புரையுஞானத் தழலுற வழிந்துபோமே - (ஒளியல்லுப் புரைய) விளக்கின்மூன்னிருட்போல ஞாருக்கினி யுறுதலாலவை யழிந்து போம். எ - று.

இங்ஙனங் கன்மங்களில்லையாகவே மென் மாயையுமில்லையென்பதாயிற்று.

☞ பத்தாஞ் சூத்திரமாகிய ஆன்மலாப மூற்றிற்று.

இங்ஙனஞ் சஞ்சிதகன்மமானது தீக்ஷைகளிருலே போ மென்றும் பிராரத்தகன்ம மிந்த வுடலுள்ளமட்டும் புசித்தற்றுத் தொலையவேவணுமென்றும் அதரு லுண்டாகப்பட்ட வாகாமிய கன்மமான தவர்களிடத் துண்டாகிய ஞானத்திருலே போமென்றும் மூன்னர்ச் செய்யுளிலே யருளிச்செய்கையிரு லப்படி வாதிக்கப்பட்ட கன்மங்கள் போக்கிக்கொள்ளுகைக் கந்தஞானநிலைமை கைகூடாத வவதரத்தும் பரிபாகமாக ஆன்மலாபமாகிய பத்தாஞ் சூத்திரத்துக்கு மேலாக மூற்கூறின ஆன்மசுத்தியாகிய ஒன்பதாஞ்சூத்திரத்தின் பகுதியாகய பஞ்சாக்ஷர தரிசனமாகிய ஐந்தெழுத் தருணிலையென்னும் அதிகாரம் வைக்கப்பட்டது.

அஃதாவது, பதிபசுபாசமென்று சொல்லப்பட்ட மூன்று மூதலும் ஐந்துவகையாக நிற்கையாலந்தவைந்தினையுஞ் சிவ

னுடைய திருநாமமாகிய பஞ்சாக்ஷரமு மைந்தெழுத்தாகை யா லதிலேயடைத்துத் தரிசிப்ப தெனவறிக. அது ஐந்திலும் நின்றமுறைமை மேல் "திருவெழுத்தைந்தில்" என்னுஞ் செய்யுளிலே கண்டுகொள்க.

இவ் வதிகாரத்துக்கு முந்தின செய்யுளாகிய "பந்தமா னவையறுத்து" என்னுஞ் செய்யுளுக்குந் தொந்தவருமாறு:—அஃதாவது அப்படிச் செய்யப்பட்ட தீக்ஷைகளிலுலே சஞ்சிதகன்மம் போலுற்போல மற்றுள்ள கன்மங்கள் போகாதிருப்பா னெனென்ற மாணவகனே நோக்கிப் பிராரத்தகன்ம மிந்த வுடலுள்ளமட்டும் புசித்தே தொலையுமென்பதற்கொரு திருஷ்டாந்தமுகமாக வருளிச்செய்து அப்படி வாதிக்கப்பட்ட கன்மங்கள் ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தைக் குருமுகாக்தரமாக வறிந்துச்சரிக்கிற சிவஞானிகளுக்குப் புசிப்புமாத்திரமாய் வந்துபோகிறதாழிய அவர்களை மேலிட்டு வருத்தமாட்டாதென்னு முறைமையை மேலருளிச்செய்வா னெடுத்துக்கொண் டருளியது.

பந்தமா னவையறுத்துப் பவுதிக முழலுமெல்லைச், சந்தியா தொழியா திங்குத் தன்மைபோல் வினையுஞ்சாரு, மந்தமா திகளிலாத வஞ்செழுத் தருளினாலே, வந்தவா றுரைசெய்வாரை வாதியா பேதியாவே. (சு0)

உடலுறுநுகர்வு முற்றிடும்வினையு
மிடர்படவஞ்செழுத் தியம்புகவென்றது.

(இ - ள்.) பந்தமா னவையறுத்துப் பவுதிக முழலுமெல்லைக் தீக்ஷைகளிலுலே கன்மங்களைப் போக்கிலும் பிராரத்தகன்ம மிந்தப்பூததேகமுள்ளமட்டும் பொருந்துதல் தவிராது. அஃதென்போலவெனின்,

சந்தியா தொழி லாது

இக்குத் தன் னைபோல்

விளையுஞ் சா ரும்

அந்தமா தி களிலாத வஞ்செ ழுத் தருளி னே லே வந்தவா று னைசெய்வாரை

வாதியா பே தியாவே.

பெருங்காயத்தி னியல்புபோல. அஃதா வது பாத்திரத்திலே யிட்டுவைத்த பெரு ங்காயமானதை வைத்தவிடை ருறையா மல்வாங்கிப் பாத்திரத்தைத் தூய்தாய்க்க ழுவிப்போட்டாலு மந்தப்பாத்திர முள்ள மட்டு மதிலுள்ள கந்தத்தின் வாசனை போகாதாற்போல வெ ன்றதெனவறிக. அப்படிப் பிராரத்தகன்ம முண்டாகவே ஆகாமியகன்மமு மெருதிராது. அப்படி யிவ்வனம் பொருந்தப்பட்ட பிராரத்தமு மதலுண்டாகிய வாகாமியமும்

முடிவுமுதலு மில்லாத ஸ்ரீபஞ்சாக்ஷர த்தை ஆசாரியன் கடாக்ஷித்த முறைமையி லெ யுச்சரிக்கப்பட்ட சிவஞானிகளை

அந்தப்பிராரத்தகன்மம் புசிப்புமாத்திர மாய் வந்துபோகிறதொழிய அவர்க ளீடுப டத்தக்கதாக மேலிட்டு வருத்தாது. அவ ர்க ளப்படி யீடுபட்டு வருந்தாது கொண் டே மற்ற வாகாமியகன்மமு மெருது. அப் படியே யெறிற்ருகிலும் பேதமாக்கிவித்து ஜநநத்தை யுண் டாக்காது. எ-று. அன்றியு மிந்தப்பதத்துக்குப் பிராரத்த ன்மம வாதியாது ஆகாமிய கன்மம் பெதியாதென்பதைப் பிராரத்த மொன்றிலேயும் வைத்துக்கொண் டொருமையா கக் கூறுவாருமுளர். அதுவழக்கல்ல வெனவறிக. அதற்குக்

குற்றமேமதென்னில் அப்படிப் பிராரத்த கன்மம் வாதியாதென் ரூம் பவுதிகமுழலுமெல்லைச் சந்தியா தொழியாது என்ற பதத்துக்குப் பிராரதத கன்மம் பூதகேதகமுள்ளமட்டும் பொருந்துதல் தவிராதென் றறுதிகூற வழக்கில்லையா மெனவறிக. அன்றியும் சித்தியாரில். "ஏன்றவுடற்கனமமறுபவத்தி னையறுத்து." எ-ம். திருவருட்பயனில் "ஏன்றவிணையுடலோ டேகும்." எ-ம். நூல்களில் வரும் பொருளுகளும் விரோதமுமா மெனவறிக.

இதுவன்றியும் பிராரத்தகன்மம் பெதியாது ஆகாமிய கன்மம் வாதியாதென்பாருமுளர். அதுவும் வழக்கல்லவென வறிக. அதற்குக் குற்றமேமதென்னில் பெதியாதென்பது போ காதென்னும் பொருட்பெற்றுநிற்கையால் பூதகேதகமுள்ளமட்டும் பிராரத்தகன்மம் பொருந்துதல் தவிராதெனறு மூற் கூறுனகயாலே மீளவு மதனையிரட்டித்துப் பொருட்படுத்த வேண்டியதில்லையாம். அல்லது உம் பஞ்சாகூரத்தையுச்சரிக் கிறவர்களுக்குப் பிராரத்தகன்மம் போகாதெனபதுவழக் கல்ல. அஃதெதங்ஙனமெனின் பஞ்சாகூரத்தை யுச்சரித் தால் கன்ம நீங்குமென்பதன்றிப் போகாதெனப தெது போ லவென்னில் ஒளஷதங்கொண்டாலும் வியாதிபோகாதென்ப தற் கொக்குமெனவறிக. ஆகையால் பிராரத்தகனமம் பெதி யாதென்பது வழக்கல்லவெனவறிக.

அன்றியும் வாதியாபெதியா வென்பதை ஆகாமிய மொ ன்றிலையும் வைத்துக்கொண்டு பஞ்சாகூரத்தை யுச்சரிக்கிற சிவஞானிகளுக்கு ஆகாமியகன்மம் வாதியாது அல்லாமல் வாதித்ததாகிலு மதருலே பெதித்து ஜனமுண்டாக்காதென் பாருமுளர். அதுவும் வழக்கல்ல வெனவறிக. அதற்குக் குற்றமேமதென்னில் இச்செய்யுளிலே பவுதிக முழலுமெல்லைச்

சுத்தியாதொழியாது என்று பிராரத்த கன்மத்துக்குச் சொல் லுகையிலுலும் வினையுஞ்சாருமென்று ஆகாமிய கன்மத்துக் குச் சொல்லுகையிலுலும் அன்றியு மிதுவே கருத்தென்பதை ப்பற்றி அம்பலநாதத் தம்பிரானர் இச்செய்யுளுக்குக் கருத் தாக வருளிச்செய்தது ம் "உடலுறுநுகர்வு மூற்றிம்வினையு- மிடர்படவுஞ்செழுத் தியம்புகவென்றது." என்று பிராரத்த த்திற்கும் ஆகாமியத்திற்குமாக வருளிச்செய்கையிலுல் ஆகா மிய மொன்றிலுங்கூட்டிப் பொருட்படுத்துகை வழக்கல்ல வென்வறிக. ஆகையால் பிராரத்த கன்மமான நு சிவஞானி களுக்கு வாதனாபலத்தால் புசிப்புமாத்திரமாய் நிற்பதொழிய சிவஞானிகளை மேலிட்டு அவர்க ளீடுபடுத்தக்கூடாத வருத் தாதெனபதே வாதியாதென்பதற்கு வழக்கெனவுறிக.

அப்படிப் பிராரத்தகன்மம் வந்து தாக்கினுலும் அதனு லீடுபட்டு வருத்தப்படாமல் நின்றவர்களு முண்டோவென் னில் அபபடியுண்டு. அஃதியாரோவெனனில் அப்பொன்னுங் திருநாவுக்கரசு தம்பிரானர் சமணசமயத்தைவிட்டுச் சைவ த்திலேவந்ததற்கு அந்தச்சமணர் வெகுண்டுகொன்று வேண் டும்வருத்தங்கள் செய்தவளவிலும் அதனுலீடுபட்டு வருந்தா மல் நின்றதுண்டு. அதற்கு. பி-ம். திருக்களிற்றுப்படியாரில். "கொல்கரியினீற்றறையி னஞ்சிற்கொலைதவிர்த்தல், கல்லாலமிதப்பாகக் கடனீந்தல்-நல்ல், மருவார்மறைக்காட்டுஞ் வாசறிறப்பித்தல், திருவாய்மூராளிச்செயல்." என-து. கண்டுகொள்க. அப்பர் ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை யுச்சரித்துக்கொண்டு நிற்கவே யந்த வமணர்செய்யப்பட்ட வருத்தங்களா லீடுபட்டதில்லை யென்பதற்கு. பி-ம். தேவாரத்தில் "சொற்றுணைவேதியன் சோதிவானவன், பொற்றுணைதிருந்தடி- பொருந்தக்கைதொ ழுக், கற்றுணைப்பூட்டி- யாற்கடலிற்பாய்ச்சிறு, கற்றுணையா

வது நமச்சிவாயவே." எ-து. கண்டுகொள்க. அன்றியுஞ் சிவஞானிகளிடத்திலே கன்மங்கள்வந்து தாக்கிலுலு மதலல் வருந்தார்களென்பதற்கு. பி-ம். சித்தியாரில் "அங்கித் தம்பணவல்லார்க் கனல்சுடாதாகு மெளடத மந்திரமூடையார்க் கருவிடங்களேரு, வெங்குற்றசுன்மமெலாஞ் செய்தாலுஞானிக் கிருவினைகள் சென்றணையா மூற்செய்வினையிங்குத், தங்கிப்போம்பாத்திரமுங் குலாலன்விணதவிர்ந்த சக்கரமுங்கந்தித்தச் சுழலுமாபோன், மங்கிப்போய்வாதலினாயா லுழல்விக்குமெல்லா மலங்களும்பின் காயமொடு மாயுமன்றே." எ-ம். ஞானமிர்தத்தில் "மண்விணமாக்க டம்விண மூடியா-திகிரியுருட்டி பொருவியாங்கு-வருதலொவா மற்றுங்குவிவாய்த்-தசும்புரையிங்கான் கசும்புறத்துடைத்து-விருங்கடியிகவாப் பெருங்கடனல்லதை-யுடையதையுடையரோ விணயுணர்ந்தோரே." எ-து. கண்டுகொள்க.

அந்தமாதிகளிலாத வைந்தெழுத்து. எ-கு. ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தைத் தோற்றமு மீறுமில்லாதென்ற தேதென்னில் சிவனுக்குத் தோற்றமு மீறுமில்லாததுகொண்டே ஸ்ரீ பஞ்சாக்ஷரமுஞ் சிவனுடைய திருநாமமாகையா லதனையுமப்படிச் சொல்லப்பட்டதெனவறிக. இந்தப் பஞ்சாக்ஷரத்தைக் குருமுகாந்தரமாகவறிந் தாச்சரிக்கிற சிவஞானிகளை யந்தக்கன்மங்கள் மேலிட்டு வருந்தாதென்றதற்கு. பி-ம். தேவாரத்தில். "விண்ணோர்வடிக்கிய விறகின்வெவ்வழ, லுண்ணியபுகிலைவெயொன்றுமில்லையாம், பண்ணியவுலகினிற் பயின்றபாவத்தை, நண்ணினின்றறுப்பது நமச்சிவாயவே." எ-ம். அன்றியு மந்தப் பஞ்சாக்ஷரத்தை யறிந் தாச்சரிக்கிறவர்களிடத்திலே சிவன சாந்நித்தியமாவனென்பதற்கு. பி-ம். தேவாரத்தில். "ஏதுமொன்று மறிந்திலராயினு, மோதியுஞ்செழுத் தஞ்சு

ணர்வார்கட்குப், பேதமின்றி யவரவருள்ளத்தே, மாதர்
தாழும் மகிழ்வர்மாற்பேறரே." எ - ம். அன்றியும் சித்தியாரில்
ஒன்பதாஞ்சூத்திரத்தில் அஞ்செழுத்தை விதிப்படி யுச்சரி
க்க மதியருக்கனேக யரவம்போற்றீரன்று மான்மாவி லர
னே." எ-ம். கண்டுகொள்க.

இதனுற்சொல்லியது ஆன்மாக்களுக் குண்டாகப்பட்ட
கன்மவ்கனே தீனைகூயிலுலே யாசாரியன் கிருபைசெய்து
போக்கினலும் பிராரத்தகன்ம முடலுள்ள மட்டும் புசித்தே
தொலையுமென்றும் அங்ஙனம் பிராரத்தகன்ம முண்டாகவே
ஆகாமியகன்ம முண்டாமென்றும் அப்படியுண்டாகப்பட்ட
கன்மவ்கனிரண்டும் ஸ்ரீ பஞ்சாகூரத்தைக் குருமுகாந்தர
மாகப்பெற் றுச்சரிக்கிற சிவஞானிகளுக்குப் பிராரத்தகன்
மம் புசிப்புமாத்திரமாய் வந்துபோகிறதொழிய மேலிட்டு
வருத்தாதென்றும் அது அப்படி வருத்தாதுகொண்டே யத
லுலுண்டாகிய வாகாமியகன்மமும் பேதித்தக்கினேத்து ஞா
நத்தை யுண்டாக்காதென்றுமு வரு முறைமையை யறிவித்
தது. (சு)

வேறு—இனி நிறுத்தமுறையானே இந்த வாத்மலாப
மான நிட்டைகூடாதவர்களுக்கு முற்கூறிய ஒன்பதாஞ்சூத்
திரத்தின் பகுதியாகிய ஸ்ரீ பஞ்சாக்கரத்தை மூன்று செய்யு
ளா லுணர்த்துகின்றர். அவற்றுளிஃ தநேன யுச்சரிக்குமுறை
மையா லுச்சரிக்கப் பிராரத்தகன்மமு மாகாமியகன்மமும்
வாதியாவென்ப துணர்த்திற்று.

பந்தமா னவையறுத்துப் பவுதிகமுழலுமெல்லை-ஞான
திக்கையாலே மலத்திரயபந்தங்களை யாசாரியரீக்கி யுண்
மையிலே நிறுத்த லிவனுக்குப் பூதசம்பந்தமான தெவ்வுட

டாம்போலத்தோன்றி யிருக்கையிலும் குயமகன் நிரிகையா னது வணைகலம் வனைந்து கைவிட்டாலும்விடாது சுழலுமா றுபோல வாதனையாலே முன்புபோல வியாபரிக்குமிடத் தில்,—சந்தியா தொழியாதிவ்குத் தன்மைபோல - தானிரு க்த பாத்திரமிருக்குமளவுக் தானில்லாதிருந்தும் தன்வாத னைநீங்காத பெருங்காயத்தின் குணம்போலப் பிராரத்துவ வாதனை நாக்காதிராது,—வினையுஞ்சாரும் - அதனல் யா னனென்னு மமதைதொன்னடாகாமியமும் பொருந்தும். போக்குமுபாயமுன்சொன்ன நூலுக்கினியாலன்றியு மூன்ன டோ வெனின்,— அந்தமாதிகளிலாத வஞ்செழுத்தருளி லே வந்தவா றுரைசெய்வாரை யாதியாபேதியாவே-ஆயினு மந்திரசத்தி யுடையவர்கட்கு விஷமுதலிய குரூரசத்தி க டாக்காதவாறுபோல மூடிவுமுதலுமில்லாத ஸ்ரீ பஞ்சாக் கரத்தை யாசாரிய ரணுக்கிரகத்தால் வந்தபடியே யறிந்து ணு பவ பூரணமாக வுச்சரித்தவர்களைப் பிராரத்துவ கன்மம் வாதிக்கமாட்டா. எ - று.

அறுத்து அறுக்கவெனத்திரிக்க. சந்தித்தல் தாக்குதல். வந்தவா றென்பதற்குத் தோன்றினமுறை யறிந்தென்பா ரூளர்.

இவ்வனஞ் சொல்லப்பட்ட பஞ்சாக்ஷாத்திலே பதிபசு பாசங்கள் மூன்றும் ஐந்துவகையாக நின்ற மூறைமையென்ன வேயென்றும் இதனை டாருச்சரிக்கப்படுமென்றும் விளவு மே லருளிச்செய்வா னெடுத்துக்காண்டருளியது.

திருவெழுத் தைந்திலாவ்மாத் திரோதமா சரு ள்சிவ்ன்சூத்ர, தாரதி னிவ்றிதாவ்ரூந் தன்மையுமென் தெவ்ளைமையா கி, வரு * மாக மிருதியா லே வாசியி லா

சையின்றிக், கருவழிச் சுழலுமாறுங் காதலாய்க் கோ
தலாமே. (சக)

திதிலாவுண்மைத் திருவைந்தெழுத்தையுங்
காதலாமவர்க் கோதலாமென்றது.

(இ-ள்.) திருவெழுத்தைந்தியான்மாத் திரோதமாசருள் சிவன்

சிவனுடைய திருநாமமாகிய நமசிவாயவென்ற ஐந்தக்ஷரத்தினும் ஆன்மாவுந் திரோதசத்தியு மலமும் அருளும் சிவமும் என்று சொல்லப்பட்ட ஐந்தும்முதலும் நிற்கும். அவையாவன? யகாரத்திலே யான்மாவும் நகாரத்திலே திரோதசத்தியும் மகாரத்திலே மலமும் வகாரத்திலே யருளும் சிகாரத்திலே சிவமுமாக நின்றதெனவறிக. இவையைந்து முதலினுஞ் சிவமுன்னுவச்சரிக்கும்பொழுது

சூழ்தரநின்றது

திரோதமும் மலமும் மொருபாலும் அருளுஞ் சிவமும் மொருபாலுமாக முன்பின் சூழ்ந்துநிற்கநின்றது ஆன்மா

ஒன்றுந் தன்மையுந் தொன்மையாகி வரும்

நடுவேநின்ற வான்மாவானது அந்தவருளறிவித்தாலதனுலே யறிந்து மற்ற மலமறைத்தாலதனுலே மறைப்புண்டும் இங்ஙனமிரண்டோடுங்கூடியொன்றுபட்டதனவாய்நின்றுலுந் தானொருமுதலாய்வருகிறது அநாதியேயுடையது. அப்படியிருக்கவும்

மறமிருதியாலே

மவ்வாகியமலமும் நவ்வாகிய திரோதசத்தியு மேலிட்டு நிற்கையாலே

வாசியிலாசை யின்றிக் கருவ ழிச்சுழலும் மாறுங் காத லார்க்கேகாதலா மே.

வவ்வாகிய வருளினுஞ் சிவ்வாகிய சிவத் திலு மாசையற்று ஜாகமாண தக்கத்திலே நின்றுழுந்தும் அந்த மலத்தின் கௌரவநீங்கி யருளி லே யாசையுடையவர்களுக்கு இந்தப் பஞ் சாக்ஷரத்தை யுச்சரிக்கலாம். எ - று.

* மகமிருதி என்பதை மலமிருதியெனப் பாடமோதுவா ருமுளர்.

ரு-ம். பதிபசு பாசமென்று சொல்லப்பட்ட மூன்றுமு தலும் ஐவகையாக நின்றதற்கு வழியெதென்னிற் சிவ்வி லும் வவ்வி லும் நவ்வி லும் பதியின் கூருகிய சிவமும் அருளுந் தி ரோதசத்தியு நின்றதெனவறிக. யவ்விலே பசுவாகிய வான் மா நின்றதெனவறிக. மவ்விலே பாசமாகிய மல நின்றதெ னவறிக.

இதிலே மூற்கூறிய பதியின் கூற்றுக்குப் பாசத்தின் பகு தியா யிருக்கப்பட்ட திரோதசத்தியைக் கூட்டினதே தென் னில் அஃதாவது ஆன்மாவை மறைக்கப்பட்ட வாணவமலத் தைப் பாகம்வருத்தவேண்டி யருளானது திரோதமாய்நின்று காரியப்படுத்துகையா லதனையும் பதியின்கூருகச் சொல்லப் பட்டதெனவறிக.

அப்படியாயி லந்தவருளுக்குத் திரோதசத்தியென்று பேராகவேண்டுவா னேனெனின் லந்த மலத்தோடுங்கூடிக் காரியப்படுத்துகையா லவ்வாறப்பெயரான தெனவறிக. இத ற்கு. பி - ம். சித்தியாரில். "தூயவன் றனதோர்சத்தி திரோ தானகாரியதென்றும்." எ - ம். அனந்தியும் இந்நூலினும் "மூற் கூணமருவு திரோதாயி கருவாயாகி." எ-ம். வருமேதக்கனைக் கண்டுகொள்க.

நிகழ்கின்றதொன்றுந்தன்மையுந் தொன்மையாகிவருதம். எ-கு. ஆன்மா வருளோடு மலதநோடுங்கூடி யொன்றுபட்டு வருமென் பதற்கு. பி-ம். சித்தியாரில். "சத்தசத்தநிவதான்மாத் தான்சத் தமசத்தமன்று, நித்தரூய்ச் சதசத்தாகி நின்றிடு மிரண்டுன்பா லும்." எ-து. கண்டுகொள்க.

மகமிகுதியாலே வாசியி லாசையின்றிக் கருவழிச்சுழலும். எ-கு. நவ்வாகிய திரோதத்தோடு மவ்வாகிய மலத்தோடுங்கூடிப் பிரபஞ்சப்பற்றுவிடாமல் நிற்குமளவும் ஜநநமரண துக்கத்திலே நின் றழுந்துமென்றதற்கு. பி-ம். சித்தியாரில். "மலமாயைகன்ம மாயேயந்திரோ தாயிமன்னிச், சலமாரும் பிறப்பிறப்பிற் றங்கி எ-து. கண்டுகொள்க.

மாறுங்காதலார்க் கோதலாமே. எ-கு. பிரபஞ்சப்பற்று விட்டருளிலே யாசைப்பட்டவர்களுக் கென்றதற்கு. பி-ம். திரு வாசகத்தில். "அருளைப்பெறுவா ரசைப்பட்டேனை கண்டா யம் மானே." எ-ம். "ஆசைப்பட்டே னுட்பட்டே னுன்னடி-யேனை." எ-ம். கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது ஸ்ரீ பஞ்சாக்ஷரத்திலே பதிபசுபாச மூன்றும் ஐந்தாக நின்ற முறைமையும் இதிற்பசுவாகிய வான்மா அந்தவருளை யிழந்து மலத்தோடுங்கூடி ஜநநமரண துக்கப்பட்டு நிற்குமுறைமையும் இந்தமலத்தின் மேலீடுநீங்கி யருளிலே யா சைப்பட்டவர்களுக் கிந்தப் பஞ்சாக்ஷரத்தை யுச்சரிக்கலா மென் னு முறைமையு மறிவித்தது. (சக)

வேறு—இம் தஞ்செழுத்தாலுந் திரிபதார்த்தங்க ளின்றமு றைமையு மின்னார்க் குரைக்கலா மென்பது மூனார்த்திற்று.

திருவெழுத் தைத்திலான்மா திரோதமா சருள்சிவன் சூழ் தாநாடி நின்றது - ஸ்ரீ பஞ்சாக்கரத்திலே யாத்மவட்சரமாவது

திரோதானசத்தி யாணவமல மருள் சிவமாகிய வட்சரங்க ணூன் கும் முன்னிரண்டும் பின்னிரண்டுமாகச் சூழ்ந்திநிற்ப நடுவேநின் றதாயிருக்கும்,—ஒன்றுந் தன்மையின் மெருன்மையாதிவருட்-இவ ங்னமிவ்வைந்து மொரு தொடரான வியல்பிலேயே— பழையதாய் வாராநிற்கும்,—மந மிகுதியாலே வாசியாலாசையின்றிக் கருவழி ச்சுழலும் - ஆத்மாக்க ளிவ்வைந்தனுண் மல திரோதாயிகளுடைய மேலீட்டாலே யருளிலுஞ் சிவத்திலும் விருப்பமில்லா திருக்கை யிலேலே சனனங்களிலே சுழலாநிற்கும்,—மாறுங் காதலார்க் கேகாதலாமே - இந்தச் சனனங்க ளுர்த்தற்குக் காரணமான காத லேயுடையார்க்கே இதனுண்மையைச் சொல்லலாம். எ-று.

பிரிதிலேயேகார நான்கனுருபி லேற்றப் பட்டது. இன்றிஇன் ருக. வாசியி லாசையின்முதல் நமமுதலாக வுச்சரிக்கை. அதுமேற் சிவமுனை)க வோசைகொ ளென்பதனை லுஞ் சூழ்கின்ற நான்க னுட் டிரோதாயியை முதற்சொல்லுகையாலு மறிக. இனி ஏகார த்தை யெதிர்மறையாக்கிக் காதலார்க் கிப்படி சபிக்கலாகா தெ ன்பினுமாம்.

இங்ஙனஞ் சொல்லப்பட்ட மலமும் திரோதாயியு நீங்கியக் தவருளையுஞ் சிவத்தையும் பெறுவ்வகி யெப்படியென்று வினவ மேலருளிச்செய்வா னெடுத்துக்கொண் டருளியது.

ஆசறு திரோதமேவா தகலுமா சிவமுன்னை, வாசைசெ ளதனினைம்மே லொழித்தரு ளோங்கு மீள, வாசியை யருளுமாய மற்றது பற்றுவற்றங், கீச னி லேகமாகு மிதுதிரு வெழுத்தினீரே. (சூ)

ஓங்கியதிருவெழுத் தினையுணர்ந்துரைப்பவர்
நீங்கருத்சிவத்தினை நீங்காரென்றது.

(இ - ள்.) ஆச அஞ்ஞானமாகிய மலமும் அதனைநீங்கூடி றுதிரோதமேவா யிருக்கப்பட்ட திரோதானசத்தியும் ஆன்மா

தகலுமா சிவழு வைப் பொருந்தாம னீங்கும்படி சிவத்தை
ன்னுக வோனை முன்னுக வுச்சரிக்க
கொள்

அதனில்
நம்மே லொழி
த்தரு ளோங்கும்

மீள வாசியை
யருளும்
மாயா
மற்றது பற்ரு
வுற்றங் கீ ச னி
லேகமாகும்

இது திருவெ
ழுத்தினீடே.

நீயு மப்படி யுச்சரிப்பையாமாகில்
நவ்வாகிய திரோதசத்தியு மவ்வாகிய மல
த்தின் மேலீட்டைநீக்கி யருளாகநின்று பிரகா
சிக்கும். அதுவுமன்றியே
அங்ஙன மலத்தினின்று மீளவிட்ட வவ்வா
கியவருள் சிவ்வாகிய சிவத்தையுந் தாராநிற்கும்
அப்படி மலபாகம்வந்த மகத்தான வான்மா
மூன்சொன்ன வருள்தாரகமாகச்சென் றந்
தச் சிவத்தோடுங்கூடி யிரண்—றின் றுபு
விக்கும்
இங்ஙனஞ் சொல்லப்பட்ட விது ஸ்ரீ பஞ்
சாக்ஷரத்தின் முறைமையாம். எ – று.

நு–ம். ஆசென்றதைக் குற்றத்தையுடைய மலமென்றதேநெ
ன்னில் ஆணவமலம் ஆன்மபோதததோடுங்கூடி யஞ்ஞானத்தை
விளைத்துநிற்கையா லெனவறிக. இதற்கு. பி – ம்.- சித்தியாரில்.
“என்று மஞ்ஞானங்காட்டு மாணவமிசைந்து நின்று.” எ – று.
கண்டுகொள்க.

உறுதிரோதமென்றதை ஆணவமலத்தோடுங் கூடி-நின்று பா
கம் வருத்தப்பட்ட திரோதாயி யென்றதே தென்னில் ஆன்மா
வொடு மாதியே கூடி-வரப்பட்ட ஆணவமலத்தைப் பாகம்வருத்
தமேண்டி யருளாகிய கிருபாசத்தி யதனோடுங்கூடித் திரோமாய்
மறைத்துநின்ற தெனவறிக. இதற்கு. பி-ம். சித்தியாரில். “தாய
வன்றனதோர்சத்தி திரோதான காரியதென்றும்’.. எ-ம். அன்றி
யும் இந்நூலினும்.” பாகமாம் வகைநின்று திரோதானசத்தி பன்
னுதலான் மலமெனவும் பகர்வர்.” எ-ம். கண்டுகொள்க.

சிவமுன்னுக வோசைகொள் என்று சர்வமும் சிவசேட்டை யாலொழிய முடியாதாகையாலே சிவத்தை முன்னிட்டுக்கொண்டு நிற்கவென்றதெனவறிக. இதற்கு. பி-ம். திருக்கள்ற்றுப் படியாரில். "சிவமுதலேயன்றிமுத லில்லையென்றும்" எ - து. கண்டுகொள்க.

நம்மேலொழித்தருளோங்கும். எ-கு. நவ்வாகிய திரோதசத்தி மவ்வாகிய மலத்தின்மேலீட்டை நீக்கியருளாய்நின்று பிரகாசிக்குமென்றதற்கு. பி-ம். ஜிந்நூலில் "முற்சின மருவுதிரோதாயி கருணையாகித் திருந்திய சத்திநிபாதந்நிகழும்" எ-ம். திருவெம்பாவையில். "பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்." எ-ம். வருமது கண்டுகொள்க.

மாயாவென்றனைத மகத்தான வான்மா வென்றதே தென்னில் அந்தச்சிவத்தை முன்னிட்டுநின்றுச்சரிக்கையிறு லெனவறிக. இதற்கு. பி-ம். திருவாசகத்தில். "யானேயோ தவஞ்செய்தேன் சிவாயநமவெனப் பெற்றேன்." எ-து. கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது அந்தமலங்க ணீங்கத்தக்கதாகச் சிவ முன்னுக வுச்சரித்தால் முன்பு திரோதமாய் நின்ற வருளானது அந்தச்சிவத்தடனே கூட்ட ஆன்மா வந்தச் சிவத்தோடுங் கூடிப் பிரிவறநிற்கு முறைமையை யறிவித்தது. (சஉ)

வேறு—இஃ தந்தணை யுச்சரிக்கு முறைமையு மதனாற் பெறும் பயனு முணர்த்திற்று.

ஆகாறு திரோதமேவா தகலுமா சிவமுன்னுக வோசைகொள்ளு ஞானவழு மந்நன்வழிபொருந்தின திரோதாயியு முன்னைப்பொருந் தாமல்விட்டு நீங்கும்படி சிவமுதலாக சபிப்பாயாக,—அதனின்—ஆங்ஙனம் சபித்தநதரூலே,—நம்மே லொழித்தரு ளோங்குமீ—நகாரமான திரோதான சத்திதானே திரும்ப மேலான மகாரமாய

மலத்தைப்போக்கி யனுக்கிரக சத்தியாக மேலிடம்,—வாசியைப ருளும் - அங்ஙன மேலிட்டுத் தனக்கு மேலாகிய சிவத்தைத்த ரும்,—மாய-அங்ஙன மதுதருதலான மகத்தாகிய யச்சாரமான வா த்மாவானது,—மற்றது பற்ருவுற்றிங் கிசனி லேகமாகும்-அந்த வருளேபற்றுக் கோடாகப் பொருந்தி யவ்விடத்திலே முற்றுண ர்வுமுதலிய சட்குணங்களாலே சிவனேப்போன்று கலப்பிலுலே டொன்றும்,—இது திருவெழுத்தி னீடே - இதுவே ஸ்ரீ பஞ்சாக் கரத்தி னுண்மை. எ - று.

அதனின் என்பது ஏதுவில் வந்த வைந்தாமுருபு, இதற்குப் பலவாறு மூரைப்ப.

☞ ஐந்தெழுத்தருணிலே முற்றிற்று.

மே லிங்ஙன முன்னருளிச் செய்யப்பட்ட வுண்மை நிஷ் ணேயாலு மூபாயநிஷ்ணேயாலு மிப்பொழு தருளிச்செய்த வை க்தெழுத்தருணிலேயாலுங் கன்மகூடயப்வந்த ஜீவன்முத்தர்களது தன்மையுணர்த்துவா னெடுத்துக்கொண் டருளியது.

இதற்கு வகையேதென்னில். "மாயாமற்றது பற்ருவுற்றிங், கிசனிலேகமாகும்." எ-து. ஆன்மா சிவனேயே பொருந்தப்ப ட்டு நிற்குமென்னும் விதியைப்பற்றிச் சிவனேடு பிரண்டறக்கூ டிநின்ற மலமாயா கன்மங்களேப் போக்கிக்கொள்ள வேண்டு ணேயால் ஐந்தெழுத்தருணிலேக்கு மேலாகப் பதினேராஞ் சூத்தி ரமும் பன்னிரண்டாஞ் சூத்திரமுமாகிய அனேந்தோர்தன்மையெ ன்னு மதிகாரம் வைக்கப்பட்டது.

இவ்வதிகாரத்துக் கந்தச் சூத்திர பிரண்டு நின்றதற்கு வழி யேதென்னில் சிவஞானபோதத்தில். "காணுங் கண்ணுக்குக் கா ட்டுமுளம்போற், காணவுள்ளத்தைக் கண்டுகாட்டலி, னையபரா ன்பி னரல்கழல்செலுமே." என்கிற பதினேராஞ் சூத்திரத்துக்

ருக் கருத்தப் பரமேஸ்வரன் ஸ்ரீபாதங்களையணையுமா றுணர்த் தநனுதலிற் றென்றதனலும் பன்னிரண்டாஞ் சூத்திரமாகிய "செம்மலர்மேனான்முள் சேரலொட்டா, வம்மலங்கழீஇ டன்பரொ டுமரீஇ, மாலறநேய மலிந்தவர்வேடமு, மாலையந்தாணு மரனை ணத்தொழுமே." என்பதற்குக் கருத்து அசிந்திதலுய்ந் நின்ற பதி டைச் சிந்திதலுய்க்கண்டு வழிபடுகைக் கருளிச்செய்கையினலும் இந்நூலினு மிவ்வதிகாரத்துச்சு வகுத்த செய்யுளாகிய "தீங்குறு மாயை" என்ற விருத்தந்தொடங்கி "தொண்டர்களிடம்" என்ற விருத்தமுழுவாகிய செய்யுளாறினுள்ளும் "தீங்குறு" "குறிப்பி டம்" "அகம்புறம்" அண்டம்" "மண்முதல்" என்னுஞ் செய்யுளை ந்தினும் பரமேஸ்வரனது ஸ்ரீபாதங்களை யணைந்துநிற்கு முறை மையை யருளிச் செய்கையால் பதினேராஞ் சூத்திரமாகவும் "தொண்டர்கள்" என்ற செய்யுளொன்றும் அசிந்திதலுய்ந்நின்ற பதினையைச் சிந்திதலுகக் கண்டு நிற்கப்பட்ட திருவேடமும் சிவா லயமும் சிவனைனக்கண்டு வழிபடுகைக் கருளிச்செய்கையா லிது பன்னிரண்டாஞ் சூத்திரமாகவும் நின்றதெனவறிக.

அப்படி யிந்தச் சூத்திரங்களிரண்டினு நினறகருத் திவ்வ தி்காரத்துக்கு வகுத்த செய்யுட்களில் நின்ற முறைமை யெங்ங மேனெனின் "நேயத்தோங்குனர் வகத்தடங்கி" எ-ம். உறக்கு று பவர்போல்வாய்மை யொழிந்தனை யொழிந்துபோமே." எ-ம். "ஞானந்திகழ்ந் தகம்புறமென்னுத செம்மையார் நன்மையோ ரே." எ-ம். "கண்டோர்பொருளை யந்தக் கருத்திறற் காணும் முனே, யண்டகாயகனர்மேனி யானதே லையமின்றே." எ - ம். "ஞானக், கண்ணினுளுயன்றி யந்தக்கருத்திறு லெனையுநோக்கி" எ-ம். பரமேஸ்வரனேறு மிரண்டறக்கூடி நிற்குமுறைமையை யருளிச்செய்கையா லிச்செய்யுளைந்தும் பதினேராஞ் சூத்திரமாக நின்றதெனவறிக.

அன்றியும் "தொண்டர்களிடத்தும்" என்றவிருத்தமும் திரு வேடத்தையுஞ் சிவாலயத்தையும் அண்டருங் கண்டிலாத வண்ணலே யெனவணங்கிநிற்கைக் கருளிச்செய்கையால் இது வொன்றும் டன்னிரண்டாஞ் சூத்திரமாக நின்றதெனவறிக.

இந்தச் செய்யுளாறினுள்ளும் "தீங்குறுமாயை" என்ற செய்யுளுக்குத் தொந்தனை வருமாறு.

இங்ஙன முற்கூறிய வகைகளாற் கன்மகூடயம்வந்த ஜீவன் முத்தர்கள் வாதனாபலத்தால் மல மாயா கன்மங்கள் மேலிடாம லுயிர்க் குயிராய் நிற்கிற சிவனுடைய திருவருள்ஞானத்தோடுங் கூடி யிரண்டறநிற்கு முறைமையை யருள்ச்செய்வா னெடுத்துக் கொண்டருளியது.

தீங்குறு மாயைசேரா வகைவினை திரிவிதத்தா
னீங்கிட நீங்காமூல நிறையிரு ளிரியதேயத்
தோங்குணர் வகத்தடங்கியுளத்துளின்பொடுங்கதேரே
தூங்குவர் தாங்கியேகத்தெ வ்வைமாயிற் றுகளிலோரே.
தீங்குடல்வினையுஞ் செறிவுறுமலமு
நீங்கிடவருளொடு நீங்காரென்றது.

(இ - ள்.) தீங்குறுமாயைசேரா வகை — ஆன்மாவானது குற்றத்தையுடைய மாயா தேகத்தை மேலிடாதபடி

வினைதிரிவிதத் தானீங்கிட — பிராரத்தம் புசிக்கச்செய்தே யுண்டாகப்பட்ட ஹிதாஹிதங்களாலே யெறுகிற வாகாமியமான புண்ணிய பாவங்களாகியவினை மூன்று வகையாக வறிபப்பட்ட ஞானத்திலேவிட்டுப்போக. மூன்றுவகையாவது தன்னை வினையைத் தலைவனையறிகிற ஞானமெனவறிக. ஆம்தேதென்னிப் ஆன்மாவையும் கன்மத்தையுஞ் சிவனையு மறிகிறதாயிருக்கும். அறிகிற

தாவது ஆன்மாவேவாவென்றுற் றனக்கென வறிவில்லாதவனென் றறிந்துங் கன்மமேமாவென்றுல் ஜடமா யிருப்பதென் றறிந்தும் இவை யிரண்டையுங் கூட்டிக் காரியப்படுத்துகிறது சிவனெய் ன்றுங் கண்டு தங்களுக்கு யாதாமொன்றுல் வருகிற வின்பதுன் பங்களெல்லாஞ் சிவச்சேட்டையாலொழிய வுண்டாகாதென்று கண்டு அவர்கள் விருப்புவெறுப்பற் றிருப்பர்களென்ற தெனவ றிக

நீங்கா மூல நி றையிருளிரிய — ஆன்மாவை யொருகாலத்திலும் விட்டுநீங் காம லநாதியே வியாத்தமாய் மறைக்கப்பட் டவஞ்ஞானமா யிருண்டவாணவம் விட்டுநீங் கத்தக்கதாக

நேயத் தோங் குணர்வகத் தடங்கி — தங்களுள்ளத்திலே யுதயஞ்செய்யப்பட்ட மிகப்பிரகாசமாகிய பேரறிவுக்குள்ளேயடங் கித் தற்போதம் ஜீவியாமனின்று. அன்றியுமி ந்தப்பதத்துக்கு ஓங்குணர்வகத்தடங்கி யென் று பாடமோதி அந்தவருளிலே தங்கவையொடு க்கியென்று பொருளுரைப்பாருமுளர். இதிற் பொருளுக்கேற்க வந்தப்பாடத்தைக் கூட்டிக் கொள்க

உளத்தெளி வின் பொடுங்க — தங்களிடத்திலே சிவபோதமாகிய பேரின் பம் பதிந்து விளையத்தக்கதாக

நேரே தாங்கு வர்தாங்கி — தாங்கள்கொண்ட சமாதிக்குத் தவறுவ தற்க மயக்க விகற்பங்களிற்படாம லுறங் கா துறங்கி யிருப்பார்கள். அவர்க ளாரென் னில்

ஏகத் தொன் மையிற் று களி லோரே. — ஆன்மாவினிடத்திலே யொன்றுபட்டுப் ப ழையதாய் வரப்பட்ட திரோதமறைப்புநீங்கிய கலியாணர்களாகிய சிவஞானிகள். எ - று.

நு-ம். தீவ்குறுமாயைசோரா. எ-கு. குற்றத்தையுடைய மாயாதேக மேலெடார்தபடியென்று டொருட்கூறியதே தென்னில் ஆன்மாக்கள் மாயாதேகமெடுத்தால் மேலும் ஜநநத்துக்கேதுவாயுள்ள கன்மங்களை யார்ஜித்துக் கொள்ளுகையாலே யப்படிச்சொன்னதெனவறிக. இதற்கு. பி-ம். ஞாளுமிர்தத்தில் "மூடலையாக்கையின் விளைபினிப்பாலுல் - விளைப்பொதியெறுட்டோ டணிப்போவின்றே." எ-து. கண்டுகொள்க.

இனி விளை திரிவிதத்தாநீங்கிட. எ-கு. தன்னவிளையைத் தலைவனையறிகிற ஞானத்திலுலே விளைகளை நீக்கிக்கொள்ளலாமென்று பொருட்கூறியதன்றியே விளைதிரிவித்தால்நீங்கிட வென்பதைக் கழிகாலமாக்கி மூவகை விளைகளினும் பொதுப்பட வேற்றியாசாரியன் செய்யப்பட்ட தீக்ஷையிலுலே சஞ்சிதகன்மம்போமென்றும் பிராரத்தகன்மம் உடலுள்ளமட்டும் புசித்தே தொலையுமென்றும் ஆகாமியகன்மம் அவர்களிடத்தண்டான ஞானத்திலுலே போக்கிக்கொள்ளுவார் ளென்னவுமா மெனவறிக. இதற்கு. பி-ம். சித்தியாரில். "ஆகாமிகித், தோன்றுகராதவகை முற்செய்கன்மத் தகளறுத்தங்கத்திலா தொடக்கறவேசோதித், தேன்றவு டற்கன்ம மநுபவத்திலுலறுத்திங் கினிச்செய்கன்மம் மூலமல ஞானத்தாலிடப்பன்." எ-து. கண்டுகொள்க.

அன்றியும் விளைதிரிவித்தால் நீங்கிட. எ-கு. சிவஜ்ஞேதாக்கி மனத்திலுல் தியானித்தும் வாக்கிலு ஜபச்சரித்தும் காயத்திலுற் றொழில்களைச் செய்தும் விளைகளை நீக்கிக்கொள்ளலாமென்னவுமா மெனவறிக. இதற்கு. பி-ம். சித்தியாரில் "மனமதுஜினைய வாக்கு வழுத்தமந்திரங்கள்சொல்ல, வினமலர்கையிற்கொண்டுங் கித்தித்தநெய்வம்போற்றிச், சினமுதலகற்றிவாழுந் செயலதையா ருவியார்க்கு, முனமொருதெய்வமெங்குந் செயற்குமுன்னிலையா மன்றே." எ-து. கண்டுகொள்க.

இனி நீங்காமூல நிறையிருளினிய. எ-கு. ஆணவமல மொன் றுயிருக்கவும் ஒருகாலத்தினும் விட்டு நீங்காதமலம் விட்டுநீங்க வென்று பொருட்கூறியதேதென்னில் அந்தமலத்தின் காரியமான சத்திகளழிபக் காரணமாகிய நித்திய மழியாதென்ற தெனவறிக. இதற்கு. பி-ம். சித்தியாரில் "உரியமல மெளடதத்தாற் றடுப்பு ண்டவிடமு மொள்ளொளியி லெளிமுன்ன ரிருளுந்தேற்றின், வரு பரம்சேர் கீர்மருவு கலங்களும்போலாகி மாயாதேதன்சத்தி மாய் ந்தகாயன், றிரியுமளவும் முளதாய்ப் பினபுகாயஞ் சேராதவகைதா னுந் தேயுமன்றே." எ-ம். இந்நூலினும் "அறிந்திடுஞ்சத்தி நித்த மழிந்திடா" எ-ம். வருமேதுக்களைக் கண்டுகொள்க.

இனி நேயத்தோங்குணர் வகத்தடங்கி. எ-கு. எப்பொழு தும் பேரறிவாயுள்ள சிவத்தினுள்ளே யிசைந்தொடுங்கித் தற்போ தம் ஜீவியாமற்றற்போதத்தை மீட்டு அருளிலே யொடுங்குகை யென வறிக. இதற்கு. பி-ம். திருவருட்பயனில் "புலனடக்கித் தம்முத ற்கட் புக்குறுவர் போதார், தலைக்கு மாமை தக."எ-ம். திருவ ள்ளுவப் பயனில் "உரனெனனுந்தோட்டியா ரேறைக்குங் காப் பான், வரனென்னும் வைப்புக்கோர் வித்து." எ-ம். ஞானபிர காசத்தில் "மாணவரும்படைதாங்கிக்கிளர - தாரதரத்தெறிவேலினை ஞர்போலப் - பொறிவாழ்புலப்பகை தாங்கிப்பிறப்பற - வெறியு மறப்பெயர் வாட்கையும் வாட்கை." எ-ம். கண்டுகொள்க.

இனி யுளத்தினின்றொடுங்க. எ-கு. தங்களிடத்திலே பொரி ன்பம் பதிந்து விஷயத்தக்கதாக நிற்பார்க ளென்றதேதென்னில் அந்தச்சிவஞானம்விளைந்த ஜீவன் முத்தராயுள்ளவர்கள தங்களு ள்ளத்திலே சிவனைத் தியானிக்குமிடத் தந்தச்சிவ னங்கேபதிந்து நிற்கையா லப்படிச்சொன்ன தெனவறிக. இதற்கு. பி-ம். சித்தி

யாரில். இந்தனத்தினெரிபாலி னெய்பழத்தினிரத மெள்ளின்க ணெண்ணெயும்போ லெங்குமுள னினிறவன், வந்தனைசெய் தெவ் விடத்தும் வழிபடவேயருளு மலமறுப்போ ரான்மாவின் மலர் டிஞானத்தாற், சிந்தனைசெய் தர்ச்சிக்கிற் சிவனுளத்தேதோன்றித் தியிருப்பைச் செய்வதுபோற் சீவன்றன்னைப், பந்தனையையறுத் தந்தா லுக்கித்தன்னுருவப் பரப்பையெலாங் கொடுபுகுந்து பதிப்பனிவன்பாலே." எ-ம். கோவைத் திருவாசகத்தினில் "நினைவித்துத் தன்னையென் னெஞ்சத்திருத்தினின் நம்பலத்துப், புனைவித்தவீசன்" என்றது மிப்பொருட் பற்றி யெனவறிக.

இனி நேரேதங்குவர்தாங்கி. எ-து. மயக்கவிகற்பங்களிற் படாம லுறங்காதுறக்கி யிருப்பர்களென்று பொருட்கூறிய தேதென்னில் அவர்கள் கேவலசகல மிரண்டினுஞ் செல்லாமல் அருணித்திரையா யிருப்டார்க ளென்ற தெனவறிக. இதற்கு. பி-ம். சித்தியாரில். "அந்தக்கரணங்க ளொடுங் கூடாதே வாடாதே குழைந்திருப்பையாகில்." எ-ம். அருணித்திரை என்றதற்கு போ ஜனவிதியில். "ஆறுமுதா நீரருந்தி யெச்சிலச்சமகற்றி யடைகாய்கற் கடுக்காய்சுக் கடுத்த தொன்றைமென்று, கூரியபே ருணர்வு— னை தாங்கிக்கங்குற் குளிர்வெம்மைக் கணைபூணை கொள்ளாமற்கி, யோருணர்வு நிலேவதியா துண்ணுவாய்மை யுடையையாயுயர்ஞான போகமுற்றுச், சாருமரு ணித்திரையு முற்றுணர்சுஞானச் சரிதை யிது மெய்கண்டான் சந்தானத்தே." எ - ம். கண்டுகொள்க.

இதனுற் சொல்லியது சிவஞானிகளாயுள்ள ஜீவன்முத்தர் கள் பிராரத்தக் தொலையுமளவுஞ் சிவதேகதிம் பிரிவுறாதின்று விடா பரிக்குமிடத்து மலமாயா கன்மங்களை நீக்கிக்கொள்ளு முறைமை யை யறிவித்தது. (சாங)

வேறு—இனிப் பதிஞான்ராஞ் சூத்திரமும் பன்னிரண்டா ஞ்சூத்திரமுமாகிட வஃணந்தோர்தன்மை செய்யுளாறிலு ஞணர்த் தவான் ஞெடங்கி முதன் மூன்றிலுன் ஞானத்தின்ஞானமு மே னைமூன்றிலு ஞு ஞானத்தின் யோகமுதலியவு மூணர்த்துகின்றூர். அவற்றுளிஃ தந்தச் சீவன்முத்தர்கள் பிராரத்தந் தொலையுமளவு மலத்திரயங்களுஞ் பெந்தியாம னீக்கிக்கொள்ளுமுறைமை யுணர்த்திற்று.

நிங்குறு மாயைசேரா வகைவிஃன திரிவிதத்தா னீங்கிட— குற்றத்தையுடைய மாயைகூடாதபடி பிராரத்தவகன்மங் கேட்டன்முதலிய மூவிதத்தாலு நீங்காநிற்ப,—நீங்காமூல நிறையிருளிரிய - விட்டுநீங்காத வஞ்ஞசம்பந்தமான நிறைந்த வானவமலம்விட்டுப் போம்படி,—நேயத் தோங்குணர் வகத்தடங்கி - மகிழ்ச்சியிலுலே தன்னிடத்துப் பிரகாசிக்கின்றவருளிடத்திலே தன்னைக்கொடுத்து,—உளத்து ளின்பொடுங்க - தன்னிடத்திலே சுகசொரூபமான சிவமொடுங்க,—நேரேமயக்க விகற்பங்களிற் படாமல்,—ஏகத்தொன்மையில் - பிரியற்ற பழையதாகிய சிவசமாதிபாவத்திலே,—தாங்கித் தூங்குவர் - தரித்து நிற்பார்கள்,—துகளிலோரே - குற்றமற்ற பெரியோர். எ-று. எனவே நிட்டையாலே மலவாதனை நீங்குமென்பதாம்.

திரிவிதத்தா னீங்கிட வென்பதற்குப் பிறவா றுரைப்பாருமுளர். உளத்துளின்பொடுங்க வென்பதற்குத் தன்னிடத்திலே சிவபோகம் விளைய வென்பாருமுளர். தாங்கி தரித்து. தூங்குதல் செறிதல். எனவே நிற்பதாம்.

இங்ஙனஞ் சொல்லப்பட்ட ஜீவன் முத்தரா யுள்ளவர்கள் முன்பு செய்துவந்த நியமங்களா யுள்ளவையெல்லாஞ் செய்துவரு வர்களோ விட்டுவிடுவர்களோவென்றுவினவ மேலருளிச்செய்வா னெடுத்துக்கொண் டருளியது.

குறிப்பிடங் காலங்திக்கா சனங்கொள்கை குலங் குணஞ்சீர், சிறப்புறு விரதஞ்சிலங் தபஞ்சபங் தியா னமெல்லா; மறுத்தற வொழிதல்செய்தன் மருஷிடா மன்னுசெய்தி, யுறக்குறு பவர்போல்வாய்மை யொழிந்தனை யொழிந்துபோபாமே. (சு)

மெய்ப்பொருளுணர்ந்தவர் விரதந்துயில்பவர்
கைப்பொருளெனவே கழலுமென்றது.

குறிப்பிடம் — கங்கைகுமரி முதலாயுள்ள தீர்த்தங்களையுங் காசி திருவம்பல முதலாயுள்ள சிவத்தானங்களையு நாடியிருக்கை

காலம் — விஷுச அயனம் சங்கிரம முதலாயுள்ள காலங்களிலே செய்யுங்கிரமங்கள்

திக்கு — இந்தநாளைக் கின்னதிசையிலே போகலாமிருக்கலாம் இன்னமந்திர மின்னதிசையைப் போர்த்து ஜபிக்கலாமென்று முறைமைகள்

தானம் — பதுமாதனம் கூர்மாதன முதலாயுள்ள வாதனங்களிட்டிருக்கை

கொள்கை — வாய்மை ஒப்புரவு ஈகை முதலாயுள்ளகொள்கைகள்

குலம் — பிராமணர்முதலாகச் சண்டாளர்கள் ஈறுகிய குலந்திமுதலாயுள்ளவை

குணம் — யாவராயினு மவரவர் சிலத்தி லெழுகுதல் ஒருவரை நிந்திபாமை புறங்கூறாமை முதலாயுள்ளகுணங்கள்

சீர் — அந்தந்த சாதியொழுக்கு குலயாமஸ்தடங்கை

சிறப்புறு விரதம் — கொல்லாவிரதம் அஷ்டவிரதம் மூதலாயுள்ள விரதங்கள்

சீலம் — ஜாதித்தொழில் குணத்தொழில் பொறையுடைமை அருளுடைமை முதலாயுள்ள சீலங்கள்

தவம் — பஞ்சாக்கினிநடு ஜலத்தினடு முதலாகச்செய்யுந்தவங்கள்

சபம் — தேவதை மந்திரங்கள் சத்திமந்திரங்கள் எதிரேறுமந்திரம் திருவம்பலவித்தை முதலாயுள்ள ஜபங்கள்

தியானம் — ஆதாரம் நிராதாரம் பிராசாதமுதலாயுள்ள தியானங்கள்

எல்லாம் — இப்படிக் குறிப்பிட்டமுதற் றியானமீருகச் சொல்லப்பட்ட நியமங்களெல்லாம்

மறுத்தரவொழுதல் செய்தனை மருவிடா — அந்த வுண்மைஞானத்தைப் பெற்றிருக்கிற சிவஞானிகளந்த நியமங்களை விட்டுவிடவேறுமென்று தீரவிட்டுவிடுவதுமில்லை செய்தவரவேறுமென்று செய்வதுமில்லை. பின்னையெங்ஙனேயென்னில்

மண்ணுசெய்தி உறக்குறுபவர் போல் வாய்மையொழுங்கு சேரா மே. — அவர்களந்தவுண்மையிலே பெறநின்று நித்திரைசெய்யுமவர்கள் கையிற் பிடித்திருக்கப்பட்ட பதார்த்தமானது அவர்கள் வேறுமென்று பிடித்திருக்கச்செய்தேயவர்களை யறியாமற்றானே நழுவிவிற்போல அந்தச்சிவஞானத்தைப்பெற்ற ஜீவன்முத்தர்க்கு மந்தவுண்மை ஞானமொழிய மற்றுள்ள நியமங்களுந் தானேபோம். எ - று.

உ-ம். அந்த வுண்மைஞான மொழிபமற்றுள்ள நியமங்களெல்லா முறங்கினவர்கள் கையிற் பிடித்திருந்த பண்டங்கள்போலத் தானேபோமென்றதற்கு. பி-ம். திருவருட்பயனில். "ஓன்பொருட்கண்ணுற்றூர்க் குறுபயனே யல்லாது, கண்படுப்போர் கைப்பொருள்போற் காண்." அன்றியுஞ் சங்கற்ப நிராகரணத்திலே மாயாவாதியை மறுக்கிற வவதாரத்திலே. "ஞாலநீதியு நான்மறைநீதியும் - பாலருண்மத்தர் பசாசினெனவு - முறங்கிலேன்கை வெறும்பாக்கெனவுந் - தானேதவிரா தாணற்புரியா-தொழிந்திடுநிறையத் தழுந்துதறிடமே." எ - து. கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது அந்த வுண்மைஞானத்தைப் பெற்ற ஜீவன் முத்தர்கள் முன்பு செய்துவந்த நியமங்களெல்லாந் தாங்கள் வேண்டாமென்று விட்டுவிடுவதுமில்லை செய்துவரவேணுமென்று நியமித்துச் செய்வதுமில்லை உறங்குவார்கையிற் பதார்த்தங்க ளவர்களையறியாமற் றானேபோனாற்போல வந்தவுண்மைஞானமொழிய மற்றுள்ள நியமங்க டானே போமென்று முறைமையை யறிவித்தது. (சக)

வேறு—இது இப்படிநின்ற சீவன் முத்தர்கண் முன்புள்ள நியமங்களெல்லாம விட்டுநிற்பரோ விடாமனிற்பரோவென்று வினவ வதற் குத்தர முணர்த்திற்று.

குறிப்பிடங் காலந்திக்கா சனங்கொள்கை குலங்குணஞ்சீர் சிறப்புறு விரதஞ்சீலந் தபஞ்சபந் தியானமெல்லா மறுத்தற வொழிதல்செய்தன் மருவிடா - சமாதிக்கு யோக்கியமாகக் குறிக்கும் புன்னியத் தலங்களு மின்னகாலமிது செய்யவேண்டுமென்னுங் காலசங்கற்பனையு மின்னதிசைநோக்கி யிது செய்யவேண்டுமென்னுந் திக்குக்கற்பனைகளும் பத்மாசன முதலான வறுபத்துநா லாசனங்களிலு மின்ன வாச

னத்திலே யிருக்கவேண்டுமென்னு மாதனநியமு மொருபிர
யோசனங்களிற் கோட்பாடுஞ் சாதி யபிமானமுஞ் சாத்துவி
தமுதலிய குணங்களு நாமரூவகுருபமுதலிய சிறப்பி லபிமா
னமுஞ் சிறப்பினையுடைய சாந்திராயணமுதலிய விரதங்களு
ங்ல்லொழுக்கமும் பஞ்சாக்கினி நடுநிற்றன்முதலிய தவங்
களு மிருஷிச்சந்த சுதேவதைதிசம் விநியோகமென் றிவையு
டன்கூடமான சமந்த மூரையென்னு மூன்றுவிதமாக வசீக
